தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2040 – மார்கழி 27

2010 ஜனவரி 11, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி"

நலவாழ்வுக்கு வேண்டியவற்றை வழங்கியும், நிலையுணர்ந்து கருணை காட்டியும், நடுநிலை தவறாமல் ஆட்சி நடத்தியும், மக்களைப் பேணிக் காப்பதே ஓர் அரசுக்குப் புகழொளி சேர்ப்பதாகும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிடாத வினாக்கள்
(பட்டியல்கள் 4 முதல் 10 வரை @)
பட்டியல் 4

1—

கட்டடம்

வினா எண் 33271—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோயில் ஒன்றியம், திருக்களாச்சேரி, கூத்தூர் பாடசாலை தெரு, மகளிர் சுய உதவிக் குழுவிற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2010 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒரு ஊராட்சிக்கு ஒரு சுய உதவிக் குழுக் கட்டடம் கட்ட வேண்டும் என்ற அடிப்படையில், செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திருக்களாச்சேரி ஊராட்சி, பாலூரில் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டப்பட்டு திருக்களாச்சேரி ஊராட்சியில் உள்ள அனைத்து மகளிர் சுய உதவிக் குழுக்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

2—

சொந்த கட்டடம்

வினா எண் 51038—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஜல்லிபட்டி, கரியாஞ்செட்டிபாளையம், கம்பாலபட்டி மற்றும் பில்சின்னாம்பாளையம் ஊராட்சிகளில் மகளிர் சுய உதவிக் குழுவிற்குச் சொந்த கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, ஜல்லிப்பட்டி, கம்பாலப்பட்டி, பில்சின்னாம்பாளையம் மற்றும் கரியாஞ்செட்டிபாளையம் ஆகிய நான்கு ஊராட்சிகளிலும் 2003-2004 ஆம் ஆண்டில், எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டத்தின்கீழ், தலா ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

3—

கட்டட வசதி

வினா எண் 52645—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பூம்புகார் தொகுதி, மருதம்பள்ளம் ஊராட்சி, சிதம்பரம்பாக்கம் கிராமத்தில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒரு ஊராட்சிக்கு ஒரு சுய உதவிக் குழுக் கட்டடம் கட்ட வேண்டும் என்ற அடிப்படையில் நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மருதம்பள்ளம் ஊராட்சிக்குட்பட்ட சின்னங்குடியில் 2001-2002 ஆம் ஆண்டு, எஸ்.ஜி.ஆர்.ஒய்-I திட்ட நிதியில் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டப்பட்டு மருதம்பள்ளம் ஊராட்சியினைச் சார்ந்த அனைத்து மகளிர் சுய உதவிக் குழுக்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

4—

கட்டடத்தைச் செயல்படுத்துதல்

வினா எண் 60087—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, பெரியகோட்டை ஆதி திராவிடர் காலனியில் மகளிர் குழு கட்டடத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, பெரியகோட்டை ஆதி திராவிடர் காலனியில் 2004-2005 ஆம் ஆண்டு சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டப்பட்டு, அங்குள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

5—

கட்டடம்

வினா எண் 74481—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோயில் ஒன்றியம், எரவாஞ்சேரியில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட எரவாஞ்சேரி ஊராட்சியில் 2001-2002 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய்-I திட்ட நிதியில் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டப்பட்டு நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

6—

அடிப்படை வசதிகள்

வினா எண் 33282—திரு. சை. சையது கௌஸ் பாஷா: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மீனாட்சி கல்லூரிக்குக் கூடுதல் கட்டட வசதி, அடிப்படை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

2010 ஜனவரி 11]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மீனாட்சி கல்லூரிக்கு 2007-2008ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அரசால் அறிவிக்கப்பட்டவாறு 20 கூடுதல் வகுப்பறைகளும், பகுதி 2 திட்டத்தின்கீழ் 4 வகுப்பறைகள் மற்றும் 1 கூடுதல் ஆய்வகமும் கட்டுவதற்கு அரசாணைகள் வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்று கல்லூரி வசம் ஒப்படைக்கப்பட்டது. 2008-2009ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு இக்கல்லூரிக்கு 13 கூடுதல் வகுப்பறைகள், 5 கழிப்பிடத் தொகுப்புகள் மற்றும் 260 மீட்டர் நீள சுற்றுச் சுவர் கட்ட அரசால் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

7—

கட்டடம்

வினா எண் 40637—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) 2007-2008 ஆம் நிதி ஆண்டில் வால்பாறை கலைஞர் கலைக் கல்லூரிக்குக் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் உள்ள கோவை பாரதியார் பல்கலைக்கழகக் கல்லூரிக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு வால்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ள ரூ.50.00 இலட்சம் தொகையிலிருந்து 534.47 சதுர மீட்டர் அளவில் தரைதளத்தில்

கட்டப்பட்டு வரும் கட்டடத்துடன் ரூ.2.50 கோடி செலவினத்தில் 1096.98 ச.மீ. அளவுள்ள கட்டடத் தொகுப்பைச் சுற்றுச் சுவருடன் கட்டுவதற்கு நிருவாக ஒப்பளிப்பும் நிதி ஒதுக்கீடும் வழங்கி அரசாணை (நிலை) எண் 26, உயர் கல்வித் துறை, நாள் 23-01-2007-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

8—

கலை அரங்கம்

வினா எண் 42068—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு இராஜேஸ்வரி வேதாசலம் கலைக் கல்லூரியில் கலை அரங்கம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு என அரசு அறிவிக்குமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு இராஜேஸ்வரி வேதாசலம் அரசுக் கலைக் கல்லூரியில் கலை அரங்கம் கட்டுவது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

9—

கலை அரங்கம்

வினா எண் 49396—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து அரசுக் கலை, அறிவியல் மற்றும் பொறியியல் கல்லூரிகளுக்கும் கலை அரங்கம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அனைத்து அரசுக் கலை, அறிவியல் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் கலை அரங்கம் கட்டித் தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

10—

வகுப்பறைகள்

வினா எண் 56718—திருமதி ஜி. லதா: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டத்திலுள்ள அரசுக் கலைக் கல்லூரிகளுக்குக் கூடுதலான வகுப்பறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், வாலாஜாபேட்டை, அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரியில் 10 கூடுதல் வகுப்பறைகளும், குடியேற்றம், அரசு திருமகள் கலைக் கல்லூரியில் 5 கூடுதல் வகுப்பறைகளும், வேலூர், முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரியில் 4 கூடுதல் வகுப்பறைகளும், 2007-2008ஆம் ஆண்டில் கட்டுவதற்கு அரசால் உரிய ஆணைகள் வழங்கப்பட்டு இதற்கான கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்று கட்டடங்கள் கல்லூரி முதல்வர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

11—

மின்னணு நூலகங்கள்

வினா எண் 62163—திரு. வ. முல்லைவேந்தன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2010 ஜனவரி 11

அனைத்து அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும் மின்னணு நூலகங்கள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

கல்லூரிக் கல்வித் துறையின் கட்டுப்பாட்டில் 62 அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உள்ளன. இதில் 18 கல்லூரிகளில் மின்னணு நூலகங்கள் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இக்கல்லூரிகளில் செயல்படும் மின்னணு நூலகங்களின் செயல்பாடுகள் மற்றும் பயன்பாடுகளைக் கருத்தில் கொண்டுதான் ஏனைய அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும் மின்னணு நூலகங்கள் தொடங்குவது குறித்து பரிசீலிக்க இயலும்.

12—

விளையாட்டு மைதானம்

வினா எண் 66297—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை அரசுக் கலைக் கல்லூரி விளையாட்டு மைதானத்தை நவீனப்படுத்தி சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மன்னர் துரைசிங்கம் அரசுக் கலைக் கல்லூரியில் விளையாட்டு மைதானம் அமைப்பது தொடர்பாக 20 ஏக்கர் நிலம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது இதற்கான பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. பணிகள் முழுமையடைந்த பின்னர் மாணவர்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

13—

பாடப் பிரிவு

வினா எண் 66300—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை அரசுக் கலைக் கல்லூரியில் எம்.ஏ., சமூகவியல் பாடப் பிரிவு தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சிவகங்கை அரசுக் கலைக் கல்லூரியில் எம்.ஏ., சமூகவியல் பாடப் பிரிவு தொடங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

14—

குடிநீர் வசதி

வினா எண் 66306—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், அரசு மகளிர் கலைக் கல்லூரி மாணவிகளுக்கு நல்ல சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சிவகங்கை அரசு மகளிர் கலைக் கல்லூரிக்கு ஆழ் குழாய்க் கிணறுமூலம் நல்ல குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

15—

பட்ட மேற்படிப்புகள்

வினா எண் 71727—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அரசுக் கலைக் கல்லூரியில் விளையாட்டு அரங்கம் அமைக்கவும், எம்.பி.ஏ., எம்.சி.ஏ., பட்ட மேற்படிப்புகள் ஏற்படுத்தி, புதிய தனிக் கட்டடம் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* இல்லை.

16—

விரிவாக்கம்

வினா எண் 72818—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி கூடல் அரங்கத்தை விரிவாக்கம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தஞ்சாவூர், குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி கூடல் அரங்கத்தை விரிவாக்கம் செய்ய கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2010 ஜனவரி 11]

17—

விளையாட்டு மைதானம்

வினா எண் 72820— திரு. அ. தமிழரசு: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர், சிக்கண்ணா அரசுக் கலைக் கல்லூரியில் நவீன வசதிகளுடன்கூடிய விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

திருப்பூர், சிக்கண்ணா அரசுக் கலைக் கல்லூரியில் நவீன வசதிகளுடன்கூடிய விளையாட்டு மைதானம் அமைப்பது தொடர்பாக அக்கல்லூரி முதல்வரிடமிருந்து கருத்துரு ஏதும் பெறப்படவில்லை.

18—

கல்லூரி

வினா எண் 74896—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு உதவிபெறும் ஈரோடு சிக்கய்ய நாயக்கர் கல்லூரியை அரசுக் கல்லூரியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்காற்று) சட்டம் 1976, விதி 30(3)-ன்படி, 2002-லிருந்து ஈரோடு சிக்கய்ய நாயக்கர் கல்லூரியை அரசு ஏற்று நடத்த, கோவை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரைப் பாதுகாவலராக அரசு நியமித்து தொடர்ந்து இதுநாள்வரை இக்கல்லூரி நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இக்கல்லூரியை அரசுக் கல்லூரியாக அறிவிக்கக் கோரும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

[2010 ஜனவரி 11

19—

புதிய விடுதி

வினா எண் 75100—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி உலகநாத நாராயணசாமி அரசினர் கலைக் கல்லூரியில் புதிய விடுதி கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி, உலகநாத நாராயணசாமி அரசினர் கலைக் கல்லூரியின் மாணவ, மாணவிகளுக்காக ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் ஆடவர் விடுதி ஒன்றும், மகளிர் விடுதி ஒன்றும், இயங்கி வருகின்றன. இதில், 48 மாணவர்களும், 41 மாணவிகளும் தங்கிப் பயின்று வருகிறார்கள். மேலும், கல்லூரியில் உள்ள விடுதியில் கடந்த பல வருடங்களாக மாணவர்கள் எவரும் சேர விண்ணப்பிக்காமையால், புதிய விடுதிக்கு வரவேற்பு இல்லை எனக் கல்லூரி முதல்வர் தெரிவித்துள்ளார். எனவே, பொன்னேரி, உலகநாத நாராயணசாமி அரசினர் கலைக் கல்லூரிக்குப் புதிதாக விடுதி கட்டப்பட வேண்டிய அவசியம் எழவில்லை.

20—

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

வினா எண் 75805—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதியில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கல்வியியல் கல்லூரிகளைப் பொறுத்தவரை தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் அனுமதி பெற்ற பிறகே கல்வியியல் கல்லூரிகளைத் துவக்கிட இயலும். காவேரிப்பட்டினம் தொகுதியில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

21—

பட்டய வகுப்புகள்

வினா எண் 82628—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை அரசு மன்னர் கலைக் கல்லூரி, அரசு மகளிர் கலைக் கல்லூரிகளில் நூலகர் பயிற்சிப் பட்டய வகுப்புகளைத் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை அரசு மன்னர் கலைக் கல்லூரி மற்றும் அரசு மகளிர் கலைக் கல்லூரிகளில் நூலகர் பயிற்சிப் பட்டய வகுப்புகளைத் துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

22—

கட்டடம்

வினா எண் 82633—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை மாவட்டம், சிவகங்கை அரசு மன்னர் கலைக் கல்லூரிக்குக் கூடுதலாகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை, மன்னர் துரைசிங்கம் அரசினர் கலைக் கல்லூரிக்குத் தேவையின் அடிப்படையில் பரிசீலித்து 2007-2008ஆம் நிதியாண்டில் ஒரு கூடுதல் வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டு கல்லூரிவசம் ஒப்படைக்கப்பட்டது. மேலும், 2008-2009ஆம் நிதியாண்டில் 2 கூடுதல் வகுப்பறைகள் கட்டவும் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும்பொருட்டு 5 கூடுதல் கழிப்பறைகள் கட்டவும் அரசால் ஆணைகள் வழங்கப்பட்டு உரிய கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு உள்ளன.

23—

தளவாடச் சாமான்கள்

வினா எண் 82927—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் அரசு மகளிர் கலைக் கல்லூரிக்குப் புதிய தளவாடச் சாமான்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் அரசு மகளிர் கலைக் கல்லூரிக்குப் புதிய தளவாடச் சாமான்கள் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

24—

கலைக் கல்லூரி

வினா எண் 84198—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு பகுதியில் கலைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு பகுதியில் கலைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

25—

இலவச பயிற்சி மையம்

வினா எண் 90860—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு இராஜேஸ்வரி வேதாசலம் கலைக் கல்லூரியில் இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணித் தேர்விற்கு இலவச பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணித் தேர்வு எழுதும் மகளிருக்கென சென்னை இராணி மேரி கல்லூரியிலும், மதுரை அருள்மிகு மீனாட்சிக் கல்லூரியிலும் இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு இராஜேஸ்வரி வேதாசலம் கலைக் கல்லூரியில் இலவச பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

26—

கணினி முன்பதிவு மையம்

வினா எண் 81604—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 ஜனவரி 11

(அ) தருமபுரி பேருந்து நிலையத்தில் பேருந்து முன்பதிவு பயணச் சீட்டு வழங்க, கணினி முன்பதிவு மையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் தருமபுரி பேருந்து நிலையத்தில் கணினிமூலம் 2009-2010ஆம் நிதியாண்டில் முன்பதிவு மையம் துவக்கிட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

27—

முன்பதிவு மையம்

வினா எண் 82722—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொரப்பூர் தொகுதி, பொம்மிடி பேருந்து நிலையத்தில் (பொ. மல்லாபுரம் பேரூராட்சி) முன்பதிவு மையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் பொம்மிடியிலிருந்து சென்னைக்கு சேலம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின்மூலம் ஒரு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இதில், பொம்மிடியிலிருந்து சென்னை செல்லும் பயணிகள் எண்ணிக்கை தினசரி சுமார் 20 பேர் மட்டுமே உள்ளதால், இதற்கெனத் தனியாக முன்பதிவு மையம் ஒன்றை பொம்மிடி பேருந்து நிலையத்தில் துவக்க இயலாத நிலையுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

28—

பேருந்து வசதி

வினா எண் 101083—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் முதல் தாரமங்கலம் வழியாக சங்ககிரி, பவானி வரை புதிய வழித் தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் முதல் தாரமங்கலம் வழியாக சங்ககிரி, பவானி வழித் தடத்தில் உள்ள பகுதிவாரியான பேருந்து நடைகள் விவரம் பின்வருமாறு:—

		அரசு		தனியார்	
வ.எண்	வழித் தடம்	புறநகர்	நகர்	புறநகர்	நகர்
1.	ஓமலூர்-சங்ககிரி	70	-	34	-
2.	சங்ககிரி-பவானி	58	118	188	16

மேற்கண்ட பகுதிவாரியான பேருந்து வசதியே மேற்கண்ட வழித் தடப் பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவையினை நிறைவு செய்திடும் வகையில் உள்ளது.

29—

பேருந்து வசதி

வினா எண் 101085—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, சேலம்—மேட்டூர் செல்லும் சாலையில் ஓமலூர் அருகிலுள்ள பஞ்சுகாளிப்பட்டி பேருந்து

நிறுத்தத்தில் அனைத்துப் பேருந்துகளும் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பஞ்சுகாளிப்பட்டி பேருந்து நிறுத்தமானது, சேலம்—மேட்டூர் வழித் தடத்தில் ஓமலூரிலிருந்து 5.5 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்விடத்தில் அனைத்து நகரப் பேருந்துகளும் தவறாமல் நின்று பயணிகளை ஏற்றியும் இறக்கியும் செல்கின்றன. மற்றும் இவ்வழித் தடப் புறநகர்ப் பேருந்துகள் அனைத்தும், பயணிகள் கோரும்பட்சத்தில் நின்று பயணிகளை ஏற்றியும் இறக்கியும் செல்கின்றன.

30—

பேருந்து வசதி

வினா எண் 101603—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ராதாபுரம், வடக்கன்குளம், காவல்கிணறு, காவல்கிணறு விலக்கு, பணகுடி வழியாக சென்னைக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு லிமிடெட் மூலமாக திருவனந்தபுரம், மார்த்தாண்டம், கன்னியாகுமரி, நாகர்கோவில் ஆகிய இடங்களிலிருந்து சென்னைக்கு இயக்கப்படும் பேருந்துகள் அனைத்தும் பணகுடி வழியாகத்தான் இயக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, ராதாபுரம், வடக்கன்குளம், காவல்கிணறு விலக்கு ஆகிய இடங்களிலிருந்து சென்னை செல்லும் பயணிகள், நகரப் பேருந்து வசதியைப் பயன்படுத்தி பணகுடி வந்து அதன் வழியாக இயக்கப்படும் மேற்கண்ட பேருந்து

2010 ஜனவரி 11]

வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அத்துடன் பணகுடியிலிருந்து சென்னை செல்லும் பயணிகளும் மேற்படி பேருந்து வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக உள்ளது.

31—

பேருந்து வசதி

வினா எண் 101604—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், செட்டிகுளம், விஸ்வநாதபுரம், தெற்கு கருங்குளம், பழவூர் குமாரபுரம் சந்திப்பு, காவல்கிணறு விலக்கு, பணகுடி வழியாக சென்னைக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு லிமிடெட் மூலமாக திருவனந்தபுரம், மார்த்தாண்டம், கன்னியாகுமரி, நாகர்கோவில் ஆகிய இடங்களிலிருந்து சென்னைக்கு இயக்கப்படும் பேருந்துகள் அனைத்தும் பணகுடி வழியாகத்தான் இயக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, செட்டிகுளம், விஸ்வநாதபுரம், தெற்கு கருங்குளம், பழவூர், குமாரபுரம் சந்திப்பு, காவல்கிணறு விலக்கு ஆகிய இடங்களிலிருந்து சென்னைக்குப் பயணம் மேற்கொள்ளும் பயணிகள் நகரப் பேருந்து வசதியைப் பயன்படுத்தி பணகுடி வந்து மேற்கண்ட பேருந்து வசதிகளைப் பயன்படுத்தி சென்னை செல்லலாம். அத்துடன் பணகுடி பயணிகளும் மேற்படி பேருந்து வசதிகளைப் பயன்படுத்தி சென்னை செல்ல ஏதுவாக உள்ளது.

32—

பேருந்து வசதி

வினா எண் 101736—திரு. பெ. மோகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, புதியம்புத்தூரிலிருந்து சென்னைக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதியம்புத்தூர் பயணிகள் நகரப் பேருந்து வசதியைப் பயன்படுத்தி தூத்துக்குடி வந்து, தூத்துக்குடியிலிருந்தும், அவ்வழியாகவும் இயக்கப்படும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் இதர பேருந்துகளிலும் சென்னைக்குச் செல்லலாம்.

33—

பேருந்து வசதி

வினா எண் 101737—திரு. பெ. மோகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரத்திலிருந்து சென்னைக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் பயணிகள் நகரப் பேருந்து வசதியைப் பயன்படுத்தி தூத்துக்குடி வந்து, தூத்துக்குடியிலிருந்தும் அவ்வழியாகவும் இயக்கப்படும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் இதர பேருந்துகளிலும் சென்னைக்குச் செல்லலாம்.

34—

வெகுமதி

வினா எண் 102106—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விபத்து இல்லாமல் பேருந்துகளை ஓட்டும் ஓட்டுநர்களை ஊக்கப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் விபத்தில்லாமல் பேருந்துகளை ஓட்டும் ஓட்டுநர்களை ஊக்கப்படுத்தி கீழ்க்கண்டவாறு வெகுமதி வழங்கப்பட்டு வருகிறது:

முதலாண்டு	ரூ.250/-
தொடர்ந்து இரண்டாமாண்டு	ரூ.275/-
தொடர்ந்து மூன்றாமாண்டு	ரூ. 300/-
தொடர்ந்து நான்காமாண்டு	ரூ.325/-
தொடர்ந்து ஐந்தாமாண்டு	ரூ. 350/-

ஐந்தாண்டுகளுக்கு மேலும் தொடர்ந்து விபத்தின்றி பணிபுரிந்தால் ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ.150/- உயர்வு வழங்கப்படும். இது நடைமுறைகளில் உள்ள விதிகளுக்கு உட்பட்டு வழங்கப்படும். மேலும், அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் விபத்தின்றி பணிபுரியும் ஓட்டுநர்களுக்கான முதலமைச்சரின் வெகுமதி திட்டம் 2008-2009ஆம் ஆண்டுமுதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் விபத்தின்றி பணிபுரிந்தால் ரூ.1000/- வெகுமதியும் மற்றும்

(1) 15 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து விபத்தின்றி பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு ரூ.10,000/- வெகுமதியும்,

(2) 20 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து விபத்தின்றி பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு ரூ.15,000/- வெகுமதியும்,

(3) 25 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து விபத்தின்றி பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு ரூ.20,000/- வெகுமதியும், பதக்கத்துடன் வழங்கப்படும்.

இத்திட்டம் போக்குவரத்துக் கழகங்களில் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள திட்டத்திற்குக் கூடுதலாக செயல்படுத்தப்படுகிறது.

[2010 ஜனவரி 11

35—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 56990—திருமதி ரா. லீமா றோஸ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவட்டாறு தொகுதி, மஞ்சாலுமூடு மற்றும் வெள்ளங்கோடு பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், மேல்புறம் ஊராட்சி ஒன்றியம், மஞ்சாலுமூடு மற்றும் வெள்ளங்கோடு கிராமங்களில் துணை சுகாதார நிலையம் உள்ளது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள்தொகை 1,79,244. (2001 கணக்கெடுப்பு). இவ்வூராட்சி ஒன்றியத்தில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. மஞ்சாலுமூடு கிராமத்திற்கு 4 கி.மீ. தொலைவில் இடைக்கோடு ஆரம்ப சுகாதார நிலையமும், 5 கி.மீ. தொலைவில் அருமனை அரசு மருத்துவமனையும் செயல்படுகின்றன. வெள்ளங்கோடு கிராமத்திற்கு 5 கி.மீ. தொலைவில் அருமனை அரசு மருத்துவமனையும் செயல்படுகின்றது. இரண்டு சுகாதார மையங்களுக்குக் குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், மஞ்சாலுமூடு கிராமத்திற்கும், இடைக்கோடு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 4 கிலோ மீட்டரும் மற்றும் வெள்ளங்கோடு கிராமத்திற்கும், அருமனை அரசு மருத்துவமனைக்கும் இடைப்பட்ட தூரம் 5 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதாலும், மேற்படி கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

36—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 64482—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2010 ஜனவரி 11]

(அ) முகையூர் தொகுதி, ஆற்காடு கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,78,405. (2001 கணக்கெடுப்பு). இவ்வூராட்சி ஒன்றியத்தில் 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் முறையே (1) கண்டாச்சிபுரம் (2) மணலூர்பேட்டை (3) முகையூர் (4) வீரபாண்டி (5) விளந்தை ஆகியன செயல்படுகின்றன. மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு, ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் முகையூர் ஊராட்சி ஒன்றியத்திற்குத் தற்போதுள்ள 5 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால் முகையூர் ஊராட்சி ஒன்றியம், ஆற்காடு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

37—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 69284—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடலூர் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரி துவங்கப்பட வேண்டுமென்பது அரசின் கொள்கை முடிவாகும். இருப்பினும், கடலூர் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி அமைக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் தற்போது இல்லை.

[2010 ஜனவரி 11

38—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 69470—திரு. கே. எல். இளவழகன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி, தாஜ்புரா ஊராட்சி, தாஜ்புரா கிராமத்தில் துணை சுகாதார நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதியிலுள்ள தாஜ்புரா கிராமத்திலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் கூராம்பாடி துணை சுகாதார நிலையமும், ஆற்காடு அரசு மருத்துவமனையும் இயங்கி வருவதாலும், 5 கிலோ மீட்டர் தொலைவில் கத்தியவாடி துணை சுகாதார நிலையமும் 8 கிலோ மீட்டர் தொலைவில் லாடவரம் ஆரம்ப சுகாதார நிலையமும் இயங்கி வருவதாலும், தாஜ்புரா கிராமத்தில் துணை சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

39—

கடனுதவி

வினா எண் 76262—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சித்த மருத்துவத்திற்குப் பயன்படும் கண்டங்கத்தரிக்காய் மூலிகையைப் பயிரிட தனியாருக்கு மானியத்துடன் கடனுதவி வழங்கி, அழிந்துவரும் இம்மூலிகையைப் பாதுகாத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேசிய மருத்துவ மூலிகை வாரியத்தின் மானியத்திற்கேற்ற மூலிகைப் பட்டியல்களில் கண்டங்கத்தரிக்காய் இடம் பெறவில்லை. அதனால் மானியம்/கடன் வழங்குவதில்லை. தமிழகத்திலுள்ள மருந்துசெய் நிலையங்களில் இன்றுவரை சாகுபடி செய்யப்படாத (தன்னிச்சையாய் வளர்கின்ற) கண்டங்கத்தரிக்காய் பயன்படுத்தப்படுகிறது. மேலும் இது மறைந்து வரும் மூலிகையாகக் கருதப்படவில்லை.

40—

மருத்துவமனை

வினா எண் 88246—திரு. எஸ். இராசசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, கோட்டைக்காடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர மருத்துவமனையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் 1999 முதல் 2006 வரை 1,000 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணி நேர பிரசவ சேவை அறிமுகப்படுத்தப்பட்டது. 2007-2008-ல் 421 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பேறுசார் மற்றும் குழந்தைகள் நலத் (ஆர்.சி.எச்) திட்டத்தின்கீழ் 24 மணி நேர சேவை விரிவுபடுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இதில் அறந்தாங்கி சுகாதார பகுதி மாவட்டம், களம்படி ஒன்றியம் சார்ந்த கோட்டைக்காடு ஆரம்ப சுகாதார நிலையமும் ஒன்றாகும்.

[2010 ஜனவரி 11

41—

தரம் உயர்த்துதல்

வினா எண் 92000—திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரணமல்லூர் தொகுதி, தேசூர் பேரூராட்சி, அரசு ஆரம்ப சுகாதார மருத்துவமனையை 30 படுக்கை வசதி உள்ள மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளாறு ஊராட்சி ஒன்றியத்தில் தேசூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டுவருகிறது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் உள்ள தெள்ளாறு பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் தேசிய ஊரக நலத் திட்டத்தின் மூலம் தரம் உயர்த்த அனுமதி வழங்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றது. அரசின் கொள்கைப்படி, ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தினைத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் இதே ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த தேசூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதிகள் கொண்டதாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

42—

கால்நடை மருந்தக ஊர்தி

வினா எண் 49973—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கீழ்ப்பகுதிக்கு நடமாடும் கால்நடை மருந்தக ஊர்தி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வால்பாறை தொகுதியில், அரசு ஆணை எண் 124, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, நாள் 28-7-1993-ன்படி நடமாடும் கால்நடை மருந்தகம் ஒன்று, ஊர்தி ஓட்டுநர் பதவியுடன், ஊர்தியும் ஒப்பளிக்கப்பட்டு 15-11-1999 முதல் செயல்பட்டு வருகிறது. மேற்படி நடமாடும் கால்நடை மருந்தக ஊர்தி, அங்கீகரிக்கப்பட்ட பயண நிரல்படி, வால்பாறை மற்றும் வால்பாறையின் கீழ்ப்பகுதியான மலையாண்டிப்பட்டினம், ஆனைமலை, காளியாபுரம், நவமலை ஆகிய இடங்களுக்கு, பிற்பகலில் கால்நடை உதவி மருத்துவருடன் சென்று பொதுமக்களின் கால்நடைகளுக்குச் சிகிச்சை அளித்தும், மருத்துவ ஆலோசனைகள் வழங்கியும் வருகின்றது. ஆகவே, புதியதாக ஒரு நடமாடும் கால்நடை மருந்தகம், ஊர்தியுடன் வால்பாறையின் கீழ்ப்பகுதிக்கு ஒப்பளிக்க வேண்டிய அவசியம் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

43—

தடுப்புச் சுவர்

வினா எண் 55552—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை கால்நடை மருத்துவமனைக்குத் தடுப்புச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை கால்நடை மருந்தகம் அமைந்துள்ள இடத்தில் இத்துறைக்குச் சொந்தமான 2.30 ஏக்கரில், 1.80 ஏக்கர்

நிலம் வருவாய்த் துறைக்கு மாற்றப்பட்டு, தற்போது 0.50 சென்ட் நிலம் மட்டுமே உள்ளது. அதில், கால்நடை மருந்தகக் கட்டடம், கால்நடை உதவி மருத்துவர் குடியிருப்பு மற்றும் சுற்றுச் சுவர் கட்டுவதற்கு இடம் போதுமானதாக இல்லாததனால், வருவாய்த் துறையிடம் 0.67 ஏக்கர் நிலம் மீள இத்துறைக்கு ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், துறைவசம் உள்ள 0.50 சென்ட் நிலத்தில் மேற்படி கால்நடை மருந்தகத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட பொதுப் பணித் துறையினரிடம் மதிப்பீட்டறிக்கை கேட்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

44—

கால்நடை மருந்தகம்

வினா எண் 57921—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, லெட்சுமி நரசிம்மபுரத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், புதுக்கோட்டை கோட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே நான்கு கால்நடை மருந்தகங்களும், ஐந்து கால்நடைக் கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், லெட்சுமி நரசிம்மபுரம் கிராமத்தில் உள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கும் குறைவாக உள்ளதால் விதிமுறைகளின்படி இங்கு கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

45—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 62265—திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, துகிலி கால்நடை மருத்துவமனையை விரிவுப்படுத்தி கால்நடை மருத்துவரை நிரந்தரமாக நியமிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த துகிலி கால்நடை கிளை நிலையம் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. மேற்படி கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை அலகுகள் குறைவாக உள்ளதால், துகிலி கால்நடை கிளை நிலையத்தைக் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

46—

சுற்றுச்சுவர்

வினா எண் 77226—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு, சென்னிமலை கால்நடை மருந்தகத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) காங்கேயம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்மூலம் ரூ.78,000/- நிதி ஒதுக்கீடு செய்து சுற்றுச் சுவர் கட்டி முடிக்கப்பட்டு விட்டது.

(ஆ) கேள்வி எழாது.

[2010 ஜனவரி 11

47—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 75733—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்மலையனூர் தொகுதி, அவலூர்பேட்டையில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) விழுப்புரம் மண்டலம், திண்டிவனம் கோட்டம், செஞ்சி வட்டம், மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம், அவலூர்பேட்டை கிராமத்தில் ஏற்கெனவே, ஒரு கால்நடை மருந்தகம் 1982 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்தக் கால்நடை மருந்தகத்திற்குப் புதிய கால்நடை பட்டதாரி மருத்துவர் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்தும் வருகிறார்.

(ஆ) கேள்வி எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

48—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 75735—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, விளந்தை மற்றும் ஆற்காடு கிராமங்களில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு கால்நடை மருந்தகங்களும், ஆறு கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேற்படி கால்நடை நிலையம் மற்றும் அருகில் செயல்படும் கால்நடை கிளை நிலையங்கள்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகக் கருதப்படுவதால், விளந்தை மற்றும் ஆற்காடு கிராமங்களில் கால்நடை மருந்தகம் அமைக்க வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

49—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 57917—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, குளமங்கலம் வடக்கில், குளமங்கலம் தெற்கு பனங்குளம் ஊராட்சிகளை உள்ளடக்கி கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு இடங்களில் கால்நடை மருந்தகங்களும், ஒரு கால்நடை மருத்துவமனையும், ஒரு கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருகின்றன. மேலும், இக்கிராமத்தில் கால்நடைகளின் அலகுகள் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும், குளமங்கலம் வடக்கில், குளமங்கலம் தெற்கு, பனங்குளம் கிராமத்தில், கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பு இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 ஜனவரி 11

50—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 61101—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, பள்ளிப்பட்டி ஊராட்சி, நாகோஜிப்பட்டி பகுதிக்கு, கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் கோட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், நாகோஜிப்பட்டி கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதாலும், கால்நடை மருந்தகம், மேச்சேரி மற்றும் கால்நடை கிளை நிலையம், மல்லிக்குந்தம்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகக் கருதப்படுவதாலும் விதிமுறைகளின்படி இக்கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

51—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 75686—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, அட்டவணையில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி ஊராட்சி ஒன்றியத்தில் மூன்று கால்நடை மருந்தகங்களும், ஒரு கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருகின்றன. அட்டவணை கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள கால்நடைகளின் அலகுகள் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும், அருகில் செயல்படும் கால்நடை கிளை நிலையங்கள்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகக் கருதப்படுவதாலும், அட்டவணை புதூரில் கால்நடை மருந்தகம் துவக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

52—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 75807—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, கருவிழந்தநாதபுரம் பகுதியில் முழுநேர கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் நான்கு கால்நடை மருந்தகங்களும், ஐந்து கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. கருவிழந்தநாதபுரம் கிராமத்தில் குறைவாக கால்நடை அலகுகள் உள்ளதாலும், மேற்படி கிராமத்திற்கு மிக அருகில் தலைச்சங்காடு கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருவதாலும், மேற்படி கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

[2010 ஜனவரி 11

53—

கால்நடை மருந்தகம்

வினா எண் 75813—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஒன்றியம் கொண்டரசம்பாளையத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில், ஒரு கால்நடை மருத்துவமனையும், மூன்று கால்நடை மருந்தகங்களும், இரண்டு கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. கொண்டரசம்பாளையம் கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும், அருகில் செயல்படும் கால்நடை மருந்தகத்தின்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகக் கருதப்படுவதாலும், கொண்டரசம்பாளையம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க வாய்ப்பு இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

54—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 75825—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், வரகூர் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) வேலூர் மாவட்டம், திமிரி ஒன்றியத்தில் நான்கு கால்நடை மருந்தகங்களும், நான்கு கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. அருகில் செயல்படும் கால்நடை நிலையங்கள்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகக் கருதப்படுவதால், வரகூர் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

55—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 83352—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், எடையாத்தூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில், மூன்று கால்நடை மருந்தகங்களும், ஏழு கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. கால்நடை அலகுகள் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும், அருகில் உள்ள கால்நடை நிலையங்கள்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகக் கருதப்படுவதாலும், எடையாத்தூர் கிராமத்தில் கால்நடை. மருத்துவனை துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

56—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 87270—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் ஒன்றியம், விக்ரமம் கிராமத்தில் முழுநேர கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் ஒன்றியத்தில் நான்கு கால்நடை மருந்தகங்களும், நான்கு கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. விக்ரமம் கிராமம் மற்றும் அருகில் உள்ள கிராமங்களில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும், அருகில் செயல்படும் கால்நடை நிலையங்கள்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகக் கருதப்படுவதாலும் விக்ரமம் கிராமத்தில் முழு நேர கால்நடை மருத்துவனை அமைக்க வாய்ப்பில்லை.

57—

தொழிற்பேட்டை

வினா எண் 87863—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடியில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏற்கெனவே கீழ்க்கண்டவாறு 3 இடங்களில் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன:—

வ. எண்	தொழிற் பேட்டை	மொத்த நிலப் பரப்பு (ஏக்கரில்)	மொத்த தொழிற் கூடங்கள்	ஒதுக்கீடு செய்யப் பட்ட தொழிற் கூடங்கள்	காலியாக உள்ள தொழிற் கூடங்கள்	மொத்த தொழில் மனைகள்	ஒதுக்கீடு செய்யப் பட்ட தொழில் மனைகள்	காலியாக உள்ள தொழில் மனைகள்
1	புதுக்கோட்டை (அரசு)	23.18	53	53	—	5	5	—
2	புதுக்கோட்டை (சிப்காட்)	51.45	10	10	—	94	15	79
3	மாத்தூர்	23.70	17	17	—	26	25	1

எனவே, புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடியில் புதியதாகத் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழிற்திட்டங்களுடனும், தொழில் துவங்க ஆர்வமுள்ள 20-க்கும் குறையாத தொழில் முனைவோர் திருப்பித் தரப்படாத ஒப்பளிப்புத் தொகையுடன் (Commitment Charges) முன்வந்தால் புதியதாகத் தொழிற்பேட்டை அமைப்பதற்கான நிலம், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர், பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்துடன் கலந்தாய்வு செய்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

58—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 88663—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, வெள்ளரிவெள்ளி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு கால்நடை மருந்தகங்களும், இரண்டு கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், இக்கிராமத்தில் கால்நடைகளின் அலகுகள் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும், அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகக் கருதப்படுவதாலும், மேற்படி கிராமத்தில் கால்நடை மருத்துவனை ஏற்படுத்த தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

59—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 94117—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டத்திற்கு நடமாடும் கால்நடை மருத்துவமனையை இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

ஓமலூர் வட்டத்தில் நடமாடும் கால்நடை ஊர்திப் பிரிவு ஏற்கெனவே இயங்கிக் கொண்டு வருகிறது. ஓமலூர் கோட்டத்தைத் தலைமை இடமாகக்கொண்டு இயங்கி வரும் நடமாடும் கால்நடை மருந்தகத்தின் ஊர்திப் பிரிவு, மேச்சேரி மற்றும் நங்கவள்ளி

2010 ஜனவரி 11]

ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொரு திங்கட்கிழமையும், ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஒவ்வொரு செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளிலும், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் வியாழக்கிழமைகளிலும், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் செயல்பட்டு வருகிறது.

60—

சுற்றுச் சுவர்

வினா எண் 95444—திரு. ஆர்.கே. பாரதி மோகன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, துகிலி கால்நடை மருத்துவமனைக்குச் சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) துகிலி கால்நடை கிளை நிலையம், துகிலி ஊராட்சி மன்றத்திற்குச் சொந்தமான இடத்தில், வாடகை இல்லா கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது. அதற்குச் சுற்றுச் சுவர் அமைக்க ஊராட்சி மன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழாது.

61—

கால்நடை மருந்தகம்

வினா எண் 98486—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, கீழப்பசலை ஊராட்சி, வேதியரேந்தலில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்தில், மூன்று கால்நடை மருந்தகங்களும், நான்கு கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேற்படி கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்கு, மேலப்பசலை கால்நடை கிளை நிலையத்தின்மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஆகையால், வேதியரேந்தல் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

62—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 99098—திருமதி ராணி வெங்கடேசன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சாத்தான்குளம் தொகுதி, மேலவெள்ளமடத்திலுள்ள கால்நடை மருத்துவமனையை இயக்கவும், மருத்துவரை நியமிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார் திருநகர் ஊராட்சி ஒன்றியத்தில், மூன்று கால்நடை மருந்தகங்களும், மூன்று கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. கால்நடைகளின்

2010 ஜனவரி 11]

எண்ணிக்கை அலகுகள் குறைவாக உள்ளதாலும், ஆழ்வார் திருநகர் மற்றும் நாசரேத் ஆகிய கால்நடை மருந்தகங்கள் அருகில் செயல்படுவதாலும், மேலவெள்ளமடம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க வாய்ப்பு இல்லை. மேற்கண்ட கிராமத்தில் கால்நடை நிலையங்கள் ஏதும் செயல்படாததால் மருத்துவர் நியமனம் குறித்த கேள்வி எழாது.

(ஆ) கேள்வி எழாது.

63—

வண்ண மீன்கள்

வினா எண் 69375—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, சோலையார்பேட்டை ஒன்றியம், ஏலகிரிமலை சுற்றுலாத் தலத்தில் வண்ண மீன்கள் கண்காட்சி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தொகுதி, சோலையார்பேட்டை ஒன்றியம், ஏலகிரிமலை சுற்றுலாத் தலத்தில் வண்ண மீன்கள் கண்காட்சி அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

64—

கலை விழா

வினா எண் 69491—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

சுற்றுலாத் துறையின் மூலம் அனைத்து மாவட்ட தலைநகரங்கள் மற்றும் முக்கிய நகரங்களில் ஒவ்வொரு ஆண்டும் கலை விழா நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

அரசு சுற்றுலாத் துறையின் சார்பில் ஆண்டுதோறும் ஒவ்வொரு மாவட்டத்திலும் பொங்கல் நாட்களில் பொங்கல் சுற்றுலா விழாவும் மற்றும் செப்டம்பர் 27 அன்று உலக சுற்றுலா தின விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

சுற்றுலாத் துறையின்மூலம் அனைத்து மாவட்ட தலைநகரங்கள் மற்றும் முக்கிய நகரங்களில் ஒவ்வொரு ஆண்டும் கலை விழா நடத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

65—

கிளை அலுவலகம்

வினா எண் 80362—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் பத்திரப்பதிவு கிளை அலுவலகத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை, ஆனைமலை சார்-பதிவகத்திற்கு மிக அருகிலேயே உள்ளது. வருங்காலத்தில் பதிவாகும் ஆவணங்களின் எண்ணிக்கை அதிகமாகும்பொழுது ஒரு சார்-பதிவாளர் அலுவலகம் தொடங்க வாய்ப்புள்ளது. எனவே, தற்போது வால்பாறையில் சார்-பதிவாளர் அலுவலகம் திறக்கத் தேவையில்லை.

2010 ஜனவரி 11]

66—

கிளை அலுவலகம்

வினா எண் 80363—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூரில் பத்திரப் பதிவு கிளை அலுவலகத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா?

.(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோட்டூர் கிராமம், ஆனைமலை சார்-பதிவகத்திற்குட்பட்டதாகும். கோட்டூர் கிராமம், தற்போதுள்ள ஆனைமலை சார்-பதிவகத்திலிருந்து சுமார் 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. ஆண்டுக்குச் சராசரியாக 500 ஆவணங்கள் மட்டுமே பதிவு செய்யப்படுகின்றன.

மேலும், கோட்டூரைச் சுற்றியுள்ள கிராமங்களும் ஆனைமலை சார்-பதிவகத்திற்கு அருகில் 5 முதல் 8 கி.மீ. தொலைவிலேயே உள்ளது. மேற்படி கிராமங்களிலிருந்து ஆனைமலைக்கு போக்குவரத்து வசதிகள் அதிகமுள்ளன. கோட்டூர் கிராமத்தில் ஆண்டுக்குச் சராசரியாக 500 ஆவணங்கள் மட்டுமே பதிவு செய்யப்படுகின்றன. வருங்காலத்தில் பதிவு செய்யும் ஆவணங்களின் எண்ணிக்கை அதிகமாகும்பொழுது ஒரு சார்-பதிவாளர் அலுவலகம் ஒன்றினைத் தொடங்க வாய்ப்புள்ளது. தற்பொழுது கோட்டூரில் சார்-பதிவாளர் அலுவலகம் திறக்கத் தேவையில்லை என்று கருதப்படுகிறது.

67—

வளர்ச்சிப் பணிகள்

வினா எண் 82703—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 ஜனவரி 11

(அ) சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி அருகேயுள்ள பிரான்மலையில் வளர்ச்சிப் பணிகளைச் சுற்றுலாத் துறை சார்பில் மேற்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி அருகேயுள்ள பிரான்மலையில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

68—

கலை விழா

வினா எண் 82783—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் சுற்றுலாத் துறைமூலம் கலை விழா நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய மாநில உதவித் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாமல்லபுரத்தில் டிசம்பர், ஜனவரி மாதங்களில் நாட்டிய விழா நடத்தப்பட்டு வருகிறது. மேலும் ஆண்டுதோறும் மாவட்டந்தோறும் பொங்கல் சுற்றுலா விழா மற்றும் செப்டம்பர் 27 அன்று உலகச் சுற்றுலா விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

2010 ஜனவரி 11]

69—

நவீனப்படுத்துதல்

வினா எண் 90804—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் கோட்டையை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

ஓமலூர் கோட்டையை நவீனப்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

70—

சுற்றுலாத் தலம்

வினா எண் 90762—திரு. வை. காவேரி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, சித்தர்கோயில் பகுதியை சுற்றுலாத் தலமாக மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, தேவையான அடிப்படை வசதிகள் மட்டுமே செய்து தருகிறது.

எடப்பாடி தொகுதி, சித்தர்கோயில் பகுதியை மேம்படுத்தும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2010 ஜனவரி 11

71—

நவீனப்படுத்துதல்

வினா எண் 90805—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் நகரை நவீனப்படுத்தி, சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, தேவையான அடிப்படை வசதிகள் மட்டுமே செய்து வருகிறது.

மேட்டூர் நகரை நவீனப்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

72—

சுற்றுலாத் தலம்

வினா எண் 96970— திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஜாம்பானோடை ஊராட்சியில் உள்ள தர்காவை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு அடிப்படை வசதிகள் மட்டும் செய்து வருகிறது.

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஜாம்பானோடை ஊராட்சியில் தர்கா அமைந்துள்ள பகுதியை மேம்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

73—

சிறுவர்களுக்கான இரயில்

வினா எண் 97027—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் சுற்றுலாப் பகுதியில் சிறுவர்களுக்கான இரயில் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் சுற்றுலாப் பகுதியில் சிறுவர்களுக்கான இரயில் இயக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

74—

கிரையப் பத்திரம்

வினா எண் 6955—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 ஜனவரி 11

(அ) தாம்பரம் தொகுதியில் வேளச்சேரி குடிசை மாற்று வாரிய திட்டப் பகுதியில் உள்ள நேரு நகர், பெரியார் நகர், இந்திரா காந்தி நகர், முன்னாள் இராணுவக் குடியிருப்பு ஏ.எஸ்.கே. நகர், கக்கன் நகர், லட்சுமிபுரம், திரௌபதியம்மன் கோயில் தெரு ஆகிய இடங்களில் வசிக்கும் குடிமனைதாரர்கள் *90%* கிரையத் தொகை முழுவதும் செலுத்திவிட்ட நிலையில் கிரையப் பத்திரம் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன் குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நில உரிமை மாற்றம் செய்து அரசு ஆணை வரப்பெற்ற கீழ்க்கண்ட திட்டப் பகுதிகளில் வசிக்கும் ஒதுக்கீடுதாரர்களுக்கு கிரையப் பத்திரம் வழங்கப்பட்ட விவரம் வருமாறு:

திட்டப் பகுதியின் பெயர்	மொத்த மனைகள்	ஒதுக்கீடு செய்யப்பட்ட மனைகள்	கிரையப் பத்திரம் வழங்கப்பட்ட விவரம்
(1) நேரு நகர் பாகம் 2	510	510	38
(2) இந்திரா காந்தி நகர்	126	126	21
(3) கக்கன் நகர் பாகம் 1	325	325	45
(4) லட்சுமிபுரம் (திரௌபதியம்மன் கோயில்)	432	432	52
(5) ஏ.எஸ்.கே. நகர்	143	143	28

கீழ்க்கண்ட திட்டப் பகுதிகளுக்கு வாரியத்தின் பெயரில் நில உரிமை மாற்றம் செய்வது சம்மந்தமான கருத்துரு அரசின் பரிசீலனையில் வெவ்வேறு துறைகளில் உள்ளதால் அவ்வகை

2010 ஜனவரி 11]

திட்டப் பகுதியில் நில உரிமை மாற்றம் செய்தபின் கிரையப் பத்திரம் வழங்கப்படும்.

திட்டப் பகுதி பெயர்	மொத்த மனைகள்	ஒதுக்கீடு செய்யப்பட்ட மனைகள்
(1) நேரு நகர் பாகம் 1	856	856
(2) பெரியார் நகர்	325	325
(3) முன்னாள் இராணுவ குடியிருப்பு	125	125

75—

தரம் உயர்த்துதல்

வினா எண் 48613—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், கணவாய்பட்டி அரசு கள்ளர் ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, கணவாய்பட்டி அரசு கள்ளர் ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

76—

விற்பனை வளாகம்

வினா எண் 63157—திரு. வை. காவேரி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி பகுதியில் சாயப் பட்டறை, விசைத் தறி ஆகியவற்றை ஒருங்கிணைத்து ஜவுளி தொழில் வளாகம், விற்பனை வளாகம் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி பகுதியில் சாயப் பட்டறை, விசைத் தறி ஆகியவற்றை ஒருங்கிணைத்து ஜவுளி தொழில் வளாகம், விற்பனை வளாகம் ஏற்படுத்த எடப்பாடி பகுதியில் உள்ள தொழில் முனைவோர்கள் உரிய பிரேரணைகளை அரசுக்கு திட்ட மொழிவுகளுடன் சமர்ப்பிப்பார்களேயானால் இதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

77—

ஜவுளிச் சந்தை

வினா எண் 90822—திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம், சோமனூர் பகுதிகளில் ஜவுளிச் சந்தை உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பல்லடம், சோமனூர் பகுதிகளில் ஜவுளிச் சந்தை உருவாக்குவது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

78—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 84450—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

(அ) மானாமதுரை தொகுதியில் மகளிர் தொழிற்பயிற்சி நிலையம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி அமைந்துள்ள சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் 7 தொழிற்பிரிவுகளில் 254 இருக்கைகளுடனும், சிவகங்கையில் 6 தொழிற்பிரிவுகளில் 224 இருக்கைகளுடனும் இரு அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், இம்மாவட்டத்தில் 13 தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் 1,541 இருக்கைகளுடன் இயங்கி வருகின்றன. இவை இம்மாவட்டத்தின் தேவைக்குப் போதுமானதாக உள்ளன. எனவே, சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் புதிய மகளிர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் துவக்க அரசிற்கு உத்தேசம் இல்லை.

(ஆ) எழாது.

79—

கணினித் தொழிற்பயிற்சி

வினா எண் 92513—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, கடகத்தூர் ஊராட்சி, அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் கணினித் தொழிற்பயிற்சி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் புதிய தொழிற்பிரிவுகள், அத்தொகுதியிலுள்ள தொழிற்சாலைகளின் தேவையினைப் பொறுத்தும், வேலைவாய்ப்பினை அடிப்படையாகக்

கொண்டும் துவக்கப்படுகின்றன. தருமபுரி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில், தற்போது 5 தொழிற்பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதில் தானியங்கி தொழிற்பிரிவு, திறன்மிகு மையமாக மேம்படுத்தப்பட்டுள்ளது. கணினித் தொழிற்பிரிவு செயல்படும் தொழிற்பயிற்சி நிலையங்களில் போதுமான வரவேற்பு இன்மையால், சேர்க்கை மிகக் குறைவாகவே உள்ளது. எனவே, இத்தொழிற்பயிற்சி நிலையத்தில் கணினித் தொழிற்பிரிவு தொடங்குவதால் ஏற்படக்கூடிய வரவேற்பு குறித்து உரிய ஆய்வுகள் செய்யப்பட்ட பின்னரே, இதுகுறித்து முடிவு செய்ய இயலும். எனவே, தருமபுரி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில், கணினித் தொழிற்பிரிவு துவக்க அரசிற்குத் தற்போது உத்தேசம் இல்லை.

(ஆ) எழாது.

80—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 98327—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதியில் மகளிர் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டில் ஒரு அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், 14 தொழிற்பிரிவுகளில் 888 இருக்கைகளுடன் மகளிருக்கென்று 30% இட ஒதுக்கீட்டுடன் செயல்பட்டுவருகிறது. மேலும், இம்மாவட்டத்தில் 24 தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் 3,207 இருக்கைகளுடன் இயங்கி வருகின்றன. இவை இப்பகுதியின் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக உள்ளதால், காஞ்சிபுரம் தொகுதியில் மகளிருக்கான தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அரசுக்கு உத்தேசம் இல்லை.

(ஆ) எழாது.

2010 ஜனவரி 11]

81—

அடிப்படை வசதிகள்

வினா எண் 17388—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, அங்கலக்குறிச்சி ராமர், விநாயகர், காமாட்சியம்மன் திருக்கோயில்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, அங்கலக்குறிச்சி, அருள்மிகு ராமர், விநாயகர், காமாட்சியம்மன் திருக்கோயில்களுக்கு அடிப்படை வசதிகள் செய்யும் அளவிற்கு நிதியாதாரம் ஏதுமில்லை. எனவே, நிதி வசதி இல்லாத காரணத்தினால், தற்போதைக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க இயலாத நிலை உள்ளது.

82—

கோயில் திருப்பணி

வினா எண் 84222—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகேயுள்ள வாவியரேந்தலில் உள்ள கலிதீர்த்த அய்யனார் கோயிலைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், திருப்புவனம் அருகேயுள்ள வாவியரேந்தலில் உள்ள கலிதீர்த்த அய்யனார் கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் ஒரு மேடையில் அமைக்கப்பட்டு அய்யனார் சிலை வைக்கப்பட்டுள்ளது. கிராமப் பொதுமக்களால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயில், துறை கட்டுப்பாட்டில் இல்லாததால் இந்து சமய அறநிலையத் துறைமூலம் திருப்பணிகள் மேற்கொள்ள வழிவகை இல்லை.

83—

குடமுழுக்கு

வினா எண் 84227—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம், நெல்முடிக்கரையில் உள்ள உச்சிமாகாளியம்மன் கோயிலைச் சீரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், திருப்புவனம் அருகேயுள்ள நெல்முடிக்கரையில் அருள்மிகு உச்சிமாகாளியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். எனவே, இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக இத்திருக்கோயிலைச் சீரமைத்து குடமுழுக்கு விழா நடத்த இயலாத நிலை உள்ளது.

2010 ஜனவரி 11]

84—

சுகாதார வளாகம்

வினா எண் 90830—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, முகையூர் ஒன்றியம், கண்டாச்சிபுரம் ஆண்கள், பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தனித் தனியாகக் கழிப்பிட வசதி, மிதிவண்டி நிறுத்துமிடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் கல்வி மாவட்டம், முகையூர் தொகுதி கண்டாச்சிபுரம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு பகுதி-V திட்டத்தின்கீழ் கழிப்பிட வசதிகள் கீழ்க்கண்ட எண்ணிக்கையில் செய்துதரப்பட்டுள்ளன:—

அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி	அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி
கண்டாச்சிபுரம்	கண்டாச்சிபுரம்
கழிப்பறை 2+2 (டேனிடா)	கழிப்பறை 2+1 (SSA)

2. மேலும் கண்டாச்சிபுரம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் கண்டாச்சிபுரம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு மிதிவண்டி நிறுத்துமிடத்தை பெற்றோர் ஆசிரியர் கழகம்மூலம் கட்டித் தர தலைமை ஆசிரியர்களுக்குத் தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

3. மேலும், கூடுதல் கழிப்பிட வசதிக்கு, மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி முழு சுகாதாரத் திட்டத்தின்கீழ் கழிப்பிட வசதி செய்து கொள்வதற்குத் தலைமை ஆசிரியர்களுக்குத் தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

[2010 ஜனவரி 11

85—

பாதுகாப்பு

வினா எண் 41558—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, கம்பம்பட்டி ஊராட்சி, பப்பிரெட்டியூர் கிராம மக்களை வன விலங்குகளிடம் இருந்து பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, கம்பம்பட்டி ஊராட்சி, பப்பிரெட்டியூர் கிராமம், பரிகம் காப்புக் காட்டினருகில் அமைந்துள்ளது. இப்பகுதியில் யானைகள் நடமாட்டம் ஏதுமில்லை. எனவே யானைகளால் விவசாயப் பொருட்கள் சேதாரம் ஏதுமில்லை. இப்பகுதியில் மான் மற்றும் காட்டுப் பன்றிகள் மட்டுமே உள்ளன. காட்டுப் பன்றிகளால் இப்பகுதி விவசாய நிலங்களில் சேதம் விளைவித்ததாக எந்தவிதமான புகாரும் பெறப்படவில்லை.

வன விலங்குகளிடமிருந்து பொதுவாக, யானைகளிடமிருந்து விவசாய நிலங்களைப் பாதுகாக்க தருமபுரி கோட்டத்தில் 2007-2008 ஆம் ஆண்டு வரை 31 கி.மீ. தூரத்திற்கு காப்புக் காட்டின் எல்லைகளில் சூரிய மின்வேலி அமைக்கப்பட்டு விவசாய நிலங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. 2008-2009 ஆம் நிதியாண்டில் 16 கி.மீ. நீளத்திற்கு தருமபுரி கோட்டத்தின் பல்வேறு வனப் பகுதிகளில் சூரிய மின்வேலி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இன்றுவரை 16 கிமீ. தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது. இதில் கம்பம்பட்டி, பப்பிரெட்டியூர் கிராமத்தை ஒட்டிய வனப் பகுதியில் 3 கி.மீ. தூரம் சூரிய மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாய நிலங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

2010 ஜனவரி 11]

86—

சூரியசக்தி மின்வேலி

வினா எண் 75269—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, கொண்டகரஅள்ளி ஊராட்சி வனப் பகுதி கிராமத்தில் வன விலங்குகளால் ஏற்படும் சேதத்தைத் தடுக்க சூரிய சக்தி மின்வேலி அமைக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கொண்டகரஅள்ளி ஊராட்சியை ஒட்டிய வனப் பகுதியில் இன்றுவரை சூரிய மின்வேலி ஏதும் அமைக்கப்படவில்லை. ஏனெனில் இப்பகுதியில் யானை போன்ற வன விலங்குகள் நடமாட்டம் இல்லை. மான் மற்றும் காட்டுப் பன்றி போன்ற வன உயிரினங்களின் நடமாட்டம் மட்டுமே உள்ளது. எனவே, நூலஹள்ளி, ரெட்டிஅள்ளி ஒதுக்குக் காட்டின் எல்லைப் பகுதியில் 53 கி.மீ. தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைக்க வேண்டியுள்ளது. இப்பணிக்கு வரும் 2009-2010 ஆம் நிதி ஆண்டில் அரசின் நிதி ஒதுக்கீடு பெற்று முன்னுரிமையின் அடிப்படையில் சூரிய மின்வேலி அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

தருமபுரி கோட்டத்தில் இதுவரை, அதாவது 2007-2008 நிதியாண்டு வரை 31 கி.மீ. சூரிய மின்வேலி ரூ.46.00 இலட்சம் மதிப்பில் பிக்கிலி, கேசர்குழி பெண்ணாகரம், ஒட்டப்பட்டி, பேலனூர், பதனவாடி, மசக்கல், தொப்பூர் மற்றும் பரிகம் வனப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

2008-2009 ஆம் நிதியாண்டில் இக்கோட்டத்தில் தொப்பூர் மற்றும் பரிகம் வனப் பகுதியில் 6 கி.மீ. தூரத்திற்கும், ஒட்டப்பட்டி வனப் பகுதியில் 3 கி.மீ. தூரத்திற்கும், கேசர்குழி வனப் பகுதியில் 3 கி.மீ. தூரத்திற்கும், மேலனூர் வனப் பகுதியில் 4 கி.மீ. தூரத்திற்கும், மொத்தம் 16 கி.மீ. தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைக்க ரூ.25.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை 16 கி.மீ. தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது.

[2010 ஜனவரி 11

தருமபுரி கோட்டத்தில் பல்வேறு வனப் பகுதிகளில் 283.50 கி.மீ. தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

87—

மரங்கள் நடுதல்

வினா எண் 95386—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, வானகிரி கடற்பரப்பிலிருந்து சின்னமேடு வரை உள்ள இடங்களில் வனத் துறைமூலம் மரங்களை நடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, வானகிரி முதல் சின்னமேடு வரையுள்ள கடற்கரைக்குட்பட்ட பகுதி தாழ்வான பகுதியாகும். எனவே உயரமான அலைகள் வரும்போது கடல்நீர் உட்புகுந்து உப்புநீர் தேங்கி விடுவதால், நடப்படும் மரங்கள் காய்ந்து விடுகின்றன. எனவே இப்பகுதிகளில் மரக் கன்றுகள் நடுவதற்கு வாய்ப்பில்லை.

88—

மரக் கன்றுகள்

வினா எண் 100482—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் மரக் கன்று உற்பத்திப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து சுமார் 30 கி.மீ. தொலைவில் உள்ள அரசனூர் வன விரிவாக்க மையத்தில் அமைந்துள்ள நாற்றங்கால் மூலமாக மரக் கன்றுகள் உற்பத்தி செய்து மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருவதால், மானாமதுரையில் தனியாக மரக் கன்று உற்பத்திப் பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

89—

போக்குவரத்து

வினா எண் 40669—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் தேசிய நெடுஞ்சாலையிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி போக்குவரத்தைச் சீர்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் தேசிய நெடுஞ்சாலையில் கீழ்க்கண்டவாறு ஆக்கிரமிப்புகள் சுமார் இரண்டாண்டுகளாக ஏற்பட்டிருந்தன:

வ.எண்	ஆக்கிரமிப்பின் தன்மை	எண்ணிக்கை
(1)	(2)	(3)
1	தகர ஷெட்	12
2	கூரை வீடு	2
3	டீக்கடை	12
4	கடை	58

வ.எண் (1)	ஆக்கிரமிப்பின் தன்மை (2)	எண்ணிக்கை (3)
5	ஆஸ்பெஸ்டாஸ்	2
6	கூரை ஷெட்	9
7	கூரை கடை	3
8	படிகட்டு	7
9	கறிக் கடை	1
10	ஆஸ்பெஸ்டாஸ் கடை	5
11	பெட்டிக் கடை	9
12	தகரக் கூடம்	3
13	பரோட்டா கடை	3
14	பழக் கடை	3
15	பலசரக்குக் கடை	2
16	ஜவுளிக் கடை	4
17	உரக் கடை	2
18	படிக்கட்டு ஷெட்	1
19	மிக்சர் கடை	1
20	உணவு விடுதி ஷெட்	1
21	தகர தாவாரம்	8
22	ஷெட்	2
23	ஹோட்டல்	1
24	தாழ்வாரம்	2
	மொத்தம் ..	153

(ஆ) மேற்கண்ட ஆக்கிரமிப்புகள் அனைத்தையும் 15-4-2008 அன்று அகற்றி சாலைப் போக்குவரத்துக்கேற்றவாறு சீர் செய்யப்பட்டுள்ளது.

90—

இருவழிச் சாலை

வினா எண் 71485—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

(அ) வேலூர் மாவட்டம், வாணியம்பாடியிலிருந்து திருப்பத்தூர் வழியாக சேலத்திற்கு இருவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) வேலூர் மாவட்டம், வாணியம்பாடியிலிருந்து திருப்பத்தூர் வழியாக சேலத்திற்கு இருவழிச் சாலை அமைக்கக் கோரப்பட்டுள்ள சாலையின் சரியான பெயர் "சேலம்-திருப்பத்தூர்-வாணியம்பாடி சாலை" ஆகும். இச்சாலையானது 125.00 கி.மீ. நீளமுள்ள மாநில நெடுஞ்சாலை (SH No. 18) ஆகும். இச்சாலையானது சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் ஆகிய நெடுஞ்சாலை கோட்டங்களின்மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இச்சாலையில் கி.மீ. 0/0-16/160 (16.160 கி.மீ.) வரையுள்ள சாலையானது சேலம் (நெ) கோட்டத்தாலும் கி.மீ. 16/160-69/0 (52.84 கி.மீ.) வரையுள்ள பகுதிகளானது தருமபுரி (நெ) கோட்டத்தாலும் ஏற்கெனவே இருவழித் தடமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், இச்சாலையில் கி.மீ. 69/0-79/0 மற்றும் கி.மீ. 79/4-93/6 வரையுள்ள 24.20 கி.மீ. நீளமுள்ள சாலையானது கிருஷ்ணகிரி (நெ) கோட்டத்தாலும், கி.மீ. 93/6-104/6 மற்றும் கி.மீ. 106/4-125/0 வரையுள்ள 29.60 கி.மீ. நீளமுள்ள பகுதிகள் வேலூர் (நெ) கோட்டத்தாலும் இருவழித் தடமாகவும் மற்றும் கி.மீ. 79/0-79-4 வரையுள்ள 0.40 கி.மீ. நீளமுள்ள சாலைப் பகுதிகள் மற்றும் கி.மீ.104/6-106/4 வரையுள்ள 1.80 கி.மீ. பகுதிகள் பலவழித் தடமாகவும் பராமரிக்கப்பட்டு வருகின்றது. மொத்தமுள்ள 125.00 கி.மீ. நீளமுள்ள இச்சாலையில் 122.80 கி.மீ. பகுதிகள் ஏற்கெனவே இருவழித் தடமாகவும் எஞ்சியுள்ள 2.20 கி.மீ. நீளச் சாலையும் இருவழித் தடத்திற்கும் மேலாக பலவழித் தடமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இச்சாலை ஏற்கெனவே இருவழித் தடமாக உள்ளதால் இக்கேள்வி எழவில்லை.

91—

பட்டயப் படிப்பு

வினா எண் 62168—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு சேவை இல்லத்தில் பயிலும் மகளிருக்கு வேலைவாய்ப்பு கிடைக்க செவிலியர், ஆசிரியர் பயிற்சி, சமையல் கலை போன்றவற்றிற்கான பட்டயப் படிப்பு தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

அரசு சேவை இல்லத்தில் பயிலும் மாணவியர்க்காக தாம்பரம் அரசு சேவை இல்ல வளர்கத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆசிரியர் பயிற்சி, 2007-2008 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் 40 மகளிர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். செவிலியர் பட்டயப் படிப்பினைப் பொறுத்தவரை, இப்படிப்புக்கான பயிற்சி, மருத்துவமனை வசதியுடன் கூடியதாக உள்ளதால் இது சாத்தியமில்லை. திருநெல்வேலி அரசு சேவை இல்லத்தில் 12 ஆம் வகுப்பில் செவிலியர் படிப்புக்குச் செல்லும் பொருட்டு பாடப் பிரிவுகள் நடைபெற்று வருகின்றன. இதன்மூலம் ஆண்டுதோறும் செவிலியர் பட்டப் படிப்பிற்கு மாணவியர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சமையல் கலை பட்டயப் படிப்பு தற்போது தொடங்கப்படவில்லை. சேலம் அரசு சேவை இல்லத்தில் 12 ஆம் வகுப்பில் மனையியல் பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதனைத் தொடர்ந்து சமையல் கலை பட்டப் படிப்புக் கல்லூரிகளில் சேர்ந்து மாணவிகள் பயன் பெறுகின்றனர் செவிலியர் மற்றும் சமையல் கலை தொடர்பாக 12 ஆம் வகுப்பில் பாடப் பிரிவுகளில் கல்வி பயின்று பட்டப் படிப்புகளில் சேரும் பொருட்டு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

92—

இல்வச திருமண மண்டபம்

வினா எண் 89382—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், வாயலூர் கிராமத்தில் உள்ள ஆதி திராவிடர் காலனி பகுதியில் இலவச திருமண மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2010 ஜனவரி 11]

(அ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், வாயலூர் கிராமத்தில் உள்ள ஆதி திராவிடர் காலனி பகுதியில் இலவச திருமண மண்டபம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

93—

கடனுதவி

வினா எண் 30639—திரு. கு.ப. வேலுமணி: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பேரூர் தொகுதி, ஆதி திராவிடர், பழங்குடியினருக்கு சுய தொழில் தொடங்க கடனுதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாட்கோமூலம் ஒவ்வொரு ஆண்டும் தாட்கோ, செயல் திட்டத்தின் (Action Plan) மூலம் ஆதி திராவிடர்களுக்கு மானியத்துடன்கூடிய கடனுதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. பழங்குடியினருக்கு 100% மானியத்தில் பழங்குடியினர் நலத் துறை ஆணையர்மூலம் உதவிகள் வழங்கப்படுகின்றன. பயனாளிகள் தாங்கள் தொடங்கவுள்ள தொழில் தொடர்பாக முறையான விண்ணப்பங்களை மாவட்ட மேலாளர், தாட்கோ அவர்களிடம் இலவசமாகப் பெற்று விண்ணப்பித்துப் பயன்பெறலாம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 ஜனவரி 11

94—

உலர்களம்

வினா எண் 97023—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார், தாழம்பேட்டை ஆகிய மீனவர் பகுதிகளில் மீன் உலர்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், தாழம்பேட்டை மீனவர் கிராமத்தில் ஏற்கெனவே தேசிய சம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் (Rastriya Sam Vikar Yojana) மீன் உலர்களம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பூம்புகாரில் மீன் உலர்களம் உள்ளது. எனவே, நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார், தாழம்பேட்டை ஆகிய மீனவர் பகுதிகளில் புதிய மீன் உலர்களம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

95—

பால் குளிரூட்டும் நிலையம்

வினா எண் 69600—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் இருந்து 25 கி.மீ. தூரத்தில் உள்ள சிவகங்கையில் 10,000 லிட்டர் கொள்ளளவு உள்ள ஒரு பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட்டு வருகிறது. தற்போது இக்குளிரூட்டும் நிலையத்தில் சுமார் 7,000 முதல் 8,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. மேலும், திருப்புவனம் பகுதியில் தனியாக பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் அளவிற்குப் போதுமான பால் உற்பத்தி இல்லாததால், திருப்புவனத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க தற்சமயம் வாய்ப்பு இல்லை.

96—

பால் பதப்படுத்தும் நிலையம்

வினா எண் 70023—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், திட்டக்குடி பகுதியில் பால் பதப்படுத்தும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், திட்டக்குடி பகுதிக்கு அருகில் சுமார் 35 கி.மீ. தொலைவில் உள்ள சின்னசேலத்தில் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பாலைக் குளிர்விக்கும் திறன்வாய்ந்த பால் குளிரூட்டும் நிலையம் தற்போது செயல்பட்டு வருகிறது. திட்டக்குடி பகுதியில் உள்ள சுமார் 25 பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பால் கொள்முதல் செய்யப்பட்டு, சின்னசேலம் பால் குளிரூட்டும் நிலையம், வேப்பூர், மங்களூர் மற்றும் ஆவினங்குடி தொகுப்பு பால் குளிர்விப்பான் மையங்களுக்கு பால் அனுப்பப்பட்டு குளிர்விக்கப்படுகிறது. எனவே, திட்டக்குடி பகுதியில் மேலும் ஒரு பால் பதப்படுத்தும் நிலையம் அமைக்க தற்சமயம் சாத்தியக்கூறுகள் இல்லை.

97—

பால் பதனிடும் தொழிற்சாலை

வினா எண் 75424—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செய்யாறில் பால் பதனிடும் தொழிற்சாலை தொடங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

வேலூர்-திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் எல்லையில் உள்ள செய்யாறு நகருக்கு அருகில், 2 கி.மீ. தொலைவில் உள்ள அனக்காவூரில், பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட்டு வருகிறது. இதன் கையாளும் திறன் நாளொன்றுக்கு 50,000 லிட்டர் ஆகும். ஆனால், தற்போதுள்ள 94 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நாளொன்றுக்கு 16,000 லிட்டர் பால் மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால், தற்போதைய சூழ்நிலையில் செய்யாறில் பால் பதனிடும் தொழிற்சாலை அமைக்க சாத்தியமில்லை.

98—

பால் உற்பத்தி நிலையம்

வினா எண் 75705—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், திருப்புவனத்தில் பால் உற்பத்தி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை சட்டமன்றத் தொகுதியில் உள்ள திருப்புவனத்தில் இருந்து 25 கி.மீ. தொலைவில் உள்ள சிவகங்கையில் நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர் கையாளும் திறன்கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட்டு வருகிறது. தற்போது, இக்குளிரூட்டும் நிலையத்தில் தினசரி 7,000 முதல் 8,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு குளிரூட்டப்படுகிறது. 10,000 லிட்டர் கையாளும் திறன் கொண்ட பால் குளிரூட்டும நிலையத்தில் முழுமையாகக் கையாளத்தக்க வகையில் போதிய பால் உற்பத்தி இல்லாததால், திருப்புவனத்தில் புதிய பால் உற்பத்தி நிலையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

99—

பால் சேகரிப்பு மையம்

வினா எண் 97021—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?*

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், காவேரிப்பூம்பட்டினம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் மருதம்பள்ளம் கிராமத்தில் பால் சேகரிப்பு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், காவேரிப்பூம்பட்டினம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து மருதம்பள்ளம் கிராமம் 15 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. தஞ்சாவூர் மாவட்ட ஒன்றியத்தில் உள்ள மயிலாடுதுறை பால் குளிரூட்டும் நிலையம், கடந்த 2001 ஆம் ஆண்டு முதல்

இயங்காததால், இப்பகுதியில் பால் வழித் தடங்கள் இயக்கப்படவில்லை.

எனவே, காவேரிப்பூம்பட்டினம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் மருதம்பள்ளம் கிராமத்தில் பால் சேகரிப்பு மையம் அமைக்க வாய்ப்பில்லை. இனிவரும் காலங்களில், மயிலாடுதுறை பால் குளிரூட்டும் நிலையம் மீண்டும் துவக்கப்பட்டு, பால் வழித் தடங்கள் இயக்கப்படும்போது, காவேரிபூம்பட்டினம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் மருதம்பள்ளம் கிராமத்தில் பால் சேகரிப்பு மையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

100—

கட்டடம்

வினா எண் 95416—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், பால்வார்த்துவென்றான் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், பால்வார்த்துவென்றான் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமாக காலிமனை இல்லாததாலும், போதிய நிதி ஆதாரம் இல்லாததாலும், சொந்த கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

2010 ஜனவரி 11]

பட்டியல் 5

1—

தொகுப்பு வீடுகள்

வினா எண் 6720—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, வழுக்கல் பகுதியில் பிச்சனூர் ஊராட்சியில் பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளைச் சீர்செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம் பேரூர் தொகுதி, மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பிச்சனூர் ஊராட்சி, வழுக்கல் பகுதியில் தொகுப்பு வீடுகள் இல்லாததால் தொகுப்பு வீடுகளைச் சீர்செய்து கொடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

2—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 6973—திரு. லெ. காவேரி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொங்கணாபுரம் ஒன்றியம், கோணசமுத்திரம், கோநகையான்காடு சடையம்பாளையம் காட்டுவளவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி வட்டம், கொங்கணாபுரம் ஒன்றியம், கோணசமுத்திரம் ஊராட்சியைச் சார்ந்த சடையம்பாளையம்

காட்டுவளவு என்கிற கோநகையான்காடு சடையம்பாளையம் காட்டுவளவு குடியிருப்புக்கு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டு இருப்பாளி கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் காவேரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி தேவையில்லை.

3—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 45493—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், சிக்கம்பட்டி ஊராட்சி, சின்னகாடம்பட்டி, மேற்கு காட்டுவளவு மற்றும் காமராஜர் நகர் ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, சின்னகாடம்பட்டி, மேற்கு காட்டுவளவு மற்றும் காமராஜர் நகர் ஆகிய பகுதிகளுக்கு தற்போது சின்னகாடம்பட்டி மற்றும் நாடார் தெரு குடியிருப்புகளில் உள்ள மேல்நிலைத் தொட்டிகளிலிருந்து அத்தியாவசிய தேவைக்கான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தனியே மேல்நிலைத் தொட்டிகள் தேவையில்லை.

4—

சமத்துவபுர வீடுகள்

வினா எண் 47850—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சி மிகவும் பின்தங்கிய இன மக்களுக்கு சமத்துவபுர வீடுகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சமத்துவபுரம் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யும்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமப்புறத்தில் தேர்வு செய்ய வேண்டும் எனப் பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சியில் சமத்துவபுரம் அமைக்க வழிவகை இல்லை.

5—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 49251—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, நங்கவள்ளி ஒன்றியம், வீரக்கல் ஊராட்சி, மாட்டுக்காரன்வளவு, பொறிக்காரனூர்வளவு, ஆனையன்குண்டு காட்டுவளவு சங்கதியான் காட்டுவளவு, மாட்டுக்காரன் தெரு மற்றும் சீங்கானி கோவில் காட்டுவளவு ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, மாட்டுக்காரன்வளவு என்ற மடிக்காரன்வளவு குடியிருப்பில் *10,000* லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய

குடிநீர்த் திட்டம் அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. பொறிக்காரன்வளவு, ஆனையன்குண்டு காட்டுவளவு, சங்கதியான் காட்டுவளவு மற்றும் சீங்கானி கோவில் காட்டுவளவு ஆகிய குடியிருப்புகளில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன்கூடிய குடிநீர்த் திட்டம் செயலாக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மாட்டுக்காரன் தெரு குடியிருப்பிற்கு, ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை.

6—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 49252—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, நங்கவள்ளி ஒன்றியம், சாணாரப்பட்டி ஊராட்சி, கொல்லாங்காடு, செல்வ விநாயகர் கோவில் பேருந்து நிறுத்தம், பள்ளிக்காடு, ஆயதாசன் கொத்துக்கல்காடு, நரிக்கல்லூர் எச், சப்பானிப்பட்டி எச், மூலக்காடு காட்டுவளவு மற்றும் சூரப்பள்ளி ஊராட்சி, குப்பம்பட்டி இந்திரா நகர், கூக்கம் காட்டுவளவு சரளைக்காடு, நரியம்பட்டி கண்ணாடி முனியப்பன் கோவில், ஆசாரிகாடு காளியம்மன் கோவில் ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

மேட்டூர் தொகுதி, நங்கவள்ளி ஒன்றியம், சாணாரப்பட்டி ஊராட்சி, கொல்லாங்காடு, செல்வ விநாயகர் கோவில் பேருந்து நிறுத்தம், பள்ளிக்காடு (பாலிக்காடு) ஆயதாசன் கொத்துக்கல்காடு, நரிக்கல்லூர்—எச், சப்பானிப்பட்டி—எச், மூலக்காடு காட்டுவளவு (ரெட்டிகாடு) சூரப்பள்ளி ஊராட்சி, குப்பம்பட்டி இந்திராநகர், கூக்கம் காட்டுவளவு (கோல்காரன் காட்டுவளவு) மற்றும்

2010 ஜனவரி 11]

ஆசாரிகாடு காளியம்மன் கோவில் ஆகிய 10 குடியிருப்புகளுக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன்கூடிய குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

7—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 67892—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், கஞ்சநாய்க்கன்பட்டி ஊராட்சி, கோட்டமேடு கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

காடையாம்பட்டி ஒன்றியம், கஞ்சநாய்க்கன்பட்டி ஊராட்சி கோட்டமேடு குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், இக்குடியிருப்பிற்குக் கூடுதலாக மேல்நிலைத் தொட்டி கட்ட அவசியம் இல்லை.

8—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 92043—திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளாறு ஒன்றியம், சோரபுத்தூர் ஆதி திராவிடர் காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளாறு ஒன்றியம், சோரபுத்தூர் ஊராட்சியைச் சேர்ந்த சோரபுத்தூர் ஆதி திராவிடர் காலனி குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் (2009-2010) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் செயலாக்கப்படவுள்ளது.

9—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 95420—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், விருதாசம்பட்டி ஊராட்சி, விருதாசம்பட்டி அருந்ததியர் தெருவிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், விருதாசம்பட்டி ஊராட்சி, விருதாசம்பட்டி குடியிருப்பின் உள்ளடங்கிய பகுதியாகும். இப்பகுதிக்கு பிரதான குடியிருப்பில் அமைந்துள்ள 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் வழியாக காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்புமூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அவசியம் இல்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

10—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 59889—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, Upper ஆழியாறு-காடம்பாறை சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மின்வாரியத்திற்குச் சொந்தமான Upper ஆழியாறு-காடம்பாறை சாலையைச் செப்பனிட ஒப்பந்தம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்தச் சாலையைச் சீரமைக்கும் பணி 2009-2010 ஆம் நிதி ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

11—

துணை மின் நிலையம்

வினா எண் 62938—திரு. கி.க. ராஜா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை, புதூர் நாட்டில் துணை மின் நிலையம் மற்றும் மின் பிரிவு அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜவ்வாது மலை, புதூர் நாட்டில் துணை மின் நிலையம் அமைக்க தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டபின்

வாரிய ஒப்புதல் வழங்கப்பட்டு, துணை மின்நிலையம் அமைக்கும் பணிகள் துவக்கப்படும்.

ஜவ்வாதுமலைப் பகுதியில் குறைந்த மின் இணைப்புகள் உள்ள காரணத்தாலும் (3,650 இணைப்புகள்), குறைவான மின்பளு (495 கி.வாட்) உள்ள காரணத்தாலும், மின்பளு தேவை விகிதம் குறைவாக உள்ள காரணத்தாலும், புதூர் நாட்டில் மின் பிரிவு அலுவலகம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

12—

துணை மின் நிலையம்

வினா எண் 63041—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, பேவநத்தம் ஊராட்சி, அலச்செட்டி கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

தளி தொகுதி, பேவநத்தம் ஊராட்சி, அலச்செட்டி கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கத் தற்போது அவசியம் எழவில்லை.

13—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 69868—திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனமரத்துப்பட்டி தொகுதி, வாழப்பாடி பேரூராட்சி 11-வது வார்டு பகுதி, காளியம்மன் நகரில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பனமரத்துப்பட்டி தொகுதி, வாழப்பாடி பேரூராட்சி, 11-வது வார்டு பகுதி, காளியம்மன் நகரில் புதியதாக 02-07-2008 அன்று 100 கே.வி.ஏ. மின்மாற்றி அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

14—

மின் வசதி

வினா எண் 77229—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம், பொத்தி பாளையம் ஊராட்சி, புதுப்பாளையம் ஆதி திராவிடர் காலனி பகுதிக்கு மின்வசதி மற்றும் விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயம், பொத்திபாளையம் ஊராட்சி, புதுப்பாளையம் ஆதி திராவிடர் காலனியில் சுமார் 66 வீடுகள் உள்ளன. இவை புதிதாக உருவாக்கப்பட்டுள்ளதால் இதுவரை தெருவிளக்கு மற்றும் மின் இணைப்பு ஏதும் இல்லை. மேலும் அப்பகுதிக்கு மின் இணைப்பு வேண்டி எவ்வித விண்ணப்பமும் இதுவரை பெறப்படவில்லை. மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் பெற்றவுடன் உடனடியாக மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

15—

துணை மின் நிலையம்

வினா எண் 90848—திரு. ஞா. ஜான் ஜோசப்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 ஜனவரி 11

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், நடைக்காவு துணை மின் நிலையப் பணிகளைத் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், நடைக்காவு பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க வாரியம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் துவக்கப்படும்.

16—

துணை மின் நிலையம்

வினா எண் 97972—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், மதலப்பட்டு கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், மதலப்பட்டு கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் அவசியம் தற்பொழுது எழவில்லை.

17—

அரசுத் தேர்வு ஆணையத்தில் உருது மொழியிலும் தேர்வு

வினா எண் 100675—திரு. எச். அப்துல் பாசித்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் உருது மொழியிலும் தேர்வு எழுத அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் தற்பொழுது மாற்றியமைக்கப்பட்ட புதிய பாடத் திட்டத்தின்படி, அதன் வரையறைக்குட்பட்ட பணியிடங்களில் நியமனம் செய்யப்பட போட்டித் தேர்வுகள் முதல்நிலை மற்றும் முதன்மைத் தேர்வுகள் என நடத்தப்பட்டு வருகிறது. அவற்றில், தொகுதி-1-ல் அடங்கிய பணியிடங்களுக்கு மட்டும் முதல்நிலைத் தேர்வு மற்றும் முதன்மைத் தேர்வுகளாகவும் (Preliminary & Main Examination) (Objective & Descriptive), உரிமையியல் நீதிபதி (Civil Judge) மற்றும் உதவி குற்றவியல் வழக்குரைஞர், நிலை-2 (Assistant Public Prosecutor, Grade-II) ஆகிய பணியிடங்களுக்கு முதன்மைத் தேர்வு, எழுத்துத் தேர்வாகவும் (Descriptive Type) நடத்தப்படுகின்றதென்றும், மற்ற அனைத்துப் பணியிடங்களுக்கான போட்டித் தேர்வுகளும், முதன்மைத் தேர்வு (Main Examination) எனக் கொள்குறி வகையில் (Objective Type) நடத்தப்பட்டு வருகிறதெனவும், இவற்றிற்கான வினாத் தாட்கள் தமிழிலும் மற்றும் ஆங்கிலத்திலும் மட்டுமே தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

18—

தேர்வு மையம்

வினா எண் 104586—திரு. ஞா. ஜான் ஜோசப்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஐ.ஏ.எஸ்./ஐ.பி.எஸ். தேர்வுக்குப் பயிற்சி அளிக்க பெண்களுக்கான மையத்தை மார்த்தாண்டம் பகுதியில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2000 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரையில் அகில இந்திய குடிமைப் பணிகளுக்குத் தமிழக அரசால் சென்னை அண்ணா நகரில் நடத்தப்படும் அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வுப் பயிற்சி மையத்தின்மூலமாக 239 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற மைய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குடிமைப் பணித் தேர்வில், இப்பயிற்சி மையத்தில் முதன்மைத் தேர்வுக்கும்/மாதிரி நேர்காணலுக்கும் பயிற்சி அளிக்கப்பட்ட 46 நபர்கள் அகில இந்திய குடிமைப் பணிகளுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தேர்வு செய்யப்பட்ட 46 நபர்களுள் 11 நபர்கள் பெண்களாவர். இந்நிலையில் பெண்களுக்கென்று, ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். தேர்வுக்குப் பயிற்சி அளிக்க தனியே பயிற்சி மையத்தினை மார்த்தாண்டத்தில் அமைப்பது குறித்து தேவை எழவில்லை.

19—

மின்சார இணைப்பு

வினா எண் 5250—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை, கணபதிபாளையம் ஊராட்சி, வெசைபட்டி கிராமத்திலுள்ள நியாய விலைக் கடைக்கு மின்சார இணைப்பு கொடுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கணபதிபாளையம் ஊராட்சியில் செயல்பட்டுவரும்

2010 ஜனவரி 11]

வெசைபட்டி நியாய விலைக் கடைக்கு 13-02-2008 அன்று மின் இணைப்பு பெறப்பட்டு செயல்பட்டு வருகிறது.

20—

நியாய விலைக் கடை

வினா எண் 67279—திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஊராட்சி, சென்னிமலைப் பாளையத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஊராட்சி, சென்னிமலைப்பாளையம் கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க இலவசமாக கட்டடம் கொடுக்க தற்போது யாரும் முன்வராததாலும் சென்னிமலை கிராமத்தைச் சேர்ந்த 380 குடும்ப அட்டைகளைப் பிரித்தால் தாய்க் கடையில் 430 குடும்ப அட்டைகள்தான் இருக்கும் என்பதாலும், தற்போது நடைமுறையிலுள்ள அரசு விதிகளின்படி 780 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் கணபதிபாளையம் தாய்க் கடையிலிருந்து 380 குடும்ப அட்டைகளைப் பிரித்து சென்னிமலைப்பாளையம் கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

21—

நியாய விலைக் கடை

வினா எண் 74713—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2010 ஜனவரி 11

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், தாராபுரம் பகுதியில் புதியதாக நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், தாத்தியம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் தாராபுரம் நியாய விலைக் கடை, *927* குடும்ப அட்டைகள் கொண்டு, அரசு மூலம் கட்டி வழங்கப்பட்ட சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே தாராபுரம் பகுதியில் நியாய விலைக் கடை செயல்பட்டு வருகின்ற நிலையில் மற்றொரு நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

22—

நியாய விலைக் கடை

வினா எண் 76539—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, குண்டடம் ஒன்றியம், சிறுக்கினார் ஊராட்சி எஸ். ஆலாம்பாளையம் PACB-யிலிருந்து பிரித்து நொச்சிப்பாளையத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் வட்டம், காங்கேயம் தொகுதி எஸ். ஆலாம்பாளையம் முதன்மை வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் சிறுக்கினார் அங்காடி *727* குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வந்தது. இதிலிருந்து *235* குடும்ப அட்டைகளைப் பிரித்து செல்லக்குமாரபாளையத்தில் ஏற்கெனவே ஒரு பகுதிநேர அங்காடி பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தற்போது சிறுக்கினார் தாய்

2010 ஜனவரி 11]

அங்காடியில் 492 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. இதிலிருந்து மேலும் 140 குடும்ப அட்டைகளைப் பிரித்து நொச்சிப்பாளையத்தில் 2-வது புதிய பகுதிநேர கடை அமைக்கும் பட்சத்தில் தாய்க் கடையான சிறுக்கினார் அங்காடியில் 352 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். பகுதிநேரக் கடைகள் பிரிக்கப்பட்ட பின்பு, தாய்க் கடையில் 500-க்கும் குறையாமல் குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசு நிபந்தனை பூர்த்தியாகாததால் நொச்சிப்பாளையத்தில் புதிய பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

23—

நியாய விலைக் கடை

வினா எண் 86900—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், டேனிஸ்பேட்டை ஊராட்சி, மோளக்காட்டூர் நியாய விலைக் கடையை கூ. குட்டப்பட்டி ஊராட்சிக்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், டேனிஸ்பேட்டை ஊராட்சி, மோளக்காட்டூர் நியாய விலைக் கடையில் பெரியகாடு, ஆனந்தன் காட்டுவளவு, காஞ்சேரி காட்டுவளவு, ஆகிய பகுதிகளைச் சார்ந்த குடும்ப அட்டைதாரர்கள் போக்குவரத்து வசதியுடன்கூடிய இடத்தில் அத்தியாவசிய பொருட்கள் பெற்று வருகின்றனர். மேலும் மோளக்காட்டூர் நியாய விலைக் கடை டேனிஸ்பேட்டை ஊராட்சியிலிருந்து கூ. குட்டப்பட்டி ஊராட்சிக்கு 3 கி.மீ. தூரம் உள்ளதாலும், போக்குவரத்து வசதியுடன்கூடிய இடத்தில் கட்டடம் ஏதும் கிடைக்காததால் மோளக்காட்டூர் நியாய விலைக் கடையை கூ. குட்டப்பட்டி ஊராட்சிக்கு மாற்ற சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2010 ஜனவரி 11

24—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 90810—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர், பேரூரில் மேலும் இரண்டு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் பேரூராட்சியில் (பேரூர்) சேலம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை நடத்தும் ஓமலூர் பொன்னி கிளை 1,2,3 மற்றும் ஓமலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் நடத்தும் ஓமலூர் 1, 2 என்ற நியாய விலைக் கடைகள், ஆக மொத்தம் 5 நியாய விலைக் கடைகள் செயல்படுகின்றன. இந்த நியாய விலைக் கடைகளில் இணைக்கப்படும் குடும்ப அட்டைதாரர்கள் தங்களுக்குரிய நியாய விலைக் கடைகளில் அத்தியாவசிய பொருட்கள் பெற செல்லவேண்டிய தூரம் ஒரு கிலோ மீட்டருக்குள்ளேயே உள்ளது. இவர்கள் குடிமைப் பொருட்கள் பெறுவதில் எவ்வித சிரமமும் இல்லை. இதனால் ஓமலூர் பேரூராட்சியில் கூடுதலாகப் பகுதிநேர நியாய விலைக் கடைகள் திறப்பதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை.

25—

கொள்முதல் நிலையம்

வினா எண் 97116—திருமதி ரா. லீமா றோஸ்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவட்டாறு தொகுதியில் குளிர்சாதன வசதியுடன்கூடிய வாழைப்பழக் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவட்டாறு தொகுதியில் தற்போது சுமார் 1058 ஹெக்டேர் நிலப் பரப்பில் வாழை, பயிர் செய்யப்படுகிறது. அதில் 21,160 டன்கள் வாழைக் குலை உற்பத்தி செய்யப்படுகிறது. வாழைக் குலைகள் அறுவடை செய்யும்போதே வியாபாரிகள் அவற்றைக் கொள்முதல் செய்து இம்மண்டலம் மற்றும் அண்டை மாநிலமான கேரளாவுக்குக் கொண்டுசென்று உடனுக்குடன் விற்பனை செய்கின்றனர். இத்தொகுதியில் தேவைக்கு அதிகமாக விளைந்து அவற்றை விற்பனை செய்ய முடியாமல் சேகரித்து வைத்து அடுத்த நாட்களில் விற்பனை செய்யும் அளவுக்கு வாழைக் குலை உற்பத்தி செய்யப்படவில்லை. மேலும், வாழைப் பழம் அல்லது வாழைக் குலைகள் குளிர்சாதன அறைகளில் இருப்பு வைத்து, பின்னர் விற்பனை செய்யும்போது, வாழைப் பழத்தின் நிறம் மாறி கருப்பு நிறம் ஏற்பட்டு விரைவில் அழுகிவிடும்.

2. கிட்டங்கியில் இருந்து எடுத்துச் செல்லும் வாகனமும் குளிரூட்டப்பட்டதாகவே இருக்க வேண்டும். பின்னர் விற்பனை செய்யும்போது விலையும் அதிகரிக்கும் நிலை ஏற்படும் (Due to storage Cost) இட வசதி மற்றும் நிதி வசதி உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் இல்லாத காரணத்தினாலும் உற்பத்தியாகும் வாழைக் குலைகளை உடனுக்குடன் விற்பனை செய்வதில் எவ்வித இடர்பாடுகளும் இல்லாத காரணத்தினாலும் குளிர்சாதன வசதியுடன்கூடிய வாழைப் பழம் கொள்முதல் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

26—

நீதிமன்றம்

வினா எண் 104638—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூரில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சார்பு நீதிமன்றம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூரில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சார்பு நீதிமன்றம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஆகியவை அமைப்பதற்கான செயற்குறிப்பு, தலைமைப் பதிவாளர், சென்னை உயர் நீதிமன்றம் அவர்களிடம் இருந்து பெறப்படும் முன்னுரிமை பட்டியலில் இடம் பெறும்பட்சத்தில், நிதிநிலைமைக்கேற்ப, அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

27—

நவீன விளையாட்டரங்கம்

வினா எண் 51236—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் அரசு முத்துரங்கம் கலைக் கல்லூரியில் நவீன விளையாட்டரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

வேலூர் அரசு முத்துரங்கம் கலைக் கல்லூரியில் நவீன விளையாட்டரங்கம் அமைப்பது தொடர்பாக கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

28—

பெண்கள் கல்லூரி

வினா எண் 62551—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை தொகுதி, காளையார் கோவில் ஒன்றியம், மறவமங்கலம் கிராமத்தில் பெண்கள் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2010 ஜனவரி 11]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை தொகுதி, காளையார் கோவில் ஒன்றியம், மறவமங்கலம் கிராமத்தில் பெண்கள் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

29—

தனிக் கட்டடம்

வினா எண் 70224—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை அரசு கலைக் கல்லூரியில் எம்.சி.ஏ., எம்.பி.ஏ. போன்ற பட்ட மேற்படிப்புகள் ஏற்படுத்தி புதிய தனிக் கட்டடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

உடுமலைப்பேட்டை அரசுக் கலைக் கல்லூரியில் எம்.சி.ஏ., எம்.பி.ஏ. போன்ற பட்ட மேற்படிப்புகளைத் துவக்கி இவற்றிற்கென தனிக் கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

30—

வகுப்பறைகள்

வினா எண் 72796—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், குடியாத்தம் அரசினர் திருமகள் ஆண்கள் கல்லூரியில் கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

குடியாத்தம், திருமகள் கலைக் கல்லூரியில் 2007-2008ஆம் ஆண்டில் 5 கூடுதல் வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டு கல்லூரி நிருவாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், கல்லூரியில் வகுப்புகள் அடிப்படையில் பரிசீலித்து 2008-2009 ஆம் நிதியாண்டில் மேலும் 5 கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசால் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

31—

ஆய்வுக் கூடங்கள்

வினா எண் 72801—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர், அரசுக் கலைக் கல்லூரிக்கு எம்.எஸ்.சி. (இயற்பியல்) மற்றும் எம்.எஸ்.சி. (விலங்கியல்) பாடப் பிரிவிற்குத் தேவையான ஆய்வுக் கூடங்கள் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

கரூர், அரசுக் கலைக் கல்லூரிக்கு ஆய்வகங்கள் கட்டுவது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

32—

விட்டு வசதி

வினா எண் 75092—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி ஈ.வெ.ரா. அரசுக் கலைக் கல்லூரிக்கு விடுதி வசதி ஏற்படுத்த அரசு முன்வருமா?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

திருச்சிராப்பள்ளி ஈ.வெ.ரா. அரசுக் கல்லூரியுடன் இணைந்த விடுதியில் 397 மாணவர்கள் தங்கியுள்ளனர். மேலும், கல்லூரி வளாகத்தின் வெளியே கட்டப்பட்டுள்ள ஆதி திராவிடர்/பிற்படுத்தப்பட்டோர் விடுதியில் மேற்காணும் கல்லூரியைச் சார்ந்த மாணவர்கள் 53 பேரும், மாணவிகள் 28 பேரும் தங்கியுள்ளனர்.

33—

பாடப் பிரிவு

வினா எண் 75111—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், குடியேற்றம் அரசினர் திருமகள் கலைக் கல்லூரியில் எம்.சி.ஏ. பாடப் பிரிவு துவங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், குடியேற்றம் அரசினர் திருமகள் கலைக் கல்லூரியில் ஏற்கெனவே எம்.சி.ஏ. பாடப் பிரிவு தொடங்கப்பட்டு 2004-2005 கல்வியாண்டு முதல் நடைபெற்று வருகிறது.

34—

கல்வியியல் கல்லூரி

வினா எண் 75662—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் கல்வியியல் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

கல்வியியல் கல்லூரிகளைப் பொறுத்தவரை தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் அனுமதி பெற்ற பிறகே கல்வியியல் கல்லூரிகள் துவக்கிட இயலும். கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் கல்வியியல் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

35—

கட்டடங்கள்

வினா எண் 75793—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் கல்லூரிக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேலையூர் பூம்புகார் கல்லூரி இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின்கீழ் செயல்படும் ஒரு அரசு உதவிபெறும் கல்லூரி ஆகும். இக்கல்லூரிக்குத் தேவையான கூடுதல் கட்டடங்கள் கட்டுவது குறித்து அக்கல்லூரியை நிருவகிக்கும் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையினால்தான் முடிவு செய்ய இயலும்.

36—

கூடுதல் கட்டடம்

வினா எண் 75794—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறையில் உள்ள தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கல்லூரிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறையில், தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக் கல்லூரிக்கு, தேவையின் அடிப்படையில் பரிசீலித்து 2007-2008 ஆம் நிதியாண்டில் 10 கூடுதல் வகுப்பறைகளும், 1 கூடுதல் ஆய்வுக் கூடமும் கட்டி முடிக்கப்பட்டு கல்லூரிவசம் ஒப்படைக்கப்பட்டது. மேலும், 2008-2009 ஆம் நிதியாண்டில் 1 கூடுதல் ஆய்வகம் கட்டவும் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும்பொருட்டு 2 கூடுதல் கழிப்பறைகள் கட்டவும் அரசால் ஆணைகள் வழங்கப்பட்டு உரிய கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

37—

கட்டடம்

வினா எண் 80127—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரி அரசுக் கலைக் கல்லூரியில் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2007-2008 ஆம் ஆண்டில், அரசுக் கல்லூரிகளில் வகுப்பறைகளின் தேவைகளைக் கணக்கில் கொண்டு அரசாணை (நிலை) எண் 209, உயர் கல்வி, நாள் 2-7-2007 வாயிலாக ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் 52 அரசுக் கல்லூரிகளில் 500 கூடுதல் வகுப்பறைகள் கட்டிட, அரசு ஆணைகள் வழங்கியுள்ளது. தருமபுரி அரசுக் கலைக் கல்லூரியைப் பொறுத்தமட்டில் அக்கல்லூரியின்

தேவையைக் கருத்தில்கொண்டு 2007-2008 ஆம் ஆண்டில் 13 கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 13 வகுப்பறைகளுக்கான கட்டுமானப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன.

38—

பட்டயப் பயிற்சி

வினா எண் 82627—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை, அரசு மன்னர் கலைக் கல்லூரி, அரசு மகளிர் கலைக் கல்லூரிகளில் தமிழ் ஆசிரியர் பயிற்சிப் பட்டய வகுப்புகள் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ் ஆசிரியர் பயிற்சிப் பட்டய வகுப்புகள் கல்வியியல் கல்லூரிகளில் மட்டுமே நடத்த இயலும். எனவே சிவகங்கை, அரசு மன்னர் கலைக் கல்லூரி, அரசு மகளிர் கலைக் கல்லூரிகளில் தமிழ் ஆசிரியர் பட்டய வகுப்புகள் தொடங்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

39—

கூடுதல் கட்டடம்

வினா எண் 82634—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், சிவகங்கை அரசு மகளிர் கலைக் கல்லூரிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை அரசு மகளிர் கலைக் கல்லூரிக்கு, தேவையின் அடிப்படையில் பரிசீலித்து 2008-2009 ஆம் நிதியாண்டில் 2 கூடுதல் வகுப்பறைகள் கட்டவும் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு 2 கூடுதல் கழிப்பறைகள் கட்டவும் அரசால் ஆணைகள் வழங்கப்பட்டு, உரிய கட்டுமானப் பணிகள் நிறைவடையும்தறுவாயில் உள்ளன.

40—

சுற்றுச் சுவர்

வினா எண் 84195—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் அரசு மகளிர் கலைக் கல்லூரிக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் அரசினர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குச் சுற்றுச் சுவர் கட்டுவதற்கு 2008-2009 ஆம் நிதியாண்டில் அரசால் உரிய நிருவாக ஒப்பளிப்பு ஆணைகள் வழங்கப்பட்டன. தற்போது, இதற்கான கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

41—

அரசுப் பொறியியல் கல்லூரி

வினா எண் 103714—திரு. பெ. காமராஜ்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கரூர் மாவட்டத்தில் ஆட்சியர் அலுவலக வளாகப் பகுதிகளில் அரசுப் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

[2010 ஜனவரி 11

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) கரூர் மாவட்டத்தில் ஆட்சியர் அலுவலக வளாகப் பகுதிகளில் அரசுப் பொறியியல் கல்லூரி துவக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

42—

பொறியியல் கல்லூரி

வினா எண் 104393—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தாந்தோணி ஒன்றியம், மணவாடி அல்லது வெள்ளியணை பகுதியில் பொறியியல் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தாந்தோணி ஒன்றியம், மணவாடி அல்லது வெள்ளியணை பகுதியில் பொறியியல் கல்லூரி அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

43—

கல்லூரி

வினா எண் 105087—திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

(அ) சங்கராபுரம் தொகுதியில் அரசினர் பொறியியல் கல்லூரி, கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) சங்கராபுரம் தொகுதியில் அரசினர் பொறியியல் கல்லூரி, கலைக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

44—

பேருந்தில் குடிநீர் வசதி

வினா எண் 48401—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு விரைவுப் பேருந்துகள் மற்றும் நீண்ட தூரம் செல்லும் பேருந்தில் குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீண்ட தூரம் செல்லும் அனைத்து அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் சுத்தமான குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், நீண்ட தூர வழித் தடப் பேருந்துகளிலும் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் வாட்டர் டிரம் பொருத்திட உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

45—

பணிமனைக்குக் குடிநீர் வசதி

வினா எண் 66018—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு நகரிலுள்ள போக்குவரத்துப் பணிமனைக்குக் குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக ஆற்காடு பணிமனைக்குத் தேவைப்படும் குடிநீர், அக்கழக லாரிமூலம் கொண்டுவரப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. மேலும், எதிர்மறை சவ்வூடு முறை தண்ணீர் சுத்திகரிப்பு கருவி அமைத்து அதன்மூலம் குடிநீர் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அத்துடன், ஆற்காடு நகராட்சியின் குடிநீர் இணைப்பு பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

46—

பேருந்து வசதி

வினா எண் 96987—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு-பொதட்டூர்பேட்டை-பேட்டைகண்டிகை-ஏடுகண்டிகா-நகரி-புத்தூர் வழித் தடத்தைத் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பள்ளிப்பட்டு-பொதட்டூர்பேட்டை-பேட்டைகண்டிகை-ஏடுகண்டிகா-நகரி-புத்தூர் வழித் தடத்தின் நீளம் 44.0 கி.மீ. ஆகும். இதில் 19.0 கி.மீ. தூரம் தமிழ்நாடு எல்லையிலும், மீதம் உள்ள 25.0 கி.மீ. தூரம் ஆந்திர மாநில எல்லையிலும் உள்ளது. இதில்

2010 ஜனவரி 11]

பேட்டை கண்டிகை முதல் ஏடுகண்டிகா வரையிலான 5.0 கி.மீ. தூரத்திற்குத் தற்பொழுது பேருந்து வசதி இல்லை. மற்ற பகுதிகள் நன்கு போக்குவரத்து வசதி பெற்றுள்ளன. சாலை, பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக உள்ளது. புதிய தடங்களை இயக்குவதற்கு ஆந்திர மாநிலத்துடன் இம்மாநிலம் புதிய ஒப்பந்தம் மேற்கொள்ளும். அவ்வொப்பந்தத்தில் இவ்வழித் தடத்தைச் சேர்த்து பேருந்து இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

47—

பேருந்து

வினா எண் 97870—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பகுதி, மடத்தச்சம்பாடு, நாடார் அச்சம்பாடு, ஜோதிநகர் வழியாகப் பேருந்து இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள வழித் தடங்களில் தடம் எண் 572 தடப் பேருந்துகள் இயக்கப்பட்டபோது போதுமான பயணிகளின் பயன்பாடு இல்லாத காரணத்தால் பல வருடங்களுக்கு முன்பாக தடத்திலிருந்து மாற்றப்பட்டது. தற்போது அத்தடங்களில் தனியார் மினி பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

48—

நகரப் பேருந்து

வினா எண் 100434—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து இராஜகம்பீரம், முத்தனேந்தல், பெரும்பச்சேரி, மேட்டுமடை, கொம்புக்காரனேந்தல், நாராயணதேவன்பட்டி வழியாக மிளகனூர் வரை ஒரு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது அரசுப் பேருந்துமூலம் மானாமதுரையிலிருந்து இராஜகம்பீரம், முத்தனேந்தல், பெரும்பச்சேரி, மேட்டுமடை, கொம்புக்காரனேந்தல் வழியாக கட்டிக்குளம்வரை பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. கொம்புக்காரனேந்தல் காலனியிலிருந்து நாராயணத்தேவன்பட்டி வழியாக மிளகனூர் விலக்குவரைக்கும் மினி பஸ் நாள் ஒன்றுக்கு 8 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், பயணம் செய்யும் பயணிகளின் அடர்வு விகிதம் குறைவாக இருப்பதால் இதுவே போதுமானதாகும்.

49—

நகரப் பேருந்து

வினா எண் 100435—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையிலிருந்து கீழமேல்குடி, கால்பிரவு, மேலமேல்குடி, தீத்தான்பேட்டை காலனி, தீத்தான்பேட்டை, கொம்புக்காரனேந்தல் காலனி, சீனிமடை, நாராயணதேவன்பட்டி வழியாக அரசகுளம்வரை ஒரு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து கீழமேல்குடி, கால்பிரவு, மேலமேல்குடி, தீத்தான்பேட்டை காலனி, தீத்தான்பேட்டை, கொம்புக்காரனேந்தல் காலனி, சீனிமடை, நாராயணதேவன்பட்டி குவளைவேலி வழியாக அரசகுளம்வரை உள்ள வழித் தடத்தில்

2010 ஜனவரி 11]

தனியார் மினி பஸ் மூலம் குவளைவேலிவரை நாளொன்றிற்கு 8 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், மானாமதுரையிலிருந்து முத்தனேந்தல், மேட்டுமடை, கொம்புக்காரனேந்தல், மிளகனூர், குவளைவேலி, புதுக்குளம், அரசகுளம் வழியாக கட்டனூர்வரை அரசுப் பேருந்துகளின்மூலம் நாளொன்றிற்கு 10 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. கோரிக்கையிலுள்ள வழித் தடம் புதிய வழித் தடமாக இருப்பதால், புதிய வழித் தடங்கள் இயக்கும்பட்சத்தில் தேவையின் அடிப்படையில் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

50—

தரம் உயர்த்துதல்

வினா எண் 57022—திரு. என். மாலைராஜா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, இராஜவல்லிபுரம் துணை சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 92,982 (2001) ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. இங்குள்ள இராஜவல்லிபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, இராஜவல்லிபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தும் சாத்தியக்கூறுகள் இல்லை.

51—

தரம் உயர்த்துதல்

வினா எண் 64682—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 ஜனவரி 11

(அ) வால்பாறை தொகுதி, ஆழியாறு அரசு ஆரம்ப சுகாதார மருத்துவமனையினைத் தரம் உயர்த்தி சர்க்கரை நோய்ப் பிரிவினைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் 4,700 சதுர அடி பரப்பளவில் ஆழியாறு நகர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இங்கு சராசரியாக மாதமொன்றுக்கு 6 பிரசவங்கள் நிகழ்கின்றன. 20 உள்நோயாளிகள் பயனடைகின்றனர். தற்போதுள்ள வசதிகளே போதுமானவையாக உள்ளதால், கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்படும் ஆழியாறு நகர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், அரசு மருத்துவமனைகளில் உள்ள சர்க்கரை நோய்ப் பிரிவு, ஆரம்ப சுகாதார நிலையத்தில் துவக்கப்படுவதில்லை. எனவே, ஆழியாறு நகர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சர்க்கரை நோய்ப் பிரிவினைத் துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

52—

சுகாதார மையம்

வினா எண் 74684—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மேலப்பிடாவூரில் கிராம சுகாதார மையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, மேலப்பிடாவூரில் ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையம்

2010 ஜனவரி 11]

இயங்கி வருவதால், அங்கு மேலும் ஒரு துணை சுகாதார மையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

53—

சிறுதொழில் கண்காட்சி மையம்

வினா எண் 36365—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியார் நகரில் சிறுதொழில் கண்காட்சி மையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டத் தலைநகரில் ஆண்டுதோறும் ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் 60 நாட்களுக்கு அரசால் பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு வணிகம் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுடன்கூடிய இப்பொருட்காட்சியில் அரசின் அனைத்துத் துறைகளும் தனித் தனியாக அரங்குகள் அமைத்து தத்தம் துறை திட்டங்களையும் சாதனைகளையும் விளக்கி, பொதுமக்கள் அரசின் திட்டங்களில் முழுமையாகப் பங்கு பெற மாவட்ட நிருவாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதில் சுமார் 4 இலட்சம் பொதுமக்களும், தொழில் முனைவோர்களும், பல்துறை அரங்கு கண்காட்சிகளைக் கண்டு களிக்கின்றனர். அது மட்டுமின்றி, ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு மாவட்டத்திலும் பல்துறை பணி விளக்க முகாம்கள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன.

2. அரசுப் பொருட்காட்சியில் தொழில் துறையும் தனியாக அரங்கு அமைத்து சிறு தொழில் நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களைப் பொதுமக்களின் பார்வைக்கும் சிந்தனைக்கும் ஏற்ற வகையில் இடம் பெறச் செய்து, தொழில் முனைவோர்க்கு திட்ட விளக்கங்களுடன்கூடிய கையேடுகளையும், தொழில்

தொடங்குவதற்கான அனைத்து வழிகாட்டுதல் சேவைகளையும் வழங்கி தொழில் முனைவோர்களை ஊக்குவித்து வருகின்றது.

3. மேலும், இம்மாவட்டத்தில் கொடீசியா, திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கம் பொள்ளாச்சியில் கயிறு வாரியம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வளர்ச்சி நிறுவனம், சீமா, சைமா, வெட்கிரைண்டர் சங்கம், கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் வாயிலாக எண்ணற்ற தொழில் கண்காட்சி தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது.

4. எனவே, வால்பாறை தொகுதி, ஆழியாறு நகரில் மட்டும் தனியாகத் சிறுதொழில் கண்காட்சி மையம் ஏற்படுத்துவதற்கான கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

54—

கால்நடை மருந்தகம்

வினா எண் 38795—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம், குமாரக்குறிச்சி அரசுக் கால்நடை மருந்தகத்தை நவீனப்படுத்த, அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) நபார்டு RIDF-X திட்டத்தின்கீழ் சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம், குமாரகுறிச்சி கால்நடை மருந்தகத்தினை நவீனப்படுத்த அனைத்து நவீன மருத்துவ உபகரணங்களும் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழாது.

2010 ஜனவரி 11]

55—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 49969—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் பழுதடைந்துள்ள கால்நடை மருத்துவமனையைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) கால்நடை மருந்தகக் கட்டடம் தற்போது அரசின் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அந்தக் கட்டடம் நல்ல நிலையில் உள்ளது. எனவே, புதுப்பிக்க அவசியம் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

56—

மருத்துவமனைக் கட்டடம்

வினா எண் 56126—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, கால்வேஹள்ளி ஊராட்சி, கத்தேரி மேல்கொட்டாய் கிராமத்திற்கு கால்நடை மருத்துவமனைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, கால்வேஹள்ளி ஊராட்சி, கத்தேரி மேல்கொட்டாய் கிராமத்தில் கால்நடை நிலையங்கள் ஏதும் செயல்படாததால் கட்டடம் கட்ட வாய்ப்பு ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழாது.

57—

பயிற்சி

வினா எண் 60210—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி பகுதியில் தென்னை நாரிலிருந்து பொருட்கள் தயாரிக்க பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

எடப்பாடிப் பகுதியில் தென்னை நாரிலிருந்து பொருட்கள் தயாரிக்கப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், இத்தொழில் தொடர்பாக பயிற்சி பெற ஆர்வமுள்ள தொழில் முனைவோர் முன்வந்தால் கயிறு வாரியத்தின்மூலம் அப்பயிற்சி பெற தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

58—

சுற்றுச் சுவர்

வினா எண் 62251—திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

பழனி தொகுதி, தொப்பம்பட்டி ஒன்றியம், மானூர் ஊராட்சியிலுள்ள கால்நடை மருத்துவ மையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

பழனி தொகுதி, மானூர் கிளை நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசிடம் தற்போது திட்டம் ஏதுமில்லை.

59—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 62618—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் வட்டம், நரிப்பள்ளியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் ஊராட்சி ஒன்றியத்தில் நான்கு கால்நடை மருந்தகங்களும், நான்கு கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. 2008-2009 ஆம் ஆண்டு அரசின் கொள்கைக் குறிப்பில், புதியதாகக் கால்நடை நிலையங்கள் தோற்றுவிக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதால், நரிப்பள்ளி கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க வாய்ப்பு இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

60—

சுற்றுச் சுவர்

வினா எண் 65031—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 ஜனவரி 11

(அ) போளூர் தொகுதி, கந்தவாசல் ஊராட்சி, கந்தவாசல் கால்நடை மருத்துவமனை, மேல்கூரை மற்றும் சுவர் அமைக்கவும், போளூர் மற்றும் ஆத்திமூர் கிராமங்களிலுள்ள கால்நடை மருத்துவமனைக்குச் சுற்றுச் சுவர் அமைக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) கந்தவாசல் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் வாடகை இல்லாக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டவும், ஆத்திமூர் கால்நடை மருந்தகத்திற்குச் சுற்றுச் சுவர் அமைத்திடவும் மற்றும் போளூர் கால்நடை மருத்துவமனைக்கு மூன்று பக்கங்களில் சுற்றுச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது; அதனின் மீதமுள்ள ஒரு பக்கத்திற்கு மட்டும் சுற்றுச் சுவர் அமைத்திடவும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியில் இருந்து நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

(ஆ) போளூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிட்டபின் சுற்றுச் சுவர் அமைக்கப்படும்.

61—

குறுந்தொழிற்பேட்டை

வினா எண் 70349—திரு. பா. செந்தமிழ்ச் செல்வன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியில் தேங்காய் நார் உற்பத்திக்குக் குறுந்தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டத்தில் ஏற்கெனவே கீழ்க்கண்ட இடங்களில் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன:

2010 ஜனவரி 11]

வ. எண்	தொழிற் பேட்டையின் பெயர்	தொடங்கப் பட்ட வருடம்	மொத்த மனைகள்		காலியாக உள்ளவை	
			மனைகள்	தொழிற் கூடங்கள்	மனைகள்	தொழிற் கூடங்கள்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1.	ஆசனூர்	*2006*	*155*	-	*96*	-
2.	வெண்மணி ஆத்தூர்	*2007*	*32*	-	*23*	-

2. எனவே, மேல்மலையனூர் தொகுதியில் தேங்காய் நார் உற்பத்திக்கென்று குறுந்தொழிற்பேட்டை அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

3. எனினும், போதுமான நிதி ஆதாரங்களோடும் தொழிற்திட்டங்களுடனும் தொழில் தொடங்க ஆர்வமுள்ள குறைந்தபட்சம் 20-க்கும் குறையாமல் தொழில் முனைவோர், திரும்பப் பெறாத ஒப்புவிப்பு தொகையுடன் முன்வந்தால், மாவட்ட ஆட்சியர் (ம) பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம் ஆகியோருடன் கலந்தாலோசித்துப் புதிதாகத் தொழிற்பேட்டை அமைப்பதுகுறித்துப் பரிசீலிக்கப்படும்.

62—

மருத்துவச் சோதனை மையம்

வினா எண் 75708—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், பார்த்திபனூர் கால்நடை மருந்தகத்தில் மருத்துவச் சோதனை மையம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் 20 இடங்களில் கால்நடை நோய் புலனாய்வு நிலையங்களும், 2 இடங்களில் கோழி நோய் ஆராய்ச்சிக்

[2010 ஜனவரி 11

கூடங்களும் இயங்கி வருகின்றன. இம்மாவட்டத்தில் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்க் கிளர்ச்சிகளை உடனுக்குடன் கண்டறிய சிவகங்கை கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு அலுவலர்களால் ஆய்வு செய்யப்படுகிறது. இந்நோயினை உறுதி செய்துக்கொள்ள சென்னையில் இயங்கிவரும் மத்திய தொடர்பு ஆய்வுக் கூடத்திற்கு கால்நடைகளிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளை ஆய்வு செய்து, அலுவலர்களுக்கு அறிவுரையும் வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், பார்த்திபனூர் கால்நடை மருந்தகத்தில் மருத்துவ சோதனை மையம் துவக்க அவசியம் எழவில்லை.

(ஆ) கேள்வி எழாது.

63—

கட்டடங்கள்

வினா எண் 75739—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதியில், பொன்விளைந்தகளத்தூர், நெரும்பூர் ஆகிய கால்நடை மருந்தகங்களுக்குப் புதிய சொந்த கட்டடங்களைக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) செங்கல்பட்டு தொகுதியினைச் சார்ந்த பொன்விளைந்தகளத்தூர் கிராமத்தில் கால்நடை மருந்தகமும் மற்றும் நெரும்பூர் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருகின்றன. மேற்படி நிலையங்களுக்கு நபார்டு RIDF திட்டத்தின்கீழ் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) அரசாணை வெளியிட்டபின், நபார்டு RIDF திட்டத்தின்கீழ் கட்டடம் கட்டப்படும்.

2010 ஜனவரி 11]

64—

கால்நடை மருந்தகம்

வினா எண் 75745—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, பண்ணந்தூர் ஊராட்சி, பண்ணந்தூர், நெடுங்கல் ஊராட்சி, நெடுங்கல் கிராமத்தில் கிளை கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தில், ஒரு கால்நடை மருத்துவமனையும், மூன்று கால்நடை மருந்தகங்களும், ஒரு கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருகின்றன. பண்ணந்தூர் கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளன. மேலும், அரசு விதிமுறைகளின்படி 2008-09 ஆம் ஆண்டில் அரசின் கொள்கை விளக்கக் குறிப்பில் புதியதாகக் கால்நடை நிலையங்கள் தோற்றுவிக்கும் செயற்குறிப்பு இடம் பெறாததால், பண்ணந்தூர் மற்றும் நெடுங்கல் கிராமத்தில் புதியதாகக் கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

65—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 75747—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, பிக்கனஅள்ளி ஊராட்சி, வெள்ளிச்சந்தை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில், நான்கு கால்நடை மருந்தகங்களும், மூன்று கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. வெள்ளிச்சந்தை கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. மேற்படி, கால்நடை கிளை நிலையம் மற்றும் அருகில் செயல்படும் கால்நடை கிளை நிலையங்கள்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானவையாகக் கருதப்படுவதால், வெள்ளிச்சந்தை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

66—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 75751—திரு. ஜி.கே மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, கோடு அள்ளி ஊராட்சி, கருங்கலூர் ப. முத்தம்பட்டி ஊராட்சி, ப. முத்தம்பட்டி, கம்பம்பட்டி ஊராட்சி, மலையூர்காடு ஆகிய இடங்களில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி மாவட்டம், தருமபுரி ஊராட்சி ஒன்றியத்தில், ஒரு பன்முக மருத்துவமனையும், மூன்று கால்நடை மருந்தகங்களும், ஐந்து கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. அருகில் செயல்படும் கால்நடை நிலையங்கள்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானவையாகக் கருதப்படுவதால்,

2010 ஜனவரி 11]

விதிமுறைகளின்படி கம்பம்பட்டி ஊராட்சி, மலையூர்காடு கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

67—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 75832—திரு. ஜி.கே மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் 24 மணி நேர சேவை கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியத்தில், ஒரு கால்நடை மருத்துவமனையும், மூன்று கால்நடை மருந்தகங்களும், எட்டு கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், பண்ருட்டியில் செயல்படும் கால்நடை மருத்துவமனைமூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானவையாகக் கருதப்படுகிறது. ஆகவே, பண்ருட்டி கால்நடை மருத்துவமனையைப் பன்முக மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

68—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 83165—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் வட்டம், நெருப்பெரிச்சல் ஊராட்சி வாவிப்பாளையத்திலுள்ள கால்நடை மருத்துவமனையைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மண்டலம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில், மூன்று கால்நடை மருந்தகங்களும், மூன்று கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. வாவிப்பாளையம் மற்றும் அருகிலுள்ள கிராமங்களில் கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. இதனால் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்கள்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானவையாகக் கருதப்படுகிறது. மேலும், வாரத்தில் ஒரு நாள் வாவிப்பாளையம் கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்கும் பூலுவப்பட்டி கால்நடை கிளை நிலையக் கால்நடை ஆய்வாளரின் மூலம் சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகவே, திருப்பூர் வட்டம், நெருப்பெரிச்சல் ஊராட்சி, வாவிப்பாளையத்தில் தற்போது கால்நடை மருத்துவமனை துவக்க வாய்ப்பில்லை.

69—

நவீனப்படுத்துதல்

வினா எண் 83786—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் பாலிதீன் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு நவீன இயந்திரம் வழங்கி தொழிலை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

வனத் துறைக்குத் தேவையான பாலிதீன் பைகளை உற்பத்தி செய்து அதன்மூலம் அங்கத்தினர்களுக்கு வேலைவாய்ப்பு

2010 ஜனவரி 11]

அளிக்கும் நோக்கத்துடன் ஓமலூர் பாலிதீன் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கம் 23-2-1977 அன்று துவக்கப்பட்டது. சங்கத்தின் உற்பத்தியில் 90% வனத் துறைக்கு விற்பனை செய்யப்படுகிறது. மேற்படி சங்கத்தில் மணி ஒன்றுக்கு மொத்தம் 14 கிலோ உற்பத்தித் திறன் கொண்ட இரண்டு எக்ஸ்ட்டூடர் இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இயந்திரங்களின்மூலம் பாலிதீன் டியூபாக உற்பத்தி செய்து அவற்றை வனத் துறையின் தேவைகளுக்கேற்ற அளவில் கையினால் வெட்டி, பின் ஒட்டி அவற்றை ஆயிரம் எண்ணிக்கை கொண்ட கட்டுகளாகக் கட்டி வனத் துறைக்கு அனுப்பப்படுகிறது. சங்கம் துவக்கப்பட்ட நாளில் இருந்து இன்றைய தேதி வரை வனத் துறையிடம் இருந்து பெறப்படும் கொள்முதல் ஆணைகளுக்கு தற்சமயம் சங்கத்தில் உள்ள இயந்திரங்களைக் கொண்டே உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும், பிற அரசு நிறுவனங்களிடமும் கொள்முதல் ஆணைகள் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வாறு அதிக அளவில் கொள்முதல் ஆணைகள் கிடைக்கும்பட்சத்தில் தற்சமயம் உள்ள இயந்திரங்களின் திறனுக்குமேல் உற்பத்தியை அதிகரிக்கத் தேவைப்படும் நவீன இயந்திரம் பொருத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

70—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 88661—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கோணசமுத்திரம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியத்தில், மூன்று கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு

வருகின்றன. கோணசமுத்திரம் மற்றும் அருகிலுள்ள கிராமங்களில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்கள்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானவையாகக் கருதப்படுவதாலும், கோணசமுத்திரம் ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

71—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 88662—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, குண்டுரசம்பாளையத்தில் கால்நடை மருத்துவமனை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஒன்றியத்தில் மூன்று கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. குண்டுரசம்பாளையம் மற்றும் அருகிலுள்ள கிராமங்களில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும், அருகில் செயல்படும் கால்நடை நிலையங்கள்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானவையாகக் கருதப்படுவதாலும், குண்டுரசம்பாளையத்தில், விதிமுறைகளின்படி, புதிய கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

72—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 88696—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

ஆலங்குடி தொகுதி, மாங்கோட்டை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மாங்கோட்டையில் உள்ள கால்நடை கிளை நிலையம், அரசாணை நிலை எண் 20, கா.ப.பா.(ம) மீன் (கா.ப.3) வனத் துறை, நாள்: 26-2-2009-ன்படி தரம் உயர்த்தப்பட்ட கால்நடை கிளை நிலையமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதனால், இக்கிளை நிலையத்தில், மருத்துவப் பட்டம் பெற்ற இளநிலை கால்நடை உதவி மருத்துவரைக் கொண்டு சிகிச்சை அளிக்கப்பட உள்ளது. இதனால், இக்கிராமம் மற்றும் இதனைச் சுற்றியுள்ள கால்நடைகளுக்குத் தரமான சிகிச்சையும், பாதுகாப்புப் பணிகளும் நல்லமுறையில் நடைபெற உள்ளன.

73—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 83697—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, பொன்னன் விடுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தில், நான்கு கால்நடை மருந்தகங்களும், மூன்று கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. பொன்னன் விடுதி மற்றும் அருகிலுள்ள கிராமங்களில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும், அருகில் செயல்படும் கால்நடை நிலையங்கள்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானவையாகக் கருதப்படுவதாலும், விதிமுறைகளின்படி,

[2010 ஜனவரி 11

பொன்னன் விடுதியில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

74—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 88698—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, வேப்பங்குடியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு கால்நடை மருத்துவமனையும், நான்கு கால்நடை மருந்தகங்களும், ஐந்து கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும், திருவரங்குளம் கால்நடை கிளை நிலையம் அருகில் செயல்படுவதாலும் விதிமுறைகளின்படி வேப்பங்குடி கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க வாய்ப்பு இல்லை.

75—

தொழிற்பேட்டை

வினா எண் 93385—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரில் தொழிற்பேட்டை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி நகரில் புதிதாகத் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

போதுமான நிதி ஆதாரங்களுடனும் தொழிற்திட்டங்களுடனும் தொழில் தொடங்க ஆர்வமுள்ள 20-க்கும் குறையாத தொழில் முனைவோர் திருப்பித் தரப்படாத ஒப்பளிப்புத் தொகையுடன் (commitment charges) முன்வந்தால் புதிதாகத் தொழிற்பேட்டை அமைப்பதற்கான நிலம், தொழில்முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர், பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம் மற்றும் தமிழ்நாடு முதலீட்டுக் கழகம் ஆகியோரிடம் கலந்தாலோசித்து கருத்தாய்வு செய்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

76—

புதிய கட்டடம்

வினா எண் 98414—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை பேரூராட்சியில் உள்ள கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

நபார்டு திட்டத்தின்கீழ் ரூ.19.70 இலட்சம் மதிப்பீட்டில், கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, 4-10-2007 முதல் ஊத்துக்கோட்டை கால்நடை மருந்தகம் அக்கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது.

77—

பகுதிநேரக் கால்நடை மருத்துவமனை

வினா எண் 101230—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதி, எடையப்பட்டி ஊராட்சி, கலர்பட்டி ஊராட்சியில் பகுதிநேர கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தாரமங்கலம் தொகுதி எடையப்பட்டி ஊராட்சி, கலர்பட்டி ஊராட்சியில் பகுதிநேரக் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

78—

பட்டா

வினா எண் 58041—திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், வெள்ளனூர் ஊராட்சி, ரெங்கம்மாள் சத்திரம், காமராஜ் நகர் பகுதியில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், ரெங்கம்மாள் சத்திரம், வெள்ளனூர் கிராமம் புல எண் 321-ல் நரிக் குறவர்கள்,

2010 ஜனவரி 11]

பூம்பூம் மாட்டுக்காரர்கள், ஈயம் பூசுபவர்கள் குடிசைபோட்டு வசித்து வருகின்றனர். அவர்களுக்கு அரசு விதிகளுக்குட்பட்டு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

79—

தனித் தாலுகா

வினா எண் 68854—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலத்தை மையமாக வைத்து தனித் தாலுகா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) புதிய வட்டம் அமைக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச அளவுகோல்களை தாரமங்கலம் பகுதி பூர்த்தி செய்யாததால், தற்போது அதனை மையமாக வைத்து தனி வட்டம் அமைக்க இயலாது.

(ஆ) வினா எழாது.

80—

பத்திரப் பதிவு அலுவலகம்

வினா எண் 53364—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், பெருமாநல்லூர் பகுதியில் பத்திரப் பதிவு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருமாநல்லூர் ஒன்றியம், திருப்பூர் வருவாய் மாவட்டத்திற்கும், கோவை பதிவு மாவட்ட ஆட்சி எல்லைக்கும் உட்பட்டதாகும். மேலும் கோவை பதிவு மாவட்டத்தில் ஏற்கெனவே 13 சார்-பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. அதில் அவினாசி சார்-பதிவாளர் அலுவலக எல்லைக்குள் பெருமாநல்லூர் கிராமம் அமைந்துள்ளது.

திருப்பூரை அடுத்த பெருமாநல்லூர், திருப்பூரிலிருந்து வடக்கே 12 கி.மீ. தொலைவிலும், அவினாசியிலிருந்து கிழக்கே 10 கி.மீ. தொலைவிலும் உள்ளது. பெருமாநல்லூரில் சார்-பதிவாளர் அலுவலகம் அமைக்கப்படுமானால் ஆண்டுக்கு சராசரி ஆவணப் பதிவு 5000-க்கும் மேல் பதிய வாய்ப்பு உள்ளது. எனவே பெருமாநல்லூரில் சார்-பதிவாளர் அலுவலகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இருப்பினும் தற்பொழுது சார்-பதிவாளர் அலுவலகம் திறப்பது குறித்து அவசியம் எழவில்லை.

81—

புதுப்பித்தல்

வினா எண் 71290—திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி பத்திரப் பதிவு அலுவலகத்தைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி சார்-பதிவாளர் அலுவலகம் துவங்கப்பட்ட நாள் 1-4-1886 முதல்

2010 ஜனவரி 11]

15-10-1892 வரை தனியார் கட்டடங்களில் இயங்கி வந்தது. இவ்வலுவலகத்திற்கு நிரந்தரமாக அரசுக் கட்டடம் கட்டப்பட்டு *16-10-1892* முதல் இயங்கி வருகிறது. மேற்படி அலுவலகத்திற்கு *2008-09* ஆம் ஆண்டில் பொதுப் பணித் துறையினரின் முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படையில் ரூ.*3,00,000*/- (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) பராமரிப்புப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டு கட்டடம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

82—

கட்டடம்

வினா எண் 92626—திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் பதிவுத் துறை அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும்முகத்தான் மிகவும் பழைமையான அரசுக் கட்டடங்களை இடித்துவிட்டு புதிய கட்டடம் தற்போதைய தேவைக்கேற்ப கட்ட முடிவெடுக்கப்பட்டு, 13-வது நிதி ஆணையத்திடம் நிதி கோரி பரிந்துரைக்கப்பட்டுள்ள நிலையில், அந்த ஆணையம் நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் பழைமை வாய்ந்த கட்டடங்களை இடித்துவிட்டு புதிய நவீன வசதிகளுடன்கூடிய கட்டடம் கட்டும்போது முதுநிலை அடிப்படையில் திருவிடைமருதூர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 ஜனவரி 11

83—

சுற்றுலாப் பேருந்து

வினா எண் 94901—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூரிலிருந்து தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஒன்பது நவக்கிரகத் திருக்கோயில்களுக்கும் சுற்றுலாப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

ஓமலூரிலிருந்து தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஒன்பது நவக்கிரகத் திருக்கோயில்களுக்கும் சுற்றுலாப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

84—

விடுதி மற்றும் உணவகம்

வினா எண் 94902—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூரில் சுற்றுலாத் துறை மூலம் விடுதி மற்றும் உணவகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

ஓமலூரில் சுற்றுலாத் துறைமூலம் விடுதி மற்றும் உணவகம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

85—

சுற்றுலாப் பேருந்துகள்

வினா எண் 97781—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

(அ) சிவகங்கை மாவட்டத்தில் சிறப்புச் சுற்றுலாப் பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் சிறப்புச் சுற்றுலாப் பேருந்துகளை இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

86—

பாதுகாவலர்கள்

வினா எண் 16248—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோவை மாநகரிலுள்ள உணவு சேமிப்புக் கிடங்குக்குக் கூடுதலாகப் பாதுகாவலர்கள் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் கோயம்புத்தூர் மற்றும் அனைத்து மண்டலங்களிலும் பணியாளர் குழுவின் ஒப்புதல் பெற்று (Staff Committee) *அரசு அங்கீகாரம் பெற்ற பாதுகாப்பு நிறுவனங்கள்மூலமாக ஒப்பந்த அடிப்படையில் தொகுப்பூதிய விகிதத்தில் கூடுதலாகப் பாதுகாவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.*

87—

புதிய வீடுகள்

வினா எண் 74200—திரு. எல். ரவிச்சந்திரன்: *மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2010 ஜனவரி 11

(அ) சேலம் மாநகரில் அமைந்துள்ள குடிசை மாற்று வாரிய வீடுகளை மாற்றி புதிய வீடுகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் நகரில் குடிசை மாற்று வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ள வீடுகள் தற்போது நல்ல நிலையில் உள்ளதால் இக்குடியிருப்புகளுக்குப் பழுதுபார்ப்புப் பணிகள் மட்டும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, சேலம் மாநகரில் அமைந்துள்ள குடிசை மாற்று வாரிய வீடுகளை மாற்றி புதிய வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போதைக்கு இல்லை.

88—

கருணை இல்லம்

வினா எண் 11343—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டத்தில் உள்ள அமணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் கருணை இல்லம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்தி மலை அருள்மிகு அமணலிங்கேஸ்வரர் திருக்கோயிலுக்குத் திருமண மண்டபம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுவரும் நிலையில், நிதி நிலைமையைக் கருதி தற்போதைக்குக் கருணை இல்லம் அமைக்க இயலாத நிலை உள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

89—

பட்டா

வினா எண் 65840—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதி, ஆலந்துறையார் கோவிலுக்குச் சொந்தமான திருமானூரில் உள்ள நிலங்களை விவசாயத்திற்குக் குத்தகை எடுத்தவர்கள், விவசாயம் செய்யாமல் பட்டா போட்டு விற்பதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

அரியலூர் மாவட்டம் மற்றும் வட்டம், கீழப்பழுவூர் கிராமத்தில் உள்ள ஆலந்துறையார் திருகோயிலுக்குச் சொந்தமாக நன்செய் நிலங்கள் 11.91 ஏக்கரும், புன்செய் நிலங்கள் 231.53 ஏக்கரும் உள்ளன. இதில் திருமானூர் கிராமத்தில் நன்செய் நிலங்கள் 5.78 ஏக்கரும், புன்செய் நிலங்கள் 20.48 ஏக்கரும் உள்ளன. மேற்படி நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டு குத்தகை தொகை வசூல் செய்யப்பட்டு வருகிறது. தனி நபர்களுக்குப் பட்டா ஏதும் வழங்கப்படவில்லை என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

90—

பராமரித்தல்

வினா எண் 83037—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, திருமூர்த்திமலை அருள்மிகு அமணலிங்கேஸ்வரர் திருக்கோயில் ஆயிரம் கால் மண்டபக் கட்டடத்தைப் பராரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், உடுமலை வட்டம், திருமூர்த்தி மலை, அருள்மிகு அமணலிங்கேஸ்வரர் திருக்கோயிலில் பாண்டிய மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட பழமையான ஆயிரங்கால் மண்டபம் ஒன்று உள்ளது. கடந்த 2002 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடத்தப்பட்ட சமயத்தில் இந்த ஆயிரங்கால் மண்டபம் முழுமையாகச் சுத்தம் செய்யப்பட்டு பழமையைப் பாதுகாக்கும் வகையில் மின்விளக்குகள் பொருத்தப்பட்டு நல்லமுறையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மேலும் இம்மண்டபம் திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்கள் இளைப்பாறி ஓய்வு எடுக்கவும், சுற்றுலாப் பயணிகள் வந்து உணவு சாப்பிட்டு ஓய்வு எடுக்கும் வகையிலும் நல்லமுறையில் பேணிப் பராமரிக்கப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் வருகிறது.

91—

கோயிலைச் சீரமைத்தல்

வினா எண் 84224—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், அன்னவாசல் அருள்மிகு இராமநாதசுவாமி கோயிலைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், அன்னவாசல் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில் ஆகும். இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில் என்பதால் துறையின் சார்பாக இத்திருக்கோயிலைச் சீரமைத்திட இயலாத நிலை உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

92—

பல் மருத்துவக் கல்லூரி

வினா எண் 84225—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், இளையான்குடி ஒன்றியம், அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் திருக்கோயில்மூலம் பல் மருத்துவக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், இளையான்குடி ஒன்றியம், அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் பரம்பரை அறங்காவலரால் நிருவாகம் செய்யப்பட்டு வருகிறது. இத்திருக்கோயில் சார்பான வளர்ச்சிப் பணிகளைச் செய்து முடிப்பதற்கும், திருக்கோயிலின் அன்றாட பூஜைகள், இதர பணிகள் செய்வதற்கும், திருக்கோயில் பணியாளர்கள் சம்பளம், வருடாந்திர விழாக்கள் போன்றவற்றிற்கும் இத்திருக்கோயில் வருமானத்திலிருந்து செலவு செய்ய வேண்டியுள்ளது. எனவே போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால், இத்திருக்கோயில் சார்பாகப் பல் மருத்துவக் கல்லூரி தொடங்கி நடத்த இயலாத நிலை உள்ளது.

93—

ஆசிரியர்கள் நியமனம்

வினா எண் 76421—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியம், செட்டியூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ஆசிரியர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரத்தின் அடிப்படையில், அரசால் வழங்கப்படும் புதிய பணியிடங்கள் துறையின்மூலமாகத் தேவைப்படும் பள்ளிகளுக்கு 2009-2010 ஆம் கல்வி ஆண்டில் பகிர்ந்தளிக்கப்படும்.

94—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 30919—திரு. கு.ப. வேலுமணி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, பாலக்காடு பிரதான சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேரூர் சட்டமன்றத் தொகுதியில் பாலக்காடு பிரதான சாலை என்பது, கோயம்புத்தூர் (நெடுஞ்சாலை) கோட்டப் பராமரிப்பில் உள்ள மாநில நெடுஞ்சாலையான சேலம்-கொச்சின் சாலை கி.மீ.161/2-171/2 வரை உள்ள சாலையாகும். பேரூர் சட்டமன்றத் தொகுதியில் (Inter State Connectivity) பன்மாநில இணைப்புத் திட்டத்தின்கீழ் சாலை மேம்படுத்தும் பணிக்கு ரூபாய் 805 இலட்சத்திற்கு நிருவாக அனுமதி பெற்று, ஒப்பந்தக்காரரால் பணி எடுக்கப்பட்டு, தற்போது வடிகால் பணிகள் கி.மீ.161/4, 161/6, 165/6, 170/4, 170/10 வரை முன்னேற்றத்தில் உள்ளன. கி.மீ. 161/2, 165/0 மற்றும் கி.மீ. 170/2, 171/2-ல் டென்ஸ் பிட்டுமினஸ் மெக்காடம் மற்றும் பிட்டுமினஸ் கான்கிரீட் அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன.

2010 ஜனவரி 11]

95—

புதிய கட்டடம்

வினா எண் 43798—திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தொகுதி, பழனியில் குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

பழனி தொகுதி, பழனியில் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

இருப்பினும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் சொந்தக் கட்டடம் இல்லாமல் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்கள் குறித்த விவரம் அனைத்து மாவட்ட திட்ட அலுவலரிடம் கோரப்பட்டுள்ளது. உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3-வது திட்டம் முடிவு பெற்று ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (பொது) இயங்கி வருவதால் வாடகை கட்டடத்தில் செயல்பட்டுவரும் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலக விவரம் மற்றும் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு குறித்த விவரத்துடன் அனைத்து மாவட்ட திட்ட அலுவலரிடமிருந்து கருத்துரு கோரப்பட்டுள்ளது. அனைத்து மாவட்ட திட்ட அலுவலர்களிடமிருந்தும் இப்பொருள் குறித்த கருத்துரு வரப்பட்டதும் நிதி ஒதுக்கீடு பெற்று கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

96—

சொந்த கட்டடம்

வினா எண் 83106—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்த கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்த கட்டடம் கட்ட கருத்துரு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

இருப்பினும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் சொந்த கட்டடம் அல்லாமல் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்கள் குறித்த விவரம் அனைத்து மாவட்ட திட்ட அலுவலரிடம் கோரப்பட்டுள்ளது. உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3-வது திட்டம் முடிவு பெற்று ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (பொது) இயங்கி வருவதால், வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலக விவரம் மற்றும் சொந்த கட்டடம் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு குறித்த விவரத்துடன் அனைத்து மாவட்ட திட்ட அலுவலரிடமிருந்து கருத்துரு கோரப்பட்டுள்ளது. அனைத்து மாவட்ட திட்ட அலுவலர்களிடமிருந்தும் இப்பொருள் குறித்த கருத்துரு வரப்பட்டதும் நிதி ஒதுக்கீடு பெற்று கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

97—

மீன் உலர்த்தும் தளம்

வினா எண் 61342—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம் ஆசாத்நகர், ஜாம்பனோடை பகுதியில் மீன் உலர்த்தும் தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேதுசமுத்திர கப்பல் கால்வாய்த் திட்டத்தின்கீழ், அத்திட்டப் பகுதியில் வரக்கூடிய பகுதியான

2010 ஜனவரி 11]

முத்துப்பேட்டை மீனவ கிராமத்திற்கு, ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைத்துக் கொடுக்கும் திட்டம் உள்ளது. இந்நிலையில் முத்துப்பேட்டை ஒன்றியம், ஆசாத் நகர், ஜாம்பனோடை பகுதியில் தனியாக மீன் உலர்த்தும் தளம், தற்போது அமைத்துத் தர வேண்டிய அவசியம் எழவில்லை.

98—

மீன் விற்பனை நிலையம்

வினா எண் 95389—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஊராட்சி ஒன்றியம், தருமகுளம் பகுதியில் மீன் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஊராட்சி ஒன்றியம், தருமகுளம் பகுதியில் மீன் விற்பனை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

99—

குளிரூட்டும் நிலையம்

வினா எண் 97141—திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, அம்மாபாளையம் பகுதியிலுள்ள பால் குளிரூட்டும் நிலையத்திற்குப் போதுமான குளிர்சாதன வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, அம்மாபாளையம் பகுதியிலுள்ள பால் குளிரூட்டும் நிலையம்

[2010 ஜனவரி 11

நாளொன்றுக்கு 1,30,000 லிட்டர் பாலினைக் கையாளும் திறன் கொண்டதாகும். இந்நிலையத்தில் நாளொன்றுக்கு 1,26,000 லிட்டர் பால் சேகரிக்கப்படுகிறது.

ஆத்தூர் மற்றும் அதன் சுற்று வட்டாரத்திலுள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் பால், லாரிகள்மூலம் ஆத்தூர் குளிரூட்டும் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு குளிர்விக்கப்படுகிறது. இப்பகுதியில் உற்பத்தியாகும் பால் முழுவதும், குளிரூட்டும் அளவிற்கு அம்மாபாளையம் குளிரூட்டும் நிலையத்தில் போதுமான வசதிகள் உள்ளதால், மேலும் அதிகரிப்பதற்கான அவசியம் இல்லை.

100—

பால் பண்ணை

வினா எண் 97142—திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் பகுதியில் மாதிரி பால் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் அம்மாபாளையம் பகுதியில் நாளொன்றுக்கு 1.30 இலட்சம் கொள்ளளவுள்ள பால் குளிரூட்டும் நிலையம் தற்போது செயல்பட்டு வருகிறது. சேலம் மாவட்டத்திலுள்ள சித்தனூர் தளவாய்பட்டி என்ற இடத்தில் நாளொன்றுக்கு 3 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறனுடன், நாளொன்றுக்கு 12 டன் வெண்ணெய், 8 டன் நெய் மற்றும் 10 டன் பால் பவுடர் தயாரிக்கும் திறனுடைய பால் பதன ஆலை நிறுவப்பட்டு இயங்கி வருகிறது.

சேலம் மாவட்டத்தில் அமைந்துள்ள பால் பதன ஆலையில், அதனுடைய முழுத் திறனையும் உபயோகிக்க போதுமான பால் இல்லாத காரணத்தால், ஆத்தூரில் பால் பண்ணை அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

2010 ஜனவரி 11]

பட்டியல் 6

1—

அருங்காட்சியகம்

வினா எண் 89153—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் அருங்காட்சியகத்தை மேம்படுத்தி கூடுதலான வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தற்பொழுது சேலம் மாவட்ட அருங்காட்சியகம் விரிவான இடத்தில் நிறைய வரலாற்றுச் சின்னங்களுடன் மேம்படுத்தப்பட்டு பாதுகாப்புடன் இயங்கி வருகிறது.

2—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்

வினா எண் 9944—திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோவில் ஒன்றியம், சத்திரப்பட்டி, வெண்ணமுத்துப்பட்டி, உடையாளிபட்டி, சவேரியார்புரம் ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோவில் ஒன்றியம், சத்திரப்பட்டி குடியிருப்பிற்கு நபார்டு திட்டத்தின்கீழ் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை

நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் மார்ச் 2007-ல் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

உடையாளிப்பட்டி கிராமத்திற்கு ஏற்கெனவே 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய திட்டம் முடிக்கப்பட்டு, ஊராட்சிவசம் ஒப்படைக்கப்பட்டுப் பயனில் உள்ளது.

வெண்ணமுத்துப்பட்டி குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் மார்ச் 2008-ல் முடிக்கப்பட்டுப் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

சவேரியார்புரம் குடியிருப்பிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு, ஏப்ரல் 2009-ல் திட்டம் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

3—

நகரப் பேருந்து நிலையம்

வினா என் 11539—திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் நகரின் மையப் பகுதியில் உள்ள பேருந்து நிலையத்தை நகரப் பேருந்து நிலையமாக மாற்றி, புறநகர்ப் பகுதியில் அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

பெருகிவரும் மக்கள் தொகை மற்றும் போக்குவரத்து நெருக்கடியைக் கருத்தில்கொண்டு, கரூர் நகருக்கு, புறநகர்ப் பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமையவிருக்கும் இடம் தேர்வு

2010 ஜனவரி 11]

செய்வது குறித்து மாறுபட்ட கருத்துகள் நிலவி வருவதால் அதுகுறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

4—

ஆழ்துளைக் கிணறு

வினா எண் 31615—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நகரம், 7-வது வார்டு பகுதிக்கு ஆழ்துளைக் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

செங்கல்பட்டு நகராட்சி, வார்டு எண் 7-ல் முன்னரே ஆழ்துளைக் கிணறு மற்றும் 6 கைப்பம்புகள் உள்ளன.

5—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 43227—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, புக்கம்பட்டி ஊராட்சி, மௌக்கரட்டூர் காட்டுவளவுப் பகுதி, எலவம்பட்டி ஊராட்சி, சுண்ணாம்புக்காரன்வளவுப் பகுதி, விருதாசம்பட்டி ஊராட்சி, மல்லப்பனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, வெள்ளார் ஊராட்சி காளிக்கவுண்டனூர் பகுதிகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் வட்டம், புக்கம்பட்டி ஊராட்சி, மௌக்கரட்டூர் காட்டுவளவு என்ற

மோளக்கரடு காட்டுவளவுப் பகுதிக்கு மோளக்கரடு குடியிருப்பிலுள்ள 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்தும் விருதாசம்பட்டி ஊராட்சி, மல்லப்பனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் அமைந்துள்ள 1,000 லிட்டர் தொட்டிக்கு மல்லப்பனூர் குடியிருப்பிலுள்ள 60,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியிலிருந்தும் வெள்ளார் ஊராட்சி, காளிக்கவுண்டனூர் குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியிலிருந்தும் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் கூடுதலாக மேல்நிலைத் தொட்டிகள் அமைக்க அவசியம் இல்லை. எல்லம்பட்டி ஊராட்சி, சுண்ணாம்புக்காரன்வளவு குடியிருப்பிற்கு தற்போது கோயன்காடு குடியிருப்பில் இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்புமூலம் காவிரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

6—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 45432—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மல்லிகுந்தம் ஊராட்சி, எம்.டி. தெரு பகுதி, மானத்தாள் ஊராட்சி, ஓலைப்பட்டி காலனி, 3 மற்றும் 6-வது வார்டு மற்றும் அழகு சமுத்திரம் ஊராட்சி, ஏகபுரத்தான் வளவு ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, மல்லிகுந்தம் ஊராட்சி, எம்.டி.தெரு பகுதி, குடியிருப்புக்கும் மற்றும் தாரமங்கலம் ஒன்றியம், அழகு சமுத்திரம் ஊராட்சி, ஏகபுரத்தான் வளவு குடியிருப்புக்கும் தனியாக 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத்

2010 ஜனவரி 11]

தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் செயலாக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மானத்தாள் ஊராட்சி, ஓலைப்பட்டி காலனி 3-வது மற்றும் 6-வது வார்டு பகுதிகளுக்கு ஓலைப்பட்டி காலனியில் கட்டப்பட்டுள்ள 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தனியாக மேல்நிலைத் தொட்டி கட்டும் அவசியம் இல்லை.

7—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 45511—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், முத்துநாயக்கன்பட்டி ஊராட்சி, கதிர்செட்டிப்பட்டி, ஓலப்பட்டி மற்றும் பச்சனம்பட்டி ஊராட்சி, 3-வது வார்டு மணக்காடு ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், முத்துநாயக்கன்பட்டி ஊராட்சி, கதிர்செட்டிப்பட்டி குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்தும், பாலக்குட்டப்பட்டி குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்பு மூலமும் ஓலப்பட்டி குடியிருப்புக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பச்சனம்பட்டி ஊராட்சி, 3-வது வார்டு மணக்காடு பகுதியில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் 31-3-2009-ல் நிறைவேற்றப்பட்டு, மக்கள் பயன்பாட்டிலுள்ளது.

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 ஜனவரி 11

8—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 50551—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, பன்னந்தூர் ஊராட்சி, கீத்துக்காரன் கொட்டாய் கரதாகொல்லை, மகளிர் உயர்நிலைப் பள்ளியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பன்னந்தூர் ஊராட்சியைச் சேர்ந்த கீத்துக்காரன் கொட்டாய் மற்றும் கரதாகொல்லை மகளிர் உயர்நிலைப் பள்ளி பகுதிகள் பன்னந்தூர் குடியிருப்பை ஒட்டியுள்ள பகுதிகளாகும். இப்பகுதிகளுக்கு குழாய் நீட்டிப்புமூலம் தேவையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், மேல்நிலைத் தொட்டி அமைக்க அவசியம் எழவில்லை.

9—

சோடியம் விளக்கு

வினா எண் 55160—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, அக்காமலை எஸ்டேட் குடியிருப்பு மைதானம் முன்பு, உருளிக்கல் பகுதி மற்றும் எஸ்டேட் குடியிருப்பு பகுதி, சோலையார் அணை தங்கும் விடுதி, சோலையாறு பஜார் பகுதி, பச்சமலை பேருந்து நிற்கும் பகுதி, பச்சமலை எஸ்டேட் குடியிருப்புப் பகுதி, முடீஸ் பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் சோடியம் தெருவிளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) வால்பாறை நகராட்சிக்குட்பட்ட அக்காமலை எஸ்டேட் குடியிருப்பு மைதானம் முன்பு, உருளிக்கல், சோலையாறு அணை பயணிகள் தங்கும் விடுதி, பச்சமலை பேருந்து குடியிருப்பு, முடீஸ் பேருந்து நிலையம் ஆகிய பகுதிகள் தனியார் எஸ்டேட் நிறுவனத்திற்குச் சொந்தமானதாகும். எனினும், நகராட்சிமூலம் இதுவரை போதுமான வகையில் 21 குழல் விளக்குகள் அமைக்கப்பட்டுப் பராமரிப்பில் உள்ளது.

10—

குடிநீர் வசதி

வினா எண் 58557—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, ஈரோடு சென்னிமலை கோரக்காட்டு வலசு பகுதி பாலத்தொழுவு, நஞ்சுண்டாபுரம் பகுதி இவற்றிற்குக் குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியம், குமாரவலசு ஊராட்சி, கோரக்காட்டு வலசு குடியிருப்பு மற்றும் புஞ்சை பாலத்தொழுவு ஊராட்சி, நஞ்சுண்டாபுரம் குடியிருப்பு ஆகியவற்றிற்கு ஏற்கெனவே உள்ள குடிநீர்த் திட்டங்கள்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், மேலும் குடிநீர்த் திட்டங்கள் செயலாக்க அவசியம் இல்லை.

11—

ஆழ்குழாய்க் கிணறு

வினா எண் 58564—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 ஜனவரி 11

(அ) ஈரோடு மாவட்டம், பாலத்தொழுவு, வெங்கமேட்டிலுள்ள ஆழ்குழாய்க் கிணறுமூலம் ஆலமரத்துப் பகுதி மேல்நிலைத் தொட்டிக்குக் குழாய் இணைப்பு கொடுத்து, குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம், புஞ்சை பாலத்தொழுவு என்கிற ஆலமரம் குடியிருப்பில் உள்ள மேல்நிலைத் தொட்டிக்கு, வெங்கமேடு அருகில் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட ஆழ்துளைக் கிணற்றின்மூலம் இணைப்பு கொடுக்கப்பட்டு, தற்போது மக்கட்பயனிலுள்ளது.

12—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 59020—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, கோட்டப்பட்டி புளியந்தோப்பு குடியிருப்பிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தருமபுரி, அரூர் ஒன்றியம், கோட்டப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த புளியந்தோப்பு குடியிருப்பிற்கு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் நடப்பு நிதியாண்டில் (2009-10) செயல்படுத்தப்படவுள்ளது.

2010 ஜனவரி 11]

13—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 61455—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, தே. கொல்லப்பட்டி பகுதி, பாகல்பட்டி ஊராட்சி, குட்டக்காடு பகுதி, புளியம்பட்டி போதாணி கவுண்டர்வட்டம் மற்றும் பூசாரி வட்டம், மூங்கில்பாடி கூடைக்காரன்காடு மற்றும் தாராபுரம் ஊராட்சி, அருந்ததியர் காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

ஓமலூர் ஒன்றியம், தேக்கம்பட்டி ஊராட்சி, கொல்லப்பட்டி குடியிருப்பிற்கு ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்தும், புளியம்பட்டி ஊராட்சி, போதாணிகவுண்டர் வட்டம் என்ற கோதாணிகாரன் காட்டுவலக் குடியிருப்பில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் தனிக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டும், புளியம்பட்டி ஊராட்சி, பூசாரி வட்டம் என்ற பகுதிக்கு, புளியம்பட்டி ஆதி திராவிடர் காலனி பிரதான குடியிருப்பில் அமைந்துள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்தும், போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. மூங்கில்பாடி ஊராட்சி, கூடைக்காரன்காடு பகுதிக்கு கொரையன்காடு குடியிருப்பிலுள்ள 60,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்பு மூலம் குடிநீர் வழங்க, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தாராபுரம் ஊராட்சி, அருந்ததியர் காலனி பகுதிக்கு, தாராபுரம் குடியிருப்பிலுள்ள 1.00 இலட்சம் (ஒரு இலட்சம்) லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. பாகல்பட்டி ஊராட்சி, குட்டக்காடு பகுதிக்குக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. எனவே, வினாவில் குறிப்பிட்டுள்ள பகுதிகளில் குட்டக்காடு பகுதியைத் தவிர, பிற

[2010 ஜனவரி 11

பகுதிகளுக்குத் தனியாக / கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை.

14—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 61461—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, கூ. குட்டப்பட்டி ஊராட்சி, நயினாகாடு காட்டுவளவுப் பகுதி, நடுப்பட்டி ஊராட்சி, தளவாய்ப்பட்டி கோம்பைப் பள்ளி அருகில், காமராஜ் நகர், தீவட்டிப்பட்டி ஊராட்சி, களர்காடு பெருமாள் கோயில் அருகில், கணவாய்ப்புதூர் ஊராட்சி, கருப்பணன் காட்டுவளவுப் பகுதி மிலிட்டரிகாரர் நகர்ப் பகுதி மற்றும் பூசாரிப்பட்டி ஊராட்சி, மயில்காடு பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

ஓமலூர் தொகுதி, தீவட்டிப்பட்டி ஊராட்சியைச் சார்ந்த நயினாகாடு காட்டுவளவுப் பகுதிக்கு, நயினாகாடு குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்தும், நடுப்பட்டி ஊராட்சி, தளவாய்ப்பட்டி கோம்பைப் பள்ளி அருகில் உள்ள காமராஜ் நகர் பகுதிக்கு, காமராஜ் நகர் பிரதான குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்தும், தீவட்டிப்பட்டி ஊராட்சி, களர்காடு பெருமாள் கோயில் பகுதிக்கு, களர்காடு குடியிருப்பில் உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்தும், கணவாய்ப்புதூர் ஊராட்சி, கருப்பணன் காட்டுவளவுப் பகுதிக்கு, கணவாய்ப்புதூர் குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள 15,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்தும், கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சியைச் சார்ந்த மயில்காடு பகுதிக்கு, மந்தி கொட்டாய் குடியிருப்பிலுள்ள 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை

2010 ஜனவரி 11]

நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்தும் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

15—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 62310—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, குடிநீர் வடிகால் வாரியம்மூலம் கும்பலப்பட்டி, பாரதிநகர் (குரல் குட்டை) ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

உடுமலைப்பேட்டை ஒன்றியம், தும்பலப்பட்டி ஊராட்சி, கும்பலப்பட்டி என்கிற தும்பலப்பட்டி குடியிருப்பில் ஏற்கெனவே கணக்கம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குரல்குட்டை ஊராட்சியிலுள்ள பாரதிநகர் என்கிற பாரதிதாசன் நகர் குடியிருப்பில் ஏற்கெனவே ஊராட்சிமூலம் கட்டப்பட்ட 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டிமூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதுவே போதுமானதாகையால் கூடுதலாகத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் அவசியம் எழவில்லை.

16—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 62369—திரு. வை. காவேரி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வைகுந்தம் ஊராட்சி, ஆலம்பாளையம் மேடு, சீரங்காயிவளவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

மகுடஞ்சாவடி ஒன்றியம், வைகுந்தம் ஊராட்சி, ஆலம்பாளையம் மேடு, சீரங்காயிவளவு என்ற பகுதிக்கு, ஆலம்பாளையம் குடியிருப்பில், இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுவதால், கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அவசியம் இல்லை.

17—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 74379—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், எரவாச்சேரியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார் கோவில் ஒன்றியம், எரவாச்சேரியில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு முழு அளவில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் அவசியம் இல்லை.

18—

விரிவுபடுத்துதல்

வினா எண் 84293—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி நகராட்சியை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

தருமபுரி நகராட்சியை விரிவுபடுத்துவது தொடர்பான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

19—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 87247—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கொழுமம் ஊராட்சி, 2-வது வார்டு ஆதி திராவிடர் காலனி வளாகம் அருகில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் ஒன்றியம், கொழுமம் ஊராட்சியிலுள்ள கொழுமம் குடியிருப்பின் ஒரு பகுதியே 2-வது வார்டு ஆதி திராவிடர் காலனி ஆகும். இங்குள்ள 60,000 லிட்டர் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுகளுள்ள இரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஒன்றிய நிதியிலிருந்து 2-வது வார்டு ஆதி திராவிடர் காலனி அருகில் ஊராட்சி ஒன்றியம் மூலம் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு ஜூன் 2009 முதல் மக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

20—

திருமண மண்டபம்

வினா எண் 90925—திரு. டி. மூர்த்தி: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்போரூர் தொகுதி, மறைமலைநகர் நகராட்சி, *18*-வது வார்டிலுள்ள பயன்படுத்தப்படாத மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை இடித்துவிட்டு, அவ்விடத்தில் திருமண மண்டபம், வணிக வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

மறைமலைநகர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 18-ல் உள்ள பயன்படுத்தப்படாத மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியானது சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதால், மேற்படி மேல்நிலைத் தொட்டியைப் பயனற்றதாகக் கருதி, நிலத்தினை நகராட்சிக்கு ஒப்படைக்குமாறு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் கோரப்பட்டுள்ளது. அவ்வாறு ஒப்படைக்கப்படும் பட்சத்தில், அவ்விடத்தில் திருமண மண்டபம் / வணிக வளாகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு செய்து முடிவெடுக்கப்படும்.

21—

குடிநீர் வசதி

வினா எண் 96908—திரு. பா. வேல்துரை: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி ஒன்றியம், பொட்டல் ஊராட்சி, மூலச்சி ஊராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை இரண்டாகப் பிரித்து தனித் தனியாக இரண்டு ஊராட்சிகளுக்கும் போதிய நீர் ஆதாரத்துடன் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, மூலச்சி ஊராட்சி மற்றும் பொட்டல் ஊராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் 2004-2005 ஆம்

2010 ஜனவரி 11]

ஆண்டில் நிறைவேற்றப்பட்டு தற்போது ஊராட்சிகளின் பராமரிப்பில் உள்ளது.

இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் பொட்டல் ஊராட்சி மற்றும் மூலச்சி ஊராட்சிகளின் கிராமங்களுக்கு முழு அளவில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆதலால், தொழில்நுட்ப ரீதியாக இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை இரண்டாகப் பிரித்துத் தனித் தனி திட்டமாகச் செயல்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

22—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 101190—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை, இச்சிப்பட்டியிலுள்ள ஆதி திராவிடர் காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியம், இச்சிப்பட்டி ஆதி திராவிடர் காலனிக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டத்தின்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, கூடுதலாக மேல்நிலைத் தொட்டி அமைக்கும் அவசியம் எழவில்லை.

23—

காவிரிக் குடிநீர்

வினா எண் 101193—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 ஜனவரி 11

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை, ஞானிபாளையத்திற்குக் காவிரிக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியம், குமாரவலசு ஊராட்சி, ஞானிபாளையம் குடியிருப்புக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் மூலமும், முத்தூர்-காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் காவிரிக் குடிநீர், எடுப்பு முனை 1-ன் மூலம், 3 பொதுக் குழாய்கள் வழியாகப் போதுமான அளவு வழங்கப்பட்டு வருகிறது.

24—

மகப்பேறு மருத்துவமனை

வினா எண் 102257—திரு. அ. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூரில் நகராட்சிமூலம் மருந்தகம் மற்றும் மகப்பேறு மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) குன்னூர் நகரில் தற்பொழுது மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு தாய்சேய் நல விடுதி அமைக்கப்பட்டு வருகிறது. மேலும், ரூ.14.00 இலட்சத்திற்கு குன்னூரில் ஏற்கெனவே உள்ள 5 தாய்சேய் நல விடுதிகளுக்கு உபகரணங்களும் ரூ.4.90 இலட்சத்திற்கு ஒரு ஆம்புலன்சும் வாங்கப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

25—

தோரணவாயில்

வினா எண் 102594—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், பாஞ்சாலங்குறிச்சியில் விடுதலைக்குப் போரிட்ட மாவீரன் பொட்டிப்பகடைக்குத் தோரணவாயில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1974 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் நினைவுக்கோட்டையை நிறுவியுள்ளார்கள். இக்கோட்டைக்குச் செல்லும் சாலை நெடுகிலும் 7 தோரண வாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1. வீரபாண்டிய கட்டபொம்மன் நுழைவு வாயில்
2. வீரபாண்டிய கட்டபொம்மன் தோரணவாயில்
3. ஊமைத்துரை தோரணவாயில்
4. வெள்ளையத்தேவன் தோரணவாயில்
5. தானாபதிபிள்ளை தோரணவாயில்
6. வீரன் சுந்தரலிங்கம் தோரணவாயில்
7. வீரசக்கம்மாள் தேவி தோரணவாயில்

மேலும், கோட்டையின் நுழைவாயிலில் கட்டபொம்மன் நினைவுக்கோட்டை, பாஞ்சாலங்குறிச்சி என வரவேற்பு வளைவு பொருத்தப்பட்டுள்ளது. பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் நினைவுக்கோட்டை, தமிழக அரசின் சுற்றுலாத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியாகும். பாஞ்சாலங்குறிச்சியில் ஆய்வு மேற்கொண்டதில், மாவீரன் பொட்டிப்பகடைக்குச் சுற்றுலாத் துறைமூலம் தோரணவாயில் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 ஜனவரி 11

26—

துணை மின் நிலையம்

வினா எண் 63043—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, பொம்மதாத்தனூர் ஊராட்சி, காலேப்பள்ளி கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, பொம்மதாத்தனூர் ஊராட்சி, காலேப்பள்ளி கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் அவசியம் தற்பொழுது எழவில்லை.

27—

துணை மின் நிலையம்

வினா எண் 84795—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, அர்த்தநாரிபாளையம் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

வால்பாறை தொகுதி, அர்த்தநாரிபாளையம் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்கும் அவசியம் தற்பொழுது எழவில்லை.

28—

துணை மின் நிலையம்

வினா எண் 87266—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

விளவங்கோடு தொகுதி, மார்த்தாண்டம், நடைகாவு பகுதிகளில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், மார்த்தாண்டம் மற்றும் நடைகாவு பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க வாரியத்தால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மார்த்தாண்டம் துணை மின் நிலையப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நடைகாவு பகுதியில் விரைவில் பணிகள் துவக்கப்படும்.

29—

துணை மின் நிலையம்

வினா எண் 103720—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியம், காணியாளம்பட்டியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காணியாளம்பட்டி பகுதியில் ஒரு 33/11 கி.வோ. துணை மின் நிலையம் 11-வது பெருந் திட்டக் காலத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

30—

கட்டடம்

வினா எண் 13996—திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, அரியபாடி, சந்திரம்பாடி, மேலத்தாங்கல் ஆகிய கிராமங்களிலுள்ள நியாய விலைக் கடைகளுக்குக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி அரியபாடி நியாய விலைக் கடை, பஞ்சாயத்துக் கட்டடத்திலும், சந்திரம்பாடி நியாய விலைக் கடை, 2007-2008 ஆம் ஆண்டின் பெரணமல்லூர் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்டு நவம்பர் 2008 முதல் புதிய கட்டடத்திலும், மேலத்தாங்கல் நியாய விலைக் கடை மேலத்தாங்கல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டிலுள்ள வங்கியின் சொந்த கட்டடத்திலும் செயல்பட்டு வருகின்றன. எனவே, அரியபாடி, சந்திரம்பாடி மற்றும் மேலத்தாங்கல் ஆகிய கிராமங்களில் செயல்படும் நியாய விலைக் கடைகளுக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

31—

கட்டடம்

வினா எண் 41776—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தொப்பூர் ஊராட்சி, உம்மியம்பட்டி கிராம நியாய விலைக் கடை, தொப்பூர் நியாய விலைக் கடை, செட்டிக்கரை ஊராட்சி, மாதப்பட்டி நியாய விலைக் கடை ஆகியவற்றிற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, தொப்பூர் ஊராட்சி, உம்மியம்பட்டி பகுதிநேர நியாய விலைக் கடை இலவச

2010 ஜனவரி 11]

கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இப்பகுதிநேர நியாய விலைக் கடைக்கு அடிமனை தேர்வு செய்ததில் இரு பிரிவுகளுக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளது. இந்தக் கருத்து வேற்றுமையை நீக்கிய பிறகே இப்பகுதிநேர நியாய விலைக் கடைக்குச் சொந்த கட்டடம் கட்ட இயலும். தொப்பூர் நியாய விலைக் கடைக்கு தருமபுரி பாராளுமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீட்டிலிருந்து கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, 6-12-2008 முதல் வாடகையின்றி அக்கட்டடத்தில் இயங்கி வருகிறது. செட்டிக்கரை ஊராட்சி, மாதப்பட்டி பகுதிநேர நியாய விலைக் கடை வாடகைக் கட்டடத்தில் செயல்படுகிறது. இப்பகுதிநேர நியாய விலைக் கடைக்குச் சொந்த கட்டடம் கட்ட அடிமனை ஏதும் இல்லாததால் சொந்த கட்டடம் கட்ட இயலாது.

32—

நியாய விலைக் கடைகள்

வினா எண் 43563—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு நகரில் கூடுதலாக நியாயவிலைக் கடைகள் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எத்தனை கடைகள் அமைக்கப்படும் என அரசு அறிவிக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு நகரில் காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையின் கட்டுப்பாட்டின்கீழ் 14 முழுநேரக் கூட்டுறவுக் கடைகளும், செங்கற்பட்டு கூட்டுறவுப் பண்டகசாலை கட்டுப்பாட்டின்கீழ் 6 முழுநேரக் கூட்டுறவுக் கடைகளும் இயங்கி வருகின்றன. மேலும் 2 அமுதம் அங்காடிகளும் உள்ளன. இக்கடைகள் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கியதாக உள்ளன. இந்நிலையில் செங்கற்பட்டு நகரில் கூடுதலாகக் கூட்டுறவுக் கடைகள் அமைக்கத் தேவையில்லை.

[2010 ஜனவரி 11

33—

நியாய விலைக் கடை

வினா எண் 57369—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, கட்டுப்பூண்டி மற்றும் குருவிமலை ஊராட்சிகளுக்கு ஒரு கூட்டுறவு கடை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், போளூர் ஒன்றியத்திற்குட்பட்ட கட்டுப்பூண்டி மற்றும் குருவிமலை நியாய விலைக் கடைகளுக்குப் புதிய கட்டடம் கட்ட 2008-2009 ஆம் நிதியாண்டில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின்மூலம் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. எனவே, மேற்கண்ட நியாய விலைக் கடைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படாததால் புதிய கட்டடம் கட்டப்படவில்லை.

34—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 64744—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, திப்பிரெட்டி அள்ளி ஊராட்சி, கரக்காப்பட்டி கிராமத்தில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, திப்பிரெட்டி அள்ளி ஊராட்சி, கரக்காப்பட்டி கிராமத்தில் பகுதிநேரக் கடை 3-3-2009 தேதி முதல் செயல்பட்டு வருகிறது.

35—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 67280—திரு. செ.ம. வேலுசாமி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஊராட்சி, அய்யம்பாளையத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், கரைப்புதூர் ஊராட்சி, அய்யம்பாளையத்தில் ஒரு பகுதிநேரக் கடை தொடங்க இலவசமாக கட்டடம் கொடுக்க யாரும் முன்வரவில்லை என்பதால் அய்யம்பாளையம் கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை திறக்க சாத்தியமில்லை.

36—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 74464—திருமதி பெ. கமலாம்பாள்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், அய்யங்கார்குளம் 17-வது வார்டில் பொது விநியோகக் கடை அமைக்கவும், அய்யங்கார்குளம் கூட்டுறவு நியாய விலைக் கடையை முழுநேரமாக மாற்றவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், அய்யங்கார்குளம் பகுதியில் மொத்தம் 3 வார்டுகள் உள்ளன. இம்மூன்று வார்டுகளில் மொத்தம் 743 குடும்ப அட்டைகள் உள்ளன. இக்குடும்ப அட்டைகளைக்கொண்டு அய்யங்கார்குளம் பகுதியில் ஒரு முழுநேரக் கடை செயல்பட்டு வருகிறது. இக்கடை விப்பேடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் அய்யங்கார்குளம் 17-வது வார்டில் நியாய விலைக் கடை அமைக்கவும், அய்யங்கார்குளம் நியாய விலைக் கடையை முழுநேரக் கடையாக மாற்ற வேண்டிய வினா எழவில்லை.

37—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 81929—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், மைலாடி ஊராட்சி, செங்கண்டிபுதூர் கிராமத்திற்குப் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், மைலாடி ஊராட்சி, செங்கண்டிபுதூர் கிராமத்தில் 12-01-2009 முதல் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது.

2010 ஜனவரி 11]

38—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 86899—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் வட்டம், திருநல்லூர் கிராமப் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், தேவனாஞ்சேரி நியாய விலைக் கடையிலிருந்து 272 குடும்ப அட்டைகளைப் பிரித்து திருநல்லூர் கிராமத்தில் பகுதிநேர அங்காடி 24-4-2008 அன்று திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

39—

பணிமனை மாறுதல்

வினா எண் 37317—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனையை வெண்பாக்கத்திற்கு மாற்றி விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் (விழுப்புரம்) கழகத்தின் செங்கல்பட்டு பணிமனை செங்கற்பட்டு நகரின் பேருந்து நிலையத்திற்கு எதிரில் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் இயங்கி வருகிறது. இதைச் செங்கற்பட்டு நகரிலிருந்து மதுராந்தகம் செல்லும் சாலையில் 4.0-வது கி.மீ.-ல் உள்ள வெண்பாக்கத்திற்கு மாற்றினால் பேருந்துகளின் வருவாய் அற்ற கி.மீ. ஓட்டம் அதிகமாகும் என்பதுடன், அதிக அளவில் எரிபொருளும்

[2010 ஜனவரி 11

செலவாகும். தற்பொழுது உள்ள நிதிநிலையில் பணிமனையை வேறு இடத்திற்கு மாற்றுவது சாத்தியமில்லை.

40—

பயிற்சிப் பள்ளி

வினா எண் 47092—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் சாலைப் போக்குவரத்து நிறுவனம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்மூலம் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதிக்கு மிக அருகில், பொள்ளாச்சியில், சாலைப் போக்குவரத்து நிறுவனத்தால், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோவை) லிட்.-உடன் இணைந்து ஒரு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி நடத்தப்பட்டு வருகிறது. மேலும், சற்றுத் தொலைவாக ஈரோடு நகரிலும் இதேபோன்று ஒரு ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி நடத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி உடுமலைப்பேட்டையில் 30 ஏக்கர் நிலத்தில் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி துவக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, வால்பாறையில் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

41—

பணிமனை

வினா எண் 64528—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

(அ) வால்பாறை தொகுதியில் புதிய பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை சட்டமன்றத் தொகுதி, வால்பாறையில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் ஒரு பணிமனையை அமைத்து 43 பேருந்துகளை இயக்கி மலைப்பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்குப் போக்குவரத்துத் தேவையை நிறைவேற்றி வருகிறது. மேலும், வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சமவெளிப் பகுதியில் வசிக்கும் மக்களின் போக்குவரத்துத் தேவை பொள்ளாச்சியில் அமைந்துள்ள பணிமனைகள்மூலம் நிறைவேற்றப்பட்டு வருவதால் வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் மேலும் ஒரு பணிமனை அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

42—

கட்டடம்

வினா எண் 69243—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி பணிமனையில் ஓட்டுநர், நடத்துநர்கள், ஓய்வு எடுக்கப் புதியதாக ஒரு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி பணிமனையில் ஓட்டுநர், நடத்துநர்கள் ஓய்வு எடுக்கத் தற்போது பயன்பாட்டில் உள்ள ஓய்வு அறை போதுமானதாக உள்ளதால் புதியதாக ஒரு கட்டடம் கட்ட அவசியத் தேவை ஏற்படவில்லை.

[2010 ஜனவரி 11

43—

பேருந்து வசதி

வினா எண் 82785—திரு. பெ. கமலாம்பாள்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்திற்கு சுற்றுலா வரும் பயணிகள் கோயில்களைச் சுற்றிப் பார்ப்பதற்கு வசதியாகப் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையில் சுற்றுலாப் பேருந்துகளை இயக்குவதில்லை. இதனை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்தான் இயக்க இயலும்.

44—

பேருந்து வசதி

வினா எண் 82826—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியிலிருந்து 6 கி.மீ. தொலைவில் உள்ள கி.பி. 10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மிக பழைமையானதும், சிறப்பு வாய்ந்ததுமான அருள்மிகு ஆணையூர் ஸ்ரீமீனாட்சி சமேத ஐராவதீஸ்வரர் திருக்கோயிலுக்குப் பிரதோஷம் மற்றும் பௌர்ணமி அன்று சிறப்புப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பிரதோஷ நாட்களில் பரீட்சார்த்தமாக மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து செக்கானூரணி, செல்லம்பட்டி, வாலாந்தூர் மற்றும் பொட்டுலுப்பட்டி மற்றும் ஆணையூர் வழியாக கட்டக்கருப்பன்பட்டிக்குச் சிறப்பு இயக்கம் மேற்கொண்டு பின் தேவையிருப்பின் நிரந்தரமாக இயக்க நடவடிக்கை எடுக்கப்படும். உசிலம்பட்டியிலிருந்து மாலை நேரத்தில் இரண்டு நடைகள் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

45—

பேருந்து வசதி

வினா எண் 88009—திரு. கோ. அரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, திருவள்ளூரிலிருந்து ஏகாட்டூர் வழியாக பேரம்பாக்கம் வரை மீண்டும் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருவள்ளூர்-ஏகாட்டூர்-பேரம்பாக்கம் தடத்தின் நீளம் 22.0 கி.மீ. ஆகும். இத்தடத்தில் புறநகர்ப் பேருந்தின்மூலம் தினசரி 4 நடைகள் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இயக்கப்பட்டது. சாலை சரியில்லாததாலும், வருவாய் குறைவின் காரணமாகவும், பொது மக்களிடம் வரவேற்பு இல்லாத காரணத்தினாலும் சிறிது காலத்திற்குப் பிறகு நிறுத்தப்பட்டது. தற்பொழுதும் இத்தடத்தில் திருவள்ளூர் இரயில் நிலையத்திலிருந்து தாவித்கான் பேட்டை வரையிலான 2.5 கி.மீ. சாலையும் ஏகாட்டூரிலிருந்து ஏகாட்டூர் இரயில் நிலையம் வரையிலான 1.0 கி.மீ. சாலை மிகவும் சேதமடைந்துள்ளது. தற்பொழுது உள்ள சாலையின் தன்மையில் பேருந்துகள் இயக்க இயலாது. மேலும், இத்தடத்தில் உள்ள

ஊர்களின் பொதுமக்கள் ஏகாட்டூர் மற்றும் கடம்பத்தூர் இரயில் நிலையங்களிலிருந்து குறுகிய இடைவெளியில் இயக்கப்படும் மின்சார இரயிலில் பயணம் மேற்கொள்கிறார்கள். இத்தடத்தில் சாலை சரி இல்லாததாலும் பேருந்துகள் இயக்கினால் பொதுமக்களிடமிருந்து வரவேற்பு இருக்காது என்பதாலும் நிறுத்தப்பட்ட நடைகளை மீண்டும் இயக்க சாத்தியமில்லை.

46—

உணவகம்

வினா எண் 101093—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் கிளை போக்குவரத்துக் கழகம் பணிமனையில் உணவகம் அமைத்து உணவு மற்றும் தேநீர் குறைந்த விலையில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் கிளையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு தலைமை அலுவலக உணவகத்திலிருந்து உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒரு செட் உணவு தலா ரூபாய் ஒன்று வீதம் வழங்கப்படுகிறது. மேலும், தினமும் முற்பகல் மற்றும் பிற்பகல் நேரங்களில் ஒரு கப் தேநீர் 0.15 பைசா வீதமும் இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் இலவசமாகவும் வழங்கப்படுகிறது. தாரமங்கலம் கிளையில் உணவகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

47—

புதிய பேருந்து

வினா எண் 101353—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடியிலிருந்து எப்போதும் வென்றான், வி.தளவாய்புரம், கண்ணகட்டை வழியாக புங்கவர்நத்தம் கிராமத்திற்குப் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தூத்துக்குடியிலிருந்து எப்போதும்வென்றான், வி.தளவாய்புரம், கண்ணகட்டை வழியாக புங்கவர்நத்தம் வரையுள்ள வழித் தடத்தில் பகுதிப் பகுதியாக கீழ்க்கண்டபடி பேருந்து வசதிகள் உள்ளன:

1.	தூத்துக்குடியிலிருந்து வி.தளவாய்புரம் விலக்கு வழியாக பசுவந்தனை தடப்பகுதி	- 18 சுற்றுகள்
2.	எப்போதும் வென்றானிலிருந்து வி.தளவாய்புரம் வழியாக பசுவந்தனை	- 10 சுற்றுகள்
3.	கோவில்பட்டியிலிருந்து புங்கவர்நத்தம் வழியாக கண்ணகட்டை வரை	- 4 சுற்றுகள்

எனவே, கண்ணகட்டை, புங்கவர்நத்தம் ஆகிய கிராம மக்கள் அருகில் உள்ள முக்கிய நகரமான கோவில்பட்டி செல்ல 4 சுற்றுகளும், வி. தளவாய்புரம் கிராம மக்கள் மிக அருகில் உள்ள பிரதான சாலைக்கு வந்து எப்போதும்வென்றான் / தூத்துக்குடி செல்ல 28 சுற்றுகளும் பேருந்து வசதிகள் தற்போது உள்ளன. இவையே போதுமானதாகக் கருதப்படுகிறது.

[2010 ஜனவரி 11

48—

பேருந்து வசதி

வினா எண் 101354—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், கே. சுப்பிரமணியாபுரம் விலக்கு மற்றும் ஜெகவீரபாண்டியாபுரம் கிராமங்களில் சாதாரண பேருந்துகள், பேருந்து நிறுத்தங்களில் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கோவில்பட்டி-தூத்துக்குடி பிரதான சாலையிலுள்ள கே. சுப்பிரமணியாபுரம் விலக்கு மற்றும் ஜெகவீரபாண்டியாபுரம் ஆகியவற்றிற்கு அத்தடத்தில் இயக்கப்பட்டுவரும் திருநெல்வேலி மண்டலத்தைச் சார்ந்த சாதாரண புறநகர்ப் பேருந்துகளுக்கு, ஏற்கெனவே கட்டண நிலை உள்ளதால் மேற்படி இடங்களில் சாதாரண பேருந்துகள் நின்றுதான் சென்று வருகின்றன. இருப்பினும், பயணச் சீட்டு ஆய்வாளர்கள்மூலம் இதுகுறித்து அவ்வப்போது கண்காணித்து மேற்படி இடங்களில் சாதாரண பேருந்துகள் ஏதும் நின்று செல்லத் தவறினால் ஓட்டுனர் மற்றும் நடத்துனர்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

49—

பேருந்து வசதி

வினா எண் 101355—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியிலிருந்து சந்திரகிரி, முள்ளூர், வீரபாண்டியாபுரம், டி. சுப்பையாபுரம், வள்ளிநாயகபுரம், கமலாபுரம் வழியாக விளாத்திகுளத்திற்கு காலை மற்றும் மாலையில் கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடியிலிருந்து சந்திரகிரி, முள்ளூர், வீரபாண்டியாபுரம், டி. சுப்பையாபுரம், வள்ளிநாயகபுரம், கமலாபுரம் வழியாக விளாத்திகுளத்திற்கு காலை மற்றும் மாலை கூட்ட நெரிசல் நேரங்களில் 4 சுற்றுகள் பேருந்து வசதிகள் உள்ளன. மேலும், மேற்கண்ட வழித்தடத்தில் கீழ்க்கண்டவாறு பகுதிப் பகுதியாகவும் பேருந்து வசதிகள் உள்ளன:

1. தூத்துக்குடி – கொல்லம்பரம்பு .. 6 சுற்றுகள்
2. விளாத்திகுளம் – முள்ளூர் .. 6 சுற்றுகள்

மேலும், தற்போது இயக்கப்பட்டு வரும் மேற்குறிப்பிட்டுள்ள பேருந்துகளிலேயே, பயணிகள் விகிதாச்சாரம் போதியவாறு இல்லை. எனவே, தற்போதுள்ள பயணிகள் அடர்வுக்கு இந்தப் பேருந்து வசதிகளே போதுமானவையாகக் கருதப்படுகிறது.

50—

முன்பதிவு அலுவலகம்

வினா எண் 106681—திரு. செ. பொன்னுதுரை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை நகரில் முன்பதிவு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருந்துறையில் முன்பதிவு அலுவலகம் அமைக்க திட்டம் எதுவும் இல்லை.

51—

கட்டடம்

வினா எண் 46806—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், முள்ளக்காடு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதலாகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் முள்ளக்காடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. முள்ளக்காடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிரசவ வார்டு மற்றும் உள் நோயாளிகள் வார்டு ஆகியவற்றுக்குக் கூடுதல் கட்டடம் கட்ட, தற்போது நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை. எனவே, முள்ளக்காடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் கட்டடம் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

52—

தனிக் கட்டடம்

வினா எண் 47555—திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, கணபதிபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சித்த மருத்துவப் பிரிவுக்கு தனிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கணபதிபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இயங்கும் சித்த மருத்துவப்

2010 ஜனவரி 11]

பிரிவிற்கெனத் தனிக் கட்டடம் கட்ட மைய அரசிடம் நிதியுதவி கோரப்பட்டுள்ளது. நிதியுதவி கிடைக்கப்பெற்றவுடன் தனிக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்கிடையில் நாடாளுமன்ற உறுப்பினர்/சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியுதவி கிடைக்கப்பெற்றாலும் தனிக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

53—

கட்டடம்

வினா எண் 48924—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், முல்லைகொம்பை துணை சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம் நிம்மியம்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்தது முல்லைக்கொம்பை துணை சுகாதார நிலையம். முல்லைக்கொம்பை துணை சுகாதார நிலையத்திற்குப் பொதுப் பணித் துறையினரால் கூடுதல் கட்டடம் (பிரசவ அறை) கட்டப்பட்டு தற்போது செயல்பாட்டில் உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

54—

அடிப்படை வசதிகள்

வினா எண் 51595—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, அங்கல குறிச்சி மகப்பேறு மருத்துவமனையில் அடிப்படை வசதிகள் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியைச் சார்ந்த அங்கலக்குறிச்சி துணை சுகாதார நிலையக் கட்டடம் தற்சமயம் நல்ல நிலையில் உள்ளது. மின்சார வசதியும் நல்ல நிலையில் உள்ளது. நடப்பு நிதியாண்டில் ரூ.22,500/- செலவில், சுற்றுப்புறச் சுவர் கட்டப்பட்டுள்ளது. வால்பாறை தொகுதியைச் சார்ந்த அங்கலக்குறிச்சி மகப்பேறு மருத்துவமனையில் அடிப்படை வசதிகள் அனைத்தும் உள்ளன.

55—

தனிக் கட்டடம்

வினா எண் 57132—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம், சாவடிபாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சித்த மருத்துவப் பிரிவிற்குத் தனிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* காங்கேயம், சாவடிபாளையம், அரசு ஆரம்ப சுகாதார நிலைய சித்த மருத்துவப் பிரிவிற்குத் தனிக் கட்டடம் கட்ட மைய அரசிடம் நிதியுதவி கோரப்பட்டுள்ளது. நிதியுதவி கிடைக்கப்பெற்ற பின், கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

56—

சுற்றுச் சுவர்

வினா எண் 60283—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, அஞ்செட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஊராட்சி ஒன்றியத்தில் அஞ்செட்டி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை. எனவே, கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஊராட்சி ஒன்றியத்தில் அஞ்செட்டி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டுவதற்கான கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

57—

புதிய கட்டடம்

வினா எண் 63078—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், பார்த்திபனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், பார்த்திபனூர் ஆரம்ப சுகாதார நிலையம் அரசுக்

கட்டடத்தில் போதுமான கட்டட வசதிகளுடன் செயல்பட்டு வருவதால் புதிய கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.

58—

தனிக் கட்டடம்

வினா எண் 64137—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் இயங்கி வரும் சித்த மருத்துவப் பிரிவிற்குத் தனிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கொளத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இயங்கிவரும் சித்த மருத்துவப் பிரிவிற்குத் தனிக் கட்டடம் கட்ட மைய அரசிடம் நிதியுதவி கோரப்பட்டுள்ளது. நிதியுதவி கிடைக்கப்பெற்றதும் கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

59—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 86348—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் ஆயுர்வேத, ஹோமியோ மற்றும் மருத்துவக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தற்போது மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரி செயல்பட்டு வருகிறது.

2010 ஜனவரி 11]

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி, மத்திய அரசின் அனுமதி கிடைக்கப்பெற்றதும் துவக்கப்படும். எனவே, அரசு ஆயுர்வேத, ஓமியோபதி புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தற்போது துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

60—

கட்டடம்

வினா எண் 90884—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, நல்லூர் மற்றும் கபிலர்மலை வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருந்தகத்திற்காகக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கபிலர்மலை ஊராட்சி ஒன்றியத்தில் கபிலர்மலை பிரதான ஆரம்ப சுகாதார நிலையமும் பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் நல்லூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகின்றன. கபிலர்மலை மற்றும் நல்லூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்தகத்திற்காகக் கூடுதல் கட்டட வசதி செய்ய நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே, இந்த இரண்டு பிரதான அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருந்தகத்திற்காகக் கூடுதல் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

61—

கட்டடம்

வினா எண் 91989—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கரம்பக்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் செயல்படும் சித்த மருத்துவப் பகுதிக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரம்பக்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் செயல்படும் சித்த மருத்துவப் பிரிவிற்குக் கட்டடம் கட்ட, மத்திய அரசிடம் நிதியுதவி கோரப்பட்டுள்ளது. நிதியுதவி கிடைக்கப்பெற்றதும் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், சட்டமன்ற உறுப்பினர்/நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி கிடைக்கப்பெற்றாலும் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

62—

கட்டடம்

வினா எண் 91992—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, திருவரங்குளத்தில் செயல்படும் சித்த மருத்துவப் பிரிவிற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவரங்குளத்தில் செயல்படும் சித்த மருத்துவப் பிரிவிற்குக் கட்டடம் கட்ட, மத்திய அரசிடம் நிதியுதவி கோரப்பட்டுள்ளது. மேலும், சட்டமன்ற உறுப்பினர் / நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி கிடைக்கப் பெற்றதும் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

63—

சிறுதொழில் பூங்கா

வினா எண் 70340—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியில் சிறுதொழில் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் 43 தொழிற்பேட்டைகளை நிறுவியும் 35 அரசு தொழிற்பேட்டைகளை முகமை அடிப்படையில் நிர்வகித்தும் வருகின்றது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் செய்த அறிவிப்பினையொட்டி தமிழ்நாடு முழுவதும் 22 புதிய தொழிற்பேட்டைகளை நிறுவுவதற்கு சிட்கோ நிறுவனம்மூலம் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

2. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் நிறுவும் தொழிற்பேட்டைகளில் மொத்தப் பரப்பளவில் 30 விழுக்காடு நிலம், குறு தொழில் நிறுவனங்கள் நிறுவுவதற்காக ஒதுக்கலாம் என முடிவு செய்யப்பட்டது.

3. விழுப்புரம் மாவட்டத்தில் ஏற்கெனவே கீழ்க்கண்ட இடங்களில் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன:

வ. எண்	தொழிற் பேட்டையின் பெயர்	தொடங்கப் பட்ட வருடம்	மொத்த மனைகள்		காலியாக உள்ளவை	
			மனைகள்	தொழிற் கூடங்கள்	மனைகள்	தொழிற் கூடங்கள்
1.	ஆசானூர்	2006	155	—	97	—
2.	வெண்மணி ஆத்தூர்	2007	32	—	23	—

[2010 ஜனவரி 11

4. மேல்மலையனூர் தொகுதியில் சிறு தொழில் பூங்கா அமைக்கும் கருத்துரு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், போதுமான நிதி ஆதாரங்களோடும் தொழிற் திட்டங்களுடனும் தொழில் தொடங்க ஆர்வமுள்ள குறைந்தபட்சம் 20-க்கும் குறையாமல் தொழில் முனைவோர்கள் திரும்பப் பெறாத ஒப்புவிப்புத் தொகையுடன் முன்வந்தால், மாவட்ட ஆட்சியர், பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம் ஆகியோருடன் கலந்தாலோசித்து புதிதாக சிறுதொழில் பூங்கா அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

64—

மானியம்

வினா எண் 73428—திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கணினி உபரி பாகங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்களுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசால் 22-2-2008 அன்று வெளியிடப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கை 2008 மற்றும் அரசாணை எண் 14, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (பி) துறை, நாள் 7-5-2008-ன்படி மின் மற்றும் மின்னணுப் பொருட்கள் உற்பத்திக்காக, தமிழ்நாட்டின் எந்தப் பகுதியில் அமைக்கப்படும் நிறுவனங்களுக்கும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம், 2006, விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியான இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களின் மதிப்பில் 15% அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் வரை சிறப்பு முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

2010 ஜனவரி 11]

65—

தீவனப் பயிர்கள்

வினா எண் 101964—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடை வளர்ப்பிற்கு உதவும் தீவனப் பயிர்கள் வளர்க்க விவசாயிகளை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) கால்நடை பராமரிப்பின் கட்டுப்பாட்டில் உள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணைகள்மூலம், தரமான புல்கரணைகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு நேரடியாகவும் / பல்வேறு திட்டங்கள் மூலமாகவும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், IAMWARM திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு சோளம், மக்காச் சோளம், தட்டைப் பயிர் மற்றும் தீவனப்புல் வகைகள் வளர்த்திட தீவன விதைகள் மற்றும் புல்கரணைகள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அதுமட்டுமின்றி தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சுய உதவிக் குழுக்கள் / விவசாயிகளுக்கு தீவனப்புல் வளர்ப்பதற்கு மொத்த சாகுபடி செலவில் 50 சதவீதம் மானியமாக அதாவது ரூ.5,000/- ஏக்கர் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் மாநிலத்தில் உள்ள அனைத்து வட்டாரத்திலும், வட்டாரத்திற்கு 1 ஏக்கர் வீதம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதாலும், மாவட்டக் கால்நடைப் பண்ணைமூலம் பண்ணை உபயோகத்திற்குப் போக, மீதம் உள்ள தீவனப்புல் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், மாவட்டக் கால்நடைப் பண்ணைகள் மூலம் தீவனப் பயிர்/புல் சாகுபடி செய்து, தரமான தீவனப் பயிர் விதைகள் /தீவனப் புல்கரணைகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்திட வேண்டி ரூ.449.88 இலட்சம் செலவில் அபிசேகப்பட்டி, செட்டிநாடு, கொருக்கை, புதுக்கோட்டை, ஒசூர் மற்றும் சின்னசேலம் போன்ற பண்ணைகளின்மூலம் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, கால்நடை வளர்ப்பிற்கு உதவும் தீவனப்பயிர் வளர்க்க விவசாயிகளை ஊக்குவிக்க தனியே திட்டம் ஏதும் தேவையில்லை.

(ஆ) கேள்வி எழாது.

66—

துணை மருந்தகம்

வினா எண் 102474—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, கீழம்பி கிராமத்தில் கால்நடை துணை மருந்தகம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் நான்கு கால்நடை மருந்தகங்களும், ஐந்து கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், கீழம்பி கிராமத்திலுள்ள கால்நடைகளுக்கு நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திப் பிரிவுமூலம் வாரத்தில் இரண்டு நாட்கள் பணிகள் மேற்கொள்ளவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. ஆகையால், கீழம்பி கிராமத்தில் கால்நடை துணை மருந்தகம் அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

67—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 102883—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தெசவிளக்கு ஊராட்சி, லட்சமாயூர் அணைமேடு பகுதியில் பகுதிநேரக் கால்நடை மருத்துவமனையைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு கால்நடை மருந்தகங்களும், மூன்று கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், இணைப்புத் தம்பதியினர்மூலம் லட்சமாயூர் அணைமேடு கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்கு முதலுதவிச் சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகையால் விதிமுறைகளின்படி மேற்படி கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க வாய்ப்பு இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

68—

கிளை மருந்தகங்கள்

வினா எண் 102967—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதி, வெங்கனூர், கண்டிராதித்தம், பொய்யாதநல்லூர், கோக்குடி ஆகிய கிராமங்களில் கால்நடை கிளை மருந்தகங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) அரியலூர் மாவட்டம், அரியலூர் தொகுதி, வெங்கனூர், கண்டிராதித்தம், கோக்குடி ஆகியவை திருமானூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராமங்கள் ஆகும். இங்கு நான்கு கால்நடை மருந்தகங்களும், நான்கு கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், பொய்யாதநல்லூர், அரியலூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராமம் ஆகும். அரியலூர் நகராட்சியில் ஒரு கால்நடை

மருத்துவமனையும், அரியலூர் ஊராட்சி ஒன்றியத்தில் மூன்று கால்நடை மருந்தகங்களும், இரண்டு கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. ஆகவே, வெங்கனூர், கண்டிராதித்தம், பொய்யாதநல்லூர் மற்றும் கோக்குடி ஆகிய கிராமங்களில் கால்நடை கிளை மருந்தகங்கள் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

69—

ஆட்டுப் பண்ணை

வினா எண் 105082—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, வி. வேடப்பட்டி, என். வேடப்பட்டி, வைப்பார், சின்னூர், சூரண்குடியில் ஆட்டுப் பண்ணைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) வி. வேடப்பட்டி, என். வேடப்பட்டி, வைப்பார், சின்னூர் ஆரன்குடி என்ற ஊர்களில் இருந்து தோராயமாக 30 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள சாத்தூர் ஆட்டுப் பண்ணை, அரசால் பராமரிக்கப்படுகிறது. இப்பண்ணையில் வெள்ளாடு இனத்தில் கண்ணி, ஜமுனாபாரி மற்றும் கொடிவல்லி இனங்களும், செம்மறி ஆடு இனத்தில் வேம்பூர் மற்றும் கீழகரிசல் இன ஆடுகளும் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு ஆடு வளர்க்கும் விவசாயிகளுக்கு இன விருத்திக்காக விற்பனை செய்யப்பட்டு வருவதால், தற்பொழுது விளாத்திகுளம் தொகுதி வி. வேடப்பட்டி, என். வேடப்பட்டி, வைப்பார், சின்னூர், சூரண்குடியில் ஆட்டுப் பண்ணை அமைக்கும் திட்டம் தற்பொழுது அரசிடம் இல்லை.

(ஆ) எழாது.

2010 ஜனவரி 11]

70—

தடுப்பூசி முகாம்கள்

வினா எண் 105643—திரு. சபா. இராஜேந்திரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதியில் மாதந்தோறும் கால்நடைகளுக்கான தடுப்பூசி முகாம்கள் நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) கடலூர் மாவட்டம், நெல்லிக்குப்பம் தொகுதியில் ஒரு கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு கடலூரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருதாலும், இந்நிலையத்திலிருந்து ஒவ்வோர் ஆண்டும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, கால்நடை நோய்கள் ஏற்படக்கூடிய கிராமங்கள் மற்றும் மாதங்கள் முன்கூட்டியே ஒவ்வொரு கால்நடை மருந்தகத்திற்கும் தெரிவிக்கப்படுகிறது. இதன்படி, கால்நடை மருந்தகங்களினால் அந்தந்த நோய்களுக்கு எதிரான தடுப்பூசிகள் முன்னமே போடப்பட்டு வருகின்றன. மேலும் மத்திய நிதியுதவியுடன் செயல்படும் அஸ்காட் திட்டத்தின்கீழ் கடலூர் மாவட்டத்தில் 2008-09 ஆம் ஆண்டில் 6.50 இலட்சம் கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் நோய் தடுப்பூசிகளும், 3.24 இலட்சம் கால்நடைகளுக்கு சப்பை நோய் தடுப்பூசிகளும், 1.00 இலட்சம் கால்நடைகளுக்கு அடைப்பான் நோய் தடுப்பூசிகளும் இலவசமாகப் போடப்பட்டுள்ளன. எனவே, கடலூர் மாவட்டத்தில், நெல்லிக்குப்பம் தொகுதியில் மாதந்தோறும் கால்நடைகளுக்கான தடுப்பூசி முகாம்கள் நடத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

(ஆ) கேள்வி எழாது.

[2010 ஜனவரி 11

71—

படகு சவாரி

வினா எண் 104847—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம், ஏற்காடு அடிவாரம் குருவம்பட்டி உயிரியல் பூங்காவில் படகு சவாரி விடும் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

சேலம், ஏற்காடு அடிவாரம் குருவம்பட்டி உயிரியல் பூங்காவில் படகு சவாரி விடும் திட்டம் குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

72—

புத்தகங்கள்

வினா எண் 102129—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுத் துறை சிறப்புத் தேர்வுகளுக்கான உரிய நடைமுறைப் புத்தகங்கள் அனைத்தும் விற்பனைக்குக் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின்கீழ் செயல்பட்டுவரும் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், சென்னை-2, உயர் நீதிமன்ற வளாகம், சென்னை-104, ஆகிய இரண்டு இடங்களில் அரசுத் துறை சிறப்புத் தேர்வுகளுக்கான நடைமுறைப் புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள், தமது துறை தொடர்பான

2010 ஜனவரி 11]

சிறப்புத் தேர்வுகளுக்குத் தேவையான புத்தகங்களை அச்சிட்டு / மறு அச்சிட்டு விற்பனை செய்யுமாறு கேட்டுக்கொள்ளும்பொழுது அவ்வினங்களில் தேவையின் அடிப்படையில் விற்பனை மேற்கொள்ளப்படும்.

73—

வீடு

வினா எண் 3181—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைகாரன்புதூர் சேத்துமடையில் வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) தற்போது பெரு நகரங்கள் தவிர பிற நகரங்களில் உள்ள குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்க நிதி ஆதாரம் ஏதும் இல்லை. எனவே, அந்நகரங்களில் உள்ள குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்க மைய அரசின் 13-வது நிதிக் குழுவிடம் நிதி ஆதாரம் கோரப்பட்டுள்ளது. இந்நிதி ஆதாரம் கிடைக்கப் பெற்றபின் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மைய அரசின் 13-வது நிதிக் குழுவின் பரிந்துரை 2010 ஆம் ஆண்டுக்குபின் பெறப்பட்டு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) வினா எழவில்லை.

74—

ஜெனரேட்டர் வசதி

வினா எண் 87472—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்படுத்தப்பட்டோர் மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகளுக்கு ஜெனரேட்டர் வசதி செய்து தரவும், செய்தித்தாள்கள் வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கென இயங்கி வரும் 1,206 விடுதிகளில் 127 கல்லூரி விடுதிகள் மற்றும் 7 பள்ளி விடுதிகளில் 'இன்வெர்டர்கள்' பொருத்தப்பட்டுள்ளன. மாணவர்களின் பொது அறிவுத் திறனை மேம்படுத்த ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழ்கள் ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகின்றன.

75—

மருத்துவக் காப்பீட்டு வசதி

வினா எண் 29636—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு விபத்துகளுக்கு மருத்துவக் காப்பீட்டு வசதி, பணி ஓய்விற்கான வயது நிர்ணயம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்தில் சுமை தூக்கும் அமைப்புசாரா தொழிலாளர்கள் சேர்ந்து பயன் பெற்று வருகின்றனர். ஆனால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு விபத்துகளுக்கு மருத்துவக் காப்பீட்டு வசதி, பணி ஓய்விற்கான வயது நிர்ணயம்

செய்வது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக வரம்பிற்குட்பட்டது.

(ஆ) எழாது.

76—

கூடுதல் வசதி

வினா எண் 83209—திருமதி இளமதி சுப்பிரமணியன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வலங்கைமான் தொகுதி, அம்மாப்பேட்டை ஒன்றியம், சாலியமங்களம் அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாக நீள் இருக்கைகள், நாற்காலிகள், மேசைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வலங்கைமான் தொகுதி, அம்மாப்பேட்டை ஒன்றியம், சாலியமங்களம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கி நிதி உதவி வழங்கும் திட்டம் பகுதி 1 முதல் 7 வரையுள்ள கட்டம் XII-ன்கீழ் கட்டப்பட்டுள்ள கூடுதல் 8 வகுப்பறைகளுக்கு 96 டெஸ்க், பெஞ்சுகள் மற்றும் ஆசிரியர்கட்கு 8 மேசை, நாற்காலிகளும் மொத்தம் ரூ.3,48,816/-க்கு டான்சி நிறுவனம்மூலம் வழங்கப்பட்டு மேற்கண்ட பள்ளி மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

77—

இருக்கை வசதி

வினா எண் 90538—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2010 ஜனவரி 11

ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி அரசு மகளிர் மற்றும் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு இருக்கை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கி நிதி உதவி வழங்கும் திட்டம் பகுதி *1* முதல் *7* வரையுள்ள கட்டம் XII-ன்கீழ் *14* கூடுதல் வகுப்பறைகளுக்கு *168* டெஸ்க், பெஞ்சுகள் மற்றும் ஆசிரியர்கட்கு *14* மேசை, நாற்காலிகள் மொத்தம் ரூ.*6,10,428*/- செலவிலும் மற்றும் கறம்பக்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு *21* கூடுதல் வகுப்பறைகளுக்கு *252* டெஸ்க், பெஞ்சுகள் மற்றும் ஆசிரியர்கட்கு *21* மேசை மற்றும் நாற்காலிகள் மொத்தம் ரூ.*9,15,642*/- செலவில் டான்சி நிறுவனம்மூலம் வழங்கப்பட்டு மேற்கண்ட பள்ளிகளின் மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

78—

சிறிய பாலம்

வினா எண் 59731—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறையில் வில்லோனி, நெடுங்குன்று செட்டில்மெண்ட் காடர் ஆதிவாசிகள் குடியிருப்புப் பகுதிகளில் சிறிய பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, வால்பாறையில் வில்லோனி, நெடுங்குன்று செட்டில்மெண்ட் காடர் ஆதிவாசிகள்

2010 ஜனவரி 11]

குடியிருப்புகள் அதாவது நெடுங்குன்று செட்டில்மெண்ட் மட்டும் வால்பாறை வனச் சரகப் பகுதியில் உள்ளது. ஆனால் செட்டில்மெண்டுக்குச் செல்லும் சாலை டாடா காபி நிறுவனத்தின் வசம், தனியார் வசம் உள்ளது. எனவே, வனத் துறையின் பொறுப்பில் உள்ள வனப் பகுதியில் மட்டுமே வனத் துறையால் பாலம் கட்ட நடவடிக்கை எடுக்க இயலும். தனியார் வசம் உள்ள சாலையில் வனத் துறையால் பாலம் கட்ட இயலாது.

செட்டில்மெண்டுக்குச் செல்லும் சாலை தனியார் வசம் உள்ளதால் தனியார் சாலையில் பாலம் கட்ட வனத் துறைக்கு அதிகாரம் இல்லை.

79—

சாலை அமைத்தல்

வினா எண் 70249—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதி, ஜவ்வாதுமலை ஒன்றியத்தில் மலைவாழ் மக்கள் வாழும் பகுதிகளுக்குச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டத்திற்குட்பட்ட திருவண்ணாமலை வனக் கோட்டத்தில் உள்ள ஜவ்வாது மலையில் நான்கு முக்கிய இணைப்புச் சாலைகள் உள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

வ.எண்	சாலையின் பெயர்	தூரம் கி. மீட்டரில்
1.	ஆலங்காயம் முதல் ஜமுனாமரத்தூர்	*24*
2.	அமிர்தி முதல் ஜமுனாமரத்தூர்	*37*
3.	போளூர் முதல் ஜமுனாமரத்தூர்	*37*
4.	செங்கம் (பரமனந்தல்) முதல் ஜமுனாமரத்தூர்	*42*
	மொத்தம்	*140* கி.மீ.

இந்த நான்கு சாலைகளிலிருந்தும் மலைவாழ் மக்கள் வாழும் கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் மற்றும் வழிப்பாதைகள் உள்ளன. இச்சாலைகள் முறையே ஊரக வளர்ச்சித் துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் திருச்சி வனப் பொறியியல் கோட்டம் மூலம் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜமுனாமரத்தூர் முதல் அமர்தி வரையிலான சாலையில் மொத்தம் உள்ள 37 கி.மீ. தூரத்தில் 6 கி.மீ. தூரத்திற்கு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மீதமுள்ள 31 கி.மீ. தூரத்திற்கு முதன்மை தலைமை வனப் பாதுகாவலரால் ஊரக வளர்ச்சித் துறைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, அனுமதி கேட்டு கருத்துருக்கள் ஏதும் ஊரக வளர்ச்சித் துறையிடமிருந்தோ நெடுஞ்சாலைத் துறையிடமிருந்தோ இதுவரை வரப்பெறவில்லை. மேற்படி துறைகளிடமிருந்து உரிய கருத்துருக்கள் கிடைக்கப்பெறின் உரிய அனுமதி வழங்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

80—

தார்ச் சாலை

வினா எண் 92844—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஏற்காடு கருங்காலி பகுதியில் வனத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள வனச் சரகச் சாலையை தார்ச் சாலையாக மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் வனக் கோட்டம், சேர்வராயன் தெற்கு சரகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள குரும்பப்பட்டி காப்புக் காட்டில் கருங்காலி கிராமம் அமைந்துள்ளது.

கருங்காலி கிராமத்திற்குச் செல்லும் வனச் சாலையின் நீளம் 2.25 கி.மீ., அகலம் 9 அடி ஆகும் (2.743 மீ.) இச்சாலை காப்புக் காட்டு அறிவிக்கையில் வழித் தட உரிமை அனுமதிக்கப்பட்ட பகுதியாகும். இச்சாலை மண்சாலையாக மாற்றியமைக்கப்பட வேண்டுமானால் கூடுதல் வன நிலம் தேவைப்படும். எனவே,

2010 ஜனவரி 11]

இதற்கு வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன் விதிமுறையின்படி மைய அரசின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.

பயனீட்டாளரிடமிருந்து வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன் விதிமுறைக்குட்பட்டு உரிய கருத்துரு கிடைக்கப்பெறின், இதுகுறித்து மைய அரசின் முன்அனுமதி பெற, தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும். மைய அரசின் அனுமதி பெற்ற பிறகு சாலையினை சம்பந்தப்பட்ட துறையினர் அகலப்படுத்தி தார்ச்சாலையாக மாற்றிக் கொள்ளலாம்.

81—

சாலை வசதி

வினா எண் 92845—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சித்தூர் செல்லும் சன்னப்பாதையிலிருந்து வளைய செட்டியூர், வன்னிய நகர், கூப்புக்காடு வழியாக மதுரகாளியம்மன் கோயில் வரை வனத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 3 கி.மீ. சாலையைச் செப்பனிட்டு பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், மேட்டூர் வட்டம், சித்தூர் செல்லும் சன்னப்பாதையிலிருந்து வளைய செட்டியூர், வன்னிய நகர், கூப்புக்காடு வழியாக மதுரகாளியம்மன் கோயிலுக்குச் செல்லும் சாலையின் மொத்த நீளம் 3 கி.மீ. ஆகும். இதில் கல்வரைக்காடு காப்பு நிலத்தில் சாலையின் நீளம் 275 மீட்டர் ஆகும். இச்சாலை தற்போது மண்பாதையாக உள்ளது. இது ஒரு சிலரால் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது. இச்சாலையைச் செப்பனிட்டு பாதை அமைக்க வேண்டுமானால், கூடுதல் வன நிலம் தேவைப்படும். எனவே, இதற்கு வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன் விதிமுறைப்படி மைய அரசின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.

பயனீட்டாளரிடமிருந்து வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன் விதிமுறைக்குட்பட்டு உரிய கருத்துரு கிடைக்கப்பெறின், மைய அரசின் அனுமதி பெற, தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த அனுமதி பெற்ற பிறகு வனத் துறைக்குச் சொந்தமான காப்புக் காட்டினூடே செல்லும் சாலைப் பகுதியைச் செப்பனிட சம்பந்தப்பட்ட துறையினர் அனுமதிக்கப்படுவார்கள்.

82—

தேக்கு மரக் கன்றுகள்

வினா எண் 97015—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, காவிரிப் படுகையில் தேக்கு மரக் கன்றுகள் நடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகை மாவட்டம், பூம்புகார் தொகுதியில் வனத் துறைமூலம் ஆறு மற்றும் பாசனக் கால்வாய்களில் கீழ்க்கண்டவாறு தேக்கு மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன:—

காவிரி ஆறு	25 கி.மீ.
மகிமலையாறு	25 கி.மீ.
அய்யாவையனாறு	10 கி.மீ.
இராஜேந்திரன் வாய்க்கால்	15 கி.மீ.

2008-09 முதல் ஆறு வருடங்களுக்கு ரூ.35.31 கோடி செலவில் 20,700 ஏக்கர் பரப்பளவில் படுகை நிலங்களில் தேக்கு மரக் கன்றுகள் நடுவதற்கு அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2010 ஜனவரி 11]

அதன்படி, 2008-09 ஆம் ஆண்டில் காவிரி ஆற்றுப் படுகைகளில் தேக்கு மரக் கன்றுகள் 6,186 எக்டேர் பரப்பளவில் நடப்பட்டுள்ளன. 2009-10 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரும்.

83—

சிறுத்தைகள்

வினா எண் 103754—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரியிலிருந்து ராயக்கோட்டை வரையுள்ள வனப் பகுதியில் சிறுத்தைகளைப் பிடிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரியிலிருந்து ராயக்கோட்டை வரையுள்ள வனப் பகுதியில் சிறுத்தைகள் வாழ்ந்து வருகின்றன. இதனால் பொது மக்களுடைய உயிருக்கோ அல்லது அவர்களுடைய கால்நடைகளுக்கோ ஆபத்து ஏதுமில்லை. மேற்கண்ட வனப் பகுதியில் இயற்கைச் சூழலில் வாழும் சிறுத்தைகளைப் பிடித்துப் பாதுகாப்பது என்பது சாத்தியமானதல்ல. இருப்பினும், சிறுத்தையால் பொது மக்களுக்கு ஏதும் தீங்கு ஏற்படாமல் பாதுகாக்க, வனச் சிப்பந்திகள் அறிவுறுத்தப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

84—

சத்துணவுக் கூடம்

வினா எண் 61096—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, பச்சினம்பட்டி ஊராட்சி, மோட்டூர் பகுதியில் உள்ள தொடக்கப் பள்ளிக்குச் சத்துணவுக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பச்சினம்பட்டி ஊராட்சி, மோட்டூர் பகுதியில் தொடக்கப் பள்ளியில் 51 மாணவர்களும், 49 மாணவிகளும் சத்துணவு சாப்பிட்டு வருகிறார்கள். இப்பள்ளியில் புதியதாக சத்துணவுக் கூடம் கட்டப்பட வேண்டியுள்ளது. தேசிய திட்டம்-மதிய உணவுத் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்திலுள்ள 50 பள்ளிகளில் (தலா ரூ.60,000/- மதிப்பீட்டில்) சமையலறைகளுடன்கூடிய இருப்பறைகள் கட்டுவதற்காக ரூ.30,00,000/- ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி நிதியிலிருந்து மோட்டூர் பகுதியிலுள்ள தொடக்கப் பள்ளியில் சத்துணவுக் கூடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

85—

சத்துணவுக் கூடம்

வினா எண் 63062—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, நடுக்குப்பம் காலனியில் சத்துணவுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடுக்குப்பம் ஊராட்சியில் காலனி இல்லை. நடுக்குப்பம் ஊராட்சியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி மற்றும் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிகளுக்கு சத்துணவு சமையல் கூடம் அமைக்கப்பட்டு அனைத்து மாணவர்களுக்கும் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

86—

சத்துணவுக் கூடம்

வினா எண் 65218—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறை உருளிக்கல் செக்போஸ்ட் ஊராட்சி துவக்கப் பள்ளியில் சத்துணவுக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறை உருளிக்கல் செக்போஸ்ட் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளியில் சத்துணவுக் கூடம் நல்ல முறையில் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது.

87—

சிறப்புப் பள்ளி

வினா எண் 99074—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில், கண் பார்வையற்றோர்களுக்கான சிறப்புப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

பார்வையற்றோருக்கான அரசுப் பள்ளி தருமபுரியில் செயல்பட்டு வருகிறது. மேலும் பர்கூர், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளி சிறுபான்மையினரால் IELC என்ற அமைப்பின்மூலம் நடத்தப்பட்டு வருகிறது.

எனவே, ஓமலூர் தொகுதிக்குட்பட்ட விழியிழந்த ஊனமுற்ற நபர்கள், அருகில் உள்ள தருமபுரி பார்வையற்றோருக்கான அரசுப் பள்ளியிலோ அல்லது பர்கூர், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள IELC பார்வையற்றோர் பள்ளியிலோ சேர்ந்து பயன் பெறலாம்.

மேற்கூறிய காரணத்தினால் ஓமலூர் தொகுதியில் கண் பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளி துவக்கும் எண்ணம் தற்போது அரசிடம் இல்லை. எனினும், பதிவு செய்யப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், விழியிழந்தோர் பள்ளி நடத்த முன்வந்தால் அரசு விதிகளின்படி அங்கீகாரம் வழங்கப்படுவதோடு இதர அரசு உதவிகளும் விதிகளுக்குட்பட்டு வழங்கப்படும்.

88—

குழு அமைத்தல்

வினா எண் 56175—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம் பகுதியில் கடல் வளம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பைப் பராமரிக்க ஒரு குழு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

இராமேஸ்வரம் பகுதியில் கடல் வளம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பைப் பராமரிக்க மன்னார் வளைகுடா உயிர்கோள் காப்பகம்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, இராமேஸ்வரம் பகுதியில் கடல் வளம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றைப் பாதுகாக்க தனியாக வேறு ஒரு குழு அமைக்க தேவை எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

89—

மீன் அங்காடி

வினா எண் 62269—திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி, அணைக்கரையில் மீன் அங்காடி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அணைக்கரை ஒரு சிறிய ஊர். இந்த ஊரில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்மூலம் மீன் அங்காடி அமைத்தாலும், இந்த அங்காடிக்கான மீன் 200 கி.மீ. தொலைவிலுள்ள சாத்தனூர் அணையிலிருந்துதான் அனுப்பப்பட வேண்டும். எனவே, அணைக்கரையில் மீன் அங்காடி அமைத்தால் இலாபகரமாகச் செயல்பட வாய்ப்பில்லாததால், வர்த்தக நோக்கில் செயல்படும் ஓர் அரசு நிறுவனமான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்மூலம், அணைக்கரையில் மீன் அங்காடி கட்ட வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

90—

உயர் ரக மீன்கள்

வினா எண் 70397—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியில் பொதுப் பணித் துறை ஏரிகளில் உயர் ரக மீன்களை வளர்க்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் பகுதியிலுள்ள பொதுப் பணித் துறை ஏரிகள் மற்றும் நீர்நிலைகளில் மீன் துறைமூலம் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்படுவதில்லை. இந்நீர்நிலைகளின் மீன்பாசி உரிமைக்கான குத்தகை விடும் பணி பொதுப் பணித் துறை மற்றும் வருவாய்த் துறை ஆகியவற்றின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீன்பாசி குத்தகை எடுக்கும் குத்தகைதாரர் அந்நீர்நிலைகளில் உயர் ரக கெண்டை இன மீன் குஞ்சுகளை இருப்பு செய்து மீன் வளர்ப்புப் பணி மேற்கொள்கின்றனர். மீன் வளர்ப்பில் மிகுந்த ஆர்வம் உள்ளவர்களுக்கு மீன் துறைமூலம் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் அளிக்கப்படுகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

91—

மீன் பண்ணை

வினா எண் 72256—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியில் மீன் பண்ணை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் பகுதியில் போதிய நீர் ஆதாரம் இல்லாததால் மீன் பண்ணை அமைக்க வாய்ப்பு இல்லை. நீர்வள நிலவள திட்டத்தின்கீழ் வராக நதி வடிநிலப் பகுதியில் பாணாம்பட்டு மற்றும் வீடுர் அணை ஆகிய இரண்டு இடங்களில் ஏற்கெனவே விதைமீன் வங்கி அமைக்கப்பட்டுள்ளது. எனவே, மேல்மலையனூர் பகுதியில் மீன் பண்ணை அமைக்க வாய்ப்பு இல்லை.

92—

ஆராய்ச்சி நிறுவனம்

வினா எண் 75752—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தொப்பையாறு அணைப் பகுதியில் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிறுவனம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொப்பையாறு அணைப் பகுதியில் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிறுவனம் அமைப்பது குறித்து திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2010 ஜனவரி 11]

93—

மீன் அங்காடி

வினா எண் 75856—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், திருபுவனத்தில் மீன் மார்க்கெட் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக திட்டச் செயல்பாடுகள் ஏதும் தற்போது இல்லாத சூழ்நிலையாலும், தனியாக திருபுவனத்தில் மீன் மார்க்கெட் அமைத்து, அதற்கு விநியோகம் மற்றும் பராமரிப்பு செய்து திட்டத்தை இலாபகரமாகச் செயல்படுத்திட வாய்ப்புகள் குறைவாக உள்ளதாலும், திருபுவனத்தில், மீன் மார்க்கெட் அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

94—

கடல்வாழ் உயிரினங்கள்

வினா எண் 92851—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தடை செய்யப்பட்ட கடல்வாழ் உயிரினங்களைப் பிடிப்போர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர் :

வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம், 1972 (Wild Life Protection Act, 1972)-ன்படி, தடை செய்யப்பட்ட கடல்வாழ் உயிரினங்களைப் பிடிப்போர்மீது வனத் துறை / மன்னார் வளைகுடா உயர் கோளகக் காட்டி நிறுவனம்மூலம் தற்போது கடுமையான நடவடிக்கை

எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், தடை செய்யப்பட்ட மீனினங்களைப் பிடிக்கக் கூடாது என்று தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறைச் சட்டம் 1983-ன்படி வலியுறுத்தப்பட்டுள்ளது.

95—

கடல்வாழ் உயிரினங்கள்

வினா எண் 98484—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடல் பசு, கடல் அட்டை போன்ற அரிய வகை உயிரினங்களைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடல் பசு, கடல் அட்டை போன்ற அரிய வகை உயிரினங்களைப் பாதுகாக்க ஏற்கெனவே அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு தமிழ்நாடு வனத் துறையால், வன உயிரினக் காப்பாளரின் தலைமையின்கீழ், மன்னார் வளைகுடா கடல்வாழ் உயிரின தேசிய காப்பகம் ஒன்றை, இராமநாதபுரத்தில் ஏற்படுத்தி 52 வகையான அரிய வகை கடல் உயிரினங்களை 1972 ஆம் ஆண்டு இந்திய வன விலங்கு பாதுகாப்புச் சட்டப்படி பாதுகாத்து வருகிறது.

96—

பவளப் பாறைகள்

வினா எண் 98485—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார் வளைகுடா பகுதியில் செயற்கைப் பவளப் பாறைகள் உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார் வளைகுடாப் பகுதியில், தூத்துக்குடி மாவட்டத்தில், இதுவரையில், கோப்புத்துறை, வெள்ளப்பட்டி மற்றும் வேம்பார் ஆகிய இடங்களிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் வில்லுவண்டி மற்றும் திருப்பாலைக்குடி ஆகிய இடங்களிலும், செயற்கை மீன் உறைவிடங்கள் (பவளப் பாறைகள்) ஏற்கெனவே அமைக்கப்பட்டுவிட்டன. 2007-2008 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.10.00 இலட்சம் செலவில் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஆரோக்கியபுரம் கடற்பகுதியில், மேலும் ஒரு பவளப் பாறை மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி மையம் மூலம் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

97—

கட்டடம்

வினா எண் 100648—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், புதுவிராலிப்பட்டியிலுள்ள பால் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்த கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், புதுவிராலிப்பட்டியிலுள்ள பால் கூட்டுறவுச் சங்கம் 17-8-1989 முதல் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தில் நாளொன்றுக்கு சுமார் 1,000 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு, 980 லிட்டர் பால் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. இச்சங்கத்திற்குச் சொந்தமான காலிமனை ஏதுமில்லாததாலும் போதுமான நிதி ஆதாரம் இல்லாததாலும், புதிய கட்டடம் கட்டுவதற்கு வாய்ப்பில்லை.

[2010 ஜனவரி 11

98—

கட்டடம்

வினா எண் 101366—திரு. செ. பொன்னுதுரை: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதி, நசியனூர் பேரூராட்சி, என். தயிர்பாளையத்தில் உள்ள பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதியதாகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருந்துறை தொகுதி, நசியனூர் பேரூராட்சி, என். தயிர்பாளையத்திலுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் மொத்தம் 336 உறுப்பினர்கள் உள்ளனர். தற்போது, 50 உறுப்பினர்கள்மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 150 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதில் 20 லிட்டர் பால் உள்ளூரில் விற்பனை செய்தது போக, மீதமுள்ள 130 லிட்டர் பால் மட்டுமே மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுப்பப்படுகிறது.

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமாக 948 சதுர அடி காலிமனை உள்ளது. ஆனால், சங்கத்தில் போதுமான நிதி வசதி இல்லாததால், கட்டடம் கட்டுவதற்கு தற்போது வாய்ப்பில்லை. இருப்பினும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில், புதியதாகக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

99—

தொழிற்சாலை

வினா எண் 72442—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

மேல்மலையனூர் தொகுதியில் கதர் கிராமப் பொருள்கள் தயார் செய்யும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் தமிழக தலைநகரம், பெரிய நகரங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களில் கதர், கிராமத் தொழில் அலகுகள் மற்றும் விற்பனை நிலையங்கள் பல செயல்பட்டு வருகின்றன. தற்போது, மேல்மலையனூர் தொகுதியில், புதிதாக கதர் கிராமத் தொழிற்சாலைப் பொருட்கள் தயார் செய்யும் தொழிற்சாலை நிறுவிட வாய்ப்பில்லை.

100—

விற்பனை நிலையம்

வினா எண் 100487—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் கதர் நூல் தயாரிக்கவும், விற்பனை நிலையம் அமைக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) ஏழை எளிய மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டு, சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கண்டனூரில் கதர் நூல் தயாரிக்கும் நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. எனவே, மானாமதுரையில் கதர் நூல் தயாரிக்கவும், விற்பனை நிலையம் அமைக்கவும் தற்சமயம் உத்தேசமில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பட்டியல் 7

1—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 6971—திரு. வை. காவேரி: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி, சின்னதாண்டனூர், தானப்பன் வளவு, பூசாரி வளவு, பறையன்காடு பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி, குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி ஊராட்சி, சின்னதாண்டனூர் குடியிருப்பில் ஏற்கெனவே 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளதால், புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை. மேலும், தானப்பன் வளவு, பூசாரி வளவு, பறையன்காடு பகுதிகளை உள்ளடக்கிய பூசாரி வளவு, பாட்டப்பன் வளவு குடியிருப்புகளுக்கு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் 2007-2008 ஆம் நிதியாண்டில் செயல்படுத்தப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

2—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 49256—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூர் தொகுதி, நங்கவள்ளி ஒன்றியம், கோனூர் ஊராட்சி, அரியான் தெரு, மணக்காடு (மோட்டூர்), பொறையூர், கள்ளிக்காடு கூறையூர் வேடமாரியம்மன் கோவில் தெரு மற்றும்

மலையன்காடு ஆகிய கிராமங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் தொகுதி, நங்கவள்ளி ஒன்றியம், கோனூர் ஊராட்சி, அரியான் தெரு என்ற ஆணையன் தெரு குடியிருப்பிற்கு, சந்தைதானம்பட்டி குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்புமூலமும், மணக்காடு (மோட்டூர்) மற்றும் பொறையூர் கள்ளிக்காடு என்ற பொறையூர் K.V. குடியிருப்புகளில் தனித் தனியாகக் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டிகளிலிருந்தும், கூறையூர் வேடமாரியம்மன் கோவில் பகுதிக்குக் கூறையூர் குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியிலிருந்தும், மலையன்காடு குடியிருப்புக்குக் கோனூர் குடியிருப்பில் உள்ள 60,000 லிட்டர் மேல்நிலை தொட்டியிலிருந்தும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதிகளுக்குத் தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை.

3—

காற்றாலை மின்சாரம்

வினா எண் 72619—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் செயல்படும் காற்றாலைமூலம் அதிகளவு மின்சாரம் தயாரிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் செயல்படும் காற்றாலைமூலம் அதிகளவு மின்சாரம் தயாரிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 ஜனவரி 11

4—

துணை மின் நிலையம்

வினா எண் 90829—திரு. செ.ம. வேலுசாமி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, சிந்தாமணிபுதூர், செல்லப்பம்பாளையம் ஆகிய பகுதிகளில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிந்தாமணிபுதூர் பகுதிக்குப் பெருகிவரும் மின் பளுவை கருத்திற்கொண்டு, இப்பகுதியில் ஒரு 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. செல்லப்பம்பாளையம் பகுதிக்குத் தரமான மின்சாரம் விநியோகம் செய்யும்பொருட்டு ஒரு 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

5—

மின்சார உற்பத்தி

வினா எண் 102638—திரு. தி.க. ராஜா :—மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் சர்க்கரை ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுகளிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஆம். திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் சர்க்கரை ஆலையில் கரும்புச் சக்கையின்மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக 7 மெகாவாட் திறன் கொண்ட இணை மின் நிலையம் அமைக்க அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

6—

மின்சார உற்பத்தி

வினா எண் 103171—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள பெரும் சந்தைகளில் வீணாகும் காய்கறிக் கழிவுகள்மூலம் மின்சாரம் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னையில், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் கோயம்பேடு மொத்த விற்பனை வளாகத்தில் காய்கறிக் கழிவுகள்மூலமாக 0.25 மெகாவாட் திறன் கொண்ட (தாவர சக்தி) மின் உற்பத்தி நிலையம் செயற்பாட்டில் உள்ளது.

மற்ற பகுதிகளில் உள்ள சந்தைகளில் காய்கறிக் கழிவுகள்மூலமாக மின்சாரம் தயாரிக்கும் திட்டம் சம்பந்தமாக தனியார் எவரிடமிருந்தும் விண்ணப்பம் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் பெறப்படவில்லை. அவ்வாறு விண்ணப்பம் பெறப்படும்பட்சத்தில் வாரிய விதிமுறைகளின்படி பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

[2010 ஜனவரி 11

7—

நியாய விலைக் கடை

வினா எண் 28735—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், கிளாப்பாக்கம் ஊராட்சியில் நியாய விலைக் கடை கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருக்கழுக்குன்றம் வட்டம், ஜமீன் பாண்டூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் கிளாப்பாக்கம் கூட்டுறவு நியாய விலைக் கடை கட்டடத்திற்கு மின் இணைப்பு பெறப்பட்டு, 6-1-2009 முதல் புதிய கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

8—

புதிய கட்டடம்

வினா எண் 43154—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, குருக்குப்பட்டி ஊராட்சி, குருக்குப்பட்டி, க. சுவரெட்டிப்பட்டி, தெத்திகிரிப்பட்டி ஊராட்சி கச்சராயனூர், வெள்ளார் ஊராட்சி, எருமைப்பட்டி, பள்ளிப்பட்டி ஊராட்சி, காமநாயக்கன்பட்டி, மானத்தாள் ஊராட்சி, கங்காணிப்பட்டி-II, கரட்டூர், தாண்டவனூர், கூடக்கல்லானூர், ஆரூர்பட்டி ஊராட்சி, குருக்குப்பட்டியான்வளவு ஆகிய பகுதிகளிலுள்ள நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, குருக்குப்பட்டி ஊராட்சி, குருக்குப்பட்டி, மானத்தாள் ஊராட்சி, கங்காணிப்பட்டி-II, கரட்டூர், தெத்திகிரிப்பட்டி ஊராட்சி, கச்சராயனூர் நியாய விலைக் கடைகள் ஏற்கெனவே அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், அந்நியாய விலைக் கடைகளுக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை. குருக்குப்பட்டி ஊராட்சி, க. சுவரெட்டிப்பட்டி, ஆரூர்பட்டி ஊராட்சி, குருக்குப்பட்டியான்வளவு நியாய விலைக் கடைகளுக்கு அரசு திட்டத்தின்கீழ் கட்டடம் கட்ட, சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு 3-11-2008-ல் உரிய முன்மொழிவு அனுப்பப்பட்டு, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வெள்ளார் ஊராட்சி, எருமைப்பட்டி, பள்ளிப்பட்டி ஊராட்சி, காமநாயக்கன்பட்டி நியாய விலைக் கடைகளுக்குப் புறம்போக்கு நிலம் கண்டறியப்பட்டு ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மானத்தாள் ஊராட்சி தாண்டவனூர் மற்றும் கூடக்கல்லானூர் ஆகிய இடங்களில் நியாய விலைக் கடைகள் ஏதும் செயல்படவில்லையாதலால் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

9—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 58763—திரு. கு. செல்வம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மங்களூர் தொகுதி, திட்டக்குடி வட்டம், இராமநத்தம் காலனியில் பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், தொழுதூர், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டுவரும் இராமநத்தம் நியாய விலைக் கடையிலிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்து இராமநத்தம் காலனிப் பகுதியில் புதிய பகுதிநேரக் கடை 1-4-2009 முதல் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

10—

நியாய விலைக் கடை

வினா எண் 66501—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, முனிவாந்தாங்கலில் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி முனிவாந்தாங்கலில் ஏற்கெனவே ஒரு முழுநேர நியாய விலைக் கடை 218 குடும்ப அட்டைகளைக்கொண்டு 15 வருடங்களாகச் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் முனிவாந்தாங்கல் பகுதியில் மீண்டும் ஒரு நியாய விலைக் கடை அமைப்பதற்கான அவசியம் எழவில்லை.

11—

கூட்டுறவு வங்கிக் கிளை

வினா எண் 67244—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

(அ) செங்கற்பட்டு தொகுதியில் உள்ள பெரும்பேடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கிளையினை குன்னவாக்கத்தில் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு தொகுதியில் உள்ள பெரும்பேடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கமானது 2005-06, 2006-07 மற்றும் 2007-08 ஆண்டுகளில் முறையே ரூ.13.39 இலட்சம் ரூ.9.91 இலட்சம் மற்றும் ரூ.6.55 இலட்சம் குவிந்த நட்டத்தில் செயல்பட்டு வந்தது. இவ்வங்கியில் விவகார எல்லையில் 7 கிராமங்கள் உள்ளன. அதன் ஒட்டுமொத்த நிலப் பரப்பு 6,662 ஏக்கர் ஆகும். வங்கியின் விவகார எல்லையில் உள்ள 6,662 ஏக்கர் நிலப் பரப்பில் குன்னவாக்கம் கிராமத்தில் மட்டும் 876 ஏக்கர் நிலப் பரப்பு உள்ளது. மொத்த மக்கள் தொகையில் 17 சதவீதம் மட்டுமே குன்னவாக்கம் கிராமத்தில் வசிக்கின்றனர். இதுவரை குன்னவாக்கம் கிராமத்தில் 3 உறுப்பினர்கள் மட்டுமே குறுகிய காலக் கடனாக ரூ.1.16 இலட்சமும், 4 உறுப்பினர்கள் மட்டுமே நகைக் கடனாக ரூ.0.27 ஆயிரமும் கடன் பெற்றுள்ளனர். மேலும், இவ்வங்கியில் ஒரு செயலாளர், இரண்டு உதவியாளர்கள் மட்டுமே வேலை செய்து வருகின்றனர். இந்நிலையில் குன்னவாக்கம் கிராமத்தில் கிளை திறப்பதன் மூலம் புதிய பணியாளர்களை நியமிக்க வேண்டிய சூழ்நிலையுள்ளது. குன்னவாக்கம் கிராமத்திலுள்ள பயிர் செய்யப்படும் நிலங்களின் அடிப்படையிலும், மக்கள் தொகையின் அடிப்படையிலும் பார்க்கும்போது பெரும்பேடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கிளையை குன்னவாக்கத்தில் திறப்பதனால் சங்கத்திற்குக் கிடைக்கப்பெறும் வருமானத்தைவிட கிளை நடத்தப்படுவதற்கு ஆகும் செலவினம் மிகவும் கூடுதலாக உள்ளதால், மேற்படி வங்கியின் கிளையினை குன்னவாக்கம் கிராமத்தில் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[2010 ஜனவரி 11

பெரும்பேடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் பத்தாண்டுக் கால வரவு-செலவு விவரம்:—

(ரூ. இலட்சத்தில்)

வ. எண்	ஆண்டு	வட்டி வருவாய்	இதர வருவாய்	கூடுதல்	வட்டி செலவினம்	இதர செலவினம்	கூடுதல்	நிகர இலாபம்	நிகர நட்டம்	குவிந்த நட்டம்
1.	1998-99	3.01	0.08	3.09	4.52	1.05	5.57	..	2.54	32.84
2.	1999-2000	2.70	0.10	2.80	2.64	1.65	4.29	..	14.65	47.49
3.	2000-01	2.78	0.47	3.25	2.67	2.75	5.42	..	12.18	59.67
4.	2001-02	6.64	1.32	7.96	2.66	4.12	6.78	..	2.35	62.02
5.	2002-03	9.52	1.79	11.31	6.55	3.82	10.37	45.14	..	16.88
6.	2003-04	15.62	1.08	16.70	3.26	3.78	7.04	3.29	..	13.58
7.	2004-05	11.40	4.05	15.45	18.27	4.23	22.50	..	0.84	14.42
8.	2005-06	1.72	5.31	7.03	2.52	4.37	6.89	1.03	..	13.39
9.	2006-07	12.64	5.12	17.76	5.10	5.61	10.71	3.48	..	9.91
10.	2007-08	2.82	5.88	8.70	11.67	6.72	18.39	..	8.27	18.18

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

12—

சொந்த கட்டடம்

வினா எண் 69231—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் தொகுதியிலுள்ள தென்மேல்பாக்கம் மற்றும் காயரம்பேடு தொடக்கக் கூட்டுறவு வங்கிக்குச் சொந்த கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருப்போரூர் தொகுதியில் அடங்கிய தென்மேல்பாக்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கென மறைமலை நகர் பகுதியில் "சிஎம்டிஏ" மூலம் பெறப்பட்ட பிளாட் எண் 84-ல் சொந்த கட்டடம் கட்ட மேற்படி வங்கி வரைபட அனுமதி பெறப்பட்டு திட்ட மதிப்பீடு கோரி, கோட்ட செயற்பொறியாளர், கட்டுமானப் பிரிவு, பொதுப் பணித் துறை, காஞ்சிபுரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இதுகுறித்து திட்ட மதிப்பீடு அறிக்கை வரப்பெற்றதும் உரிய நிருவாக அனுமதி பெறப்பட்டு, கட்டடப் பணி தொடங்கப்படும்.

2. திருப்போரூர் தொகுதியில் அடங்கிய காயரம்பேடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியைப் பொறுத்தமட்டில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து மறைமலை நகர் பகுதியில் காலிமனை பெற்றுத் தருமாறு, மறைமலை நகராட்சி ஆணையருக்கு 12-5-2008-ல் மேற்படி வங்கிமூலம் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளதாகவும், மேலும் இதுதொடர்பாக அடிமனை ஒதுக்கீடு பெறப்பட்ட பின்னர் கட்டடம் கட்டுவது குறித்து கருத்துரு பரிசீலிக்கப்பட்டு, அவற்றின் அடிப்படையில் சொந்தக் கட்டடம் கட்ட தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

13—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 80030—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, கூ. குட்டப்பட்டி ஊராட்சி, காஞ்சேரி மோளக்கரட்டூரில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் தொகுதிக்குட்பட்ட கூ. குட்டப்பட்டி ஊராட்சியில் தின்னப்பட்டி

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் எப்பி *116*, மோளக்கரட்டூர் நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடை காஞ்சேரி மோளக்கரட்டூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த *498* குடும்ப அட்டைகளைக்கொண்டு முழுநேர நியாய விலைக் கடையாக செயல்பட்டு வருகிறது. எனவே, காஞ்சேரி மோளக்கரட்டூரில் புதியதாகப் பகுதிநேரக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

14—

கூட்டுறவு வங்கி

வினா எண் 85578—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, சின்னக்கண்ணனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை மீண்டும் செயல்படுத்தவும், மேலநட்டூரில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி துவக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சின்னக்கண்ணனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் *28-7-2008* தேதியில் மறுபரவல் முறையில் செயலர் (பொறுப்பு) நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருவதால், சின்னக்கண்ணனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் தற்போது மீண்டும் செயல்பட்டு வருகிறது.

2. மேலநட்டூர் கிராமம் தெ. புதுக்கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் விவகார எல்லையில் உள்ளது. தெ. புதுக்கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் *1,652* உறுப்பினர்கள் உள்ளனர். அதில் *250* உறுப்பினர்கள் மேலநட்டூர் கிராமத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் தெ. புதுக்கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் ஏற்கெனவே கடன் பெற்றுள்ளனர்.

2010 ஜனவரி 11]

3. மேலநட்டூர் கிராமத்தில் நன்செய் 900 ஏக்கரும், புன்செய் 750 ஏக்கரும் ஆக மொத்தம் 1,650 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. தெ. புதுக்கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 2007-08 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பயிர்க் கடன் ரூ.4.00 இலட்சத்தில் மேலநட்டூர் கிராமத்தைச் சேர்ந்த 75 கடன்தாரர்கள் ரூ.1.80 இலட்சம் மட்டுமே கடன் பெற்றுள்ளனர். 2008-09 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பயிர்க் கடன் ரூ.4.00 இலட்சத்தில் மேலநட்டூர் கிராமத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் ஒரே ஒரு கடன்தாரர் ரூ.60,000/- மட்டுமே கடன் பெற்றுள்ளார். மத்திய காலக் கடனாக சொட்டுநீர்ப் பாசனக் கடன்கள் 9 நபருக்கு ரூ.5.47 இலட்சம் மட்டும் வழங்கப்பட்டுள்ளது.

4. அரசாணை எண் 376, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3-10-2006-ன்படி, புதியதாகச் சங்கம் தொடங்க, விவசாயம் செய்யும் நிலப் பரப்பு 4,850 ஏக்கர் இருக்க வேண்டும் என்றும், 60 சதவிகிதம் உறுப்பினர்கள் கடன் பெறுபவர்களாக இருக்க வேண்டும் என்றும், ஓராண்டிற்குக் குறைந்தபட்சம் ரூ.2.00 கோடி அளவிற்கு அனைத்து வகை கடன்கள் வழங்கினால்தான் குறைந்தபட்சம் ரூ.5.00 இலட்சம் வட்டி வருவாய் ஈட்ட இயலும் என்றும், நிபந்தனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலநட்டூர் கிராமத்தில் 450 குடும்பங்கள் மட்டும் உள்ள நிலையில், மேற்கூறிய நிபந்தனைகளை நிறைவு செய்ய சாத்தியக்கூறுகள் இல்லை.

5. மேற்கண்ட நிபந்தனைகளை நிறைவேற்றிட போதிய தகுதிகள் பெற்றிராத நிலையில், மேலநட்டூர் கிராமத்தில் புதிய சங்கம் தொடங்கினால், அப்புதிய சங்கமும் ஏற்கெனவே அக்கிராமத்தைச் செயல் எல்லையில் கொண்டு செயல்பட்டு வரும் தெ. புதுக்கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கமும் வாழ்திறனற்ற சங்கமாக மாறும் நிலை எழும். எனவே, மேற்கண்ட சூழலில் மேலநட்டூர் கிராமத்தில் புதியதாகத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் துவக்க சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

15—

பகுதிநேர அங்காடி

வினா எண் 91273—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், திருவினையாட்டம் ஊராட்சி, தத்தனூரில் பகுதி நேர அங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடி வட்டம், திருவினையாட்டம் ஊராட்சிக்குட்பட்ட தத்தனூர்பகுதி, தாய் அங்காடியான திருவினையாட்டம் அங்காடியிலிருந்து 1.25 கி.மீ. தொலைவில் உள்ளது. தத்தனூர் பகுதியில் பகுதி நேர அங்காடி அமைக்க வாடகையின்றி இலவசமாக இடம் அளிக்க அப்பகுதி பொதுமக்கள் யாரும் முன்வரவில்லை. எனவே, தத்தனூர் பகுதியில் புதிய பகுதி நேர அங்காடி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

16—

புதிய கட்டடம்

வினா எண் 92010—திரு. கோ. எதிரொலி மணியன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரணமல்லூர் தொகுதி, மண்டகொளத்தூர் கிராம வேளாண் கூட்டுறவு வங்கிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரணமல்லூர் தொகுதியில் உள்ள 15 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும் சொந்த கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. 15 சங்கங்களில் ஒன்றான மண்டகொளத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டடம் முழுவதும் பழுதடைந்துள்ள நிலையில் உள்ளது. இச்சங்கத்திற்கு புதிய கட்டடம் கட்ட நிதியுதவி கோரி முன்மொழிவுகள் பெறப்பட்ட பின்னர் பரிசீலிக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் நடப்பு நிதியாண்டில், 50 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு தலா ரூ.10/- இலட்சம் வீதம் ரூ.5.00 கோடி தொடக்கக் கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து, புதிய கட்டடம் கட்ட நிதி உதவி வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில் மண்டகொளத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு சொந்த கட்டடம் கட்ட, மண்டல இணைப் பதிவாளரிடமிருந்து பெறப்படும் முன்மொழிவுகளின் அடிப்படையில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

17—

கட்டடம்

வினா எண் 93541—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காமலாபுரம் ஊராட்சிப் பகுதியில் உள்ள கூட்டுறவு வங்கிக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, காமலாபுரம் ஊராட்சிப் பகுதியில் உள்ள காமலாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு அடிநிலம் சொந்தமாக இல்லாத நிலையில் இச்சங்கத்திற்கென தற்போது சொந்தமாகக் கட்டடம் கட்ட வாய்ப்பு இல்லை.

18—

கூட்டுறவு விற்பனைச் சங்கம்

வினா எண் 95468—திரு. வை. காவேரி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொளத்தூரில் (மேட்டூர் தாலுகா) வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சேலத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், கொளத்தூர் வட்டாரம் அடங்கிய மேட்டூர் தாலுகா முழுவதையும் தனது செயல் எல்லைக்குள் கொண்டு, சங்கத் துணை விதிகளின்படி கொளத்தூரில் பருத்தி, மிளகாய் மற்றும் இதர விவசாய விளைபொருட்களை டெண்டர் முறையில் ஏலம் நடத்தி, நல்ல விலைக்கு விற்பனை செய்து வருகின்றது. கொளத்தூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஒன்றும் நன்முறையில் செயல்பட்டு வருகின்றது. மேட்டூர் தாலுகாவிற்கென கொளத்தூரில் தனியே வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் துவங்கப்பட்டால், இவ்விரு நிறுவனங்களுக்கும் இடையே போட்டி ஏற்பட்டு சங்கம் திறம்படச் செயல்பட இயலாத நிலை ஏற்படக்கூடும். எனவே, எடப்பாடி தொகுதி, கொளத்தூரில் (மேட்டூர் தாலுகா) தனியே வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் அமைக்க வேண்டிய அவசியமும், சாத்தியக்கூறுகளும் இல்லை.

19—

கூட்டுறவுச் சங்க மருத்துவமனை

வினா எண் 101791—திருமதி ஜி. லதா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுத் துறைமூலம் தமிழகத்தில் மருத்துவமனைகளை நடத்திடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் கூட்டுறவுத் துறையின்கீழ் விருதுநகர் மண்டலத்தில் பதிவு எண் க்யூ 795 தளவாய்புரம் ஆ.ச.

2010 ஜனவரி 11]

பழனிச்சாமி நாடார் சுகாதாரக் கூட்டுறவுச் சங்கம் லிட்., மருத்துவமனை மட்டும் செயல்பட்டு வருகின்றது. இதுதவிர கூட்டுறவுத் துறையில் மருத்துவமனை ஆரம்பிக்க கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை.

20—

தேயிலை

வினா எண் 4458—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் உள்ள தேயிலை எஸ்டேட்டுகளில் தேயிலை கொழுந்துகளை சிவப்பு சிலந்தி கடித்து வருவதால், தேயிலை உற்பத்தி மிகவும் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :

தேயிலைத் தோட்டங்களில் சிவப்பு சிலந்தி பூச்சியினைக் கட்டுப்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது செயல்பாட்டில் இல்லை. வால்பாறையில் தேயிலைத் தோட்டங்களில் தேயிலை கொழுந்துகளில் சிவப்பு சிலந்தி தாக்குதல் கடந்த வருடங்களைப் போல இல்லாமல் 2009-10-ல் குறைந்து காணப்பட்டது. தாக்குதலின் அறிகுறி தென்படும்பொழுது அதனைக் கட்டுப்படுத்த மூன்று நிலைகளில் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்படுகிறது. அதன்படி லைம் சல்பர், புரோபோகேட் மற்றும் ஃபேன்பைராச்சிமேட் போன்ற மருந்துகள் தண்ணீரில் கலந்து, சுழற்சி முறையில் பத்து நாள் இடைவெளியில் தெளித்து இப்பூச்சியின் தாக்குதல் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது.

21—

காய்கறி உற்பத்தி

வினா எண் 20450—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 ஜனவரி 11

(அ) வால்பாறை தொகுதியில் கத்தரி, வெண்டை, வெள்ளரி, பாகற்காய், பூசணி போன்ற காய்கறிகள் அதிக அளவில் உற்பத்திச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதிக்குட்பட்ட காலியாபுரம், சேத்துமடை, ஓடையகுப்பம், கோட்டூர், அங்களகுறிச்சி மற்றும் ஆழியார் ஆகிய கிராமங்கள் உள்ளடக்கிய ஆனைமலை வட்டாரம் பகுதியில் சுமார் 37 எக்டர் பரப்பில் தக்காளி, கத்தரி, வெண்டை, பூசணி, பாகல், புடல் மற்றும் பீர்க்கு ஆகிய காய்கறிப் பயிர்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. காய்கறி உற்பத்தியினைப் பெருக்கிடும் பொருட்டு ஆழியாறு பாசனப் பகுதியில் நீர்வள நிலவளத் திட்டம் மற்றும் ஆயக்கட்டு அல்லாத பகுதிகளில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் காய்கறி சாகுபடி மேற்கொள்ள ஒரு விவசாயிக்கு 0.5 எக்டர் பரப்பிற்கு விதைகள் மானியமாகவும், நீர்வள நிலவளத் திட்டத்தில், ரூ.7,500 மதிப்பிற்கு 0.5 எக்டருக்கு மானியத்தில் விதைகள் மற்றும் இடுபொருட்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. விவசாயிகள் ஆனைமலை வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அவர்களை அணுகி, மேற்படி திட்டங்களின்மூலம் பயன்பெறலாம்.

22—

பீட்ரூட் சாகுபடி

வினா எண் 47802—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, பரம்பிக்குளம் ஆழியார் வாய்க்கால் பகுதியில் பீட்ரூட் கிழங்குகளை பயிர் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, பரம்பிக்குளம் ஆழியார் மற்றும் வாய்க்கால் பகுதியில் தற்பொழுது விவசாயிகள் பீட்ரூட் சாகுபடி மேற்கொள்ளவில்லை. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் (2009-2010) விவசாயிகள் காய்கறி சாகுபடி மேற்கொள்ள 50 சதவீத மானியத்தில் காய்கறி விதைகள் வழங்கப்படுகின்றன. இப்பகுதி விவசாயிகள் பீட்ரூட் சாகுபடி மேற்கொள்ள முன்வரும்பட்சத்தில் பீட்ரூட் விதைகள் 50 சதவீத மானியத்திலும் மற்றும் சாகுபடி தொழில் நுட்பங்களும் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

23—

சாகுபடி

வினா எண் 47823—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, உபாசி எஸ்டேட் பகுதியில் உருளை, கறிபீன்ஸ், கசகசா மற்றும் கிராம்பு பயிரிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உபாசி எஸ்டேட் பகுதியில் தனியாருக்கு உட்பட்ட தேயிலைத் தோட்டங்களே அதிக அளவில் இருப்பதால் உருளை, கறிபீன்ஸ், கிராம்பு பயிர் சாகுபடி செய்யவில்லை. விவசாயிகள் இப்பயிர்களை சாகுபடி செய்ய முன்வரும்பட்சத்தில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் (2009-2010)-ல் கறிபீன்ஸ், உருளை விதைகள் மற்றும் கிராம்பு நாற்றுகள், 50 சதவீத மானியத்தில் வழங்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 ஜனவரி 11

24—

தேயிலைப் பாதுகாப்பு

வினா எண் 47834—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் தேயிலைப் பயிர்கள் அழிவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதியில், சுமார் 11,000 எக்டர் பரப்பில் தேயிலை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில் பெரும் பகுதி பெரிய நிறுவனங்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. சிறிய விவசாயிகள் தேயிலை சாகுபடியை மேற்கொள்ளவில்லை. தற்போது தேயிலை சாகுபடிக்கென திட்டம் எதுவும் தோட்டக்கலைத் துறைமூலம் செயல்பாட்டில் இல்லாததால், விவசாயிகளுக்கு மானியத்தில் தேயிலைச் செடிகள் எதுவும் வழங்கப்படவில்லை. தரமான தேயிலை உற்பத்தி செய்யும் பொருட்டு தேயிலை சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் தோட்டக்கலைத் துறையின் விரிவாக்கப் பணியாளர்கள்மூலம் சாகுபடியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

(ஆ) வினா எழாது.

25—

காளான்கள்

வினா எண் 47917—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் காளான்கள் உற்பத்திச் செய்ய அரசு உதவி செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் மானாமதுரையில் உணவுக் காளான்கள் உற்பத்திச் செய்ய தோட்டக்கலைத் துறை விரிவாக்க அலுவலர்கள்மூலம் தொழில்நுட்ப ஆலோசனைகளும், வேளாண் அறிவியல் மையம், குன்றக்குடி மூலம் உணவுக் காளான் வளர்ப்புப் பயிற்சிகளும் காளான் சாகுபடியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. எனினும், இதற்கான கடன் மற்றும் மானியம் வழங்கும் திட்டங்கள் எதுவும் தற்போது நடைமுறையில் இல்லை.

26—

மானியம்

வினா எண் 49742—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, அர்த்தநாரிபாளையம், கம்பலாப்பட்டி, பீலிசின்னம்பாளையம், பெத்தநாயக்கனூர், ரமணமுதலிபுதூர், தென்சித்தூர், சோமந்துறை, தென்சங்கம்பாளையம் மற்றும் அங்கலக்குறிச்சி ஊராட்சிகளில் கேரட் பயிரிட, வரும் நிதியாண்டில் மானியம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் பெரும்பாலான இடங்கள் தனியாருக்கு உட்பட்ட தேயிலைத் தோட்டங்களாகப்

பராமரிக்கப்பட்டு வருகின்றன. கேரட் பயிரிட விவசாயிகள் முன்வரும் பட்சத்தில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் (2009-2010), 50 சதவீத மானியத்தில் விதைகளை வட்டார விரிவாக்க மையத்தில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர், ஆனைமலை அவர்களை அணுகி பெற்றுக் கொள்ளலாம்.

27—

மானியம்

வினா எண் 49903—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஜல்லிப்பட்டி, கம்பலாப்பட்டி, காளியாபுரம், பெத்தநாயக்கனூர், ரமணமுதலிபுதூர், தென்சித்தூர், சோமந்துரை, தென்சங்கம்பாளையம், அங்கலக்குறிச்சி, அர்த்தநாரிபாளையம், கரியஞ்செட்டிபாளையம், பீலிசின்னம்பாளையம் ஆகிய ஊராட்சிகளில் காலிபிளவர் மற்றும் முட்டைகோஸ் பயிரிட வரும் நிதியாண்டில் மானியம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில், காலிபிளவர் மற்றும் முட்டைகோஸ் பயிரிட ஏற்ற சூழ்நிலை உள்ளதால் முட்டைகோஸ் மற்றும் காலிபிளவர் பயிரிட விரும்பும் விவசாயிகள், அப்பயிர் விதைகளை நடப்பாண்டில் (2009-2010), ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், 50 சதவீதம் மானியத்தில், வட்டார விரிவாக்க மையத்தில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர், ஆனைமலை அவர்களை அணுகி பெற்று பயனடையலாம்.

2010 ஜனவரி 11]

28—

நிவாரணம்

வினா எண் 61168—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் சேதமடைந்த முந்திரிச் செடிகளுக்கு நிவாரணம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை பகுதியில், முந்திரிப் பயிருக்கு சேதம் எதுவும் ஏற்படாததால், முந்திரிச் செடிகளுக்கு நிவாரணம் வழங்கிடும் கேள்வி தற்போது எழவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

29—

குளிர்பதனக் கிடங்கு

வினா எண் 67195—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் காய்கறி, பழங்களைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* வால்பாறை தொகுதியில் காய்கறி, பழங்களைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் திட்டம் ஏதும்

[2010 ஜனவரி 11

அரசின் பரிசீலனையில் இல்லை. ஆயினும், காய்கறி, பழங்களைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க தனியார் நிறுவனங்கள்/ விவசாயக் குழுக்கள் முன்வந்தால் "தேசிய தோட்டக்கலை இயக்கம்" (National Horticulture Mission) எனும் மைய அரசின் திட்டத்தின்மூலம் அவர்களுக்கு உதவிட பரிசீலிக்கப்படும்.

30—

குளிர்சாதனக் கிடங்கு

வினா எண் 76491—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் தக்காளிக்கு குளிர்சாதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் தக்காளிக்கு குளிர்சாதனக் கிடங்கு அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், காய்கறிகளைப் பதப்படுத்தும் நிலையம் அமைக்க விவசாயக் குழுக்களோ அல்லது தனியார் நிறுவனங்கள் ஏதேனும் முன்வந்தால் மத்திய அரசின் நிறுவனமான தேசிய தோட்டக்கலை குழு (National Horticulture Mission) மூலமாக 25 விழுக்காடு முதலீட்டு மானியம் பெற்றுத்தர அனைத்து உதவிகளும் செய்து கொடுக்கப்படும்.

31—

மின்னணு தராசு

வினா எண் 85810—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

(அ) தருமபுரியில் செயல்படும் உழவர் சந்தைக்கு மின்னணு தராசு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதியதாக அறிவிக்கப்பட்ட 50 உழவர் சந்தைகளில் 39 உழவர் சந்தைகளுக்கு மின்னணு எடைத் தராசு வழங்கப்பட்டுள்ளது. புதிதாகத் திறக்கப்படும் உழவர் சந்தைகளுக்கும் மின்னணு எடைத் தராசு வழங்கப்படும். 1999-2000 ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட 103 உழவர் சந்தைகளில் எடைத் தராசு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி 103 உழவர் சந்தைகளுக்கும் மின்னணு தராசு படிப்படியாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அச்சமயம் தருமபுரி உழவர் சந்தைக்கும் மின்னணு தராசு வழங்கப்படும்.

32—

மிளகாய் சாகுபடி

வினா எண் 102230—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலை வட்டத்தில் மிளகாய் சாகுபடி அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலை வட்டத்தில், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 2008-2009 ஆம் ஆண்டில் 10 கிலோ மிளகாய் விதைகள் விநியோகம் செய்யப்பட்டு மிளகாய் சாகுபடி பரப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(2009-2010) சுமார் 20 எக்டர் பரப்பில் மிளகாய் சாகுபடி பரப்பினை அதிகரிக்க இத்திட்டத்தின்கீழ் செயல் திட்டம் தயாரித்து, விவசாயிகளுக்கு 50% மானிய விலையில் மிளகாய் விதைகள் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

33—

நீதிமன்ற வளாகம்

வினா எண் 103107—திரு. எம். அன்பழகன் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தொகுதி, பழனியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர் :

பழனி தொகுதி, பழனியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கான அறிவிப்பினை மாண்புமிகு அமைச்சர் (சட்டம்) அவர்கள், 2008-2009 ஆம் ஆண்டிற்கான, வரவு-செலவு கூட்டத் தொடரில் அறிவித்தார்கள். இவ்வறிவிப்பு குறித்த செயற்குறிப்பு உயர் நீதிமன்றத்திடம் கோரப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தின் செயற்குறிப்பு பெறப்பட்டபின் அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

34—

தன்னாட்சி அங்கீகாரம்

வினா எண் 102945—திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பரங்குன்றம் தொகுதியிலுள்ள தியாகராயர் பொறியியல் கல்லூரிக்குத் தன்னாட்சி அங்கீகாரம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர் :

(அ) திருப்பரங்குன்றம் தொகுதியிலுள்ள தியாகராயர் பொறியியல் கல்லூரிக்குத் தன்னாட்சி அங்கீகாரம் ஏற்கெனவே வழங்கப்பட்டுவிட்டது.

(ஆ) எழவில்லை.

35—

சலுகைகள்

வினா எண் 106636—திரு. ம. குணசேகரன் : *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் தமிழ் வழியில் படிக்கும் மாணவர்களுக்கு உயர் கல்வி பயில சலுகைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர் :

(அ) தமிழகத்தில் தமிழ் வழியில் படிக்கும் மாணவர்களுக்கு உயர் கல்விப் பயில சலுகைகள் வழங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

36—

பொறியியல் கல்லூரிகள்

வினா எண் 110177—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தூத்துக்குடி, தஞ்சாவூர் பகுதிகளில் அரசு பொறியியல் கல்லூரிகள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

[2010 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

தூத்துக்குடி, தஞ்சாவூர் மாவட்டங்களில் முறையே திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகங்களின்மூலம் 2009-2010 ஆம் கல்வியாண்டு பொறியியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

37—

ஓட்டுநர் பயிற்சி மையம்

வினா எண் 95908—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் ஓட்டுநர் பயிற்சி மையம் ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசுப் போக்குவரத்துக் கழகம், காரைக்குடி மண்டலம், சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியில் ஓட்டுநர் பயிற்சி மையம் உள்ளதால், மானாமதுரையில் தற்போது ஓட்டுநர் பயிற்சி மையம் ஏற்படுத்த இயலாது.

38—

யோகா பயிற்சி

வினா எண் 101090—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் கிளை போக்குவரத்துப் பணிமனையில் யோகா பயிற்சி, மனமகிழ் மன்றம் மற்றும் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களும் பயன்பெறும் வகையில் தலைமை அலுவலக பயிற்சி நிலையத்தில் மாதம் ஆறு நாட்கள் யோகா பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சியில் கலந்து கொள்ள அனைத்துப் பணியாளர்களுக்கும் சுழல் முறையில் வாய்ப்பு அளிக்கப்படுகின்றது.

மேலும், கிளைகளில் பணிபுரியும் பணியாளர்கள் உள்ளிட்ட அனைவரும் பயன்பெறும் வகையில் மனமகிழ் மன்றம் ஒன்றும் நூலகம் ஒன்றும் தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வருகின்றது. தாரமங்கலம் கிளையில் குறைந்த அளவே பணியாளர்கள் உள்ளதால் அவர்கள் கிளைக்கு அருகில் உள்ள தலைமையகத்தில் யோகா பயிற்சி, மனமகிழ் மன்றம் மற்றும் நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

39—

தொழில்நுட்பப் பணியாளர்கள்

வினா எண் 107475—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், (பொம்மிடி கிளை) அரசுப் போக்குவரத்துக் கழக பணிமனையில் கூடுதலாக போக்குவரத்துத் தொழில்நுட்பப் பணியாளர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) தருமபுரி மாவட்டம், (பொம்மிடி கிளை) அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனையில் உள்ள பேருந்துகளின் எண்ணிக்கைக்கேற்பவும், அரசு நிர்ணயித்துள்ள அளவுகோலின்படியும் தொழில்நுட்பப் பணியாளர்கள் ஏற்கெனவே நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

(ஆ) வினா எழவில்லை.

40—

செவிலியர் பயிற்சி

வினா எண் 48678—டாக்டர் க. நெடுஞ்செழியன் : *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிராமச் சுகாதாரச் செவிலியர் பயிற்சி மீண்டும் தொடங்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) கிராமச் சுகாதாரச் செவிலியர் பதவிக்கான, பலநோக்கு சுகாதாரப் பணியாளர் (பெண்) பயிற்சி, தற்போது மீண்டும் தொடங்கப்பட்டு மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நல பயிற்சி மையம், மதுரை மற்றும் மனித வள மேம்பாட்டு நிறுவனங்கள் சேலம், விழுப்புரம் ஆகிய மூன்று இடங்களிலுள்ள அரசுப் பயிற்சி நிலையங்களிலும், கஸ்தூர்பா மருத்துவமனை, காந்தி கிராமம் மற்றும் ஆந்திர மகிள சபா ஆகிய இரண்டு அரசு உதவி பெறும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

41—

மருத்துவர் வசதி

வினா எண் 54102—திரு. த.அ. மேகநாதன் : *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், நாகமங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களுக்கு விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் நாகமங்கலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

நாகமங்கலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர்களுக்கு விடுதி கட்ட நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை. எனவே, நாகமங்கலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர்களுக்கு விடுதி கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

42—

சிறப்பு மருத்துவர்

வினா எண் 60136—திரு. கோவை தங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை அரசு மருத்துவமனைக்கு இருதய சிறப்பு மருத்துவர் ஒருவரை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை அரசு மருத்துவமனைக்கு அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள உதவி மருத்துவர் பணியிட எண்ணிக்கை நான்கு. இந்த நான்கு உதவி மருத்துவர் பணியிடங்களில் மூன்று பணியிடங்கள் சமீபத்தில் நடைபெற்ற பணி நியமனக் கலந்தாய்வின் வாயிலாக எம்.பி.பி.எஸ். பயின்ற மூன்று மருத்துவர்களைக் கொண்டு நிரப்பப்பட்டு, பணிபுரிந்து வருகின்றனர். மேலும், மீதமிருந்த ஒரு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

உதவி மருத்துவர் காலிப் பணியிடம் தற்சமயம் ஒரு எம்.எஸ். (கண்) பயின்ற மருத்துவரைக்கொண்டு நிரப்பப்பட்டு அன்னாரும் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார். எனவே, இம்மருத்துவமனைக்கு இருதய சிறப்பு மருத்துவர் நியமனம் செய்ய இம்மருத்துவமனையில் உதவி மருத்துவர் காலிப் பணியிடம் ஏதுமில்லை.

43—

குடியிருப்பு வசதிகள்

வினா எண் 61180—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் அரசு மருத்துவமனை மருத்துவர்களுக்கு மருத்துவமனை வளாகத்திற்குள்ளேயே குடியிருப்பு வசதிகள் செய்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் திருப்புவனம் சமுதாய நல மையம் செயல்பட்டு வருகின்றது.

திருப்புவனம் சமுதாய நல மையத்தில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு வளாகத்திற்குள்ளேயே குடியிருப்பு வசதிகள் செய்துத் தர நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லாததால், குடியிருப்பு வசதிகள் செய்ய சாத்தியக்கூறுகள் இல்லை.

44—

தங்கும் விடுதி

வினா எண் 64383—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, பாரூர் அரசு மருத்துவமனையிலுள்ள மருத்துவர் தங்கும் விடுதியை புதியதாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தில் பாரூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

பாரூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள மருத்துவர் தங்கும் விடுதியை புதியதாகக் கட்ட நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை. ஏற்கெனவே இரண்டு மருத்துவ அலுவலர் குடியிருப்புகள் உள்ளன. இதனைச் சீரமைக்க பழுதுபார்ப்புப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து உரிய நிதி ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டு சீரமைப்புச் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, பாரூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள மருத்துவர் தங்கும் விடுதியைப் புதியதாகக் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

45—

கட்டட வசதி

வினா எண் 65403—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆற்காடு தொகுதி, துர்கம், காவனூர், எம். என். பாளையம், புங்கனூர் வெங்கடாபுரம், முப்பதுவெட்டி, சக்கரமல்லூர், குப்பிடிசாத்தம் ஆகிய கிராமங்களிலுள்ள துணை சுகாதார நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, விளாப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த காவனூர், எம்.என். பாளையம், துர்கம், புங்கனூர், வெங்கடாபுரம், குப்பிடிசாத்தம் ஆகிய துணை சுகாதார நிலையங்கள் மற்றும் புதுப்பாடி ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த முப்பது வெட்டி, சக்கரமல்லூர் ஆகிய துணை சுகாதார நிலையங்கள் சீரிய முறையில் செயலாற்றி வருவதுடன், ஏற்கெனவே சொந்த கட்டடத்திலும் இயங்குகின்றன. எனவே, மேற்கண்ட 8 சுகாதார நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

46—

சுற்றுச் சுவர்

வினா எண் 67415—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், வளத்தி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியத்தில் வளத்தி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது.

வளத்தி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் தெற்கில் 100 அடிகள் உள்ளது. கிழக்கில் 60 அடி உள்ளது. மீதமுள்ள 650 அடிக்குச் சுற்றுச் சுவர் இல்லை. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்ட நிதி ஒதுக்கீடு ஏதுமில்லை. எனவே, விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர்

2010 ஜனவரி 11]

ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வளத்தி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை.

47—

மருத்துவமனை மேம்பாடு

வினா எண் 76530—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காங்கேயம் தொகுதி, நத்தக்காடையூர் அரசு ஆரம்ப சுகாதார நிலைய பழைய கட்டடம், மருத்துவர் அலுவலர் குடியிருப்புக் கட்டடம் இவற்றைப் பழுது நீக்கிடவும் மற்றும் கூடுதலாகக் கட்டடம் கட்டவும், அறுவை சிகிச்சை மையம் ஏற்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாராபுரம் சுகாதார பகுதி மாவட்டத்தில் நத்தக்காடையூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது.

நத்தக்காடையூர் ஆரம்ப சுகாதார நிலையம் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. பணியாளர்கள் குடியிருப்பு ஏதுமில்லை.

நத்தக்காடையூர் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.15,000/- தொகையில் பழுதுபார்ப்பு நிவர்த்தி செய்யப்பட்டது.

நத்தக்காடையூர் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் நல்ல நிலையில் உள்ளதால் தற்சமயம் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை. தற்சமயம் நத்தக்காடையூர் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு உள்ளது. புதிய கட்டடத்தில் 30 படுக்கைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

கொண்ட பிரசவ வார்டு அறுவை சிகிச்சை மையம், எக்ஸ்ரே பிரிவு உட்பட அனைத்து வசதிகளுடன் தரம் உயர்த்திக் கட்டடம் கட்டப்பட உள்ளது.

48—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 86365—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தஞ்சாவூர் மாவட்டம், சித்திரக்குடி பகுதி குணமங்கலத்தில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

குணமங்கலம் கிராம மக்கள் தொகை 1,210 ஆகும். இக்கிராமம் சித்திரக்குடி துணை சுகாதார நிலையத்தினையும், தென்னங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தினையும் சார்ந்தது.

இக்கிராமத்திற்கு 8 கிலோ மீட்டர் தொலைவில் தென்னங்குடி ஆரம்ப சுகாதார நிலையமும், 15 கிலோ மீட்டர் தொலைவில் திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனையும் செயல்படுகின்றன.

இக்கிராமம் தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள் தொகை 1,85,484. (2001 கணக்கெடுப்பு) இவ்வூராட்சி ஒன்றியத்தில் 6 ஆரம்ப சுகாதார நிலையங்கள் முறையே (1) ஆலக்குடி, (2) வல்லம், (3) காசவளநாடுபுதூர், (4) மருங்குளம், (5) நாகத்தி, (6) தென்னங்குடி ஆகியன செயல்படுகின்றன.

மத்திய அரசு இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியத்திற்குத் தற்போதுள்ள 6 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியத்தில் குணமங்கலம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

2010 ஜனவரி 11]

மேலும், இரண்டு சுகாதார மையங்களுக்குக் குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், குணமங்கலம் கிராமத்திற்கும் தென்னங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 6 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால் குணமங்கலம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

49—

சுற்றுச் சுவர்

வினா எண் 88238—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, கொத்தமங்கலம், பாப்பாபட்டி, கோட்டைக்காடு அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கூடுதல் கட்டடம் கட்டவும், பாப்பாபட்டி, சிலட்டூர், அரையப்பட்டி ஆகிய பகுதிகளிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

அறந்தாங்கி சுகாதார மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் கொத்தமங்கலம், அரையப்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தில் சிலட்டூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது. கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் பாப்பாபட்டி, கோட்டைக்காடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

ஆலங்குடி தொகுதி, கொத்தமங்கலம், பாப்பாபட்டி, கோட்டைக்காடு, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கூடுதல் கட்டடம் கட்டவும், பாப்பாபட்டி சிலட்டூர், அரையப்பட்டி ஆகிய பகுதிகளிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்டவும், நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை. ஆதலால் மேற்கண்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கூடுதல் கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

50—

மருத்துவர்கள்

வினா எண் 91274—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், சங்கரன்பந்தல் ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு மருத்துவர்களை நியமிக்கவும், தங்கும் விடுதி மற்றும் சுற்றுச் சுவர் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் சங்கரன்பந்தல் சமுதாய நல மையம் செயல்பட்டு வருகிறது.

இந்தச் சமுதாய நல மையம் 3,600 ச.அ.பரப்பளவில் 10 அறைகள் உள்ள கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. திரு. எம்.எம். காசிம் அவர்களால் நன்கொடையாக 60 வருடங்களுக்கு முன் தரப்பட்டது. இந்தச் சமுதாய நல மையத்தில் கண் சிகிச்சை அறை, சித்த மருத்துவக் கட்டடம் உள்ளது.

ஒப்பளிக்கப்பட்ட மருத்துவ அலுவலர் பணியிடங்களில் மருத்துவர்கள் பணியாற்றுகின்றனர். கூடுதலாக மருத்துவர்களை நியமிக்க சாத்தியக்கூறுகள் இல்லை. தங்கும் விடுதி வசதிக்காக கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்ட நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை. எனவே, தங்கும் விடுதி கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

51—

சொந்த கட்டடம்

வினா எண் 92132—திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

ராசிபுரம் தொகுதி, கல்லங்குளம் ஊராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சொந்த கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் தொகுதி, கல்லங்குளம் ஊராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சொந்த கட்டடம் கட்ட தேசிய ஊரக நல்வாழ்வுத் திட்டத்தின் (National Rural Health Mission) கீழ் நிதி ஒதுக்கீடு வழங்க அரசு ஒப்புதல் அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

52—

குடியிருப்பு

வினா எண் 92135—திரு. செ. பொன்னுதுரை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதி, விஜயமங்கலம் மற்றும் திங்களூர் சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவர் செவிலியருக்குக் குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், தாராபுரம் சுகாதார மாவட்டம், பெருந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் திங்களூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இதே ஊராட்சி ஒன்றியத்தில் விஜயமங்கலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகிறது.

மேற்கண்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் மருத்துவர் மற்றும் செவிலியர்களுக்குக் குடியிருப்பு கட்டடம் கட்டுவதற்கு அரசால் நிதி ஒதுக்கீடு எதுவும் தற்போது செய்யப்படவில்லை. எனவே, விஜயமங்கலம்

மற்றும் திங்களூர் சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவர் மற்றும் செவிலியருக்குக் குடியிருப்பு கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

53—

மருத்துவர்கள்

வினா எண் 97088—திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் செயல்படும் அரசு மருத்துவமனைக்குக் கூடுதல் மருத்துவர்களை நியமிக்கவும், சேனம்விளை வட்ட மருத்துவமனைக்கு மகப்பேறு பெண் மருத்துவரை நியமிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் அரசு மருத்துவமனையில் 6 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, 6 மருத்துவ அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்மூலம் கூடுதலாக இரண்டு உதவி மருத்துவர்கள் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. எனவே, குளச்சல் அரசு மருத்துவமனைக்குக் கூடுதல் மருத்துவர்களை நியமிக்கும் சூழ்நிலை தற்போது எழவில்லை. சேனம்விளை அரசு மருத்துவமனையில் 2 உதவி மருத்துவர்களும், தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்மூலம் ஓர் உதவி மருத்துவரும் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், இம்மருத்துவமனையில் ஆண்டொன்றுக்கு 18 பிரசவங்கள் மட்டுமே நடைபெற்று வருவதால் தனியாக மகப்பேறு மருத்துவரை நியமிக்க வேண்டிய சூழ்நிலை தற்போது எழவில்லை.

2010 ஜனவரி 11]

54—

மருத்துவர்

வினா எண் 101360—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, சீர்காழி அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி அரசு மருத்துவமனைக்கு அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள முதுநிலை குடிமை மருத்துவர் மற்றும் உதவி மருத்துவர் பணியிட எண்ணிக்கை 6. இந்த 6-ல் முதுநிலை குடிமை மருத்துவர் 1, உதவி மருத்துவர் 5 பணியிடங்களும் தற்சமயம் ஒரு எலும்புமுறிவு, ஒரு குழந்தைகள் நலம், இரண்டு மயக்கவியல், ஒரு மகப்பேறு மற்றும் ஒரு எம்.பி.பி.எஸ். பயின்ற மருத்துவர்களைக் கொண்டு நிரப்பப்பட்டுள்ளது. இம்மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நிபுணரை நியமிக்க முதுநிலை குடிமை மருத்துவர் மற்றும் உதவி மருத்துவர் காலிப் பணியிடம் ஏதுமில்லை.

55—

நவீன கருவிகள்

வினா எண் 102759—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் மாவட்டம், உடுமலை வட்டம், குமரலிங்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அல்ட்ராசோனோகிராம் மற்றும் செமி ஆட்டோ அனலைசர் போன்ற நவீன கருவிகள் நடப்பு ஆண்டில் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

[2010 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருப்பூர் மாவட்டம், உடுமலை வட்டத்தில் கணியூர் மற்றும் குமரலிங்கம் ஆகிய இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் அல்ட்ராசோனோகிராம் மற்றும் செமி ஆட்டோ அனலைசர் ஆகிய நவீன கருவிகள் வாங்கி வழங்கப்பட்டுள்ளது. அவை தற்சமயம் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

56—

தொழிற்சாலை

வினா எண் 70309—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியில் தக்காளி சாறு தயாரிக்கும் தொழிற்சாலை துவக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டத்திற்கு அருகில் உள்ள சேலம் மாவட்டத்தில் தக்காளி உற்பத்தி அதிக அளவில் உள்ளது. எனவே, அந்த மாவட்டத்தில் இருந்து தக்காளி சாறு எளிதில் கிடைக்கப் பெற்று வருவதால், மேல்மலையனூர் வட்டாரத்தில், தக்காளி சாறு தயாரிக்கும் தொழிற்சாலையை அரசு அமைத்து நடத்த சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

57—

சிறு தொழில்

வினா எண் 70314—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

மேல்மலையனூர் தொகுதியில் கால்நடை தீவன சிறு தொழில் துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் தொகுதிக்கு அருகில் உள்ள பகுதிகளில் ஏற்கெனவே கால்நடை தீவன தொழிற்சாலை தனியார்மூலம் நடத்தப்பட்டு வருவதால், அரசுமூலம் மேற்படி தொழிற்சாலை அமைக்க திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

2. எனினும், மேற்படி தொழிற்சாலையைத் துவக்க தனியார் எவரேனும் முன்வந்தால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 22-2-2008 அன்று அறிவிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கை 2008-ன்படி தகுதியான இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களின் மதிப்பில் 15 சதவீத முதலீட்டு மானியம், உற்பத்தி துவக்கிய நாள் முதல் 36 மாதங்களுக்கு 20 சதவீதம் குறைந்த அழுத்த மின் மானியம், மகளிர், பட்டியலிடப்பட்ட இனம்/பழங்குடியினர், உடல் ஊனமுற்றோர் அரவாணிகள் ஆகியோர் தொழில் முனைவோராக இருக்கும்பட்சத்தில் 5 சதவீத கூடுதல் மானியம் (அதிகபட்சம் ரூ.2 இலட்சம்) மற்றும் குறைந்தபட்சம் 25 வேலையாட்களை பணியமர்த்தும் பட்சத்தில் கூடுதலாக 5 சதவீத மானியம் (அதிக பட்சம் ரூ.5 இலட்சம்) ஆகியவை வழங்கப்படும்.

58—

சிறு தொழில்

வினா எண் 70316—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கிடைக்கக்கூடிய மீன் கழிவிலிருந்து தீவனம் தயாரிக்கும் சிறு தொழில் தொடங்க அரசு முன்வருமா?

TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் கிடைக்கக்கூடிய மீன் கழிவிலிருந்து தீவனம் தயாரிக்கும் தொழில் தொடங்க அரசிடம் திட்டங்கள் ஏதும் பரிசீலனையில் இல்லை.

2. இருப்பினும் தனியார் தொழில் முனைவோர்கள் எவரேனும் மேற்படி தொழிலைத் துவங்க முன்வந்தால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 22-2-2008 அன்று அறிவிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை 2008-ன்படி மேல்மலையனூர் வட்டாரம் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளதால், தகுதியான இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களின் மதிப்பில் 15 சதவீதம் முதலீட்டு மானியம், உற்பத்தி துவங்கிய நாள் முதல் 36 மாதங்களுக்கு 20 சதவீதம் குறைந்த அழுத்த மின் மானியம், மகளிர், பட்டியலிடப்பட்ட இனம் / பழங்குடியினர், உடல் ஊனமுற்றோர், அரவாணிகள் ஆகியோர் தொழில் முனைவோராக இருக்கும்பட்சத்தில் 5 சதவீதம் கூடுதல் மானியம் (அதிகபட்சம் ரூ.2 இலட்சம்) மற்றும் குறைந்த பட்சம் 25 வேலையாட்களைப் பணியமர்த்தும்பட்சத்தில் கூடுதலாக 5 சதவீதம் மானியம் (அதிகபட்சம் ரூ.5 இலட்சம்) ஆகிய அனைத்து உதவிகளும் மாவட்ட தொழில் மையம்மூலம் வழங்கப்படும்.

59—

மண்பாண்ட தொழிற்சாலை

வினா எண் 70336—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியில் மண்பாண்ட தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் தொகுதியில் மண்பாண்ட தொழில்கள் அமைக்க திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

60—

வாசனை திரவிய தொழிற்சாலை

வினா எண் 70337—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியில் பூக்களிலிருந்து வாசனை திரவிய தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் வட்டாரத்தில், பூக்கள் சாகுபடி அதிக அளவில் இல்லாத காரணத்தினால், அரசால் வாசனை திரவிய தொழிற்சாலை அமைக்கும் சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

61—

தொழிற்சாலை

வினா எண் 70347—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியில் கிடைக்கும் மாம்பழத்தைக் கொண்டு மாம்பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டத்திற்கு அருகில் உள்ள சேலம் மாவட்டத்தில் மாம்பழ விளைச்சல் அதிக அளவில் உள்ளது. அந்த மாவட்டத்தில் இருந்து மாம்பழச்சாறு எளிதில் கிடைத்து

[2010 ஜனவரி 11

விடுவதால், மேல்மலையனூர் வட்டாரத்தில், மாம்பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலையை அரசே அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

62—

சிறு தொழிற்சாலைகள்

வினா எண் 71277—திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சி தொகுதியில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஊதுபத்தி, கற்பூரம் தயாரித்தல் போன்ற சிறு தொழிற்சாலைகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதியில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஊதுபத்தி, கற்பூரம் தயாரித்தல் போன்ற சிறு தொழிற்சாலைகள் அமைக்க அரசிடம் திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) வினா எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

63—

தொழிற்பேட்டை

வினா எண் 77087—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் தொழிற்பேட்டையில் உள்கட்டமைப்பு வசதிகளை சிட்கோமூலம் மேம்படுத்த அரசு முன்வருமா?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் தொழிற்பேட்டையில் 2009-2010 ஆம் ஆண்டில் உள்கட்டமைப்பு வசதிகளை ரூபாய் 40 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் மேம்படுத்துவதற்கு தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதில் ரூபாய் 16 இலட்சம் மைய அரசின் நிதி உதவியும், மீதி ரூபாய் 8 இலட்சம் பயனாளிகளின் பங்களிப்பும் ஆகும். மைய அரசின் ஒப்புதல் பெற்றவுடன் உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் தொடங்க தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் நடவடிக்கை எடுக்கும்.

64—

சுற்றுலாத் தலம்

வினா எண் 60679—திரு. குத்தாலம் க. அன்பழகன்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குத்தாலம் ஒன்றியம், திருமணஞ்சேரியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

சுற்றுலாத் துறை எந்த ஒரு பகுதியையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அப்பகுதிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு அங்கு தேவையான அடிப்படை வசதிகளை இத்துறை செய்து தருகிறது. குத்தாலம் தொகுதி, திருமணஞ்சேரி பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக 2004-2005 ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறை மூலம் ரூ.10.00 இலட்சமும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதிமூலம் ரூ.10.00 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஓய்வறை கட்டப்பட்டுள்ளது.

[2010 ஜனவரி 11

65—

சுற்றுலாத் தலம்

வினா எண் 64336—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, அமரகுந்தி ஊராட்சியிலுள்ள அருள்மிகு சொக்கநாதர் ஆலயம், அருள்மிகு அங்காளபரமேஸ்வரி ஆலயத்தைச் சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. தமிழ்நாட்டிலுள்ள முக்கிய சுற்றுலா இடங்கள் / அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்களின் முக்கியத்துவம் மற்றும் அங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு அங்கு தேவையான அடிப்படை வசதிகள் மட்டும் செய்து தருகிறது. தாரமங்கலம் தொகுதியிலுள்ள அருள்மிகு சொக்கநாதர் ஆலயம், அருள்மிகு அங்காளபரமேஸ்வரி ஆலயம் ஆகிய பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்து தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

66—

விளையாட்டு மையம்

வினா எண் 99056—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேட்டூர் பூங்கா வளாகத்தில் நீரூற்று சறுக்கு விளையாட்டு மையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், மேட்டூர் பூங்கா வளாகத்தில் நீரூற்று சறுக்கு விளையாட்டு மையம் அமைத்திடும் கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

67—

பூங்கா

வினா எண் 101127—திரு. ஞா. ஜான் ஜோசப்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, சிற்றாறு II சிவலோகம் பூங்காவை அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதி, சிற்றாறு II சிவலோகம் பூங்காவை அபிவிருத்தி செய்வது குறித்து திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

68—

சுற்றுலாத் தலம்

வினா எண் 104321—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, பணகுடி பேரூராட்சி, மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள குத்திரைப்பாய்ந்தான் நீர்வீழ்ச்சியினை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் :

தமிழ்நாடு சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. ஆனால், ஓர் இடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அங்கு தேவையான சுற்றுலா அடிப்படை வசதிகள் மட்டுமே செய்து வருகிறது. ராதாபுரம் தொகுதி, பணகுடி பேரூராட்சி, மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள குத்திரைப்பாய்ந்தான் நீர்வீழ்ச்சிப் பகுதியில் சுற்றுலா அடிப்படை வசதிகள் செய்தல் குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

69—

நினைவுச் சின்னம்

வினா எண் 97975—திரு. அ. தமிழரசு : மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1964-ல் புயலால் அழிந்த தனுஷ்கோடியில் நினைவுச் சின்னம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர் :

முன்னாள் தமிழக ஆளுநர் மேதகு செல்வி பாத்திமா பீவி அவர்களின் அறிவுரைப்படி ரூ.30,000 மதிப்பீட்டில் 1964-ல் புயலால் அழிந்த தனுஷ்கோடியில் நினைவுத் தூண் அமைக்கப்பட்டுள்ளது.

70—

ஒலி, ஒளிக் காட்சி

வினா எண் 104233—திரு. ரா. வரதராஜன் : மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகரில் பெருந்தலைவர் காமராஜர் நினைவு இல்லத்தில் ஒலி, ஒளிக் காட்சி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) விருதுநகரில் பெருந்தலைவர் காமராஜர் நினைவு இல்லத்தில் ஒலி, ஒளிக் காட்சி அமைக்க போதிய இட வசதி இல்லாததால், அவ்வில்லத்தில் ஒலி, ஒளிக் காட்சி அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

71—

சேமிப்புக் கிடங்கு

வினா எண் 87981—திரு. விடியல் எஸ். சேகர் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, முருங்கத் தொழுவில் விவசாய சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, முருங்கத் தொழுவில் சேமிப்புக் கிடங்கினை உபயோகப்படுத்துபவர்கள் (அது தனியாரோ, கூட்டுறவு மற்றும் அரசு நிறுவனங்களோ) மிகவும் குறைவாகவே உள்ளனர் என்பதால் அங்கு வாடகை இடங்களில் சேமிப்புக் கிடங்குகள் திறப்பதற்கு தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

72—

வீடுகள்

வினா எண் 70265—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை வட்டத்தில் வாதுவாடி, உடுக்கம்பாளையம், மலையாண்டிபட்டினம், சின்ன பொம்மன்சாலை, பாப்பாகுளம் ஆகிய பகுதிகளில் உள்ள நெசவாளர்களுக்கு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

மைய மற்றும் மாநில அரசுகளின் மானிய உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வந்த நெசவாளர் வீடு கட்டும் திட்டம் 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறாததால் உடுமலைப்பேட்டை வட்டத்தில் வாதுவாடி, உடுக்கம்பாளையம், மலையாண்டிப்பட்டினம், சின்ன பொம்மன்சாலை, பாப்பாகுளம் ஆகிய பகுதிகளில் உள்ள நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

73—

கைத்தறித் தொழிற்சாலை

வினா எண் 70348—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியத்தில் கைத்தறித் தொழிற்சாலை துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியத்தில் கைத்தறித் தொழிற்சாலை துவக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

74—

கொள்முதல் நிலையம்

வினா எண் 95372—திரு. வை. காவேரி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடியில் ஜவுளி உற்பத்தியாளர் சந்தை மற்றும் கொள்முதல் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) எடப்பாடியில் கோ-ஆப்டெக்ஸ் கிளை விற்பனை நிலையம் ஒன்று செயல்பட்டு வருவதாலும், சேலத்தில் கொள்முதல் செய்ய கோ-ஆப்டெக்ஸ் மண்டல அலுவலகம் உள்ளதாலும், எடப்பாடியில் மேலும் ஒரு கொள்முதல் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

75—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 103143—திருமதி ஜி. லதா: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, மேல்விஷாரம், இராணிப்பேட்டை, வேலூர் பகுதிகளில் தோல் பொருள் உற்பத்திப் பயிற்சி நிலையம் துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) வேலூரில் ஓர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் திறன்மிகு பயிற்சி மைய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தோல் பொருள் உற்பத்தித் தொழிற்பிரிவு 96 இருக்கைகளுடன் செயல்பட்டு வருகிறது. வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, மேல்விஷாரம், இராணிப்பேட்டை பகுதிகளின் தேவையைப் பூர்த்தி செய்ய இதுவே போதுமானதாக உள்ளதால், தோல் பொருள் உற்பத்தி தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அரசுக்கு உத்தேசம் இல்லை. இருப்பினும், இனி வருங்காலங்களில் தேவை ஏற்படின் தோல் பொருள் உற்பத்தித் தொழிற்பயிற்சி நிலையம் துவங்க பரிசீலிக்கப்படும்.

(ஆ) எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[2010 ஜனவரி 11

76—

தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

வினா எண் 103144—திருமதி ஜி. லதா: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, குடியாத்தம், வேலூர், மேல்விஷாரம், இராணிப்பேட்டை பகுதிகளில் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) வேலூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், 328 இருக்கைகளுடனும், இராணிப்பேட்டை அரசினர் அடிப்படை பயிற்சி மையம் 88 இருக்கைகளுடனும் செயல்பட்டு வருகிறது. மேலும், வாணியம்பாடியில் 2 தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் 320 இருக்கைகளுடனும், குடியாத்தத்தில் 2 தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் 160 இருக்கைகளுடனும், இராணிப்பேட்டையில் 1 தனியார் தொழிற்பயிற்சி மையம் 96 இருக்கைகளுடனும் செயல்பட்டு வருகின்றன. எனவே, குடியாத்தம் தொகுதிக்கு உட்பட்ட வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, மேல்விஷாரம், குடியாத்தம், வேலூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய பகுதிகளின் தேவையைப் பூர்த்தி செய்ய இத்தொழிற்பயிற்சி மையங்களே போதுமானதாக உள்ளதால் புதிய தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அரசுக்கு உத்தேசம் இல்லை.

(ஆ) எழாது.

77—

கோயில் வருமானம்

வினா எண் 17417—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

(அ) கோயம்புத்தூர், ஈச்சநாரி கோயிலின் கடைகள்மூலம் வருமானத்தைப் பெருக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர், ஈச்சநாரி, அருள்மிகு விநாயகர் திருக்கோயிலுக்குச் சொந்தமான கடைகள்மூலம் வருமானத்தைப் பெருக்கிட விதிகளுக்குட்பட்டு அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக 6 கடைகள் உள்ளன. திருக்கோயிலுக்கு வருமானம் கிடைக்கத்தக்க வகையில் தற்போது இந்த ஆறு கடைகளும் கீழ்க்காணும் வணிகப் பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன:—

லஷ்மி விலாஸ் வங்கி கடைகள்	—	2
திருக்கோயிலால் நடத்தப்படும் தேங்காய், பழ விற்பனைக் கடைகள்	—	2
பூக்கடை உரிமம்	—	1 கடை
திருக்கோயில் சீட்டு விற்பனை நிலையம்	—	1 கடை

78—

வாகனக் காப்பகம்

வினா எண் 29677—திரு. என். மாலைராஜா: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் உடனுறை காந்திமதி அம்மன் திருக்கோயிலுக்குப் பாத்தியப்பட்ட இடத்தை வாகனக் காப்பகமாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம் மற்றும் நகர், அருள்மிகு நெல்லையப்பர் அருள் தரும் காந்திமதி அம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமாக சுவாமி நெல்லையப்பர் நெடுஞ்சாலையில் 93 சென்ட் நிலம் உள்ளது. வருமானம் வரத்தக்க வகையில் இவ்விடத்தை கீழ்க்காணுமாறு பயன்படுத்திட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(i) *இதில் 41' X 16' பரப்பளவுள்ள காலிமனைப் பொது ஏலம்மூலம் குத்தகைக்கு விடப்பட்டு அங்கு தற்காலிக துணிக் கடை நடத்தப்பட்டு வருகிறது.*

(ii) *எஞ்சியுள்ள (சுமார் 39,892 சதுர அடி) காலிமனையினை சட்டவிதிகளுக்கு உட்பட்டு அங்காடிகள் நடத்திக் கொள்ளும்பொருட்டு பொது ஏலத்தின்மூலம் வாடகைக்குவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

எனவே, இவ்விடத்தை வாகனக் காப்பகமாக மாற்றிட நடவடிக்கை எடுக்க இயலாத நிலை உள்ளது.

79—

மருத்துவமனை வசதி

வினா எண் 43600—திரு. எம். அன்பழகன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மூலம் நடத்தப்படும் மருத்துவமனைக்கு அனைத்து வசதிகளையும் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலால் நடத்தப்படும் மருத்துவமனை, பஸ் நிலையம் அருகிலுள்ள

2010 ஜனவரி 11]

“வேலவன் விடுதியில்'' தற்பொழுது இயங்கி வருகிறது. இம்மருத்துவமனை வளாகத்தில் ஆங்கில மருத்துவமனை, கண் மருத்துவமனை மற்றும் இலவச சித்த வைத்தியசாலையும் இயங்கி வருகின்றன. இம்மருத்துவனைக்குத் தேவையான மருந்துகள் ஈரோடு, சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடியிலும், சித்த மருந்துகள் காந்திகிராமம் இலட்சுமி சேவா சங்கத்திலும் கொள்முதல் செய்யப்பட்டு, நோயாளிகளுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

80—

தங்கும் விடுதி

வினா எண் 69616—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மடப்புரம் அருள்மிகு பத்ரகாளியம்மன் கோயிலுக்கு நவீன வசதியுடன் தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மடப்புரம் அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயிலில் பக்தர்கள் வசதிக்காக நவீன வசதிகளுடன் கூடிய வழிபடுவோர் தங்கும் விடுதி கட்டும் பணிக்கு ரூ.30 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிருவாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

81—

தூர் வாருதல்

வினா எண் 79388—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2010 ஜனவரி 11

ஓமலூர் தொகுதி, காருவள்ளி சின்னதிருப்பதி தெப்பக்குளத்தை தூர்வார அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காருவள்ளி, சின்னதிருப்பதி அருள்மிகு பிரசன்ன வெங்கட்ரமணசுவாமி திருக்கோயில் சட்டப்பிரிவு 46(111)-ன்கீழ் பட்டியலில் சேர்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிர்வாகம் நிலை 2 செயல் அலுவலரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலின் தெப்பக்குளம் 1993-94 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு விவசாய பொறியியல் துறைமூலம் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டு, தடுப்புச்சுவர் கட்டப்பட்டு நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்தெப்பக்குளத்திற்கு நீர்வரத்து பகுதியில் வாய்க்கால் பகுதி ஆக்கிரமிப்பு செய்து விளை நிலங்களாக மாற்றியதால், நீர் வரத்து இல்லாமல் வரண்டு உள்ளது. மேலும் கடந்த 2008 அக்டோபர் மாதம் தேர்த் திருவிழாவின்போது தெப்பக்குளத்திலிருந்த முட்செடிகள் அகற்றப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டுள்ளது. இத்தெப்பக்குளம் சுத்தமாக இருப்பதால் தற்போது தூர்வார வேண்டிய அவசியம் எழவில்லை.

82—

கோயில் சீரமைப்பு

வினா எண் 84221—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை மாவட்டம், சிவகங்கை அருகே கருங்காலக்குடியில் உள்ள கலியுக மெய்ய அய்யனார் கோயிலைப் புதுப்பித்து, சீரமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம் மற்றும் வட்டம், கருங்காலக்குடி அருள்மிகு கலியுக மெய்ய அய்யனார் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில் ஆகும். எனவே, இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக இத்திருக்கோயிலைப் புதுப்பித்து சீரமைக்க இயலாது.

83—

தமிழ்நாடு இல்லம்

வினா எண் 102703—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு திருமலை திருப்பதியில் தமிழ்நாடு இல்லம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு திருமலை திருப்பதியில் தமிழ்நாடு இல்லம் கட்டுவதற்கு இந்து சமய அறநிலையத் துறை சார்பில் திட்டம் ஏதுமில்லை.

84—

பணியிடங்கள்

வினா எண் 48535—திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகராட்சிப் பள்ளிகளில் தேவைப்படும் ஆசிரியர் அலுவலர் பணியிடங்களை விரைந்து நிரப்ப அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

2009-2010 ஆம் கல்வி ஆண்டுக்கான காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு, அரசாணை (நிலை) எண் *146*, பள்ளிக் கல்வித் (வ.செ.*2*) துறை, நாள் *29-06-2009*-ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளது. அதில் மதுரை மாநகராட்சிப் பள்ளிகளுக்கு நேரடி நியமனம் மூலமாகக் கீழ்க்கண்ட பணியிடங்கள் நிரப்பிட அனுமதிக்கப்பட்டுள்ளது:

பட்டதாரி ஆசிரியர்கள்		*48*
உடற்கல்வி ஆசிரியர்கள்		*14*
மொத்தம்	..	*62*

85—

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்

வினா எண் 65859—திருமதி ஜி. லதா: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளில் பணம் கட்டிய அனைத்துப் பள்ளிகளுக்கும் வண்ணத் தொலைகாட்சிப் பெட்டிகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

பள்ளிகளுக்குத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க பள்ளிகளின் முகவரிகள் எல்காட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நிறுவனத்திலிருந்து வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் நேரடியாக பள்ளிகளுக்கு வழங்கப்படும். மேலும், மேற்படி பள்ளிகளுக்குத் தொலைகாட்சிப் பெட்டிகள் வழங்க சம்பந்தப்பட்ட பள்ளிகள் பணம் ஏதும் செலுத்த அவசியமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

86—

ஆசிரியர் பணியிடம்

வினா எண் 89353—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, முத்தம்பட்டி ஊராட்சி, முத்தம்பட்டி உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் பணியிடத்தை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2009-2010 ஆம் கல்வி ஆண்டுக்கான உத்தேச காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு, அரசாணை (நிலை) எண் 146, பள்ளிக் கல்வித் (வ.செ.2) துறை, நாள் 29-6-2009-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப காலியாக உள்ள ஆசிரியர் பணியிடத்தை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

87—

இருக்கை வசதி

வினா எண் 90540—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, ரெகுநாதபுரம் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு இருக்கை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, ரெகுநாதபுரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கி நிதி உதவி வழங்கும்

திட்டம் பகுதி *1* முதல் *7* வரையுள்ள கட்டம் XII-ன்கீழ் *23* கூடுதல் வகுப்பறைகளுக்கு *276* டெஸ்க், பெஞ்சுகள் மற்றும் ஆசிரியர்கட்கு *23* மேசை, நாற்காலிகள் மொத்தம் ரூ.*10,02,846/-* செலவில் டான்சி நிறுவனம்மூலம் வழங்கப்பட்டு மேற்கண்ட பள்ளி மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

88—

சுற்றுச் சுவர்

வினா எண் 100509—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மேலராங்கியன் நடுநிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் நகர்ப்புறத்திலுள்ள போக்குவரத்து நெரிசல் மிகுந்த இடங்கள் மற்றும் வனப் பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கு மட்டும் சுற்றுச் சுவர் அமைக்க மைய அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, மேலராங்கியின் நடுநிலைப் பள்ளி ஊர்புறத்தில் அமைந்துள்ளதால் அனைவருக்கும் கல்வி திட்டத்தில் சுற்றுச் சுவர் கட்ட இயலாத நிலை உள்ளது.

89—

முதன்மை கல்வி அலுவலகம்

வினா எண் 104165—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

(அ) அரியலூர் மாவட்டத்தில் முதன்மைக் கல்வி அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 27, பள்ளிக் கல்வி (ஆர்) துறை, நாள் 23-1-2009-ன்படி, அரியலூரை தலைமையிடமாகக் கொண்டு, அரியலூர் முதன்மைக் கல்வி அலுவலகம் தோற்றுவிக்கப்பட்டு 6-2-2009 முதல் இவ்வலுவலகம் செயல்பட்டு வருகிறது.

90—

இழப்பீடு வழங்குதல்

வினா எண் 46025 திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை பகுதிகளில் யானைகளால் சேதப்படுத்தப்பட்ட விளை நிலங்களுக்கு உரிய இழப்பீடு வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

பாதிக்கப்பட்ட மனுதாரர்களிடமிருந்து உரிய முறையில் மனுக்களைப் பெற்று மேற்படி விளை நிலங்களைத் தணிக்கை செய்து சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய நஷ்ட ஈடு வழங்கப்பட்டு வருகிறது.

தருமபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை பகுதிகளில் யானைகளால் ஏற்பட்ட பயிர் சேதத்திற்கு 2001 முதல் 2009 வரை வருட வாரியாக வழங்கப்பட்டுள்ள நிவாரணத் தொகை குறித்த விவரம் கீழ்வருமாறு:

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	வருடம்	பயிர் சேதங்களுக்கு நிவாரணம் கேட்டு வரப் பெற்ற மனுக்கள் எண்ணிக்கை	நிவாரணத் தொகை வழங்கிய விவரம் ரூபாய்
(1)	(2)	(3)	(4)
1.	2001–02	43	1,62,500/–
2.	2002–03	45	1,19,500/–
3.	2003–04	160	5,68,950/–
4.	2004–05	80	1,66,000/–
5.	2005–06	126	4,86,450/–
6.	2006–07	701	22,36,600/–
7.	2007–08	530	19,25,900/–
8.	2008–09	454	14,48,000/–
	மொத்தம்	2139	71,13,900/–

91—

சூரிய மின் வேலி

வினா எண் 78130—திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவட்டாறு தொகுதி, மலைப்பகுதி மக்களின் விவசாயப் பயிர்களைப் பாதுகாக்க அரசு ரப்பர் கழக 4 ஆம் கலெக்ஷன் ரேஞ்ச் முதல் வலியமலை வரை சூரிய மின் வேலி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

2009-2010 ஆம் ஆண்டு கன்னியாகுமரி கோட்டத்திற்கு 6.00 கி.மீ. தூரத்திற்கு சூரிய மின் வேலி அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. அதில் முக்கியத்துவம் கருதி பூதப்பாண்டி

2010 ஜனவரி 11]

சரகம் தெற்குமலை மேற்கு காப்புக்காட்டில் விவசாயிகளின் வாழை, மரச்சீனி போன்ற பயிர்களை காட்டுப் பன்றி, மிளா போன்ற மிருகங்களிடமிருந்து, காப்பாற்றும்பொருட்டு ராஜாவூர் முதல் கோழிக்கோட்டுப் பொத்தை வரை 3.00 கி.மீ. தூரத்திற்கு சூரிய மின் வேலி அமைக்கப்பட்டது. அடுத்து 3.00 கி.மீ. தூரத்திற்கு வீரப்புலி காப்புக்காடு அரசு ரப்பர் கழகம் 4-வது பால் சேகர நிலையத்திலிருந்து வலியமலை வரை, சூரிய மின்வேலி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

92—

மின் வேலி

வினா எண் 90911—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, பெரிய சாக்னாவூர், மகராசகடை, நலகொண்டலப்பள்ளி, நாரஸ்பள்ளி, முலுக்கல்பள்ளி ஆகிய பகுதிகளில் வனத் துறைமூலம் மின் வேலி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி வன மண்டலம், ஓசூர் வனக் கோட்டத்தில் காவேரிப்பட்டினம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வனப் பகுதிகளில் உயிர்சேதம்/பயிர்சேதம் ஏற்படும் இடங்களில் கீழ்க்காணும் திட்டங்களின்கீழ் 2009-2010 ஆம் ஆண்டில் சூரிய மின் வேலி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வரிசை எண்	திட்டத் தலைப்பின் பெயர்	செயல் இலக்கு (கிலோ மீட்டரில்)	நிதி இலக்கு (இலட்சத்தில்)
1.	4406 SD Project Elephant	5 கி.மீ.	8.00
2.	4406 Erection Solar Fence	5 கி.மீ.	8.00

ஓசூர் கோட்டத்தில் யானைகளால் உயிர் சேதம்/பயிர் சேதம் ஏற்படும் பகுதிகளில் சூரிய மின் வேலி அமைக்கப்பட்ட பின்னர் மற்ற வன விலங்குகளால் குறிப்பாக காட்டுப் பன்றி போன்ற விலங்குகளால் விவசாய நிலங்களில் சேதம் ஏற்படும் பகுதியினை, ஒட்டியுள்ள காப்புக்காடு எல்லையோரங்களில் மின் வேலி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

93—

மரக் கன்றுகள்

வினா எண் 94124—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி, பூமிநாயக்கன்பட்டி ஏரிகளில் பழவகை மரக்கன்றுகள் நடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

அரசாணை 2(D) எண் 45, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம்-6) துறை, நாள் 29-3-2007-ன்படி வருங்காலங்களில் ஏரி மற்றும் குளங்களில் தோட்டங்கள் எழுப்ப தடை உள்ளதால், ஏரிப் பகுதிகளில் மரம் நடவு செய்ய எந்தவொரு திட்டமும் அரசின் செயல்பாட்டில் இல்லை.

94—

பாதுகாப்பு

வினா எண் 101143—திரு. ஞா. ஜாண் ஜோசப்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளவங்கோடு தொகுதி, களியல் வருவாய்க் கிராமத்தில் காட்டு குரங்குக்கள் மற்றும் காட்டுப் பன்றிகள் தொல்லையைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காட்டிலிருந்து ஊருக்குள் வரும் குரங்குகளை கூண்டு வைத்து பிடித்து அடர்ந்த காட்டின் உட்பகுதியில் கொண்டுவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. களியல் வருவாய்க் கிராமத்தைப் பொறுத்தவரை காட்டுப் பன்றிகள் தொல்லைக் குறித்து இதுவரையிலும், எவ்வித புகார் மனுக்களும் களியல் கிராமத்திலிருந்தோ அல்லது பொதுமக்களிடமிருந்தோ வரப்பெறவில்லை. அவ்வாறு வரும்பட்சத்தில், சம்பந்தப்பட்ட நபர்களுடைய பாதிக்கப்பட்ட விளை நிலங்களுக்கு, இழப்பீடு வழங்குவது குறித்து தகுந்த ஆதாரங்களுடன் சமர்ப்பித்தால், நிவாரணத் தொகை வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். களியல் சரகத்திலிருந்து ஊருக்குள் புகுந்த குரங்குகள் கூண்டு வைத்து பிடிக்கப்பட்டு கீழ்க்கண்ட தேதிகளில் காட்டில் கொண்டு விடப்பட்டுள்ளது.

தேதி	*குரங்குகளின் எண்ணிக்கை*	*பிடிக்கப்பட்ட இடம்*	*கொண்டு சென்று விடப்பட்ட வனப்பகுதி*
12–12–2008	26	ஆலஞ்சோலை	கோதையார்
01–01–2009	9	நெட்டா	கோதையார்
02–03–2009	9	போங்காலை	கோதையார்
05–03–2009	11	போங்காலை	கோதையார்
07–03–2009	7	போங்காலை மருத்துவமனை பக்கம்	கோதையார்
மொத்தம்	62		

95—

அகழிகள்

வினா எண் 101144—திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, சிற்றார் சிலோன் காலனியில் யானைகள் வருவதைத் தடுக்க அகழிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதி, சிற்றார் சிலோன் காலனிப் பகுதியானது அரசு ரப்பர் கழகம், சிற்றார் கோட்டத்தைச் சார்ந்த பகுதியாகும். இப்பகுதியில் வரும் யானைகளைத் தடுப்பதற்காக 4.30 கி.மீ. தூரத்திற்கு 2008-2009 ஆம் ஆண்டில் சூரிய மின்வேலி அரசு ரப்பர் கழகத்தால் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், யானைகளால் உயிர் சேதம்/பயிர் சேதம் குறித்து அப்பகுதி மக்களிடமிருந்து ஏதேனும் விண்ணப்பங்கள் பெறப்பட்டால், அவற்றிற்கு நிவாரணம் வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

96—

கடனுதவி

வினா எண் 97897—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்ட ஊனமுற்ற இளைஞர்களுக்கு உலகளாவிய கணினி தொகுப்பு அறிதல் மையம் அமைக்க, கடனுதவி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில்; எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

2010 ஜனவரி 11]

(ஆ) சிவகங்கை மாவட்டத்தில் உள்ள ஊனமுற்ற இளைஞர்களில் உலகளாவிய கணினி தொகுப்பு அறிதல் மையம் அமைக்க விரும்புவோர், தமது கருத்துருவை திட்ட மதிப்பீடு பட்டியலுடன் இணைத்து, தேசிய ஊனமுற்றோர் நிதி வளர்ச்சிக் கழகத் திட்டத்தின்கீழ் மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலரின் பரிந்துரையின்பேரில், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள்மூலம் அதிகபட்சமாக ரூ.3.00 இலட்சம் வரை குறைந்த வட்டி விகிதத்தில் கடனுதவி பெற இயலும். இதற்கான விண்ணப்பப் படிவத்தினை சிவகங்கை மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்கலாம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

97—

பட்டா

வினா எண் 43545—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாபுரம் வட்டம், இராதாபுரம் ஊராட்சி, பாவேந்தர் பாரதிதாசன் நகரில் வசித்து வரும் தாழ்த்தப்பட்ட இன மக்களுக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

இராதாபுரம் வட்டம், இராதாபுரம் ஊராட்சி, பாவேந்தர் பாரதிதாசன் நகரில் புல எண் 440/1ஏ2-ல் ஆதி திராவிடர்கள் 42 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

98—

மீன் உற்பத்தி

வினா எண் 49980—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 ஜனவரி 11

(அ) வால்பாறை தொகுதி, ஆழியார் அணையில் விரால், கட்லா, ரோகு, மொய் மீன் மற்றும் மிருகால் போன்ற மீன் வகைகள், பரம்பிக்குளம் மற்றும் சோலையார் அணைகளில் சில்வர் மீன் மற்றும் புல் கெண்டை போன்ற மீன்களின் உற்பத்தியை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆழியார் மற்றும் சோலையார் நீர்த்தேக்கங்களில் கட்லா, ரோகு மற்றும் மிருகால் போன்ற பெருங்கெண்டையின மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு, மீன்கள் வளர்ந்த பின்னர் பிடிக்கப்பட்டு, பொதுமக்களுக்கு அரசு நிர்ணயம் செய்யும் விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன. பரம்பிக்குளம் அணை நீர்ப்பகுதி, கேரளா வனப் பகுதியிலுள்ளது. சில்வர், கெண்டை மற்றும் புல் கெண்டை போன்ற மீன் இனங்கள் நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்படுவதில்லை.

99—

மீன் ஏற்றுமதி

வினா எண் 51663—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, ஆழியார் அணை, பரம்பிக்குளம் அணை, சோலையார் அணை மற்றும் நீரார் அணை ஆகிய அணைகளிலிருந்து மீன்பிடித்து, பதப்படுத்தி வெளிநாட்டிற்கு அனுப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

வால்பாறை தொகுதி, ஆழியார் அணையில் பிடிக்கப்படும் மீன்கள், ஆழியார் பகுதியில் உள்ள மக்களுக்கும், உடுமலைப்பேட்டை, கோயம்புத்தூர் நகரில் உள்ள மீன் வளர்ச்சிக்

2010 ஜனவரி 11]

கழக மீன் விற்பனை அங்காடிமூலமும் விற்பனை செய்யப்படுகின்றன. பரம்பிக்குளம் அணை, நீர்ப்பகுதி கேரளா வனப் பகுதியிலுள்ளது. நீரார் அணை, தமிழ்நாட்டின் கட்டுப்பாட்டிலுள்ள வனப் பகுதியிலுள்ளது. சோலையார் அணையில் பிடிக்கப்படும் மீன்கள் உள்ளூர் மக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. எனவே, ஆழியார் மற்றும் சோலையார் நீர்த்தேக்கங்களில் பிடிக்கப்படும் மீன்கள் முழுவதும் உள்ளூரிலேயே விற்பனை செய்யப்பட்டுவிடுவதால், மீன்களைப் பதப்படுத்தி வெளிநாட்டிற்கு அனுப்பும் சாத்தியக்கூறுகள் இல்லை.

100—

இராட்டைகள் பழுதுநீக்கம்

வினா என் 106059—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நூல் நூற்போர் பயன்படுத்தும் பழைய இராட்டைகளைப் பழுதுபார்க்க கதர் கிராமத் தொழில் வாரியம் ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) 2007-2008 ஆம் ஆண்டு அரசிடமிருந்து பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.30.00 இலட்சம் பெறப்பட்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள அலகுகளில் பணிபுரியும் நூற்பாளர் பயன்படுத்தும் 784 பழைய இராட்டைகள் பழுதுநீக்கம் செய்யப்பட்டு, நல்லமுறையில் இயங்கி வருகின்றன.

மேலும், 2009-2010 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.5.00 இலட்சம் பெறப்பட்டு, 55 இராட்டைகள் பழுதுநீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினா எழவில்லை.

[2010 ஜனவரி 11

பட்டியல் 8

1—

சங்கமம் நிகழ்ச்சிகள்

வினா எண் 102079—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகம் முழுவதும் உள்ள கிராமப்புற தாரை, தப்பட்டை கலைஞர்களைக் கண்டறிந்து சங்கமம் நிகழ்ச்சிகள் மாவட்ட தலைநகரங்களில் நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தமிழகம் முழுவதும் உள்ள கிராமப்புற தாரை, தப்பட்டை கலைஞர்களைக் கண்டறிந்து கலை பண்பாட்டுத் துறையின்கீழ் உள்ள மண்டலக் கலை பண்பாட்டு மையங்களின்மூலம் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், தாரை, தப்பட்டை கலைஞர்கள் நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு அவர்களுக்குப் பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. மேலும், சுற்றுலாத் துறையுடன் இணைந்து நடத்தப்படும் விழாக்களில் அக்கலைஞர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. மாவட்டங்களைப் பொறுத்தவரையில், அந்தந்த மாவட்டங்களில் நடைபெறும் விழாக்களில் மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் மூலம் தாரை, தப்பட்டை கலைஞர்களுக்கு நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2—

கலைப் பயிற்சிகள்

வினா எண் 107543—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அழிந்து வரும் தமிழர் விளையாட்டுகளான ஒயிலாட்டம், சிலம்பாட்டம் போன்ற விளையாட்டுகளை ஊக்குவிக்கவும், இளைஞர்களிடம் இது பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

அழிந்து வரும் தமிழர் விளையாட்டுகளான ஒயிலாட்டம், சிலம்பாட்டம் போன்ற விளையாட்டுகளை ஊக்குவிக்கவும், இளைஞர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் கலை பண்பாட்டுத் துறையின்மூலம் கலைப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. துறை சார்பாக நடத்தப்பெறும் விழாக்களில் ஒயிலாட்டம், சிலம்பாட்டம் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதனைத் தவிர நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்மூலம் ஒயிலாட்டம், சிலம்பாட்டம் ஆகியன நாட்டுப்புறக் கலைகளாகச் சேர்க்கப்பட்டு இக்கலைஞர்களுக்கு நல வாரியம்மூலம் உறுப்பினர் அட்டை வழங்கப்படுவதுடன், அவர்களுக்கும் பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், 100 கலைகள் கண்டறியப்பட்டு, அவற்றில் ஒயிலாட்டம், சிலம்பாட்டம் ஆகிய கலைகள் இடம் பெற்றுள்ளன. இவ்வகையில் நல்ல விழிப்புணர்வை அரசு ஏற்படுத்துகிறது.

3—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 3660—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், கோட்ட மேட்டுப்பட்டி ஊராட்சி, 2-வது வார்டு பகுதி மற்றும் மோனப்பாறை பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், மேட்டுப்பட்டி ஊராட்சி, 2-வது வார்டு பகுதி, கோட்ட மேட்டுப்பட்டி குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இங்கு ஏற்கெனவே 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

உள்ளதால், தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அவசியம் இல்லை. மேலும், மோனப்பாறை என்ற மோளப்பாறை குடியிருப்புக்கு *2006-2007* ஆம் ஆண்டில் *10,000* லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு மக்கள் பயன்பாட்டிலுள்ளது.

4—

கான்கிரீட் சாலை

வினா எண் 6868—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் பேரூராட்சி, வார்டு எண் 9, நேரு நகர் பிரதான சாலையிலிருந்து சங்கர் நகர் வரை கான்கிரீட் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சி, 9-வது வார்டு, நேரு நகர் பிரதான சாலையிலிருந்து சங்கர் நகர் வரை கான்கிரீட் சாலை அமைக்க தெரிவிக்கப்பட்ட இடம் முத்தநாயக்கன்பட்டி புதூர், காடம்பட்டியைச் சார்ந்த கோவிந்த செட்டியார் மகன் திரு. ஜி. கிருஷ்ணன் மற்றும் அவரது மனைவி திருமதி சின்னம்மாள், க/பெ. ஜி. கிருஷ்ணன் ஆகியோருக்குச் சொந்தமான இடமாகும். மேற்படி இடத்தினை ஓமலூர் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்படவில்லை. மேற்படி இடத்தினை பேரூராட்சிக்கு ஒப்படைக்கக்கோரி நில உரிமையாளர்களுக்கு ஓமலூர் பேரூராட்சி செயல் அலுவலரால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி நிலம் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்படும்பட்சத்தில், மனைப் பிரிவு விதிகளுக்கு உட்பட்டு மன்ற அங்கீகாரம் பெற்று கான்கிரீட் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

2010 ஜனவரி 11]

5—

சாலை வசதி

வினா எண் 7551—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ப்வானி தொகுதி, தாளபாளையத்திலுள்ள மயானத்திற்கு சாலை வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒலகடம் பேரூராட்சிக்கு உட்பட்ட தாளபாளையத்திலுள்ள மயானத்திற்குச் செல்லும் பாதையை 2007-08 ஆம் ஆண்டு அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் ரூ.5,00,000/- மதிப்பீட்டில் மேற்படி மயானத்தை மேம்பாடு செய்து, பாதையில் கல்வெட்டு அமைத்து வடிவமைக்கப்பட்டுள்ளது.

6—

கழிவுநீர் கால்வாய்

வினா எண் 7566—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, தாளபாளையம் மேற்குத் தெரு முதல் கிழக்குத் தெரு வரை கழிவு நீர் கால்வாய் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒலகடம் பேரூராட்சிக்கு உட்பட்ட தாளபாளையம் மேற்குத் தெரு முதல் கிழக்குத் தெரு வரை 2006-07 ஆம் ஆண்டு 12-வது நிதிக் குழு மானியம் திட்டத்தில் ரூ.1,20,000/- மதிப்பீட்டில் கழிவு நீர்க் கால்வாய் அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

7—

அடிப்படை வசதி

வினா எண் 8087—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலையில், 9-வது வார்டு காமராஜ் நகரில் அடிப்படை வசதி செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* ஈரோடு மாவட்டம், காங்கேயம் சட்டமன்ற தொகுதி, சென்னிமலையில், 9-வது வார்டு, காமராஜ் நகரில் சாலை வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து தரப்பட்டு தற்போது பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

8—

தார்ச் சாலை

வினா எண் 11565—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சி, சூரமங்கலம் சாலையில் இருந்து பாட்டப்பன் கோவில் தெரு வழியாக செல்லும் ஓமலூர் சாலை வரை உள்ள சாலையைத் தார்ச் சாலையாக மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம், தாரமங்கலம் பேரூராட்சிக்குட்பட்ட சூரமங்கலம் சாலையிலிருந்து பாட்டப்பன் கோவில் வழியாக ஓமலூர் சாலை வரை 1,300 கி.மீ. நீளத்திற்கு தார்ச் சாலை அமைக்கும் பணி ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் 2006-2007 ஆம் ஆண்டு நபார்டு சாலைகள் மேம்பாடுத் திட்டத்தின்கீழ் செய்து முடிக்கப்பட்டு, தற்போது பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

9—

மினி பவர் பம்பு

வினா எண் 11566—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சி 9-வது வார்டு முனியப்பன் கோவில் பாவடியில் மினி பவர் பம்பு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் பேரூராட்சி, 9-வது வார்டு முனியப்பன் கோவில் தெரு, பாவடி பகுதியில் 75 குடும்பங்கள் உள்ளன. தற்போது காவிரி குடிநீர்த் திட்டத்தில் 3 பொதுக் குழாய்கள்மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அப்பகுதியில் 55 தனியார் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு உள்ளது. முனியப்பன் கோவில் முன்பாக ஒரு போர்வெல் அமைக்கப்பட்டு அதிலிருந்தும் போதுமான அளவிற்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்பதால் புதியதாக மினி பவர் பம்பு அமைக்க வேண்டிய நிலை எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2010 ஜனவரி 11

10—

சிறு பாலம்

வினா எண் 15909—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் பேரூராட்சி 14-வது வார்டு, கடை வீதி, சர்க்கார் கிணறு அருகில் மற்றும் சுதந்திர வனிதா மருத்துவமனை அருகில் சிறு பாலம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சி 14-வது வார்டு, கடை வீதி சர்க்கார் கிணறு அருகில் இருபுறமும் செல்லும் சாலையில் கல்வெர்ட் அமைக்கப்பட்டு, அதன்மீது தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. சுதந்திர வனிதா மருத்துவமனை எதிரில் இரண்டு குடியிருப்புகள் மட்டுமே உள்ளன. அவ்விடத்தில் கருங்கற்களைக்கொண்டு ஒரு சிறு பாலம் அமைக்கப்பட்டுள்ளது என்பதால் மேற்படி இடங்களில் சிறு பாலம் அமைக்க வேண்டிய நிலை எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

11—

மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி

வினா எண் 20804—திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, விராலிமலை ஒன்றியம், கல்குடி, கொடும்பாளூர் ஊராட்சி, வடகாட்டுப்பட்டியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

(அ) மற்றும் *(ஆ)* குளத்தூர் தொகுதி, விராலிமலை ஒன்றியம், கல்குடி மற்றும் கொடும்பாளூர் ஊராட்சி, வடுகாட்டுப்பட்டியில் ஏற்கெனவே மக்கட்தொகைக்கேற்ப மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு முழு அளவில் குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளதால், இக்குடியிருப்புகளுக்கு கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அவசியம் இல்லை.

12—

சுற்றுச் சுவர்

வினா எண் 44456—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் கடற்கரை பூங்காவைச் சுற்றி சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

(அ) மற்றும் *(ஆ)* இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை தொகுதிக்குட்பட்ட மண்டபம் பேரூராட்சியில் உள்ள கடற்கரை பூங்காவைச்சுற்றி மண்டபம் ஊராட்சி ஒன்றியத்தால் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

13—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 48292—திரு. எஸ். ஜெயபால்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, வெள்ளிமலை பேரூராட்சி, வருக்கத்தட்டு முதல் வெள்ளிமலை அருள்மிகு முருகன் கோவில் செல்லும் சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதிக்குட்பட்ட வெள்ளிமலை பேரூராட்சியில் 2006-2007 ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் வருக்கத்தட்டு முதல் வெள்ளிமலை முருகன் கோவில் வரை செல்லும் சாலை தார்ச் சாலையாக மாற்றப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

14—

மின் விளக்குகள்

வினா எண் 56002—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி மயானத்திற்குக் கூடுதலாக மின் விளக்குகள் மற்றும் சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சியில் கோட்டை மற்றும் புதூரில் இரு மயானங்கள் உள்ளன. மேற்படி மயானங்களில் ஏற்கெனவே 2 சோடியம் விளக்குகள் அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. மேலும் பகுதி-2 திட்டத்தின்கீழ் கூடுதலாக 2 அடர்மின் விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அப்பேரூராட்சியில் உள்ள மயானங்களுக்கு சுற்றுச் சுவர் அமைக்க தோராயமாக ரூ.10.00 இலட்சம் செலவாகும். இச்செலவினத்தை திருப்புவனம் பேரூராட்சியிலிருந்து மேற்கொள்ள போதிய நிதி ஆதாரம் இல்லை. வேறு திட்ட நிதியிலிருந்து மேற்படி பணியினை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு ஏதும் கிடைக்கப்பெறவில்லை. எனவே, இப்பணியினை மேற்கொள்ள அரசிமிடமிருந்து நிதி பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

2010 ஜனவரி 11]

15—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 58049—திரு. செ. பொன்னுதுரை: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெருந்துறை தொகுதி, பள்ளபாளையம் பேரூராட்சி, மல்லம் பாளையத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, பள்ளபாளையம் பேரூராட்சி, வார்டு எண் 14, அய்யன்வலசில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டு அய்யன்வலசு மற்றும் மல்லம்பாளையம் ஆகிய ஊர்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மல்லம்பாளையத்திற்கு போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அவசியம் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

16—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 70177—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, கல்லாபுரம் ஊராட்சி, மயிலாடும்பாறை மற்றும் கரட்டுப்பதி செட்டில்மெண்ட் பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை ஒன்றியம், கல்லாபுரம் ஊராட்சி, மாவிழம்பாறை என்கிற மயிலாடும்பாறை மற்றும் கரட்டுப்பதி என்கிற கரட்டுப்பதி செட்டில்மெண்ட் ஆகிய இரு குடியிருப்புகளுக்கு, தற்போது பணிகள் நடைபெற்று வரும் மடத்துக்குளம், சங்கரமநல்லூர், கொமரலிங்கம், கணியூர் பேரூராட்சிகள் மற்றும் உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் மற்றும் குமரமங்கலம், ஒன்றியங்களைச் சேர்ந்த 112 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் முறையே 10,000 லிட்டர் மற்றும் 5,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்மூலம் குடிநீர் செப்டம்பர் 2010-க்குள் வழங்க இலக்கிடப்பட்டுள்ளது.

17—

வணிக வளாகம்

வினா எண் 90853—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் தொகுதி, ஓமலூர் பேருந்து நிலையத்தில் வணிக வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

சேலம் மாவட்டம், ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையத்தில் ரூ.13.00 இலட்சம் மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டுவதற்கு சென்னை பேரூராட்சிகள் ஆணையர் அவர்களால் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வணிக வளாகம் கட்டுவதற்கான அங்கீகார வரைபடம் சேலம் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களிடமிருந்து பெற்று தமிழ்நாடு நகர்புற உள்ளூர் அடிப்படை நிதியுதவிக் கழகத்தின் அனுமதியும் (TUFIDCO) பெற்று பேருந்து நிலையத்தில் வணிக வளாகம் கட்டப்படும்.

2010 ஜனவரி 11]

18—

மகளிர் சுகாதார வளாகம்

வினா எண் 102952—திரு. செ. பொன்னுதுரை: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதி, பெத்தாம்பாளையம் பேரூராட்சி, 15-வது வார்டில் திருமூர்த்தி நகர், கருமாண்டிசெல்லபாளையம் பேரூராட்சி, வெங்கமேடு காலனியில் மகளிர் சுகாதார வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, பெத்தாம்பாளையம் பேரூராட்சி, வார்டு எண் 15, திருமூர்த்தி நகரில் 20 வீடுகள் மட்டுமே உள்ளன. பெருந்துறை தொகுதி, கருமாண்டிசெல்லபாளையம் பேரூராட்சி, வார்டு எண் 7, வெங்கமேட்டுப்பகுதியில் உள்ள பொதுமக்கள் தற்போது இப்பகுதிக்கு அருகில் உள்ள வாரச் சந்தையில் அமைக்கப்பட்டுள்ள கழிப்பிடத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். இப்பகுதி மக்களுக்கு மகளிர் சுகாதார வளாகம் அமைக்க போதிய இடவசதி ஏதுமில்லாததால் கூடுதலாகக் கழிப்பிடம் கட்ட இயலவில்லை.

19—

நகராட்சி

வினா எண் 104145—திரு. வை. காவேரி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நங்கவள்ளி, வனவாசி பேரூராட்சிகளை ஒருங்கிணைத்து நங்கவள்ளி நகராட்சியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், நங்கவள்ளி, வனவாசி பேரூராட்சிகளை ஒருங்கிணைத்து நங்கவள்ளி நகராட்சியாக மாற்றம் செய்ய கருத்துரு ஏதும் நிலுவையில் இல்லை.

20—

விரிவுபடுத்துதல்

வினா எண் 104783—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய வேலை உறுதியளிப்புத் திட்டத்தை பேரூராட்சி மன்றங்களுக்கும் விரிவுபடுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தேசிய வேலை உறுதியளிப்புத் திட்டமானது மத்திய அரசின் நிதியுதவியுடன் கிராம ஊராட்சிகளில் மட்டுமே செயல்படுத்தப்பட்டு வரும் திட்டமாகும். எனவே, நகர்புற உள்ளாட்சி அமைப்பான பேரூராட்சிகளில் தேசிய வேலை உறுதியளிப்புத் திட்டத்தினை செயல்படுத்த வழிவகை இல்லை.

21—

மின்மாற்றி

வினா எண் 54398—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை அரசு மருத்துவமனைகளில் மின் அழுத்தக் குறைவு ஏற்படுவதைத் தடுக்கவும், மின்மாற்றி அமைக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை அரசு மருத்துவமனை முன்பாக கடந்த 16-9-2008 அன்று APDRP திட்டத்தில் புதிய மின்மாற்றி 100 கே.வி.ஏ. திறனுடன் நிறுவப்பட்டுள்ளது. மேலும் மருத்துவமனைக்கு ஒருமுனை மின் இணைப்பு மட்டுமே இருந்தது. தற்போது கூடுதல் மின்பளு வழங்கப்பட்டு கடந்த 31-3-2009 அன்று மும்முனை மின் இணைப்பு வழங்கப்பட்டு, மின்னழுத்தக் குறைவின்றி சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

22—

மின் விநியோகம்

வினா எண் 55119—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பெத்தநாயக்கனூர் மற்றும் காளியாபுரம் ஊராட்சி குடியிருப்புப் பகுதிகளில் மின்தடை ஏற்படுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, பெத்தநாயக்கனூர் மற்றும் காளியாபுரம் ஊராட்சி குடியிருப்புப் பகுதிகளுக்கு, 22 கி.வோ. பெத்தநாயக்கனூர் மற்றும் ஆளியார் உயர் மின்னழுத்த மின்பாதைகள்மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட இரு மின்பாதைகளும், அடர்ந்த தென்னை மரத்தோப்புகளுக்கு இடையே செல்வதால், காற்று மற்றும் மழைக்காலங்களில் தென்னை மட்டை விழுந்து அவ்வப்பொழுது மின்தடை ஏற்படுகிறது. மின்தடைகள் அவ்வப்பொழுது சரிசெய்யப்பட்டு உடனுக்குடன் மின் விநியோகம் சீராக்கப்படுகிறது. மின்தடங்கலைத் தவிர்க்க சிறப்பு தரை ரோந்துப் பணி மேற்கொள்ளப்பட்டு, தென்னை மட்டைகள் மற்றும் இதர மரக் கிளைகள் அகற்றப்பட்டு, தடையில்லா மின்சாரம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

[2010 ஜனவரி 11

23—

மின் கம்பிகள்

வினா எண் 55872—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் பேரூராட்சி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி மற்றும் வால்பாறை நகராட்சி ஆகிய பகுதிகளில் உள்ள மின் கம்பிகளை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். வால்பாறை தொகுதி, கோட்டூர் பேரூராட்சி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி மற்றும் வால்பாறை நகராட்சி ஆகிய பகுதிகளில் உள்ள மின் கம்பிகள் மாற்றியமைக்கப்பட்டன.

24—

மின்மாற்றிகள் அமைத்தல்

வினா எண் 64926—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், கூரம், வதியூர், உழக்கோல்பட்டு ஆகிய கிராமங்களுக்கு அதிக மின்னழுத்தம் உள்ள புதிய மின்மாற்றிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், கூரம் பகுதியில் ஒரு புதிய 100 கே.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றி 6-3-2009 அன்றும், வதியூர் மற்றும்

2010 ஜனவரி 11]

உழக்கோல்பட்டு கிராமங்களுக்குக் கூடுதலாக ஒரு புதிய 63 கே.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றி 16-3-2009 அன்றும் இயக்கி வைக்கப்பட்டது.

25—

பயிர் சாகுபடி

வினா எண் 44286—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், தவத்தாரேந்தலில் மல்லிகைப்பூ பயிர் செய்யவும் மற்றும் மானாமதுரையில் முள்ளங்கி பயிரிடவும் விவசாயிகளுக்கு உதவ அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆம். மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம் தவத்தாரேந்தலில் மல்லிகைப்பூ பயிர் விதைக் கன்றுகள் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்கீழ் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. இத்துடன் சாகுபடிமுறை குறித்தும் விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மானிய விலையில் காய்கறி விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) தற்போது இத்திட்டம் நடைமுறையில் உள்ளது.

26—

மஞ்சள் சாகுபடி

வினா எண் 46485—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 ஜனவரி 11

(அ) மானாமதுரை பகுதியில் மஞ்சள் கிழங்குகள் சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை பகுதியில் மஞ்சள் உற்பத்தி செய்ய தோட்டக்கலைத் துறை விரிவாக்க அலுவலர்கள்மூலம் மஞ்சள் சாகுபடி தொழில்நுட்பங்களும் மற்றும் குன்றக்குடியில் உள்ள வேளாண் அறிவியல் மையம்மூலம் பயற்சிகளும் மஞ்சள் சாகுபடி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் மேலும் மஞ்சள் சாகுபடி செய்ய முன்வரும்பட்சத்தில், தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்கீழ் ஊக்குவிக்கப்படுவார்கள்.

27—

பழ உற்பத்தி

வினா எண் 47479—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் மாம்பழம், திராட்சை மற்றும் ஆப்பிள் பயிரிடவும், உற்பத்தியைப் பெருக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் மா பயிர் செய்ய ஏதுவான சூழ்நிலை உள்ளது.

2010 ஜனவரி 11]

திராட்சை, ஆப்பிள் போன்றவை சாகுபடி செய்திட உகந்த சூழ்நிலை இல்லை.

(ஆ) மா சாகுபடி நடப்பு ஆண்டில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

28—

விரிவாக்க மையம்

வினா எண் 86376—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், பண்ணந்தூர் பகுதியில் வேளாண்மை விரிவாக்க மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், காவேரிப்பட்டினத்தில் ஒரு பிரதான வேளாண்மை விரிவாக்க மையமும், நாகரசம்பட்டி மற்றும் அரசம்பட்டி ஆகிய ஊர்களில் தலா ஒரு துணை வேளாண்மை விரிவாக்க மையமும் ஆக மொத்தம் 3 வேளாண்மை விரிவாக்க மையங்கள் இயங்கி வருகின்றன. பண்ணந்தூரில் ஏற்கெனவே இயங்கி வந்த துணை வேளாண்மை விரிவாக்க மையத்தில் விற்பனை மிகவும் குறைவாக இருந்த காரணத்தால், அதை மூடும் நிலை ஏற்பட்டுவிட்டது. எனவே, மேற்கண்ட மையங்களிலும், காரியமங்கலத்திலும் இயங்கி வரும் வேளாண்மை விரிவாக்க மையங்கள், பண்ணந்தூர் பகுதிக்கு அருகில் உள்ளதாலும், இந்த மையங்களுக்குச் சென்று விவசாயிகள் விதைகளை எளிதில் பெற்றுக்கொள்ள ஏதுவாக, அடிக்கடி பயணம் செய்ய பேருந்து வசதி உள்ளதாலும், பண்ணந்தூர் பகுதிக்கு துணை வேளாண்மை விரிவாக்க மையம் தேவையில்லை.

[2010 ஜனவரி 11

29—

அறுவடை இயந்திரம்

வினா எண் 93246—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, கிருஷ்ணாபுரம், அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு தொழில்நுட்பத்துடன் கூடிய கரும்பு அறுவடை இயந்திரங்கள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஒரு கரும்பு அறுவடை இயந்திரத்தை தாய்லாந்திலிருந்து இறக்குமதி செய்து கரும்பு விவசாயிகளுக்குச் செயல் விளக்கம் செய்து காண்பித்து வருகிறது. மேலும் ஒரு அறுவடை இயந்திரம் கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் இறக்குமதி செய்யப்பட உள்ளது.

(ஆ) ஆம். அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2009-2010 அரைவைப் பருவத்திற்கு கரும்பு அறுவடை செய்ய ஒரு கரும்பு அறுவடை இயந்திரம் தேசிய கூட்டுறவு அபிவிருந்திக் கழகம் புதுடெல்லி/மத்திய கூட்டுறவு வங்கியிடமிருந்து நிதி பெற்று வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

30—

அறுவடை இயந்திரம்

வினா எண் 98357—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கிருஷ்ணாபுரம் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பு அறுவடை செய்யும் இயந்திரங்கள் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஒரு கரும்பு அறுவடை இயந்திரத்தை தாய்லாந்திலிருந்து இறக்குமதி செய்து கரும்பு விவசாயிகளுக்குச் செயல் விளக்கம் செய்து காண்பித்து வருகிறது. மேலும் ஒரு அறுவடை இயந்திரம் கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் இறக்குமதி செய்யப்பட உள்ளது.

அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2009-2010 அரைவைப் பருவத்திற்கு கரும்பு அறுவடை செய்ய ஒரு கரும்பு அறுவடை இயந்திரம் தேசிய கூட்டுறவு அபிவிருந்திக் கழகம், புதுடெல்லி / மத்திய கூட்டுறவு வங்கியிடமிருந்து நிதி பெற்று வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

31—

வேளாண்மை அறிவியல் கல்லூரி

வினா எண் 104054—திரு. வை. காவேரி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் அல்லது நெல்லையில் ஐ.ஆர்.டி. கல்வி நிறுவனத்தின் சார்பில் வேளாண்மை அறிவியல் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகர்கோவில் அல்லது நெல்லையில் ஐ.ஆர்.டி. கல்வி நிறுவனத்தின் சார்பில் வேளாண்மை அறிவியல் கல்லூரி அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

32—

நீதிமன்றம்

வினா எண் 104806—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரத்தில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரத்தில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்க செயற்குறிப்பு அல்லது முன்னுரிமை பட்டியல், தலைமைப் பதிவாளர், சென்னை உயர் நீதிமன்றம் அவர்களிடமிருந்து பெறப்படும்பட்சத்தில், அரசின் நிதிநிலைமைக்கேற்ப அரசு பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

33—

தொழில் பயிற்சிக் கல்லூரி

வினா எண் 71545—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

(அ) முகையூர் தொகுதியில் அரசு தொழிற்பயிற்சிக் கல்லூரி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) முகையூர் தொகுதியில் அரசு தொழில் பயிற்சிக் கல்லூரி தொடங்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

34—

ஆராய்ச்சி மையம்

வினா எண் 83065—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் நடமாடும் அறிவியல் ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மதுரையில் நடமாடும் அறிவியல் ஆராய்ச்சி மையம் அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

35—

சீரமைத்தல்

வினா எண் 84252—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 ஜனவரி 11

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அரசு தொழில்நுட்பக் கல்லூரியைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி எதுவும் இல்லை. ஆகவே சீரமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

(ஆ) எழவில்லை.

36—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 101726—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, அரூரில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) அரூர் தொகுதி, அரூரில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

37—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 103715—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதியில், மணவாடி அல்லது வெள்ளியணை பகுதிகளில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதியில், மணவாடி அல்லது வெள்ளியணை பகுதிகளில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

38—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 104214—திரு. ஆர். சாமி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, வெள்ளலூர் நாடு பகுதியில் அரசு கல்லூரி அல்லது பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

மேலூர் தொகுதியில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

39—

பணிமனை

வினா எண் 69222—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதியில் மாநகரப் போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பணிமனை அமைக்கத் தேவையான நிலம் கிடைக்கும்பட்சத்தில் திருப்போரூர் தொகுதியில் மாநகரப் போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

40—

நகரப் பேருந்து

வினா எண் 80228—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்திலிருந்து திருப்பாச்சேத்தி, மானாமதுரை, தெ.புதுக்கோட்டை, எமனேஸ்வரம் வழியாக நைனார்கோவில், மானாமதுரையிலிருந்து மதுரை வழியாக வைகை அணை மற்றும் திருப்புவனத்திலிருந்து மானாமதுரை வழியாக தாயமங்கலம் ஆகிய பகுதிகளுக்கு நகரப் பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நகரப் பேருந்துகளை இயக்க வழித்தடத்தின் நீளம் அரசால் நிர்ணயம் செய்து அரசு ஆணை உள்ளது. கோரிக்கை வழித்தடங்களை ஆய்வு மேற்கொண்டதில் வழித்தடங்களின் நீளம் நகரப் பேருந்துகள் இயக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள தூரத்திற்கு மேல் உள்ளபடியால், அரசு ஆணையின்படி, இந்த வழித்தடங்களில் நகரப் பேருந்துகள் இயக்க இயலாது.

41—

நகரப் பேருந்து

வினா எண் 80234—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையிலிருந்து கொன்னக்குளம், மல்லல், சாத்தரசன்கோட்டை வழியாக காளையார்கோவிலுக்கு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து கொன்னக்குளம், மல்லல், சாத்தரசன்கோட்டை வழியாக காளையார்கோவில் வரை உள்ள வழித்தடத்தை ஆய்வு மேற்கொண்டதில் வழித்தடத்தின் நீளம் 55.0 கி.மீ. உள்ளது. நகரப் பேருந்துகள் இயக்க அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட தூரத்தைவிட அதிகம் உள்ளது. எனவே, அரசாணையின்படி இந்த வழித்தடத்தில் நகரப் பேருந்தினை இயக்க இயலாது.

42—

விரைவுப் பேருந்து

வினா எண் 86364—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்பகோணத்திலிருந்து தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருப்பத்தூர், சிவகங்கை, மானாமதுரை, பார்த்திபனூர், வீரசோழர்மணி மாணிக்கம் தடத்தின் வழியாக கமுதிக்கு இரவு நேர விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது கமுதியிலிருந்து பார்த்திபனூர், மானாமதுரை, சிவகங்கை, திருப்பத்தூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர் வழியாக கும்பகோணத்திற்கு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இவ்வழித்தடத்தில் பயணம் செய்யும் பயணிகளின் அடர்வு விகிதம் மிகவும் குறைவாக இருப்பதால் இதுவே போதுமானதாகும்.

[2010 ஜனவரி 11

43—

கூடுதல் பேருந்து

வினா எண் 86904—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் திருவிசநல்லூரிலிருந்து கும்பகோணம் வரை காலை மற்றும் மாலை நேரங்களில் கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கோரிக்கை வழித்தடத்தின் வழியாக கும்பகோணம் நகர் பேருந்துகள் தடம் எண் A2, A2A, A2B மற்றும் A38 ஆகியவை மூலம் தினசரி 58 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே, பெறப்பட்ட இதே கோரிக்கை தொடர்பாக, இப்பகுதி பள்ளி செல்லும் மாணவ/மாணவியர்களின் பயன்பாடு கருதி, கும்பகோணம், புறநகர் பேருந்து தடம் எண் 455 மூலம் மயிலாடுதுறை-கும்பகோணம் (வழி) குத்தாலம், கதிராமங்கலம், வேப்பத்தூர், திருவிசநல்லூர் தடத்தில் காலை ஒரு நடை மட்டும் தினசரி தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது.

தற்போது கும்பகோணம் நகரில் இயக்கப்பட்டு வரும் பெரும்பாலான கழக நகரப் பேருந்துகள் அனைத்தும் பல்வழித்தடங்களில் காலை நேரங்களில் கிராமப் பகுதியிலிருந்து மாலை நேரங்களில் நகரப் பகுதியிலிருந்தும் பள்ளி நேரங்களுக்கு ஏற்ப இயக்கப்பட்டு வருவதால், இந்நகரப் பேருந்துகளைக் கொண்டு கோரிக்கை தடத்தில் மேலும் கூடுதலாக நடைகள் இயக்கிட இயலாத நிலை உள்ளது.

44—

நகரப் பேருந்து

வினா எண் 101757—திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

பழனி தொகுதி, பழனி ஒன்றியம், ஆண்டிப்பட்டி ஊராட்சி வரை இயக்கப்படும் நகரப் பேருந்துகளை புதுமடைபுதூர் வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திண்டுக்கல் மண்டலப் பேருந்துமூலம் பழனி-ஆண்டிப்பட்டி வழித் தடத்தில் இயங்கும் நகரப் பேருந்தினை புதுமடைபுதூர் கிராமம் வரை நீட்டித்து இயக்குவது தொடர்பாக ஆய்வு மேற்கொண்டதன்படி புதுமடைப்புதூருக்கு தினசரி 4 தனி நடைகள் காலை மாலை வேளைகளில் நீட்டிப்பு செய்து 15-8-2009 முதல் இயக்கப்படுகிறது.

45—

பேருந்து வசதி

வினா எண் 101833—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தடம் எண் 187 அருப்புக்கோட்டையிலிருந்து விளாத்திகுளம், குளத்தூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி வழியாக புளியரை வரை இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அருப்புக்கோட்டையிலிருந்து விளாத்திகுளம், தூத்துக்குடி, திருநெல்வேலி வழியாக புளியரைக்கு இயக்கப்பட்ட பேருந்தில் போதிய பயணிகள் அடர்வு இன்றியும், நேரடிப் பயணிகள் பயணிக்காததாலும் மேற்படி பேருந்து இயக்கம் பல ஆண்டுகளுக்கு முன்பே நிறுத்தப்பட்டு விட்டது. இருப்பினும், இந்தப் பேருந்து நிறுத்தப்பட்ட பின்னர் தூத்துக்குடி-விளாத்திகுளம்-அருப்புக்கோட்டை வழித்தடப் பகுதியில் பேருந்துகள் இயக்கம் சீரமைக்கப்பட்டு விளாத்திகுளம் பகுதி பொதுமக்கள் அருப்புக்கோட்டை மற்றும் தூத்துக்குடிக்குச் செல்ல கூடுதல் சுற்றுகள் இயக்கப்பட்டு தற்போது பயன்பெற்று வருகிறார்கள்.

46—

பேருந்து வசதி

வினா எண் 101834—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, கோவில்பட்டியிலிருந்து மேலக் கரந்தை, செங்கோட்டை வழியாக புதூருக்கு கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவில்பட்டி - புதூர் வழி மேலக்கரந்தை, செங்கோட்டை வழித்தடத்தில் காலை 07.10, 15.30 ஆகிய நேரங்களில் கோவில்பட்டியிலிருந்து தினசரி நான்கு தனி நடைகள் 16-3-2008 முதல் இயக்கப்பட்டு வருகிறது. தற்போது இயக்கப்பட்டு வரும் மேற்படி பேருந்தில் பயணிகளின் பயன்பாடு குறைவாகவே உள்ளது. எனவே, தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகும்.

47—

புதிய பேருந்து

வினா எண் 101836—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, கோவில்பட்டியிலிருந்து ஏ. வேலாயுதபுரம், சிவஞானபுரம், சக்கம்மாள்புரம், வீரபாண்டியாபுரம், டி. சுப்பையாபுரம் வழியாக குளத்தூருக்கு காலை மற்றும் மாலையில் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவில்பட்டி-குளத்தூர் (வழி) ஏ.வேலாயுதபுரம், சிவஞானபுரம், சக்கம்மாள்புரம், வீரபாண்டியாபுரம், டி. சுப்பையாபுரம் வழித்தடத்தின் தூரம் 49.0 கி.மீ. ஆகும். இத்தடத்தில் சிவஞானபுரம் முதல் சக்கம்மாள்புரம் வரையிலான சுமார் 4.0 கி.மீ. தூரச் சாலையில் சுமார் 2.0 கி.மீ. தூரச் சாலையானது மிகவும் மோசமாக பழுதடைந்த நிலையிலும், சக்கம்மாள்புரம் முதல் வீரபாண்டியாபுரம் வரையிலான சுமார் 3.0 கி.மீ. தூரச் சாலையானது மிகவும் குறுகலாகவும், கற்கள் பெயர்ந்தும், சக்கம்மாள்புரம் ஊருக்குள் உள்ள "L" Bend சாலை, பேருந்து செல்ல இயலாதவாறு குறுகலானதாகவும் உள்ளது. மேலும், வீரபாண்டியாபுரம் முதல் டி. சுப்பையாபுரம் வரையிலான சுமார் 2.0 கி.மீ. தூரச் சாலை மிகவும் மோசமாக பழுதடைந்த நிலையிலும் உள்ளது. கோரிக்கை வழித்தடத்தில் சிவஞானபுரம் முதல் டி. சுப்பையாபுரம் வரையிலான சுமார் 9.0 கி.மீ. தூரச் சாலையானது பேருந்து இயக்கத்திற்கு ஏதுவற்றதாக உள்ளதால் இத்தடத்தில் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

48—

கூடுதல் பேருந்து

வினா எண் 101838—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளத்திலிருந்து கோயம்புத்தூருக்கு கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விளாத்திகுளத்திலிருந்து மதுரை, பொள்ளாச்சி வழியாக கோயம்புத்தூருக்கு ஒரு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

[2010 ஜனவரி 11

இப்பேருந்தை விளாத்திகுளம் பகுதி பொதுமக்கள் போதியவாறு பயன்படுத்தி வருகிறார்கள். இச்சூழ்நிலையில் இவ்வழித்தடத்தில் கூடுதலாக பேருந்து இயக்க அவசியம் எழவில்லை.

49—

பேருந்து வசதி

வினா எண் 101839—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளம் ஒன்றியம், வைப்பார் ஊராட்சி, துலுக்கன்குளம் கிராமத்திற்கு, தூத்துக்குடி, கீழவைப்பார் வரை வந்து செல்லும் பேருந்தை துலுக்கன்குளம் வரை நீட்டித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி-கீழவைப்பார் என இயக்கப்பட்ட நகரப் பேருந்தை தடநீட்டிப்பு செய்து துலுக்கன்குளம் வரை 2 சுற்றுகள் 21-8-2009 முதல் இயக்கப்பட்டு வருகிறது.

50—

ஓய்வு அறை

வினா எண் 102005—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் பணிமனையில் தொழிலாளர்களுக்கு ஓய்வு அறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் பணிமனையில் பணியாளர்களுக்கு 18 மீட்டர் நீளம், 5 மீட்டர் அகலம் உள்ள ஓய்வறை அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

51—

பேருந்து வசதி

வினா எண் 102107—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், புங்கம்பட்டுநாடி ஊராட்சி, கம்புகுடி கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் முதல் புதூர் நாடு மலைக்கு இரண்டு Short Wheel base புறநகர் பேருந்துகள்மூலம் தினசரி 24 நடைகள் மலைவாழ் மக்களின் தேவைக்கேற்ப போதுமான அளவு இயக்கப்பட்டு வருகின்றது. இந்தப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் அடர்வு 65 சதவீதம் ஆகும். புதூர் நாட்டிலிருந்து கம்புகுடி கிராமம் 15 கி.மீ. தூரத்தில் உள்ளது. தற்போது இயக்கப்பட்டு வரும் Short Wheel base பேருந்துகளை கம்புகுடி கிராமத்திற்கு நீட்டித்து இயக்கினால் தற்போது பயன் பெற்று வரும் மலைவாழ் கிராம மக்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்கள் நடை குறைப்பு செய்யும்பட்சத்தில் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். மேலும், இவ்வழித் தடத்தை ஆய்வு செய்ததில் அரசமரத்துக் கொள்ளைக்கும், கம்புகுடிக்கும் இடையே சுமார் 10 கி.மீ. சாலையின் இடதுபுறம் பள்ளம் வெட்டப்பட்டுள்ளது. புதூர் நாடு முதல் கம்புகுடி என்பது புதிய வழித்தடமாகும். கம்புகுடி கிராமத்திற்கு Short Wheel base பேருந்து மட்டுமே இயக்க இயலும். தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் வேலூர் மண்டலம்மூலம் Short Wheel பேருந்து புதியதாக இயக்கப்படும்போது கோரிக்கை குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

52—

பேருந்து வசதி

வினா எண் 102119—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதி, அரியூரில் பொற்கோவில் அமைக்கப்பட்டுள்ள இடத்தில் அரசு போக்குவரத்துக் கழக பேருந்து நிலையம் அமைத்து தமிழகம், ஆந்திரா, கர்நாடகா, கேரளா பகுதிகளுக்கு பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழகத்தைப் பொறுத்தவரை பேருந்து நிலையங்கள் சம்பந்தப்பட்ட மாநகராட்சி அல்லது நகராட்சி அமைப்புகள் மூலமாகவே அமைக்கப்பட்டு வருகின்றன. வேலூர் தொகுதி, அரியூர் பொற்கோவில் அருகே பேருந்து நிலையம் வேலூர் மாநகராட்சி மூலம்தான் அமைக்கப்படவேண்டும். தற்போது அரியூர் பொற்கோவில் முன்பு பேருந்துகள் நிறுத்தப்பட்டு தமிழகம், ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களுக்கு இயக்கப்பட்டு வருகின்றன.

53—

பேருந்து வசதி

வினா எண் 102772—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளத்திலிருந்து பரமேஸ்வரம், ராதாபுரம், வடக்கன்குளம், காவல்கிணறு, பணகுடி, வள்ளியூர் வழியாக சென்னைக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு) லிமிடெட் மூலமாக தடம் எண் 281-ல் கூடங்குளத்திலிருந்து சென்னைக்கு ராதாபுரம், வள்ளியூர் வழியாக இரண்டு அதிநவீன சொகுசு

2010 ஜனவரி 11]

மிதவைப் பேருந்துகள் இரண்டு நடைகள் வீதம் 2-2-2007 முதல் இயக்கப்பட்டது. மேற்படி தடப் பேருந்துகளைப் பயன்படுத்த போதிய நேரடிப் பயணிகள் இன்றி வருவாய் இழப்பு ஏற்பட்டதன் காரணமாக 25-8-2008 முதல் நிறுத்தப்பட்டது.

54—

வணிக வளாகம்

வினா எண் 104011—திரு. எல். ரவிச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் பழைய பேருந்து நிலையம், மகாத்மா காந்தி சிலை அருகே இருக்கின்ற பழைய திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான இடத்தை அரசு பயன்பாட்டிற்குக் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் பழைய பேருந்து நிலையம், மகாத்மா காந்தி சிலை அருகே இருக்கின்ற பழைய திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான இடத்திற்கு, திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்பட்டு, மாத உரிமத் தொகையில் வணிக உபயோகத்திற்கு விடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

55—

சொகுசுப் பேருந்து

வினா எண் 104868—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை புதிய பேருந்து நிலையத்திலிருந்து தாயமங்கலம், பட்டமங்கலம், பிள்ளையார்பட்டி,

[2010 ஜனவரி 11

குன்றக்குடி மற்றும் கொல்லங்குடி வரை சொகுசுப் பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து தாயமங்கலத்திற்கு அரசுப் பேருந்துகள்மூலம் 8 நடைகளும், தனியார் பேருந்துகள்மூலம் 8 நடைகளும் நாளொன்றிற்கு இயக்கப்பட்டு வருகிறது. மானாமதுரையிலிருந்து திருப்பத்தூருக்கும், திருப்பத்தூரிலிருந்து பட்டமங்கலம், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி என பகுதி பகுதியாக பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மானாமதுரையிலிருந்து கொல்லங்குடி வழியாகவும் பகுதி பகுதியாக அதிக அளவில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

56—

கூடுதல் கட்டடம்

வினா எண் 106218—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை போக்குவரத்துப் பணிமனைக்கு கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை சிப்காட் போக்குவரத்துக் கழக பணிமனையில் போதுமான கட்டடம் கட்டப்பட்டு அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு, பணிமனை செயல்பட்டு வருகிறது. எனவே, கூடுதல் கட்டடம் கட்ட செயற்குறிப்பு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

57—

சுற்றுப்புறச் சுவர்

வினா எண் 106233—திரு. செ. பொன்னுதுரை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை போக்குவரத்துப் பணிமனையில் முன்வாயில் மற்றும் சுற்றுப்புறச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பெருந்துறை பணிமனை முன்வாயில், சுற்றுப்புறச் சுவர்கள் மற்றும் அனைத்து வசதிகளுடன் கட்டி முடிக்கப்பட்டு 13-10-2004 அன்று திறக்கப்பட்டது. தேசிய நெடுஞ்சாலை எண் 47-ன் புறவழிச் சாலைக்காக பணிமனை நிலம் 1.82 ஏக்கர் மற்றும் கட்டடங்கள் கையகப்படுத்தப்பட்டு, கட்டடங்கள் மற்றும் இருபக்க சுற்றுச் சுவர் இடிக்கப்பட்டது. சுற்றுச் சுவர் இடிக்கப்பட்ட பகுதியில் முள் கம்பிவேலி அமைக்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிலம், கட்டடங்கள் மற்றும் சுற்றுச் சுவர் கையகப்படுத்தியதற்காக கூடுதல் இழப்பீட்டு தொகை ரூ.52.72 இலட்சங்கள் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் கோரப்பட்டுள்ளது. மேற்காணும் தொகை கிடைக்கப்பெற்ற பின்னர் சுற்றுச் சுவர் மற்றும் முன்வாயில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

58—

பேருந்து வசதி

வினா எண் 107403—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு வரை இயக்கப்படும் மாநகரப் பேருந்துகளை திருக்கழுக்குன்றம் வரை நீட்டித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

[2010 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருக்கழுக்குன்றம், மாநகர போக்குவரத்துக் கழக இயக்க எல்லைக்கு அப்பால் அமைந்துள்ளதால், செங்கற்பட்டு வரை இயக்கும் மாநகரப் பேருந்துகளை மேலும் (திருக்கழுக்குன்றம் வரை) நீட்டித்து இயக்க இயலாது.

தற்போது தாம்பரம், மறைமலைநகர், கூடுவாஞ்சேரி, செங்கற்பட்டு வழியாக திருக்கழுக்குன்றத்திற்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தால் (காஞ்சிபுரம் மண்டலம்) ஏற்கெனவே பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

59—

பயணக் கட்டணம்

வினா எண் 107484—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பேருந்துகளில் முன்பதிவு செய்து இரத்து செய்யும்போது முழுத் தொகையினையும் திருப்பி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள் 1989 பிரிவு 15-ன்படி, பேருந்துகளில் முன்பதிவு செய்து, இரத்து செய்யும்போது முழுத் தொகையினையும் திருப்பி அளிக்க சாத்தியம் இல்லை. மேற்படி விதியின்படி பேருந்து புறப்படுவதற்கு 48 மணி நேரத்திற்கு முன் 10 சதவீதமும், பேருந்து புறப்படுவதற்கு 24 மணி நேரம் முதல் 48 மணி நேரம் வரை 20 சதவீதமும், பேருந்து புறப்படுவதற்கு 30 நிமிடம் முதல் 24 மணி நேரம் வரை 25 சதவீதமும், பேருந்து புறப்படுவதற்கு 30 நிமிடம் முதல் பேருந்து புறப்பட்ட 30 நிமிட நேரம் வரை 50 சதவீதமும் பயணக் கட்டணம் பிடித்தம் செய்யப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

60—

செவிலியர் நியமனம்

வினா எண் 61201—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், வெங்கடாபுரம் ஆரம்ப சுகாதார மையத்திற்கு செவிலியரை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், வெங்கடாபுரத்தில் துணை சுகாதார மையம் செயல்படுகிறது. துணை சுகாதார நிலையம் கிராம சுகாதார செவிலியர் பொறுப்பில் இயங்குகிறது. எனவே, அங்கு செவிலியர்கள் (Staff Nurse) பணி நியமனம் செய்யப்படுவதில்லை.

61—

கூடுதல் கட்டடங்கள்

வினா எண் 62823—திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனமரத்துப்பட்டி தொகுதி, மல்லூரிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டடங்கள் கட்டி நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் மல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம் (சமுதாய நல

மையம்) செயல்பட்டு வருகிறது. பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகை 83,741. (2001) இந்த ஊராட்சி ஒன்றியத்தில் கொண்டலாம்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், மல்லூர் சமுதாய நல மையம் மற்றும் பனமரத்துப்பட்டி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவை செயல்படுகின்றன. மல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாதமொன்றுக்கு சராசரியாக 4,270 வெளி நோயாளிகள் பயனடைகின்றனர். மாதமொன்றுக்கு சராசரியாக 23 பிரசவங்கள் நிகழ்கின்றன. ஆரம்ப சுகாதார நிலையத்தில் மொத்தம் 13 அறைகள் உள்ளன. எனவே, மல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தற்போதுள்ள வசதிகளே போதுமானதாக உள்ளதால் கூடுதல் கட்டடங்கள் கட்டி, நவீனப்படுத்த தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

62—

தரம் உயர்த்துதல்

வினா எண் 64408—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, கதிரம்பட்டி கிராம ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகை 1,36,503 (2001). இவ்வூராட்சி ஒன்றியத்தில் ஆண்டியப்பனூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையமும், பிச்சானூர் மற்றும் கதிரம்பட்டி என இரண்டு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. ஆண்டியப்பனூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் தேசிய ஊரக நலத் திட்ட நிதி உதவியின்கீழ் தரம் உயர்த்த அனுமதி வழங்கப்பட்டு 12-9-2008 அன்று கட்டடம் திறக்கப்பட்டது. எனவே, அரசின் கொள்கைப்படி இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள

2010 ஜனவரி 11]

கதிரம்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

63—

சுற்றுச் சுவர்

வினா எண் 69732—திரு. டி. மூர்த்தி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்போரூர் தொகுதி, சிறுங்குன்றம், திருப்போரூர், மறைமலைநகர் பகுதிகளிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச் சுவர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், சைதாப்பேட்டை சுகாதார மாவட்டத்தில், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியத்தில் சிறுங்குன்றம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் திருப்போரூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியன செயல்பட்டு வருகின்றன.

காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் மறைமலைநகர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

திருப்போரூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் 3 பக்கம் உள்ளது. தெற்குப் பக்கம் மட்டும் சுற்றுச் சுவர் இல்லை. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தெற்கு பக்கம் சுற்றுச் சுவர் கட்ட நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை. சுற்றுச் சுவர் கட்டுவதற்கான கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

சிறுங்குன்றம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை. கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மறைமலைநகர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் 3 பக்கம் கட்டப்பட்டுள்ளது. மீதமிருந்த கிழக்குப் பக்கம் 2008-09 ஆம் நிதியாண்டில் திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் கட்டப்பட்டு, தற்போது நான்கு பக்கங்களிலும் சுற்றுச் சுவர் உள்ளது.

64—

நோய்த் தடுப்புப் பிரிவு

வினா எண் 82761—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அரசு மருத்துவமனையில் பிஸியோதெரபி மருத்துவரை நியமிக்கவும், யானைக்கால் நோய்த் தடுப்புப் பிரிவு தொடங்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை அரசு மருத்துவமனைக்கு விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவிற்கென ஒரு இயன்முறை சிகிச்சையாளர் நிலை-2 பணியிடம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இப்பணியிடம் விரைவில் நிரப்பப்படும். யானைக்கால் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் அனைத்து மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் அதற்கான மருந்து மற்றும் மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றது. அனைத்து மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் யானைக்கால் நோய்க்கென மருந்து மாத்திரைகள் போதிய அளவில் உள்ளன. எனவே, மானாமதுரை அரசு மருத்துவமனையில் யானைக்கால் நோய்த் தடுப்புப் பிரிவு தனியாகத் தொடங்கிட வேண்டிய அவசியம் எழவில்லை.

2010 ஜனவரி 11]

65—

மருந்தாளுநர்கள்

வினா எண் 83248—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருந்தாளுநர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் போதிய அளவு மருந்தாளுநர்கள் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

66—

மருந்தாளுநர்

வினா எண் 88024—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் மருந்தாளுநர் பணியிடம் நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் இரண்டு மருந்தாளுநர் பணியிடங்கள் வெற்றிடமாக உள்ளன. இப்பணியிடத்தினை வேலைவாய்ப்பகத்தின்மூலம் நிரப்பிட 2007-08 ஆம் ஆண்டிற்கான வெற்றிட திட்ட மதிப்பீடு (Estimate of vacancy) அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும் மருந்தாளுநர் பதவியை மாநில

[2010 ஜனவரி 11

அளவிலான வேலைவாய்ப்பு அலுவலக மூப்புப் பட்டியலின் அடிப்படையில் நிரப்பக் கோரி சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்டுள்ள வழக்கில், தற்போது நடைமுறையில் உள்ள மாவட்ட மூப்புப் பட்டியல் அடிப்படையில் மருந்தாளுநர் பணி நியமனம் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற தடை விலக்கப்பட்டவுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

67—

தரக் கட்டுப்பாடு ஆய்வுக் கூடம்

வினா எண் 90723—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருந்துசெய் நிலையங்களில் தரக் கட்டுப்பாடு ஆய்வுக் கூடத்தை நிறுவ அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மாநில அரசு சார்ந்து கீழ்க்காணும் அரசு மருந்துசெய் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன:—

(1) நோய்த் தடுப்பு கிங் மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிண்டி, சென்னை.

(2) கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், ராணிப்பேட்டை.

மேற்காணும் அரசு மருந்துசெய் நிறுவனங்களில் தரக் கட்டுப்பாடு ஆய்வுக் கூடம் ஏற்கெனவே உள்ளது.

(ஆ) கேள்வி எழவில்லை.

2010 ஜனவரி 11]

68—

மருந்தாளுநர்

வினா எண் 95918—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை அரசு மருத்துவமனையில் மருந்தாளுநர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட மொத்த மருந்தாளுநர்கள் பணியிடம் 2. இந்த இரண்டு பணியிடங்களிலும் வெற்றிடம் ஏதுமின்றி மருந்தாளுநர்கள் பணியில் உள்ளனர்.

69—

தாய்சேய் நல விடுதி

வினா எண் 97764—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், கீழ்மாத்தூரில் தாய்சேய் நல விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்மாத்தூர் கிராமமானது ஆக்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தின் துணை சுகாதார மையமான கிள்ளியூரைச் சார்ந்தது. இங்கு சுகாதாரப் பணிகள் (மற்றும்) தாய்சேய் நலப் பணிகள் நன்முறையில் நடைபெற்று வருகின்றன.

கிள்ளியூர் துணை சுகாதார நிலையம் மாத்தூர் மற்றும் கீழ்மாத்தூர் கிராமத்திற்கு நடுவில் உள்ளது. கீழ்மாத்தூரிலிருந்து 1½ கி.மீ. தொலைவில் கிள்ளியூர் துணை சுகாதார நிலையம் அமைந்துள்ளது. இது அரசு கட்டடத்தில் இயங்கி வருகிறது.

தாய்சேய் நல பராமரிப்பு, சிறு உபாதை சிகிச்சை மற்றும் சுகாதாரப் பணிகள் துணை சுகாதார நிலையத்தில் தங்கி பணிபுரியும் கிராம சுகாதார செவிலியர்மூலமாகவும், ஆக்கூர் ஆரம்ப சுகாதார நிலையம்மூலமாகவும் செவ்வனே நடைபெற்று வருவதால் கீழ்மாத்தூர் கிராமத்திற்கு துணை சுகாதார நிலையம் (தாய்சேய் நல விடுதி) கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

70—

நார்த் தொழிற்சாலை

வினா எண் 36253—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூரில் தென்னை நார்த் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூரில் தென்னை நார்த் தொழிற்சாலை தொடங்க ஆர்வமுள்ள தொழில்

2010 ஜனவரி 11]

முனைவோர் முன்வந்தால், அவர்களுக்கு மாவட்டத் தொழில் மையம் தேவையான வழிகாட்டுதல்கள் செய்யும்.

71—

தளவாடச் சாமான்கள்

வினா எண் 38081—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை பேரூராட்சி, கன்னார் தெரு எவர்சில்வர் பட்டறைகளுக்கு மானியத்துடன் தளவாடச் சாமான்கள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மானாமதுரை பேரூராட்சி, கன்னார் தெருவில் செயல்படும் எவர்சில்வர் பட்டறைகளுக்கு மானியத்துடன் தளவாடச் சாமான்கள் வழங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

72—

கயிறு தொழிற்சாலை

வினா எண் 70457—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியில் தென்னை நார் கயிறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் தொகுதியில் தென்னை நார் கயிறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் ஆர்வமுள்ள தொழில்

[2010 ஜனவரி 11

முனைவோர் இத்தொழில் துவங்க முன்வந்தால் மாவட்டத் தொழில் மையம்மூலம் அனைத்து உதவிகளும் செய்து தரப்படும்.

73—

கிளை கால்நடை மருந்தகம்

வினா எண் 102552—திரு. த. தியோடர் ரெஜினால்டு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்மனாபபுரம் தொகுதி, குமாரபுரம் பேரூராட்சி, பெருஞ்சிலம்பு பகுதியில் கிளை கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு கால்நடை மருத்துவமனையும், மூன்று கால்நடை மருந்தகங்களும், இரண்டு கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. கால்நடைகளின் எண்ணிக்கை அலகுகள் குறைவாக உள்ளதாலும், தக்கலை நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தி பிரிவுமூலம் பிரதி வாரம் வெள்ளிக்கிழமைதோறும், பிற்பகல் சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாலும், பெருஞ்சிலம்பு கிராமத்தில் கிளை கால்நடை மருந்தகம் ஏற்படுத்த தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

74—

கிளை மருந்தகம்

வினா எண் 104235—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

(அ) ராதாபுரம் தொகுதி, ராதாபுரம் வட்டம், அவரை குளம், பழவூர், செட்டிகுளம், சமூக ரெங்கபுரம், சிலாத்திக்குளம், உறுமண்குளம் ஆகிய இடங்களில் புதிய கால்நடை கிளை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதி, வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு கால்நடை மருத்துவமனையும், மூன்று கால்நடை மருந்தகங்களும், ஒரு கால்நடை கிளை நிலையமும் தற்போது செயல்பட்டு வருகின்றன. மேலும், செட்டிகுளம் என்ற கிராமத்தில் ஏற்கெனவே கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகின்றது. ஆகையால், ராதாபுரம் வட்டம், அவரை குளம், பழவூர், சமூக ரெங்கபுரம், சிலாத்திக்குளம், உறுமண்குளம் ஆகிய இடங்களில் புதிய கால்நடை கிளை மருந்தகம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

75—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 102497—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில், செங்கற்பட்டில் ஒரு அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், 14 தொழிற்பிரிவுகளில் 888 இருக்கைகளுடன் செயல்பட்டு வருகிறது. மேலும்,

[2010 ஜனவரி 11

இம்மாவட்டத்தில் 24 தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் 3,207 இருக்கைகளுடன் இயங்கி வருகின்றன. எனவே, இம்மாவட்டத்தில் தற்போது தேவையான அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் உள்ளதால், புதிய அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் ஆரம்பிக்க அரசுக்கு உத்தேசம் இல்லை.

(ஆ) எழாது.

76—

மைதானத்தைச் சீர்படுத்துதல்

வினா எண் 53541—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பன்னிமேடு பிரிவிலுள்ள கால்பந்து மைதானத்தைச் சீர்படுத்தி செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, பன்னிமேடு பிரிவிலுள்ள கால்பந்து மைதானத்தைச் சீர்படுத்தி செப்பனிட செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

77—

விளையாட்டு மைதானம்

வினா எண் 54630—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள அர்த்தநாரிபாளையம், ஜல்லிப்பட்டி, கரியஞ்செட்டிபாளையம், பிலிசின்னம்பாளையம், காளியாபுரம், பெத்தநாயக்கனூர், ரமணமுதலிபுதூர், தென்சித்தூர், சோமந்துறை, தென்சங்கம்பாளையம், அங்கலக்குறிச்சி, கம்பலாப்பட்டி ஆகிய ஊராட்சிகளில் வரும் நிதி ஆண்டில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள அர்த்தநாரிபாளையம், ஜல்லிப்பட்டி, கரியஞ்செட்டிபாளையம், பிலிசின்னம்பாளையம், காளியாபுரம், பெத்தநாயக்கனூர், ரமணமுதலிபுதூர், தென்சித்தூர், சோமந்துறை, தென்சங்கம்பாளையம், அங்கலக்குறிச்சி, கம்பலாப்பட்டி ஆகிய ஊராட்சிகளில் வரும் நிதி ஆண்டில் விளையாட்டு மைதானம் அமைக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

78—

விளையாட்டு மைதானம்

வினா எண் 54642—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை நகராட்சியில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை நகராட்சியில் விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

79—

விளையாட்டு மைதானம்

வினா எண் 54643—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் மற்றும் கோட்டூர் பேரூராட்சிகளில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் மற்றும் கோட்டூர் பேரூராட்சிகளில் விளையாட்டு மைதானம் அமைக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

80—

உடற்பயிற்சிக் கூடம்

வினா எண் 54645—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சோமந்துறை, காளியாபுரம், பெத்தநாயக்கனூர், ரமணமுதலிபுதூர், தென்சித்தூர், தென்சங்கம்பாளையம், அங்கலக்குறிச்சி, கம்பலாபட்டி, அர்த்தநாரிபாளையம், ஜல்லிபட்டி, கரியஞ்செட்டிபாளையம், பிலிசின்னம்பாளையம் ஆகிய ஊராட்சிகளில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, சோமந்துறை, காளியாபுரம், பெத்தநாயக்கனூர், ரமணமுதலிபுதூர், தென்சித்தூர், தென்சங்கம்பாளையம், அங்கலக்குறிச்சி, கம்பலாபட்டி, அர்த்தநாரிபாளையம், ஜல்லிப்பட்டி, கரியஞ்செட்டிபாளையம், பிலிசின்னம்பாளையம் ஆகிய ஊராட்சிகளில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க வாய்ப்பு ஏதுமில்லை.

81—

உடற்பயிற்சிக் கூடம்

வினா எண் 54657—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள வேட்டைக்காரன்புதூர் மற்றும் கோட்டூர் பேரூராட்சிகளில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் உள்ள வேட்டைக்காரன்புதூர் மற்றும் கோட்டூர் பேரூராட்சிகளில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

82—

உடற்பயிற்சிக் கூடம்

வினா எண் 54659—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அவர்கள் அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை நகராட்சியில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை நகராட்சியில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

83—

விளையாட்டு மைதானம்

வினா எண் 56760—திரு. வை. காவேரி: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், வேம்பனேரி, வேம்பனேரி புதுப்பாளையம் பகுதி, கச்சுப்பள்ளி ஊராட்சி, கச்சுப்பள்ளி மற்றும் தங்காயூர் ஊராட்சியில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2010 ஜனவரி 11

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், வேம்பனேரி, வேம்பனேரி புதுப்பாளையம் பகுதி, கச்சுப்பள்ளி ஊராட்சி, கச்சுப்பள்ளி மற்றும் தங்காயூர் ஊராட்சியில் விளையாட்டு மைதானம் அமைக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

84—

பயிற்சி மையம்

வினா எண் 56932—திருமதி ஜி. லதா: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழக கிராமப்புற இளைஞர்களை விளையாட்டுத் துறைகளில் ஊக்குவிக்க பயிற்சி அளிக்கும் மையங்கள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக கிராமப்புற இளைஞர்களை விளையாட்டுக்களில் ஈடுபடுத்தி ஊக்குவிக்கவும் பயிற்சி அளிக்கவும் கிராம விளையாட்டு பயிற்சி மையங்கள் ஏற்கெனவே 2007-2008 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

85—

விளையாட்டு மைதானம்

வினா எண் 57839—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, அங்குசெட்டிபாளையம் ஊராட்சியில் இளைஞர்களுக்கு விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2010 ஜனவரி 11]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) பண்ருட்டி தொகுதி, அங்குசெட்டிபாளையம் ஊராட்சியில் இளைஞர்களுக்கு விளையாட்டு மைதானம் அமைக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

86—

உடற்பயிற்சி மையம்

வினா எண் 57840—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, லஷ்மிநாராயணபுரம் ஊராட்சி, கந்தன்பாளையம், நத்தம் மற்றும் வேலன்குப்பம் கிராமங்களில் உடற்பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, லஷ்மிநாராயணபுரம் ஊராட்சி, கந்தன்பாளையம், நத்தம் மற்றும் வேலன்குப்பம் கிராமங்களில் உடற்பயிற்சி மையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

87—

உடற்பயிற்சி நிலையம்

வினா எண் 61427—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், வெள்ளாளப்பட்டி ஊராட்சிப் பகுதியில் உடற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், வெள்ளாளப்பட்டி ஊராட்சிப் பகுதியில் உடற்பயிற்சி நிலையம் அமைக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

88—

மட்டைப்பந்து

வினா எண் 61431—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகரத்தில் மட்டைப்பந்து மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

சேலம் மாநகரத்தில் மட்டைப்பந்து மைதானம் அமைக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

89—

விளையாட்டு மைதானம்

வினா எண் 62344—திரு. என். மாலைராஜா: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி தொகுதி, சுத்தமல்லி, நாரணம்மாள்புரம், கே.டி.சி. நகர் ஆகிய பகுதிகளில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி தொகுதி, சுத்தமல்லி, நாரணம்மாள்புரம், கே.டி.சி. நகர் ஆகிய பகுதிகளில் விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2010 ஜனவரி 11]

90—

விளையாட்டு மையம்

வினா எண் 62368—திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம், நெமிலி மற்றும் சோளிங்கர் ஆகிய ஒன்றியப் பகுதிகளில் இளைஞர்கள் விளையாட்டு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம், நெமிலி மற்றும் சோளிங்கர் ஆகிய ஒன்றியப் பகுதிகளில் இளைஞர்கள் விளையாட்டுப் பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

91—

விளையாட்டு மைதானம்

வினா எண் 62550—திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை தொகுதி, காளையார்கோவில் ஒன்றியம், மறவமங்கலம் கிராமத்தில் விளையாட்டு மைதானம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை தொகுதி, காளையார்கோவில் ஒன்றியம், மறவமங்கலம் கிராமத்தில் விளையாட்டு மைதானம் உருவாக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

92—

உடற்பயிற்சி நிலையம்

வினா எண் 62867—திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, கல்லுக்கூட்டம் ஊராட்சி, கடியப்பட்டணம், தோமையார் விளையாட்டுச் சங்கத்திற்கு உடற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, கல்லுக்கூட்டம் ஊராட்சி, கடியப்பட்டணம், தோமையார் விளையாட்டுச் சங்கத்திற்கு உடற்பயிற்சி நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

93—

உடற்பயிற்சி நிலையம்

வினா எண் 63065—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கிழக்கு மேட்டுக்குப்பம், வேகாக்கொல்லை, வடகுத்து மற்றும் வல்லம் ஆகிய கிராமங்களில் இளைஞர்களுக்கு உடற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, கிழக்கு மேட்டுக்குப்பம், வேகாக்கொல்லை, வடகுத்து மற்றும் வல்லம் ஆகிய கிராமங்களில்

2010 ஜனவரி 11]

இளைஞர்களுக்கு உடற்பயிற்சி நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

94—

சாலையைச் செப்பனிடுதல்

வினா எண் 54300—திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, தோலம்பாளையம், கோபனாரி சாலையில் வனத் துறைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை வனக் கோட்டத்தைச் சார்ந்ததும் மேட்டுப்பாளையம் தொகுதிக்கு உட்பட்டதுமான தோலம்பாளையம் முதல் கோபனாரி வரை செல்லும் சாலை, பெரிய நாயகன்பாளையம் வனச் சரகத்திற்குட்பட்ட கோபனாரி வனப் பகுதியினூடே 4.00 கி.மீ. தூரத்திற்குச் செல்கிறது.

திருச்சி, வனப் பொறியியல் கோட்ட வனப் பொறியாளர்மூலமாக 2004-2005 ஆம் ஆண்டில் இச்சாலை தார்ச் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது. இச்சாலையில் கன மழை காரணமாக ஆங்காங்கே பழுதுகள் ஏற்பட்டன. மிகவும் சேதமடைந்துள்ள 1 கி.மீ. தூரத்தை சரிசெய்யும் வகையில் பகுதி 1 திட்டத்தின்கீழ் அரசாணை எண் 217, சுற்றுச்சூழல் மற்றும் வனம் (வனம்-10) துறை, நாள் 12-8-2008-ல் ரூ.10.00 இலட்சம் நிதி அனுமதிக்கப்பட்டு, இதன் அடிப்படையில் திருச்சி வனப் பொறியியல் கோட்ட வனப் பொறியாளர்மூலமாக இச்சாலையைச் செப்பனிடும் பணி 2008-2009 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

95—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 78128—திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 ஜனவரி 11

(அ) திருவட்டாறு தொகுதி, ஆலம்பாறை-வலியமலை-பெருஞ்சாணி சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவட்டாறு தொகுதி, ஆலம்பாறை-வலியமலை-பெருஞ்சாணி சாலை, கன்னியாகுமரி வனக்கோட்டம் வீரப்புலி காப்புக்காட்டில் அமைந்துள்ளது. 1980-க்கு முன்னரே உபயோகத்தில் உள்ள இச்சாலை, சுமார் 9 கி.மீ. நீளமும் மற்றும் 3 மீ. அகலமும் உடையது. சுமார் 7 கி.மீ. தூரம் அரசு ரப்பர் கழகத்தின் கட்டுப்பாட்டிலும் 2 கி.மீ. தூரம் வனத் துறையின் கட்டுப்பாட்டிலும் உள்ள இச்சாலை, தார்ச் சாலையாக உள்ளது. இச்சாலையை அதே அகலத்தில் சீரமைக்க சுமார் ரூ.50 இலட்சம் நிதி தேவைப்படும். இந்நிலையில், 2009-2010 ஆம் வருடம், பகுதி-1 திட்டத்தின்கீழ் மற்றவற்றுடன் இச்சாலையைச் சீரமைக்க ரூ.50.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து, அ.ஆ.(டி) எண் 300, சுற்றுச்சூழல் மற்றும் வனம், நாள் 12-10-2009-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேற்கண்ட ஆணையின் அடிப்படையில், இச்சாலையைச் சீரமைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

96—

தூர் வாருதல்

வினா எண் 87243—திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் தொகுதி, குதிரைமொழிதேரி வனத் துறைக்குச் சொந்தமான அருஞ்சுனை காத்த ஐயனார் கோயில் அருகில் உள்ள குளத்தை தூர் வாரி, சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

அருஞ்சுனை காத்த ஐயனார் கோவில் அருகில் உள்ள குளம் (ஊரணி), குதிரைமொழித்தேரி காப்புக்காட்டில் அமைந்துள்ளது.

2010 ஜனவரி 11]

இக்குளம் வெகு ஆண்டுகளுக்கு முன்பாக அதாவது *100* ஆண்டுகளுக்கு முன்பாக தோண்டியதாக தெரியவருகிறது. அருஞ்சுனை காத்த ஐயனார் கோயில் மற்றும் திருச்செந்தூர் முருகன் கோயிலுக்கு வரும் பக்தர்கள் இந்தக் குளத்தில் நீராடி அருள்மிகு ஐயனாரை தரிசித்துவிட்டு செல்கிறார்கள். கோயிலுக்கு வரும் பக்தர்கள் நீராடுவதற்கு இக்குளம் பயன்படுகிறது. இந்தக் குளம் குதிரைமொழி காப்புக்காட்டின் உட்பகுதியில் அமைந்துள்ளது. எனவே, சம்மந்தப்பட்ட கோயில் நிர்வாகத்திடமிருந்தோ அல்லது பஞ்சாயத்து யூனியனிடமிருந்தோ உரிய கோரிக்கை கிடைக்கப்பெறின், மரங்கள் ஏதும் வெட்டாமலும், குளத்தின் பரப்பை அதிகப்படுத்தாமலும், புதியதாக வரத்துக் கால்வாய் ஏதும் உருவாக்காமலும் இருப்பின், குளத்தை தூர் வாரி ஆழப்படுத்தி கரையினைப் பலப்படுத்தவும், சுற்றிலும் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கப்படும்.

97—

நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 107835—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் செயல்படும் வனச் சரகத்தில் வன விலங்குகளுக்கு நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதியில், சேலம் வனக் கோட்டத்தின்கீழ் டேனிஷ்பேட்டை சரகம் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் நீர் பிடிப்புப் பகுதிகளில் நீர் ஆதாரத்தை மேம்படுத்தும் வகையிலும், காப்புக்காடுகளில் உள்ள வன விலங்குகள் பயன்பெறும் வகையிலும், தடுப்பணைகள் மற்றும் கசிவு நீர்க் குட்டைகள் கட்டப்பட்டு வருகின்றன.

2008-2009 ஆம் ஆண்டில், இரண்டு தடுப்பணைகள் மற்றும் மூன்று கசிவு நீர்க் குட்டைகள் ரூ.*12.92* இலட்சம் மதிப்பீட்டில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அமைக்கப்பட்டுள்ளன. இவை வன விலங்குகளுக்கு மிகவும் பயனுள்ள வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

98—

உயிரினங்களைப் பாதுகாத்தல்

வினா எண் 109568—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பசுமையான காடுகளில் மான், மயில் போன்ற உயிரினங்களை வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தரங்குன்றிய முள்ளடர்ந்த காடுகளும், இலையுதிர் காடுகளைச் சார்ந்த மரங்களும் உள்ளன. இந்தக் காடுகளில் சில இடங்களில் வன உயிரினங்களான பெருநரி, மான், மயில் மற்றும் வெவ்வேறு பறவைகள் வாழ்கின்றன. உடும்பு, பாம்பு போன்ற ஊர்வன இனங்களும் இக்காடுகளில் வசிக்கின்றன. இக்காடுகளில் உள்ள மரங்களையும், வன உயிரினங்களையும் பாதுகாப்பதற்கு தமிழக அரசு வன ஊழியர்களை நியமித்து, வேட்டையாடாதவண்ணம் பாதுகாக்கின்றது. அண்மையில் சில விஷமிகள் வேட்டையாடியபோது கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டனர். அவர்களுக்கு தண்டனை வழங்க தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள காடுகளில் மான் மற்றும் மயில் போன்ற உயிரினங்கள் ஏற்கெனவே வாழ்ந்து வருகின்றன.

99—

மீன் பதப்படுத்தும் நிலையம்

வினா எண் 78801—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

(அ) இராமநாதபுரம் மாவட்டம், ஏர்வாடி கடலில் பிடிக்கப்படும் மீன்களை ஏற்றுமதி செய்ய ஜெட்டி ஏற்படுத்தவும் மற்றும் மீன் பதப்படுத்தும் நிலையம் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில், ஏர்வாடி மற்றும் சின்ன ஏர்வாடி என்ற கடலோர கிராமங்கள் அருகருகே உள்ளன. மேற்படி இரண்டு கிராமங்களைச் சார்ந்த மீனவர்கள் சின்ன ஏர்வாடி கடற்பகுதியில் நிறுவப்பட்டுள்ள துறைமுகத்தைப் பயன்படுத்தி கடலுக்குள் சென்று மீன்பிடிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். தவிர, ஏர்வாடி கிராமத்தில் கடல் அமைப்பு அவ்வப்போது மாறுபடுவதாலும், கடல் அரிப்பு ஏற்படுவதாலும் ஜெட்டி அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

100—

குளிர் சாதனக் கட்டடம்

வினா எண் 104388—திரு. பெ. மோகன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், வெள்ளப்பட்டி கிராமத்தில் மீனவர்களுக்கு குளிர் சாதனக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) வெள்ளப்பட்டி மீனவர் கிராமத்தில் குளிர் சாதனக் கட்டடம் கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2010 ஜனவரி 11

பட்டியல் 9

1—

தொகுப்பு வீடுகள்

வினா எண் 109547—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறைமூலம் உடுமலைப்பேட்டை வட்டத்தில் தொகுப்பு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:

(அ) மத்திய திட்டக் குழுவின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் செயல்படுத்தப்படும் பணிகள் நீலகிரி மலை மாவட்டத்திற்கு மட்டுமே செயல்படுத்தப்பட வேண்டும். இத்திட்டத்தின்கீழ் இதர மாவட்டங்களில் பணிகள் மேற்கொள்ள வழிவகைகள் இல்லை.

(ஆ) இக் கேள்வி எழவில்லை.

2—

தார்ச் சாலை

வினா எண் 7550—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, தாளபாளையம், தெற்குக் காட்டுக் கொட்டாய் பகுதியில் தார்ச் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒலகடம் பேரூராட்சிக்கு உட்பட்ட தாளபாளையம் தெற்குக் காட்டுக் கொட்டாய் பகுதியில் உள்ள பாதையானது நிலவியல் வண்டிப்பாதை ஆகும். இப்பாதையானது பேரூராட்சிக்கு ஒப்படைக்காததால் பேரூராட்சியின்மூலம் தார்ச் சாலை அமைக்க இயலவில்லை. எனவே, மேற்படி பாதையைப் பேரூராட்சிக்கு ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3—

தார்ச் சாலை

வினா எண் 8049—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, சென்னிமலை பேரூராட்சி, 9-வது மற்றும் 13-வது வார்டு அருணகிரிநாதர் வீதி-2-ல் தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, சென்னிமலை பேரூராட்சி, 9-வது மற்றும் 13-வது வார்டு அருணகிரிநாதர் வீதி-2-ல் தார்ச் சாலை மற்றும் கான்கிரீட் சாலை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு தற்போது பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

4—

மின் விளக்குகளைச் சீரமைத்தல்

வினா எண் 47621—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 ஜனவரி 11

(அ) கபிலர்மலை தொகுதி, வேலூரில் காவிரி ஆற்றுப்பாலத்தில் புஞ்சை புகளூர் பேரூராட்சியால் பராமரிக்கப்படும் மின் விளக்குகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கபிலர்மலை தொகுதி, வேலூரில் காவிரி ஆற்றில் ஏற்கெனவே ஒரு பழைய பாலம் அமைக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது. இப்பகுதி புஞ்சை புகளூர் ஊராட்சியைச் சேர்ந்ததாகும். இந்த பழைய பாலத்தில், 20 தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. 4-9-2004 ஆம் தேதியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற குழுக்கூட்டத்தின் அறிவுரைக்கிணங்க, இந்த மின் விளக்குகள் புஞ்சை புகளூர் பேரூராட்சியால் பராமரிக்கப்பட்டும் மின் கட்டணமும் செலுத்தப்பட்டு வருகிறது. தற்போது தேசிய நெடுஞ்சாலை (NH-7) அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் காவிரி ஆற்றில் தேசிய நெடுஞ்சாலைத் துறையினரால் ஒரு புதிய பாலம் அமைத்து அதில் 19 மின் விளக்குகள் அமைக்கப்பட்டு தேசிய நெடுஞ்சாலைத் துறையினரின் பராமரிப்பில் இருந்து வருகிறது. மேலும், பழைய பாலத்தில் உள்ள மின் விளக்குகளில் பழுதான மின் விளக்குகள் சீரமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

5—

பாதாளச் சாக்கடை

வினா எண் 50892—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, பேரூர் பேரூராட்சி மற்றும் வேடப்பட்டி பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, பேரூர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைத்திட விரிவான திட்ட அறிக்கை ரூ.5.08 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் தயார் செய்யப்பட்டு JNNURM திட்டத்தின்கீழ் ஒப்புதல் பெற்றிட டுபிட்கோ நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. அதன் பின்னர் விரிவான திட்ட அறிக்கை டுபிட்கோ நிறுவனத்தின் மதிப்பீட்டு அறிக்கையுடன், மத்திய அங்கீகாரக் குழுவின் ஒப்புதல் பெற புதுடெல்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டு மத்திய அங்கீகாரக் குழுவின் ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்பு, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நடைமுறைப்படுத்திட இயலும்.

வேடப்பட்டி பேரூராட்சியில் JNNURM திட்டத்தின்கீழ் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்திட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் ஆய்வுகள் மேற்கொள்ள ரூ.4.23 இலட்சத்தினை ஆய்வுக் கட்டணமாக பேரூராட்சிமூலம் 24-10-2007 ஆம் தேதியில் செலுத்தி உரிய ஆய்வுகள் மேற்கொண்டு, விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணி நடைபெறுகிறது. இப்பணி முடிவடைந்ததும், பேரூராட்சியின் நிதி நிலைமையினை ஆராய்ந்து JNNURM திட்டத்தின்கீழ் நிதி உதவியினை பெற்றிட டுபிட்கோ நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்படும். பின்னர் விரிவான திட்ட அறிக்கை டுபிட்கோ நிறுவனத்தின் மதிப்பீட்டு அறிக்கையுடன், மத்திய அங்கீகாரக் குழுவின் ஒப்புதல் பெற புதுடெல்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டு மத்திய அங்கீகாரக் குழுவின் ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் பாதாளச் சாக்கடைத் திட்டம் நடைமுறைப்படுத்திட இயலும்.

6—

கான்கிரீட் சாலை

வினா எண் 60083—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 ஜனவரி 11

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி 2-வது வார்டில் கான்கிரீட் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதிக்குட்பட்ட திருப்புவனம் பேரூராட்சி வார்டு எண் 2-ல் உள்ள மன்னர் குடியிருப்பு, பெருமாள் கோயில் தெரு, சுப்பிரமணி சுவாமி கோயில் தெரு, அம்மன் கோயில் தெரு, சுவாமி சன்னதி தெரு, வடக்கு ரதவீதி ஆகிய தெருக்களுக்கு சிமெண்ட் சாலை மற்றும் தார்ச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. புலவர் கார்மேகம் தெரு, வடக்குரத வீதிகளுக்கு 2007-2008 ஆம் ஆண்டு பொது நிதியில் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

7—

சாலை வசதி

வினா எண் 62223—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, கண்டகாப்பட்டி பிரிவு பாலம் முதல் கானமுன்னார் ஏரி வரை மற்றும் காடையாம்பட்டி பேரூராட்சி, 5-வது வார்டு, கரட்டுக் கொட்டா முதல் ஆண்டி நகர் பிரிவு சாலை வரை தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் உள்ள கண்டகாபட்டி பிரிவு பாலம் முதல் கானமுன்னார் ஏரி வரையிலான பகுதி காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், பொம்மியம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட பகுதி என்பதால், அப்பகுதியில் பேரூராட்சி மூலம் சாலை வசதி ஏற்படுத்திக் கொடுக்க இயலாது. மேலும்,

2010 ஜனவரி 11]

காடையாம்பட்டி பேரூராட்சி, 5-வது வார்டுக்குட்பட்ட கரட்டுக்கொட்டாய் நிர்மாரியம்மன் கோயில் முதல் ஆண்டிக்கொட்டாய் பிரிவு சாலை வரை சுமார் 1.00 கிலோ மீட்டர் சாலை பொதுமக்கள் பயன்படுத்தாத மேடு பள்ளம் நிறைந்த பகுதியாகும். இதனைச் சீர்படுத்தி தார்ச்சாலையாக மேம்பாடு செய்ய சுமார் ரூ.13.00 இலட்சம் தேவைப்படும். இதற்கு போதுமான நிதி தற்போது பேரூராட்சியில் இல்லை என்பதால், வரும் நிதியாண்டில் அரசு மானியம் பெற்று சாலைப் பணி செய்து கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8—

பேருந்து வசதி

வினா எண் 62422—திரு. செ. பொன்னுதுரை: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதி, காஞ்சிக் கோவில் பேரூராட்சியில் உள்ள வாரச் சந்தையைக் கவுந்தப்பாடி சாலைக்கு மாற்றம் செய்து பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருந்துறை தொகுதி, காஞ்சிக்கோவில் பேரூராட்சியில் தற்போது இயங்கி வரும் வாரச்சந்தை வளாகத்தில் பேருந்து நிலையம் அமைக்கவும், பேரூராட்சி சந்தையைத் தானமாக வழங்கப்பட்ட இடத்திற்கு மாற்றியமைக்கவும் முடிவு செய்யப்பட்டது. சந்தைக்குத் தானமாக வழங்கப்பட்ட இடம் நகருக்கு அப்பால் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இதனால் பொதுமக்கள் சந்தைக்குச் செல்லத் தயங்குவார்கள் என்பதால் தற்போது சந்தை நடைபெறும் இடத்திற்கு எதிர்புறம் உள்ள 60 சென்ட் விஸ்தீரண இடத்தில் சந்தையை அமைக்கலாம் என காஞ்சிக்கோவில் பேரூராட்சி மன்றம் தீர்மானம் இயற்றியுள்ளது. தற்போது வாரச்சந்தை அமைந்துள்ள இடம் ஒரு ஏக்கர் பரப்பளவு கொண்டது. இதில் பேரூராட்சி கடைகள்

கட்டப்பட்டது போக சுமார் 75 செண்ட் இடம் மட்டுமே உள்ளது. இதில் பேருந்து நிலையம் அமைத்தால், கடைகள் கட்டவும், பிற்காலத்தில் பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்யவும் இயலாத நிலை உள்ளது. மேலும், காஞ்சிக்கோவில் பேரூராட்சிக்கு அருகில் 8 கி.மீ. தொலைவில் கவுந்தம்பாடி ஊராட்சியில் ஒரு பேருந்து நிலையமும் அதேபோல் பெருந்துறை பேரூராட்சியில் ஒரு பேருந்து நிலையமும் உள்ளது. காஞ்சிக்கோவில் பேரூராட்சிக்கு தற்போது சுமார் 25 நகரப் பேருந்துகள் மட்டுமே வந்து செல்கின்றன. இந்நிலையில் காஞ்சிக்கோவில் பேரூராட்சி வாரச்சந்தையில் பேருந்து நிலையம் அமைக்க பேரூராட்சி பொது நிதியில் போதிய நிதி வசதி இல்லை. மேலும் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாடு வளர்ச்சிக் கழகம் அல்லது தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் சேவைகள் நிறுவனத்தில் கடன் பெற்று பேருந்து நிலையம் அமைத்தால் போதிய வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்க இயலாது. எனவே, காஞ்சிக்கோவில் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை.

9—

தகன மேடை

வினா எண் 70063—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் பேரூராட்சி, சென்னிமலை சாலையில் அமைந்துள்ள மயானத்திறகு சுற்றுச் சுவர் மற்றும் புதிய தகன மேடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதிக்குட்பட்ட காங்கேயம் பேரூராட்சியில் 2008-2009 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் சென்னிமலை மற்றும் பழையகோட்டை சாலையில் அமைந்துள்ள மயானத்திற்கு சுற்றுச் சுவர் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

2010 ஜனவரி 11]

தகனமேடை அமைக்கும் பணி அடுத்த நிதி ஆண்டில் *(2009-2010)* அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

10—

வாய்க்கால் சீரமைப்பு

வினா எண் 74979—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சியில் உள்ள அனைத்து வீதிகளிலும் உள்ள கழிவுநீர் வாய்க்காலை சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சிவகங்கை மாவட்டம், மானாமதுரை பேரூராட்சியில் *1.360* கி.மீ. நீளத்தில் மண் வாய்க்காலும், *4.319* கி.மீ. நீளத்தில் சிமென்ட் வாய்க்காலும் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. வாய்க்கால்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள் பேரூராட்சியின் பொது நிதியிலும், திட்ட நிதியிலிருந்தும் சீர் செய்யப்பட்டு வருகிறது.

11—

சமுதாயக் கூடம்

வினா எண் 82024—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் எம்.என்.குப்பத்தில் சமுதாயக் கூடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் பொது நிதியிருப்பு திருப்திகரமாக இல்லாத நிலை உள்ளது. எனினும், 2009-2010 ஆம் நிதியாண்டில் பேரூராட்சி மன்றத்தின் ஒப்புதல் பெற்று சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்/பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் அல்லது இதர முழு மானியத்துடன்கூடிய அரசு திட்டத்தில் நிதி கிடைக்கப் பெற்று முத்திகைநல்லான்குப்பம் பகுதியில் சமுதாயக் கூடம் அமைத்துத் தரப்படும்.

12—

சீரான மின்சாரம்

வினா எண் 62150—திரு. ஆர். சாமி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூர் ஒன்றியம், கொட்டாம்பட்டி ஒன்றியம், மேலூர் நகராட்சி மற்றும் அ.வல்லாளப்பட்டி பேரூராட்சி ஆகிய பகுதிகளில் சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

மேலூர் தொகுதி, மேலூர் ஒன்றியம், கொட்டாம்பட்டி ஒன்றியம், மேலூர் நகராட்சி மற்றும் அ.வல்லாளப்பட்டி பகுதிகளுக்கு நான்கு துணை மின் நிலையங்கள்மூலம் 469 பகிர்மான மின்மாற்றிகளின் வழியாக சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

13—

துணை மின் நிலையம்

வினா எண் 63039—திரு. டி. ராமச்சந்திரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தொட்டமஞ்சி ஊராட்சி, தொட்டமஞ்சி கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2010 ஜனவரி 11]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது தொட்டமஞ்சி கிராமத்திற்கு, ஒகேனக்கல் 33/11 கி.வோ. ஆளில்லா துணை மின் நிலையத்திலிருந்து 11 கி.வோ. பில்லிகுண்டு மின் பாதைமூலமாக தரமான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. 2 எம்.வி.ஏ. மின்மாற்றி திறன் கொண்ட ஒகேனக்கல் 33/11 கி.வோ. (ஆளில்லா) துணை மின் நிலையத்தின் தற்போதைய உச்சகட்ட தேவை 0.514 எம்.வி.ஏ. மட்டுமே உள்ளது. மின்பளு பெருக்கமும் குறைவாகவே உள்ளது. எனவே, தொட்டமஞ்சி கிராமத்தில் புதியதாக ஒரு துணை மின் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

14—

துணை மின் நிலையம்

வினா எண் 75357—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, காவேரிப்பட்டினம் ஒன்றியத்தில் புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழுவதற்கான வாய்ப்பில்லை.

15—

துணை மின் நிலையம்

வினா எண் 84245—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம், பழையனூரில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம், பழையனூரில் துணை மின் நிலையம் அமைக்க தற்பொழுது அவசியம் எழவில்லை.

16—

தரம் உயர்த்துதல்

வினா எண் 90910—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, ஆலப்பட்டியிலுள்ள 33 கே.வி. திறன் கொண்ட துணை மின் நிலையத்தை 110 மெகாவாட் திறனாக தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி தொகுதி, ஆலப்பட்டியிலுள்ள 33 கே.வி. திறன் கொண்ட துணை மின் நிலையத்தை 110 மெகாவாட் திறனாக தரம் உயர்த்திட தற்போது அவசியம் எழவில்லை.

17—

துணை மின் நிலையம்

வினா எண் 100761—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெல்லிக்குப்பம் தொகுதி, வெள்ளக்கரை கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

நெல்லிக்குப்பம் தொகுதி, வெள்ளக்கரை கிராமத்தில் ஒரு 110/22 கி.வோ. துணை மின் நிலையம் 11-வது பெரும் திட்டக் காலத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

18—

கதவணை

வினா எண் 101171—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதி, சோழசிராமணியில் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கதவணை கட்டுமானப் பணியை துரிதப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

மதகுத் தூண்களுக்கான கற்காரைப் பணிகள் 6 இடங்களில் முடிந்துவிட்டன. ஆற்றின் வலது கரையில் அணைப்புச் சுவர்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. பணியின் மொத்த வளர்ச்சி 70 விழுக்காடு நிறைவடைந்திருக்கிறது.

கடந்த 2007 ஆம் ஆண்டு காவிரி ஆற்றில் பெருக்கெடுத்து ஓடிய வெள்ளத்தினால் கதவணை கட்டுமானப் பணிகளின் முன்னேற்றத்தில் தடையேற்பட்டது. இருப்பினும் வாரியத்தின் சீரிய முயற்சியால் இத்திட்டத்தின் மின் உற்பத்தி எதிர்வரும் மார்ச் 2011-ல் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

19—

நியாய விலைக் கடை

வினா எண் 55726—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், பி. வாகைக்குளம் பகுதிநேர நியாய விலைக் கடையை முழு நேரக் கடையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சுழி வட்டம், நரிக்குடி ஒன்றியம், பி. வாகைக்குளம் கிராமத்தில் நாலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் உளுத்திடை நியாயவிலைக் கடையின் சேவை மையத்தில் 214 குடும்ப அட்டைகளே இணைக்கப்பட்டுள்ளன. அரசின் நிபந்தனையின்படி முழுநேரக் கடையாக செயல்பட குறைந்தது 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். எனவே, வாகைக்குளம் கிராமத்தில் செயல்படும் பகுதிநேர நியாயவிலைக் கடையினை முழு நேரக் கடையாக மாற்ற சாத்தியகூறுகள் இல்லை.

20—

மூலிகைப் பண்ணைகள்

வினா எண் 47179—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, நீரார் அணை மற்றும் டாப்சிலிப் பகுதிகளில் மூலிகைப் பண்ணைகள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீரார் அணை மற்றும் டாப்சிலிப் பகுதிகள் வனத் துறையினருக்கு உட்பட்ட பகுதியில் அமைந்திருப்பதால்

2010 ஜனவரி 11]

மூலிகைப் பண்ணை அமைக்க தோட்டக்கலைத் துறைமூலம் திட்டம் செயல்படுத்த இயலாது.

21—

கோகோ விளைச்சலை அதிகரித்தல்

வினா எண் 47815—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி சர்கார்பதி, டாப்சிலிப், ஆழியார் மற்றும் கோட்டூர் பகுதிகளில் கோகோ விளைச்சலை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* ஆம். தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ் கோகோ பயிரிட திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு ஹெக்டேருக்கு மானியமாக ரூ.11,250/- வழங்கப்படுகிறது. இத்திட்டம் மூன்றாண்டுகளுக்கு செயல்படுத்தப்படும். மேலும், காட்பரி நிறுவனத்துடன் மேற்கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் விவசாயிகளுக்கு தரமான கன்றுகள் மற்றும் உலர்விதைகளை நிறுவனமே பெற்றுக் கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. கோகோ பயிரிட விரும்பும் விவசாயிகள் தோட்டக்கலை உதவி இயக்குநர், ஆனைமலை அவர்களைத் தொடர்பு கொண்டு பயன் பெறலாம் என்ற விவரம் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

22—

உயர்ரக பழ மரக் கன்றுகள்

வினா எண் 61170—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் ஆல்போன்ஸா, ஹிமாம்பசந்த் போன்ற உயர்ரக மரக் கன்றுகளை விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆம். மானாமதுரை தொகுதியில் உயர்ரக பழ மரக் கன்றுகள் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ் 75 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

(ஆ) நடப்பு நிதியாண்டிலேயே தேசிய தோட்டக்கலை இயக்கம்மூலம் செயல்படுத்தப்படுகிறது.

23—

வேளாண்மைக் கிடங்கு

வினா எண் 62793—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி ஊராட்சியில், வேளாண்மைக் கிடங்கு மற்றும் விதை விற்பனை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் வேளாண்மை விரிவாக்க மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அனைத்து மையங்களிலும் வேளாண்மைக் கிடங்கு வசதியுடன் விவசாயிகளுக்குத் தேவையான சான்று விதைகள் மற்றும் வேளாண் இடுபொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

ஓமலூர் தொகுதியில் உள்ள ஓமலூரில் வேளாண் விரிவாக்க மையமும், கிடங்கு வசதியும் இருக்கிறது. இது பாகல்பட்டி

2010 ஜனவரி 11]

ஊராட்சியிலிருந்து சுமார் 5 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. அப்பகுதி மக்கள் ஓமலூர் வேளாண்மைக் கிடங்கு மற்றும் விதை விற்பனை மையத்தை நல்லமுறையில் பயன்படுத்தி வருகிறார்கள். மேல் தெரிவிக்கப்பட்ட காரணங்களால் பாகல்பட்டி ஊராட்சியில் வேளாண் கிடங்கு மற்றும் விதை விற்பனை மையம் அமைப்பதற்கான தேவை தற்போது எழவில்லை.

24—

வணிக வளாகங்கள்

வினா எண் 77347—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், தருமபுரியில் வேளாண்மை வணிகத்தை மேம்படுத்த வணிக வளாகங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தருமபுரி மாவட்டம், தருமபுரியில் வேளாண் வணிக வளாகங்கள் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

25—

அடுக்குமாடி அங்காடிகள்

வினா எண் 93578—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி உழவர் சந்தையில் அடுக்குமாடி அங்காடிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2010 ஜனவரி 11

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி வட்டாரத்தில் மக்கள் தொகை சுமார் 2,13,775 பேர் ஆகும். இங்கு 767 ஹெக்டேர் பரப்பளவில் காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகின்றன. சுற்று வட்டாரத்தில் 31 கிராமங்களில் 27 வகையான காய்கறிகள் பயிர் செய்யப்படுகின்றன. ஆண்டின் மொத்த உற்பத்தி 15,836 மெ.டன் ஆகும். இங்கு விளையும் காய்கறிகள் தருமபுரி உழவர் சந்தையிலும், தனியார் காய்கறி கடைகள், தருமபுரி நகராட்சி காய்கறி மொத்த விற்பனை அங்காடி, தருமபுரி, நல்லம்பள்ளி, இண்டூர் வாரச் சந்தைகள் ஆகியவற்றுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகின்றன. இவை தவிர, தருமபுரியிலிருந்து 32 கி.மீ. தூரத்தில் உள்ள பெண்ணாகரத்திலும், 26 கி.மீ. தூரத்தில் உள்ள பாலக்கோடிலும், 40 கி.மீ. தூரத்தில் உள்ள அரூரிலும் உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன. ஏற்கெனவே, தருமபுரி உழவர் சந்தை 72 கடைகளுடன் சிறப்பாக இயங்கி வருகிறது. தற்சமயம் இந்த உழவர் சந்தையில் 86 விவசாயிகள்மூலம் 13.00 மெ.டன் அளவிற்கு காய்கறிகள், கனிகள் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இது நுகர்வோரின் தேவைக்குப் போதுமானதாக உள்ளது.

26—

விற்பனை முனையம்

வினா எண் 94892—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

எல்லா விவசாயப் பொருட்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்ய வியாபாரச் சந்தை தொடங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

எல்லா விவசாய விளை பொருட்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்ய தமிழ்நாட்டில் சென்னை,

2010 ஜனவரி 11]

மதுரை மற்றும் கோவையில் தனியார் பங்கேற்புடன் விற்பனை முனையங்களை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

27—

வேளாண் விற்பனை சந்தை

வினா எண் 95463—திரு. வை. காவேரி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில் வேளாண்மை மொத்தம் மற்றும் சில்லறை விற்பனை (பெரிய அளவில்) சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூரில் வேளாண்மை மொத்தம் மற்றும் சில்லறை விற்பனை (பெரிய அளவில்) சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

28—

உலர்களம்

வினா எண் 102226—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, கீழமேல்குடி ஊராட்சி, கீழமேல்குடியில் உலர்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, கீழமேல்குடி ஊராட்சி, கீழமேல்குடியில் உலர்களம் அமைக்க இடத் தேர்வு செய்வதற்கு சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இடத் தேர்வு செய்யப்பட்டவுடன் மாவட்ட ஆட்சித் தலைவரின் முன் நுழைவு அனுமதி பெற்று, பின்னர் முன்னுரிமை அடிப்படையில் உலர்களம் கட்டித்தர ஆவன செய்யப்படும்.

29—

புதிய கட்டடம்

வினா எண் 101551—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் நீதிமன்றத்திற்கு புதிய கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கான அறிவிப்பினை 2008-2009 ஆம் ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடரின்போது மாண்புமிகு அமைச்சர் (சட்டம்) அவர்கள் அறிவித்தார்கள். அதற்கிணங்க, ரூ.2,88,90,000 செலவில் காங்கேயத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கான ஆணைகள், அரசாணை (நிலை) எண் 830 உள் துறை, நாள் 25-9-2009-ல் வெளியிடப்பட்டுள்ளன.

30—

மாணவர் சேர்க்கை

வினா எண் 107767—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

செங்கல்பட்டு சட்டக் கல்லூரியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரியில் மாணவர்கள் சேர்க்கைக்கான இடங்கள் போதுமான அளவில் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளதால், மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

31—

பேருந்து வசதி

வினா எண் 100624—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, கொடியம்பாளையம் ஊராட்சிக்கு பேருந்து வசதியே இல்லாததால், புதியதாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கொடியம்பாளையம் தீவு மக்கள் கொடியம்பாளையத்திலிருந்து பரிசல் படகுமூலம் உப்பனாற்றினைக் கடந்து பழையார் அடைந்து, பழையாற்றிலிருந்து சீர்காழிக்கு சீர்காழி நகரப் பேருந்துகள் தடம் எண் A3A மற்றும் 17A ஆகியவைமூலம் தற்போது இயக்கப்பட்டு வரும் 16 நடைகளைப் பயன்படுத்தி சீர்காழி வந்தடைகின்றனர். இதேபோன்று கொடியம்பாளையத்திலிருந்து உப்பனாற்றினை பரிசல் படகுமூலம் கடந்து கொடியம்பாளையம் உப்பனாற்றுப் பாலம்-சிதம்பரம் தடத்தில் இயக்கப்பட்டு வரும் மினிப் பேருந்து வசதியினைப் பயன்படுத்தி சிதம்பரத்திற்கும் மற்றும் வீரன்கோயில் திட்டு அடைந்து அங்கிருந்து சிதம்பரம் அடைகின்றனர். சிதம்பரம்-வீரன்கோயில்திட்டு 15 கி.மீ. தூரத்திற்கு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் (விழுப்புரம்) கழகப் பேருந்து ஒன்று இயக்கப்பட்டு வருகிறது.

[2010 ஜனவரி 11

கொடியம்பாளையம் தீவிலிருந்து சிதம்பரம் செல்லும் வகையில் பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. உப்பனாற்றுப் பாலம் கட்டிமுடித்த பின்னர் கோரிக்கைத் தடத்தினை மீண்டும் ஆய்வு செய்து, கோரிக்கைக்கு ஏற்ப, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், கடலூர் மண்டலம்மூலம் பேருந்து இயக்கிட நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

32—

பேருந்து வசதி

வினா எண் 100632—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை வடபழனியிலிருந்து ஆழ்வார் திருநகர், நெற்குன்றம், மேட்டுகுப்பம், சக்தி நகர் வழியாக திருவேற்காடு வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது ஆற்காடு சாலையில் ஆழ்வார் திருநகர் வழியாகவும் மற்றும் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் நெற்குன்றம் வழியாகவும், சென்னை நகரின் பல்வேறு இடங்களுக்கு போதுமான அளவில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆழ்வார் திருநகரிலிருந்து மேட்டுகுப்பம் வழியாக நெற்குன்றம் செல்லும் சாலை ஆங்காங்கே வளைவுகளுடன் சிறிய வாகனங்கள் மற்றும் மினி பேருந்து இயக்கக்கூடிய அளவிலேயே உள்ளதால் பெரிய பேருந்தினை இச்சாலை வழியே இயக்க வாய்ப்பில்லை.

33—

பேருந்து வசதி

வினா எண் 101837—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

(அ) விளாத்திகுளம் தொகுதி, சாத்தூரிலிருந்து இருக்கன்குடி, அயன்கரிசல்குளம், வெம்பூர், புதூர், மேலஅருணாசலபுரம், கீழஅருணாசலபுரம், நடுக்காடூர் வழியாக கமுதி வரை இயக்கி நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சாத்தூர்-கமுதி (வழி) இருக்கன்குடி, அயன்கரிசல்குளம், வெம்பூர், புதூர், மேலஅருணாசலபுரம், கீழ அருணாசலபுரம், நடுக்காடூர் வழித்தடத்தில் தினசரி 4 தனிநடைகள் இயக்கப்பட்டு வந்தன. மேற்படி நடைகளில் பயணிகளின் பயன்பாடு மிக மிகக் குறைவாகவும், சில சமயங்களில் ஓரிரு நபர்களே பயணம் செய்து வந்துள்ளனர். இது தவிர, மேற்படி வழித்தடத்தில் புதூர் அவுட்டர் முதல் வடக்கு நத்தம் வரையிலான சுமார் 8.0 கி.மீ. தூரச் சாலையில் சுமார் 6.0 கி.மீ. தூரச் சாலையானது குண்டும், குழியுமாக மிகவும் மோசமாக பழுதடைந்த நிலையில் உள்ளதால் இத்தடப் பேருந்து இயக்கப்படவில்லை. எனவே, சாலைப் பழுது காரணமாகவும், பயணிகள் பயன்பாடு இல்லாததாலும் நிறுத்தப்பட்ட பேருந்தினை மீண்டும் இயக்க இயலாத நிலையில் உள்ளது.

34—

சுற்றுச் சுவர்

வினா எண் 107474—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பொம்மிடி அரசுப் போக்குவரத்துக் கழகப் (கிளை) பணிமனைக்கு சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக பொம்மிடி பணிமனைக்கு நடப்பாண்டில் சுற்றுச் சுவர் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

35—

முதியோர் சிகிச்சைப் பிரிவு மையம்

வினா எண் 45338—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை மற்றும் திருப்புவனம் அரசு மருத்துவமனைகளில் முதியோர் சிகிச்சைப் பிரிவு மையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து இருபது கி.மீ. தொலைவில் உள்ள சிவகங்கை அரசு மருத்துவமனையில் முதியோருக்கான சிகிச்சைப் பிரிவு செயல்பட்டு வருகிறது. எனவே, மானாமதுரை அரசு மருத்துவமனையில், முதியோர் சிகிச்சைப் பிரிவு தொடங்க நிருவாக ரீதியாக அவசியம் எழவில்லை.

திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், திருப்புவனத்தில் சமுதாய நல மையம் செயல்பட்டு வருகிறது. அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் முதியோர் சிகிச்சை மையம் இல்லை. எனவே, திருப்புவனம் சமுதாய நல மையத்தில் முதியோர் சிகிச்சைப் பிரிவு தொடங்க நிருவாக ரீதியாக சாத்தியக்கூறுகள் இல்லை.

2010 ஜனவரி 11]

36—

தடுப்புச் சுவர்

வினா எண் 56515—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியார் மருத்துவமனைக்கு தடுப்புச் சுவர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் ஆழியார் நகர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆழியார் நகர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ.3.5 இலட்சம் செலவில் சுற்றுச் சுவர் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

37—

பழுதுபார்த்தல்

வினா எண் 57098—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை வட்டம், மானுப்பட்டி, மடத்துக்குளம், கொமரலிங்கம் ஆகிய இடங்களில் உள்ள மருந்தகங்களைப் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

உடுமலைப்பேட்டை வட்டம், மானுப்பட்டி, மடத்துக்குளம், கொமரலிங்கம் ஆகிய மருந்தகங்களை ஆய்வு செய்து பழுதுபார்ப்புப்

பணிகளை மேற்கொள்ள 2009-2010 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை சுகாதார நிலைய பழுதுபார்ப்புப் பணிகளுக்கான முன்னுரிமைப் பட்டியலில் சேர்த்து கட்டடப் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளும்படி திருப்பூர் சுகாதாரப் பணிகள் துணை இயக்குநருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

38—

இயந்திர பராமரிப்பு

வினா எண் 59334—திரு. கு. ஹசன் அலி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் நீராவி சலவை இயந்திரத்தைப் பராமரிக்க பணியாளரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள நீராவி சலவை இயந்திரத்தைப் பராமரிப்பதற்குத் தேவையான பணியாளர் பணியிடங்கள் உருவாக்கப்படவில்லை. மேலும், நீராவி சலவை இயந்திரம் மற்றும் கட்டடம், பொதுப் பணித் துறையினரால் இத்துறைக்கு இன்னும் ஒப்படைப்பு செய்யப்படவில்லை.

39—

பணி நியமனம்

வினா எண் 60791—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், வீரபாண்டித் தொகுதி, வேம்படிதாளம் அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள 2 பெண் துணை செவிலியர் பணியிடங்களை உடன் நிரப்பிட அரசு முன்வருமா?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், வேம்படிதாளம் அரசு மருத்துவமனையில் மொத்தம் இரு மகப்பேறு உதவியாளர் பணியிடங்கள் உள்ளன. அவற்றில் தற்போது ஒருவர் சுகாதார மேற்பார்வையாளராகப் பதவி உயர்வில் சென்றுள்ளார். தற்போது ஒரு மகப்பேறு உதவியாளர் பணியிடம் மட்டும் காலியாக உள்ளது. இதனை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும். துணை செவிலியர் பணியிடம் இம்மருத்துவமனையில் கிடையாது. எனவே, மேற்காணும் வினா எழவில்லை.

40—

அதிநவீனப் பிரிவு

வினா எண் 64657—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர், வால்பாறை மற்றும் கோட்டூர் அரசு மருத்துவமனையில் அதிநவீன அறுவை சிகிச்சைப் பிரிவு தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர், வால்பாறை மற்றும் கோட்டூர் அரசு மருத்துவமனைகளில் நாளொன்றுக்கு நடைபெறும் அறுவை சிகிச்சைகளின் சராசரி எண்ணிக்கையைப் பரிசீலித்துப் பார்க்கையில் அந்த மருத்துவமனைகளில் அதிநவீன அறுவை சிகிச்சைப் பிரிவு தொடங்குவதற்கு நிருவாக ரீதியாக சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 ஜனவரி 11

41—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 86389—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், பொட்டனேரி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொட்டனேரி கிராம மக்கள் தொகை 1,794 ஆகும். இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையம் உள்ளது. இக்கிராமத்திற்கு 5 கிலோ மீட்டர் தொலைவில் மேச்சேரி ஆரம்ப சுகாதார நிலையமும், 10 கிலோ மீட்டர் தொலைவில் மேட்டூர் அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையும் செயல்பட்டு வருகின்றன.

இக்கிராமம் மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள் தொகை 1,08,700. (2001 கணக்கெடுப்பு) இவ்வூராட்சி ஒன்றியத்தில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் முறையே 1) மேச்சேரி 2) குட்டப்பட்டி 3) வெள்ளார் ஆகியன செயல்பட்டு வருகின்றன.

மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போதுள்ள 3 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால், மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில், பொட்டனேரி கிராமத்தில், புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மேலும், இரண்டு சுகாதார மையங்களுக்கும் குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

ஆனால், பொட்டனேரி கிராமத்திற்கும் மேச்சேரி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், பொட்டனேரி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

42—

விழிப்புணர்வு

வினா எண் 93196—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உணவுப் பொருட்களில் கலப்படம் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

உணவுப் பொருட்களில் கலப்படம் செய்வதைத் தடுத்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த, மாநில உணவு நல அதிகாரியாக இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவரது கட்டுப்பாட்டின்கீழ் துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் உணவுப் பொருட்களில் கலப்படம் உள்ளதா எனக் கண்டறிய உணவு மாதிரி எடுத்து ஆய்விற்காக அனுப்புகிறார்கள். அந்த உணவு மாதிரிகளில் கலப்படம் கண்டறியப்பட்டால், உணவு கலப்படத் தடுப்புச் சட்டத்தின்கீழ் கலப்படம் செய்தவர்கள்மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, அதன் விவரம் செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்படுவதன்மூலம் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. மேலும், நீதிமன்றத்தால் தண்டனை அளிக்கப்பட்ட விவரமும் செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. மேலும், மாநிலம் முழுவதும் சிறப்புத் திடீர் சோதனைகள் அடிக்கடி செய்யப்பட்டும், அதன் விவரங்கள் தினசரி பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்புவதன்மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டும் வருகிறது. மேலும், தகவல் கல்வி தொடர்பு பணிகள் (I.E.C.) மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

43—

24 மணி நேர மருத்துவமனை

வினா எண் 98422—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், பொதட்டூர்பேட்டை, அரசு மருத்துவமனையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், பொதட்டூர்பேட்டை அரசு மருத்துவமனையானது வட்டம் சாரா மருத்துவமனையாக 24 மணி நேரமும் இயங்கி வருகின்றது.

44—

தனிப் பிரிவு

வினா எண் 100701—திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பன்றிக் காய்ச்சல், பறவைக் காய்ச்சல், எலிக் காய்ச்சல் முதலிய தொற்று நோய்களால் பாதிக்கப்படுகிறவர்களுக்கு சிகிச்சையளிக்க மாவட்ட மருத்துவமனைகளில் தனிப் பிரிவு உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

அனைத்து மாவட்ட மருத்துவமனைகளிலும் அனைத்து விதமான தொற்று நோயாலும் பாதிக்கப்பட்டோருக்கான சிகிச்சையளிக்க தொற்று நோய் நோயாளிகளைத் தனிமைப்படுத்தி சிறப்பு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. மேற்காணும் தொற்று நோய் ஏற்படும் காலங்களில் கூடுதலாக பணியாளர்களும் நியமிக்கப்பட்டு சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதால், இதற்கென தனிப் பிரிவு அமைத்திட வேண்டிய அவசியம் நிருவாக ரீதியாக எழவில்லை.

2010 ஜனவரி 11]

45—

நவீனப்படுத்துதல்

வினா எண் 46629—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களில் தேங்காய் உரிமட்டையில் தும்பு அடிக்கும் தொழில் செய்யும் தொழிலாளர்களை ஊக்குவிக்கவும், இத்தொழிலை நவீனப்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி பகுதியில் மாவட்டத்தில் கிடைக்கும் தேங்காய் உரிமட்டைகளைக்கொண்டு, கயிறு சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இப்பகுதியில் கிடைக்கும் தேங்காய் உரிமட்டைகளின் நீளம் மிகக் குறைவாக இருப்பதால், தும்பு தயாரிக்க ஏற்றதாக இல்லை. எனவே, இம்மாவட்டத்தில் தும்பு அடிக்கும் தொழிலை நவீனப்படுத்த வாய்ப்புகள் இல்லை.

2. இராமநாதபுரம் மாவட்டத்தில் தேங்காய் உரிமட்டையில் தும்பு அடிக்கும் தொழில் நிறுவனங்களை நவீனப்படுத்தவும், இத்தொழிலில் ஈடுபட்டுள்ளோர்களை ஊக்குவிக்கும் வகையிலும் இயந்திர தளவாடங்கள் மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு போன்ற உதவிகளை "ரிமோட்" திட்டத்தின்கீழ் மத்திய அரசின் கயிறு வாரியம் செயல்படுத்தி வருகிறது. மேலும், புதியதாக நிறுவும் இயந்திரங்களுக்கு கயிறு வாரியத்தின்மூலம் மானியமும் அளிக்கப்பட்டு வருகிறது.

46—

தொழிற்கூட்டுறவுச் சங்கம்

வினா எண் 93414—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரக தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதியில் உள்ள திருக்கழுக்குன்றம் நகரில் பாலிதீன் தொழிற்கூட்டுறவுச் சங்கம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1983 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்படி ஒரு தொழிற்கூட்டுறவுச் சங்கம் அமைக்கக் குறைந்தது 25 உறுப்பினர்கள் இருக்க வேண்டும். காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் நகரில் வசிக்கும் 25 பாலிதீன் தொழிலாளர்கள் பாலிதீன் தொழிற்கூட்டுறவுச் சங்கம் அமைக்க முன்வந்தால், சங்கத்தைப் பதிவு செய்யலாம். தொழிற்கூட்டுறவுச் சங்கத்தினை பதிவு செய்ய, பொது மேலாளர் சம்பந்தப்பட்ட மாவட்ட தொழில் மையத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

47—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 100749—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஒன்றியம், ஆண்டார் முள்ளிப்பள்ளம் ஊராட்சியில், கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு கால்நடை மருத்துவமனையும், நான்கு கால்நடை மருந்தகங்களும், எட்டு கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. கால்நடைகளின் எண்ணிக்கை அலகுகள் குறைவாக உள்ளதாலும், அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே

2010 ஜனவரி 11]

போதுமானதாகக் கருதப்படுவதாலும், ஆண்டார் முள்ளிப்பள்ளம் ஊராட்சியில், கால்நடை மருத்துவமனை அமைக்க வாய்ப்பில்லை.

48—

முழு நேர கால்நடை மருந்தகம்

வினா எண் 102923—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரக தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் கால்நடை மருந்தகத்தை முழு நேர மருந்தகமாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு கால்நடை மருந்தகங்களும், ஐந்து கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. திருப்புவனத்தில் செயல்பட்டு வரும் கால்நடை மருந்தகம் 30-10-1966 முதல் முழு நேர கால்நடை மருந்தகமாக ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. ஆகவே, மீண்டும் முழு நேர கால்நடை மருந்தகமாக செயல்படுத்த வேண்டிய அவசியம் எழாது.

(ஆ) கேள்வி எழாது.

49—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 103974—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, தும்பிப்பாடி ஊராட்சி, பெரிய நாகனூர் பகுதியில் கட்டப்பட்டு திறக்கப்படாமல் உள்ள கால்நடை மருத்துவமனையைத் திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தில், மூன்று கால்நடை மருந்தகங்களும், மூன்று கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. கால்நடைகளின் எண்ணிக்கை அலகுகள் குறைவாக உள்ளதால், அருகில் செயல்படும் கால்நடை நிலையங்கள்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகக் கருதப்படுகிறது. ஆகையால், தும்பிப்பாடி ஊராட்சி, பெரிய நாகலூர் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

50—

கால்நடைப் பண்ணைகள்

வினா எண் 104248—திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கத்தூர், அரசூர் பகுதியிலுள்ள கோழிப் பண்ணை, ஆட்டுப் பண்ணைகளை மீண்டும் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கத்தூரில் இயங்கி வந்த ஆட்டுப் பண்ணை மூடப்பட்டு, தற்போது அங்கு கால்நடை மருந்தகம் இயங்கி வருகிறது. அரசூரில் தமிழ்நாடு கோழி அபிவிருத்திக் கழகத்தின்கீழ் இயங்கி வந்த கோழிப் பண்ணை, அரசாணை எண் 86, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் (டாப்கோ) துறை, நாள் 19-4-1999-ன்படி, 29-12-2000 முதல் மூடப்பட்டதால், ஆட்டுப் பண்ணை மற்றும் கோழிப் பண்ணையை மீண்டும் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

2010 ஜனவரி 11]

பட்டியல் 10

1—

கிளை கால்நடை மருத்துவமனை

வினா எண் 104980—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, எடையப்பட்டி ஊராட்சி, எடையப்பட்டியில் கிளை கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு கால்நடை மருந்தகங்களும், மூன்று கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. கால்நடைகளின் எண்ணிக்கை அலகுகள், குறைவாக உள்ளதாலும், அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகக் கருதப்படுவதாலும், விதிமுறைகளின்படி எடையப்பட்டி கிராமத்தில் புதியதாக கால்நடைக் கிளை நிலையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

2—

கால்நடை பாதுகாப்பு

வினா எண் 106341—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அழிந்து வரும் நாட்டு மாடுகள், நாட்டுக் கோழிகள் இனத்தைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில், நாட்டு மாடுகள், நாட்டுக் கோழிகள் இனத்தை அழியாமல் பாதுகாக்கவும், பராமரிக்கவும் துறையின்மூலம் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள, ஓசூர் மற்றும் கொருக்கை பண்ணைகளில் நாட்டு மாட்டினங்களான காங்கேயம் மற்றும் உம்பளச்சேரி கால்நடைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தமிழகத்திலுள்ள விவசாயிகளின் கால்நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல்மூலம் பாரம்பரியம் மிக்க காங்கேயம் இனக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

நாட்டுக் கோழியினத்தைப் பராமரிக்க இத்துறையின்மூலம் திண்டுக்கல், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி ஆகிய 5 மாவட்டங்களில் பகுதி-2 திட்டத்தின்மூலம் 2008-2009 ஆம் ஆண்டில், 198 சுய உதவிக் குழுக்களுக்கு 29,700 நாட்டுக் கோழியின அலகுகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. மேலும், இத்துறையில் மத்திய மாநில பங்களிப்புத் திட்டத்தின்கீழ் (80:20) காட்டுப்பாக்கம், கோழிப் பண்ணை மற்றும் ஓசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் நாட்டுக் கோழியினமான வனராஜா மற்றும் கிரிராஜா இனக் கோழிகள் பராமரிக்கப்பட்டு, அவற்றின் குஞ்சுகள் கிராமப்புற விவசாயிகளுக்கு குறைந்த விலையில் விற்கப்பட்டு வருகின்றன.

இவை தவிர, நோயிலிருந்து நாட்டுக் கோழிகளைப் பாதுகாப்பதற்காக இத்துறையிலுள்ள அனைத்து கால்நடை நிலையங்கள் மற்றும் கிளை நிலையங்களில் வாரத்திற்கு ஒருமுறை குறிப்பிட்ட நாளில் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

3—

கால்நடை பாதுகாப்பு

வினா எண் 107715—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தில் உள்ள கால்நடை பராமரிப்பு துணை மையங்களில் மழையின்போது கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டத்தைத் தலைமையிடமாகக் கொண்டு கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு செயல்பட்டு வருகிறது. இம்மண்டலத்திற்குட்பட்ட அனைத்து கிராமங்களிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தடுப்பூசிகள் குறித்த காலத்தில் போடப்பட்டு வருகின்றன. மேலும், கால்நடை பாதுகாப்புத் திட்டம் போன்ற சிறப்பு முகாம்களிலும், தடுப்பூசிகள் போடப்பட்டும், ஊட்டச்சத்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து கால்நடை வளர்ப்போருக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டும் வருகின்றன.

4—

தடுப்பூசிகள்

வினா எண் 108632—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு நடமாடும் கால்நடை மருத்துவ வாகனம் வழங்கி கிராமந்தோறும் சென்று கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்து கோமாரி போன்ற தொற்று நோய்களுக்கு தடுப்பூசிகள் போட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடமாடும் கால்நடை மருந்தக ஊர்திப் பிரிவுகள், கால்நடை பன்முக மருத்துவமனைகள், கால்நடை

மருந்தகங்கள், கால்நடை பெரு மருத்துவமனைகள், கால்நடை கிளை நிலையங்கள் மற்றும் கால்நடை பார்வை கிளை நிலையங்கள்மூலம் கால்நடைகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகக் கருதப்படுவதால், ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு நடமாடும் கால்நடை மருத்துவ வாகனம் வழங்கி, கிராமந்தோறும் சென்று கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்து கோமாரி போன்ற தொற்றுநோய்களுக்கு தடுப்பூசிகள் போட வேண்டிய அவசியம் எழவில்லை.

5—

கால்நடை வளர்ப்பு

வினா எண் 109558—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டில் முன்மாதிரி கால்நடை வளர்க்கும் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) செங்கல்பட்டில் முன்மாதிரி கால்நடை வளர்க்கும் திட்டத்தைச் செயல்படுத்த 2009-2010 ஆம் நிதியாண்டில், அரசின் கொள்கை விளக்கக் குறிப்பில் புதியதாக கால்நடை நிலையங்களோ, முன்மாதிரி கால்நடை வளர்க்கும் திட்டமோ இடம் பெறாததால், செங்கல்பட்டில் முன்மாதிரி கால்நடை வளர்க்கும் திட்டத்தினைச் செயல்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

6—

கிளைச் சிறைச்சாலை

வினா எண் 103909—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

(அ) மேட்டூர் தொகுதி, மேட்டூரில் கிளைச் சிறைச்சாலை தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் ஒரு மத்திய சிறை மற்றும் மூன்று கிளைச் சிறைகள் உள்ளன. இவற்றின் இடவசதி மற்றும் அடைப்பு விவரம் கீழ்க்கண்டவாறு தரப்பட்டுள்ளது:

வ. எண்	சிறையின் பெயர்	அங்கீகரிக்கப்பட்ட அடைப்பு	சராசரி அடைப்பு
1.	மத்திய சிறை, சேலம்	1,431	853
2.	கிளைச் சிறை, ஓமலூர்	48	12
3.	பார்ஸ்டல் பள்ளி, சங்ககிரி	27	34
4.	மாவட்ட சிறை, ஆத்தூர்	24	23

இவற்றில் ஆத்தூர் கிளைச் சிறை, மாவட்டச் சிறையாக மேம்படுத்தப்பட்டுள்ளதாலும், மேட்டூர் அருகே ஓமலூர் கிளைச் சிறை, சங்ககிரி பார்ஸ்டல் பள்ளி மற்றும் சேலம் மத்திய சிறை உள்ளதாலும், இங்கு அங்கீகரிக்கப்பட்ட அடைப்பை விட குறைவான சிறைவாசிகளே உள்ளதாலும், சேலம் மாவட்டம், மேட்டூரில் ஒரு புதிய கிளைச் சிறைச்சாலை அமைப்பது குறித்த செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

7—

அருங்காட்சியகங்கள்

வினா எண் 69481—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் நீண்ட கடற்கரைப் பகுதிகளில் கடல் விளையாட்டுகள், அருங்காட்சியகங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

மாமல்லபுரத்திற்கு அருகிலுள்ள முதலியார்குப்பத்தில் உள்ள மழைத்துளி படகு இல்லத்தில் இலகு ரக கயாக் படகுகளும், வாட்டர் ஸ்கூட்டர்களும், வாழைப்பழ வடிவிலான இழுவைப் படகுகளும், மணிக்கு 100 கி.மீ. வேகத்தில் செல்லும் அதிவேக விசைப்படகும் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக விசைப் படகில் இணைக்கப்பட்ட 200 அடி உயரம் வரை பறந்து செல்லக்கூடிய பாரா செய்லிங் மற்றும் நீர்ச் சறுக்கு விளையாட்டுகள் 8-7-2009 அன்று அறிமுகப்படுத்தப்பட்டன. தமிழகத்தின் நீண்ட கடற்கரைப் பகுதிகளில் அருங்காட்சியகங்கள் அமைத்தல் குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

8—

சுற்றுலா மையம்

வினா எண் 102102—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டத்திலுள்ள மலைப் பகுதிகளான ஏலகிரி, காவலூர், அமிர்தி, பாலபதி, செங்காநத்தம், புதூர்நாடு, நெல்லிவாசல்நாடு ஆகியவற்றை சுற்றுலா மையங்களாக அறிவித்து அடிப்படை வசதிகள் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. ஒரு இடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, அதன் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு சுற்றுலா அடிப்படை வசதிகளை மட்டுமே செய்து தருகிறது. ஏலகிரி மலை சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளுக்காக 2006-2007 ஆம் நிதியாண்டில் ரூ.192.60 இலட்சமும், 2007-2008 ஆம் நிதியாண்டில் ரூ.365.72 இலட்சமும், 2008-2009 ஆம்

2010 ஜனவரி 11]

நிதியாண்டில் ரூ.473.47 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது 2008-2009 ஆம் நிதியாண்டில் ஸ்ரீபுரம், அமிர்திகாடு, பாலபதி மலை சுற்றுலா சுற்றுச்சாலை மேம்பாட்டிற்காக ரூ.415.78 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. காவலூர், செங்காநத்தம், புதூர்நாடு, நெல்லிவாசல்நாடு ஆகிய இடங்களில் சுற்றுலா அடிப்படை வசதிகள் செய்தல் குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

9—

விடுதிகள்

வினா எண் 104327—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி ஒன்றியம், கிராலத்தூர் ஊராட்சி, திருக்கொள்ளிக்காடு பொங்கு சனீஸ்வரர் கோயிலுக்கு சுற்றுலாத் துறைமூலம் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள் கட்டும் திட்டத்தை சுற்றுலாத் துறை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கைவிட்டுவிட்டது. தனியார் விடுதி கட்ட முன்வருவாரேயானால் அதனை சுற்றுலாத் துறை ஊக்குவிக்கும்.

10—

சுற்றுலாத் தலம்

வினா எண் 104378—திரு. வே. மாரிமுத்து: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகையைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அங்கு தேவையான சுற்றுலா அடிப்படை வசதிகள் மட்டும் செய்து தருகிறது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் பல்வேறு சுற்றுலாப் பயணிகளுக்கு கடந்த 5 ஆண்டுகளில் 2004-2005 முதல் 2009-2010 வரை சுற்றுலாத் துறையின் சார்பில் மைய, மாநில அரசின் பங்காக ரூ.1,224.93 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியாண்டில் திருக்கடையூர் அபிராமி கோயிலுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்த பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.75.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, பணிகள் தொடங்கப்பட உள்ளன.

11—

கட்டடம்

வினா எண் 104744—திரு. வி.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, அரகண்டநல்லூரில் பத்திரப் பதிவுத் துறை அலுவலகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2009-2010 ஆம் ஆண்டு பதிவுத் துறை மானியக் கோரிக்கையின்போது, 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.140 இலட்சம் செலவில் 5 சார்-பதிவகங்களுக்கு அரசுக் கட்டடம் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அரசுக் கட்டடத்தில் இயங்கி

வரும் முகையூர் தொகுதி, அரகண்டநல்லூரில் பத்திரப் பதிவுத் துறை அலுவலகத்திற்கு நிதி ஒதுக்கீடு மற்றும் முன்னுரிமை அடிப்படையில் புதிய அரசுக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12—

சான்றிதழ்கள்

வினா எண் 105929—திரு. பி. பலராமன்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மின் ஆளுகை திட்டத்தின்படி அனைத்து சார்-பதிவகங்களையும் ஒன்றிணைத்தும், எந்த இடத்திலும் அனைத்து சான்றிதழ்களையும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

மின் ஆளுகை திட்டத்தின்கீழ் தற்போது தெரிவு செய்யப்பட்ட 158 இடங்களில், அருகில் அமைந்துள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், வட்டார வளர்ச்சி அலுவலகம் போன்ற இடங்களில் TNSWAN POP (Tamil Nadu State Wide Area Network Point of Presence) *இணைப்பிலிருந்து* TNSWAN *இணைப்பு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அனைத்து அலுவலகங்களும்* TNSWAN *இணைப்புமூலம் ஒருங்கிணைக்கப்பட்டபின், எந்த இடத்திலிருந்தும் சான்றிதழ்கள் வழங்கிட வழிவகை ஏற்படுத்தப்படும்.*

13—

மாசுக் கட்டுப்பாடு

வினா எண் 108967—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2010 ஜனவரி 11

(அ) மாமல்லபுரத்தில் பிளாஸ்டிக் பொருட்கள் கொட்டப்படுவதை சுற்றுலாத் துறைமூலம் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாமல்லபுரத்தில் பிளாஸ்டிக் பொருட்கள் கொட்டப்படுவதைத் தடுத்தல் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தைச் சார்ந்ததால், சுற்றுலாத் துறைமூலம் தடுத்திட திட்டக் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

14—

அனுப்புச் சரக்கு ஒப்படைப் பொருள்

வினா எண் 47178—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்தியக் கூட்டுறவு வங்கிக்குப் பதில் தமிழ்நாடு வாணிபக் கழகமே அனுப்புச் சரக்கு ஒப்படைப் பொருள் முறையில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு பொருட்களை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரசு வழங்க வேண்டிய மானியத் தொகையை முன்பணமாகப் பெற்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு அனுப்புச் சரக்கு ஒப்படைப் பொருள் முறையில் ரொக்கக் கடன் (cash credit) மூலம் பொருட்களை வழங்கிட இயலாது.

2010 ஜனவரி 11]

15—

தானிய சேமிப்புக் கிடங்கு

வினா எண் 95317—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, காங்கேயனூரில் தானிய சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயனூரில் சேமிப்புக் கிடங்குகளை உபயோகிப்பவர்கள் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலேயே உள்ளனர். எனவே, திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, காங்கேயனூரில் தனியார் இடங்களில் வாடகைக்கு இடம் பிடித்து சேமிப்புக் கிடங்கு அமைப்பது சாத்தியமில்லை.

16—

அடுக்குமாடிக் குடியிருப்புகள்

வினா எண் 11837—திரு. எஸ்.எஸ். குருசாமி: மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் தொகுதியில் உள்ள அந்தியூர், அத்தாணி, அம்மாப்பேட்டை மற்றும் நெறிஞ்சிப்பேட்டை ஆகிய பேரூராட்சிகளில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டுவதற்கு பேரூராட்சிகளுக்கு நிதி ஒதுக்கீடு

செய்யப்படுவதால் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் இத்திட்டத்தின்கீழ் வீடுகள் அமைக்கும் பணிகளை தற்போது நிறைவேற்ற இயலவில்லை. இதுபோன்று பேரூராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் வாழும் குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களுக்கு வீட்டு வசதி அமைக்க நிதி ஆதாரம் கோரி மைய அரசின் 13வது நிதிக் குழுவிடம் திட்டப் பிரேரணைகள் அளிக்கப்பட்டுள்ளன. இந்நிதி ஆதாரம் கிடைக்கப் பெற்றபின், குடிசை மாற்று வாரியத்தின் கொள்கைகளின்படியும் அந்தியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பேரூராட்சிகளில் அரசு நிலங்கள் கிடைக்கும்பட்சத்திலும் 2010-2011 ஆம் ஆண்டில் இக்குடும்பங்களுக்கு வீட்டுவசதி அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

17—

அடுக்குமாடிக் குடியிருப்புகள்

வினா எண் 43492—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி நகராட்சி, தாடாளன் கோவில் பகுதியிலுள்ள நகர சுத்தி தொழிலாளர்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:

தற்போது பெருநகரங்கள் தவிர இதர நகரங்களில் உள்ள குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்க நிதி ஆதாரம் இல்லை. எனவே, சென்னை, மதுரை மற்றும் கோவை தவிர இதர நகரங்களில் உள்ள குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்க மைய அரசின் 13-வது நிதிக் குழுவிடம் நிதி ஆதாரம் கோரப்பட்டுள்ளது. இந்நிதி ஆதாரம் கிடைக்கப் பெற்றபின் குடிசை மாற்று வாரியத்தின் கொள்கைகளின்படியும் தேவைகளுக்கு ஏற்றபடியும் அரசு நிலம் கிடைக்கும்பட்சத்திலும் சீர்காழி நகராட்சி தாடாளன் பகுதி குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களுக்கு 2010-க்குப்பின் வீடுகள் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

2010 ஜனவரி 11]

18—

அடுக்குமாடிக் குடியிருப்பு

வினா எண் 62349—திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் பேரூராட்சியில் குடிசை மாற்று வாரியம்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் பேரூராட்சியில் குடிசை மாற்று வாரியத்தால் குடியிருப்புகள் கட்டுவதற்கான திட்டம் தற்போது ஏதும் இல்லை. மைய அரசின் பதின்மூன்றாவது நிதிக் குழுவிடம் தமிழகத்தின் நகர குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்க சிறப்பு நிதி கோரப்பட்டுள்ளது. இந்நிதி ஆதாரம் கிடைக்கப் பெற்றபின் குத்தாலம் பேரூராட்சி பகுதியில் வீடுகள் தேவைப்படின் குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களுக்கு 2010-2015-ல் வீடுகள் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

19—

அடுக்குமாடிக் குடியிருப்பு

வினா எண் 62350—திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், குடவாசல் பேரூராட்சியில் குடிசை மாற்று வாரியத் துறைமூலம் அடுக்குமாடிக் குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், குடவாசல் பேரூராட்சிப் பகுதியில் குடிசை மாற்று வாரியத்தால் குடியிருப்புகள் கட்டுவதற்கான திட்டம் தற்போது ஏதும் இல்லை.

மைய அரசின் பதின்மூன்றாவது நிதிக் குழுவிடம் தமிழகத்தின் நகர குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்க சிறப்பு நிதி கோரப்பட்டுள்ளது. இந்நிதி ஆதாரம் கிடைக்கப் பெற்றபின் குடவாசல் பேரூராட்சிப் பகுதியின் குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களுக்கு 2010-2015-ல் வீடுகள் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

20—

தொழிற்கூடம்

வினா என் 87895—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்பாண்டத் தொழிலாளர்களுக்கென கிராமப்புறங்களில் குடியிருப்புடன் கூடிய தொழிற்கூடம் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) 2006 ஆம் ஆண்டு மண்பாண்டத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு நலத் திட்டத்தில், மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு என கிராமப்புறங்களில் குடியிருப்புடன் கூடிய தொழிற்கூடம் அமைப்பது குறித்த வழிவகை ஏதுமில்லை.

(ஆ) எழாது.

2010 ஜனவரி 11]

21—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 105847—திரு. வை. காவேரி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூரில் அரசு பெண்கள் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழாது.

22—

தொழிற்சாலைகளில் பாதுகாப்பு

வினா எண் 102094—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெடி விபத்துக்களைத் தடுக்க பட்டாசு ஆலை விதிகளை மிகக் கடுமையாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

1950 ஆம் வருட தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளின் 95-ன்கீழ் வரும் அட்டவணை XXIV என்பது தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளுக்கென தனியாக ஏற்படுத்தப்பட்ட அட்டவணையாகும். இந்த அட்டவணையில் உள்ள பாதுகாப்பு

விதிமுறைகளைக் கண்காணிக்க பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகள் இத்துறை ஆய்வாளர்களால் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஆய்விடப்பட்டு வருகின்றன. மேலும் ஒவ்வோர் ஆண்டும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு பட்டாசு உற்பத்தி அதிக அளவில் மேற்கொள்ளப்படும் சூழலில் விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுக்கும் விதமாக சிறப்பு ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. சட்ட விதிகளில் உள்ள விதிமுறைகள் அல்லாமல் கூடுதலாக பாதுகாப்பு விதிமுறைகள், விதிகளில் ஏற்படுத்த தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் கூடுதல் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் தலைமையில் சிறப்பு வல்லுநர் குழு ஒன்று அமைத்திட அரசாணை எண் 169, நாள் 11-11-2009-ன்மூலம் ஆணையிடப்பட்டுள்ளது. பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கிடையே பாதுகாப்பு விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காக மதுரை, தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர், அலுவலக தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் (பதிவு) மற்றும் ஒரு தொழிற்சாலைகள் ஆய்வாளர், ஒரு தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர் ஆகியோரைக் கொண்ட பாதுகாப்பு பிரச்சாரக் குழு ஒன்று அரசால் ஏற்கெனவே செப்டம்பர் 2006-ல் அமைக்கப்பட்டு, இக்குழு சிவகாசி மற்றும் விருதுநகர் பகுதிகளில் செப்டம்பர் 2009 முடிய மொத்தம் 150 பட்டாசு தொழிற்சாலைகளில் பாதுகாப்பு பிரச்சாரங்கள் நடத்தப்பட்டதில் 13,499 தொழிலாளர்கள் பயன் அடைந்துள்ளனர்.

23—

கோயில் பராமரிப்பு

வினா எண் 44207—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பட்டணம்காத்தான் கடம்பாநகர் பூவிலுடையார் சாஸ்தா கோயிலை பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், பட்டணம்காத்தான், கடம்பாநகர், அருள்மிகு பூவிலுடையார் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத வருவாய் ஏதுமில்லாத திருக்கோயில் ஆகும். இத்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத இத்திருக்கோயிலை, பொதுமக்களின் பங்களிப்பு ஏதுமின்றி இந்து சமய அறநிலையத் துறைமூலம் பராமரிக்க இயலாத நிலையுள்ளது.

24—

பாதுகாப்புப் பெட்டக வசதி

வினா எண் 57228—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மேற்கு தொகுதி, செல்லூர் அருள்மிகு திருவாப்புடையார் திருக்கோயிலில் பாதுகாப்புப் பெட்டக வசதியை செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலின் உப கோயிலான செல்லூர் அருள்மிகு திருவாப்புடையார் திருக்கோயிலில், அரசு நிதியுதவியுடன் பொதுப் பணித் துறையினரால் கட்டி முடிக்கப்பட்ட சிலைகள், பாதுகாப்புப் பெட்டகம் உள்ள கட்டடத்தில் இரும்புத் தள்ளுக் கதவுகள் முழுமையாக உடைக்கப்பட்டு திறவையாகவே உள்ளது. வராந்தா பகுதியின் இரும்பு கிராதிகளும், கம்பிகளும் உடைக்கப்பட்டு பாதுகாப்பில்லாத நிலை உள்ளது. எனவே, தற்போது மேற்கண்ட திருக்கோயிலில் பாதுகாப்புப் பெட்டக வசதியை செயல்படுத்திட இயலாத நிலை உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2010 ஜனவரி 11

25—

அடிப்படை வசதிகள்

வினா எண் 69787—திரு. ஆர். சாமி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, அழகர் கோயிலில் பக்தர்கள் வசதிக்காக காட்டேஜ்கள் மற்றும் நவீன குளியலறை, கழிப்பறை, தங்கும் விடுதிகள் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், அழகர்கோயில் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் தங்குவதற்கு ஏதுவாக 4 ஓய்வுக் கூடங்கள் மற்றும் 5 அறைகள் கொண்ட தங்கும் விடுதியும் பயன்பாட்டில் உள்ளது. ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் 3 காட்டேஜ்களும், ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் 15 அறைகள் கொண்ட தங்கும் விடுதியும் கட்டப்பட்டு வருகின்றன. இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் தொன்றுதொட்டு சோலைமலையில் உள்ள நூபுரகங்கை தீர்த்தத்தில் நீராடுவதையே புனிதமாகக் கருதுகின்றனர். அவர்கள் வசதியாக நீராடுவதற்காக நூபுரகங்கையில் நீர் தொட்டி கட்டப்பட்டு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. எனவே, நவீன குளியலறை கட்டவேண்டிய அவசியம் எழவில்லை. திருக்கோயில் சார்பில் ஆண்களுக்கு 15 கழிப்பறைகளும், பெண்களுக்கு 15 கழிப்பறைகளும் கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேலும், ஆண்களுக்கு 15 கழிப்பறைகளும், பெண்களுக்கு 15 கழிப்பறைகளும் ரூ.27.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.

26—

தூர் வாருதல்

வினா எண் 101373—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 ஜனவரி 11]

சீர்காழி தொகுதி, தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான சீர்காழி ஸ்ரீசட்டநாதசுவாமி ஞானசுந்தர் திருக்குளத்தினை தூர் வாரி, செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம் மற்றும் நகர் அருள்மிகு சட்டநாதசுவாமி திருக்கோயில் வளாகத்தில் அமையப்பெற்றுள்ள திருக்குளம் 3 மாதங்களுக்கு ஒருமுறை சுத்தப்படுத்தப்பட்டு நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு, திருக்குளப் படிக்கட்டுகளும், மதில்சுவர்களும் நல்ல நிலையில் உள்ளதால், குளத்தினை தற்போதைக்கு பழுதுபார்க்க வேண்டிய அவசியம் எழவில்லை.

27—

சுற்றுச் சுவர்

வினா எண் 104561—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, களம்பூர் பேரூராட்சியிலுள்ள ஈஸ்வரன் கோயில் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டின்கீழுள்ள திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், களம்பூர் அருள்மிகு காசிவிஸ்வநாதர் திருக்கோயிலுக்குச் சுற்றுச் சுவர் கட்டுவதற்கு சுமார் ரூ.5 இலட்சம் செலவாகும். இப்பணியினைச் செய்திட திருக்கோயிலுக்குப் போதிய நிதிவசதி இல்லை. பொதுமக்கள் பங்களிக்க முன்வரும் நிலையில் இந்து

[2010 ஜனவரி 11

சமய அறநிலையத் துறை சார்பில் மதிப்பீட்டுத் தொகையில் 25 சதவிகிதத்திற்கு மிகாது நிதியுதவி வழங்கி பணிகள் செய்திட இயலும்.

28—

கல்வி மாவட்டம்

வினா எண் 94128—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூரைத் தலைமையிடமாகக் கொண்டு கல்வி மாவட்டம் செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

வருவாய்க் கோட்டங்கள் உள்ள இடங்களில் மட்டுமே, மாவட்டக் கல்வி அலுவலகங்கள் புதியதாக ஏற்படுத்துதல் நடைமுறையில் உள்ளது. ஓமலூரில் வருவாய்க் கோட்டம் இல்லாததால் ஓமலூரைத் தலைமையிடமாகக்கொண்டு மாவட்டக் கல்வி அலுவலகம் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பில்லை.

29—

அகழ்வைப்பகம்

வினா எண் 108508—திரு இல. வேலுசாமி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி பேருந்து நிலையம் அருகில் செயல்படும் தொல்பொருள் அருங்காட்சியகத்தை, அதியமான்கோட்டை அதியமான் கோட்ட வளாகத்தில் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தருமபுரியில் தொல்லியல் துறையின் அகழ்வைப்பகம் தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கட்டடத்தில்

2010 ஜனவரி 11]

இயங்குகின்றது. இக்கட்டடத்திற்கு வாடகை, தொல்லியல் துறையால் வழங்கப்படுகிறது. இது தருமபுரி பேருந்து நிலையத்தின் அருகில் பார்வையாளர்களுக்கும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கும் வந்து செல்வதற்கு வசதியாகவும் உள்ளது. இவ்வகழ்வைப்பகம் வியாபார நோக்கில் பார்க்காமல் கலை மற்றும் பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் எதிர்வரும் சமுதாயத்திற்கு எடுத்தியம்பும் வகையில் அமைந்துள்ளது. அதியமான் கோட்டையில் உள்ள அதியமான் கோட்டம் தருமபுரியிலிருந்து 10 கி.மீ. தூரத்தில் உள்ளது. தருமபுரி அகழ்வைப்பகத்தை இங்கு மாற்றினால் பார்வையாளர்களின் எண்ணிக்கை குறையும். மேலும், இக்கட்டடத்தில் போதுமான பாதுகாப்பு வசதிகள் இல்லை. இத்தகைய சூழ்நிலையில், அகழ்வைப்பகத்தை அதியமான்கோட்டைக்கு மாற்றும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

30—

சுகாதாரச் சீரமைப்பு

வினா என் 88591—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, புலியூர் சாயானபுரம் பகுதியில் உள்ள தொழிற்சாலைகளின் கழிவுகளால் ஏற்படும் சுகாதாரக் கேடுகளைத் தவிர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, புலியூர் சாயானபுரம் பகுதியில் உள்ள மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளைக் கண்டறிந்து அவற்றின்மீது நடவடிக்கை எடுத்ததன்பேரில், அப்பகுதியில் உள்ள 7 சாயப்பட்டறைகளின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட 7 தொழிற்சாலைகளில் திருவாளர்கள் டி.டி.பிளீச்சிங் அண்டு

டையிங், மானாமதுரை, டி.மு.கோர்ட் ஓ.எஸ்.நம்.84/2008-இல் வழக்கு தொடரப்பட்டு வழக்கு நடைபெற்றுக்கொண்டிருப்பதால் மீண்டும் மின் இணைப்பு அளிக்கப்பட்டு இயங்கிக்கொண்டிருக்கிறது. மேலும், திருவாளர்கள் ரோஜா பிளீச்சர்ஸ் தொழிற்சாலையானது உயர் நீதிமன்றம் மதுரை பலகையில் டபுள்யு.பி.எண் 6158/2008-ல் வழக்கு தொடரப்பட்டு மின் இணைப்பு மீண்டும் வழங்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. இதுதவிர, திருவாளர்கள் ஜே.கே.டி.பிளீச்சர்ஸ், வி.வி.டெக்ஸ்டைல்ஸ் புராசஸ், மகேஸ்வரி பிளீச்சர்ஸ் மற்றும் கணேசன் பிளீச்சர்ஸ் ஆகிய நான்கு தொழிற்சாலைகளுக்கும் முறையாக சுத்திகரிப்புத் தொட்டிகள் அமைக்கப்பட்டு, மின் இணைப்பு வழங்கப்பட்டு தொழிற்சாலை இயங்குவதற்கு இசைவாணை வழங்கப்பட்டுள்ளது. திருவாளர்கள் இராஜலட்சுமி பிளீச்சிங் அண்ட் டையிங், தொழிற்சாலையின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு தொழிற்சாலையின் இயக்கம் முற்றிலுமாக நிறுத்தப்பட்டுள்ளது. தொழிற்சாலைக் கழிவுகளால் ஏற்படும் சுகாதாரக் கேடுகள் மேற்குறித்த வாரியத்தின் நடவடிக்கைகளால் தவிர்க்கப்பட்டு வருவதுடன் அதனை வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

31—

சாயக்கழிவு

வினா எண் 93365—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டுபாளையத்தில் சாயத் தொழிற்சாலைகள் சாயக் கழிவுகள் பவானி ஆற்றில் கலக்கப்படுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

மேட்டுப்பாளையத்தில் உள்ள தொழிற்சாலைகளில் 5 தொழிற்சாலைகள் மட்டும் சாயத் தொழிற்சாலைகளாகும். இந்த 5 தொழிற்சாலைகளும், தொழிற்சாலைக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவி இயக்கி வருகின்றன. சுத்திகரிக்கப்பட்ட தொழிற்சாலைக் கழிவுநீரை எதிர்மறை சவ்வூடு பரவல்

2010 ஜனவரி 11]

அமைப்புமூலம் நல்லநீரைப் பிரித்து மறு உபயோகத்திற்கு பயன்படுத்திக்கொள்கின்றன. எதிர்மறை சவ்வூடு பரவல் அமைப்பில் உருவாகும் கழிவுநீரை ஆவியாக்கல் முறைமூலம் ஆவியாக்கி, திடக் கழிவைத் தனியாக சேகரித்து வைத்து வருகின்றன. இந்தச் சாயத் தொழிற்சாலைகளிலிருந்து எவ்வித கழிவு நீரும் பவானி ஆற்றில் கலப்பதில்லை. இத்தொழிற்சாலைகளில் இயங்கிவரும் சுத்திகரிப்பு நிலையங்களையும், எதிர்மறை சவ்வூடு பரவல் அமைப்பு மற்றும் ஆவியாக்கும் அமைப்புகளின் செயல்பாடுகளைத் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகின்றது.

32—

சாலை அமைத்தல்

வினா எண் 48521—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, ஏக்கல் நத்தம் கிராமத்திற்கு வனத் துறையின்மூலம் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஏக்கல் நத்தம் கிராமத்திற்குச் செல்ல பெரியசக்கனாவூர்-ஏக்கல் நத்தம் சாலை ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ளது. இச்சாலை ஓசூர் வனக்கோட்டம், கிருஷ்ணகிரி சரகம், மகாராஜகடை ஒதுக்குக் காட்டில் அமைந்துள்ளது. இச்சாலைக்கு பாதை உரிமமாக காப்புக்காட்டின் அறிவிக்கையில் 18 அடி அகலத்திற்கு, அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இச்சாலையின் மொத்த நீளம் 3.5 கி.மீ. ஆகும். இதில் 3 கி.மீ. காப்புக்காட்டிலும், 0.5 கி.மீ. காப்புக்காட்டிற்கு வெளியேயும் அமைந்துள்ளது. இச்சாலையைப் பராமரிக்கும்பொருட்டு 'அடிப்படை வசதிகள் திட்ட' தலைப்பின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களால் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, 3.5 கி.மீ. தூரம் சாலை பராமரிப்புப் பணிகள் ஓசூர் வனக்கோட்ட, மாவட்ட வன அலுவலர்மூலம் 2005-2006-ல் மேற்கொள்ளப்பட்டது.

33—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 78131–திருமதி ரா. லீமா ரோஸ்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டாறு தொகுதி, பேச்சிப்பாறை ஊராட்சி, அரசு ரப்பர் கழக 4 ஆம் கலெக்ஷன் ரேஞ்ச் முதல் வலியமலை வரையுள்ள சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவட்டாறு தொகுதி, பேச்சிப்பாறை ஊராட்சி அரசு ரப்பர் கழக நான்காவது பால் சேகர நிலையத்திலிருந்து, வலியமலை வரையுள்ள சாலை கன்னியாகுமரி கோட்டத்தில், வீரப்புலி காப்புக்காட்டில் அமைந்துள்ளது. 1980-க்கு முன்னரே உபயோகத்தில் உள்ள இச்சாலை, சுமார் 1.5 கி.மீ. நீளம் மற்றும் 3 மீட்டர் அகலம் உள்ள மண்சாலை ஆகும். இதில் 1 கி.மீ. நீளம் காணி குடியிருப்புப் பகுதிகளிலும், 0.50 கி.மீ. நீளம் வனப் பகுதியிலும் அமைந்துள்ளன. இச்சாலையைத் தற்போதுள்ள அகலத்திலேயே சீரமைக்கத் தேவைப்படும் நிதியான சுமார் ரூ.10 இலட்சம் 2009-2010 ஆம் வருட திட்ட கருத்துருவில் சேர்க்கப்பட்டு, அ.ஆ (டி) எண் 300, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, நாள் 12-10-2009-ல் பிறவற்றுடன் ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

34—

சாலை வசதி

வினா எண் 106268—திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், குட்டுப்பட்டி சேத்தூர் மற்றும் லிங்கவாடி ஊராட்சியைச் சேர்ந்த மலைப்பகுதி கிராமங்களான மலையூர், சின்ன மலையூர், வலசை கிராமங்களுக்கு

2010 ஜனவரி 11]

வனத் துறையின்மூலம் சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், குட்டுப்பட்டி, சேத்தூர் மற்றும் லிங்கவாடி ஊராட்சியைச் சேர்ந்த மலைப் பகுதி கிராமங்களான மலையூர், சின்ன மலையூர், வலசை கிராமங்களுக்குச் செல்லக் கோரும் சாலை, பெருமலை காப்புக்காட்டின் மலை உச்சியின்மீது அமைந்துள்ள பழைய கூப்புச் சாலையாகும். இதற்கு காப்புக்காட்டு அறிவிக்கையில் அனுமதி உரிமம் ஏதும் வழங்கப்படவில்லை. இச்சாலை சுமார் 2.5 கி.மீ. தூரம் ஆறு அடி அகலம் உடைய குறுகிய வளைவுகளைக்கொண்ட சாலையாக உள்ளது. இதன் இருபுறங்களிலும் புளி, உசில், கிலுவை, காட்டு எலுமிச்சை ஆகிய மரங்கள் உள்ளன. மேலும் பாதையின் இருமருங்கிலும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் சின்ன மலையனூர் கிராமத்தின்மூலம் 2005-2006 ஆம் ஆண்டின் மறு உற்பத்தி செய்யப்பட்ட தோட்டங்கள் உள்ளன.

மேற்காணும் பாதையானது சில இடங்களில் 1:20 சரிவிலும் பல இடங்களில் 1:10 சரிவிலும் உள்ளன. இச்சாலையைப் பொது மக்களின் உபயோகத்திற்குத் தக்கவாறு மேம்பாடு செய்ய வேண்டுமானால் தேவையான இடங்களில் வளைவுகளை சரிசெய்தும், சாலையை அகலப்படுத்தியும் மேம்பாட்டுப் பணி செய்யவேண்டியுள்ளது. இவ்வாறு மேம்பாட்டுப் பணி செய்யவேண்டுமானால் வனப் பாதுகாப்புச் சட்டம் 1980-ன் விதிமுறையின்படி மைய அரசின் முன்அனுமதி பெறப்படவேண்டும். எனவே பயனீட்டாளர் துறையான நெடுஞ்சாலைத் துறை/ஊரக வளர்ச்சித் துறையிடமிருந்து வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன் விதிமுறைக்கு உட்பட்டு உரிய கருத்துரு கிடைக்கப்பெறின், மைய அரசின் முன்அனுமதி பெறத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

35—

சாலை அமைத்தல்

வினா எண் 106602—திரு. கே.எஸ். விஜயகுமார்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2010 ஜனவரி 11

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், குருவராஜ் கண்டிகை முதல் எருக்குவாய் கிராமத்தினை இணைக்க, வனப் பகுதியில் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், குருவராஜ் கண்டிகை முதல் எருக்குவாய் கிராமம் வரை உள்ள சாலையை இணைக்க, வனப் பகுதியில் அமைக்க வேண்டிய சாலையானது, பாலவாக்கம், காப்புக்காட்டினுள் வருகிறது. பாலவாக்கம் காப்புக்காட்டு அறிவிக்கையில் இதற்கான வழி உரிமம் ஏதும் அனுமதிக்கப்படவில்லை. வன நிலத்தை, வனம் அல்லாத பிற பணிக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டுமானால், வனப் பாதுகாப்புச் சட்டம் 1980-ன் விதி முறைப்படி மைய அரசின் முன்அனுமதி பெறப்பட வேண்டும். எனவே, இதுகுறித்து, பயனீட்டாளர் துறைகளான ஊரக வளர்ச்சித் துறை/நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து உரிய கருத்துரு கிடைக்கப்பெறின், மைய அரசின் முன்அனுமதி பெறத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

36—

ஒய்வு இல்லம்

வினா எண் 106616—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு, சென்னிமலையில் உள்ள வனத் துறை ஓய்வு இல்லம் மற்றும் விருந்தினர் இல்லம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், சென்னிமலைப் பகுதியில் 679.95 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட சென்னிமலை காப்புக்காடு அமைந்துள்ளது. சென்னிமலையிலிருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள ஈரோடு நகரில் வனத் துறை ஓய்வு இல்லம்

2010 ஜனவரி 11]

ஒன்று உள்ளது. ஆகவே, சென்னிமலையில் தனியாக வனத் துறை ஓய்வு இல்லம் மற்றும் விருந்தினர் இல்லம் கட்ட வேண்டிய அவசியம் வனத் துறையினைப் பொறுத்தமட்டில் ஏதுமில்லை.

37—

வழிகாட்டுதல்

வினா எண் 109622—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் கஞ்சிக்கோடு முதல் வாளையார் இடையே உள்ள புகைவண்டிப் பாதைகளில் யானைகள் புகைவண்டியில் மோதி இறப்பதைத் தடுக்க, வழிகாட்டுதல் நெறிமுறை வகுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

இரயில் பாதைகளில் யானைகள் குறுக்கிட்டு விபத்து ஏற்பட்டு இறப்பதைத் தவிர்க்க கேரள வனத் துறை அலுவலர்கள், தமிழக வனத் துறை அலுவலர்கள் மற்றும் தென்னக இரயில்வே அலுவலர்கள் கூடி, விவாதித்த பின்னர் கீழ்க்காணும் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன:

1. இரயில் பாதையின் இருபுறங்களிலும் குறைந்தபட்சம் 30 மீட்டர் அளவுக்கு வளர்ந்துள்ள செடிகளை அகற்றுதல், குறிப்பாக குறுகிய வளைவுகளில் மற்றும் வளைவுகளில் நன்றாகப் பார்வைக்கு தெரியும் வண்ணமாக அகற்றுதல்

2. யானைகள் தப்பிச் செல்ல ஏதுவாக, இரயில் பாதையின் இருபுறங்களிலும் சம அளவில் ஆழமான பள்ளங்கள் வெட்டப்படுதல்

3. இதுபோன்ற இடங்களில் எச்சரிக்கை குறித்த அறிவிப்பு வைக்கப்படுதல்

4. வன உயிரினம் பாதுகாப்பு குறித்து இரயில் ஓட்டுநர்கள், கார்டுகள் ஆகியோருக்கு உணர்வுபூர்வமான பயிற்சி அளித்தல்

[2010 ஜனவரி 11

5. யானைகளின் நடமாட்டம் மற்றும் இரயில் பாதைகளின் அருகில் வரும் தூரம் பற்றித் தகவல் அறிவிக்க எலிமெண்ட் டராக்கர்சை பணியமர்த்தி கைபேசி, வாக்கி டாக்கி அளிக்கப்படுதல்

6. அப்படி கிடைக்கப்படும் தகவல்களை, நிலைய அதிகாரிக்குத் தெரிவித்து, அதை இரயில் ஓட்டுநர் மற்றும் கார்டுக்கு அறிவிக்கப்படுதல்

7. இதுபோன்ற இடங்களில் சக்திவாய்ந்த விளக்குகள்கூடிய இரயில் என்ஜின் பயன்படுத்துதல்

8. ஊறுவிளைவிக்கக்கூடிய பகுதிகளில், வேகத்தைக் குறைக்க தேவைப்படின் இரண்டாவது என்ஜினை பயன்படுத்துதல்

9. உணவுக் கழிவுகள் மற்றும் உணவுகள் இரயில் பாதையில் இல்லாதவாறு சுத்தமாக வைக்கப்படுதல்

மத்திய அரசின் மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்கள் நடத்திய கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, கேரள வனத் துறை, தமிழக வனத் துறை, இரயில்வே அதிகாரிகள் மற்றும் இந்திய அரசின் வன உயிரின குழுமம் கூடி வழிகாட்டுதல் மற்றும் நெறிமுறைகள் வகுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

38—

நவின பயிற்சி

வினா எண் 106172—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு நகரில் ஊனமுற்றோருக்கான மூன்று சக்கர வண்டிகள், நாற்காலிகள் தயாரிக்கும் நவீன பயிற்சி மற்றும் உற்பத்திக் கூடத்தைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு நகரில் ஊனமுற்றோருக்கான மூன்று சக்கர வண்டிகள், நாற்காலிகள்

TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

தயாரிக்கும் நவீன பயிற்சி மற்றும் உற்பத்திக் கூடத்தைத் தொடங்க உத்தேசம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

39—

உதவித் தொகை

வினா எண் 107213—திருமதி ஜி. லதா: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்தில் ஆதரவற்ற குழந்தை இல்லங்கள் அனைத்திற்கும் அரசு உதவித் தொகை வழங்கிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) வேலூர் மாவட்டத்தில் பின்வரும் ஐந்து ஆதரவற்ற குழந்தை இல்லங்கள் அரசு மானியம் பெற்று, தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்பட்டு வருகின்றன:

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	அனுமதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை
1.	டொமினிக் சேவியோ மாணவர் இல்லம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.	50
2.	செயின்ட் ஆனிஸ் ஆதரவற்ற குழந்தைகள் இல்லம், அ. கட்டுப்படி, வேலூர் மாவட்டம்.	50
3.	செயின்ட் மரிய தெரசாஸ் ஆதரவற்ற குழந்தைகள் இல்லம், கிறிஸ்டியான்பேட்டை, வேலூர் மாவட்டம்.	50
4.	சுவாமி சிவானந்தா மாணவர் இல்லம் (ஸ்ரீ இராமகிருஷ்ணா மடம்), நாட்ராம்பள்ளி, வேலூர் மாவட்டம்.	50
5.	கிராம ஏழை சிறுவர் மற்றும் திக்கற்றோர் சங்கம், கரிக்கல், வேலூர் மாவட்டம்.	50

[2010 ஜனவரி 11

மேலும், புதிய ஆதரவற்ற குழந்தைகள் இல்லம் தொடங்குவதற்கு தகுதியுடைய தொண்டு நிறுவனங்களிடமிருந்து கருத்துரு பெறப்பட்டால் பரிசீலனை செய்யப்படும்.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

40—

கடனுதவி

வினா எண் 45867—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், மாவடப்பு செட்டில்மெண்ட் பகுதியில் தைலம் தயாரிக்கும் மலைவாழ் மக்களுக்கு தாட்கோமூலம் ஆயில் இஞ்சின் கிடைக்க கடனுதவி வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 103, ஆ.தி. (ம) ப.கு.ந. துறை, நாள் 18-12-2001-ன்படி பழங்குடியினர் "தனி நபர் தொழில் முனைவோர் திட்டம்" என்பது "பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டு நிதியுதவித் திட்டம்" என மாற்றம் செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியர்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும் இந்நேர்வில் குறிப்பிடப்பட்டுள்ள கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாவடப்பு செட்டில்மெண்ட் பகுதியிலுள்ள தைலம் தயாரிக்கும் மலைவாழ் மக்களுக்கு ஆயில் இன்ஜின் வழங்கும் திட்டம் வருவாய் ஈட்டும் திட்டமாகும். எனவே, இதுகுறித்த விண்ணப்பங்களுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலும் அரசால் பெறப்படின், அவை மைய அரசின் முழு மானிய நிதியுதவித் திட்டத்தின்கீழ் பரிசீலனை செய்யப்பட்டு வழங்கப்படும்.

2010 ஜனவரி 11]

41—

விற்பனை அங்காடிகள்

வினா எண் 64918—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் மீன் வளர்ச்சித் துறையின்மூலம் விற்பனை அங்காடிகள் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரத்தில் தகுதியான இடம் கிடைக்கும்பட்சத்தில் மீன் விற்பனை அங்காடிகள் திறப்பது குறித்த சாத்தியக்கூறுகளை தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் பரிசீலிக்கும் என்பதால், தற்சமயம் காஞ்சிபுரத்தில் மீன் வளர்ச்சித் துறையின்மூலம் தனியாக விற்பனை அங்காடிகள் திறக்க வேண்டிய அவசியம் எழாது.

42—

மீன் விற்பனை நிலையம்

வினா எண் 87271—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூரில் தினசரி மீன் விற்பனை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூரில் தினசரி மீன் விற்பனை நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

[2010 ஜனவரி 11

43—

காப்பீட்டு நிவாரணம்

வினா எண் 101153—திரு. ஞா. ஜான் ஜோசப்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலில் காணாமல் போனவர்களை காணாமல் போனவர் என அறிவிக்க ஏழு ஆண்டுகள் ஆக வேண்டுமென்ற நிபந்தனையை தளர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலில் மீன்பிடித் தொழில் புரியச் சென்று காணாமல் போகும் மீனவர்களின் குடும்பங்களுக்கு, மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் காப்பீட்டு நிவாரணத் தொகையினைப் பெற, தற்போதுள்ள விதிமுறைகளின்படி காணாமல்போன மீனவருக்கான நிவாரணம் குறித்த கோரிக்கை, இரண்டு ஆண்டுகளுக்குள் பெறப்பட்டு, அவை, புதுடெல்லியில் உள்ள தேசிய மீனவர் கூட்டுறவு இணையத்திற்கு பரிந்துரைக்கப்பட்டு வருகிறது. மீனவர்கள் காணாமல் போன இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே காப்பீட்டு நிவாரணம் பெற விண்ணப்பிக்கும் நடைமுறையும் அமலில் உள்ளது.

44—

பால் கூட்டுறவுச் சங்கங்கள்

வினா எண் 99097—திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் தொகுதி, இராமானுஜம்புதூர், சேரக்குளம், முதலூர் ஆகிய கிராமங்களில் பால் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்த அரசு முன்வருமா?

2010 ஜனவரி 11]

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதியிலுள்ள இராமானுஜம்புதூர், முதலூர் ஆகிய கிராமங்களில் கீழ்க்கண்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன:

1. வி.ஆர்டி. 131 - இராமானுஜம்புதூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

2. டி.ஒய்.டி. 989 - இராமானுஜம்புதூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

3. வி.ஆர்.டி. முதலூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

மேலும், சேரக்குளம் கிராமத்தில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், கிளை அமைத்து கொள்முதல் செய்து வருவதால், அக்கிராம மக்கள் பயனடைந்து வருகின்றனர்.

(2) எனவே, மேற்குறிப்பிட்டுள்ள 3 கிராமங்களிலும், ஏற்கெனவே 2 கிராமங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கமும், சேரக்குளம் கிராமத்தில் சங்கத்தின் கிளையும் செயல்பட்டு வருவதால், புதிய சங்கங்கள் அமைக்க வாய்ப்பில்லை.

45—

பால் குளிரூட்டும் நிலையம்

வினா எண் 102269—திருமதி ஆர். பிரேமா: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, அவினாசி, சேயூர், ஆலத்தூர், நடுவச்சேரி, போத்தம்பாளையம், அன்னூர் ஆகிய பகுதிகளில் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியமானது அவினாசி வட்டம், அன்னூர்

மற்றும் அதனைச் சுற்றியுள்ள சேயூர், ஆலத்தூர், நடுவச்சேரி, போத்தம்பாளையம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய 131 பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்தும், 36 பால் சேகரிப்பு மையங்களிலிருந்தும் நாளொன்றுக்கு 42,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, பால் டேங்கர்மூலம் பிரதான பால்பண்ணைக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

அவினாசி பகுதிக்குட்பட்ட அன்னூரில், அல்லிகாராம்பாளையம் கிராமத்தில் பால் குளிரூட்டும் நிலையம் ஏற்கெனவே செயல்பட்டு வருவதாலும், இலுப்பந்தம் கிராமத்தில் 5,000 லிட்டர் பால் கொள்ளளவுள்ள மொத்த பால் குளிர்விப்பான் செயல்பட்டு வருவதாலும், மேலும் புதிதாக பால் குளிரூட்டும் நிலையம் அமைத்திட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

46—

புதிய கட்டடம்

வினா எண் 102270—திருமதி ஆர். பிரேமா: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, அவினாசி ஒன்றியம், சேயூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், அவினாசி தொகுதி, அவினாசி ஒன்றியம், சேயூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் தற்போது நாளொன்றுக்கு சராசரியாக 290 லிட்டர் பால் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டு, கோயம்புத்தூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது.

இச்சங்கத்திற்குச் சொந்தமான காலிமனை ஏதுமில்லாததாலும், போதுமான நிதி வசதி இல்லாததாலும் சொந்த கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

47—

பால் குளிரூட்டும் நிலையம்

வினா எண் 104556—திரு. பெ. மோகன்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், ஒட்டப்பிடாரம், புதியம்புத்தூர், பசுவந்தனை மற்றும் கயத்தார் ஒன்றியம், கழுகுமலை, கடம்பூர் ஆகிய பகுதிகளில் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கோவில்பட்டியிலிருந்து 35 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கோவில்பட்டியில் நாளொன்றுக்கு 10,000 லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட்டு வருகிறது.

ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், ஒட்டப்பிடாரம், புதியம்புத்தூர், பசுவந்தனை மற்றும் கயத்தார் ஒன்றியம், கழுகுமலை, கடம்பூர் ஆகிய பகுதிகளிலிருந்து நாளொன்றுக்கு 4,000 லிட்டர் பால் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டு வருவதாலும், தேவையான அளவிற்கு பால் உற்பத்தி இல்லாததாலும், ஒட்டப்பிடாரம் தொகுதிக்கு அருகில் உள்ள கோவில்பட்டியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைந்துள்ளதாலும், மேற்காணும் பகுதிகளில் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கு வாய்ப்பில்லை.

48—

கட்டடம்

வினா எண் 104562—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, கணியம்பாடி ஒன்றியம், கீழ் அரசம்பட்டியில் கூட்டுறவு பால் சங்கத்திற்குக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதி, கணியம்பாடி ஒன்றியம், கீழ் அரசம்பட்டியில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் தற்போது நாளொன்றுக்கு சராசரியாக 910 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, 250 லிட்டர் பால் உள்ளூரில் விற்பனை செய்ததுபோக, எஞ்சிய 660 லிட்டர் பால் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது.

இச்சங்கத்திற்குச் சொந்தமாக 2,834.58 சதுர அடி நிலம் உள்ளது. ஆனால் போதுமான நிதி வசதி இல்லாததால், கட்டடம் கட்ட வாய்ப்பில்லை. இருப்பினும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில், கட்டடம் கட்ட இயலும்.

49—

பால் விற்பனை நிலையம்

வினா எண் 105561—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், ஆர்.சி. செட்டிப்பட்டியில் ஆவின் பால் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, ஆர்.சி. செட்டிப்பட்டியில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் நாளொன்றுக்கு

2010 ஜனவரி 11]

400 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. ஆர்.சி. செட்டிப்பட்டியில் சுமார் 150 குடும்பங்கள் வசிக்கும் சிற்றூராக இருப்பதால், இங்கு பால் விற்பனை மிகவும் குறைவாக உள்ளது.

15. திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை மற்றும் மடத்துக்குளம் பகுதியில் தாட்கோ கடனுதவிக்கு வருமானச் சான்று ரூ.18,000/- என்றுள்ளதை மாற்றி, வருமானச் சான்று ரூ.24,000/- உள்ளவர்களுக்கும் கிடைத்திடச் செய்ய வேண்டும் என்பது குறித்தும்;

16. திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு அருள்மிகு சித்தாண்டீஸ்வரர் திருக்கோயில் நிலத்தைத் தேர்வு செய்து அங்கு அலுவலகக் கட்டடம் கட்டித் தர வேண்டும் என்பது குறித்தும்;

17. திருப்பூர் மாவட்டம், கிருஷ்ணாபுரம், அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை வெள்ளி விழாவை நினைவுகூரும் வகையில் வெள்ளி விழா புதிய கட்டடம் மற்றும் சமுதாய நலக் கூடம் கட்டித் தர வேண்டும் என்பது குறித்தும்;

18. திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஆலாம்பாளையம் பூசாரிநாயக்கன் குளத்திற்குத் தண்ணீர் வழங்க ஏற்கெனவே அரசு ஆணை வெளியிட்டுள்ள நிலையில், விவசாயிகள் மதகு அமைத்து தண்ணீர் எடுக்க பங்குத் தொகை செலுத்தியும் குளத்திற்குத் தண்ணீர் வழங்கப்படாதது குறித்தும்;

19. திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்தி மலைப் பகுதியில் சுற்றுலா வளர்ச்சி மேம்பாட்டு நிதியில் வளர்ச்சிப் பணிகளுக்குப் போதிய நிதி வழங்க வேண்டும் என்பது குறித்தும்;

20. திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்தி மலை அருள்மிகு அமணலிங்கேஸ்வரர் திருக்கோயில் புதிய திருமண மண்டபம் கட்ட அரசு அறிவிப்பு வெளியிட்டும் இதுவரை நிறைவேற்றப்படாதது குறித்தும்;

21. திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை, கொழுமம் வழி பழனிச் சாலையில் விடுபட்ட சாலையை அகலப்படுத்தும் பணி நிறைவேற்றப்படுவது குறித்தும்;

22. திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை காவல் நிலையத்திற்குக் கூடுதல் காவலர்களை நியமிக்க வேண்டும் என்பது குறித்தும்;

23. திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை - மூணாறு செல்லும் சாலையில் மலைப் பகுதியில் மோசமான நிலையில் உள்ள 2 கொண்டை ஊசி வளைவுகளை உடனடியாகச் செப்பனிட வேண்டும் என்பது குறித்தும்;

24. திருப்பூர் மாவட்டம், அமராவதி நகர் புறக் காவல் நிலையம் மற்றும் கணியூர் புறக் காவல் நிலையங்களைக் காவல் நிலையங்களாகத் தரம் உயர்த்த வேண்டியது குறித்தும்;

25. திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை - கல்லாபுரம் ஊராட்சி, புரட்சித்தாய்புரம் பகுதியில் 30 ஆண்டு காலமாகக் குடியிருக்கும் மக்களுக்கு ஆதி திராவிடர் நலத் துறையின்மூலம் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும் என்பது குறித்தும்;

26. திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை அரசு கலைக் கல்லூரியில் படிக்கும் ஏழை, எளிய ஆதி திராவிடர் இன மாணவியர் நலன் கருதி 'ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி' அமைக்க வேண்டியது குறித்தும்;

27. திருப்பூர் மாவட்டம், கொமரலிங்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில், வாடகைக் கட்டடத்தில் செயல்படும் பிற்பட்டோர் நல மாணவர்கள் விடுதிக்கு, பள்ளி வளாகத்திலேயே சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டும் என்பது குறித்தும்;

28. திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம், கழுகரை பகுதியில் வசிக்கும் ஏழை, எளிய ஆதி திராவிடர் இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட வேண்டும் என்பது குறித்தும்;

29. திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினை விரைவில் செயல்படுத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது குறித்தும்;

30. திருப்பூர் மாவட்டம், அமராவதி அணை பாசனம் பெறும் பழைய வாய்க்கால், அணைக்கட்டு மற்றும் வாய்க்கால் பராமரிப்பு செய்ய உலக வங்கித் திட்டத்தில் சேர்த்து பணிகள் மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்தும்; மற்றும்

31. திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை பேருந்து நிலையம் விஸ்தரிப்பு செய்யப்படும்போது, சுரங்கப்பாதை (Sub-Way) அமைக்க வேண்டும் என்பது குறித்தும்

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

2010 ஜனவரி 11]

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த ஆன்-லைன் வர்த்தகம் தடை செய்யப்பட அரசு நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

2. மதுரையில் தகவல் தொழில்நுட்பப் பூங்காவின் கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்று குறிப்பிட்ட தேதியிலிருந்து செயல்படும் என்று குறிப்பிடாதது குறித்தும்;

3. மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குள் இசுலாமியப் பள்ளி மாணவியர் விடுதி தொடங்க நிதி ஒதுக்கம் செய்யப்படுவது குறித்தும்;

4. மதுரை, தொழிலாளர் துறை ஆணையர் அலுவலகத்திற்கு, ஏற்கெனவே துறையின் சார்பில் வாங்கப்பட்டுள்ள இடத்தில் புதிய கட்டடம் கட்ட மதிப்பீடு கோரப்பட்டு, மதிப்பீடு பெற்ற பின்னரும் நிதி ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ள நிலைமையை மாற்றி நிதி ஒதுக்கீடு செய்யப்படுவது குறித்தும்;

5. மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் 52, 53-வது வட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்டுள்ள காய்கறி அங்காடியில் வேளாண்மைத் துறை சார்பில் சிறப்புக் கிளை அங்காடி தொடங்கப்படுவது குறித்தும்;

6. சோழவந்தான், மேலூர் ஆகிய தாலுகாக்களில், கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்கப்படுவது குறித்தும்;

7. அழகர்மலையில் உருவாகும் சிலம்பாற்றில் நீர்த்தேக்கம் அமைக்கப்பட நிதி ஒதுக்கீடு செய்யப்படுவது குறித்தும்;

8. மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனையில் கூடுதலாக ஒரு மின்மாற்றி, அவசர சிகிச்சைப் பிரிவில் தனியாக ஒரு மின் ஊக்கி மற்றும் வென்ட்டிலேட்டர் அமைப்பது குறித்தும், "லேப்ராஸ்கோப்பி" அறுவை சிகிச்சைக்கான கருவிகள் வாங்கப்படுவது குறித்தும், அரசினர் பாலரெங்காபுரம் மருத்துவமனையில் சிறப்புச் சிகிச்சைப் பிரிவு தொடங்கப்படுவது குறித்தும், காலிப் பணியிடங்கள் நிரப்பப்படுவது குறித்தும்;

[திரு. என். நன்மாறன்] [2010 ஜனவரி 11

9. சென்னை மாநகராட்சியைப் போன்று மதுரை மாநகராட்சிக்கு அரசாணை பிறப்பித்து அதனை நிறைவேற்றும் அதிகாரம் வழங்குதல், மாநகராட்சி மகப்பேறு மருத்துவமனைகளில் காலிப் பணியிடங்கள் நிரப்புதல், மழலையர் பள்ளிகள் தொடங்க மாமன்றம் மதிப்பீடு தயாரித்து அனுப்பியுள்ளதை ஏற்று நிதி ஒதுக்கம் செய்தல், மாநகராட்சிப் பள்ளிகளில் ஆய்வுக் கூட வசதி ஏற்படுத்தித் தருதல், அனைத்துப் பள்ளிகளுக்கும் கணினிப் பயிற்சி வழங்குதல் மற்றும் ஆசிரியர் அலுவலர் பணியிடங்கள் நிரப்பப்படுதல் போன்றவை குறித்தும்;

10. மதுரை சௌராஷ்டிரா மேல்நிலைப் பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு வரை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுவதுபோல் மாநகராட்சி மற்றும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு பன்னிரண்டாம் வகுப்பு வரை சத்துணவு வழங்கப்படுவது குறித்தும்;

11. தமிழ்மொழியின் செம்மை மற்றும் சீர்மை, வளமை குறித்து தமிழ் வழி, ஆங்கில வழியில் பயிலும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்குப் பாடத் திட்டத்தில் வகுப்பிற்கு ஏற்ப சேர்க்கப்படுவது குறித்தும்;

12. மதுரை காமராஜபுரம் மற்றும் மாநகரப் பகுதியில் வசிக்கும் மக்களுக்குப் பட்டா கிடைக்க நிலம், வகைமாற்றம் செய்து தரப்படுவது குறித்தும்;

13. மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்தில் நிரந்தரமாக நல்ல தண்ணீர் நிரப்ப வகை செய்வது குறித்தும்;

14. பிளாஸ்டிக் கழிவுகளால் தார்ச் சாலை அமைக்க மதுரை அறிவியல் வல்லுநர் பேராசிரியர் வாசுதேவன் அவர்களின் தொழில்நுட்பத்தை இமாச்சலப் பிரதேச அரசு பயன்படுத்துவது போல், தமிழக அரசும், குறைந்த செலவில் தரமான சாலை அமைக்க பரிசீலனை செய்து நிறைவேற்றும் என்பது குறித்தும்;

15. மதுரை, பசுமலை மகாலட்சுமி மில்லில் பணியாற்றி, ஆலை மூடப்பட்டதால் வேலையிழந்த தொழிலாளர்களுக்கு காசோலை வழங்கியதில் நடைபெற்ற மோசடியிலிருந்து தொழிலாளர்களைக் காக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்தும்;

2010 ஜனவரி 11] [திரு. என். நன்மாறன்]

16. மதுரை முனிச்சாலை பகுதியில் உள்ள அஞ்சல் நிலையத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்பே இடம் வாங்கியும், இன்னமும் கட்டாமல் உள்ளதை மத்திய அரசுக்குத் தெரிவித்து ஆவன செய்வது குறித்தும்;

17. மதுரை நகர கூட்டுறவு வங்கி மீண்டும் செயல்பட ஆவன செய்யப்படும் என்றும்;

18. மரபணு விதைகளால் விவசாயம் பாதிக்கப்படாமல் பாதுகாப்பது குறித்தும்;

19. வைகை நதியில் தியாகராஜர் கல்லூரியின் பின்புறம் நீர்த்தேக்கம் அமைக்கப்படும் என்பது குறித்தும் மற்றும்

20. கடலோர மீன்பிடித் தொழிலாளர் பாதுகாப்பு குறித்தும்

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.''

திரு. கே. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சீனிவாசன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பொன்னுதுரை.

திரு. செ. பொன்னுதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. பெருந்துறை தொகுதியில் அமைந்துள்ள சிப்காட் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் மாசுபட்ட சாயக் கழிவு நீரால் பெருந்துறை சுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள விவசாயப் பாசனக் கிணறுகள், குடிநீர் ஆதாரங்கள் மாசுபடுவதைத் தடுக்க அரசு சுமார் 700 கோடி ரூபாய் திட்டத்தில் குழாய்மூலம் கழிவு நீரை எடுத்துச் சென்று சுத்திகரிப்பு செய்து கடலில் கலக்கும் திட்டம் குறித்தும்;

2. பெருந்துறை பேரூராட்சியையும், கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சியையும் இணைத்து நகராட்சியாக அறிவிப்பது குறித்தும்;

[திரு. செ. பொன்னுதுரை] [2010 ஜனவரி 11

3. பெருந்துறை பகுதியில் நிலத்தடி நீரை உயர்த்த குளம், குட்டைகளுக்கு நீர் நிரப்பும் அத்திக்கடவு - அவினாசி திட்டத்தை நிறைவேற்றுவது குறித்தும்;

4. பெருந்துறை பகுதியில் கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சி வார்டு எண் 12, திருவெங்கிப்பாளையம் பகுதியில் பேரூராட்சியின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வரும் சாக்கடை நீர் தேங்கி நிற்பதால், இக்கழிவு நீரை பாதாளச் சாக்கடைமூலம் அப்புறப்படுத்தும் திட்டம் குறித்தும்;

5. பெருந்துறை தொகுதியில் உள்ள ஊத்துகுளி காவல் நிலையம் மிகவும் பழுதடைந்துள்ளதால், புதிய காவல் நிலையக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

6. பெருந்துறை நகரில் பெருகிவரும் மக்கள் தொகை மற்றும் தொழிற்சாலைகளால் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், புதிய போக்குவரத்து காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

7. ஈரோடு மாவட்ட காஞ்சி கோயிலில் இயங்கி வரும் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

8. ஈரோடு மாவட்ட திங்களூர் சார்-பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

9. ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் இயங்கி வரும் சார்பு நீதிமன்ற வளாகக் கட்டடம் அமைப்பது குறித்தும் மற்றும்

10. திருப்பூர் மாவட்டத்தில் ஊத்துக்குளி, குன்னத்தூர், பெருமாநல்லூர் வருவாய் உள்வட்டத்தைச் சேர்த்து புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைப்பது குறித்தும்

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பொன்னுதுரை அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

2010 ஜனவரி 11]

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவது குறித்தும்;

2. உணவுப் பொருள் மற்றும் அத்தியாவசிய பொருட்களை ஆன்-லைன் வர்த்தகம்மூலம் வர்த்தகம் செய்ய தடைவிதிப்பது குறித்தும்;

3. கரும்புக்கு டன்னுக்கு ரூ.2,000/-, நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.1,500/- கொள்முதல் விலை வழங்குவது குறித்தும்;

4. சாயப் பட்டறையிலிருந்து வெளியேறும் கழிவு நீரைச் சுத்தப்படுத்த பொது சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கு மத்திய அரசுமூலம் மானியம் பெற மாநில அரசு நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

5. சட்டப் பேரவையில் அறிவித்த சாயக் கழிவு நீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வான 700 கோடி ரூபாய் செலவில் கழிவு நீரைக் கடல் நீரில் கலக்கும் திட்டம் குறித்தும்;

6. தமிழகத்தில் வனப் பகுதியில் உள்ள நிலம், வீட்டுமனை ஆகியவற்றிற்குப் பட்டா வழங்க உள்ள தடையை நீக்குவது குறித்தும்;

7. நீலகிரி மாவட்டத்தின் மலைப் பகுதியில் பத்திரப் பதிவு செய்ய மாவட்ட நிருவாகம் தடை விதித்துள்ளதை நீக்குவது குறித்தும்;

8. சாயக் கழிவு நீரினால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களுக்கு உரிய நஷ்ட ஈடு வழங்குவது குறித்தும்;

9. பரம்பிக்குளம் அணை பாசனப் பகுதிக்குக் கூடுதல் நீர் ஆதாரத்தை உருவாக்கும் ஆனைமலை ஆறு, நள்ளாறு ஆகிய பகுதிகளில் அணை கட்டுவது குறித்தும்;

10. வீட்டுமனை வழங்குவதற்குத் தடையாக உள்ள நில வகையில் மாற்றம், தடை ஆணையை நீக்கம் செய்வது குறித்தும்

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர். திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட எங்களுடைய திருத்தத்தை நாங்கள் முன்மொழிகிறோம்:

"1. தமிழகத்தில் இந்து ஆலயங்கள், இஸ்லாமிய தர்க்காக்கள், கிறித்துவ தேவாலயங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அன்னதான திட்டம் குறித்தும்;

2. தமிழக விவசாயிகளுக்குத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்மூலமாக கடன் வழங்குவது குறித்தும்;

3. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் செலுத்தியுள்ள வைப்புத் தொகையை முதிர்வுற்றவுடன் திருப்பி வழங்குவது குறித்தும்;

4. நதிநீர்ப் பிரச்சினைகளில் அரசு போதிய கவனம் செலுத்துவது குறித்தும்;

5. தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்திற்கு உரிய நிவாரணம் அரசு வழங்குவது குறித்தும்;

6. தமிழ்நாட்டில் அறிவிக்கப்படாத மின்வெட்டைச் சரி செய்வதற்கான முன்னேற்பாடுகள் குறித்தும்;

7. தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கடத்தப்படுவது, அடித்துக் சுட்டப்படுவது மற்றும் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது குறித்தும்;

8. விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவது குறித்தும்;

2010 ஜனவரி 11] [திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி]

9. கட்டுமானப் பொருட்களின் விலை ஏற்றத்தால் கட்டுமானத் தொழில்கள் பாதிக்கப்படுவது குறித்தும்;

10. தமிழ்நாட்டிலிருந்து அதிக அளவில் ரேஷன் பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுப்பது குறித்தும்;

11. மணல் குவாரிகளிலிருந்து சட்டத்திற்குப் புறம்பாக, முறைகேடாக மணல் எடுக்கப்பட்டு அண்டை மாநிலங்களுக்குக் கடத்தப்படுவதைத் தடுக்க தடுப்பு நடவடிக்கைகள் எடுப்பது குறித்தும்;

12. தமிழ்நாட்டில் சாலைகள் அனைத்தும் தகுந்த பராமரிப்பின்றி மிகவும் பழுதடைந்துள்ளதால் அதனைச் சரிசெய்வது குறித்தும்;

13. சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைப்பதற்கு விவசாய நிலங்கள் அரசால் ஆர்ஜிதம் செய்யப்படுவதால், விவசாயிகள் பாதிப்பு அடைவது குறித்தும்;

14. விமான நிலையங்கள் விரிவாக்கம் செய்யப்படும்போது பாதிக்கப்படும் மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவது குறித்தும்;

15. புதிய .குடும்ப அட்டைகளை, முறையாக விண்ணப்பித்த தகுதி பெற்ற அனைவருக்கும் வழங்குவது குறித்தும்;

16. கடல் மீன்பிடி மற்றும் மேலாண்மை வரைவுச் சட்டத்தை மத்திய அரசு கொண்டுவரவுள்ள நிலையில், மீனவர் நலன் கருதி வரைவுச் சட்டம் கொண்டு வராமல் தடுப்பது குறித்தும்;

17. தமிழகத்தின் ஜீவாதாரப் பிரச்சினைகளான, காவிரி நதி நீர்ப் பிரச்சினை, முல்லைப் பெரியாறு பிரச்சினை, பாலாற்றின் குறுக்கே அணை கட்டுதல் போன்ற பல பிரச்சினைகளில் ஏற்பட்டுள்ள தடங்கல்களுக்கு உரிய தீர்வு காண்பது குறித்தும்;

18. தமிழ்நாட்டில் தற்போது வேகமாகப் பரவி வரும் ஒருவித மர்மக் காய்ச்சல் குறித்தும்;

[திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி] [2010 ஜனவரி 11

19. கரும்புக்கு விலை உயர்வு அளிப்பது குறித்தும்; மற்றும்

20. அண்ணா நூற்றாண்டு விழா கொண்டாடும் இந்த அரசு, தற்போது செயல்படுத்தி வரும் திட்டங்களான காப்பீட்டுத் திட்டம், இலவச கான்கிரீட் வீடு கட்டும் திட்டம் போன்றவற்றிற்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரைச் சூட்டுவது குறித்தும்

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

திரு. பி.கே. சேகர்பாபு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி.

திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"*1.* பில்லூர், அத்திக்கடவு-2 திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டிய அவசியம் குறித்தும்;

2. திருப்பூர், பல்லடத்தில் சாயக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

3. செங்கத்தூர்-கரவளிமதப்பூர் நொய்யல் பாலம் அமைக்க (திருச்சி சாலை) நபார்டு வங்கிமூலம் 4 ஆண்டுகளுக்கு முன்னர் தேர்வு செய்யப்பட்டுள்ளது. பணியை விரைந்து தொடங்குவது குறித்தும்;

4. புதிதாகப் பிரிக்கப்பட்ட சூலூர் தாலுகாவில் செயல்படும் அலுவலகங்களுக்குக் கட்டட வசதி, அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் நியமனம் செய்ய வேண்டியது குறித்தும்;

2010 ஜனவரி 11] [திரு. செ.ம. வேலுசாமி]

5. பல்லடம் உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கம்மூலம் கல்லூரி கட்டுவதற்கு அரசாணை பெறப்பட்டுள்ளது, கல்லூரி அமைப்பது குறித்தும்;

6. சூலூரில் தற்காலிகமாக இயங்கிவந்த காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் தற்போது இயங்காததால், மக்களின் சிரமங்களைப் போக்க, காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

7. கோவை மாநகர் பீளமேடு-காந்திநகர் பகுதியில் குற்றங்கள் அதிகமாக நடப்பதால், வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கட்டப்பட்டுள்ள காவல் நிலையக் கட்டடத்தில் காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

8. கோவை மாவட்டத்தில் சோமனூர் இரயில்வே பகுதி, இரத்தினபுரி இரயில்வே பகுதி, நிர்மலா கல்லூரி மற்றும் கல்லுக்குழி போன்ற இடங்களில் பல ஆண்டுக் காலமாக குடியிருப்போருக்கு நிரந்தர பட்டா வழங்கி வீடுகள் வழங்குவது குறித்தும்;

9. ஆத்தூர் கண்ணப்பாலம், நீலம்பூர் ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

10. சூலூர்-மேட்டுப்பாளையம் (நாகப்பட்டினம்-கூடலூர் சாலை) சாலைப் பணிகளை மேற்கொள்வதில் ஏற்படும் காலதாமதத்தினால் உயிரிழப்பு ஏற்படுவதால் விரைவில் பணிகளை முடிக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

11. கோவை மாநகரில் ரிங் ரோடு அமைப்பது குறித்தும்;

12. திருச்சி ரோடு, அவினாசி சாலை மற்றும் சத்தியமங்கலம் சாலைகளை விரிவுபடுத்தவேண்டியதன் அவசியம் குறித்தும்;

13. தண்ணீர்ப் பந்தல், கோவை மத்திய இரயில்வே நிலையம் ஆகிய இடங்களில் பாலங்கள் அமைப்பதைத் துரிதப்படுத்துவது குறித்தும்; மற்றும்

14. சோமனூரில் விசைத்தறி வணிக வளாகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

[2010 ஜனவரி 11

திரு. கே.எஸ். விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன்.

திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. நியாய விலைக் கடைகள்மூலம் வழங்கப்படும் ரூ.50/-க்கான மளிகைப் பொருட்களை அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்குவது குறித்தும்;

2. கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.2,000/- வழங்குவது குறித்தும்;

3. முதியோர் உதவித் தொகை, விதவை உதவித் தொகை, உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை போன்ற உதவித் தொகைகளைக் குறித்த காலத்தில் வழங்குவது குறித்தும்;

4. தமிழகத்தில் உள்ள மருத்துவமனைகளில் உள்ள சுகாதாரச் சீர்கேடுகளை நீக்குவது குறித்தும், போதிய மருந்துகள் இருப்பில் இருப்பது குறித்தும், போதிய மருத்துவர்கள் பணியமர்த்தப்படுவது குறித்தும்;

5. விலைவாசி உயர்வினைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

6. கட்டுமானப் பொருட்களின் விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்துவது குறித்தும்;

7. தமிழ்நாட்டிலிருந்து அதிக அளவில் ரேஷன் பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுப்பது குறித்தும்;

8. மணல் குவாரிகளிலிருந்து சட்டத்திற்குப் புறம்பாக, முறைகேடாக மணல் எடுக்கப்பட்டு அண்டை மாநிலங்களுக்குக் கடத்தப்படுவதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுப்பது குறித்தும்; மற்றும்

2010 ஜனவரி 11] [திரு. ந. சுப்ரமணியன்]

9. புதிய குடும்ப அட்டைகள் பெற முறையாக விண்ணப்பித்த தகுதி பெற்ற அனைவருக்கும் வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.''

திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. வேளாண் தொழிலையும், உழவர் பெருமக்களையும் ஊக்குவிக்கும் வகையில் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி செய்து தொடர்ந்து பயிர்க் கடன் வழங்கி குமரி மாவட்டத்தில் 10-15 சென்ட் நிலம் இருப்பவர்களுக்கும் குத்தகை நிலத்தில் பயிர் செய்பவர்களுக்கும் பயிர்க் கடன் கிடைப்பது குறித்தும்;

2. கரும்புக்கான கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,550/- என்பதை ரூ.2,000/- ஆகவும், நெல்லுக்கான கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,050/- என்பதை ரூ.1,500/- ஆக வழங்குவது குறித்தும்;

3. திருவட்டாறு தொகுதியில் புதிய உழவர் சந்தை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

4. குமரி மாவட்டத்தில் பல்வேறு தனியார் கல்லூரிகள், தனியார் மருத்துவமனைகள், தனியார் அமைப்புகள், தனியார் தோட்ட முதலாளிகள் ஆக்கிரமித்து வைத்திருக்கும் நிலங்களை அரசே மீட்டு, நிலமற்ற ஏழை, எளிய மக்களுக்கு நிலம் வழங்கப்படுவது குறித்தும்;

5. இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கும்போது வாழை, இரப்பர், தென்னை போன்ற பயிர்களையும் சேர்ப்பது குறித்தும்;

[திருமதி ரா. லீமா றோஸ்] [2010 ஜனவரி 11

6. ஆன்-லைன் வர்த்தகத்தை முற்றிலும் தடை செய்வது குறித்தும், உணவுப் பொருட்கள் துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு, பாமாயில் உள்ளிட்ட 10 மளிகைப் பொருட்கள் அனைத்து ரேஷன் கடைகளிலும் தேவையான அளவு கிடைக்கச் செய்வது குறித்தும்;

7. ஏழை, எளிய, சாமானிய மக்களுக்கு சுகாதார வசதி கிடைத்திட குலசேகரம் அரசு மருத்துவமனையைத் தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி அனைத்து சிறப்பு சிகிச்சைப் பிரிவுகளும் துவக்கிடுவது குறித்தும்;

8. "உயிர் காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்" தனியார் நிறுவனமான ஸ்டார் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டதால் எதிர்நோக்கும் நன்மைகள் கிடைக்கப்பெறாமல் உள்ளது. ஆகவே G.I.C., L.I.C., போன்ற பொதுத் துறை நிறுவனங்களிடம் ஒப்படைப்பது குறித்தும்;

9. தமிழகத்தில் செயல்பட்டு வரும் செயல்வழிக் கல்வி முறை செழுமைபட 1 : 30 என்ற விகிதத்தில் ஆசிரியர் நியமனம் செய்யப்பட வேண்டும் என்பது குறித்தும்;

10. குடும்ப அட்டை வைத்து இருப்பவர்கள் அனைவருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி கிடைக்கப் பெறவும், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி கிடைத்தவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்குவது குறித்தும்;

11. மின்சார உற்பத்தித் திறன் அதிகரிக்க பெரிய திட்டங்களோடு உள்நாட்டு சிறிய மின் திட்டங்களையும் இணைக்கும் திருத்தம் செய்யப்பட வேண்டும்; திருவட்டாறு தொகுதியிலுள்ள கோதையாறு நீர் மின் நிலையத்தில் கூடுதலாக 60 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையத்தைத் தொடங்கும் திட்டம் இணைக்கப்பட வேண்டியது குறித்தும்;

12. வீட்டுமனைப் பட்டா 10 ஆண்டுகள் என்பதை 5 ஆண்டுகள், மீண்டும் 3 ஆண்டுகள் என மாற்றம் செய்திருப்பதை எந்தப் புறம்போக்கு நிலமாக இருந்தாலும் வகை மாற்றம் செய்து பட்டா வழங்குவது எனத் திருத்தம் செய்யப்படவும், குமரி மாவட்டத்தில் நீர்நிலைக்கு எந்த வகையிலும் பயன்படாத பொதுப் பணித் துறை புறம்போக்குகளில் இருக்கும் மக்களை அப்புறப்படுத்தும் நிலை மாற்றப்பட வேண்டியது குறித்தும்;

2010 ஜனவரி 11] [திருமதி ரா. லீமா றோஸ்]

13. ஏழை, எளியோருக்கு கான்கிரீட் கொண்ட நிரந்தர வீடுகளாக மாற்றும் கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், ஆளுநர் உரையில் இருக்கிற ஒரு வீட்டுக்கான மதிப்பீடு ரூ.60 ஆயிரம் என்பதைக் குறைந்தபட்சம் ரூ.1 இலட்சம் ஆக மாற்றுவது குறித்தும்;

14. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குத் தனி அமைச்சரை நியமனம் செய்து தனியே துறை உருவாக்குவது குறித்தும்;

15. மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கக்கூடிய கடல் மீன்பிடித் தொழில் மேலாண்மை மற்றும் நெறிப்படுத்தல் சட்டத்தை ஒத்திவைப்பு என்பதை மாற்றி இரத்து செய்ய வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துவது குறித்தும்;

16. உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்தி சிறப்பிக்கும் இந்தக் காலக்கட்டத்தில் தமிழ்ப்பள்ளிக் கல்வி நிலையங்களில் தமிழாசிரியர்கள் நியமிக்க வேண்டும் என்பது குறித்தும்; மற்றும்

17. காலிப் பணியிடங்களை நிரப்ப ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களை நியமிப்பது என்ற அவசரச் சட்டத்தைத் திருத்தம் செய்ய வேண்டுமென்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

திரு. ஞா. ஜான் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 30 நிமிடங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும் மற்றும் கட்சிகளினுடைய தலைவர் பெருமக்களுக்கும், மன்றத்திலே இருக்கக்கூடிய அனைத்து உறுப்பினர் பெருமக்களுக்கும், அதிகாரி பெருமக்களுக்கும், பத்திரிகை நண்பர்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தினைத் தெரிவித்து, தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற

[திரு. ஜி.கே. மணி] [2010 ஜனவரி 11

அடிப்படையில், தை, தை என்று நம்முடைய தமிழ்ப் புத்தாண்டு வரவிருக்கின்றவேளையில், இந்த மாமன்றத்தில் இருக்கின்ற அனைவருக்கும், ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களுக்கும், உலகெங்கும் வாழக்கூடிய தமிழர்களுக்கும் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகளையும், தமிழர் திருநாளான பொங்கல் திருநாள் வாழ்த்துகளையும் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

2010 ஆம் ஆண்டிற்கான மேதகு ஆளுநர் உரை வாசித்து அளிக்கப்பட்டு, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது எனக்கு பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரை என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த முக்கியத்துவம் வாய்ந்த உரையில் அரசின் கொள்கைத் திட்டங்களை, செயல்பாடுகளை வரையறுத்து சொல்கிறமுகத்தான் இந்த ஆண்டு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக ஒற்றைச் சாளர முறையில் மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, முதல் தலைமுறையாகப் படிப்பவர்களானால், அவர்களது கல்விக் கட்டணத்தை முழுமையாக அரசே ஏற்றுக்கொள்ளும் என்ற ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கின்றது. அதைப்போல, குடிசையில் வாழக்கூடிய ஏழை வீட்டு மக்களுக்கு ஒரு பாதுகாப்பான வீடு வேண்டுமென்ற அடிப்படையில், கலைஞர் வீட்டு வசதித் திட்டம் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதைப்போல, எல்லா அரசியல் கட்சிகளும் கோரிக்கை விடுத்தவாறு, ஆதி திராவிடர்கள் பெற்ற தாட்கோ கடன் தள்ளுபடி என்ற ஓர் அறிவிப்பும் இருக்கிறது. அதைப்போல, சுனாமியால் மீனவர்கள் பாதிக்கப்பட்ட காரணத்தால், அவர்களின் கடன் இரத்து என்பது போன்ற முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்களெல்லாம் இந்த ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருக்கின்றன. குறிப்பாக, கல்வித் திட்டத்தில், கல்வி பயிலும் முதல் தலைமுறை என்று வரையறுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. தாய், தந்தை படிக்கவில்லை என்று சொன்னால், அந்த மாணவனுக்கு முழுக் கட்டணச் சலுகை வழங்கப்படவேண்டும். பெரியப்பா, சித்தப்பா படித்துள்ளார் என்று காரணம் காட்டித் தள்ளிவிடாமல், அவர்களுக்கு அந்தப் பலன் கிடைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

நான் இந்த மாமன்றத்தில் *1996*-லிருந்து பலமுறை பேசியிருக்கின்றேன். அதாவது தாத்தா காலம், தந்தை காலம், மகன்

காலம் மற்றும் பேரன் காலம் என்று 4 தலைமுறைகளாக ஒரு கான்கிரீட் வீடு அல்லது ஓட்டு வீடுகூட பார்க்காத மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கூரை வீடு இருந்தால், அந்த நிலையை மாற்றி, தமிழகம் முழுவதும் கூரை வீடே இல்லையென்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று பலமுறை நான் கோரிக்கை வைத்துப் பேசியதற்கேற்றவாறு இப்பொழுது கலைஞர் வீட்டு வசதித் திட்டம் என்ற திட்டம் வந்திருப்பது, மகிழ்ச்சிகரமானது என்று நாம் எல்லோரும் கருதுகிறோம்.

ஆதி திராவிடர்களுக்கு தாட்கோ கடன் இரத்து என்று பல்வேறு அறிவிப்புகள் வந்துள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்வதெல்லாம், பல்வேறு கடன்களைத் தள்ளுபடி செய்கின்ற தாங்கள், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின்மூலம் கடன் பெற்றவர்களின் கடனையும் தள்ளுபடி செய்யவேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் வைத்திருக்கிறார்கள்; அதையும் நீங்கள் பரிசீலனை செய்யவேண்டுமென்ற கோரிக்கையை வைக்கின்றேன்.

ஆளுநர் உரையில் தொடக்கத்திலே, "திராவிட இயக்கத்தின் முக்கியமான கொள்கைகளில் ஒன்றான சமூக நீதியை அனைத்துச் செயல்பாடுகளிலும் முன்னிறுத்தி வெற்றி கண்டுவரும் இந்த அரசு" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது உள்ளபடியே வரவேற்கக்கூடியது. தந்தை பெரியாருக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய வகையில், திராவிட இயக்கத்தின் கொள்கைகள் முன்னிறுத்தப்படவேண்டும். சமூக நீதி எல்லோரையும் சென்றடையவேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தில் சொல்லப்பட்டிருக்கின்ற இக்கருத்தைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நான் மனதார வரவேற்கின்றேன். சமூக நீதி என்பது எங்கும், எதிலும், எல்லா நிலைகளிலும் ஒவ்வொரு தனி மனிதனையும், ஒவ்வொரு குடும்பத்தையும் சென்றடையவேண்டும். மனிதன் சேர்ந்து வாழக்கூடிய அந்தத் தொகுப்பை, கூட்டத்தை நாம் சமூகம் என்று சொல்கிறோம். ஆனால் இந்தச் சமூகத்தில் உணவு, உடை, இருப்பிடம், போக்குவரத்து, கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதாரம் என்று பார்த்தால், மேடு பள்ளங்கள், ஏற்றத்தாழ்வுகள் ஏராளமாக நிறைந்திருக்கின்றன. அந்த ஏற்றத்தாழ்வுகளைக் களையவேண்டுமென்றால், சமத்துவம் வளரவேண்டுமானால், சமூக நீதி கட்டாயம் நிலைநாட்டப்பட வேண்டும். அதனடிப்படையில்தான், 'ஒரு நாடு சுதந்திரம் பெற்றால் மட்டும் போதாது, அந்த நாடு எப்போது முழுமையாக வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அமல்படுத்தப்பட்ட நாடாக வருகிறதோ,

[திரு. ஜி.கே. மணி] [2010 ஜனவரி 11

அப்போதுதான் சுதந்திரம் பெற்ற நாடாகும்' என்று தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதனடிப்படையில், அது மிகக் குறைந்த அளவு மக்கள் தொகையைக் கொண்ட சமூகமானாலும் அல்லது பெரும்பான்மை மக்கள் தொகையைக் கொண்ட சமுதாயமானாலும் எல்லோருக்கும் உரிய அளவில் இட ஒதுக்கீடு அளிக்கப்படவேண்டும். அதுதான் முழுமையான சமூக நீதி என்று தந்தை பெரியார் சொன்ன அந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றவேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

குறிப்பாக, இன்று இட ஒதுக்கீட்டைப் பார்த்தால், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் சிறுபான்மையினர் என்று பல்வேறு நிலைகளாகப் பிரித்து வழங்கப்படுகின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முன்பு முதலமைச்சராக இருந்த நேரத்தில், அம்பாசங்கர் குழு, சட்டநாதன் குழு போன்ற குழுக்களை அமைத்து, அந்தக் குழுக்களின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 26 விழுக்காடாக இருந்த இட ஒதுக்கீட்டை மேலும் 5 விழுக்காடு உயர்த்தி, 31 விழுக்காடாக வழங்கினார்கள். அப்போது தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டோர் மகிழ்ச்சியடைந்தார்கள். இன்னும் 2 விழுக்காடு சேர்த்து வழங்கவேண்டுமென்று பரிந்துரை செய்தது மட்டுமல்லாமல், அப்போது பிற்படுத்தப்பட்டோருக்கு 17 விழுக்காடு என்றும், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 16 விழுக்காடு என்றும் வழங்கவேண்டுமென்று சட்டநாதன் குழு பரிந்துரை செய்தது. அது நடைமுறைப்படுத்தப்படாமலே போய்விட்டது. ஆனால், அதற்குப் பிறகு தமிழ்நாட்டில் சமூக நீதி வேண்டுமென்று பல்வேறு கட்டங்களில் போராட்டங்கள் நடைபெற்றன. இப்பொழுதும் சொல்கிறேன். இங்கே பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் பெருமைக்குரிய சமுதாயங்களான முதலியார், ரெட்டியார், நாடார், நாயுடு, முத்தரையர், முக்குலத்தோர், யாதவர் என்று 95 சமுதாயங்களுக்கு மேற்பட்டவை இடம் பெறுகின்றன. அவர்களுக்கு இருக்கிற இட ஒதுக்கீடு ஒரே தொகுப்பாக இருக்கிறது. அவர்களுக்கு இட ஒதுக்கீட்டுப் பயன் முறையாகச் சென்றடைய வேண்டுமானால், அந்த இட ஒதுக்கீட்டாளர்களைப் பல தொகுப்புகளாகப் பிரித்தால்தான் முறையாக எல்லா சமூகங்களுக்கும் சமூக நீதி கிடைக்கும். அந்த அடிப்படையிலே

2010 ஜனவரி 11] [திரு. ஜி.கே. மணி]

அந்தப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீட்டு அளவை பல தொகுப்புகளாகப் பிரித்து வழங்க வேண்டும்.

முற்பகல் 9-55

உதாரணத்திற்குப் பார்த்தால், கேரளாவிலே 10 தொகுப்புகள், கர்நாடகாவிலே, ஆந்திராவிலே 5 தொகுப்புகள், அதைப்போல தமிழ்நாட்டிலும் தொகுப்புகளாகப் பிரித்து வழங்க வேண்டும் என்று நான் இங்கே கோரிக்கை வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள். மிகப் பிற்படுத்தப்பட்டவர்களான வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும் என்று மிகப் பெரிய போராட்டம் 1980-லிருந்து 1987 வரையிலே நடந்து, மிகப் பெரிய அந்தப் போராட்டத்தின் நிறைவாக 7 நாள் சாலை மறியல் போராட்டம் நடைபெற்று, 21 உயிர்கள் பலி கொடுக்கப்பட்டன. ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் வழக்கைச் சுமந்தார்கள். தடியடி போன்ற மிகப் பெரிய கொடுமைகளையெல்லாம் அவர்கள் அனுபவித்த பிறகு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1989-இலே 20 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கினார்கள். அது 107 சமுதாயங்களுக்குச் சேர்த்து வழங்கப்பட்டது. 107 என்பது மிக அதிகமான சமுதாயங்களின் எண்ணிக்கை; அதை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்ட நேரத்தில், ஒரு சாதிக்கு எனத் தனி இட ஒதுக்கீடு வழங்குவது சாத்தியமில்லை என்ற கருத்தை அந்த நேரத்திலே சொன்னார்கள். அது தவிர்க்க முடியாமல் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த 107 சாதிகளுக்கான 20 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கப்பட்ட அடிப்படையில் வன்னியர்களுக்கு ஓரளவுக்கு வாய்ப்பு கிடைத்தது. மற்ற சமுதாய மக்களுக்கும் கிடைத்தது. ஆனால் நாளடைவில் பார்த்தோமானால், கடந்த 2, 3 ஆண்டுகளாகப் பார்த்தால் போலிச் சாதிச் சான்றிதழ் வழங்கும் நடைமுறை ஏராளமாக முளைத்திருக்கிறது. நான் ஆதாரத்தோடு வேண்டுமானாலும் சொல்லத் தயாராக இருக்கிறேன். பல்வேறு மாறுபட்ட காரணங்களாலே மிகப் பெரும்பான்மையான மக்கள் தொகை கொண்ட வன்னியர்களுக்கு, ஒரு சில இடங்களில் 3 விழுக்காடு, 4 விழுக்காடு, அதிகபட்சம் 9 விழுக்காடுகூட கிடைக்கவில்லை. அதை வேண்டுமானால் ஆதாரத்தோடுகூட தருகிறேன். மருத்துவத்திலோ, மற்ற துறைகளிலோ எங்கெங்கே எவ்வளவு கிடைத்திருக்கிறது என்பதை நான் ஆதாரத்தோடு வைத்திருக்கிறேன். ஆகவே, இப்பொழுது இருக்கிற அந்த இட

[திரு. ஜி.கே. மணி] [2010 ஜனவரி 11

ஒதுக்கீட்டினைத் திருத்தம் செய்து வன்னியர்களுக்குத் தனி இட ஒதுக்கீடும், மற்ற எல்லா சமுதாய மக்களுக்கும் உரிய அளவில் இட ஒதுக்கீடும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

அதிலும் குறிப்பாக, எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்கள்கூட எல்லா சமுதாயத்திற்குமான அளவுகோலை வரையறுத்து ஒரு திட்டமாகக்கூட வைத்திருக்கிறார்கள். பல்வேறு சமுதாய அமைப்புகளின் தலைவர்களை, பல அமைப்புகளை, வல்லுநர்களையெல்லாம் அழைத்துப் பேசி ஒரு திட்டத்தை அவர்கள் வைத்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் விரும்பினால் நீங்கள் அழைத்துப் பேசி, ஆலோசித்து, எல்லா சமுதாயத்திற்கும் உரியவாறு இட ஒதுக்கீடு கிடைப்பதற்கு நீங்கள் வழிவகை செய்ய வேண்டும். அழைத்துப் பேசி அதை நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கையையும் நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

உதாரணத்திற்குப் பல நேர்வுகளை என்னாலே சொல்ல முடியும். இன்று இஸ்லாமியர்களுக்குத் தனி இட ஒதுக்கீடு உள்ளது. அருந்ததியர்களுக்குத் தனி உள் ஒதுக்கீடு உள்ளது. அது வரவேற்கக்கூடியது. ஏற்றுக்கொள்கிறோம். அதற்காகக்கூட நாங்கள் 1988-லிருந்து போராட்டங்கள் நடத்தியிருக்கிறோம். அது வரவேற்கக்கூடியது. மாற்றுக் கருத்துக்கே இடமில்லை. அப்படித் தனி இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிற இந்த வேளையில், அதிக பெரும்பான்மை மக்கள் தொகை கொண்டவர்கள் வன்னியர்கள். குறிப்பாக சட்டநாதன் குழு அறிக்கையிலேகூட அப்பொழுது 68 இலட்சம் வன்னியர்கள் இருந்தனர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது உண்மையான கணக்கு அல்ல. அப்பொழுதே இதெல்லாம் பேசப்பட்டது. இருந்தாலும்கூட நான் மக்கள் தொகை எவ்வளவு என்றுகூட இப்போது சொல்லவில்லை. மக்கள் தொகை அடிப்படையிலே இட ஒதுக்கீடு வேண்டுமென்று எல்லா சாதிச் சங்கங்களும் வலியுறுத்துகின்றன. அந்த அடிப்படையிலே நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கிற எல்லா சாதிச் சங்கங்களின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், தமிழக அரசு மூலமாக சாதி வாரியாகக் கணக்கெடுப்புச் செய்ய வேண்டும். அதற்கு ஒன்றும் செலவு அதிகமாகிவிடாது. ஒவ்வொரு கிராமத்திலும் கிராம நிருவாக

2010 ஜனவரி 11] [திரு. ஜி.கே. மணி]

அலுவலர் (V.A.O.) இருக்கிறார். ஒரு கிராமத்திலே 1,000 குடும்பங்கள், 1,500 குடும்பங்களுக்கு மேலே இல்லை. அந்தக் கிராம நிருவாக அலுவலருக்கு ஒவ்வொரு குடும்பத்தைப் பற்றியும் தெரியும். அவரோடு இரண்டு ஆசிரியர்களை நியமித்தால் ஒரு வாரம், 10 நாட்களுக்குள்ளே சாதி வாரிக் கணக்கெடுப்பு, கிராம வாரியாகச் செய்ய முடியும். ஆட்சேபணை இருக்கிறதா என்று அறிந்துகொள்வதற்கு அந்த ஊரிலே பள்ளிக்கூடத்திலே பட்டியல் வெளியிடலாம். ஆட்சேபணை இருந்தால் சொல்லுவார்கள். சாதி வாரிக் கணக்கெடுப்பு என்பதுதான் இட ஒதுக்கீட்டிற்கு அடித்தளமாக அமையும். அதற்குக் காலதாமதம் ஆகாது. நிதியொதுக்கீடும் அதிகம் தேவையில்லை. ஆகவே, அதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையையும் நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன். இட ஒதுக்கீட்டிற்குப் பெருமை சேர்க்கக்கூடிய வகையில் இந்தத் தொகுப்பு இட ஒதுக்கீடு, தனி இட ஒதுக்கீடு என்ற கோரிக்கைகளை எல்லாம் இந்த ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்ற வேண்டும் என்ற வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

அடுத்து, மாநில சுயாட்சியின் அடிப்படையிலான உண்மையான கூட்டாட்சி எய்தப்படாமலேயே உள்ளது என்று ஆளுநர் உரையில் சொல்லியிருக்கிறீர்கள். அது ஏற்றுக்கொள்ளக்கூடியது. மாநிலங்களுக்கு இருந்த அதிகாரம் குறைந்திருக்கிறது. ஊராட்சிகளுக்கெல்லாம் அதிகாரம் வேண்டும் என்று போராடுகிற, குரல் கொடுக்கிற இந்த வேளையில், மாநிலங்களுக்கான ஆட்சி அதிகாரம் கூடுதலாக்கப்படவேண்டும்.

மாநிலத்தில் சுயாட்சி என்ற கோரிக்கை நீண்ட காலமாக, நீறு பூத்த நெருப்பாகவே இருந்துகொண்டிருக்கிறது. மாநில சுயாட்சி பெறுவதற்கு, கூடுதல் அதிகாரங்களைப் பெறுவதற்கு, தமிழக அரசு என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது? மேலும் என்ன முயற்சி எடுக்கப் போகிறீர்கள்? எப்படிப்பட்ட திட்டங்களை எல்லாம் நீங்கள் நிறைவேற்ற இருக்கிறீர்கள் என்பதை வரையறுத்துச் சொல்லவேண்டும் என நான் இங்கே வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்காக 50 ரூபாய்க்கு, குறைந்த விலையில் அத்தியாவசிய சமையல்

[திரு. ஜி.கே. மணி] [2010 ஜனவரி 11

பொருள்கள் வழங்குவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். குறைந்த விலையிலே இவ்வாறு பொருள்கள் வழங்குவதனாலே விலைவாசி குறைந்து, அதனால் மக்கள் பயன் அடைவார்கள் என்று சொல்லிவிட முடியாது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இப்போது ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்குகிறீர்கள். ஆனால் கடையில், அரிசியினுடைய சந்தை விலை என்ன? எண்ணெய் விலை, பருப்பு விலை, உப்பு விலை, தீப்பெட்டி விலை என்று எடுத்துக் கொண்டால், கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 3 மடங்கு விலை உயர்ந்து இருக்கிறது. இத்தகைய விலைவாசி உயர்வால் மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு எடுத்திருக்கிற நடவடிக்கை போதாது. விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்காக எல்லா நிலைகளிலும் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று நான் இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போல, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றியும் நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதைக் குறிப்பிட்டுவிட்டு, இராமநாதபுரம் மாவட்டத்திற்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வழங்கியதற்கு ஆளுநர் அவர்கள் பாராட்டிச் சொல்லியிருக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்திற்குக் காவிரியிலிருந்து குடிநீர் வழங்கியதை, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலும் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம். அதில் மாறுபட்ட கருத்தில்லை. ஆனால், காவிரிக் கரையோரத்தில் இருக்கிற, கையிலே அள்ளிக் குடிக்கிற அளவுக்கு இருக்கிற, கண்ணுக்கு எட்டிய தூரத்தில் இருக்கிற அந்த தருமபுரி, கிருஷ்ணகிரி மக்களுக்குக் காவிரி கூட்டுக் குடிநீர் எட்டாக் கனியாக, கானல் நீராக இருந்துகொண்டிருக்கிறது. இது காமராஜர் காலத்தில் இருந்து சொல்லப்படுகிற நீண்ட காலத் திட்டம். இந்த மன்றத்தில் பல முறை விவாதித்துப் பேசப்பட்டது. இங்கே பேசப்பட்டது மட்டுமல்ல; என்னுடைய பெயரில் உயர் நீதிமன்றத்திலேகூட வழக்குத் தொடரப்பட்டது. உயர் நீதிமன்றத்தினுடைய நீதிபதி, அரசின் கருத்தைக் கேட்டபோது, நிதியைக் கருத்தில்கொண்டு ஆண்டுதோறும் பகுதித் திட்டமாக நிறைவேற்றுகிறோம் என்று அரசின் சார்பில் சொல்லப்பட்டது. அப்போதெல்லாம் ரூ.600 கோடி, ரூ.700 கோடிதான் திட்ட மதிப்பீடு. இன்றைக்கு மதிப்பீடு எவ்வளவு ஆயிற்று? இப்போது ரூ.1,000 கோடிக்கு மேல் போய், ரூ.1,330 கோடிக்கு மேல் போய், ரூ.1,600 கோடி, ரூ.1,900 கோடி என்று சொல்லப்படுகிறது.

இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு நீண்டகாலமானது. 2012 ஆம் ஆண்டு இது முடிக்கப்படும் என்று இப்போது சொல்லப்படுகிறது. இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 1-1/2 வருடம், 2 வருடங்களுக்குள் தண்ணீர் வழங்க முடிந்தபோது, ஒகேனக்கல் திட்டத்திற்கு 1998-ல் இருந்து 2012 ஆம் ஆண்டு வரை காலதாமதம் என்றால் என்ன காரணம்? அரசிடம் நிதி இல்லையா? ஜப்பான் நாட்டு நிதியை மட்டும்தான் பெற்று நிறைவேற்ற முடியுமா? மற்ற மாவட்டங்களுக்கு, மற்ற குடிநீர்த் திட்டங்களுக்கு, தமிழ்நாடு அரசு நிதியைப் பயன்படுத்துகிற வேளையில், அந்த மாவட்டத்து மக்களுக்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற இவ்வளவு காலமா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல; அம்மாவட்டங்களில் நிலத்தடி நீரில் புளோரைட் என்ற நச்சுத் தன்மை இருக்கிறது, புளோரைட். நீங்கள் எல்லாம் ஆராய்ச்சி செய்தீர்கள். மத்திய அரசு குழு வந்து ஆராய்ச்சி செய்து இது சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தத் தாமத நிலை உள்ளபடியே வருத்தப்பட வேண்டியது என்பதையும் என்னுடைய கண்டனத்தையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, 2012 என்பதை மாற்றி, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை இன்னும் விரைவாக நிறைவேற்றுவதற்கு முன்வரவேண்டும். அப்படி 2012 வரை ஆகும் என்று சொன்னால், அந்த மாவட்டத்து மக்கள், சாதாரண மக்கள் என்ன பாவம் செய்தார்கள் என்பதையும் நான் இங்கே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, வறுமை ஒழிப்பு என்று வருகிற வேளையில் 11-வது ஐந்தாண்டுத் திட்டம் குறித்து மாநிலத் திட்டக் குழு ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறது. இன்றைக்கு தமிழ்நாட்டு மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதியினர் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்வதாக அதில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன்படி கிராமப்புறத்திலே இருக்கும் ஒரு தனி நபரின் வருமானம் வெறும் ரூ.351.86 காசு. இது கிராமப்புறத்திலே இருப்பவர்களுடைய தனி நபர் வருமானம். நகர்ப்புறத்திலே வாழக்கூடியவர்களின் தனி நபர் வருமானம் ரூ.547.42. இதை வைத்துக்கொண்டு எப்படிக் குடும்பம் நடத்த முடியும்? விலைவாசி உயர்வு; இதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இதுவும் எவ்வளவு காலத்திற்குப் பிறகுள்ள நிலை? சுதந்திரம் பெற்று இவ்வளவு ஆண்டுக் காலம் ஆகியும், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்கள் இவ்வளவு என்றால், வறுமையை

[திரு. ஜி.கே. மணி] [2010 ஜனவரி 11

ஒழிப்பதற்கு இத்தனை ஆண்டுக் கால அரசினுடைய திட்டங்கள், நிதியொதுக்கீடு என்ன ஆனது? அவை மக்களைச் சென்றடையவில்லையா என்பதையும் அரசை நான் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

சமீபத்திலேகூட அரசின் சார்பிலே ஓர் அறிக்கை வெளியிடப்பட்டது. அதிலே பொங்கலுக்காக இலவச வேட்டி-சேலை வழங்கப்படுவதாகச் சொல்லப்பட்டு, வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழக்கூடியவர்களின் எண்ணிக்கை 3 கோடியே 28 இலட்சம் பேர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மொத்த மக்கள் தொகை 6 கோடியே 24 இலட்சம் பேர். 6 கோடியே 24 இலட்சம் பேரில் இலவச வேட்டி-சேலை வழங்குவதற்கு வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழக்கூடியவர்கள் 3 கோடியே 28 இலட்சம் பேர் என்றால், மக்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்வதாகப் பொருள். ஆகவே, இப்படி வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்பவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க அரசு கருத்தில்கொண்ட திட்டங்கள் என்ன? இத்தனை ஆண்டுக்காலம் நிதியும், திட்டமும் செயல்படவில்லையா? மக்களை முன்னேற்றவில்லையா? வறுமையை ஒழிக்கவில்லையா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

இந்தியாவிலேயே பீகார் மாநிலம்தான் வளர்ச்சியில் கடைசியில் இருப்பதாகச் சொல்லிக்கொண்டிருப்பார்கள். குஜராத், மராட்டியம் போன்ற மாநிலங்களுக்கு இணையாக பீகாரும் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது என்று இப்போது சொல்கிறார்கள். செய்தித் தாளில் அப்படி வந்துகொண்டிருக்கிறது. அப்படி அந்த மாநிலங்கள் எல்லாம் வளரும்பொழுது ஏன் தமிழ்நாடு வளரவில்லை என்பதை நான் இங்கே கேட்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் சட்டமன்ற இடைத் தேர்தல்கள், நாடாளுமன்றத் தேர்தல்கள் ஆகியவை நடைபெற்றன. எப்போதும் பார்த்தீர்கள் என்றால் தமிழ்நாட்டிலே ஆண்டுதோறும் வாக்காளர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டேதான் இருக்கும். இது சராசரி கணக்கு. 16 வயது, 17 வயது நிரம்பியவர்கள் 18 வயது அடைந்தவுடன் ஒவ்வோர் ஆண்டும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும். இது கணக்கு. இந்தியாவிலே இருக்கிற எல்லா மாநிலங்களினுடைய பட்டியலையும் பார்த்தோம். வாங்கிப் பார்த்தால் 2006 ஆம் ஆண்டு

தமிழ்நாடு உட்பட 5 மாநிலங்களின் சட்டமன்றத் தேர்தலும், 2009-லே நாடாளுமன்றத் தேர்தலும் நடைபெற்றுள்ளன. 2006-லிருந்து 2009 வரையில் பார்த்தீர்கள் என்றால், எல்லா மாநிலங்களிலும் வாக்காளர்கள் எண்ணிக்கை கூடியிருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் 52 இலட்சத்து 23 ஆயிரத்து 250 வாக்காளர்கள் குறைந்திருக்கிறார்கள். என்ன காரணம்? இவர்கள் போலி வாக்காளர்களா அல்லது இங்கேயிருந்து குடிபெயர்ந்திருக்கிறார்களா? எந்த அடிப்படையிலே இவ்வளவு வாக்காளர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள்? 2006-ல், 5 மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல் நடந்திருக்கிறது. 2009-லே அவர்களுக்கும் சேர்த்து நாடாளுமன்றத் தேர்தல் நடந்திருக்கிறது. சராசரியாகப் பார்த்தோமென்றால் அதிலே 14.5 விழுக்காடு வரையில் வாக்காளர்கள் கூடியிருக்கிறார்கள். அப்போது ஏன் தமிழ்நாட்டில் மட்டும் குறைந்திருக்கிறது? குறைந்ததற்குப் பல்வேறு கோணங்களிலே ஆய்வு செய்து பார்த்தாலுங்கூட, ஆளுங்கட்சியாக இருக்கிற தி.மு.க., எதிர்க்கட்சிகளின் வாக்கு வங்கிகளைக் குறைப்பதற்காகச் செய்த சதித் திட்டம் இது என்று நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். இல்லையென்றால் வேறு என்ன காரணம்? சொல்லுங்கள். வேறு என்ன காரணத்திற்காகக் குறைத்தார்கள்? என்ன காரணம்? (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எலெக்ஷன் கமிஷன் என்பது ஒரு independent body. அவர்களைக் குறை சொல்லவே முடியாது. அப்படியென்றால், ஜனாதிபதியைக் குறை சொல்வதுபோல் அர்த்தம் ஆகிவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், எலெக்ஷன் கமிஷனைக் குறை சொல்லிப் பேசாதீர்கள். மற்றவற்றைப் பற்றிப் பேசுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எலெக்ஷன் கமிஷன் சொன்னாலும் பட்டியலில் வாக்காளர்களைச் சேர்ப்பதும், நீக்குவதும் இங்கேயுள்ள மாநில அரசின் அதிகாரிகள்தான். ஆசிரியர்கள் போன்றவர்கள்தான் அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படி நீக்கினார்கள். ஆனால் தேர்தல் ஆணையம் சரியாக இருக்கிறது என்று சொன்னால்— நாடாளுமன்றத் தேர்தல் முடிவு வந்த பிறகு பார்த்தீர்கள். தற்போது பெண்ணாகரம் சட்டமன்ற இடைத் தேர்தலுக்கான வாக்காளர்

[திரு. ஜி.கே. மணி] [2010 ஜனவரி 11

பட்டியலைப் பார்த்தோம். ஒவ்வோர் ஊருக்கும் போய் பார்த்தீர்கள் என்றால், அங்குள்ளவர்கள் புலம்புகிறார்கள். அவர்களைப்பற்றி நான் வெளிப்படையாகச் சொல்கிறேன். நீங்கள் ஆய்வு செய்யுங்கள். பட்டியலை நான் கையில் வைத்திருக்கிறேன். 150 பெயர் பட்டியலை எடுத்து வந்திருக்கிறேன். வாக்காளர் அடையாள அட்டை கையில் இருக்கிறது. அவர்கள் குடும்ப அட்டை, ரேஷன் கார்டுகள் போன்றவற்றைக் கையில் வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு மாதமும் ரேஷன் பொருள் வாங்கியிருக்கிறார்கள். அந்த ஊரில் குடியிருக்கிறார்கள். ஆனால் வாக்காளர் பட்டியலில் அவர்களது பெயர்கள் இல்லை. என்ன காரணம்? ஆகவே, அரசு, தப்பிக்கிறது என்று சொன்னால் அதைச் செய்த அதிகாரிகள்மீது குற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இது ஜனநாயகத்தினுடைய அடிப்படை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்காளர்களைப் பட்டியலிலே சேர்ப்பது, நீக்குவது என்பது மாநில அரசாங்கத்தினுடைய அதிகாரிகள்மூலமாக இருந்தாலும்கூட அந்தப் பணிகளை மேற்கொள்வது தேர்தல் ஆணையம். தேர்தல் ஆணையத்தால்தான் குறிப்பிட்ட தேதிகள் அறிவிக்கப்பட்டு, இன்னின்ன தேதியில் வாக்காளர்களைச் சேர்க்க வேண்டும், நீக்க வேண்டும், பட்டியல் பரிசீலனையில் இருக்கிறது, என்பதையெல்லாம் அவர்கள்தான் முடிவு செய்கிறார்கள். மாநில அரசாங்கத்தின் அதிகாரிகள் அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்குகிறார்கள். எனவே, தேர்தல் ஆணையம்தான் அதிலே முடிவு செய்ய வேண்டும். மாநில அரசாங்கம் வாக்காளர்களை நீக்க வேண்டுமென்று திட்டமிடவில்லை. இன்னொரு வார்த்தையைப் பயன்படுத்தினீர்கள். எதிர்க்கட்சியினுடைய குரல்வளையை நெரிப்பதற்கு, வாக்காளர்கள் எண்ணிக்கை குறைக்கப்பட்டதாக ஓர் ஆதாரமில்லாத குற்றச்சாட்டைச் சொன்னீர்கள். அதற்கான ஆதாரம் உங்களிடம் இருக்கிறதா? இல்லை. சில நேரங்களிலே எங்களுக்கு ஆதரவாக இருக்கக்கூடிய வாக்காளர்களின் பெயர்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றன என்கிறீர்கள். எப்படி நீக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், ஆய்வுக்குப் போகிறபோது 'அவன் பெங்களூருக்குப்போய் 9 மாதங்கள் ஆகிறது; ஒரு வருடம் ஆகிறது; மும்பைக்குப்போய் 6 மாதங்கள் ஆகிறது' என்று

சொல்கிறார்கள். நேரடியாகப் பரிசீலனைக்குப் போகிறபோது, பரிசீலனை நேரத்தில் அவர்கள் இல்லை. அதனால் தேர்தல் ஆணையத்தால் நீக்கப்படுகிறார்கள். அப்படித்தான் நடைபெறுகிறதேயொழிய, இதில் திட்டமிடுதல் என்பது இல்லை. எதிர்க்கட்சி, மாற்றுக்கட்சி என்றெல்லாம் வாக்காளர்களைச் சேர்ப்பதிலே பார்ப்பதில்லை. அதற்கான எந்தக் காரணமும் இல்லை. எந்த ஆட்சிக் காலத்திலும் அதே ஆசிரியர்கள்தான், அதே அதிகாரிகள்தான் இருக்கிறார்கள்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது enumeration எடுக்கும்போது உள்ள நிலையைப் பொறுத்தது. ஆள் இல்லை என்றால் எடுக்காமல் போயிருப்பார்கள், அவ்வளவுதான். விடுங்கள், விடுங்கள். மற்ற சப்ஜெக்ட்டைப் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே என்ன point of order இருக்கிறது? *(குறுக்கீடு)* இதிலே என்ன point of order இருக்கிறது? *(குறுக்கீடு)* Point of order என்ன இருக்கிறது இதிலே? *(குறுக்கீடுகள்)* திரு. ஜி.கே. மணி சொல்கிறார்கள், அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். நீங்கள் ஏன் இடையிலே எழுந்திருக்கிறீர்கள்? *(குறுக்கீடு)* சரி, சொல்லுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்காளர்களைச் சேர்ப்பது, தேர்தல் ஆணையத்தினிடத்திலே ஒப்படைப்பது உங்கள் கடமை. அதே நேரத்தில், இந்த முறை வாக்காளர் பட்டியலைப் பார்க்கிறபோது, இறுதிப் பட்டியலைத் தேர்தல் அலுவலர்களிடத்திலே கொடுத்தார்களே தவிர, யாராவது வாக்காளர் பட்டியலை, இறுதிப் பட்டியலை இங்கே இருக்கிற அனைத்துக் கட்சிகளுக்கும் வழங்கினார்களா என்பதை முதலிலே தெரிந்துகொள்ள வேண்டும். இரண்டாவதாக, இதன்மீது யாராவது மனு செய்திருக்கிறார்களா? குற்றம் புரிந்திருக்கிறார் என்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்கிறபோது, விழுப்புரத்திலே பல பேர்களுடைய பெயர்கள் விடுபட்டிருக்கின்றன என்ற குற்றச்சாட்டுக்களைச் சொல்லி, இப்போது அது ஆய்விலே இருக்கிறது. ஆறு முறை, ஏழு முறை தேர்தல்களில் வாக்களித்தவர்களுக்கு வாக்கு இல்லை என்ற நிலை இருக்கிறது.

11-279—30

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்கூட சொல்லுகிற நேரத்தில், இது தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாடு என்று சொன்னார்கள். தேர்தல் ஆணையம் என்ற ஒன்று இருக்கிறதா என்பதே சந்தேகமாக இருக்கிறது இப்போது. ஏன் என்று கேட்டீர்கள் என்றால், இப்போது பெண்ணாகரத்திலே இடைத் தேர்தலுக்குத் தேதி அறிவித்தார்கள். அறிவித்து, அங்கே எங்கள் கட்சியினுடைய முன்னாள் மத்திய சுகாதாரத் துறை அமைச்சராக இருந்தவர், இப்போது ராஜ்ய சபா உறுப்பினராக இருப்பவர் மாண்புமிகு திரு. அன்புமணி. அவர் அந்தத் தொகுதிக்குப் போகிறார். அனுமதிக்கு எழுதிக் கொடுத்தாயிற்று. Mike set பிரச்சாரம்கூட இல்லை. தொகுதிக்குள்ளே வருகிறார். வருகிற வழியிலேயே check post போட்டிருக்கிறார்கள். அங்கே அவர் போவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்னாலே நம்முடைய அமைச்சர்கள் — நான் ஆதாரத்தோடு சொல்கிறேன். படம் எல்லாம்கூட எடுத்து வைத்திருக்கிறார்கள் — நம்முடைய மாநில அமைச்சர்கள் இரண்டு பேர், கொடி கட்டிக்கொண்டு அரசாங்கக் காரிலே 50 வண்டிகளோடு போகிறார்கள். ஒரு நடவடிக்கையும் இல்லை. அதிகாரிகளெல்லாம் salute பண்ணி அனுப்புகிறார்கள். ஆனால், திரு. அன்புமணி போகிற நேரத்திலே check post-லே வழிமறித்து, 'யார் அது? கொடியை அவிழுங்கள்; உள்ளே அனுமதியில்லாமல் வரக் கூடாது,' என்று சொல்கிறார்கள். நேற்றைக்கே அனுமதிக்கு எழுதிக் கொடுத்தாயிற்று என்றால், 'இல்லை, கூடாது, வண்டியை விட்டு இறங்குங்கள்; கொடியை அவிழுங்கள்' என்று சொல்லி, உடனே கொடியைப் போய் எடுக்கிறார்கள். அதைச் சீக்கிரம் திருகி எடுக்க முடியவில்லை. உடனே படம் எடுக்கிறார்கள், அது வழக்காகிறது. அவர் மேலே 3 வழக்குகள். தேர்தல் ஆணையம் எங்கே இருக்கிறது? யார் கையிலே இருக்கிறது? இது எவ்வளவு பெரிய வேதனை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இல்லை, இல்லை. அவர் குறை சொல்வதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. தேர்தல் ஆணையம் எங்கே இருக்கிறது என்று கேட்கிறாரே, மாண்புமிகு பேரவைத் தலைவர்

2010 ஜனவரி 11] [திரு. துரைமுருகன்]

அவர்களே, அதை மட்டும்தான் நான் கேட்கிறேன். ஏன் என்றால், அது ஒரு independent body. தேர்தல் ஆணையத்தைப் பற்றி இங்கே நாம் discuss செய்தோம் என்றால் அதுவும் நீதிமன்றத்தைப் பற்றி discuss பண்ணுவது மாதிரிதான் அர்த்தம். ஆகையினாலே தேர்தல் ஆணையம் எங்கே இருக்கிறது என்று கேட்கிற கேள்வி சரியானதல்ல. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் ஆணையம் எங்கே இருக்கிறது, எங்கே இருக்கிறது என்று கேட்கிறார்கள். இங்கே தி.மு.க. ஆளுங்கட்சி. மத்தியிலே காங்கிரஸ் ஆளுங்கட்சி. ஏற்கெனவே தேர்தல் ஆணையம் 27 ஆம் தேதி பெண்ணாகரம் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவித்தது. ஆனால், திடீரென்று எதிர்க்கட்சிகளெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து அதைத் தள்ளி வைக்க வேண்டுமென்று சொன்னவுடனே, தேர்தல் ஆணையம் நீங்கள் சொன்னதைத்தான் கேட்டதே தவிர, இங்கே ஆளுங்கட்சி சொன்னதைக் கேட்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி, நீங்கள் பேசுங்கள். You please go to the other subjects.

திரு. ஜி.கே. மணி: அதற்காகச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்றதைச் சொல்லுங்கள், தேர்தல் ஆணையத்தை விட்டுவிட்டு மற்றவற்றுக்குப் போங்கள். மற்றவற்றைச் சொல்லுங்கள்.

திரு. ஜி.கே. மணி: அதேபோல, இந்த ஆளுநர் உரையிலே அரசு ஊழியர்களைப் பற்றி, ஆசிரியர்களைப் பற்றி எதுவுமே சொல்லப்படவில்லை. 6-வது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி சம்பளங்கள் எல்லாம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. ஆனால், தமிழ்நாட்டிலே இடைநிலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள் இப்படி எல்லா ஆசிரியர்களும் இருக்கிறார்கள். அந்த ஆசிரியர்களுக்கு 6-வது ஊதியக் குழுவின்படி மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கப்பட்டு வந்ததை இங்கே குறைத்திருக்கிறீர்கள். மத்திய அரசு

ஆசிரியர்களுக்கு இணையாக நம்முடைய தமிழ்நாடு அரசு ஆசிரியர்களும் ஊதியம் வாங்கிக் கொண்டிருந்தார்கள். இப்போது அந்த உயர்வில்லை . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசில் வேலை பார்க்கிற ஆசிரியர்களுக்கு என்ன ஊதியம் வழங்கப்படுகிறதோ, அதே ஊதியம் மாநில அரசு ஆசிரியர்களுக்கும் வழங்கப்படவில்லை. அது ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. எந்த grade-லே இங்கே உள்ளவர்களுக்கு ஊதியம் ஏற்கெனவே வழங்கப்பட்டதோ, அந்த grade ஊதியம்; எந்த அளவு அங்கே மத்திய அரசிலே உயர்த்தப்பட்டதோ அந்த grade-க்கு grade equal ஆக ஊதியம் தரப்படுகிறதே தவிர, ஆசிரியர் பணி என்றால், மத்திய அரசு அத்தனை மாநிலத்திலேயும் சேர்த்து சற்றொப்ப 30,000 பேர், 40,000 பேருக்கு ஊதியம் வழங்குகிறது. நாம் ஒரே மாநிலத்தில் பல இலட்சம் பேர்களுக்கு ஊதியம் வழங்குகிறோம். ஆகவே, அந்த அடிப்படையில் அந்தக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஊதியத்தில் Grade சமநிலை என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டு, அது செயல்படுத்தப்படுகிறது.

முற்பகல் 10-15

திரு. ஜி.கே. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா ஆசிரியர் சங்கங்களும் சொல்கின்றன, இணையான ஊதியம் இல்லை என்று. இன்னும் பார்த்தீர்கள் என்றால், ஊதியக் குழு பரிந்துரையின்படி இதற்கு முன்னால் உயர்ந்த கிரேடில் ஆசிரியர்கள் இருப்பார்கள். புதிய ஆசிரியர்கள் நியமனம் என்பது குறைந்த சம்பளத்தில்தான். அவர்களுக்கு எல்லாம் கண்காணிப்பாளர்—Superintendent Grade இருந்தது. இப்போது அவர்களுக்கெல்லாம் O.A. Grade கொடுத்திருக்கிறார்கள். அதனால் அவர்களது மனது மிகவும் புண்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணி, கொஞ்சம் விரைவாக உரையை முடியுங்கள்.

திரு. ஜி.கே. மணி: ஆசிரியர்களாக இருக்கிற எங்களை O.A. Grade-க்குக் கொண்டுபோய்விட்டார்களே, Superintendent Grade

2010 ஜனவரி 11] [திரு. ஜி.கே. மணி]

இருந்தது. அப்புறம் தேர்வுநிலை-Selection Grade, சிறப்பு நிலை-Special Grade, Super Grade இப்படியெல்லாம் பல்வேறு நிலை இருந்து வந்தது, அதெல்லாம் இப்போது சொல்லப்படவில்லை.

இப்போது கல்வி தரமாக இருக்கிறது என்று சொல்கிறோம். கல்வித் தரம் என்று சொன்னால், ஆசிரியர்கள் எண்ணிக்கை கூடவேண்டும். ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரம் 1:30 என்று மத்திய அரசு அறிவித்திருக்கிறது. ஆக, மாநில அரசு அதையெல்லாம் ஏற்றுக்கொண்டு உடனடியாக அறிவிக்க வேண்டும், அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றேன்.

சாதிச் சான்றிதழ் வழங்குவதில் மிகப் பெரிய குளறுபடி இருந்து கொண்டிருக்கிறது. தருமபுரி மாவட்டத்தில் குறிச்சான் என்ற ஒரு ஜாதி இருக்கிறது. அந்தக் குறிச்சான் ஜாதி ஒரு சில ஊர்களில் பழங்குடி என்று பட்டியலிடப்பட்டிருக்கிறது. அதே குடும்பத்தைச் சார்ந்த அண்ணன், தம்பிக்கு பழங்குடியினர் என்ற சான்று இல்லை. இது மிகப் பெரிய மோசடி. அதேமாதிரி குரும்பன்ஸ் என்ற ஒரு ஜாதியினர் தருமபுரி மாவட்டத்தில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருக்கிறார்கள். அந்தக் குரும்பன்ஸ் ஜாதியில் பொம்முடி, அரூர் கோட்டத்தில் பலருக்குப் பழங்குடியினர் என்று சான்று வழங்கப்பட்டிருக்கிறது. அது சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் தெரியும். அவர்களும் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதே குடும்பத்தைச் சார்ந்த பக்கத்து வீட்டிலே இருப்பவர்களுக்கு, அவர்கள் உறவுக்காரர்களுக்கு வழங்கப்படுவதில்லை. ஆகவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் சொல்லி அந்த குரும்பன்ஸ் சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கும், குறிச்சான் சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கும் உடனடியாக பழங்குடியினர் சான்று வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போல . . .

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: (குறுக்கீடு) இல்லை. உங்கள் சௌகரியத்திற்காகத் தகவல் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை, உங்கள் தகவலுக்காகச் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிச்சான் சான்று என்பது வெகு காலமாகக் கொடுக்கப்பட்டு இடையிலே நிறுத்தப்பட்டிருக்கிறது. மலைவாழ் மக்களுடைய இந்தச் சான்று வழங்க வேண்டும் என்று சொன்னால் ஒரு கோட்டாட்சியர், RDO தான் ஆய்வு செய்து கொடுக்க வேண்டும் என்கிறார். இடையிலே வந்த ஒரு RDO அவர்கள், அந்தக் குறிச்சான்

சான்று வழங்க பொறுப்பேற்றுக்கொள்ள முடியாது என்கிற நிலையிலே, அந்தத் தகவல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்து, உடனேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆதி திராவிடர் நலத் துறையினுடைய முதன்மைச் செயலாளர் அவர்களை அழைத்துச் சொன்னவுடன், உடனே குறிச்சான் இனச் சான்றிதழ் எல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நேரடியாகக் கடிதம் அனுப்பப்பட்டு, அந்தக் குறிச்சான் இன மக்களுக்கு தருமபுரி மாவட்டத்திலே சான்றுகள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி.கே. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி வழங்கப்படுவதாக இருந்தால் வரவேற்கிறோம். சரி, குறிச்சான் இனத்திற்கு வழங்குகிறீர்கள். குரும்பன்ஸ்க்கு என்ன ஆயிற்று? குறிச்சானுக்கு வழங்கப் போகிறீர்கள். குரும்பன்ஸ் இனம் அதே மாவட்டம், அதே ஊர், பக்கத்தில்தான் இருக்கிறது, அவர்களுக்கும் வழங்கப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சமச்சீர் கல்வி முறையை அரசு இப்போது நடைமுறைப்படுத்தி இருக்கிறது. சமச்சீர் கல்வியில் சொல்லப்படுவது, பயிற்று மொழி எது என்பது, அந்தப் பள்ளிகளின் முடிவுக்கு விடப்படுகிறது. என்னென்ன மொழிகளை ஏற்றுக்கொள்ள வேண்டும், ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பதைப் பள்ளிக்கூடங்களின் முடிவிற்கு விடுவது என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. அது அரசினுடைய கொள்கை முடிவாக இருக்க வேண்டும். தமிழக அரசு இதுவரைக்கும் மொழிக் கொள்கையில் என்ன நிலையைக் கடைப்பிடித்துக்கொண்டு வந்திருக்கிறது? இருமொழிக் கொள்கை என்று சொல்கிறோம். இவ்வாறு இருமொழிக் கொள்கையைத் தமிழக அரசு வரையறுத்து, கொள்கைத் திட்டமாக வைத்திருக்கிறவேளையில், பயிற்று மொழியைப் பள்ளிக்கூடங்களே வரையறுத்துக்கொள்ளலாம் என்று சொல்வது எந்த வகையில் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்? அதை ஏற்றுகொள்ள முடியாது. அது தனியார் கல்வி நிறுவனங்களுக்குத் துணை போவதாக அமையுமே தவிர, அது மொழி வளர்ச்சி நடவடிக்கையாக அமையாது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குற்றச்சாட்டுக்காக அல்லாமல் இன்னொன்றைக்கூட நான் அரசுக்குச் சொல்ல விரும்புகிறேன். சமச்சீர் கல்வி கொண்டு

2010 ஜனவரி 11] [திரு. ஜி.கே. மணி]

வருகிறீர்கள். அந்தச் சமச்சீர் கல்வியை கொஞ்சம் நெறிப்படுத்துங்கள், முறைப்படுத்துங்கள்; அதிலே ஏழை, பணக்காரன், நடுத்தரம் என்ற ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன. அப்படி இல்லாமல், ஒரே தரமான, ஒரே சீரான கட்டாயக் கல்வி 12 ஆம் வகுப்பு வரையிலும் வேண்டும். அதேமாதிரி கட்டணம் இல்லாத கல்வியாக, இலவசக் கல்வியாக அது இருக்க வேண்டும்; கல்வியினுடைய தரம் ஒரே மாதிரி இருக்க வேண்டும்; சுகமான கல்வியாக, சுமையில்லாத கல்வியாக இருக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால், ஆசிரியர்—மாணவர்கள் விகிதாச்சாரம் 1 : 30 என்கிறது மட்டுமல்ல, மொழிப் பாடம் தமிழாகத்தான் இருக்க வேண்டும். பயிற்று மொழிப் பாடம் என்று சொல்லுகிற நேரத்தில் எல்லாப் பாடங்களும் தமிழ் மொழியில் இருக்க வேண்டும். ஒரு மொழிப் பாடம் ஆங்கிலமாக இருக்க வேண்டும். ஒரு பையன் 10 ஆம் வகுப்பு அல்லது 12 ஆம் வகுப்பு முடித்துவிட்டுப் போகிறான் என்று சொன்னால், ஆங்கிலம் சரளமாக எழுத, பேச முடியும் என்கிற அளவுக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். ஆங்கிலம்தான் தொடர்பு மொழி, வாழ்க்கை மொழி என்று சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். ஆகவே, ஆங்கிலத்தை ஒரு பையன் 1 ஆம் வகுப்பிலிருந்து 10 ஆம் வகுப்பு அல்லது 12 ஆம் வகுப்பு வரைக்கும் படிக்கிறான். 10 வருடங்களில் ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்ள முடியாதா? அப்படிக் கற்றுக்கொள்ளக்கக்கூடிய அளவுக்கு ஆங்கிலம் தரமாகக் கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். மற்ற பாடங்கள் அனைத்தும் தமிழிலே இருக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் இன்றைக்கு LKG, UKG என்று சொல்கிறோம். பணக்காரக் குழந்தைகள் எல்லாம் அவ்வாறு படிக்கிறார்கள். அந்த மழலையர் பள்ளிகளில் LKG, UKG வகுப்புகள் உண்டு. கிராமங்கள்தோறும் மழலையர் பள்ளிகள் தொடங்க வேண்டும். இந்த மழலையர் பள்ளிக்கூடங்களிலும் ஆங்கிலம் கற்றுக்கொடுங்கள். அப்போதுதான் ஆங்கிலம் சரளமாகப் பேச, எழுத முடியும். இந்தச் சமச்சீர் கல்வி முறையில் இவை எல்லாம் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு அருகமைப் பள்ளி முறை, அண்மைப் பள்ளி முறை என்று சொல்லக்கூடிய பொதுப் பள்ளி முறையெல்லாம் கொண்டு வரவேண்டும். இந்த ஆளுநர் உரையின்மீது பேசுகிறவேளையில், சமூக நீதியை எல்லோருக்கும் நெறிப்படுத்துங்கள். பல்வேறு குறைகள் இருக்கின்றன; அந்தக் குறைகளையெல்லாம் களைந்தெறிய வேண்டுமென்று கேட்டு, இந்த ஆளுநர் உரை என்பது ஒட்டுமொத்த

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், மக்களின் வளர்ச்சிக்கும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லை என்பதைச் சொல்லி அமர்கிறேன். நன்றி.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010 ஆம் ஆண்டில் நம்முடைய ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்திற்கு உவந்தளித்த உரையின்மீது நடக்கின்ற விவாதத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கலந்துகொண்டு, எங்கள் கருத்துகளைப் பதிவு செய்ய வாய்ப்புத் தந்த தங்களுக்கும், சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அண்ணன் சுதர்சனம் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆங்கிலப் புத்தாண்டு பிறந்துவிட்டது; தமிழ்ப் புத்தாண்டு பிறக்க இருக்கிறது. இந்த நல்ல நேரத்தில் பேரவைத் தலைவர் அவர்கள், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், நம்முடைய மரியாதைக்குரிய பேராசிரியர் அவர்கள், நம்முடைய துணை முதல்வர் அவர்கள், அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர், இந்த மன்றத்திலே இருக்கின்ற அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்கள், உறுப்பினர்கள் எல்லோருக்கும், காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக எங்கள் நெஞ்சம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துகளை, தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

“கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத
மனைவியும் தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும்
ஒருதுன்ப மில்லாத வாழ்வும்”

2010 ஜனவரி 11] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

இந்தப் புத்தாண்டில் நம்முடைய தமிழ் மக்களுக்கு வாய்க்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்சி தன்னுடைய நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 நாட்களாக இந்த மாமன்றத்திலே இங்கேயிருக்கின்ற அரசியல் கட்சிகளினுடைய தலைவர்கள், உறுப்பினர்கள் ஆளுநர் உரையின் மீதான தங்கள் கருத்துகளைப் பதிவு செய்திருக்கிறார்கள். பொதுவாக, தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசினுடைய நான்காவது ஆண்டு என்பது சற்றுச் சிரமமான ஆண்டு. நிதியாதாரங்கள் குறைந்து போகும்; அரசு நிருவாகம் சற்றுச் சோர்ந்திருக்கும்; புதிய திட்டங்கள் எவையும் இருக்காது; புதிய முயற்சிகள் எவையும் இருக்காது; இதுதான் ஒரு சராசரி அரசினுடைய செயல்பாடாக இருக்கும். அதைப்போலவே மனிதனுக்குக்கூட வயதாக, வயதாக உணர்வுகள் மங்கிப் போகும்; உற்சாகம் குறைந்துவிடும்; கற்பனைகள் வறண்டுவிடும்; ஆற்றல், செயல்திறன் குறைந்து போகும்; இது ஒரு சராசரி மனிதனுடைய செயல்பாடு. ஆனால் இந்த ஆளுநர் உரையின்மூலம் நமது அரசு இது ஒரு சராசரி அரசு அல்ல என்பதை நிரூபித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய முதலமைச்சர் அவர்களும், தான் ஒரு சராசரி மனிதன் அல்ல என்பதை நிரூபித்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்தாலி நாட்டினுடைய புகழ் பெற்ற கலைஞன், உலகம் முழுவதும் வியந்து போற்றுகின்ற ஒப்பற்ற காவியங்களை, ஓவியங்களை வரலாற்றுக்குத் தந்து, உலக அதிசயங்களாக அவற்றைப் பரிணமிக்க வைத்த, அந்த மாபெரும் கலைஞன் தன்னுடைய 83-வது வயதிலே, ரோமானியப் பேராலயத்திலே உட்கார்ந்துகொண்டு ஒரு பெரிய வரலாற்றுப் புகழ்மிக்க ஓவியத்தை எழுதிக்கொண்டிருக்கிறான். ஓவியக் கல்லூரி மாணவர்கள் அருகே இருந்து பார்க்கிறார்கள்; அந்த கலைஞனைப் பார்த்து, "உங்களுடைய படைப்புகளிலே இதுதான் சிறந்த படைப்பா?" என்று ஒரு மாணவன் கேட்கிறான். அவன் ஒரு நிமிடம் அந்த மாணவனைத் திரும்பப் பார்த்துக் கேட்கிறான். "Do you ask me, is this the best of my creations?" என்னுடைய படைப்பிலே இதுதான் உயர்ந்ததா என்று கேட்கிறாயா?" என்றான். ஒரு நிமிடம் விட்டுவிட்டு, "இல்லை, it is yet to come, அது இனிமேல்தான் வரப் போகிறது" என்று பதில் சொல்கிறான். 83 வயதிலே ஓவியத்தைத் தீட்டிக் கொண்டிருக்கின்ற அந்தக் கலைஞன் சொல்கிறான், "The

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2010 ஜனவரி 11

best of me is yet to come." என்று. "என்னுடைய மிகப் பெரிய திறமை இனிமேல்தான் வெளியே வரப்போகிறது" என்று சொல்கிறான்.

நான் முதல்வரைப் பார்த்தவுடன் அதைத்தான் நினைக்கிறேன். எந்தத் திட்டத்தை உங்களது சிறந்த திட்டம் என்று நீங்கள் சொல்வீர்கள்? ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி தந்த திட்டத்தைச் சிறந்த திட்டம் என்று சொல்வீர்களா? தமிழகத்திலே இருக்கின்ற உழவர்களுக்கெல்லாம் விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்ததைச் சிறந்த திட்டம் என்று சொல்வீர்களா? தமிழகத்திலே இருக்கின்ற ஒவ்வொரு குடும்பத்திற்கும் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கினீர்களே, அதைச் சிறந்த திட்டம் என்று சொல்வீர்களா?

விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கினீர்களே, அதைச் சிறந்த திட்டம் என்று சொல்வீர்களா? 'கலைஞர் உயிர் காக்கும் திட்டம்' என்று தமிழகத்தினுடைய மூலைமுடுக்கெல்லாம் இருக்கின்ற ஏழை, எளிய மக்களுக்கு உயிர்ப் பாதுகாப்பு தந்திருக்கின்றீர்களே, அதைச் சிறந்த திட்டம் என்று சொல்வீர்களா? அரசுப் புறம்போக்கு நிலங்களில் குறைந்தபட்ச குடியிருப்புக் காலம் 5 வருடங்கள் இருந்ததை 3 வருடங்கள் என்று மாற்றி, 3 வருடங்கள் குடியிருந்தவனுக்கெல்லாம் பட்டா வழங்குகிறேன் என்று சொன்னீர்களே, அதைச் சிறந்த திட்டம் என்று சொல்வீர்களா? இப்போது 21 இலட்சம் குடிசை வீடுகளை மாற்றி, கான்கிரீட் வீடுகளைக் கட்டித் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறீர்களே, அதைச் சிறந்த திட்டம் என்று சொல்வீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், உங்களிடம் நான் எது சிறந்த திட்டம் என்று இப்போது கேட்டால் நீங்கள் சொல்வீர்கள், அது அடுத்த ஆண்டு வரும் என்றுதான் சொல்வீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு நாட்களிலே இங்கே பல்வேறு அரசியல் கட்சி உறுப்பினர்கள் தங்கள் உரைகளைப் பதிவு செய்தார்கள். பாராட்ட மனம் இருந்தவர்கள் பாராட்டினார்கள்; பாராட்டத் தகுதி உள்ளவர்களும் பாராட்டினார்கள். சிலர் சொன்னார்கள், இந்த ஆளுநர் உரை, மத்திய அரசுக்கு மாநில அரசு விடுகின்ற சவால்; கலைஞருடைய அரசு, காங்கிரஸ் அரசுக்குத் தருகின்ற எச்சரிக்கை என்று. மாநிலத் தொகுப்புக்கு அதிக நிதி கேட்டால் அதை மத்திய அரசை மிரட்டுகின்ற தொனி என்றெல்லாம்கூட இந்த அவையிலே

2010 ஜனவரி 11] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

பேசப்பட்டது. விலைவாசி உயர்வுக்காக மத்திய அரசு, மாநில அரசுகள் தங்கள் சுண்டு விரலைக்கூட அசைக்கவில்லை என்று பேசினார்கள். அதிலும்கூட என்னுடைய அன்பிற்குரிய சகோதரி, மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவி செல்வி பாலபாரதி அவர்கள் பாராட்டுகின்றபோதுகூட, ஒரு வகை வைத்துப் பாராட்டினார்கள். மத்திய அரசு, மகாத்மா காந்தி வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திலே 80 ரூபாய் சம்பளத்தை 100 ரூபாயாக உயர்த்தியது. உயர்த்தியதைச் சொல்லிவிட்டு, அப்படி உயர்த்திய மத்திய அரசைப் பாராட்டவில்லை. அதற்காக முயற்சிகள் எடுத்துக்கொண்ட மாநில அரசைப் பாராட்டுகிறேன் என்று சொன்னார்கள். நாங்கள் அவர்களைப் புரிந்துகொள்கிறோம். இன்று இந்திய அரசியலுக்கு ஏற்பட்டிருக்கின்ற மிகப் பெரிய சோகம் என்னவென்று சொன்னால், சில அரசியல் கட்சிகள் நம்மைப் புரிந்துகொள்ளவில்லை என்பதைவிட அவர்களையே அவர்கள் இன்னும் புரிந்துகொள்ளவில்லை என்பதுதான். (மேசையைத் தட்டும் ஒலி) நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலினுடைய முடிவுகள் அவர்களுடைய கண்களைத் திறக்கும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். மதச்சார்பற்ற அரசியலுக்கு வழி சேர்ப்பதற்காக, வலு சேர்ப்பதற்காக, அவர்கள் தாங்கள் செய்த தவறுகளிலிருந்து பாடங்களைப் படித்துக்கொள்வார்கள் என்று நாம் மட்டும் எதிர்பார்க்கவில்லை, இந்த நாடு எதிர்பார்த்தது. ஆனால், தான் செய்த தவறுகளிலிருந்து பாடங்கள் படிக்கவில்லையென்று சொன்னால், வரலாறு அவர்களை எச்சரிக்கிறது என்பதை மட்டுமே இந்த அவையிலே சொல்லி, இதோடு நான் நிறுத்திக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விலைவாசி உயர்வு இல்லை என்பது மத்திய அரசினுடைய வாதம் அல்ல. காங்கிரஸ் கட்சியினுடைய வாதம் அல்ல. இந்த தேசத்தினுடைய பிரதமரே ஏழையெளிய மக்கள் பயன்படுத்தக்கூடிய உணவுப் பொருட்களுடைய விலை 20 விழுக்காடு கூடியிருக்கிறதென்பதை மிக பகிரங்கமாக, மிக தைரியமாக ஒத்துக்கொண்டிருக்கிறார். அதுதான் முதலில் பேராண்மை. விலைவாசி உயர்வு இல்லை என்று காங்கிரஸ் கட்சியும் சொல்லவில்லை. மத்திய அரசும் சொல்லவில்லை; மாநில அரசும் சொல்லவில்லை. ஆனால், அதற்காக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்பதைச் சுட்டிக்காட்ட வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறதென்பதையும் நான் மறுக்கவில்லை. ஏனென்றால், ஆளுகின்ற பொறுப்பிலே இருக்கின்ற

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2010 ஜனவரி 11

மத்திய அரசும், மாநில அரசும் அதற்கான பதில்களை இந்த நாட்டு மக்களுக்கும் இங்கே வீற்றிருக்கின்ற எதிர்க்கட்சிகளுக்கும் சொல்லித்தான் ஆகவேண்டும்.

உதாரணமாக நான் சொல்கிறேன். இதுவரை மத்திய அரசு என்ன செய்திருக்கிறது? நேற்றுகூட நம்முடைய பிரதான எதிர்க்கட்சியினுடைய உறுப்பினர் இங்கே பேசுகின்றபோது—சகோதரர் திரு. ஜெயராமன் என்று எண்ணுகிறேன்—ஒவ்வொரு பொருளினுடைய விலையையும் பட்டியல் போட்டுக் காட்டினார். (குறுக்கீடுகள்) மன்னிக்கவும், திரு. அக்ரி கிருஷ்ணமூர்த்தி அவர்கள். அரிசி விலை ஒரு ரூபாய்; பருப்பு விலை என்ன? அரிசி விலை ஒரு ரூபாய்; சர்க்கரை விலை என்ன? அரிசி விலை ஒரு ரூபாய், எண்ணெய் விலை என்ன என்று கேட்டு, ஒரு பெரிய பட்டியலையே இங்கு வாசித்தார். இதிலே ஒன்று சொல்லவேண்டும். மத்திய, மாநில அரசுகளினுடைய கைகளில் என்ன சக்தி இருக்கிறதோ அதை முழுமையாகப் பிரயோகித்திருக்கிறோம். அரிசியினுடைய விலையைக் கட்டுப்படுத்துவதும், கோதுமையினுடைய விலையைக் கட்டுப்படுத்துவதும் மத்திய, மாநில அரசுகளுடைய கைகளிலே இருக்கின்றன. ஆனால், சர்க்கரை, எண்ணெய், பருப்பு இவைபோன்ற பொருட்கள், இன்று இந்தியாவிற்கு முழுமையாக இறக்குமதி செய்யவேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றபோது அவற்றின் விலையை எப்படிக் கட்டுப்படுத்த முடியும் என்கிற கேள்வி உள்ளது. கேள்வி கேட்க உரிமையிருக்கின்ற உங்களுக்கு அதற்கான ஆலோசனை சொல்ல வேண்டிய கடமையும் இருக்கிறது. (குறுக்கீடு) நான் சொல்கிறேன். ஆட்சியிலே இருக்கின்ற நாங்கள் என்ன செய்தோம் என்று கேட்கிறீர்கள்? நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-30

சர்க்கரை விலையை மட்டும் எடுத்துக்கொள்ளுங்கள். சர்க்கரை விலையைக் கட்டுப்படுத்துவதற்கு கடந்த 25 நாட்களிலே மத்திய அரசு எடுத்த நடவடிக்கை என்னவென்று தெரியுமா? முதலிலே they have zeroed down the import duty. மத்திய அரசு தன்னுடைய சக்திக்குட்பட்ட விதத்திலே சர்க்கரை இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட தீர்வை அனைத்தையும் இரத்து செய்திருக்கிறது. அதுமட்டுமல்ல, it has cancelled all the export obligations. நாம் ஏற்றுமதி செய்ய வேண்டிய அத்தனை கடமைகளையும் அது இரத்து செய்திருக்கிறது. அதுமட்டுமல்ல, bulk consumers, Diet Pepsi, Coke போன்ற மிகப்

2010 ஜனவரி 11] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

பெரிய நிறுவனங்கள் சர்க்கரையை அதிக அளவிலே ஏற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் அதைப் பயன்படுத்துகிறார்கள். அவர்களுக்கு மத்திய அரசு ஓர் உச்சபட்ச நிலைமையை நிர்ணயித்திருக்கிறது—ceiling limit. இவை அவ்வளவும் கடந்த 20 நாட்களிலே நடந்திருக்கிறது

பிரேசில் நாட்டிலிருந்து சர்க்கரையை இறக்குமதி செய்வதற்கான உத்தரவை மத்திய அரசு பிறப்பித்திருக்கிறது. ஆனால் என்ன சோகம் என்று சொன்னால், இன்று பிரேசிலிலே சர்க்கரையினுடைய விலை, இந்தியாவிலே இன்று விற்கிற விலையைவிட அதிகம். இவ்வாறு, பாமாயிலினுடைய விலையை மத்திய அரசு கட்டுப்படுத்த முடியாது. துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பினுடைய விலையை மத்திய அரசு கட்டுப்படுத்த முடியாது. ஆகவேதான், எதைக் கட்டுப்படுத்த முடியுமோ அதைச் செய்து, அரிசியை ஒரு ரூபாய்க்குக் கொடுக்கிறோம். கோதுமையை எவ்வளவு குறைத்துக் கொடுக்க முடியுமோ அவ்வளவு குறைத்துக் கொடுக்கிறோம். இதை நான் எதற்குச் சொல்கிறேன் என்று சொன்னால், ஆட்சியையும், அதிகாரங்களையும் கையிலே வைத்துக்கொண்டிருக்கின்றவர்கள், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டிலே ஏழையெளிய மக்கள் விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக எடுக்கின்ற முயற்சி இது. இன்னும் ஒன்று சொல்கிறேன். இந்த நாட்டிலே இன்று பற்றாக்குறை இல்லை. எந்தப் பொருளும் இல்லை என்ற நிலை இல்லை. ஒவ்வொரு பெரிய, சூப்பர் மார்க்கெட் என்று சொல்லக்கூடிய கடைகளிலோ, ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கிற சாதாரண பெட்டிக் கடையிலோ பார்த்தால்கூட . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) செல்வி கே. பாலபாரதி, சொல்லுங்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை விலையினுடைய உயர்வைக் கட்டுப்படுத்த முடியாது என்று சொன்னார்கள். மத்திய அமைச்சர் திரு. சரத் பவார் அவர்கள், மத்திய அமைச்சராக மட்டும்தான் இருக்கிறாரா? பல சர்க்கரை ஆலைகளுக்கு அதிபராகவும் இருக்கிறார். அது இந்த நாடறிந்த உண்மை. பிறகு எப்படி சர்க்கரை விலை குறையும்? இந்த நாட்டினுடைய சர்க்கரையை ஏற்றுமதி செய்துவிட்டு, அங்கிருந்து இறக்குமதி செய்யக்கூடிய அந்த உலகமயக் கொள்கையை இவர்கள் கடைப்பிடிப்பதனால்தான் இன்று

சர்க்கரை விலை உயர்ந்து கொண்டிருக்கிறது. நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் கற்றுக் கொடுத்த பாடத்தை நாங்கள் கற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறார். ஆனால், காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்ற பின்னர், இந்த விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரு துரும்பைக்கூட அசைக்கவேயில்லை. இன்றைக்கு அரிசியிலிருந்து, உப்பிலிருந்து, சகல விதமான பொருட்களின் விலைகளும் உயர்வதற்கு யார் காரணம்? மத்தியில் இருக்கக்கூடிய ஆட்சி கடைப்பிடிக்கக்கூடிய கொள்கைதான் காரணம். அதை விட்டுவிட்டு, விலைவாசி உயர்வை நியாயப்படுத்துவதுபோன்று, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி பாலபாரதி, உட்காருங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, it is not a point of order. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. பாண்டுரங்கன், no point of order. உட்காருங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அன்பிற்குரிய சகோதரி பாலபாரதி அவர்கள், மத்திய அரசு இதுவரை எதுவும் செய்யவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். மத்திய அரசு (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், I am not yielding. நீங்கள் பேசும்போது சொல்லுங்கள். I am not yielding. (குறுக்கீடு) I am not yielding,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த நேரத்திலே, இந்த மன்றத்திலே, (குறுக்கீடு) I am not yielding, Sir. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிவபுண்ணியம், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, controversy ஒன்றும் இல்லை. (குறுக்கீடு)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பாண்டுரங்கன், நீங்கள் பேசும்போது சொல்லுங்கள். திரு. வை. சிவபுண்ணியம், சொல்லுங்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகிறபோது, சர்க்கரை விலை குறித்த விஷயங்களை இப்பொழுது சொன்னார்கள். அவ்வாறு சொல்கிறபோது, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டிய அவசியம் இருக்கிறது என்ற காரணத்தையும் சொல்லிவிட்டு, விலையைக் கட்டுப்படுத்த இயலாத சூழ்நிலை இருக்கிறது; உள்ளூருக்குள் இருக்கின்ற விஷயங்களை மட்டும்தான் நாங்கள் கட்டுப்படுத்த முடியும் என்று சொல்லி, அதற்குரிய ஆலோசனை என்ன என்றும் அவர் கேட்டார். அதனால், நான் சொல்வது என்னவென்றால், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யாமல் இருக்க முடியாது. அதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், உள்நாட்டுத் தேவைகளை நிறைவு செய்கின்ற வகையில் வாய்ப்புகள் இருக்கின்றபொழுது, கரும்பு உற்பத்தி செய்வதற்குரிய முயற்சி என்ற அடிப்படையிலே, மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கை என்ன? அந்த விவசாயிகளை ஊக்கப்படுத்துவதற்கான முயற்சி ஏதாவது உண்டா? வறட்சி என்ற காரணத்தைக் காட்டிவிட்டுப் போகாமல், இங்கேயே, அதிக உற்பத்தியைச் செய்வதற்குரிய, சர்க்கரைக்காக, பருப்பிற்காக, எண்ணெய்க்காக, எல்லா வித்துக்களையும் உற்பத்தி செய்வதற்குரிய வாய்ப்புகள் ஏராளமாக இருக்கிறபொழுது, அவற்றை விடுத்துவிட்டு, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் என்ன? உள்நாட்டிலே கோதுமைக்கு 1,600 ரூபாய் விலையைக் கொடுத்துவிட்டு, வெளிநாட்டிலிருந்து 1,800 ரூபாய்க்கு இறக்குமதி செய்கிறீர்கள். இப்படி செய்கிற காரணத்தினாலேதான் விலைவாசி ஏறுகிறதே தவிர, இதைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய அரசாங்கத்திடம் திட்டமும் இல்லை, கொள்கையும் இல்லை.

முற்பகல் 10-35

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பொதுவுடைமைக் கட்சிகளைச் சார்ந்த தோழர்கள் இங்கே சில கருத்துகளைப் பதிவு செய்திருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துகளுக்கு மதிப்புக் கொடுத்துப் பழக்கப்பட்டவர்கள்தான் நாங்கள். அவர்களை நான் ஒன்று கேட்கிறேன்; விவசாயிகளுக்குக் கூடுதல் விலை வேண்டுமென்று

கேட்கின்ற கோரிக்கையை அவர்கள் வைக்கிறார்கள். ஒரு பருவ காலத்திலே கோதுமை நிறைய விளைகிறது. அப்படி நிறைய விளைகிற கோதுமையை அரசு கொள்முதல் செய்து பெரிய கிட்டங்கிகளில் அடுக்கி வைக்கிறது. அடுக்கி வைக்கப்பட்ட கோதுமைக்கு அழிவில்லை. நிறைய விளையும்பொழுது அதை வாங்குவதற்கு யாரும் இல்லை. அடுத்த ஆண்டு மழை பெய்துவிட்டால், வருகின்ற கோதுமையை எங்கே வைப்பது என்கிற நிலை வருகின்றபொழுது, இருக்கின்ற கோதுமையை மக்கள் உபயோகத்திற்குக் கொடுத்தால்தான் அடுத்து கோதுமையை வாங்கி வைக்க முடியும் என்ற நிலையிலே, விளைந்து கிட்டங்கிகளிலே ஏராளமாக இருக்கின்ற கோதுமையை ஏற்றுமதி செய்ய அரசு முடிவெடுக்கிறது. ஆனால், அதற்கடுத்த பருவமழை பொய்த்துவிடுகிறது. பருவமழை பொய்த்துவிட்டவுடனே, நாம் எதிர்பார்த்த விளைச்சல் வராததன் காரணமாக, அந்த நிலையை சீர்செய்வதற்காக, அந்தக் குறைவைச் சரிக்கட்டுவதற்காக, மத்திய அரசு மீண்டும் இறக்குமதி செய்ய முடிவெடுக்கிறது. இதுதான் ஒரு நிருவாகத்தினுடைய சிறந்த யுக்தியாக இருக்க முடியும். விளைந்த கோதுமையை எத்தனை ஆண்டுகள் கிட்டங்கிகளிலே வைத்திருக்க முடியும்? விவசாயிகளுக்கு அதிக விலை கொடுக்க வேண்டும் என்பதற்காக, விளைந்த கோதுமையை அடுத்த பருவமழை பெய்யும் என்ற நம்பிக்கையிலே ஏற்றுமதி செய்கிறோம். நீங்கள் காலையிலே 10 மணிக்கு என்ன சொல்வீர்கள்? பாலின் விலையைக் குறைக்க வேண்டுமென்று சொல்வீர்கள், மாலை ஆறு மணிக்குப் போய் உற்பத்தியாளருக்கு விலையைக் கூட்டு என்று சொல்வீர்கள்; காலையிலே ஆறு மணிக்கு நெல் விலையைக் கூட்ட வேண்டுமென்று சொல்வீர்கள், மாலை ஆறு மணிக்கு அரிசி விலையைக் குறைக்க வேண்டுமென்று சொல்வீர்கள்; போக்குவரத்துக் கட்டணத்தைக் கூட்டக்கூடாது என்று காலையிலே ஆறு மணிக்குப் பேசுவீர்கள், மாலையிலே ஆறு மணிக்கு ஊழியர்களுக்கு அதிக போனசும், அதிகச் சம்பளமும் கொடுக்க வேண்டுமென்று பேசுவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

திரு. கு. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் உரையை முடிக்கட்டும், செல்வி கே. பாரபாரதி உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No, no. அப்படி இடையிலே, இடையிலே குறுக்கிட்டுப் பேசக்கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடு) இடையிலே குறுக்கிட்டுப் பேசக்கூடாது, உட்காருங்கள். Not allowed. (குறுக்கீடு) கொஞ்சம் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், சத்தம் போடாதீர்கள். செல்வி பாலபாரதி, அப்படி குறுக்கிட்டுப் பேசாதீர்கள். அடிக்கடி எழுந்திருக்காதீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் உரையாற்றிக் கொண்டிருக்கிறார். இன்னோர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்பொழுது இடையிலே பேசக்கூடாது. திரு. பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் பேசுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதை எதற்காகச் சொல்கிறேனென்று சொன்னால், கோரிக்கை வைப்பது மட்டும்தான் உங்கள் தொழில். ஆனால், கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற இடத்திலே நாங்கள் இருக்கின்ற காரணத்தினால், எங்களுக்கு 'மாவும் குறையக்கூடாது, மக்கள் முகமும் வாடக்கூடாது.' உற்பத்தியாளருக்கு விலை கொடுக்கவும் வேண்டும், உபயோகிப்பாளருக்குக் குறைந்த விலையிலே கொடுக்கவும் வேண்டும். இந்த ரசவாத வித்தையைச் செய்வதிலே இன்று மத்திய, மாநில அரசுகள் நெஞ்சை நிமிர்த்தி தங்களைப் பாராட்டிக்கொள்ளலாம்; அந்தரங்க சுத்தியோடு பாராட்டிக்கொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

இதை நான் எதற்காகச் சொல்கிறேனென்று சொன்னால், விலைவாசி உயர்வைப்பற்றிய அக்கறை எங்களுக்கு நிறைய இருக்கிறது. அடுத்த வாரம்கூட நம்முடைய மாண்புமிகு பிரதமர் அவர்கள் முதலமைச்சர்களுடைய கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார்கள். கடந்த காலத்திலே, சேமிப்பு வைப்பதற்கு, stock வைப்பதற்கு ஓர் உச்சவரம்பை வைத்து கட்டுப்படுத்தக்கூடிய சட்டம் தமிழகத்திலே இருந்தது. அந்தச் சட்டங்களையெல்லாம் இப்பொழுது நாம் இரத்து செய்துவிட்டோம். மீண்டும் அந்தச் சட்டங்களை நாம் இயற்ற வேண்டும்.

விலைவாசி உயர்வு என்பது அரசியல் பிரச்சினை அல்ல; அது பொது மக்களுடைய ஜீவாதார பிரச்சினை. பற்றாக்குறை

இருந்தால்கூட பதற்றம் அடையலாம்; ஆனால், பொருட்கள் சந்தையிலே இருக்கின்றன. ஏழைகள் வாங்குகிற இடத்திலே அந்தப் பொருட்கள் இல்லையென்பது இந்தியப் பொருளாதாரத்திற்கு மட்டுமல்ல; இன்று உலகப் பொருளாதாரத்தில் ஏழைகளுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய மிகப் பெரிய சோகம். வளர்ச்சி, தொழில்நுட்பம், சந்தையிலே இருக்கின்ற பொருட்களுடைய அசைவுகள், கண்டம் விட்டு கண்டம், நாடு விட்டு நாடு, நகரம் விட்டு நகரம், மணிக்கணக்கிலே, வினாடிக் கணக்கிலே பொருட்களை நகர்த்தக்கூடிய தொழில்நுட்பம் வந்த காரணத்தினால், எங்கு தேவைகள் அதிகமாக இருக்கின்றனவோ அங்கே பொருட்கள் ஓடிப் போகின்றன. வாங்குகிற சக்தியை மனிதன் கட்டுப்படுத்த முடியவில்லை. அரசு இடையிலே திண்டாடிக் கொண்டிருக்கிறது. இதுதான் விலைவாசியைப் பொறுத்த அளவில் இன்று இருக்கின்ற நிலைமை.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிக அற்புதமான திட்டங்களை இந்த ஆளுநர் உரையிலே தந்திருக்கிறார்கள். 21 இலட்சம் வீடுகள் என்பது மத்திய அரசு மட்டுமே நினைத்துப் பார்க்கக்கூடிய ஒரு திட்டம். ஆயிரம் வீடுகள், இரண்டாயிரம் வீடுகள், பத்தாயிரம் வீடுகள், ஐம்பதாயிரம் வீடுகள் அல்ல, 21 இலட்சம் வீடுகள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இதில் மிகுந்த தன்னம்பிக்கை இருக்கிறது. இந்த ஓர் ஆண்டில் மட்டுமல்ல; அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கும் சேர்த்து திட்டம் போடக்கூடிய அளவிற்குத் தன்னம்பிக்கை இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தன்னம்பிக்கைக்கு நான் தலை வணங்குகிறேன்.

காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஓர் ஆலோசனையை நான் சொல்ல விரும்புகிறேன். நண்பர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள்கூட நேற்று இதுகுறித்துப் பேசும்போது சொன்னார்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே அமைந்துள்ள மத்திய அரசினுடைய திட்டங்களைக் கண்காணிக்கின்ற குழுவிலே நாங்கள் பேசுகின்றபோதுகூட இதுகுறித்துப் பேசினோம். 60 ஆயிரம் ரூபாய் மதிப்பில் ஒரு வீடு அமைப்பது என்பது மிகவும் சிரமமான ஒரு காரியம். நம்முடைய குடிசை மாற்று வாரியத் துறை அமைச்சர் அவர்கள்கூட, இப்போது அவர்கள் அமைக்கின்ற வீடுகளைக்கூட, 275 சதுர அடியில்

2010 ஜனவரி 11] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

அமைக்கிறார்கள். 275 சதுர அடியில்தான் ஒரு குடிசை வீடு இப்போது அமைத்திட வேண்டும் என்பதை அரசே திட்டமிட்டு, ஒரு குடிசை வீடு என்பது குறைந்தபட்சம் 275 சதுர அடியாக இருக்க வேண்டுமென்கிற கணக்கு அரசாங்கத்திடமே இருக்கிறது. அந்த 275 சதுர அடியில் ஒரு சாதாரண மனிதன் கட்டினால், ஒரு சதுர அடிக்கு ரூ.600/-லிருந்து ரூ.700/- வரை செலவாகும். அரசு கட்டினால் ரூ.1,000/- ஆகும். அப்படியானால் இரண்டே முக்கால் இலட்சம் ரூபாய் செலவாகிவிடுகிறது. அந்த அளவிற்குத் தாருங்கள் என்று நான் கேட்கவில்லை. ஆனால், அதே நேரத்திலே 60 ஆயிரம் ரூபாய் என்பதை குறைந்தபட்சம் ரூ.1,20,000 என்கிற அளவிற்கு உயர்த்திட வேண்டும். நான் இதில் முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். திட்ட காலம் ஆறு ஆண்டுகள் என்று சொல்கிறீர்கள். அந்த ஆறு ஆண்டுகளை 10 ஆண்டுகள் என்றுகூட நாம் வைத்துக்கொள்ளலாம். ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஆயிரம் வீடுகள் ஒரு வருடத்திற்கு என்று திட்டமிட்டாலும்கூட, 234 சட்டமன்ற தொகுதிகளுக்கு 2 இலட்சத்து 34 ஆயிரம் வீடுகள். 10 ஆண்டுகளிலே, 23 இலட்சம் வீடுகள் என்று வரும்போது அரசுக்கும் சுமை இலகுவாக இருக்கும். அதேசமயத்தில் நீங்கள் கட்டிக் கொடுக்கின்ற வீடுகள் காலத்தால் அழியாத வீடுகளாக வாழ்நாள் உள்ளளவும் என்றும் அவர்கள் உங்களை நன்றியோடு நினைத்துப் பார்க்கக்கூடிய வீடுகளாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, கலைஞர் காப்பீட்டுத் திட்டம். உங்கள் சிந்தனையில் உதித்த அந்தத் திட்டத்தினுடைய தாக்கம், இன்று தமிழகத்தினுடைய மூலை முடுக்கெல்லாம் மக்கள் மகிழ்ச்சியுடன் அந்தத் திட்டத்திற்காகப் புகைப்படம் எடுப்பதற்காகக் குடும்பத்தோடு திருவிழாவிற்கு வருவதுபோல வருகின்ற காட்சியை நான் பார்த்தேன். அந்தத் திட்டம் இன்று கிராமங்களில் இருக்கிற ஒவ்வொரு குடிசை வீட்டினையும் சென்று அடைந்திருக்கிறது. அந்தத் திட்டத்தின் மிகப் பெரிய பின்பாடு என்னவென்று சொன்னால், "Government has moved into a phase where it has become a premium provider for Insurance and not the health scheme provider" அதுதான் இன்று உலக வங்கி ஆராய்ந்து நம்மைப் போல வளர்ந்து வருகின்ற நாடுகளுக்கு, அரசுகளுக்குத் தருகின்ற ஆலோசனை என்னவென்றால், அரசு மருத்துவ வசதிகளை நேரடியாகக் கொடுப்பதைவிட அங்கே இருக்கின்ற காப்பீட்டுக் கழகங்களுக்குப் பிரிமியம் கட்டுகின்ற பணியை அரசு செய்யவேண்டுமென்கிற அந்த

உயர்ந்த பொருளாதாரச் சிந்தனையை நீங்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறீர்கள். அதிலே சில இடங்களிலே சில குறைபாடுகள் இருக்கின்றன. உதாரணமாக, இதய நோய் உள்ளவர்களுக்கு stent வைக்கிறார்கள். அந்த stent வைக்கின்ற அந்தக் குறிப்பிட்ட திட்டத்திற்கு இப்போது இருக்கின்ற அரசினுடைய ஏற்பாட்டின்படி ஐந்து நாட்களோடு அந்த சிகிச்சை என்பது முடிந்துவிடுகிறது. ஐந்து நாட்களுக்குப் பிறகு அந்த stent வைக்கப்பட்ட நோயாளிக்கும் அந்த stent-ஐப் பொருத்திய அந்த மருத்துவமனைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஆனால், மருத்துவ விஞ்ஞானப்படி, stent வைத்தவர்கள் குறைந்தபட்சம் ஆறு மாதத்திற்காவது அந்த stent அழுகாமல் இருப்பதற்காக அதற்கான மாத்திரைகளை அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால், அதற்கான வசதி இந்தத் திட்டத்தில் இல்லை. ஆகவே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுவது, அதாவது follow-up actions, அறுவை சிகிச்சை முடிந்த பிறகு நடக்க வேண்டிய மருத்துவ சிகிச்சை முறைகளுக்கும் இந்தத் திட்டத்திலே வழிவகை செய்யப்படல் வேண்டும்.

அதைப்போல, இப்போது மத்திய அரசு N.R.H.M. - National Rural Health Mission என்கிற அந்தத் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டு மட்டும் 700 கோடி ரூபாய் அளவிற்கு நிதி கொடுத்திருக்கிறது. விலையுயர்ந்த கருவிகளை வாங்கிக் கொடுத்திருக்கிறீர்கள். நான் அதற்காக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். புதிய கட்டடங்கள், புதிய மருத்துவக் கருவிகள், Scan, Digital Mammogram, Ventilators இவைபோன்ற கருவிகளை வாங்கிக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், மருத்துவத் துறைக்கு இதில் ஏற்பட்டிருக்கிற சோகம் என்னவென்று சொன்னால், அந்தக் கருவிகளைப் பயன்படுத்தக்கூடிய மருத்துவர்கள் பல்வேறு மருத்துவமனைகளிலே இல்லை. ரூபாய் 25 இலட்சம், 30 இலட்சம், ஒரு கோடி, இரண்டு கோடி எனப்போட்டு Scan machines வாங்கப்பட்டிருக்கின்றன. அந்த Scan machines-ஐ இயக்குவதற்குப் பயிற்சியும் கொடுக்கின்றீர்கள். ஆனால், பயிற்சி பெற்ற டாக்டர் என்ன செய்கிறார்? பயிற்சி முடிந்தவுடன் மறு ஊருக்கு transfer ஆகிப் போய் விடுகிறார். அதற்குப் பிறகு அந்த machine பயன்படுத்துவாரின்றி இருக்கிறது. உதாரணமாக, (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். நீங்கள் இறுதியில் சொல்லுங்களேன். கடையநல்லூர் மருத்துவமனை குறித்து

2010 ஜனவரி 11] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

நம்முடைய அமைச்சர் அவர்களை நான் பார்த்துக் கேட்டேன். நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் நான் ஒரு ventilator வேண்டுமென்று கேட்டேன். உடனே அமைச்சர் அவர்களும் ventilator கொடுக்க ஆணையிட்டார். ஆனால், அந்த ventilator-ஐப் பயன்படுத்துவதற்கான மருத்துவர்கள் அங்கே இல்லை. இந்தச் சூழ்நிலையை மாற்றி இந்த மருத்துவ வசதிகளை பல்லாயிரக்கணக்கான, நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களை, மத்திய, மாநில அரசுகள் முதலீடு செய்து வாங்கி வைத்திருக்கின்ற கருவிகளை எப்படி முறையாகப் பயன்படுத்துவது என்று பார்த்து, to take maximum advantage of those machineries, அதற்கு நம்முடைய (குறுக்கீடு) என்னுடைய நேரத்தில் குறுக்கிடாதீர்கள். . .

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி பொறுப்பேற்ற பிறகு புதிய மருத்துவர்களை நியமித்திருக்கிறோம். புதிய புதிய கருவிகள் வழங்கி, பயிற்சி பெற்ற டாக்டர்களைக் கொண்டு பயிற்சியில்லாத டாக்டர்களுக்குப் பயிற்சி கொடுக்க அங்கே டாக்டர்களை நியமனம் செய்திருக்கிறோம். ஒரு சில இடங்களில் டிரான்ஸ்பர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்களே சிபாரிசு கேட்கிறார்கள். இருந்தாலும், நாங்கள் முடியாது என்று மறுத்து, பயிற்சி பெற்ற டாக்டர்கள் ஓராண்டுக் காலம் அங்கே பணி செய்ய வேண்டுமென்று இப்பொழுது நிர்ணயம் செய்திருக்கிறோம். புதிய பணியிடங்களுக்கும் இப்பொழுது வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக மருத்துவர்களைத் தேர்வு செய்து கொண்டிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய Associated Chamber of Commerce and Industry of India என்று இந்தியாவிலே இருக்கின்ற நம்முடைய மிகப் பெரிய தொழில் முதலீட்டாளர்கள், மிகப் பெரிய தொழில் வல்லுநர்கள், வியாபாரப் பிரமுகர்கள் அவர்களுக்காக அமைக்கப்பட்டிருக்கின்ற அமைப்புகளிலிருந்து மத்திய அரசு கொடுத்திருக்கின்ற புள்ளிவிவரங்களைத் திரட்டி "Investment as a catalyst of inclusive

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2010 ஜனவரி 11

growth in Tamil Nadu" என்ற ஓர் அறிக்கையினை இந்த ஆண்டு ஜனவரி மாதத்திலே அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே, அவர்கள் அநேக செய்திகளை, நமக்குப் பயனுள்ள செய்திகளைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதைப் பார்த்திருப்பார்கள் என்று நான் எண்ணுகிறேன். அம்முதலீட்டாளர்கள் நம்முடைய அரசைப் பாராட்டுகிறார்கள். "ASSOCHAM appreciates Tamil Nadu for its success and vision of achieving balanced and inclusive growth. It opines that the State has the potential to achieve and sustain double digit growth rates without compromising on its objectives of inclusive and balanced growth. It makes the following suggestions in this regard" என்று சொல்லி 4, 5 ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்கள். கடந்த 2001 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரை நாம் நடந்து வந்த பொருளாதார முன்னேற்றப் பாதையைப் பார்க்கின்றபொழுது the services sector—சேவைத் துறையிலே நாம் மிக உன்னதமான வளர்ச்சியை, இந்தியாவிலேயே முதலாவதாக இருக்கின்ற வளர்ச்சியை அடைந்திருக்கிறோம்.

அதைப்போல, Manufacturing industries-ஐப் பொறுத்தவரையிலும் நாம் இந்திய சராசரியைவிட சற்று அதிகமாகவே சாதித்திருக்கிறோம். ஆனால், நமக்கு ஒரு மிகப் பெரிய எச்சரிக்கை மணி விவசாயத்திலே அடிக்கப்பட்டிருக்கிறது. கடந்த 2001 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை 0.6 சதவீதம் மட்டும்தான் நாம் விவசாயத்திலே வளர்ச்சியடைந்திருக்கிறோம். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதை நான் கொண்டுவர ஆசைப்படுகிறேன். இது இந்தியாவிலேயே மிக மிகக் குறைந்த விகித வளர்ச்சி என்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். Agriculture is the primary sector. இந்தியாவிலேயிருக்கின்ற மக்களுக்கு மட்டுமல்ல; தமிழகத்திலேயிருக்கின்ற மக்களுக்கும் வேலைவாய்ப்புக் கொடுப்பதற்கு விவசாயத்தைத் தவிர industry-யே இல்லையென்று சொல்லக்கூடிய நிலையிலே, விவசாயம் தமிழ்நாட்டிலே கடந்த 9 ஆண்டுகளாக 0.6 சதவிகிதம்தான் வளர்ந்திருக்கின்றது என்பது நாம் எல்லோரும் சற்று அமர்ந்து யோசித்துப் பார்க்கவேண்டிய மிகப் பெரிய கருத்து. வேளாண் துறையை அப்படி மெலிய, நலிய விட்டோமென்று சொன்னால், எதிர்காலத்திலே வேளாண் துறைக்கு மட்டுமல்ல; நம்முடைய உணவுப் பாதுகாப்புக்கே இது மிகப் பெரிய கேள்விக்குறியாக வந்து விடியும் என்கிற முக்கியமான கருத்தை பல தலைமுறைகளைப்

பற்றி சிந்திக்கின்ற நம்முடைய தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். வேளாண்மைத் துறைக்கு வலிவு சேர்க்க வேண்டிய எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுடைய அறிக்கையிலே செய்யப்பட்டிருக்கின்ற பரிந்துரைகளை இந்த அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப் போகிறதா என்பதையும் நான் அரசின் மூலமாக அறிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அளவில் வேளாண்மை வளர்ச்சி 2.6 சதவிதம்தான். ஆனால், தமிழ்நாட்டில்தான் 6.6 சதவிகிதம் என்பதை நான் இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.*

முற்பகல் 10-50

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களிடம் சரியான குறிப்புகள் இருக்கும் என்று சொன்னால், நான் திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஏனென்றால், அவர்களுக்கு இருக்கிற வசதி எனக்கு இல்லை. நான் பத்திரிகையிலே வந்த அந்த அறிக்கையினுடைய நகலைக் கையிலே வைத்திருக்கிறேன். அதிலே அவர்கள் இதைக் குறிப்பிட்டு எழுதி இருக்கிறார்கள். அதற்காக அந்தப் பகுதியை வேண்டுமானால் நான் வாசித்துக் காட்டுகிறேன்.* "Primary Sector contributed 11.4% of S.D.P. This sector grew by mere 0.6% in 8 years from March 2001 and the State achieved reasonable CIGR of 7% during the eight years between 2001 and 2008, but agriculture in Tamil Nadu has increasingly been a failing economy activity though the State has been one of the pioneers of industrial development and infrastructural development" *என்று உள்ளது. (குறுக்கீடு) தமிழ்நாடு பற்றித்தான் குறிப்பிடுகிறார்கள். நான் உங்களிடம் கொடுத்துவிடுகிறேன். நீங்கள் அந்த நிறுவனத்தைக் கூப்பிட்டே கேளுங்கள். அவர்கள் கடைசியில் சொல்லி இருக்கிறார்கள், மத்திய அரசு தந்த புள்ளிவிவரங்களை வைத்துதான் இது தயாரிக்கப்பட்டது என்றும் சொல்லி இருக்கிறார்கள். உங்களுடைய கவனத்திற்கு நான் அதைக் கொடுத்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பெருமைப்பட்டுக்கொள்கின்ற ஓர் அற்புதமான திட்டம், தகவல் அறியும் உரிமைச் சட்டம். மத்திய அரசு அந்தத் திட்டத்தை, சட்டத்தைக் கொண்டுவருவதற்கு

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2010 ஜனவரி 11

முன்பேயே தமிழ்நாட்டில் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே அமைந்த அரசு, அந்தச் சட்டத்தை நிறைவேற்றி, தமிழகத்திலே வைத்திருந்தது. ஆனால், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினுடைய முழுப் பரிணாமத்தையும் நம்முடைய அரசு அதிகாரிகள் புரிந்திருக்கிறார்களா என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. அவர்களுக்கு அதற்கான முழுமையான பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கிறதா என்கின்ற சந்தேகமும் எனக்கு இருக்கிறது. ஏனென்று சொன்னால், கடந்த சில மாதங்களாக "July 2009-Additional S.P. of Dharmapuri fined Rs.25,000/-; July 2009- Public Information Officer of Tamil Nadu Electricity Board fined Rs.25,000/-; October 2009-Mylapore Tahsildar was fined Rs.25,000/-; October 2009-Chennai Corporation was fined Rs.25,000/-; November 2009-Vandavasi Tahsildar was fined Rs.25,000/-" என்று செய்திகள் வந்துள்ளன.

அதுமட்டுமல்ல; இந்த ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கான விருதுகளைப் பெறுகின்ற அந்தத் தகுதிக்குக்கூட நம்முடைய தகவல் அறியும் உரிமை ஆணையம் வரவில்லை என்பது, our Commission was disqualified என்பது இன்னும் வருந்தத்தக்க ஒரு செய்தி. ஏனென்று சொன்னால், நீங்கள் கேள்வி கேட்டே வளர்ந்தவர்கள். தகவல்களைத் தெரிந்தே வளர்ந்தவர்கள். இந்த சாதாரண மக்களுக்குக்கூட, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களைப்போல, நாடாளுமன்ற உறுப்பினர்களைப்போல அரசாங்கத்திடம் தகவல் கேட்கக்கூடிய அந்த உரிமையை நம்முடைய சட்டம் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறது. அந்தச் சட்டத்தினுடைய பலனைத் தமிழக மக்கள் முழுமையாக அடைவதற்கான முயற்சிகளை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனிப்பட்ட கவனத்தோடு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த நேரத்திலே ஆளுநர் உரை மீதான விவாதம் நடக்கின்றபோது, கடந்த ஆண்டு நாம் நடந்து வந்த பாதை முழுவதையும் நாம் உற்றுப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த அவையிலே நான் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களை நெஞ்சாரப் பாராட்டாவிட்டால் என் உரையை நிறைவு செய்ததாக ஆகாது என்று கருதுகிறேன். கடந்த ஓராண்டில் அவர்கள் தமிழகத்தினுடைய பல்வேறு தலைநகரங்களுக்குச் சுற்றுப்பயணம் செய்தது மட்டுமல்ல; சுய உதவிக் குழுக்களை ஒரு மிகப் பெரிய இயக்கமாகவே அவர்கள் மாற்றித் தந்ததை நான் பார்த்தேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆயிரக்கணக்கான குழுக்களுக்கு,

2010 ஜனவரி 11] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

பல்லாயிரக்கணக்கான குழுக்களுக்கு, 2 மணி நேரம், 2½ மணி நேரம் அவர்கள் நேராக நின்று ஒவ்வொருவருடைய கையிலும் அவர்கள் அந்தக் கடன் உதவிகளை வழங்கியதை நான் பார்த்தேன். கடன் பெரிதல்ல, ஒரு பெண்மணி அவர்களிடம் சொல்லும்போது நானே பக்கத்தில் இருந்தேன். "ஐயா, நீங்கள் கொடுக்கின்ற இந்த 2 ஆயிரம் ரூபாய் பெரிதல்ல; ஆனால், தமிழகத்தினுடைய துணை முதலமைச்சர், இவ்வளவு நேரம் கால் கடுக்க நின்று என் கையிலே கொடுத்தீர்களே, அதுதான் எனக்குப் பெருமை" என்று அவர்கள் சொல்கின்றபோது.. *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைதியாக இருங்கள். திரு. சின்னசாமி, உங்களை கவனித்துக்கொண்டே இருக்கிறேன். நீங்கள் ரொம்ப அதிகமாகப் பேசுகிறீர்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேராக நின்று பார்த்ததால் அதைச் சொன்னேன். யார் சொல்லியும் கேட்டு நான் சொல்லவில்லை, எந்தப் பத்திரிகையிலும் படித்து நான் சொல்லவில்லை. அந்தப் பெண்மணி, என்னுடைய ஊரிலே, என்னுடைய மாவட்டத்திலே நான் அவர்கள் பக்கத்திலே இருக்கின்றபோது, அவர்கள் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட காரணத்தினால் அதை இந்த மன்றத்திலே பதிவு செய்வது நியாயமாக இருக்கும் என்று நான் மனசாட்சிப்படி நினைத்த காரணத்தினால் அதை இங்கே பதிவு செய்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு என்ன செய்தது என்கிற கேள்வியை இங்கே பிரதான எதிர்க்கட்சியைச் சார்ந்த நண்பர்களும், இங்கே இருக்கின்ற நம்முடைய இடதுசாரிக் கட்சிகளைச் சார்ந்த நண்பர்களும் கேட்டார்கள். கடந்த ஆண்டிலே மட்டும் மத்திய அரசு இந்த மாநில அரசிற்கு என்ன செய்திருக்கிறது என்பதைக் கோடிட்டுக் காட்டுகிற கடமை எனக்கு இருப்பதாக எண்ணுகிறேன்.

முற்பகல் 10-55

ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு மட்டும் 45,000 கோடி ரூபாய் மத்திய அரசு ஒதுக்கியதிலே கடந்த ஆண்டு 400 கோடி ரூபாய் வழங்கியது. இந்த ஆண்டு 500 கோடி ரூபாய் வழங்க இருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அதைப்போல, கிராமப்புற

சுகாதாரத் திட்டத்திற்கு கடந்த ஆண்டு 12,400 கோடி ரூபாய் மத்திய அரசினுடைய மொத்த ஒதுக்கீடு. அதிலே 800 கோடி ரூபாய் தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) சர்வ சிக்ஷா அபியான் திட்டத்திற்கு கடந்த ஆண்டு 16,000 கோடி ரூபாய் மொத்த ஒதுக்கீடு, அதிலே 700 கோடி ரூபாய் நமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே இன்னும் அதிகமாகச் சொல்லப்போனால், கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சி உறுப்பினராக இந்த அவையிலே இருந்தபோது அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்தார்கள். அவர்கள் முதன்முறையாகச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆளுநர் உரைமீது விவாதத்திலே பங்கேற்றபோது ஒரு கோரிக்கையை வைத்தார்கள். மத்திய அரசினுடைய முதலீடுகளிலே 10 விழுக்காடு என்றைக்கு தமிழகத்திற்கு வருகிறதோ அன்றுதான் நான் உண்மையிலேயே மன நிறைவு அடைவேன் என்று சொன்னார்.

என் அருமை நண்பர்களே, அந்தப் புள்ளிவிவரங்களை நான் இங்கே வைத்திருக்கிறேன். கடந்த ஆண்டிலிருந்து மத்திய அரசினுடைய முதலீடுகள் சராசரியாக 10 விழுக்காடு தமிழகத்திற்கு வருகிறது என்பதை நண்பர்கள் ஒத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய மத்திய அரசினுடைய அரசு சார்ந்த நிறுவனங்களுடைய மொத்த முதலீடு 2 இலட்சத்து 17 ஆயிரத்து 876 கோடி ரூபாய். அதிலே தமிழகத்திற்குக் கிடைத்திருப்பது 19 ஆயிரத்து 688 கோடி ரூபாய். இதைப்போல ஒவ்வொரு துறையிலும் சொல்ல முடியும். இதிலே நமக்கு என்ன நிறைவு என்று சொல்ல வேண்டுமென்றால், கேட்கத் தகுதியுள்ளவர்கள் கேட்கிறார்கள்; கொடுக்க மனம் உள்ளவர்கள் கொடுக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மத்திய, மாநில அரசுகள் இணக்கமாக, ஒன்றை ஒன்று புரிந்துகொள்ளக்கூடிய அரசாக, ஒருவரையொருவர் அனுசரித்து ஆதரவோடு நடந்துகொள்கின்றபோது, மக்களுக்கு எவ்வளவு பயன் கிடைக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன். இங்கேகூட நம்முடைய மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் நம்முடைய அண்ணன் சுதர்சனம் அவர்களுக்கு ஒரு கடிதமே எழுதியிருக்கிறார். நம்முடைய மாண்புமிகு குமாரி செல்ஜா அவர்கள், 'Dear Shri Sudarsanamji' என்று எழுதி, "தமிழகத்திற்கு இந்த ஆண்டு நாங்கள் இவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கிறோம் என்பதை நான் உங்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்கள். இந்த ஓராண்டில் மட்டும் 1,345 கோடி

2010 ஜனவரி 11] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

ரூபாயை மத்திய சுற்றுலாத் துறை தமிழக அரசுக்குத் தந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்று தமிழக அரசு என்றால் ஏதோ காங்கிரஸ் அரசு என்று நான் சொல்ல மாட்டேன். இன்று தமிழக அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு, காங்கிரஸ் கட்சி சார்ந்த அரசு. ஒத்த கருத்துள்ள, மதசார்பற்ற அரசியலில் நம்பிக்கை கொண்ட பல்வேறு கட்சிகளை மத்தியில் இன்று காங்கிரஸ் தலைமை ஏற்று நடத்துகிறது. அதைப்போல இந்த அரசு ஏற்பாட்டிலும், இங்கே இருக்கிற ஏற்பாட்டிலும், எங்களுக்குப் பங்கு இருக்கிறது. நாங்கள் விளக்குகளாக எரியவில்லையேயொழிய, விளக்குகளைத் தாங்குகிற தண்டிலே ஒரு பகுதியாக நாங்கள் இருக்கிறோம் என்பதில் எங்களுக்கு மாற்றுக் கருத்தில்லை. ஆகவே, இந்த அரசைப் பாராட்டுகிறபோது எங்களைப் பாராட்டுவதாக நாங்கள் நினைக்கிறோம். மத்திய அரசைப் பாராட்டுகிறபோது அவர்களைப் பாராட்டுவதாக நினைக்கிறார்கள். இதிலே எங்களுக்குள் தயவுசெய்து குழப்பத்தை விளைவிக்கின்ற பணியை மட்டும் நீங்கள் செய்ய வேண்டாம் என்பதற்காகத்தான் இந்த அவையிலே நான் பதிவு செய்கிறேன். (குறுக்கீடு)

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அவர்கள் பல விவரங்களைத் தருகிறார்கள். ஆளுநர் உரையில் மாநில சுயாட்சி என்பது பெயர் அளவிற்கே இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை ஏற்கிறாரா, மறுக்கிறரா? மறுப்பது என்றால் எந்த வகையில் மறுக்கிறார் என்பதை அவர் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசுகிறார். அவர் பேசுவதிலிருந்து நீங்கள் புரிந்துகொள்ளுங்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) செல்வி கே. பாலபாரதி, என்ன விஷயம் என்பதைச் சொல்லுங்கள்.

செல்வி கே. பாலபாரதி: அதுதான் சொல்கிறேன். நீங்கள் அனுமதி கொடுத்தால்தானே சொல்ல முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசும்போது, அவரது நேரத்தை waste பண்ணாதீர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசுக்கு மத்திய அரசு என்ன செய்கிறது

என்றெல்லாம் சொல்லி வந்தார். மின் துறை பிரிக்கப்பட்டது சம்பந்தமாகக்கூட ஒரு விவாதம் வந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட தலையிட்டு மேற்கு வங்க மாநிலம் உட்பட பிரிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார். அந்தக் கருத்து சரியானது. கேரளத்தில் பிரிக்கவில்லை. மேற்கு வங்கத்தில் பிரிக்கப்பட்டது என்பதுதான் உண்மை. இப்படி மாநில அரசுகளை நிர்ப்பந்தப்படுத்தி இந்த மின் துறையைப் பிரிக்க வேண்டுமென்று ஏன் மத்திய அரசு கட்டாயப்படுத்துகிறது? அது ஒன்று. மத்திய அரசினுடைய மின்சாரத் துறை அமைச்சர், சென்ற ஆண்டு மாநிலத்திற்கு வந்து மாநில அரசை மிரட்டக்கூடிய தொனியிலேயே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி கே. பாலபாரதி, இதெல்லாம் பார்லிமென்ட்டிலே கேட்க வேண்டிய கேள்வி. உங்கள் உறுப்பினரை அங்கே போய்க் கேட்கச் சொல்லுங்கள். நீங்கள் பேசுங்கள் திரு. பீட்டர். (குறுக்கீடு) திரு. பீட்டர், பேசுங்கள். (குறுக்கீடு) Please, உட்காருங்கள். செல்வி பாலபாரதி, உட்காருங்கள். உங்கள் உறுப்பினரை அங்கேயிருந்து அதைக் கேட்கச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: சொல்லிவிட்டீர்கள். நான் புரிந்துகொண்டேன். (குறுக்கீடு) நான் பதில் சொல்லிவிடுகிறேன்.

முற்பகல் *11-00*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள் செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசுகளினுடைய கட்டுப்பாட்டில் இலாபகரமாக பொதுமக்களுக்கு சேவை செய்துகொண்டிருந்த இந்தத் துறையைப் பிரிக்க வேண்டும் என்ற உத்தரவைப் போடுவது மத்திய அரசு. இன்னொன்று, மாநிலத்தில் அரசுக்கு ஊழியர்களை நியமனம் செய்யக்கூடாது என்ற தடைச் சட்டம் போடுவதும் மத்திய அரசு. ஏனென்றால் சிக்கன நடவடிக்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று மாநில அரசுகளுக்கு தொடர்ந்து நிர்ப்பந்தம் செய்து மாநிலத்தினுடைய உரிமையை, அவர்களுடைய சுய ஆட்சியைப் பறிக்கக்கூடியக் கொள்கையைத் தொடர்ந்து மத்திய அரசு கடைப்பிடித்துவருகிறது. இது உண்மையா, இல்லையா என்பதைப்பற்றிய விளக்கத்தை அவர்கள் சொல்லட்டும். (குறுக்கீடு)

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பீட்டர் அல்போன்ஸ், State subject-ஐப் பற்றிப் பேசுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மிகவும் மதிக்கின்ற தோழர் திரு. நன்மாறன் அவர்கள் ஒன்றைக் கேட்டார்கள். மாநில சுயாட்சியை காங்கிரஸ் ஆதரிக்கிறதா என்று கேட்டார்கள். மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று காங்கிரஸ் முதலமைச்சர்கள்கூட கேட்டு வருகிறார்கள். 60 ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்ட அதிகாரப் பங்கீடு மாற வேண்டும். மாநிலங்கள் வளர்ந்திருக்கின்றன. மாநிலங்களுடைய தேவை வளர்ந்திருக்கிறது. மாநிலங்களிலே மாநில அரசு மக்களுக்கு அதிக நெருக்கமாக இருக்கிறது. ஆகவே, அதிக அதிகாரங்களை எங்களுக்குத் தர வேண்டும் என்று கேட்டு Concurrent list of the Constitution பற்றியெல்லாம் பல்வேறு வாதங்கள் நடந்து வருகின்றன. நம்முடைய அருமைக்குரிய சகோதரி அவர்கள் மாநில அரசுகளை மத்திய அரசு நிர்ப்பந்திக்கிறது என்று சொன்னார்கள். மாநில அரசு வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கு மத்திய அரசு தடை விதிக்கிறது என்று சொன்னார்கள். நான் கேட்கிறேன், அப்படி ஒரு தடை இருக்கும் என்று சொன்னால், மூன்று ஆண்டுகளில் 3,44,000 அரசு வேலைவாய்ப்புகளை இந்த மாநில அரசு உருவாக்கித் தந்திருக்கிறதே எப்படி முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள், ஒரு தொலைநோக்குப் பார்வையோடு இருக்கிறோம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி இல்லாமல், காங்கிரசின் தலையீடு இல்லாமல், காங்கிரசின் வழிகாட்டுதல் இல்லாமல் இந்த நாட்டிலே எந்தப் பொருளாதார, அரசியல் சமூக முன்னேற்றமும் வந்ததில்லை என்பதுதான் வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) அம்மா நான் முடித்துவிடுகிறேன். நீங்கள் அடிக்கடி குறுக்கிடுகிறீர்கள். நான் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

அரசியல் சுதந்திரமாக இருந்தாலும் சரி, அரசியல் சாசனச் சட்டமாக இருந்தாலும் சரி, வாக்குரிமையாக இருந்தாலும் சரி, இட ஒதுக்கீடாக இருந்தாலும் சரி, இந்தச் சமூகத்திலே ஆலயப் பிரவேசத்திலிருந்து ஒவ்வொரு சமூக மாற்றங்களுக்கும் காங்கிரஸ்

கட்சி தன்னுடைய பங்களிப்பைத் தந்திருக்கிறது. நான் ஒன்று சொல்கிறேன். இன்று கம்ப்யூட்டர், கம்ப்யூட்டர் என்று பேசுகிறீர்களே, அந்தக் கம்ப்யூட்டரை எங்கள் இராஜீவ் காந்தி அறிமுகப்படுத்துகின்றபோது நீங்கள் வங்கிகளில் மறியல் செய்யவில்லையா? கம்ப்யூட்டர்களே வேண்டாம்; வேலைவாய்ப்புகளைக் கெடுப்பதற்காக காங்கிரஸ் சதி செய்கின்றதென்று இந்த நாட்டினுடைய ஒவ்வொரு கிராமத்திலும் நீங்கள் பொதுக் கூட்டம் நடத்தினீர்கள். டிராக்டரை காங்கிரஸ் கொண்டுவந்தபோது, வேளாண்மையை முடக்குவதற்கு காங்கிரஸ் சதி செய்கிறதென்று, டிராக்டர் வரக்கூடாது என்று சொன்னவர்கள் நீங்கள். ஆனால் நாங்கள் அடுத்த தலைமுறையைப் பற்றி யோசிக்கிறோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பீட்டர் அல்போன்ஸ் கொஞ்சம் விரைவாக உரையை முடியுங்கள். (குறுக்கீடு) செல்வி பாலபாரதி, அவர் உரையாற்றிக்கொண்டிருக்கிறார். நீங்கள் இடையில் நேரத்தினை வீணாக்காதீர்கள் please. (குறுக்கீடு) No, No, நீங்கள் முதலிலே நேரத்தைப் பாருங்கள். உட்காருங்கள். மற்ற உறுப்பினர்கள் பேச வேண்டும். உட்காருங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில முக்கியமான கோரிக்கைகளை மட்டும் நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி ஆரம்பித்து நான்கு ஆண்டுகள் முடிந்துவிட்டன. ஆனால் இன்னும் அங்கு மாணவர்களுக்கு அந்த Temporary Registration Number வழங்கப்படவில்லை. அவர்கள் House Surgeon Course-ஐ முடிக்கப்போகிறார்கள். இந்த Temporary Registration Number கிடைத்தால்தான் அவர்கள் மேற்படிப்பிற்கான அனுமதியைக் கோரமுடியும். அந்த அனுமதியைப் பெற்றுத் தருவதற்கான ஏற்பாடுகளை நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கோதாவரி - கிருஷ்ணா பேசினிலிருந்து தயாராகும் எரிவாயு, இந்திய முன்னேற்றத்திற்கு மட்டுமல்ல, தமிழக முன்னேற்றத்திற்கும் மிகப் பெரிய தேவை. ஏறக்குறைய 16.5 கோடி கன அடி எரிவாயுவை ஆந்திராவிலே உற்பத்தி செய்யப் போகிறார்கள். தமிழகத்திற்கு உரிய பங்கை நாம் போராடிப் பெற வேண்டும். ஏனென்றால்,

2010 ஜனவரி 11] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

நம்முடைய எரிசக்தித் தேவைக்கு அந்த எரிவாயு மிகவும் அவசியமானது. உதாரணமாக ஒன்றை மட்டும் சொல்கிறேன். ஸ்ரீபெரும்புதூரிலே இருக்கின்ற செயின்ட் கோபெயின் என்ற அந்த மிகப் பெரிய தொழிற்சாலைக்கு இந்த எரிவாயு கிடைக்கும் என்று சொன்னால், அதனுடைய உற்பத்திச் செலவிலே ஆண்டு ஒன்றுக்கு 100 கோடி ரூபாய் குறையும். இன்று எரிவாயு இணைப்புகள் இந்தியாவிலே எங்கெல்லாம் இருக்கின்றன என்று பார்த்தால், தமிழகத்தினுடைய பங்கு மிக மிகக் குறைவு. ஆந்திராவிலே கோதாவரி-கிருஷ்ணா பேசினிலே கிடைக்கக்கூடிய அந்த எரிவாயு, தமிழகத்திற்கு குறைந்தது 1.5 கோடி கன அடி வேண்டும். மிக மகிழ்ச்சிரமான செய்தி என்னவென்று சொன்னால், இதற்காக மத்திய அரசு ஒரு தனி குழுவை (Group of Ministers) அமைத்திருக்கிறது. அந்தக் குழுவிலே நம்முடைய மத்திய இரசாயனத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மு.க. அழகிரி அவர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு 1.5 கோடி கன அடி எரிவாயுவைப் பெற்றுத் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

நீண்ட நாட்களாக எங்களுடைய வட சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் 400 குடிசைவாழ் மக்களின் பாதுகாப்புக்காகப் பல்வேறு போராட்டங்களை நடத்தினோம். இங்கேகூட அண்ணன் சுதர்சனம் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். எங்கள் மாவட்ட காங்கிரஸ் தலைவர் இராயபுரம் மனோ அவர்கள் பெருமுயற்சி எடுத்து, நம்முடைய முதலமைச்சர் அவர்களிடம் அதைக் கேட்டிருக்கிறார்கள். மாநிலமெங்கும் குடிசைகளை மாற்றி, கான்கிரீட் வீடுகளைக் கட்டித் தருகின்ற இந்த நல்ல நேரத்திலே, அவர்களுக்கும் நீங்கள் அந்த வீடுகளைக் கட்டித் தரவேண்டும்.

நான் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியைச் சொல்ல ஆசைப்படுகின்றேன். எங்கள் பகுதியில், தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர் போன்ற மாவட்டங்களில் மட்டுமல்லாது, இப்பொழுது இராமநாதபுரம், சிவகங்கை போன்ற மாவட்டங்களில்கூட மர்மக் காய்ச்சல் மிக வேகமாகப் பரவி வருகின்றது. அந்தக் காய்ச்சல் மனிதனுடைய செயல் திறனை முடக்கிவிடுகின்றது. கை, கால்கள் வீங்கி, சற்று பலவீனமானவர்களுக்கு உயிருக்கேகூட ஆபத்து விளைவிக்கின்றது.

இதுபற்றி நான் காலை *9-25* மணிக்கு அவர்களிடம் சொன்னேன். உடனே *9-30* மணிக்கு சம்பந்தப்பட்ட அமைச்சரையும், சம்பந்தப்பட்ட துறைச் செயலாளரையும், ஏன், மக்கள் நல்வாழ்வுத் துறை முழுவதையுமே திருநெல்வேலிக்குப் போகச் சொல்லி, அங்கே மேலப்பாளையம், கடையநல்லூர், தென்காசி மற்றும் அம்பாசமுத்திரம் போன்ற பகுதிகளைப் பார்வையிட்டு அதற்கான பணியைத் தொடங்கியிருக்கிறார்கள். அந்தப் பணியைச் சற்று வேகப்படுத்தவேண்டும். ஏனென்றால், இன்னும் காய்ச்சல் அடங்கவில்லை. நேற்றுகூட 'சன்' தொலைக்காட்சியில் 18 பேர் கடையநல்லூரில் பலி என்று செய்தி போடுகிறார்கள். இதற்கான காரணம் என்ன என்று நீங்கள் சற்றுப் பார்க்கவேண்டும். அதிகமான கொசுதான் காரணம். நான் காங்கிரஸ் கட்சியில் உறுப்பினர்களைச் சேர்ப்பதற்காக கிராமப் பகுதிகளுக்குப் போனால், மாலை *6-00* மணிக்கு கொசுக்கள் பெரிய பெரிய படைகளாக வருகின்றன. அங்கே என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை. அதாவது கொசு ஒழிப்பு சாதாரண பிரச்சினை என்றும், அது கொசுதானே என்றும் நாம் இருந்துவிட்டோம். ஆனால் அந்தக் கொசுவே இராட்சசனாக வளர்ந்தால், என்னவாகும் என்பதை பார்க்கக்கூடிய தலைமுறையிலே நாம் வாழ்கிறோம். ஆகவே, மக்கள் நல்வாழ்வுத் துறை இந்தக் கொசு ஒழிப்பை ஒரு சிறப்புத் திட்டமாக எடுத்து, கிராமங்களிலே சாக்கடைக் கழிவு நீர் போவதை முறைப்படுத்தக்கூடிய பணியைச் செய்யவேண்டும். வீட்டுமனைகளை ஒழுங்குபடுத்தும்போது, அதற்கான வசதி இருந்தால்தான் அதற்கு அங்கீகாரம் தரவேண்டுமென்று சற்றுத் தீவிரமாக வலியுறுத்தி அதை முறைப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* சீக்கிரம் பேசி முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வரலாற்றுப் புகழ்மிக்க தருணத்திலே நான் இங்கே நிற்கிறேன். இந்த மன்றத்திலே நடக்கின்ற கடைசி ஆளுநர் உரை விவாதம் இது. *(குறுக்கீடுகள்)* உங்களுக்கு அதுவெல்லாம் வேண்டாம். நீங்கள் அதை விட்டுவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள், 'உச்', 'உச்', என்று பல்லி சப்தம் போடுகின்ற மாதிரி சப்தம் போடக் கூடாது.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அமர்ந்திருக்கின்ற இந்த நாற்காலி *1922* ஆம்

ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் தேதி, வெலிங்டன் பிரபுவால் இந்த மன்றத்திற்கு வழங்கப்பட்டது. ஏறக்குறைய இந்த நாற்காலிக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களின் வயது. இன்று இந்தத் தருணத்தில் இந்த மன்றத்தில் நடக்கின்ற கடைசி ஆளுநர் உரையில் பங்கு பெறுகின்ற அந்தப் பெரிய பாக்கியம் எனக்கும் இந்த மாமன்றத்திலுள்ள உறுப்பினர்களுக்கும் கிடைத்திருக்கின்றது. அதுமட்டுமல்ல; அடுத்த ஆயிரம் ஆண்டுகளுக்கு சட்டங்களை இயற்றக்கூடிய, புதிய தலைமைச் செயலகத்தில் அமையவுள்ள சட்டமன்றப் பேரவையிலேயும், ஆளுநர் பேருரைமீது பேசக்கூடிய வாய்ப்பும் நமக்கு வரும். இது இந்தச் சபையிலுள்ள உறுப்பினர்களுக்குத்தான் கிடைக்கும். இந்த மன்றத்திலே கடைசி. அந்த மன்றத்திலே முதல். இந்தப் பெரும்பொறுப்பை எங்களுக்கு வழங்கியிருக்கிறீர்கள். அந்தப் பெருமையைத் தந்திருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வேடிக்கைக்காக ஒன்றைச் சொல்வேன், உங்களுக்குப் பல பெருமைகள் இருக்கின்றன. இந்தக் கோட்டையில் கொடி ஏற்றிய முதல் முதலமைச்சர் என்பது மட்டுமல்ல, இந்தக் கோட்டையிலே கொலுவீற்றிருந்த கடைசி முதலமைச்சர் என்ற பெருமையையும் வரலாறு உங்களுக்குத் தந்திருக்கிறது. எங்களுக்கெல்லாம் அதிலே மிகப் பெரிய பெருமை. இனிமேல் தமிழகத்திலே யாரும் எந்த அரசியல்வாதியும் மறந்தும் கனவிலேகூட, "நான் கோட்டையைப் பிடிக்கப் போகிறேன்" என்று சொல்ல முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அதையும் உங்கள் காலத்திலேயே நிறைவு செய்துவிட்டீர்கள். உணர்வு, ஆற்றல், அறிவு எல்லாவற்றையும் உள்ளடக்கிய உங்களுடைய தலைமையிலே தமிழ்நாடு மேலும் பல முன்னேற்றங்களைப் பெற்று மதச்சார்பற்ற அரசியலுக்கும், அன்னை சோனியா காந்தி அவர்களின் கரங்களைப் பலப்படுத்துவதற்கும் நீங்கள் தொடர்ந்து உங்களுடைய ஆலோசனைகளையும், ஒத்துழைப்பையும் தரவேண்டுமென்று இந்த அளவில் கேட்டு அமைகிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

முற்பகல் 11-10

***செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பிரதான எதிர்க்கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எதிர்க்கட்சித்

தலைவர் என்ற முறையில் எனது கருத்துகளை முன்வைக்கிறேன். இந்த விவாதத்தை நான் முடித்து வைத்த பின்னர், முதலமைச்சர் பதிலளிக்கப் போகிறார். தி.மு.க. அமைச்சர்களுக்கும், ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தங்கள் முதல்வரின் பதில் கூறும் திறமையில் நம்பிக்கை இருக்கும் என்று கருதுகிறேன். அப்படி முதல்வரின் திறமையில் நம்பிக்கை இருந்தால் அவர்கள் எனது உரையின்போது குறுக்கிட மாட்டார்கள். அவ்வாறு எனது உரையின்போது குறுக்கிட்டால் தங்கள் முதல்வரின் பதிலளிக்கும் திறமையில் அவர்களுக்கே நம்பிக்கையில்லை என்று பொருள்படும். *(குறுக்கீடு)* ஆரம்பத்திலேயே குறுக்கிடுகிறார். I am not yielding. *(குறுக்கீடு)* தலைவர் அவர்களே இது நியாயமல்ல, இப்போதுதான் தொடங்கி இருக்கிறேன். அதற்குள் குறுக்கீடு என்பது நியாயமல்ல.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடு)* மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கருத்தை, வேண்டுகோளை இங்கே வைத்தார். அவர் பேசுகிறபோது மற்றவர்கள் குறுக்கிட்டால், அது முதலமைச்சருடைய திறமையிலே அவர்களுக்கு நம்பிக்கை இல்லை என்று பொருள் வந்துவிடும், ஆகையினால் குறுக்கிடக் கூடாது என்றார். அதையே நான் கேட்கிறேன், அப்படியென்றால் நீங்கள் முதலமைச்சராக இருக்கிறபோது, எல்லா அமைச்சர்களும் எங்கள் உரையில் குறுக்கிட்டார்களே, உங்களுக்குத் திறமை இல்லை என்று பொருளா அதற்கு? *(மேசையைத் தட்டும் ஒலி)*

செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார், யாருக்கு என்னென்ன திறமைகள் உள்ளன என்பதை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். அதனால் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் எனக்குச் சான்றிதழ் வழங்க வேண்டும் என்ற அவசியம் எனக்கில்லை.

Recycle செய்வது என்பது பரவலாக இந்தக் காலத்தில் கடைப்பிடிக்கப்படும் ஒரு நடைமுறையாகும். Recycling என்றால் ஏற்கெனவே பயன்படுத்தப்பட்ட ஒரு பொருளின் கழிவை வைத்துக்கொண்டு அதைச் சுத்திகரித்து மீண்டும் பயன்படுத்தத்

2010 ஜனவரி 11] [செல்வி ஜெ ஜெயலலிதா]

தகுதியுள்ளதாக ஆக்குவதாகும். இந்தக் காலத்தில் Reverse Osmosis என்ற ஒரு நடைமுறை உண்டு. கழிவு நீரைக்கூட, சாக்கடை நீரைக்கூட இந்த Reverse Osmosis நடைமுறைமூலம் சுத்திகரித்து குடிநீர் அல்லாத மற்ற பயன்பாட்டிற்குப் பயன்படுத்திக்கொள்ளும் அளவுக்கு அதாவது 90 விழுக்காடு, 95 விழுக்காடு அளவுக்கு சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. அதைப்போலவே பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை வைத்து recycle செய்து இன்று சாலைகள் போடப் பயன்படுத்துகிறார்கள். பலவிதமான குப்பைகளை வைத்து அவற்றை recycle செய்து இந்தக் காலத்தில் மின்சாரத்தைக்கூட உற்பத்தி செய்ய முடிகிறது. ஆகவே பொதுவாக recycle செய்யும் நடைமுறை சமுதாயத்திற்குப் பயனுள்ளதாக இருக்கிறது. ஆனால் இந்த ஆளுநர் உரையைப் பொறுத்தவரையில் அப்படிச் சொல்ல முடியவில்லை. கடந்த 4 ஆண்டுகளில் இந்த அரசு தயாரித்து ஆளுநர் இந்த அவையில் வாசித்த பழைய ஆளுநர் உரைகளின் recycle செய்யப்பட்ட ஒரு வடிவம்தான் தற்போது இந்த அவையில் ஆளுநரால் வாசிக்கப்பட்ட இந்த ஆண்டிற்கான ஆளுநர் உரை. இதில் மக்களுக்குப் பயன்படக்கூடிய எந்த ஒரு அம்சமும் இல்லை. கடந்த 4 ஆண்டுகளில் ஆளுநர் உரையில் இடம் பெற்றவைதான் recycle செய்யப்பட்டு திரும்பவும் இந்த ஆளுநர் உரையிலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் இந்த ஆளுநர் உரையின் மீது சில கருத்துகளை நான் சொல்ல வேண்டியுள்ளதால் இப்போது சொல்லத் தொடங்குகிறேன்.

முதலில் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைப் பற்றி நான் சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். தி.மு.க அரசு கொண்டு வந்துள்ள மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கு முதலமைச்சரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. எங்கள் ஆட்சிக் காலத்தில் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தோம். அதற்கு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்றுதான் பெயர் சூட்டப்பட்டதே தவிர எனது பெயர் சூட்டப்படவில்லை. முதல்வர்கள் வருவார்கள், போவார்கள். எந்தத் திட்டமானாலும் அது மக்கள் பணத்தைக் கொண்டுதான் செயல்படுத்தப்படுகிறது. எனவே...

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு (குறுக்கீடு) ஒரு உண்மைக்குப் புறம்பான செய்தியைச் சொல்லுகிறார்.

செல்வி ஜெ ஜெயலலிதா: இருக்கிற ஒரு முதல்வர்...

முற்பகல் 11-15

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே எதிர்க்கட்சித் தலைவர் முதலமைச்சராக இருந்தபோது பக்கத்திலே உள்ளவர் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது, சந்தியா போக்குவரத்துக் கழகம் என்றே ஒரு போக்குவரத்துக் கழகத்தை வைத்திருந்தை மறுக்க முடியுமா?*

ஜெ.ஜெ. டிரான்ஸ்போர்ட் வைத்ததை மறக்க முடியாமா? ஜெ.ஜெ. நெல் என்று வைத்ததை மறக்க முடியுமா? இதெல்லாம் பெயர் கிடையாதா? இவையெல்லாம் பெயர்கள் கிடையாதா, தயவுசெய்து சொல்லுங்கள். எம்.ஜி.ஆர். பெயரிலே இருந்த நகரத்தைக்கூட ஜெயலலிதா நகரம் என்று மாற்றி வைத்துக் கொண்டீர்களே? அதெல்லாம் உண்மையில்லையா? (குறுக்கீடுகள்)

உங்கள் கழகக் காலத்திலே ஆரம்பிக்கப்பட்ட திட்டத்திற்கு எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்று பெயர் வைத்திருக்கிறாரே, (குறுக்கீடு) எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்று பெயர் வைத்திருக்கிறாரே, உங்களுக்குத் தலைவராக இருந்த எம்.ஜி.ஆர். பெயரையும் நீங்கள் வேண்டாம் என்கிறீர்களா? அதையும் வேண்டாம் என்கிறீர்களா? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் பேசுங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் பேசுங்கள். அவர்கள் பேசட்டும்.*

செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பேசிய அமைச்சர் பொன்முடி அவர்கள் முற்றிலும் தவறான தகவல்களை இந்த அவையில் தெரிவித்திருக்கிறார். நான் முதலமைச்சராக இருந்தபோது, . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் (குறுக்கீடு).*

செல்வி ஜெ ஜெயலலிதா: நான் பதில் சொல்லிவிடுகிறேன். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடம் பொறுங்கள்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு உண்மையைச் சொல்கிறேன். *(குறுக்கீடு)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய சமூகப் பாதுகாப்பு *(குறுக்கீடுகள்)* இருங்கள், கொஞ்சம் உட்காருங்கள். உட்காருங்கள், நான் பேசுகிறேன். *(குறுக்கீடுகள்)* பொய்யை உங்கள் அம்மா அவர்கள் பேசுகிறார்களே, எப்படி உட்கார முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000 ஆம் ஆண்டு உழவர் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டு வந்தது கலைஞர் அவர்கள். அது நீங்கள் கொண்டு வந்த திட்டம் அல்ல. 2000 ஆம் ஆண்டு விவசாய சமூகப் பாதுகாப்புத் திட்டம் கொண்டு வந்தது தலைவர் கலைஞர் அவர்கள். நீங்களா கொண்டு வந்தீர்கள்? 2000 ஆம் ஆண்டு எங்கள் தலைவர் கலைஞர் கொண்டு வந்த திட்டம் அது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தவர்கள். நான் தவறான செய்திகளைச் சொல்வதாகக் குறிப்பிடுகிறார்கள். *(குறுக்கீடுகள்)* இருங்கள், நான் சொல்கிறேன் சார். தவறான செய்திகளை - நான் சொன்ன செய்திகளில் தவறுகள் இருக்குமானால் நான் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன். முன்னாள் முதலமைச்சர் பொறுப்பேற்றுக்கொண்டு அரசியலை விட்டு விலகத் தயாரா? பெயர் வைத்துவிட்டு, இல்லை என்று முழுப் பூசணிக்காயை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் உட்காருங்கள். *(குறுக்கீடு)* நீங்கள் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடு)* எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் பேசுங்கள், *(குறுக்கீடுகள்)* எல்லோரும் அமைதியாக இருங்கள்.

செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)* நான் பேசுகிறேன். நீங்கள் சும்மா

இருங்கள். அமைச்சர் பொன்முடி அவர்கள் பேசுகின்றபோது முற்றிலும் தவறான தகவல்களை இந்த அவைக்குத் தெரிவித்திருக்கிறார். எங்கள் ஆட்சியின்போது 1991-ல் முதல் முறையாக நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின், முதன்முதலாக நான் தலைமையேற்று நடத்திய அமைச்சரவைக் கூட்டத்தில்தான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்த சத்துணவுத் திட்டத்திற்கு அதுவரை இருந்த முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் என்ற பெயரை மாற்றி புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்று பெயரிடவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திரைப்பட நகரத்திற்குப் புரட்சித் தலைவர் பெயர் இருந்ததாகவும் அதை நான் மாற்றியதாகவும் இங்கே அபாண்டமாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. அப்போது எங்கள் ஆட்சிக் காலத்தில், நாங்கள் ஆட்சிக்கு வந்தபோது திரைப்பட நகர் என்பதே இல்லை. திரைப்படக் கல்லூரிதான் இருந்தது. அந்தத் திரைப்படக் கல்லூரிக்குப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் பெயர் இருந்தது. இன்றுவரை அப்படியே இருக்கிறது. எங்கள் ஆட்சிக் காலத்தில் மாற்றம் இல்லை. திரைப்பட நகர் என்பது புதிதாக உருவாக்கப்பட்டது. மேலும் எனது தாயார் பெயரில் போக்குவரத்துக் கழகம் இருந்தது என்று இங்கே சொல்லியிருக்கிறார். அது முற்றிலும் அபாண்டமான, தவறான, உண்மைக்குப் புறம்பான செய்தியாகும். எங்கள் ஆட்சிக் காலத்தில் எனது தாயாரின் பெயரைப் போக்குவரத்துக் கழகத்திற்கு மட்டுமல்ல; எதற்குமே வைக்கக்கூடாது என்று நான் திட்டவட்டமாகக் கூறிவிட்டேன். ஆகவே, அவர் பொறுப்பேற்றுக் கொள்வதாகச் சொல்லியிருக்கிறார். தெரிவித்த தவறான தகவலுக்குப் பொறுப்பேற்பாரா?

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரிடம் ஒரேயொரு கேள்வி. தமிழகத்தில் இருக்கின்ற எல்லாப் பல்கலைக்கழகங்களுக்கும் முதலமைச்சர்தான் வேந்தர் என்று நீங்களே அறிவித்துக்கொண்டீர்களே, அது உண்மையா, இல்லையா? (குறுக்கீடுகள்) வேந்தர் என்று அவர்களே அறிவித்துக்கொண்டார்கள். ஆளுநர்தான் வேந்தராக இருக்க வேண்டும். அதையே மாற்றி அவர்கள் பெயரை அறிவித்துவிட்டார்கள். அது உண்மையா, இல்லையா என்று சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். நீங்கள் பேசுங்கள்.

செல்வி ஜெ ஜெயலலிதா: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அமைச்சர் பரிதி இளம்வழுதி சொன்னது, முற்றிலும் கற்பனையான ஒரு குற்றச்சாட்டு. அப்படி எதுவுமே நடக்கவில்லை. எந்தப் பல்கலைக்கழகத்திற்கும் நான் வேந்தர் என்று அறிவிக்கவில்லை. அப்படி எதுவுமே நடைபெறாதபோது ஒரு கற்பனை குற்றச்சாட்டைச் சொன்னதற்காக அவரும் பொறுப்பேற்றுக்கொண்டு இப்படி இந்த அவையின் மாண்பைக் கெடுத்து, அமைச்சர் பொன்முடி அவர்களும், அமைச்சர் பரிதி இளம்வழுதி அவர்களும் தெரிந்தே உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுகளைச் சொல்லுகின்ற காரணத்தால் அவர்களுடைய சவால்களை நான் ஏற்க வேண்டிய அவசியம் இல்லை. பொய்யான தகவல்களைத் தெரிவித்ததால், உண்மைக்குப் புறம்பான தகவல்களைத் தெரிவித்ததால், அவர்கள் அதற்குப் பொறுப்பு ஏற்பதாகச் சொன்னதால், பொறுப்பேற்றுக்கொண்டு அவர்கள் இருவரும் அரசியலை விட்டு விலக வேண்டுமென்று நான் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தத்தில்...

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பெயர்கள் இருந்ததற்கான ஆதாரங்களை உங்களிடம் நான் சமர்ப்பிக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். நீங்கள் பேசுங்கள்.

செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தத்தில் நான் சொல்ல விரும்புவது இதுதான். இருக்கின்ற ஒரு முதலமைச்சரின் பெயர் ஒரு திட்டத்திற்கு சூட்டப்படுவது முறையற்ற செயலாகும். இந்த விவாதத்தின்போது குறுக்கிட்டுப் பேசிய அமைச்சர் பொன்முடி அவர்கள் கோட நாட்டில் நான் தங்கியதைப்பற்றிப் பேசியிருக்கிறார். கோட நாட்டில் தங்குவதில் என்ன தவறு? கோட நாடு தமிழ்நாட்டில்தானே இருக்கிறது? அவ்வாறு பேசிய அமைச்சர் பொன்முடியும், முதல்வரும் அடிக்கடி சென்று தங்கும் பெங்களூரில் உள்ள பண்ணை வீடுபோல் இது என்ன வேறு மாநிலத்திலா இருக்கிறது? இது என்ன கர்நாடக மாநிலத்திலா இருக்கிறது? இங்கே சற்றுமுன்... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

செல்வி ஜெ ஜெயலலிதா: அவரை உட்காரச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

செல்வி ஜெ ஜெயலலிதா: இரண்டு வார்த்தைகள்கூட பேசவிடமாட்டேன் என்கிறார்களே! (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், கோடநாடு தமிழ்நாட்டில்தானே இருக்கிறது? அங்கேபோய் தங்குவதில் என்ன தவறு? பெங்களூரில் இருக்கிறதா? பெங்களூரிலா இருக்கிறது என்று கேட்கிறார். நீங்கள் ஆந்திராவிலேபோய் ஐதராபாத்தில் திராட்சைத் தோட்டத்தில் தங்கினீர்களே, ஐதராபாத் என்ன தமிழ்நாட்டிலா இருக்கிறது? இரண்டாவது, குறுக்கிடக்கூடாது என்கிறார்கள். ஒரு வாக்குறுதியைத் தருவாரா? என்னவென்று கேட்டால், வழக்கமாக எதிர்க்கட்சித் தலைவர் வந்து பேசிவிட்டுப் போய் விடுகிறீர்கள். பிறகு உங்களைக் கேள்வி கேட்க முடிவது இல்லை. அதனால்தான் இப்போதே கேட்கிறோம்.

செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டிய அமைச்சர்கள் இப்படி அற்ப விஷயங்களைப் பேசி எதிர்க்கட்சித் தலைவரைப் பேச விடாமல் அவையின் நேரத்தை வீணாக்குவது வருத்தம் அளிக்கிறது. உட்காருங்கள். இது நியாயம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். One minute. அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, அற்பத்தனமான விஷயங்கள் என்று சொல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடம் பொறுங்கள். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

2010 ஜனவரி 11]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: என்ன செய்வது? எதிர்க்கட்சித் தலைவர் என்ன பாணியில் பேசுகிறாரோ, அதேபாணியில்தான் நாங்களும் பதில் அளிக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவர்னர் உரையின்மீது பேசுங்கள். கவர்னர் உரையில் உள்ளதைப் பற்றி மட்டும் பேசுங்கள்.

செல்வி ஜெ ஜெயலலிதா: நீங்கள் அமைச்சர்களை உட்காரச் சொல்லுங்கள். எனக்கு mike-ஐக் கொடுக்கச் சொல்லுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்று முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் Right to Information Act - தகவல் அறியும் உரிமைச் சட்டம், தற்போதைய முதல்வர் ஆட்சிக் காலத்தில்தான் செயல்படுத்தப்பட்டதாக இங்கே பாராட்டினார். தவறான தகவல். Right to Information Act எங்கள் ஆட்சிக் காலத்தில்தான் செயல்படுத்தப்பட்டது. நான் முதலமைச்சராக இருக்கும்போது முதன்முதலாக அந்தச் சட்டத்தை அமல்படுத்தி 3 கமிஷனர்களை நியமனம் செய்தேன்.

அடுத்து, திருட்டு வி.சி.டி.-க்களைப் பற்றிப் பேச விரும்புகிறேன். திருட்டு வி.சி.டி. உற்பத்தியிலும், விற்பனையிலும் ஈடுபடுவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதல்வர் அறிவித்திருக்கிறார். . குண்டர்கள் சட்டத்தின்கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் முதல்வர் அறிவித்திருக்கிறார். 2004 ஆம் ஆண்டில் எனது ஆட்சிக் காலத்தில் தமிழ்த் திரைப்பட பிரதிநிதிகள் பலர் என்னைச் சந்தித்து திருட்டு வி.சி.டி-க்கள் வெளியிடப்படுவதைப் பற்றிப் புகார் செய்தார்கள். அதற்கு எதிரான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று என்னிடம் கோரிக்கை வைத்தார்கள். அதன் பின்னர், திருட்டு வி.சி.டி. தொழிலை, குண்டர்கள் சட்டத்தின்கீழ் ஒரு குற்றமாகச் சேர்த்தது நான்தான். எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு எடுத்த கடுமையான நடவடிக்கையினால் எங்கள் ஆட்சிக் காலத்தில் திருட்டு வி.சி.டி. தொழிலே நிறுத்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், 2006 ஆம் ஆண்டு தி.மு.க. அரசு ஆட்சிக்கு வந்த பின், மீண்டும் திருட்டு வி.சி.டி. தொழில் கொடி கட்டிப் பறக்க ஆரம்பித்தது. (மேசையைத் தட்டும் ஒலி) கொடி கட்டிப் பறந்துகொண்டிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம், தி.மு.க.-வைச் சேர்ந்த இரண்டு பெரிய அதிகார மையங்கள், இந்தத் திருட்டு வி.சி.டி. தொழிலை மதுரையிலிருந்தும், சென்னையிலிருந்தும் தலைமையேற்று நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்று தகவல் வருகிறது.

முற்பகல் 11-25

முதலமைச்சர் எடுத்த நடவடிக்கைக்காக தமிழ்த் திரைப்படத் துறையினர் அடுத்த மாதம் முதலமைச்சருக்குப் பாராட்டு விழா நடத்தப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எதற்காக இந்தப் பாராட்டு விழா? திருட்டு வி.சி.டி. தொழிலை குண்டர்கள் சட்டத்தின்கீழ் கொண்டு வந்ததற்காகவா? அதற்காக என்றால், அது எனது தலைமையிலான அரசு எடுத்த முடிவாயிற்றே? பின்னர் எதற்காக இந்தப் பாராட்டு விழா? தி.மு.க.-வின் இந்த இரண்டு அதிகார மையங்களும் அவர்களது கூட்டாளிகளும் திருட்டு வி.சி.டி. தொழிலில் ஈடுபடுவதை நிறுத்த முதலமைச்சர் நடவடிக்கை எடுத்துவிட்டாரா? உண்மையிலேயே இந்த இரண்டு அதிகார மையங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முதலமைச்சருக்குத் தைரியம் இருக்கிறதா?

ஆளுங்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் தன்னைப் புகழ்ந்து பேச வேண்டாம் என்று முதலமைச்சர் சட்டமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

செல்வி ஜெ ஜெயலலிதா: என்னங்க, running commentary மாதிரி கூடவே பேசிக்கொண்டு வந்தால் எப்படி? (குறுக்கீடுகள்) அவரை நிறுத்தச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க.-வைச் சேர்ந்த இரண்டு அதிகார மையங்கள்தான் திருட்டு வி.சி.டி. தொழில் நடத்துவதாக முன்னாள் முதலமைச்சர், இன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிடுகிறார். அதுமட்டும் அல்லாமல், அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், அவர்கள் ஆட்சியிலிருந்த காரணத்தால் திருட்டு வி.சி.டி. தொழில் அறவே ஒழிக்கப்பட்டது என்று சொல்கிறார். சொல்லிவிட்டு, இப்போது தி.மு.க.-வினுடைய அதிகார மையங்கள்தான் செய்கிறது என்று சொல்கிறார். நான் சொல்கிறேன், நீங்கள் ஆட்சியிலிருந்தபோது-- திருட்டு வி.சி.டி. கிடையாது என்று சொல்லக்கூடிய திருட்டுத் தொழில் கிடையாது. ஏனென்றால்--அந்தத் தொழிலைச் செய்துகொண்டிருந்த நீங்கள் ஆட்சிக்கு வந்துவிட்ட காரணத்தினால் அப்போது அந்தத் தொழில் இல்லை. (குறுக்கீடுகள்)

2010 ஜனவரி 11]

செல்வி ஜெ ஜெயலலிதா: இல்லை, இது சரியில்லை. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, தன்னுடைய தரம் தாழ்ந்த பேச்சுக்களால் பரிதி இளம்வழுதி அவர்கள், அமைச்சராக இருப்பதற்கே தகுதியற்றவர் என்பதை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசுங்கள். நீங்கள் எதிர்க்கட்சித் தலைவர். நீங்கள் ஆதாரபூர்வமாக இருந்தது என்றால் சொல்லுங்கள். குற்றச்சாட்டுச் சொல்வது ஆதாரபூர்வமாக இருக்க வேண்டும். ஆதாரமில்லாமல் எதுவும் பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மற்றவர்களெல்லாம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

செல்வி ஜெ ஜெயலலிதா: பேரவைத் தலைவர் அவர்களே, அவரை உட்காரச் சொல்லுங்கள். அவரே பேசிக் கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நடவடிக்கையைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்கின்ற நேரத்திலே நான் தரம் தாழ்ந்து நடப்பதாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிறார். நீங்கள்தான் தரம் தாழ்ந்து அற்பத்தனமாகப் பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசுங்கள். மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு)

செல்வி ஜெ ஜெயலலிதா: உட்காருங்கள். பேரவைத் தலைவர் அவர்களே, அவர் அவ்வளவுதான். அதனால் பரிதி இளம்வழுதிக்கு இனிமேல் நான் பதில் சொல்ல விரும்பவில்லை. (குறுக்கீடுகள்) . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் திரு. பொள்ளாச்சி ஜெயராமன், திரு. டி. ஜெயக்குமார் இரண்டு பேரும் உங்கள் இடத்திற்குப் போய் உட்காருங்கள். உங்கள் இருக்கையில் போய் உட்காருங்கள். (குறுக்கீடு) உறுப்பினர்கள் உங்கள் இருக்கையிலே போய் உட்காருங்கள். இது முறையல்ல.

செல்வி ஜெ ஜெயலலிதா: உட்காருங்கள், உட்காருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் தங்கள் இடத்தை விட்டு இங்கே முன்னால் வருவது அவை மரபை மீறிய செயலாகும். இருக்கையில் உட்காருங்கள்.

செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுங்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் தன்னைப் புகழ்ந்து பேச வேண்டாம் என்று முதல்வர் இந்தச் சட்டமன்றத்தில் (குறுக்கீடுகள்) ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் தன்னைப் புகழ்ந்து பேச வேண்டாம் என்று முதலமைச்சர் இந்தச் சட்டமன்றத்தில் தெரிவித்திருக்கிறார். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. சொந்த கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் பாராட்டினால் அதில் என்ன பெருமை? தமிழ்த் திரைப்பட நடிகர்கள், நடிகைகள், தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் மற்றும் கவிஞர்கள் புகழ்ந்து பேசினால்தான் முதலமைச்சருக்குப் பிடிக்கும்போலும்! (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அவருடைய கருத்து என்ற அடிப்படையில் எதை வேண்டுமானாலும் கண்டிக்கலாம். ஆனால், தனிப்பட்ட முறையில் ஒரு முதலமைச்சர், தன்னைப் புகழ வேண்டாம் என்று கேட்டுக்கொண்டால், அவருக்கு திரைப்படத்திலே உள்ளவர்கள் புகழ்ந்தால்தான் பிடிக்கும் என்ற கருத்தைச் சொல்லுவது, ஒரு எதிர்கட்சித் தலைவருடைய கண்ணியத்தை மிகப் பெரிய அளவிற்கு பாதிக்கிறது என்பதை நான் அவருக்கு நினைவூட்டுகிறேன். திரைப்படத்திலே இருந்தவர்கள், அந்தத் திரைப்படத்திலே இன்றைக்கு நடிப்பவர்கள் அவர்கள் புகழ்வது மட்டும்தான் கலைஞருக்குப் பிடிக்கும் என்றால், எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதுங்கூட பிடிக்கத்தான் வேண்டும்.

செல்வி ஜெ ஜெயலலிதா: பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்களுக்காக இந்த தி.மு.க. அரசு, 21 இலட்சம் வீடுகள் இலவசமாகக் கட்டிக் கொடுக்கப் போவதாக ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. முதல் கட்டத்தில் 1,800 கோடி ரூபாய் செலவில், 3 இலட்சம் வீடுகள் கட்டித் தரப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அப்படியானால் ஒரு வீட்டிற்கு 60 ஆயிரம்

2010 ஜனவரி 11] [செல்வி ஜெ ஜெயலலிதா]

ரூபாய் செலவாகும். 21 இலட்சம் வீடுகள் கட்டித்தர 12,600 கோடி ரூபாய் தேவைப்படும். ஏழையெளிய மக்களுக்கு வீடு கட்டித் தருவது என்பது நல்ல திட்டம்தான். ஆனால், முக்கியமான ஒரு கேள்வியைக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டத்திற்கு எங்கிருந்து பணம் வரப் போகிறது? தி.மு.க.-வினர் தங்கள் சொந்தப் பணத்திலிருந்து செலவிடப் போகிறார்களா? தி.மு.க. தலைவரும், அவரது குடும்பத்தினரும் தங்கள் சொந்தப் பணத்தைச் செலவு செய்யப் போகிறார்களா? ** எனவே இந்தத் திட்டத்திற்கு பணம் எங்கிருந்து வரப்போகிறது? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ** அதற்கு ஆதாரம் இருக்கிறதா? நிரூபிக்கவேண்டும். இல்லையென்றால் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் பணிவோடு நான் வேண்டுகிறேன், நீங்கள் கவர்னர் உரையின்மீது உரையாற்றுங்கள். (குறுக்கீடு)

செல்வி ஜெ ஜெயலலிதா: இது கவர்னர் உரையில்தான் வருகிறது; அதைத்தான் பேசிக்கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் பேசிய, ** என்று கேட்ட அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்கின்ற கேள்வி, இந்த 21 இலட்சம் வீடுகள் கட்டித் தருவதற்கு பணம் எங்கிருந்து வரப்போகிறது? இதை முதல்வர் தெரிவிக்க வேண்டும். இதில் என்ன தப்பு? கேட்கிறதில் என்ன தப்பு? நாங்கள் கேள்வி கேட்க வேண்டும், நீங்கள் பதில் சொல்ல வேண்டும். ஏற்கெனவே, கற்பனை செய்து பார்க்க முடியாத . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிடுவதற்கு மன்னித்துக் கொள்ளுங்கள். அவர்கள் கேட்பது இந்த அரசாங்கத்தால்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[பேராசிரியர் க. அன்பழகன்] [2010 ஜனவரி 11

21 இலட்சம் வீடுகள் கட்டுவதற்கு முடியுமா என்பது. இந்த ஆண்டே 3 இலட்சம் வீடுகள் என்று சொல்கிறீர்கள், உங்களால் முடியுமா என்று கேட்டார்கள். அதற்குப் பணம் எங்கிருந்து வரப்போகிறது என்று கேட்டார்கள். ஒரு குறிப்பு நான் சொல்ல விரும்புகிறேன், ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்று சொன்னபோது ஒரு ரூபாய்க்குப் போட முடியுமா, இந்த அரசு ஏமாற்றுகிறது என்று சொன்னதன்மூலம் இந்த அரசால் முடியாது என்பதை வலியுறுத்துவதற்காக அப்படிச் சொன்னார்கள். கிலோ ஒரு ரூபாய்க்கு அரிசி எப்படி போட்டோமோ, அதேமுறையில் இந்த வீடுகளும் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்காண்டுகளாக அரசு தாங்கமுடியாத கடன் சுமையில் . . .*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையில் அரசாங்கத்தினுடைய கொள்கையைச் சொல்வார்கள். அதற்கு* Financial resources *எங்கே என்று கேட்டால், அதை பட்ஜெட்டில்தான் சொல்வார்கள். ஆகவே, இப்பொழுதே, கொள்கையைச் சொல்கிறபொழுதே அதற்குப் பணம்,* where is the financial resources *என்று கேட்கக்கூடாது. நீங்கள் எப்போது கேட்க வேண்டும் என்றால்,* Budget-*ஐ* present *செய்த பின்னாலே, அதிலே நிதி ஆதாரம் இருக்கிறதா என்று கேட்கவேண்டும்.*

செல்வி ஜெ ஜெயலலிதா: *பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கற்பனை செய்து பார்க்கமுடியாத, தாங்கிக்கொள்ள முடியாத கடன் சுமையில் தமிழ்நாடு சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. 2006 ஆம் ஆண்டு 31 மார்ச் வரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த கடன் 56 ஆயிரத்து 94 கோடி ரூபாய் ஆகும். 1996-லிருந்து 2001 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டை ஆண்ட, அதற்கு முந்தைய தி.மு.க. ஆட்சி, தமிழ்நாட்டை ஒரு* debt trap-*ல் சிக்க வைத்தது; அதாவது கடன் சுமையில் சிக்க வைத்தது. இரட்டைப் புற்று நோய்களான* Budget deficit and debt trap, *அதாவது நிதிப் பற்றாக்குறை மற்றும் கடன் சுமையை விட்டுவிட்டு, முந்தைய தி.மு.க. அரசு போய்விட்டது. இதனால், வேறு வழியின்றி, 2001-ல் ஆட்சிக்கு வந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு முந்தைய தி.மு.க.*

அரசு பெற்ற கடனை அடைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இருப்பினும் முந்தைய தி.மு.க. அரசு ஏற்படுத்திய மிக மோசமான நிதி நெருக்கடியை பகீரத முயற்சி செய்து சமாளித்து, மீண்டும் தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்றோம்.

முற்பகல் 11-35

2009-2010 ஆம் ஆண்டிற்கான தி.மு.க. அரசின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒட்டுமொத்த கடன் சுமை 85,395.84 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் வருவாய் உபரி 1,951 கோடி ரூபாயாக இருந்தது. அதே நேரத்தில் நிதிப் பற்றாக்குறை 2,251 கோடி ரூபாயாக இருந்தது. தற்போது தி.மு.க. அரசின் 2009-2010 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வருவாய்ப் பற்றாக்குறை 1,024 கோடி ரூபாய் என்றும், நிதிப் பற்றாக்குறை 11,824 கோடி ரூபாய் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 17-2-2009 அன்று தமிழ்நாட்டின் நிதித் துறைச் செயலாளர் பத்திரிகைகளுக்குப் பேட்டியளித்துள்ளார். அப்போது தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த கடன் சுமை 83,000 கோடி ரூபாய் என்றும், ஆண்டு வட்டியாக 6,000 கோடி ரூபாய் ஒவ்வொரு ஆண்டும் செலுத்தப்பட்டு வருகிறது என்றும், நிதித் துறைச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். அதன் பிறகு, இந்தப் பேட்டியளித்த பிறகு, ஓராண்டுக் காலம் கடந்துவிட்டது. தற்போது கடன் சுமை மிகவும் அதிகரித்துவிட்டதாகக் கவலை தரும் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. தற்போது இந்தக் கடன் சுமை 90,000 கோடி ரூபாயைத் தாண்டிவிட்டதாகக் கூறப்படுகிறது. தினசரி வட்டியே 20 கோடி ரூபாய்க்கு மேல் செலுத்தப்படுவதாகக் கூறப்படுகிறது. தற்போது ஒட்டுமொத்தக் கடன் சுமை 90,000 கோடி ரூபாய் என்றே வைத்துக்கொள்வோம். தமிழ்நாட்டின் மக்கள் தொகை 6 கோடி என்று வைத்துக்கொள்வோம். அப்படியென்றால் தமிழ்நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் தலா 15,000 ரூபாய் கடன் உள்ளது என்று பொருள். இதற்கு என்ன பொருள் என்றால், தமிழ்நாட்டில் ஒவ்வொரு குழந்தை பிறக்கும்போதும் தலா 15,000 ரூபாய் கடனுடன் பிறக்கிறது என்று பொருள்படுகிறது.

இந்தக் கடன் சுமை எதனால் ஏற்பட்டது? தமிழ்நாடு அரசின் infrastructural schemes, கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களான, சாலைகள் அமைத்தல், பள்ளிக்கூடங்கள் கட்டுதல், புதிய மருத்துவமனைகள் தொடங்குதல் போன்ற திட்டங்களில் முதலீடு

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2010 ஜனவரி 11

செய்யப்படுவதற்காக இவ்வளவு பெரிய கடன் பெறப்பட்டதா? இல்லை. அதற்குப் பதிலாக எந்தப் பயனும் இல்லாத, non-value creating commodities-ஆன வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் இதர இலவச பொருட்களுக்காக, இந்தக் கடன் சுமை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போதைய தி.மு.க. அரசு மிக அதிகமாகக் கடன் பெற்றுள்ளது. ஆனால் கடனாகப் பெறப்பட்ட பணம் எப்படி செலவு செய்யப்படுகிறது? கடன் பெறப்பட்ட பணத்தை, market borrowings மீதான வட்டி விகிதத்தைவிட, அதிக வருவாய் தரக்கூடிய இனங்களில் செலவு செய்யவில்லை. கடன் பெறப்பட்ட பணத்தை, non-performing items, அதாவது எந்தப் பயனும் அளிக்காத இனங்களில் செலவு செய்து கொண்டிருக்கிறது இந்த தி.மு.க. அரசு. அதனால்தான் வளர்ச்சிப் பணிகளுக்காகச் செலவு செய்ய பணம் இல்லை.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். இந்த அரசு கடன் வாங்கிப் பெற்றப் பணத்தை, அரசுக்குச் சொந்தமான ஒரு புதிய தொழிலைத் தொடங்குவதில் முதலீடு செய்தால் குடிசைகளில் வாழும் மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கலாம். அதன் பின்னர் அந்த மக்கள் தங்கள் குழந்தைகளை நல்ல தரமான பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பிப் படிக்க வைக்கலாம். அதன் பிறகு அந்தக் குழந்தைகள் நல்ல வேலைக்குச் சென்று, தாங்கள் சம்பாதிக்கும் பணத்தை நல்ல வீடு கட்டிக்கொள்வதிலும், கான்கிரீட் வீடு கட்டிக்கொள்வதிலும், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வாங்கிக்கொள்வதிலும் செலவு செய்யலாம். அதுதான் ஒரு நல்ல ஆரோக்கியமான சமுதாயத்திற்கு அடையாளம். ஆனால் அப்படிச் செய்வதற்குப் பதிலாக இந்தத் தி.மு.க. அரசு தமிழ்நாட்டை திவாலாகும் நிலைக்குத் தள்ளிக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: புள்ளிவிவரங்களைச் சொன்னீர்கள். (குறுக்கீடு) அந்தப் புள்ளிவிவரம் தவறு. (குறுக்கீடு)

செல்வி ஜெ ஜெயலலிதா: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதைய தி.மு.க. அரசின் மிகத் தவறான பொருளாதாரக் கொள்கையால் மாநிலத்தின் வருவாய் பாழாக்கப்பட்டுள்ளது. வரிகள்மூலம் கிடைக்கும் வருவாய் பலவீனமடைந்துள்ளது.

2010 ஜனவரி 11] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பற்றாக்குறை மிகப் பெரிய அளவில் உள்ளது; வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் பெருகியிருக்கிறது; விலைவாசிகள் விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்துள்ளன. மறுபடியும் இந்தத் தி.மு.க. அரசு தமிழ்நாட்டை அதலபாதாளத்திற்கு அழிவுப்பாதையில் அழைத்துச் சென்றுகொண்டிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11-40

இப்போது சில முக்கியமான புள்ளிவிவரங்களை நான் சொல்ல விரும்புகிறேன். Annual growth percentage of Gross State Domestic Product. அதாவது, மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் ஆண்டு வளர்ச்சி விகிதத்தைப் பாருங்கள். இதைப் பார்த்தாலே தமிழ்நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை விளங்கும். 2004-2005 மற்றும் 2005-2006-ல், அதாவது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இந்த வளர்ச்சி விகிதம் 11.45 விழுக்காடு மற்றும் 11.89 விழுக்காடு என்ற அளவில் இருந்தது. இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு விளங்கியது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அது எங்களுடைய ஆட்சிக் காலத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில். 2007-2008 மற்றும் 2008-2009-ல் தி.மு.க. ஆட்சியில், அந்த வளர்ச்சி விகிதம் 4.41 விழுக்காடு மற்றும் 4.55 விழுக்காடு என்னும் அளவிற்கு வீழ்ச்சி அடைந்துள்ளது. அதாவது, இந்தியாவிலேயே மிகவும் குறைவான வளர்ச்சி விகிதத்தைப் பெற்றுள்ள மாநிலம் தமிழ்நாடுதான். சிறிய மாநிலங்களான சத்தீஸ்கர், ஜார்க்கண்ட் போன்ற மாநிலங்களைவிட தமிழ்நாடு இன்று பின்தங்கியுள்ளது. இந்தியாவிலுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு இப்போது கடைக்கோடியில் நிற்கிறது. இதுதான் தற்போதைய தி.மு.க. அரசின் சாதனை.

எனவே, நான் சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன். முதல் கேள்வி, தற்போது தமிழ்நாட்டின் மொத்த கடன் சுமை எத்தனை கோடி ரூபாய்? இரண்டாவது கேள்வி, 21 இலட்சம் வீடுகளை இலவசமாக ஏழையெளிய மக்களுக்குக் கட்டித் தருவதற்கு எங்கிருந்து பணம் பெறப்போகிறீர்கள்? மூன்றாவது கேள்வி, மாநில மொத்த உற்பத்தி மதிப்பின் ஆண்டு வளர்ச்சி விகிதத்தில் ஏன் இந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது? இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்? மேலும் சில கேள்விகளை நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். முதல் கேள்வி, 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கப்படும்

என்ற வாக்குறுதி அளித்து, 2006 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தது இந்தத் தி.மு.க. அரசு. தற்போது ஆளுநர் உரையில், 2 இலட்சத்து 11 ஆயிரத்து 356 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய உரையில் குறுக்கிடுவதாகக் கருதவேண்டாம். '55 இலட்சம் ஏக்கர் என்று சொன்னீர்களே, அது என்னவாயிற்று?' என்று கேட்கிறார்கள்? '2 இலட்சம் ஏக்கர்தானே கொடுத்திருக்கிறீர்கள்' என்று கேட்கிறார்கள். அது உண்மைதான். 55 இலட்சம் ஏக்கர் என்று அ.தி.மு.க.-வினுடைய நிதிநிலை அறிக்கையிலேதான் தெரிவிக்கப்பட்டது. அடுத்த ஆண்டு, நாங்கள் ஆட்சிக்கு வந்தபோது, அ.தி.மு.க. வெளியிட்ட நிதிநிலை அறிக்கையிலே உள்ள 55 இலட்சம் ஏக்கர் என்பதை நாங்களும் நம்பி, அதை ஏற்றுக்கொண்டு, 55 இலட்சம் ஏக்கர் என்று சொன்னது உண்மை. அடுத்த ஆண்டே அதைத் திருத்திக்கொண்டு, நாங்கள், 'நீங்கள் வெளியிட்ட புள்ளிவிவரத்தை நம்பி இதை வெளியிட்டுவிட்டோம்' என்று குறிப்பிட்டிருக்கிறோம். ஆகவே, 55 இலட்சம் ஏக்கர் நிலம் என்று சொன்னது நாங்களல்ல. அ.தி.மு.க. அரசினுடைய நிதிநிலை அறிக்கை. ஆதாரம் தேவையென்றால் (குறுக்கீடுகள்) அந்த ஆதாரத்தைச் சட்டசபையிலேயே படித்திருக்கிறோம். (கூச்சல்-குழப்பம்) சத்தம் போட்டு, ஒலியெழுப்பி உங்கள் தலைவருடைய பேச்சைக் காப்பாற்றி விடலாம் என்று கருதாதீர்கள். நாங்கள் அதற்குக் குறுக்கே நிற்கவில்லை. ஆனால், அவையில் நாம் சில மரபுகளைக் கடைப்பிடிக்க வேண்டும். கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளலாம். ஆனால், கூச்சல் போட்டு, உங்கள் தலைவருடைய பேச்சுக்கு நீங்களே இடையூறு செய்ய வேண்டாம் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்களை மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

செல்வி ஜெ ஜெயலலிதா: பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவரின் பேச்சில் யார் குறுக்கிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவையிலுள்ள அனைவரும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலத்தைப் பற்றி 2006 ஆம் ஆண்டிலிருந்தே முதல்வர் அவர்கள் தவறான தகவல்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். எங்கள் ஆட்சிக் காலத்தில்

2010 ஜனவரி 11] [செல்வி ஜெ ஜெயலலிதா]

வெளியிடப்பட்ட நிதிநிலை அறிக்கையில் 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் பண்படுத்தப்படும் என்று அறிவித்தோமே தவிர, அந்த 55 இலட்சம் ஏக்கர் நிலமும் அரசிடம் இருக்கிறதென்று எங்கேயும் சொல்லவில்லை. அப்படிச் சொல்லியிருந்தால் அதைக் காட்டட்டும் பார்க்கலாம். ஆகவே, நாங்கள் சொன்னதைத் தவறாகப் புரிந்துகொண்டு, அதன் அடிப்படையில் . . .

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள், 55 இலட்சம் ஏக்கர் நிலம் பண்படுத்தப்படும் என்று சொன்னதைத்தான் நம்பி, அப்படிப் பண்படுத்தப்பட்டால் அதைப் பாமர மக்களுக்கு, ஏழையெளியவர்களுக்குத் தரலாம் என்று அறிவித்தோம்.

செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய அறிவிப்பைத் தற்போதைய முதல்வர் தவறாகப் புரிந்துகொண்டால், அது எங்களுடைய தவறல்ல. அதற்கு நாங்கள் பொறுப்பல்ல. எங்களுடைய நிதிநிலை அறிக்கையில், பட்டா நிலங்கள் உட்பட, பல ஏழை விவசாயிகளிடம் இருந்த ஒட்டுமொத்த 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் பண்படுத்தப்படும் என்றுதான் சொன்னோம். அதில் எத்தனையோ நிலங்கள், பட்டா நிலங்கள், ஏழை விவசாயிகளுக்குச் சொந்தமானது. 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலமும் அரசிடம் இருக்கிறது என்று எங்கேயும் இதுவரை நாங்கள் சொல்லவில்லை. எனவே, நான் ஆளுநர் உரைக்கு வருகிறேன். தற்போது ஆளுநர் உரையில் 2 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் வழங்கப்பட்டுவிட்டதாகக் கூறப்பட்டுள்ளது. அப்படியென்றால், மீதமுள்ள 53 இலட்சம் ஏக்கர் நிலம் என்னவாயிற்று? அதைப்பற்றி ஆளுநர் உரையில் எதுவும் குறிப்பிடவில்லையே?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், 53 இலட்சம் ஏக்கர் நிலம் என்னவாயிற்று, என்னவாயிற்று என்று

கேட்கிறார்கள். அந்த நிலம் எங்கேயிருக்கிறது என்று காட்டுங்கள். என்னவாயிற்று என்று நாங்கள் சொல்கிறோம்.

செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கேயிருக்கிறது என்று நாங்கள் எப்படிக் காட்டமுடியும்? இருக்கிறது என்று அவர்கள்தானே சொல்லியிருக்கிறார்கள். இந்த தி.மு.க. அரசுக்கு இன்னும் ஓராண்டுதான் பதவிக் காலம் மீதம் உள்ளது. மீதமுள்ள 53 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை இந்த ஓராண்டிற்குள் ஏழையெளிய குடும்பங்களுக்கு வழங்கப் போகிறீர்களா என்பது என்னுடைய ஒரு கேள்வி.

அடுத்த கேள்வி, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 62 இலட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் பதிவு செய்து வேலைக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆளுநர் உரையில், 3.5 இலட்சம் இளைஞர்களுக்கு மட்டுமே உதவித் தொகை வழங்கப்பட்டுவருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால், மீதமுள்ள 59 இலட்சம் இளைஞர்களின் கதி என்ன? அந்த 59 இலட்சம் பேருக்கும் எப்போது உதவித் தொகை வழங்கப் போகிறீர்கள்?

அடுத்த கேள்வி, அரசுப் பணியில் தற்போது காலியாக உள்ள ... (குறுக்கீடு) இப்படி குறுக்கிட்டுக் கொண்டேயிருந்தால் எப்படிப் பேச முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய விளக்கம். ஒரேயொரு விளக்கம் சொல்லிவிடுகிறேன். அந்த அரசாணையின்படி, படித்துவிட்டு ஐந்தாண்டுகள் சும்மாயிருந்து, வேலையில்லாமல் இருந்த பிறகுதான், அவர்களுக்குத்தான் உதவித் தொகை என்று இருக்கிறதே தவிர, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த அனைவருக்கும் உதவித் தொகை என்று இல்லை. தயவுசெய்து எதிர்க்கட்சித் தலைவர் அந்த அரசாணையைச் சரியாகப் படித்துப் பாருங்கள். பட்டம் பெற்று, அல்லது படித்துவிட்டு, ஐந்தாண்டுகள் சும்மா இருந்த பிறகுதான், அவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும் என்று ஆணையிலே இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் கொடுக்கிறார்கள்.

2010 ஜனவரி 11]

செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பணியில் தற்போது காலியாக உள்ள 2 இலட்சம் பணியிடங்களை ஓய்வு பெற்றவர்களைக் கொண்டு நிரப்பும் அரசாணையை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். இதைத் திரும்பப் பெறாதது, இளைஞர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த அரசாணையைத் திரும்பப் பெறப் போகிறீர்களா? இல்லையா? முதலமைச்சர் இதற்கு அவசியம் பதில் சொல்லவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பாக நானும் பதில் சொல்லலாம்; அதனால் சொல்கிறேன். எந்த அரசாணையிலும் 2 இலட்சம் காலியிடங்களும் இப்படிப்பட்ட ஓய்வுபெற்றவர்களால் நிரப்பப்படும் என்று சொல்லப்படவில்லை. ஓய்வு பெற்றவர்களை எந்த இடத்திலே எந்த முறையில் நிரப்புவது என்பது அறிவிக்கப்பட்டுள்ளது. எப்படியென்றால், Public Service Commission மூலமாக புதியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அரசாங்கத்திற்குக் கிடைக்காத நேரங்களில், உரிய பயிற்சி பெற்றவர்கள் இல்லையென்ற நிலைமை இருக்குமானால், வேறு வழியில்லையென்றால், தற்காலிகமாகப் பல பேரை, ஓய்வு பெற்றவர்களை நியமித்துக்கொள்ளலாம் என்று இருக்கிறதே தவிர, அந்த 2 இலட்சம் இடங்களையும் ஓய்வு பெற்றவர்களைக் கொண்டே நிரப்புவதாக அறிவிக்கவில்லை. அதை அரசாங்கம் செய்யாது.

செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழ்நாட்டில் விலைவாசி உயர்வு எல்லா எல்லைகளையும் கடந்து, வானத்தை நோக்கிப் பறந்து சென்று கொண்டிருக்கிறது. தற்போதைய தி.மு.க. அரசுக்கு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தத் தி.மு.க. அரசு இந்த அளவிற்குப் பெரிய தொகையைக் கடனாகப் பெற முடிகிறதென்றால், கடந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், அதாவது எங்களது ஆட்சியில் நாங்கள் கடைப்பிடித்த நல்ல பொறுப்புள்ள பொருளாதாரக் கொள்கைதான் அதற்குக் காரணம். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் நல்ல பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்ததனால்தான் இந்தக் கடனை

உங்களால் வாங்க முடிகிறது. Our Government improved the credit-rating amongst international lenders. அதாவது, கடன் வழங்கும் சர்வதேச நிதி நிறுவனங்கள் மத்தியில் தமிழ்நாடு அரசு, ஒரு பொறுப்புள்ள அரசாக, பெற்ற கடனைச் சரியாகத் திருப்பிச் செலுத்திவருகிறது என்ற ஒரு நல்ல பெயரை ஏற்படுத்தினோம். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, எதிர்காலத்தில், வருங்காலத்தில், மீண்டும் கடன் பெறவேண்டுமென்றால், we have to maintain the credit rating of the State in good standing. அதாவது, தமிழ்நாட்டிற்கு நாங்கள் ஏற்படுத்திய நல்ல பெயரை இந்தத் தி.மு.க. அரசு தக்க வைத்துக்கொள்ள வேண்டும். ஆனால், தற்போது தி.மு.க. அரசு செலவிடும் முறையைப் பார்த்தால் அந்த நற்பெயரைத் தக்க வைத்துக்கொள்ளுமா என்பது மிகவும் சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது.

முற்பகல் 11-50

தேர்தல் நேரத்தில் ஒரு வாக்காளர் தனது வாக்கை அளிப்பதற்கு 5,000 ரூபாயை இலஞ்சமாகப் பெறுகிறார் என்று வைத்துக்கொள்வோம். நான் எந்தக் குறிப்பிட்ட தேர்தலையும், எந்தக் குறிப்பிட்ட கட்சியையும் சொல்லவில்லை. ஓர் உதாரணத்திற்குச் சொல்கிறேன். தேர்தல் நேரத்தில் ஒரு வாக்காளர் தனது வாக்கைச் செலுத்துவதற்காக 5,000 ரூபாய் பெற்றுக்கொண்டு வாக்களிக்கிறார். அப்படிப்பட்ட வாக்காளர் தமிழ்நாட்டின் நீண்டகால பொருளாதார ஆரோக்கியத்தைப்பற்றிக் கவலைப்படாத, தொலைநோக்குப் பார்வையில்லாத, மிகவும் பொறுப்பற்ற அரசாங்கத்திற்கு வாக்களித்திருக்கிறார் என்றுதான் அர்த்தம். ஆனால், அத்தகைய வாக்காளர்கள் இதை உணரவில்லை.

சர்க்கரை என்ற ஒரு பொருளை எடுத்துக்கொள்வோம். கடந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், ஒரு குடும்பம் சர்க்கரை வாங்குவதற்கு ஒவ்வொரு மாதமும் 30 ரூபாய் செலவு செய்தது என்று வைத்துக்கொள்வோம். தற்பொழுது அதே குடும்பம் அதே சர்க்கரையை வாங்க ஒவ்வொரு மாதமும் 90 ரூபாய் செலவு செய்துகொண்டிருக்கிறது என்பதை அவர்கள் உணரவில்லை. அப்பொழுது செலவு செய்த 30 ரூபாய்க்கும், தற்பொழுது செலவு செய்துகொண்டிருக்கின்ற 90 ரூபாய்க்கும் வித்தியாசம் 60 ரூபாய். 60 மாதத்தில், அதாவது ஐந்தாண்டுக் கால ஆட்சியில் ஒவ்வொரு மாதமும் 60 ரூபாய் கூடுதல் செலவு செய்தால், ஆரம்பத்தில் வாக்களிக்க இலஞ்சமாகப் பெற்ற

5,000 ரூபாயில் அந்த வாக்காளர் 3,600 ரூபாயை சர்க்கரை வாங்குவதற்காக மட்டுமே செலவு செய்திருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதே குடும்பம் மற்ற அத்தியாவசிய பொருட்களை வாங்குவதற்குச் செலவிடும் கூடுதலான தொகையைச் சேர்த்துக் கணக்கிட்டால், ஐந்தாண்டுக் காலத்தில் ஆரம்பத்தில் பெற்ற 5,000 ரூபாயைவிட அந்தக் குடும்பம் பல மடங்கு கூடுதல் பணத்தை, தோராயமாக ஐந்து மடங்கு கூடுதல் பணத்தைச் செலவு செய்து, இந்த அரசுக்கே திருப்பிச் செலுத்திக் கொண்டிருக்கிறது என்பதை உணர வேண்டும். ஏற்கெனவே, நான் தெரிவித்த தலா 15,000 ரூபாய் கடனுடன் இதையும் சேர்த்தால் மக்கள் எப்படிப்பட்ட துர்ப்பாக்கியமான எதிர்காலத்தை தங்கள் பிள்ளைகளுக்கும், பேரக் குழந்தைகளுக்கும் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

ஆளுநர் உரையில், 'கொத்தி உயிரெடுக்கும் நச்சுப் பாம்பாக' மக்களை வாட்டிக் கொண்டிருக்கும் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவது குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஏன்? அதற்கு இந்த அரசு என்ன செய்யப் போகிறது? விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கும் உத்தேசம் இந்த அரசுக்கு இல்லையா?

மணல் கொள்ளை, அரிசிக் கடத்தல் ஆகியவை குறித்து ஆளுநர் உரையில் எதுவுமே குறிப்பிடப்படவில்லை. அப்படியென்றால், அதைக் கட்டுப்படுத்தும் எண்ணமே இந்த அரசுக்கு இல்லையென்று எடுத்துக்கொள்ளலாமா?

'மலிவு விலையில் மளிகைப் பொருள்' என்ற திட்டத்தின்கீழ் 50 ரூபாய்க்கு 10 மளிகைப் பொருட்கள் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட்டு வருவதாக ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இல்லாத ஒரு திட்டத்தை இருப்பதாகச் சொல்லியிருப்பது முறையற்ற செயல். இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்ட பிறகு ஒரு சில ரேஷன் கடைகளில் ஒரு மாதம் மட்டும் இந்தப் பொருட்கள் வழங்கப்பட்டன. அதன் பின்னர் அடியோடு நிறுத்தப்பட்டுவிட்டன. இல்லாத ஒன்றை இருப்பதாக அறிவித்திருப்பது மக்களை ஏமாற்றும் தவறான செயலாகாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2010 ஜனவரி 11

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசியைக் குறைந்த விலையிலே கொடுத்தோம், பருப்பைக் குறைந்த விலையிலே கொடுத்தோம், உளுத்தம் பருப்பைக் குறைந்த விலையிலே கொடுத்தோம். அப்பொழுது பத்திரிகைகள், எதிர்க்கட்சியிலே இருந்தவர்களெல்லாம் குழம்புக்காகிற இந்த 10 பொருட்களின் விலை என்னவென்று கேட்டபொழுதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் 2 ஆம் தேதி இத்திட்டத்தை, இதே கோட்டையிலே தொடங்கி வைத்தார்கள். இன்றைக்கும் கடைகளிலே அவை விற்கப்படுகின்றன. எதிர்க்கட்சித் தலைவர் கடைக்குப் போகாததனால் அது தெரியாதேயொழிய, இன்றைக்கும் கடையிலே அந்தப் பொருள்கள் விற்கப்படுகின்றன. இப்பொழுதுகூட தமிழ்நாட்டிலே எங்கு வந்தாலும், எந்தக் கடைக்கு வந்தாலும் நான் அதைக் காட்டத் தயாராக இருக்கிறேன். எந்தக் கடைக்கு வந்தாலும் காட்டத் தயாராக இருக்கிறேன். இப்பொழுதும் அப்பொருள்கள் விற்கப்படுகின்றன.

செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரவா, மைதா, கோதுமை, துவரம் பருப்பு இத்தகைய பொருட்கள் வழங்கப்பட்டு வருவதாகக் கூறுகிறார்களே தவிர, எப்பொழுது ரேஷன் கடைகளுக்குச் சென்றாலும் 'not available' - 'இருப்பு இல்லை' என்ற பதில்தான் வருகிறது என்பதுதான் உண்மை. *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11-55

அடுத்து, சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைக்கு வருகிறேன். தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு அடியோடு சீரழிந்துவிட்டது. எங்கு பார்த்தாலும், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, ரௌடித்தனம், கட்டப் பஞ்சாயத்து, பொதுமக்களின் சொத்துக்கள் அபகரிப்பு, மக்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பற்ற சூழ்நிலை, உச்சகட்டமாகக் காவல் துறையினருக்கே பாதுகாப்பற்ற சூழ்நிலை. இதுதான் இன்று தமிழ்நாட்டின் அவல நிலை. சில நாட்களுக்கு முன்பு, நெல்லை அம்பாசமுத்திரம் அருகே காவல் துறை சார் ஆய்வாளர் வெற்றிவேல் பட்டப் பகலில் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டது, இந்த நாட்டு மக்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. பட்டப் பகலில், நடு ரோட்டில் வெற்றிவேல்மீது வெடிகுண்டுகளை வீசியும், அவரை அரிவாளால் வெட்டியும், ஒரு கால் துண்டிக்கப்பட்டு, உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்டு,

2010 ஜனவரி 11] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இரத்த வெள்ளத்தில் துடித்துக் கொண்டிருந்தார், உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார். உதவி கோரி கதறிக்கொண்டிருந்தார். அந்த நேரத்தில் அதை இரண்டு தி.மு.க. அமைச்சர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளும் ** அந்த மனிதாபிமானமற்ற செயலை இந்த நாட்டில் உள்ள தொலைக்காட்சிகள் படம் பிடித்துக் காட்டின.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு அமைச்சர்களும் அந்த இடத்திற்குச் சென்றார்கள் என்று சொல்லலாமே தவிர, ** என்று சொன்னால், அது முறையல்ல. அந்த வார்த்தையை வாபஸ் பெறவேண்டும். இல்லையென்றால் நீக்க வேண்டும். ** அப்படிச் சொல்வது மிகப் பெரிய தவறு. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன ** என்ற வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்)

செல்வி ஜெ ஜெயலலிதா: இல்லை, இல்லை. ** என்ன un-parliamentary வார்த்தைகளா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் பயன்படுத்திய வாகனத்தில் இரட்டை இலைச் சின்னமும் அ.தி.மு.க கொடியும்தான் இருந்தது என்று பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. ஆக, அ.தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள் கொலைசெய்துவிட்டு, தி.மு.க. அமைச்சர்கள் பற்றி சொல்வது சரியில்லை.

செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைவிட மனிதாபிமானமற்ற செயல் எதுவும் இருக்க முடியாது. அமைச்சர்களும் சரி, அரசு அதிகாரிகளும் சரி, ** வெற்றிவேலைக் காப்பாற்றிட யாரும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த நாடே, இந்தக் கோர. . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தவறான தகவலை அவைக்குத் தெரிவிக்கின்றார்கள். நாங்கள் ** இவர்கள் பார்த்தார்களா? (குறுக்கீடுகள்) பார்த்தார்களா? (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள்தான். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர், ** என்று அவர்கள் சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டாகிவிட்டன. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர்களும் சரி, அரசு அதிகாரிகளும் சரி, ** வெற்றிவேலைக் காப்பாற்ற யாரும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த நாடே இந்தக் கோரக் காட்சியைத் தொலைக்காட்சியில் பார்த்து அதிர்ச்சியில் உறைந்து போயிருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம். அமைச்சர்மீது ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அவர் பதில் சொல்வதற்கு நான் வாய்ப்பு கொடுத்தாக வேண்டும்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தொடர்ந்து (குறுக்கீடுகள்) உண்மைக்குப் புறம்பான ஒரு குற்றச்சாட்டைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு நிகழ்ச்சி எதிர்பாராமல் அங்கு நடந்திருக்கிறது. ஒரு பக்கத்தில் கொலை செய்தவர்கள் ஓடுகிறார்கள். அவர்களை போலீஸ் விரட்டிக் கொண்டு ஓடுகிறது. இன்னொரு பக்கம் நாட்டு வெடிகுண்டுகள் வீசப்பட்டிருக்கின்றன. அங்கே ஏழெட்டு வெடிகுண்டுகள் இருக்கின்றன. ஆனாலும், அமைச்சர் அவர்கள், அந்த என்.டி. டி.வி.யில் காட்டும்போதுகூட, மாண்புமிகு சுகாதாரத் துறை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2010 ஜனவரி 11] [திரு. துரைமுருகன்]

அமைச்சர் அவர்கள் கீழே இறங்கி, ஆம்புலன்சுக்கு ஃபோன் செய்ததுமட்டுமல்ல; மாண்புமிகு அமைச்சர் திரு. மைதீன்கான் அவர்களுடைய செக்யூரிட்டிக்கு வந்த போலீஸ் ஜீப்பிலேதான், ஏற்றி அவர்களை அனுப்பியிருக்கிறார்கள். அங்கு, கூட வந்த டாக்டரையும் அவரோடு சேர்த்து அனுப்பியிருக்கிறார்கள். இவ்வளவையும் செய்ததை ** என்று வேண்டுமென்றே ஒரு குற்றச்சாட்டைச் சுமத்துவது சரியல்ல. ஆனால், இன்றைக்கு நான் பத்திரிகையில் பார்த்த ஒரு செய்தி என்னவென்றால், அந்தக் கொலையைச் செய்தவர்கள் அ.தி.மு.க.-காரர்களாகத்தான் இருப்பார்கள் என்பதற்கு போலீஸ் இந்த ஆதாரங்களை அளித்திருக்கிறது. கந்தசாமி என்கிறவர் அந்தக் கொலையைச் செய்தவர்களில் ஒருவர். அவர் ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கியிருக்கிறார். அதிலே நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய போட்டோ ஒட்டப்பட்டிருக்கிறது. சின்னம் ஒட்டப்பட்டிருக்கிறது. அதுகுறித்த செய்தி இன்றைக்கு எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. அதைப்பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் என்ன சொல்கிறார்?

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த case investigation-ல் இருக்கிறது. You please move to other subjects.

செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சிகளில் அனைவரும் பார்த்த காட்சிகளைப் பற்றித்தான் நான் இங்கே பேசிக் கொண்டிருக்கிறேன். வெற்றிவேல்மீது குண்டுகள் வீசப்பட்டு, அரிவாளால் அவர் வெட்டப்பட்டார். ஒரு கால், முழங்காலுக்குக் கீழே துண்டிக்கப்பட்டுவிட்டது. இரத்தம் வெள்ளமாக, ஆறாக ஓடிக்கொண்டிருந்தது. அந்த நேரத்தில் அவர் துடித்துக் கொண்டிருந்தபோது, உதவி கோரி கதறிக் கொண்டிருந்தபோது, அங்கே இருந்தவர்கள் யாரும் அவர் அருகிலேயே செல்லவில்லை. கிட்டத்தட்ட 25, 30 நிமிடங்கள் அவர் அங்கே தன்னந்தனியாக அவதிப்பட்டுக் கொண்டிருந்தார், துடித்துக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் அங்கேயிருந்தவர்கள் யாராவது ஒரு வேட்டியைக் கிழித்து அந்த வெட்டுப்பட்ட காலிலிருந்து இரத்தம் ஊற்றிக்கொண்டிருந்த

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்ிணங்க அகற்றப்பெற்றது.

அந்த இடத்தில் இறுக்கி ஒரு கட்டுப் போட்டிருந்தால், அங்கேயிருந்த வாகனத்தில் உடனடியாக அவரை ஏற்றி உடனே மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றிருந்தால், அவருடைய உயிர் காப்பாற்றப்பட்டிருக்கும்.

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்த இடத்தில் அப்பொழுது இருந்த காரணத்தால் பதில் சொல்ல விரும்புகிறேன். அந்த நிகழ்ச்சி நடந்து முடிந்தபிறகு அந்த இடத்திற்குச் செல்கிறோம். அந்தப் பரிதாப நிலையைப் பார்க்கிறோம். பார்த்தவுடன் எங்களுக்கே ஒன்றும் ஓடவில்லை. சில நிமிடங்களில் உடனடியாக அதற்கு உதவ ஏற்பாடு செய்து, கால் துண்டிக்கப்பட்டுவிட்ட காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, என்னுடைய செக்யூரிட்டி வாகனத்திற்குப் பின்னாலே ஏற்றி, ஏற்றுவதற்குக்கூட என்னுடைய P.S.O-உம், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய டபேதாரும் சேர்ந்துதான் ஏற்றினார்கள். அவர்கள் துணியைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் வண்டியிலிருந்த சால்வைகளைக் கொண்டு கட்டித்தான், உடனடியாக அம்பாசமுத்திரத்திலுள்ள ஆஸ்பத்திரிக்கு அனுப்பியிருக்கிறோம். அதற்குப் பின்னாலே, 108 ஆம்புலன்ஸ் வந்திருக்கிறது. கிட்டத்தட்ட 2 மணி 50 நிமிடத்திற்கு, அம்பாசமுத்திரத்திற்கு அந்த வாகனம் 10 நிமிடங்களில் செல்கிறது. மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள்கூட அந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள், என்ன செய்ய வேண்டுமென்று. அம்பாசமுத்திரத்தில் அவருக்கு முதலுதவி செய்யப்பட்டு, அதற்குப் பின்னாலே சுமார் 3-50 மணிக்கு Highground-லே உள்ள, பாளையங்கோட்டை மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. ஆம்பூருக்கும் பாளையம்கோட்டைக்கும் சுமார் 70 கிலோ மீட்டர் இருக்கிறது. எத்தனை நிமிடங்கள் ஆகுமென்று நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள். Investigation-க்குள் செல்லவில்லை. மனிதாபிமான முறையிலே செய்யப்பட்டதைக் கொச்சைப்படுத்துகிறீர்கள். நாங்கள் எல்லாம் மனிதாபிமானம் உள்ளவர்கள் என்பதை மனச்சாட்சி இல்லாதவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

2010 ஜனவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் . . .

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஒரு உயிரை . . .

செல்வி ஜெ ஜெயலலிதா: இப்போதுதான் அவர் ஒரு விளக்கம் சொன்னார். மறுபடியுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: இவர்கள் முதலமைச்சராக இருக்கும்பொழுது, மகாமகம் குளத்திலே (குறுக்கீடுகள்) 100 பேர் இறந்தார்களே, அவர்களை இவர்கள் காப்பாற்றினார்களா? காப்பாற்றினார்களா இவர்கள்? 100 பேர் இறந்தார்கள். காப்பாற்றினார்களா இவர்கள்? (குறுக்கீடுகள்) மனிதாபிமானத்துடன் நாங்கள் நடந்து கொண்டதைக் கொச்சைப்படுத்துகின்ற முன்னாள் முதல்வர்—மகாமகம் குளத்தில் 100 பேர் விழுந்து செத்தார்கள். இவர்கள் காப்பாற்றினார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவருக்கு அமைச்சர் பதில் சொன்னார். ஒரு நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது, வெடிகுண்டு சமாச்சாரம். ஆனால், மகாமகம் குளத்திலே—அவர் சொன்னதைச் சொல்கிறேன். மகாமகம் குளத்திலே நூற்றுக்கணக்கானவர்கள் செத்து மிதந்தார்களே, மீன்களைப் போல, அன்றைய முதலமைச்சர் ஓடினாரா? ஆதரவு அளித்தாரா? தூக்கினாரா? ஆஸ்பத்திரிக்குப் போனாரா, மருந்து கொடுத்தாரா என்று அமைச்சர் கேட்கிறார்.

செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலமைச்சராக இருந்தபொழுது, வீரப்பனைப் பிடிப்பதற்காக அமைக்கப்பட்ட special task force தலைவராக இருந்த காவல் துறை உயர் அதிகாரி திரு. தேவாரம் அவர்களுக்குப் படுகாயம் ஏற்பட்டபோது, அவரைச் சென்னைக்குக் கொண்டு வரச் செய்து, நல்ல மருத்துவமனையில் சேர்த்து, நான் உடனடியாகச் சென்று அவரைப் பார்த்து, அவருக்குத் தேவையான உதவிகளைச் செய்து, அவர் மனைவிக்கும் மகளுக்கும் ஆறுதல் கூறி வந்தேன்

என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சம்பவத்தில் வெற்றிவேல் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் . . . *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைவரும் அமைதியாக இருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவாதம், வால்டர் தேவாரத்தைக் கொண்டு வந்தார்களா என்பதல்ல. மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னது, மகாமகம் குளத்திலே செத்தவர்களுக்கு முதலமைச்சர் போனாரா என்பது, அவ்வளவுதான்.

பிற்பகல் 12-05

செல்வி ஜெ ஜெயலலிதா: சம்பந்தம் இல்லாமல் பேசிக்கொண்டிருக்கிறார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சுட்டிக்காட்ட விரும்புவது இதுதான். பொதுவாக ஒருவருக்குப் படுகாயம் ஏற்பட்டு அவர் உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கும்போது, Golden hour என்று சொல்வார்கள். ஒரு மணி நேரத்திற்குள் அவரை உரிய மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று உரிய சிகிச்சை அளிக்கப்பட்டால், உயிரைக் காப்பாற்றலாம். நான் சொல்ல விரும்புவது இதுதான். வெற்றிவேல் அங்கே படுகாயம் அடைந்து, ஒரு கால் துண்டிக்கப்பட்டு, இரத்த வெள்ளத்தில் அவர் துடித்துக்கொண்டிருந்தபோது அங்கே இருந்தவர்களில் அமைச்சர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர், Health Secretary இன்னும் பல அதிகாரிகள் இருந்தார்கள். யாரும் அவர் அருகில்கூடச் செல்லவில்லை. *(குறுக்கீடுகள்)* அவரைத் தொடவில்லை. அவரைத் தூக்கவில்லை. அவரைக் கைத்தாங்கலாகப் பிடித்து எந்த உதவியும் செய்யவில்லை. அவர் தண்ணீர் கேட்டால்கூட பாட்டிலை அவர் முகத்தில் வீசி எறிந்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் துடித்துக்கொண்டிருந்தபோது நீங்கள் பார்த்த அதே டி.வி.-யிலே நானும் பார்த்தேன். நீங்கள் பார்த்த டி.வி.யிலே

2010 ஜனவரி 11] [திரு. துரைமுருகன்]

அருகிலே போய் தண்ணீர் கொடுத்திருக்கிறார்கள். இரண்டு Security Officer-கள்தான் போய்த் தொட்டுத் தூக்கியிருக்கிறார்கள். அந்த வண்டியிலே கொண்டுபோய் ஜீப்பிலே ஏற்றி இருக்கிறார்கள். யாருமே போகவில்லை என்று சொல்வது அபாண்டம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, பேசுங்கள்.

செல்வி ஜெ ஜெயலலிதா: பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றிவேலின் ஒரு கால் ... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ.ம. வேலுசாமி, உட்காருங்கள்.

செல்வி ஜெ ஜெயலலிதா: தலைவர் அவர்களே, வெற்றிவேலின் ஒரு கால் துண்டிக்கப்பட்டதால், அந்தக் காயத்திலிருந்து இரத்தம் ஆறாக ஓடிக்கொண்டிருந்தது. (குறுக்கீடுகள்) என்னுடைய கேள்வி இதுதான். யாருமே அருகில் . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது, தொடர்புடைய அமைச்சர்கள் தெளிவாகப் பதில் சொல்லிவிட்டார்கள். எல்லோரும் சொல்லிவிட்டார்கள். நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரைக் கேட்பது, திரும்பத் திரும்ப அதையே சொல்ல வேண்டாம். அரைத்த மாவை அரைக்காதே! துவைத்த துணியைத் துவைக்காதே!

செல்வி ஜெ ஜெயலலிதா: பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) என்னைப் பேச விடுங்கள். இதுகுறித்து அரசுக்கு..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர், அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.

செல்வி ஜெ ஜெயலலிதா: நான் அடுத்ததற்குப் போகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுகுறித்து வழக்கு விசாரணையிலே இருந்துகொண்டிருக்கிறது. அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.

செல்வி ஜெ ஜெயலலிதா: போகிறேன். இதுகுறித்து சில கோரிக்கைகளை அரசுக்கு வைக்கிறேன். (குறுக்கீடுகள்) Mike-ஐக் கொடுங்கள். ** (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இப்பொழுது கடைசியிலே சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) நான் ஆரம்பத்திலிருந்து சொல்லிக்கொண்டே இருக்கிறேன். (குறுக்கீடுகள்)

செல்வி ஜெ ஜெயலலிதா: இல்லை, பேச வேண்டாம் என்கிறீர்களா? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள்.

செல்வி ஜெ ஜெயலலிதா: எந்த நடவடிக்கையும் எடுக்காமல், இந்தக் கோரக் காட்சியை சும்மா நின்று பார்த்துக்கொண்டிருந்த மாவட்ட ஆட்சித் தலைவர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். வெற்றிவேலின் குடும்பத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ள 7 இலட்சம் ரூபாய் உதவித் தொகையை, 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட வேண்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டாகிவிட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உட்காருங்கள்.

செல்வி ஜெ ஜெயலலிதா: தமிழகத்தில் மின் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ளது. ஆனால், கடுமையான மின்சாரப் பற்றாக்குறை தொடர்ந்து நிலவிக்கொண்டுதான் இருக்கிறது. இதன் விளைவாகத் தொழில் உற்பத்தியும், விவசாய உற்பத்தியும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. கரும்புக்கான கொள்முதல் விலையை டன் ஒன்றுக்கு 2 ஆயிரம் ரூபாய் அளவிற்கு உயர்த்த வேண்டும் என்று கரும்பு விவசாயிகள் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் இந்த வேளையில், லாரி வாடகை மற்றும் கட்டுமான ஊக்கத் தொகையுடன் சேர்த்து ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட 1,550/- ரூபாயை மீண்டும் ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருப்பது, கரும்பு விவசாயிகளுக்கு பெருத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது. முடிவிற்கு வருகிறேன். குறுக்கிடாமல் இருந்தால், ஐந்து நிமிடத்தில் முடித்துவிடுவேன். மொத்தத்தில் (குறுக்கீடு) என்னைப் பேச விடுங்கள். கேளுங்கள், கேட்டுவிட்டு அப்புறம் உங்கள் முதல்வர் பதில் சொல்வார், மொத்தத்தில். (குறுக்கீடுகள்) அவர்களை அமைதியாக இருக்கச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

2010 ஜனவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் அமைதியாக இருங்கள், please.

செல்வி ஜெ ஜெயலலிதா: இல்லை, முடிக்கப்போகிறேன் என்றுதான் சொன்னேன். வேறு ஒன்றும் சொல்லவில்லை. எதற்குக் கூச்சல் போடுகிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, சொல்லுங்கள்.

செல்வி ஜெ ஜெயலலிதா: மொத்தத்தில், இந்தத் தி.மு.க. அரசின் power, cut ஆனால்தான் தமிழகம் உருப்படும். அதற்கான வழியினைத் தமிழக மக்கள் வகுப்பார்கள். People's power என்னும் மக்கள் சக்தி விரைவில் தி.மு.க. ஆட்சியின் power-ஐ cut செய்யும். தமிழக மக்கள் தமிழ்நாட்டை வாழ வைப்பார்கள். நாங்களும் ஆட்சி செய்திருக்கிறோம். தி.மு.க.-வும் ஆட்சி செய்கிறது. ஆனால் இரண்டுக்கும் ஒரு பெரிய வித்தியாசம் இருக்கிறது.

பிற்பகல் 12-10

ஒரு குழந்தைக்கு அடிபட்டு, காயம் ஏற்படுகிறது அல்லது ஒரு நோய் அந்தக் குழந்தையைப் பாதிக்கிறது. வலி தாங்க முடியாமல் அந்தக் குழந்தை அழுகிறது. உண்மையான பாசமும் அக்கறையும் உள்ள தாய் அந்தக் குழந்தைக்கு எங்கே அடிபட்டிருக்கிறது, என்ன நோய் தாக்கியுள்ளது என்பதைக் கண்டுபிடித்து அந்த நோயைக் குணப்படுத்த என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வாள். அடிபட்டிருந்தால் காயத்திற்கு மருந்து போடுவாள், அதுதான் தாயின் உண்மையான பாசத்தின் வெளிப்பாடு, உண்மையான அக்கறையின் அடையாளம். ஆனால், அதே சூழ்நிலையில் அந்தக் குழந்தையை வைத்து வித்தை காட்டி பிழைப்பு நடத்தும் ஒரு வித்தைக்காரன் என்ன செய்வான்? உடனடியாக எப்படியாவது அந்தக் குழந்தையின் அழுகையை நிறுத்தினால் போதும் என்று நினைப்பான். எனவே, அந்தக் குழந்தையை என்ன நோய் தாக்கியிருக்கிறது? குழந்தைக்கு எங்கே அடிபட்டிருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் அந்த வித்தைக்காரன் கவலைப்படமாட்டான். அழுகையை நிறுத்துவதற்கு, சர்க்கரை கலந்த தண்ணீரை அந்தக் குழந்தையின் வாயில் ஊற்றுவான். அந்தக் குழந்தைக்கு நோயும் தீராது, பட்ட காயமும் ஆறாது. ஆனால், ஒரு சொட்டு இனிப்பான சர்க்கரை கலந்த தண்ணீரைக் கொடுத்தவுடன் உடனே அழுகையை நிறுத்திவிடும். அந்த

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2010 ஜனவரி 11

வித்தைக்காரனுக்கும் அதுதான் வேண்டும். உண்மையில் குழந்தை எக்கேடு கெட்டுப் போனால் அவனுக்கென்ன? அந்தக் குழந்தையை வைத்துப் பிழைப்பு நடத்த வேண்டும்; அவ்வளவுதான். அதுதான் வித்தைக்காரனுக்கு வேண்டும். அடுத்த முறை குழந்தைக்கு ஏதாவது துன்பம் நேர்ந்து, அது மீண்டும் அழுதால் மறுபடியும் அதனுடைய அழுகையை நிறுத்த வேறு வண்ணத்தில் ஒரு ஐஸ் புரூட் கொடுப்பான். அவ்வப்போது அந்த வித்தைக்காரன் அந்தக் குழந்தைக்கு எதையாவது கொடுத்து, எதையாவது காட்டி ஏமாற்றிக் கொண்டே இருப்பான். அப்போதைக்கு குழந்தையின் அழுகையை நிறுத்தச் செய்வான்.

அதைப்போலவே தமிழக மக்கள் விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், மின்சாரப் பற்றாக்குறை, சட்டம்-ஒழுங்கு சீர்குலைவு, குடிநீர்ப் பற்றாக்குறை, வேலையிழப்பு, உரிமை பறிப்பு, வாழ வழியின்மை போன்ற எத்தனையோ துன்பங்களை, சோதனைகளைச் சந்திக்க வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும்போது, மக்கள் செய்வதறியாது தவித்துக்கொண்டிருக்கும்போது, மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் இந்த தி.மு.க. அரசு அவ்வப்போது மக்களுக்கு இலவச நிலம், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, இலவச எரிவாயு அடுப்பு, இலவச வீடு என எதையாவது காட்டி மக்களை ஏமாற்றிக் கொண்டு வருகிறது.

முதலில் இலவச நிலம், தலா 2 ஏக்கர் வழங்கப்படும் என்றார்கள். எத்தனை பேருக்கு உண்மையாக இலவச நிலம் கொடுக்கப்பட்டது? ஒருசில பேருக்குத்தான். "எங்களுக்கு இலவச நிலம் கிடைக்கவில்லையே? எங்கே நிலம்?" என்று மக்கள் கேட்க ஆரம்பித்தவுடன், அதை மறக்கச் செய்வதற்கு "இதோ இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி" என்றது தி.மு.க. அரசு. அந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியும் எல்லோருக்கும் கிடைக்கவில்லை. "எங்களுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி கிடைக்கவில்லையே? எங்கே கலர் டி.வி.?" என்று மக்கள் ஆர்ப்பரித்தவுடன், "இதோ இலவச எரிவாயு அடுப்பு" என்றது தி.மு.க. அரசு. இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி என்றதும் நிலம் கிடைக்காத மக்கள் அதை மறந்துவிட்டார்கள். இலவச எரிவாயு அடுப்பு என்றதும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி கிடைக்காத மக்கள் அதை மறந்துவிட்டார்கள். இலவச நிலமோ, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியோ, இலவச எரிவாயு அடுப்போ

இவற்றில் எதுவுமே கிடைக்காத பெரும்பாலான மக்கள் "எங்களுக்கு எதுவுமே கிடைக்கவில்லையே?" என்று தங்கள் ஆதங்கத்தினை வெளிப்படுத்தியபோது, "மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் இருக்கிறது" என்றது தி.மு.க. அரசு. இந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அறிவித்ததும், மற்ற நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளை மக்கள் மறந்துவிட்டார்கள். இந்தக் காப்பீட்டுத் திட்டமும் ஒரு மோசடிதான். இதுவும் ஒரு ஏமாற்றுத் திட்டம் என்பதை மக்கள் புரிந்துகொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். "தி.மு.க. அரசு அறிவித்ததுபோல் எதுவும் நடக்கவில்லையே? எங்களுக்கு எதுவும் கிடைக்கவில்லையே?" என்று மக்கள் உணரத் தொடங்கியதும் இப்போது "21 இலட்சம் இலவச வீடுகள் கட்டித் தரப்படும்" என்கிறது தி.மு.க. அரசு. 21 இலட்சம் வீடுகள் கட்டித் தரப்படும் என்ற அறிவிப்பால் மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள், அப்படியே அந்தத் திளைப்பில் இன்னும் சில மாதங்களை ஓட்டிவிட்டு, திடீரென்று சட்டமன்றப் பொதுத் தேர்தலை அறிவித்துவிடலாம், அதில் வெற்றியும் பெற்று மீண்டும் ஆட்சிக்கு வந்துவிடலாம் என்று கணக்குப் போடுகிறது தி.மு.க. தலைமை. தி.மு.க. தலைமைக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். "சில காலம் பலரை ஏமாற்றலாம், பல காலம் சிலரை ஏமாற்றலாம். ஆனால், எல்லாக் காலத்திலும் எப்போதும், எல்லோரையும் ஏமாற்ற முடியாது." (குறுக்கீடு) இரண்டே வரிகள்தான், முடிக்கப் போகிறேன். எங்களைப் பொறுத்தவரையில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடியுங்கள். ஏனென்றால், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தைவிட அதிகமாகப் பேசி விட்டீர்கள்.

பிற்பகல் 12-15

செல்வி ஜெ ஜெயலலிதா: இரண்டு நிமிடங்களில் முடிக்கப்போகிறேன். உரையின் கடைசியில் இருக்கிறேன். எங்களைப் பொறுத்தவரையில் ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், மக்கள் தொண்டாற்றுவதே எங்கள் இலட்சியம். இந்த நேரத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பொன்னான பாடல் வரிகளை நினைவுகூர்கிறேன். "என்னதான் நடக்கட்டும் நடக்கட்டுமே, இருட்டினில் நீதி மறையட்டுமே, தன்னாலே வெளிவரும் தயங்காதே, தலைவன் இருக்கிறான் மயங்காதே. ஒரு தலைவன் இருக்கிறான் மயங்காதே" என்று கூறி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2010 ஜனவரி 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறைப்படி இந்த விவாதத்திற்கு ஆளுநர் உரைமீது நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் விடை அளிக்க இருக்கிறார்கள். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் பேச வேண்டிய கருத்தாக எண்ணிக்கொண்டு, பல கருத்துகளை இங்கே சொன்னார்கள். அப்படிச் சொல்கிறபோது, தமிழ்நாடு இப்போது கடன் வாங்கி, கடன் வாங்கி, அந்தக் கடனிலேயே மூழ்கி தத்தளிக்கின்ற ஒரு நிலைமைக்குத் தி.மு.க. ஆட்சியினாலே ஆளாகிவிட்டது என்னும் கருத்தை மிகவும் வேதனையோடு, துயரத்தோடு, கவலையோடு, அக்கறையோடு, இன்னும் சொல்லப்போனால் தமிழ்நாடு இப்படி ஆகிறதே என்ற வருத்தத்தில் அம்மையார் இளைத்து (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) (மணியடிக்கப்பெற்றது) இங்கே பேசிய அம்மையார் என்ன குறிப்பிட்டார் என்பதை, அவர் எவ்வளவு அக்கறையாகச் சொன்னார் என்பதை நான் சொல்கிறேன். அதை நீங்கள் ஒத்துக்கொள்ளவில்லை என்றால் அது வேறு. (குறுக்கீடுகள்) நான் பதில் சொல்லக்கூடாது என்று சொல்ல உங்களுக்கு உரிமை கிடையாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Back bench-ல் இருக்கும் மூன்று பேரையும் வெளியேற்றிவிடுவேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: நான் சொல்கின்ற பதிலை அம்மையார் கேட்டுவிட்டு விடைபெறுவார் என்று எதிர்பார்க்கிறேன். (கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அரி, திரு. அக்ரி. கிருஷ்ணமுர்த்தி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

(எதிர்க்கட்சித் தலைவர் அவையிலிருந்து வெளியேறினார்.)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏறத்தாழ ஒரு மணி நேரம் இங்கே பேசிவிட்டு, தனக்கு வாயிலே வந்ததையெல்லாம் குற்றச்சாட்டுகளாகச் சொல்லிவிட்டு, யாரோ நாடக வசனம் எழுதிக்கொடுப்பவர்கள் எழுதிக்கொடுத்த அந்தக் கருத்துகளையெல்லாம் இங்கே பேசிவிட்டு, அவர் சொன்ன

2010 ஜனவரி 11] [பேராசிரியர் க. அன்பழகன்]

கருத்துகளில் எது எது புள்ளிவிவரப்படி தவறு என்பதை விளக்க சில புள்ளிவிவரங்களை மட்டுமாவது தரலாம் என்று நான் எழுந்தேன். அந்த புள்ளிவிவரங்களைக்கூட கேட்டுக்கொள்ள மனம் இல்லாமல், அந்தப் புள்ளிவிவரம் இங்குச் சொல்லப்பட்டுவிட்டால், அதற்கு உரிய விடை கிடையாது என்ற அடிப்படையில் வெளியேறியிருக்கிறார்கள். பதிலைக் கேட்காமல் சட்டமன்றத்திலிருந்து வெளியேறுகிறவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுகின்ற ஒரு காலம் வரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது நடைபெற்றுள்ள விவாதத்திற்கு பதில் அளிக்கக்கூடிய வாய்ப்பினை தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் எனக்கு வழங்கியிருக்கிறார்கள். சென்ற ஆண்டும் இந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பொன் வைக்க வேண்டிய இடத்திலே ஒரு பூவையாவது வையுங்கள் என்ற பழமொழியைச் சொல்லி, சென்ற ஆண்டு என்னுடைய உரையை நான் தொடங்கினேன். அதே நிலையோடுதான், அந்த நினைப்போடுதான் இப்பொழுதும் பதிலுரையை நான் ஆற்றிட முன்வந்திருக்கிறேன்.

"தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்ற இலக்கியத்திற்கு இலக்கணமாக எனக்கு இந்த வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்று நான் உளமார நம்புகிறேன். புதிய சட்டமன்றப் பேரவை அமைக்கப்பட்டு வருவதைப் பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, சரித்திரக் கீர்த்திமிக்க இந்தச் சட்டப் பேரவையில் நடைபெறக்கூடிய கடைசிக் கூட்டத் தொடர் இதுவாகத்தான் இருக்கப்போகிறது. அடுத்துவரும் நிதிநிலை அறிக்கைக் கூட்டத் தொடர், புதிய சட்டமன்றப் பேரவையில் நடைபெறுவதற்கு ஏற்ற வகையில் *(மேசையைத் தட்டும் ஒலி)* நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் அடிக்கடி நேரடியாகச் சென்று, அதைப் பார்வையிட்டு ஆக்கபூர்வமான கருத்துகளை, யோசனைகளை எடுத்துச்சொல்லி அந்தப் பணியினை அவர் விரைவுபடுத்திக்கொண்டிருக்கிறார். பாரம்பரியமிக்க இந்த மன்றத்தின் கடைசிக் கூட்டத் தொடர் என்ற காரணத்தால், என்னுடைய பதிலுரைக்குப் பின்னால், சட்டமன்றப் பணியிலே பொன் விழா கண்டிருக்கின்ற நம்முடைய தமிழக

முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் இங்கே உரையாற்ற இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே அதற்குரிய நேரத்தில் நான் குறுக்கிட விரும்பாமல், சுருக்கமாக என்னுடைய பதிலுரையை அமைத்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 12-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 6 ஆம் தேதியன்று இந்தப் பேரவையில் நம்முடைய தமிழக ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்தியிருக்கின்றார்கள். அரசு இதுவரை நிறைவேற்றியிருக்கக்கூடிய பல்வேறு சாதனைகளில் சிலவற்றைக் குறிப்பிட்டுக் காட்டி, எதிர்வரக்கூடிய நிதியாண்டில் செயல்படுத்த இருக்கக்கூடிய பல்வேறு திட்டங்களை விரிவாக எடுத்துச் சொல்லி இங்கே உரையாற்றியிருக்கிறார்கள். இந்த ஆளுநர் உரை குறித்து நம்முடைய சட்டமன்றக் கட்சியினுடைய தலைவர்கள், உரையாற்றியிருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள், அதேபோல வெளியிலே இருக்கின்ற பல்வேறு கட்சிகளுடைய தலைவர்கள், பல்வேறு அமைப்புகளைச் சார்ந்திருக்கக்கூடிய நிருவாகிகள், செய்தித்தாள்கள், ஊடகங்கள் எனப் பலர் பாராட்டி கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்; சிலர் குறைகளையெல்லாம் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக ம.தி.மு.க., அ.தி.மு.க.வைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் வழக்கம்போல, ஆளுநர் உரையைப் புறக்கணித்து வெளிநடப்புச் செய்து, வெளிநடப்புச் செய்ததோடு மட்டுமல்லாமல், வெளியிலே சென்று விமர்சனங்களும் செய்திருக்கிறார்கள். நல்லவேளை விவாதத்திலாவது அவர்கள் கலந்துகொண்டு தங்களது கடமையை ஆற்றியிருக்கிறார்கள். பதிலுரைக்கு இருப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் நான் இருந்தேன். ஒருவேளை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வழியனுப்பி வைத்துவிட்டு உள்ளேகூட வருவதற்கு வாய்ப்பு உண்டு. அதற்காக நான் அவர்களை ஆவலோடு எதிர்நோக்கிக் காத்திருக்கிறேன் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

'போற்றுபவர் போற்றட்டும், புழுதி வாரித் தூற்றுபவர் தூற்றட்டும், ஏற்றதொரு கருத்தை எனதுள்ளம் என்றால் எடுத்துரைப்பேன், எவர்வரினும் நில்லேன், அஞ்சேன்' என்கின்ற வரிகளுக்கேற்ப, (மேசையைத் தட்டும் ஒலி) செயல்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய இலட்சியத்திற்கு, செயல் வடிவம் கொடுக்கக்கூடிய வகையிலே இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது என்று சொன்னால், நிச்சயம் அது மிகையாகாது.

2010 ஜனவரி 11] [திரு. மு.க. ஸ்டாலின்]

ஆளுநர் உரையின்மீது நடைபெற்றிருக்கக்கூடிய விவாதத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நா. இராமகிருஷ்ணன், திரு. எஸ்.எஸ். சிவசங்கர், திரு. டி. செங்குட்டுவன், திரு. அ. சௌந்திரபாண்டியன், எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க.வைச் சார்ந்த மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், திரு. இரா. விசுவநாதன், திரு. பி.கே. சேகர்பாபு, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. சி. ஞானசேகரன், திரு. எச். வசந்தகுமார், திரு. போ. கோபாலன், டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு திரு. கோ.க. மணி அவர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் செல்வி கே. பாலபாரதி, திரு. கே. மகேந்திரன், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சார்ந்த திரு. வை. சிவபுண்ணியம், திரு. சு. குணசேகரன், ம.தி.மு.க.வைச் சார்ந்த டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. ஆர். ஞானதாஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், எந்தக் கட்சியையும் சாராதவர் என்று தன்னை அடையாளம் காட்டிக்கொண்டு, பெருமைப்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர் ஆகியோர் பல்வேறு அரிய கருத்துகளை, ஆக்கபூர்வமான, அடிப்படையான கருத்துகளையெல்லாம் இந்த அரசுக்கு இங்கே எடுத்துச் சொல்லி உரையாற்றியிருக்கிறார்கள்.

குறிப்பாக, இங்கே உரையாற்றி விடைபெற்ற நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இந்த ஆளுநர் உரை, இந்த அவையிலே தாக்கல் செய்யப்பட்டவுடனேயே, ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தார்கள், ஆளுநர் உரையைப் பற்றி ஒரு விமர்சனம் செய்திருந்தார்கள்.

பிற்பகல் 12-25

சில காரணங்களுக்காக, இந்த ஆளுநர் உரையை இன்றைக்கு அரசியல் நோக்கத்தோடு எதிர்க்கலாமே தவிர, கடந்த மூன்றாண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்டிருக்கக்கூடிய மக்கள் நலத் திட்டங்கள், முந்தைய ஆட்சியில் நடந்தவற்றையும் ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்க மாட்டார்கள் என்பது எங்களுக்கே நன்றாகத் தெரியும். எதிர்த்தே ஆக வேண்டும் என்பதுதான் எதிர்க்கட்சியினுடைய இலக்கணமாக இருந்துவிடக் கூடாது. ஆளுங்கட்சியினுடைய செயல்பாட்டை

பிரதிபலிக்கக்கூடிய கண்ணாடியாக எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் நடந்து கொள்வதுதான், ஆரோக்கியமான அரசியலுக்கு வழி வகுத்திட முடியும். கண்ணாடியில் முகம் பார்க்கிறோம். முகத்திலே ஒரு சின்ன பரு தெரிகிறது. முகத்தினுடைய அழகுக்கு அது குறைவாக இருக்கிறது, இதனைப் போக்க என்ன செய்ய வேண்டுமென்பது முகத்தினுடைய சொந்தக்காரனுக்கு இருக்கக்கூடிய கவலை. கன்னத்திலே ஏதேனும் கறை ஒட்டியிருந்தால் அதைக் கண்ணாடி காட்டும். அதைப் பார்த்துக் கறையை அகற்றிக்கொள்ள முடியும். முகத்திற்குச் சொந்தக்காரர் ஆளுங்கட்சியினர். அதிலுள்ள பருவை, கறையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி எதிர்க்கட்சியினர். நல்லாட்சி நடைபெற முகம் ஆரோக்கியமாக இருப்பது மட்டுமல்ல, கண்ணாடியும் தரமானதாக இருந்தாக வேண்டும். ரசம் போன கண்ணாடியாகவோ, சரியாகப் பிரதிபலிக்கும் தன்மையில்லாததாகவோ இருந்தால் அந்தக் கண்ணாடி நிச்சயமாகப் பயன் தரமுடியாது. ஆகவே ஆளுநர் உரையைப் பற்றி முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு அலங்கோல உரை என்று குறிப்பிட்டுச் சொன்னார். நான் ஏற்றுக்கொள்கிறேன். அவருடைய சுய விளம்பரத்திற்காக நான் உள்ளபடியே அவரைப் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன். பொங்கல் திருநாளில் (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, இதில் என்ன தவறு சொல்லுங்கள்? உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுக்கிட இதில் என்ன இருக்கிறது?

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: பொங்கல் திருநாளில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். அவர் உரையாற்றிக் கொண்டிருக்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: நான் அவரைப் பாராட்டுகிறேன் அவ்வளவுதான். நான் அவரைப் பாராட்டியிருக்கிறேன் அவ்வளவுதான். (குறுக்கீடு) உட்காருங்கள். நான் பாராட்டுகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பொங்கல் திருநாளில் தமிழர்களுடைய வீடுகளில் மகிழ்ச்சியோடு போடப்படக்கூடிய மாக் கோலம்தான் நம்முடைய ஆளுநர் உரை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அலங்கோல உரை என்று சொன்னார்கள். அதற்கு அவர் பதில் சொல்கிறார்.

2010 ஜனவரி 11]

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: அலங்கோலம் என்று சொன்னார்களா இல்லையா? (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, அலங்கோலம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலங்கோலம் என்று சொன்னார்கள். அதற்குப் பதில் சொல்கிறார். உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: சரி, எடுத்துவிடுகிறேன், எடுத்துவிடுகிறேன் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: சரி, சுய விளம்பரம் என்று விமர்சித்திருக்கிறார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதற்காக நான் அவர்களுக்கு என்னுடைய பாராட்டைக்கூட தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பொங்கல் திருநாளில் தமிழர்கள் வீடுகளில் மகிழ்ச்சியோடு போடப்படக்கூடிய மாக் கோலம்தான் இந்த ஆளுநர் உரை. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களின் உள்ளம் பூரிப்பதை வெளிப்படுத்தும் பூக்கோலம்தான் இந்த ஆளுநர் உரை. (மேசையைத் தட்டும் ஒலி) அணி அணியாய் வந்துகொண்டிருக்கும் நலத் திட்டங்களின் ஊர்கோலம்தான் இந்த ஆளுநர் உரை. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப் பார்த்து வியந்து இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கிறது இந்த பூகோளமே. இதுதான் ஆளுநர் உரை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல் பல பத்திரிகைகள் இந்த ஆளுநர் உரையைப் பற்றி பல கோணங்களில் விமர்சித்திருக்கின்றன, பாராட்டியிருக்கின்றன. சில ஆக்கப்பூர்வமான கருத்துகளை எல்லாம்கூட எடுத்துச் சொல்லியிருக்கின்றன. குறிப்பாக 'தினமலர்' நாளிதழ், 'குவிப்பு' என்கிற தலைப்பில் கவர்னர் உரையில் அடுக்கடுக்கான சலுகைகள் அறிவிப்பு என்கிற துணைத் தலைப்பில் குடிசை வீடுகளை ஒழித்து கான்கிரீட் வீடுகள் கட்டத் திட்டம்; பட்டதாரி இல்லாத குடும்பங்களுக்கும் பெரிய உதவி; அரசுப் புறம்போக்கில் 3 ஆண்டுகள் குடியிருந்தாலே பட்டா கிடைக்கும்; நெல் கொள்முதல் விலை 50 ரூபாய் உயர்வு; 21 இலட்சம் கான்கிரீட் வீடுகள் இலவசமாகக் கட்டித் தரும் மெகா திட்டம்; (மேசையைத் தட்டும் ஒலி) சுனாமியால் பாதித்த மீனவர்களின் வங்கிக் கடனை அரசே

செலுத்த முடிவு; பட்டதாரி இல்லாத குடும்ப மாணவர்களுக்குத் தொழிற்கல்விக் கட்டணம் அரசே ஏற்பு; இப்படி மக்களைக் கவரும் வகையில் ஆளுநர் உரை அமைந்திருக்கிறது என்று 'தினமலர்' நாளிதழ் குறிப்பிடுகிறது.

அதேபோல 'இந்து' நாளேடு, "A series of welfare measures and schemes including provision of houses for those living in huts marked Governor Surjit Singh Barnala's annual address to the State Assembly" என்கிறது. அதாவது குடிசைவாழ் மக்களுக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் உள்ளிட்ட அடுக்கடுக்கான நலத் திட்டங்கள் மேதகு ஆளுநர் சட்டமன்றத்தில் ஆற்றிய உரையில் இடம்பெற்றுள்ளன என்று 'இந்து' நாளிதழ் குறிப்பிட்டிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12-30

அதேபோல 'The Times of India' அவர்கள் குறிப்பிடுவது, 'Welfare Blitzkrieg' 'அதிரடி நலத் திட்ட அறிவிப்புகள்' என்ற தலைப்பு போட்டு, திட்டங்கள் குறித்து செய்திகளை வெளியிடுகிறபோது "When it comes to projecting itself as the ultimate welfare State, the DMK Government, in Tamil Nadu is really pushing the envelope." மக்கள் நலம் பேணும் அரசுகளில் தலைசிறந்த அரசாக *(மேசையைத் தட்டும் ஒலி)* திராவிட முன்னேற்றக் கழக அரசு தன்னை முன்னிலைப்படுத்திக்கொண்டிருக்கிறது என்று 'The Times of India' குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறது.

அதேபோல, 'தினத்தந்தி' பத்திரிகையாக இருந்தாலும், 'தினகரன்' போன்ற பத்திரிகைகளாக இருந்தாலும், பாராட்டி செய்திகளையெல்லாம் வெளியிட்டிருக்கின்றன. அதேபோல தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், குறிப்பாக நம்முடைய தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவர் மதிப்பிற்குரிய திரு. கே.வி தங்கபாலு அவர்கள், "தமிழக அரசின் கொள்கை அறிவிப்புகள், மக்களின் வளமான வாழ்க்கைக்கு அடித்தளம் அமைத்துள்ளது. கலைஞர் வீட்டு வசதித் திட்டம், ஏழை மக்களின் வாழ்வுக்கு ஒரு விடிவு காலம். விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக நெல் கொள்முதல் விலையில் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.50 கூடுதலாக அளிக்கப்படும் என்பது பாராட்டத்தக்கது. கலைஞர் தலைமையிலான ஆட்சியில் நிறைவேற்றப்படவிருக்கும் மக்கள் நலத் திட்டங்களை ஆளுநர் உரைமூலம் அறிவித்திருப்பதை பெரிதும் பாராட்டி வரவேற்கிறேன்" என்று குறிப்பிடுகிறார்.

2010 ஜனவரி 11] [திரு. மு.க. ஸ்டாலின்]

அதேபோல் இன்று உரையாற்ற வாய்ப்பில்லை என்று சொன்னாலும், நம்முடைய சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. சுதர்சனம் அவர்கள் வெளியிலே செய்தியாளர்களிடத்திலே இந்த ஆளுநர் உரையைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்கிறபோது, “மொத்தத்தில் இந்த ஆளுநர் உரையானது ஏழையெளிய மக்கள், சமுதாயத்தின் விளிம்பில் இருக்கக்கூடிய அடித்தட்டு மக்களின் வாழ்வுக்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய ஒரு சிறப்பான உரை” என்று அவரும் பாராட்டி இருக்கிறார்.

திராவிடக் கழகத்தின் தலைவர் மதிப்பிற்குரிய ஐயா வீரமணி அவர்கள், “ஆளுநர் ஆற்றியுள்ள உரை, தந்தை பெரியார், அண்ணாவின் இலட்சியங்களுக்குச் செயல் வடிவம் கொடுத்துள்ளது. இந்த அரசு வளர்ச்சியை நோக்கிய பயணத்தை மேற்கொண்டுள்ளது. சொன்னதைச் செய்யும் அரசு தி.மு.க. அரசு என்பதற்கு இது ஒரு செப்பேடு என்றால் மிகையாகாது” (மேசையைத் தட்டும் ஒலி) என்று மனம் திறந்து பாராட்டி இருக்கிறார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் மதிப்பிற்குரிய திரு. தொல். திருமாவளவன் அவர்கள், “தமிழக அரசு செயல்படுத்தி வரும் சமூக நலத் திட்டங்களின் சாதனை வரலாற்றில் மேலும் ஒரு மைல் கல்லாக ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. தாட்கோமூலம் வழங்கப்பட்ட அனைத்துக் கடன்களும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. இனிமேல் புதிய நலத் திட்டங்கள் அறிமுகப்படுத்துவதற்கு எதுவும் இல்லை என்று சொல்லும் அளவுக்கு ஏராளமான அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன” என்று அவரும் புகழ்ந்து பாராட்டியிருக்கிறார்.

அதேபோல், மதிப்பிற்குரிய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர், டாக்டர் இராமதாஸ் அவர்கள், எவ்வளவுதான் பல குறைபாடுகளை, குற்றச்சாட்டுகளை அவர் சொல்லியிருந்தாலும், தாட்கோ கடன் இரத்து பற்றி, கான்கிரீட் வீடு கட்டக்கூடிய திட்டத்தைப் பற்றி, மீனவர்கள் கடன் இரத்து பற்றி, அவர் குறிப்பிட்டுச் சொல்கிறபோது, இன்று காலையில்கூட செய்திகள் வந்திருக்கின்றன, அவர் நேற்றைக்கு பத்திரிகைகளில் பேட்டி தருகிறபோது மனப்பூர்வமாக வரவேற்கிறோம் என்று எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் செல்வி கே. பாலபாரதி அவர்கள், தேசிய ஊரக வேலை

உறுதித் திட்டத்தில் தினசரி ஊதியத்தை ரூ.80-லிருந்து ரூ.100 ஆக உயர்த்தியதற்குப் பாராட்டி, மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தையும் பாராட்டி இங்கு உரையாற்றியிருக்கிறார்.

அதேபோல், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சட்டமன்ற கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள், ஏதோ சொல்லவேண்டும் என்பதற்காகச் சில குறைபாடுகளைச் சொல்லி, பாராட்டாமல் இருக்க முடியாது என்ற அந்த நிலையில் இருந்து அவரும் இலவச கான்கிரீட் வீடு திட்டத்தை, தாட்கோ கடன் இரத்தை, இலவச வீட்டுமனைத் திட்டத்தை மன மகிழ்ச்சியோடு வரவேற்றிருக்கிறார்.

தமிழ்நாடு இந்திய யூனியன் முஸ்லீம் லீகினுடைய தலைவர் மதிப்பிற்குரிய பேராசிரியர் காதர் மொகிதீன் அவர்கள், தமிழக மக்களின் நலனுக்கும், வளமான வாழ்வுக்கும் வழி வகுக்கக்கூடிய உரையாக ஆளுநர் உரை அமைந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் திரு. ஸ்ரீதர் வாண்டையார் அவர்கள், கலைஞர் வீட்டு வசதித் திட்டம், கிராமப்புற மக்களுக்கு மிகப் பெரும் வரப் பிரசாதம்; மீனவர்கள் கடன் இரத்து ஊக்கம் அளிக்கிறது என்று பாராட்டியிருக்கிறார்.

பிற்பகல் 12-35

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் கட்சியினுடைய தலைவர் திரு. பொன் குமார் அவர்கள் அடித்தட்டு மக்களின் வாழ்வை வளமாக்கும் சலுகைகள் நிரம்பிய ஆளுநர் உரை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆக, இப்படிப் பல கட்சிகளினுடைய தலைவர்கள், பல அமைப்புகளைச் சார்ந்திருக்கக்கூடியவர்கள் பாராட்டி இருந்தாலும், நம்முடைய முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சியினுடைய தலைவர் அவர்கள் இந்த ஆளுநர் உரையைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகிறபோது தொலைநோக்குத் திட்டங்கள் கொண்ட உரையாக இந்த ஆளுநர் உரை அமையவில்லை என்றார். அதோடு நிறுத்தவில்லை, இங்கேகூட அவர் பேசினார்; முந்தைய உரைகளின் மறுபதிப்பாக இந்த ஆளுநர் உரை இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னார். நான் கேட்க விரும்புவது, ஊரகப் பகுதிகளில் 6 ஆண்டுக் காலத்தில் குடிசையில் வாழும் மக்களுக்கு 21 இலட்சம்

2010 ஜனவரி 11] [திரு. மு.க. ஸ்டாலின்]

கான்கிரீட் வீடுகளைக் கட்டித் தரப்போகிறோம் என்று அறிவித்து இருக்கிறோமே, இது தொலைநோக்குத் திட்டம் இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக முதற்கட்டமாக இந்த ஆண்டு 1,800 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்ய முன்வந்திருக்கிறோமே, இது என்ன முந்தைய உரையினுடைய மறுபதிப்பா? பட்டதாரிகளே இல்லாத குடும்பங்களைச் சார்ந்த அனைத்துச் சாதி மாணவ, மாணவிகள் தொழிற்கல்வி பயில கல்விக் கட்டணத்தினை இரத்து செய்ய அரசு முன்வந்திருக்கிறதே, இது தொலைநோக்குத் திட்டம் இல்லையா? அருந்ததியினருக்கு 3 சதவிகித உள் ஒதுக்கீடு அளித்த காரணத்தால் 56 மாணவர்கள் மருத்துவக் கல்லூரியிலும் 1,165 மாணவர்கள் பொறியியல் கல்லூரியிலும் படிக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறோமே, இது தொலைநோக்குத் திட்டம் இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதி திராவிட மக்களுக்கு தாட்கோ மூலமாக வழங்கப்பட்ட கடன் 83 கோடி ரூபாய் தள்ளுபடி செய்திருக்கிறோமே, இது முந்தைய உரையினுடைய மறுபதிப்பா? சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுடைய கடன் 61 கோடி ரூபாயை தள்ளுபடி என்று அறிவித்திருக்கிறோமே, அது முந்தைய உரையினுடைய மறுபதிப்பா? நெல்லுக்கான கொள்முதல் விலையைக் குவிண்டாலுக்கு 50 ரூபாய் உயர்த்திக்கொடுக்க முன்வந்திருக்கிறோமே இது தொலைநோக்குத் திட்டம் இல்லையா? இலவச வீட்டுமனைப் பட்டா பெறுவதற்கான குடியிருப்புக் காலவரம்பை ஏற்கெனவே 10 ஆண்டுக் காலத்திலிருந்து 5 ஆண்டுக் காலம் என்று குறைத்து, இப்போது 5 ஆண்டுக் காலத்திலிருந்து 3 ஆண்டுக் காலம் என்று குறைத்திருக்கிறோமே, இது என்ன முந்தைய உரையினுடைய மறுபதிப்பா? (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மருத்துவக் கல்லூரிக்கு நவீன வசதிகளோடு கூடிய கட்டடம் 70 கோடி ரூபாய் செலவில் கட்ட முன்வந்திருக்கிறோமே, இது தொலைநோக்குத் திட்டம் இல்லையா?

வருங்கால சமுதாயத்திற்குப் பயன்படக்கூடிய வகையிலே புதிய சட்டமன்ற வளாகம், தலைமைச் செயலகம், அறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம், அவை எல்லாம் கட்டப்பட்டு, விரைவிலே திறக்கப்படவிருக்கின்றனவே இவை எல்லாம் தொலைநோக்குத் திட்டங்கள் இல்லையா?

கோவையில் நடைபெற இருக்கக்கூடிய உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் நினைவாக, சர்வதேச தரத்திலான

தாவரவியல் பூங்கா, செம்மொழிப் பூங்கா என்கிற பெயரிலே உருவாக்க முடிவெடுத்திருக்கிறோமே, இது என்ன முந்தைய உரையினுடைய மறுபதிப்பா? (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் வேண்டுமானால் எடுத்துப் பாருங்கள். எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து ஆளுநர் உரையாக இருந்தாலும், நிதிநிலை அறிக்கையாக இருந்தாலும், அதைப்பற்றிப் பேசுகிறபோது முந்தைய உரையின் அறிவிப்பு, முந்தைய உரையின் மறுபதிப்பு என்றுதான் தொடர்ந்து சொல்லியிருக்கிறாரே தவிர, வேறு ஒன்றும் சொல்லவில்லை. ஆக, அவருடைய அறிக்கைதான் முந்தையதனுடைய தொடர்ச்சியாக இருந்து கொண்டிருக்கிறதே தவிர, இந்த ஆளுநர் உரையைப் பொறுத்தவரை அப்படி இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், கரும்பு கொள்முதல் விலையைப் பற்றிக் குறிப்பிட்டு விவசாயிகளுக்குப் பெருத்த ஏமாற்றம் அளிக்கிறது என்று அவர் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். நான் கேட்க விரும்புவது, அ.தி.மு.க. ஆட்சியிலே கரும்புக்கு என்ன விலை கொடுக்கப்பட்டது? மத்திய அரசு நிர்ணயம் செய்திருந்த குறைந்தபட்ச சட்டபூர்வ விலையைவிடக் கூடுதலாக அ.தி.மு.க. ஆட்சியில் அரசின் சார்பில் பரிந்துரை தொகை வழங்கப்பட்டதா? இல்லை. ஆனால், தற்போது கலைஞருடைய அரசு மத்திய அரசு நிர்ணயம் செய்திருக்கக்கூடிய குறைந்தபட்ச விலையைவிடக் கூடுதலாக 359 ரூபாய் 80 காசு உயர்த்தி வழங்கியது மட்டுமல்ல, வாகன வாடகை டன் ஒன்றுக்கு 90 ரூபாயும், மற்ற கூடுதல் கட்டுமான அடிப்படையில் ஊக்கத் தொகையாக 22 ரூபாய் 60 காசும் ஆக மொத்தம் டன் ஒன்றுக்கு 1,550 ரூபாய் கிடைக்க வழிவகை செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதையெல்லாம் மறந்துவிட்டு, கரும்பு விவசாயிகளுக்குப் பெருத்த ஏமாற்றம் என்று கூறியிருப்பது, வேடிக்கையிலும் வேடிக்கையாக இருக்கிறது என்பதை மாத்திரம் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல் விலைவாசியைப் பற்றி இங்கே பரவலாகப் பேசப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Clarification வேண்டுமானால் அவர் உரையை முடித்த பிறகு கேளுங்கள். இடையில் குறுக்கிடாமல் உட்காருங்கள்.

2010 ஜனவரி 11]

பிற்பகல் 12-40

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: விலைவாசியைப் பற்றி நான் குறிப்பிட்டுச் சொல்கிறபோது, ஒன்றை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) உரையாற்றுவதல்ல, நீங்கள் செய்யவில்லை என்பதைச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

திரு. ஓ. பன்னீர்செல்வம்: பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையின்போது குறுக்கிட்டுப் பேசினால் (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள், ஏதாவது clarification வேண்டுமென்றால் கடைசியிலே கேளுங்கள். (குறுக்கீடுகள்) சரி, என்னவென்று சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அ.தி.மு.க. ஆட்சியில் கரும்புக்கு அரசினுடைய ஆதரவு விலை கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். 2005-ல், அரசினுடைய ஆதரவு விலையோடு சேர்த்து 1,014 ரூபாய் கொடுத்த மாநிலம், கொடுத்த ஆட்சி மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-ல் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் அமைச்சரவைக் கூட்டத்தையே கூட்டி மத்திய அரசாங்கத்தினுடைய பரிந்துரை விலையைத் தவிர மாநில அரசாங்கம் பரிந்துரைகளைச் செய்யமாட்டோம் என்று அமைச்சரவைக் கூட்டத்திலேயே தீர்மானம் போட்டீர்கள். (குறுக்கீடுகள்) இருங்கள், அவசரப்படாதீர்கள். 2005 ஆம் ஆண்டு வரை அந்த 4 ஆண்டுக் காலம் மாநில அரசாங்கத்தினுடைய பரிந்துரை விலையே கிடையாது. (குறுக்கீடுகள்) இல்லை, நீதிமன்றமே தீர்ப்புச் சொல்லியிருக்கிறது. (குறுக்கீடுகள்) உயர் நீதிமன்றமே மாநில அரசாங்கம் விவசாயிகளுக்குக் கட்டுப்படியான அளவுக்குப் பரிந்துரை விலையை வழங்கலாம் என்று தீர்ப்பு வழங்கிய பிறகும் நீங்கள் வழங்கவில்லை. இதுதான் உண்மை. 2005 ஆம் ஆண்டின் இறுதியில் அதாவது தேர்தல் நெருங்கும்போது அதை எண்ணி, 1,014 ரூபாய் கொடுப்போம் என்று சொன்னீர்களே

தவிர, அதையும் கொடுக்கவில்லை. தலைவர் கலைஞர் வந்ததற்குப் பின்னர்தான் கொடுத்தார். (குறுக்கீடுகள்) கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) கொடுக்கவில்லை. வேண்டுமென்றால் ஒரு விசாரணையை வைத்துக்கொள்ளலாமா? (குறுக்கீடுகள்) விசாரணைக்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறீர்களா நீங்கள்? பொறுப்பேற்றுக்கொள்ள முடியுமா? உண்மைக்கு மாறாகச் சொல்லக் கூடாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) பேசுங்கள், நீங்கள் பேசுங்கள். மற்ற எல்லோரும் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிலோ அரிசி இன்றைக்கு ஒரு ரூபாய்க்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கக்கூடிய திட்டத்தைப் பற்றிச் சொல்கிறபோது நான் ஒன்றை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். 2006 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலைச் சந்தித்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் பல உறுதிமொழிகளை, வாக்குறுதிகளை எடுத்துச் சொல்லியிருந்தார்கள். எத்தனையோ உறுதிமொழிகள் உண்டு. அவற்றிலே ஒன்று, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒரு கிலோ அரிசியை இரண்டு ரூபாய்க்கு வழங்குவோம் என்று உறுதிமொழி தந்தார்கள். அப்போது அன்றைக்கு முதலமைச்சராக இருந்த இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சொன்னது என்னவென்று கேட்டால், ஒரு கிலோ அரிசியை இரண்டு ரூபாய்க்கு எப்படித் தர முடியும்? முடியவே முடியாது, சாத்தியப்படாது, நடக்கவே நடக்காது. ஏதோ தேர்தலுக்காகச் சொல்லக்கூடிய வாக்குறுதி என்று அவர்கள் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால், மக்கள் அதை ஏற்று, நம்பி வாக்களித்த காரணத்தால் நாம் ஆட்சிக்கு வந்தோம், கலைஞர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். முதலமைச்சராக நேரு விளையாட்டரங்கத்திலே அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டபோது, பதவிப் பிரமாணத்தை மேதகு கவர்னர் அவர்கள் நடத்தி வைத்தபோது, நியாயமாக ஒரு முதலமைச்சர் பதவி ஏற்றுக்கொண்டால், பதவி ஏற்பு விழா முடிந்தால், அந்த விழா முடிந்ததற்குப் பிறகு நேராகக் கோட்டைக்குச் செல்வார்கள். கோட்டைக்குச் சென்று அவருடைய அறையிலே போய்

2010 ஜனவரி 11] [திரு. மு.க. ஸ்டாலின்]

உட்காருவார்கள். நாற்காலியிலே போய் உட்காருவார்கள். பின், அடையாளத்திற்காக ஒரு கோப்பில் கையெழுத்துப் போடுவார்கள். இதுதான் மரபின்படி நடந்துகொண்டிருக்கக்கூடிய ஒரு சம்பவம். ஆனால், அதற்கெல்லாம் நேர் மாறாக, பதவியேற்றுக்கொண்டு, அந்த விழா மேடையிலேயே, அவர் நேராகக் கோட்டைக்குச் செல்லாமல், கோட்டையில் இருக்கக்கூடிய கோப்பினையே விழா மேடைக்கு வரவழைத்து, அந்த விழா மேடையிலேயே அவர் போட்ட முதல் கையெழுத்து (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய். இப்போது அதுவும் ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் என்று இன்றைக்கு மாறியிருக்கிறது. இதை நான் ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், அன்றைக்கு முடியவே முடியாது, நடக்கவே நடக்காது, சாத்தியப்படாது என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு முடிந்திருக்கிறதா? இல்லையா?

நேற்று முன்தினம் இதே அவையிலே நான் கூர்ந்து கவனித்துப் பார்த்தேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் விலைவாசியைப் பற்றி ஒப்பிட்டுச் சொல்கிறபோது, இந்த ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாயைத்தான் அவர் அடையாளம் காட்டினார், மற்ற விலைகளைச் சொல்கிறபோது. எங்களுக்குக்கூட அவ்வளவு வேகமாக அந்த ஒரு கிலோ அரிசியைப் பற்றி ஒரு ரூபாய் என்று சொல்லக்கூடிய அளவுக்கு வேகம் வராது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அவருக்கு அந்த வேகம் வந்தது. நான் அவர் பேசியதை எண்ணிக்கூட பார்த்தேன். 19 முறை சொல்லியிருக்கிறார், ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய், ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் என்று 19 முறை சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) நான் எண்ணினேன், எத்தனை முறை சொல்கிறார் என்று. ஆகவே, அந்த அளவுக்கு அவருடைய உள்ளத்திலே ஆழமாக அந்த ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் என்பது பதிந்திருக்கிறது என்று எண்ணிப் பார்க்கிறபோது உள்ளபடியே எங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-45

இன்னொரு சம்பவத்தைக்கூட நான் இந்த அவையிலே பதிவு செய்ய வேண்டும். பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணாவினுடைய பிறந்த நாளையொட்டி ஒவ்வோர் ஆண்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இளைஞர் அணியின் சார்பில் (குறுக்கீடு) இல்லை என்று சொல்லவில்லையே, இல்லை

[திரு. மு.க. ஸ்டாலின்] [2010 ஜனவரி 11

என்று சொல்லவில்லையே, ஒப்பிட்டுச் சொன்னீர்கள் என்று சொன்னேன். (குறுக்கீடு) ஒப்பிட்டுச் சொன்னதாகச் சொன்னேன், தவறாகச் சொல்லவில்லையே அதற்காக நன்றி சொல்கிறேன் உங்களுக்கு, அவ்வளவுதான். வேறு ஒன்றும் இல்லை.

அண்ணா அவர்களுடைய நூற்றாண்டு விழாவை, அவருடைய பிறந்த நாளைத் தொடர்ந்து இளைஞர் அணியின் சார்பிலே ஒவ்வோர் ஆண்டும் நாங்கள் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அந்த வகையிலே பள்ளிக்கூடத்திலே படித்துக் கொண்டிருக்கக்கூடிய மாணவ, மாணவிகளுக்கெல்லாம் பேச்சுப் போட்டிகளை, கவிதைப் போட்டிகளை, கட்டுரைப் போட்டிகளை நடத்திக் கொண்டிருக்கிறோம். அந்த வகையிலே இந்த ஆண்டு, அந்த நிகழ்ச்சியை நடத்துகிறபோது, திண்டுக்கல் பகுதியைச் சார்ந்த 5 ஆம் வகுப்பிலே படித்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு மாணவன், அந்தப் போட்டியிலே பங்கேற்று, அதிலே கலந்து கொண்டு உரையாற்றினான். அப்படிப் பேசுகிறபோது, இந்த அரசினுடைய சாதனைகளைப் பற்றியெல்லாம் வரிசைப்படுத்திச் சொன்னான். ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்குவதைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னான். சொல்லிவிட்டு, அதற்கு ஒரு உதாரணம் கொடுத்தான், என்ன என்று கேட்டால் மகாத்மா காந்தி அவர்களை இந்த நாட்டினுடைய தலைவராக, அதாவது Father of the Nation-ஆகக் கருதுகிறோம். அதுபோல் இன்றைக்கு Father of the Ration-ஆகக் கலைஞரை நாங்கள் எண்ணிக் கொண்டிருக்கிறோம் என்று அந்த 5-வது வகுப்பு படித்துக் கொண்டிருக்கக்கூடிய மாணவனுடைய உள்ளத்திலே அது பதிந்திருக்கிறது என்று சொன்னால், திரு. அக்ரி கிருஷ்ணமூர்த்தியினுடைய உள்ளத்திலே பதிந்திருப்பதிலே எந்தவிதத் தவறும் இல்லை என்பதைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விலைவாசி உயர்வு என்பது, இங்கே தமிழகத்திலே மட்டும் ஏற்பட்டதல்ல. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மதிப்பிற்குரிய திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சில சிறப்பான விளக்கங்களை எல்லாம் இங்கே அளித்தார்கள். ஆகவே, இன்றைக்கு இந்தியா முழுவதும் ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்சினை, இந்த விலைவாசிப் பிரச்சினை. ஆனால் அதற்குரிய நடவடிக்கையை இன்றைக்கு இருக்கக்கூடிய அரசு தொடர்ந்து எடுத்துக் கொண்டிருக்கிறதா, இல்லையா? அதைத்தான் நீங்கள் தயவுகூர்ந்து புரிந்துகொள்ள வேண்டும். விலைவாசியைக் குறைக்க வேண்டும் என்பதற்காகத்தான்

2010 ஜனவரி 11] [திரு. மு.க. ஸ்டாலின்]

தொடர்ந்து ஒரு கிலோ அரிசியை ஒரு ரூபாய்க்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம். ஏழை மக்களைப் பொறுத்தவரையில், நடுத்தர மக்களைப் பொறுத்தவரையில், விலைவாசியினுடைய உயர்விலிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், கோதுமை மாவு, மளிகைப் பொருட்களை மானிய விலையிலே வழங்கிக் கொண்டிருக்கிறோம். குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்று சொன்னால், கடந்த ஏப்ரல் மாதம் முதல் *71,402* மெட்ரிக் டன் துவரம் பருப்பும், *29,597* மெட்ரிக் டன் உளுத்தம் பருப்பும், *15,185* மெட்ரிக் டன் கோதுமை மாவும், *69,124* கிலோ லிட்டர் பாமாயிலும் பொது விநியோகத் திட்டத்தின்மூலமாக மானிய விலையிலே நம்முடைய அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. மேலும், கூடுதலாக கனடா நாட்டிலிருந்து *26,000* மெட்ரிக் டன் துவரம் பருப்பு இறக்குமதி செய்து மானிய விலையில் வழங்கிக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், clarification இருந்தால், கடைசியில் கேளுங்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: அதுமட்டுமல்ல, மலிவு விலையில் *50* ரூபாய்க்கு *10* வகையான மளிகைப் பொருட்களை அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் தரமான வகையிலே நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், என்ன? சொல்லுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை முதல்வர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்பது மாணவர் மத்தியிலே பதிந்திருக்கிறது என்று சொன்னார்கள். மின்சார வெட்டால் பரீட்சைக்குச் செல்லமுடியாத மாணவர் மத்தியிலும் அது நிறைந்திருக்கிறது. விலைவாசி விண்ணை முட்டிக் கொண்டிருப்பதும் மாணவர் மத்தியிலே நிறைந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: இதுதான் பாயின்ட் ஆப் ஆர்டரா? இல்லை, மின்வெட்டைப் பொறுத்தவரைக்கும் இந்தியாவிலேயே நம்முடைய தமிழ்நாட்டில்தான் மின்வெட்டு அதிகமாக இல்லை என்பது தெளிவாகி இருக்கிறது என்பதை நீங்கள்

புரிந்துகொள்ள வேண்டும். ஆகவே, விலைவாசி உயர்வால் மக்கள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் 2005-2006 ஆம் ஆண்டில் 1,600 கோடி ரூபாயாக இருந்த உணவு மானியச் செலவு, தற்போது 4,000 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்பதையும் நீங்கள் மனதிலே பதிய வைத்துக்கொள்ள வேண்டும். எனவே, விலைவாசியைக் கட்டுப்படுத்திட அரசு எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய முனைப்பான நடவடிக்கைகளை நிச்சயமாக யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெறக்கூடியவர்களை ஒப்பந்த அடிப்படையிலே காலிப் பணியிடங்களில் நியமிப்பது பற்றிய அரசு ஆணை குறித்து, உறுப்பினர்களாக இருக்கக்கூடிய நீங்கள் பல கருத்துகளை, ஏன் சிலர் ஆட்சேபணைகளை எல்லாம்கூட இந்த அவையிலே எடுத்து வைத்திருக்கிறீர்கள். படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு குறையும் என்கிற அந்தக் கருத்தும் இந்த அவையிலே பரவலாகப் பேசப்பட்டது. நான் அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட விரும்புகிறேன். யாரும் இதுகுறித்து அச்சப்பட வேண்டிய அவசியமில்லை. இது அடிப்படையற்றது. இதுகுறித்து நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் சில நாட்களுக்கு முன்பு தெளிவாக ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். ஏன், இந்த ஆளுநர் உரையிலேகூட, இதுகுறித்துத் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. நான் ஒரேயொரு கேள்வி கேட்கிறேன். கடந்த ஆட்சியில் போடப்பட்ட வேலை நியமன தடைச் சட்டத்தை இரத்து செய்த ஆட்சி, கலைஞருடைய ஆட்சி என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-50

இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, மே 2006 முதல் செப்டம்பர் 2009 வரை—ஒரு புள்ளிவிவரத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன்—காவல் துறை மூலமாக 12,471 பேர்களும், அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக 23,971 பேர்களும், வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலமாக 1,15,073 பேர்களும், காலமுறை ஊதியம் வழங்கி நிரந்தரம் செய்யப்பட்ட தொகுப்பூதியப் பணியாளர்களாக 1,84,154 பேர்களும், கருணை அடிப்படையிலே நியமனம் 9,146 பேர்களும், ஆக மொத்தம் 3,44,815 பேர் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2010 ஜனவரி 11] [திரு. மு.க. ஸ்டாலின்]

ஆனால் ஒன்று, தேர்வாணையத்தின் மூலமாகப் பணியிடங்களை நிரப்புகிற நேரத்தில், சில நேரங்களில் கால இடைவெளி ஏற்படுகிற காரணத்தால்தான், அதனால் மக்களுக்குச் செய்யக்கூடிய சில திட்டங்கள் மக்களுக்குப் போய்ச் சேராத ஒரு சூழ்நிலை வந்துவிடுகிறது. ஆக, அந்த நோக்கத்தில்தான் இந்த அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறதே தவிர, வேறல்ல. எனவே, யாருக்கும் எந்தச் சந்தேகமும், அச்சமும் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இளைஞர்களுடைய வேலைவாய்ப்புகளைப் பொறுத்தவரையில், எந்த ஓர் இளைஞனுக்கும் இந்த அரசாணையால் எந்தவிதத்திலும், ஓர் இம்மியளவும் பாதிப்பு இருக்காது என்பதை நான் அழுத்தந்திருத்தமாக உறுதியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அடுத்து, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி அவர்கள் அதைக் கொஞ்சம் விவரமாக இங்கே எடுத்து உரையாற்றியிருக்கிறார்கள். அதுவும், இப்போது தருமபுரி மாவட்டத்திலே, பெண்ணாகரம் தொகுதியிலே தேர்தல் வரவிருக்கிறது, இடைத்தேர்தல்; அதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு, கொஞ்சம் அழுத்தந்திருத்தமாகவே அவர் பேசியிருக்கிறார். அதுவும் எங்களுக்குத் தெரியும். அதை எப்படிச் சமாளிப்பது என்பதும் எங்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் சொன்னமாதிரி அல்ல. 1996-லிருந்து நான் பேசாத கூட்டத் தொடரே இல்லை. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றிப் பேசாத கூட்டத் தொடரே இல்லை. இப்போதும் அதைத்தான் பேசினேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்போது எல்லாம் செயல்பாட்டிற்கு வரவில்லை, அதனால் பேசினீர்கள். இப்பொழுது செயல்பாட்டிற்கு வந்திருக்கிறது. வந்திருக்கக்கூடிய சூழ்நிலையில் பேசியிருக்கிறீர்கள். அதனால்தான் சொன்னேன். வேறல்ல. எனவே, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்பது தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட

மக்களுடைய நீண்ட காலப் பிரச்சினை என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். 2006 ஆம் ஆண்டு கலைஞர் தலைமையிலே, நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, அதற்கான முயற்சிகளிலே முழுமையாக ஈடுபட்டு, இந்தத் திட்டத்தை எப்படியாவது, அந்த இரண்டு மாவட்ட மக்களினுடைய வாழ்விற்கு, அவர்களுடைய பிரச்சினையைத் தீர்த்து வைக்கக்கூடிய வகையிலே நிறைவேற்றிட வேண்டுமென்று முடிவு செய்து, ஜப்பான் நாட்டினுடைய நிதியுதவியைப் பெற்று, செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். இது ஒரு கட்டத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறது. தொடக்க நிலைக்கு வந்திருக்கிறது.

அதிலே ஒன்று, பன்னாட்டு நிதி அமைப்புகளிடமிருந்து உதவி பெறக்கூடிய நேரத்தில், அவர்களோடு செய்து கொண்டிருக்கக்கூடிய ஒப்பந்தத்தில் இருக்கக்கூடிய வழிமுறைகள், கால அட்டவணை, நிபந்தனைகள், இவற்றையெல்லாம் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. அந்த ஒப்பந்த அடிப்படையிலே திட்ட மேலாண்மை கலந்தாலோசகர் ஜப்பான் நாட்டைச் சார்ந்த Nippon Koei என்கிற நிறுவனம், 3-10-2008-ல் நியமிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணிகளைப் பொறுத்தவரைக்கும் 5 தொகுப்புகளாகப் பிரித்து இதை நாம் நிறைவேற்றவிருக்கிறோம். அந்த 5 தொகுப்புகளுக்கான பணிகளைப் பொறுத்தவரைக்கும் டெண்டர் கோரி, அந்த 5 டெண்டர்களும் முறையாகப் பெறப்பட்டு, தற்போது அவை மதிப்பாய்வு செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நான் உறுதியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், மார்ச் 2010 இறுதிக்குள்ளாக அவையெல்லாம் முடிவு செய்யப்பட்டு, அதனுடைய தொடக்கப் பணி, களப் பணி, அது மார்ச் இறுதியிலே தொடங்கப்பட இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அது தொடங்கப்படுவது மட்டுமல்ல, ஏற்கெனவே அதற்கென்று ஒரு கால அட்டவணை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது, 2012 டிசம்பர் மாத இறுதிக்குள்ளாக இந்தப் பணியை நிறைவேற்றிட வேண்டுமென்று வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதைக்கூட இங்கே பேசுகிறபோது உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னார்.

பிற்பகல் 12-55

இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை 2 ஆண்டுக் காலம் என்று சொல்லி, 3 ஆண்டுக் காலம் என்று சொல்லி, இரண்டு ஆண்டுக் காலத்திலே முடிப்போம் என்று சொல்லி, விரைவிலே முடித்தீர்களே, இதை ஏன் முடிக்கவில்லை என்று கேட்டார்கள்.

நான் அவருக்கும்—அவர் தேர்தலை மனதிலே வைத்துச் சொன்ன காரணத்தால், நானும் தேர்தலை மனதிலே வைத்தே சொல்கிறேன். 2012 ஆம் ஆண்டு என்று கால நிர்ணயம் வைத்து அறிவித்திருந்தாலும், அதைவிட முன்கூட்டியே அதை முடிப்பதற்கான முயற்சிகளில் நிச்சயமாக இந்த அரசு ஈடுபடும் என்ற அந்த உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், அ.தி.மு.க.வைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் திரு. விசுவநாதன் அவர்கள் இங்கே உரையாற்றுகிறபோது, இந்த கவர்னர் உரையின்மீதான விவாதத்தில் அவர் கலந்துகொண்டு பேசுகிறபோது, இந்த அறிக்கையிலே, அரசியல் தட்பவெப்ப நிலைக்கு மாறக்கூடிய நிலையிலே சில அறிவிப்புகள் எல்லாம் வந்திருக்கிறதென்று குறிப்பிட்டுச் சொன்னார். குறிப்பாக, மாநில சுயாட்சிக் கொள்கையைத் தேவைப்படும்போது தி.மு.க. எடுத்துக்கொள்கிறதென்று விமர்சனம் செய்தார். தயவுசெய்து அவர் ஒன்றை உணர்ந்துகொள்ள வேண்டும். இந்த ஆண்டு கவர்னர் உரையிலே மட்டுமல்ல, 2006 ஆம் ஆண்டு கவர்னர் உரையாக இருந்தாலும், 2007 ஆம் ஆண்டு கவர்னர் உரையாக இருந்தாலும், 2008 ஆம் ஆண்டு கவர்னர் உரையாக இருந்தாலும், அந்த உரைகளெல்லாம் இந்த அவையிலே தாக்கல் செய்யப்படுகிறபோது, இந்த மாநில சுயாட்சி என்ற அந்த முழக்கம் அதிலே இடம்பெற்றிருக்கிறது. அதுமட்டுமல்ல; நிதிநிலை அறிக்கையாக இருந்தாலும் சரி, 2006-2007, 2007-2008, 2008-2009 ஆம் ஆண்டுகளிலே வெளியிடப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையிலேகூட, தொடர்ந்து அதை நாம் குறிப்பிட்டிருக்கிறோம். இன்னும்கூட நான் வெளிப்படையாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், இப்போதல்ல, எப்போதெல்லாம் கலைஞர் முதலமைச்சராக இருக்கிறாரோ, எப்போதெல்லாம் நாங்கள் ஆட்சியிலே இருக்கிறோமோ, அப்போதெல்லாம் அதை மறக்காமல் நாங்கள் குறிப்பிட்டுச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாநில சுயாட்சியைப் பொறுத்தவரையில், அதற்காக முதல் குரல் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய, ஓங்கிக் குரல் கொடுத்துக்கொண்டிருக்கக்கூடிய தலைவர், நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை யாரும் மறந்துவிட முடியாது. (குறுக்கீடு) உட்காருங்கள். ஏதோ, தோழமையாக இருந்தால் ஒரு கொள்கை, தோழமை இல்லையென்றால் ஒரு கொள்கை என்பதெல்லாம் திராவிட

[திரு. மு.க. ஸ்டாலின்] [2010 ஜனவரி 11

முன்னேற்றக் கழகம் கடைப்பிடிக்கக்கூடிய கொள்கையல்ல என்பதை நான் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன். அதற்கு ஒரு எடுத்துக்காட்டைக்கூட, ஒரு சான்றைக்கூட நான் சொல்ல வேண்டும்.

மரியாதைக்குரிய அம்மையார், அன்னை இந்திரா காந்தி அவர்கள் ஒருமுறை சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற ஒரு கூட்டத்திலே கலந்துகொண்டு உரையாற்றுகிறபோது ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார். தோழமையாக இருந்தாலும், எதிரியாக இருந்தாலும் இரண்டு நிலைகளிலும் தி.மு.க. உறுதியாக இருக்கும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) அவரே சொல்லியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) விசுவநாதனுடைய சர்ட்டிபிகேட்டா எங்களுக்குத் தேவை! அன்னை இந்திரா காந்தி அவர்களே சொல்லியதற்குப் பிறகு வேறு யாருடைய சர்ட்டிபிகேட்டும் எங்களுக்குத் தேவையில்லை என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் விசுவநாதன் அவர்கள் இன்னொரு செய்தியைக்கூட இந்த அவையிலே பதிவு செய்தார். சென்னை, அசோக் நகர் பகுதியிலே ஒரு நடன ஆசிரியையும் அவரது மகனும் கொலை செய்யப்பட்டதாகவும், அந்தக் கொலைக் குற்றவாளியை காவல் துறையால் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும், நீதிமன்றம் அந்த வழக்கில் காவல் துறைக்குக் கடுமையான கண்டனம் தெரிவித்ததாகவும், ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்றும் பேசினார். உண்மை என்னவென்றால், இந்த வழக்கில் நான் விளக்கமாகச் செல்ல விரும்பவில்லை. நீதிமன்றத்தில் இந்தப் பிரச்சினை இருக்கிறது. இருந்தாலும் அவர் சொன்னதை மறுக்கவேண்டும்; அவர் சொன்னதற்கு விளக்கம் தரவேண்டுமென்பதற்காகத்தான் குறிப்பிடுகிறேனே தவிர, வேறல்ல. இந்த வழக்கில் வேல்முருகன், அவரது நண்பர்கள் பாலா, விஜயராஜ், வேல்முருகனுடைய காதலி தானியா ஆகியோர் கைது செய்யப்பட்டு, வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய சொத்துகள் எல்லாம் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் விசுவநாதன் கூறியதைப்போல, குற்றவாளிகள் யாரும் கைது செய்யப்படவில்லை என்பது உண்மைக்குப் புறம்பான செய்தியாகும். அதுமட்டுமல்ல; ஒரு வார இதழ் செய்தி தொடர்பாகத் தலைமறைவான வரதராஜன் என்பவர், சென்னை உயர்

2010 ஜனவரி 11] [திரு. மு.க. ஸ்டாலின்]

நீதிமன்றத்தில் முன் ஜாமீன் கேட்டு ஜாமீன் மனு செய்து, 12-1-2009-ல் முன் ஜாமீனும் பெற்றிருக்கிறார். எனவே, இந்த வழக்கைப் பொறுத்தவரைக்கும், சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்பிலேகூட அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். 'This Court feels to transfer the investigation to the C.B.I. restricts from passing any such order having faith on the State Government' என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்களே தவிர, அவர் சொன்னதைப்போல 'கண்டனம்' என்ற வார்த்தை இதிலே இல்லை என்பதை அவர் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக நான் குறிப்பிடுகிறேன்.

பிற்பகல் 1-00

அடுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் இங்கே பேசுகிறபோது பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படக்கூடிய இழப்பீடு, அதுகுறித்து தந்திருக்கக்கூடிய புள்ளிவிவரத்திலே குழப்பம் இருக்கிறதென்று குறிப்பிட்டுச் சொன்னார்.

புள்ளிவிவரத்திலே குழப்பமில்லை. பத்திரிகைச் செய்தியின் அடிப்படையில் அவர் புரிந்து கொண்டதில்தான் ஒரு சிறு குழப்பம் ஏற்பட்டிருக்கிறதே தவிர, வேறல்ல. காரணம், 'தினமலர்' நாளிதழ் செய்தியை வைத்து அரசின் புள்ளிவிவரம் தவறு, புள்ளிவிவரங்களைக்கூட ஒழுங்காக அச்சிட முடியாத ஓர் அரசு என்று ஒரு தடித்த வார்த்தையை அவர் பயன்படுத்தினார். உண்மை என்னவென்று கேட்டால், 8-1-2010 அன்று நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக வெளியிடப்பட்ட பத்திரிகைச் செய்தியில், மத்திய அரசினுடைய பங்கு 306.47 கோடி ரூபாய் என்றுதான் சரியாக இருக்கிறது. ஆனால், 'தினமலர்' பத்திரிகையில் குறிப்பிட்டதுபோல, 325 கோடி ரூபாய் அல்ல என்பதை அவருக்கு விளக்க வேண்டும் என்பதற்காக நான் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன்.

அதேபோல, திரு. சேகர்பாபு அவர்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்கிறபோது, நான்காவது கட்டக் கொள்முதலில் அறிவித்ததைவிடக் கூடுதலாக, அதாவது 8 இலட்சத்து 37 ஆயிரத்து 500 பெட்டிகள் கூடுதலாக எப்படி வந்தன என்று ஒரு கேள்வியைக் கேட்டார். நான் அவருக்கு ஒரு விளக்கம் தர விரும்புகிறேன். முதல் மூன்று கட்டங்களில் வாங்கப்பட்ட வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், 62 இலட்சத்து 80 ஆயிரம்.

நான்காவது கட்டமாக, 41 இலட்சத்து 62 ஆயிரத்து 500 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்க முடிவு செய்யப்பட்டது. அதுதான் 2009 ஆம் ஆண்டு ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், நான்காவது கட்டத்தில் மொத்தம் வாங்கப்பட்ட எண்ணிக்கை 50 இலட்சம் ஆகும். அதாவது, கூடுதலாக 8 இலட்சத்து 37 ஆயிரத்து 500 பெட்டிகளை வாங்கியுள்ளோம். எனவே இந்தக் கூடுதல் தொலைக்காட்சிப் பெட்டிகள், திரு. சேகர்பாபு அவர்கள் சொன்னதுபோல, இனப் பெருக்கத்தால் அல்ல. கூடுதல் நிதியொதுக்கீடு செய்து, அதிக எண்ணிக்கையிலே வாங்கப்பட்டிருக்கிறதே தவிர, வேறல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும்கூட ஒன்றை விளக்கிட வேண்டுமென்று சொன்னால், இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதாக இருந்தாலும் சரி, அதை விநியோகிக்கக்கூடிய அந்த நிலையாக இருந்தாலும் சரி, இதற்கென்று ஒரு குழுவை, சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் அடங்கிய ஒரு குழுவை அரசு நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் தலைமையிலே அமைத்திருக்கிறது. அந்தக் குழுவிலேகூட அவர்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் யாரும் இடம்பெறவில்லை. இடம்பெற வேண்டுமென்று அழைத்தோம். அவர்கள் மறுத்துவிட்டார்கள். ஏனென்றால், இந்தக் கொள்கையை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தத் திட்டத்தையே அவர்கள் வெறுக்கக்கூடியவர்கள், ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், அக்கறையோடு இதிலே கேள்வி கேட்டதற்காக, உள்ளபடியே நான் திரு. சேகர்பாபு அவர்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைக்கூடத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் . . .

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: Point of order அப்புறம் கேட்கலாம். கடைசியாகக் கேட்கலாம். (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பக்கம் 9-ல் 28-11-2008 அன்று நிகழ்ந்த நிஷா புயலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 652 கோடி ரூபாய் விவசாயிகள் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் மதிப்பீடு செய்யப்பட்டதாகக் கூறியிருக்கிறீர்கள். இதில் 306 கோடி . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த subject வேறு.

திரு. பி.கே. சேகர்பாபு: இல்லை, இல்லை. இந்த subject தான். என்னைப் பேச விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வேறு subject பற்றிப் பேசுகிறீர்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், வேலூர் பகுதியிலே நிறைவேற்றப்பட வேண்டிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப்பற்றி இங்கே பேசினார். இந்தக் கூட்டத் தொடரில் மட்டுமல்ல, தொடர்ந்து பல கூட்டத் தொடரிலே அதை அவர் நினைவுபடுத்திப் பேசிக் கொண்டிருக்கிறார். நான் கடந்த ஆண்டு இந்த அவையிலே ஓர் அறிவிப்பைக்கூட வெளியிட்டேன். வேலூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய வேலூர் மாநகராட்சி, திருப்பத்தூர், ஜோலார்பேட்டை, வாணியம்பாடி, ஆம்பூர், குடியாத்தம், பேரணாம்பட்டு ஆகிய 6 நகராட்சிகள்; நாட்ராம்பள்ளி, உதயேந்திரம், ஆலங்காயம், ஒடுகத்தூர், பள்ளிகொண்டா ஆகிய 5 பேரூராட்சிகள் மற்றும் 64 வழியோர ஊரகக் குடியிருப்புகள், இந்தப் பகுதிகளுக்கெல்லாம் காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு, 1,400 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டது. ஆனால் தற்போது, அதில் அரக்கோணம் நகராட்சியையும் சேர்த்து, 1,800 கோடி ரூபாய் திருத்திய மதிப்பீட்டின் அடிப்படையிலே இப்போது திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதற்குரிய நிதியாதாரத்தைப் பெறுவதற்கான வகையிலே இப்போது உறுதி செய்துகொண்டிருக்கிறோம். எனவே, அதுவும் விரைவிலே உறுதி செய்யப்பட்டு, நிச்சயமாக, உறுதியாக, இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-05

அதைப்போல், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி அவர்கள் பேசுகிறபோது, ஆசிரியர்களுக்கான ஊதிய முரண்பாடு குறித்து இங்கே பேசியிருக்கிறார்கள், உண்மைதான். அந்த ஊதிய திருத்தம் குறித்து குறைபாடுகள் எதுவும் இருப்பின், அவற்றைப்

பரிசீலிப்பதற்காக ஒரு நபர் குழு, திரு. ராஜீவ் ரஞ்சன் I.A.S. அவர்கள் தலைமையில் நியமிக்கப்பட்டிருக்கிறது. 31-3-2010-க்குள் அந்தக் குழுவினுடைய அறிக்கை பெறப்படவிருக்கிறது. எனவே, அந்த அறிக்கை வந்தபிறகு அதுகுறித்துப் பரிசீலித்து, உரிய, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, நம்முடைய முன்னாள் முதலமைச்சர் எதிர்க்கட்சித் தலைவர், அம்மையார் அவர்கள் இங்கே பேசுகிறபோது மிகுந்த அக்கறையோடு ஒரு கேள்வியைக் கேட்டார்கள். கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தைப்பற்றி அவர் பேசி, இதற்கு நிதி ஆதாரங்களை எங்கிருந்து பெறவிருக்கிறீர்கள் என்ற ஒரு கேள்வியைக் கேட்டார்கள்; அக்கறையோடு கேட்டார்கள், அதற்கு நன்றி. ஆறு ஆண்டுகளில், 12,600 கோடி ரூபாய் ஒதுக்குவது ஒன்றும் முடியாத செயல் அல்ல. நிச்சயமாக அந்தந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கீடு செய்து, அந்தத் திட்டத்தை நிச்சயமாக நிறைவேற்றவிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அரசைப் பொறுத்தவரையில், 'சொன்னதைத்தான் செய்வோம்', 'செய்வதைத்தான் சொல்வோம்', இன்னும் சொல்லப்போனால், சொல்லாததையும் இன்றைக்கு நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, யாரும் எந்தக் கவலையும் பட வேண்டிய அவசியம் இல்லை என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதே நேரத்தில், நம்முடைய தமிழகப் போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. நேரு அவர்கள் நம்முடைய முதல்வரிடத்திலும், என்னிடத்திலும் தொடர்ந்து ஒரு கோரிக்கையை எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவருடைய மாவட்டத்திலே கந்தரசன்கோட்டை தடுப்பணைத் திட்டம் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று அவர் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார். எனவே, முதல்வர் அவர்களுடைய அனுமதியோடு நான் இந்த அறிவிப்பை வெளியிட விரும்புகிறேன். காவிரி ஆற்றினுடைய படுகையிலிருந்து திருச்சி குடிநீர்த் திட்டத்திற்கும், இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கும் நீர் வழங்கக்கூடிய கிணறுகளுக்கு நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு,

2010 ஜனவரி 11] [திரு. மு.க. ஸ்டாலின்]

கோடைக் காலங்களிலும் தங்கு தடையின்றி நீர் கிடைத்திட வழிவகை செய்யும் நோக்கத்துடன் திருச்சி மாவட்டம், திருவரங்கம் வட்டம், கந்தரசன்கோட்டை கிராமம் அருகே, காவிரி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்க ஆய்வுப் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த ஆய்வறிக்கை பெறப்பட்டதும், நிச்சயமாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய கோரிக்கையும் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

'என் கடன் பணி செய்து இருப்பதே' என்கிற இலட்சியத்தோடு நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் அல்லும், பகலும் அயராது தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவருடைய அயராத உழைப்பிற்கு தமிழகம் அதனுடைய அங்கீகாரத்தைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க, மறைக்க முடியாது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஆளுநர் உரையில் அறிவித்திருக்கக்கூடிய நலத் திட்டங்களையும், 'சொன்னதைச் செய்வோம்', 'செய்வதைச் சொல்வோம்' என்ற அடிப்படையிலே நிறைவேற்ற இந்த அரசு தொடர்ந்து உறுதி எடுத்துக்கொண்டு, தன்னுடைய கடமையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. எனவே, மக்கள் நலத் திட்டங்களை சிலர் எதிர்க்கிற காரணத்தால், நிச்சயமாக நாங்கள் உங்களை என்றைக்கும் எதிரிகளாகக் கருத மாட்டோம். ஆனால், நீங்கள் மக்களுக்கு எதிரானவர்களாக ஆகிவிடக்கூடாது என்கிற அச்சம்தான் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அதை மாத்திரம் நினைவுபடுத்தி, நன்றிகூறி அமைகிறேன். வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள். *(குறுக்கீடு)* என்ன? திரு. பன்னீர்செல்வம், சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் கூறியுள்ளபடி மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் 21 இலட்சம் கூரை வீடுகளுக்குப் பதிலாக கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படும் என்றும், அதில் இந்த நிதி ஆண்டில் 3 இலட்சம் வீடுகள் எடுத்துக்கொள்ளப்படும் என்றும், 1,800 கோடி ரூபாய் அதற்குச் செலவாகும் என்றும்

கூறியிருக்கிறார்கள். கடந்த காலங்களிலிருந்து இதுவரை, வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்கின்ற மக்களுக்காக இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதுவரை, கிட்டத்தட்ட 30 இலட்சம் வீடற்ற ஏழை எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த 30 இலட்சம் வீடற்ற ஏழை எளிய மக்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டித் தருவதற்கு நீங்கள் ஆவன செய்யப் போகிறீர்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் என்று சொன்னீர்கள். இன்றைக்கு அக்ரி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசியதைக் குறிப்பிட்டு அதற்கு நன்றிகூட மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த ஜனத்தொகை ஆறேகால் கோடி பேர். அதில், ரேஷன் அரிசியினை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதன்மூலமாக, கிட்டத்தட்ட இரண்டேகால் கோடி ஜனத்தொகை கொண்ட மக்கள் இந்த அரிசியை வாங்கி அவர்கள் அதனைப் பயன்படுத்திடக்கூடிய சூழ்நிலை இருக்கலாம். ஆனால் மீதம் இருக்கின்ற 4 கோடி பேர் தமிழகத்திலே வசிக்கின்றார்களே, அவர்கள் இன்றைக்கு ஒரு கிலோ அரிசியினை 42 ரூபாய்க்கு வாங்கி அவதிப்படுகின்றார்களே அதைத்தான் அக்ரி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒப்பிட்டுப் பேசினார்கள். அதற்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரையில் பதில் இல்லையென்பதை இந்த அவைக்குச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. வி.பி. கலைராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) முதல்வர் அவர்கள் பேசப் போகின்றார்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

பிற்பகல் 1-10

9. புதிய வளாகத்தில் செயல்படவுள்ள சட்டமன்றத்தின் பாரம்பரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் நினைவுகூர்தல்

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை முதலமைச்சர் அவர்கள் ஆளுநர்

கூறியிருக்கிறார்கள். கடந்த காலங்களிலிருந்து இதுவரை, வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்கின்ற மக்களுக்காக இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதுவரை, கிட்டத்தட்ட 30 இலட்சம் வீடற்ற ஏழை எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த 30 இலட்சம் வீடற்ற ஏழை எளிய மக்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டித் தருவதற்கு நீங்கள் ஆவன செய்யப் போகிறீர்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் என்று சொன்னீர்கள். இன்றைக்கு அக்ரி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசியதைக் குறிப்பிட்டு அதற்கு நன்றிகூட மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த ஜனத்தொகை ஆறேகால் கோடி பேர். அதில், ரேஷன் அரிசியினை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதன்மூலமாக, கிட்டத்தட்ட இரண்டேகால் கோடி ஜனத்தொகை கொண்ட மக்கள் இந்த அரிசியை வாங்கி அவர்கள் அதனைப் பயன்படுத்திடக்கூடிய சூழ்நிலை இருக்கலாம். ஆனால் மீதம் இருக்கின்ற 4 கோடி பேர் தமிழகத்திலே வசிக்கின்றார்களே, அவர்கள் இன்றைக்கு ஒரு கிலோ அரிசியினை 42 ரூபாய்க்கு வாங்கி அவதிப்படுகின்றார்களே அதைத்தான் அக்ரி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒப்பிட்டுப் பேசினார்கள். அதற்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரையில் பதில் இல்லையென்பதை இந்த அவைக்குச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. வி.பி. கலைராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) முதல்வர் அவர்கள் பேசப் போகின்றார்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

பிற்பகல் 1-10

9. புதிய வளாகத்தில் செயல்படவுள்ள சட்டமன்றத்தின் பாரம்பரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் நினைவுகூர்தல்

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை முதலமைச்சர் அவர்கள் ஆளுநர்

உரை குறித்தும், அதனைத் தொடர்ந்து இந்த அவையில் பேசிய பல்வேறு கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களுடைய கருத்துகள் குறித்தும், நீண்ட நேரம் தன்னுடைய பதிலுரையிலே விளக்கம் அளித்திருக்கின்றார்கள். நான் இப்போது ஆளுநர் உரை பற்றியோ, அல்லது வரவிருக்கின்ற பட்ஜெட் பற்றியோ, வேறு பல நிலைமைகளைப் பற்றியோ பேச விரும்பவில்லை.

நான் உட்பட, நாம் எல்லாம் சேர்ந்து, இந்த அவையிலேயிருந்து வெளியேறப் போகிறோம். நம்மை யாரும் வெளியேற்றாமலே நம்முடைய விருப்பப்படி வெளியேறப் போகிறோம். சில பேர் வெளியேறுவதற்காக வந்து, வெளியேறியவர்களையும் சேர்த்து, அவர்களையும் அழைத்துக்கொண்டு நாம் வெளியேறப் போகிறோம். எங்கிருந்து? சரித்திரக் கீர்த்திமிக்க இந்தச் சட்டசபை நடைபெறுகின்ற இந்த இடத்திலிருந்து வெளியேறப் போகிறோம்.

அடுத்துவரும், நிதிநிலை அறிக்கைக் கூட்டத் தொடர், புதிய சட்டமன்றப் பேரவையிலே (மேசையைத் தட்டும் ஒலி) நடைபெறுவதற்கு ஏற்றவகையில் பணிகள் தீவிரப்படுத்தப் பட்டிருக்கின்றன என்பதையும் நீங்கள் எல்லாம் நன்கு அறிவீர்கள்.

இங்கே நடைபெறும் இறுதிக் கூட்டத் தொடர் இது என்பதால் இந்த நேரத்தில் இந்த அவையினுடைய வரலாற்றினைக் கொஞ்சம் திரும்பிப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகின்றேன்.

டெல்லியிலுள்ள செங்கோட்டை, சக்கரவர்த்தி ஷாஜகானால் 17 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட மொகலாயப் பேரரசின் மிகப் பெரிய சின்னம் என்பதைப்போல, சென்னை மாநகரத்திலேயுள்ள இந்த செயின்ட் ஜார்ஜ் கோட்டை, 16 ஆம் நூற்றாண்டிலே கட்டப்பட்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சின்னம் என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

1640-ல் புனித செயின்ட் ஜார்ஜ் நினைவு தினமான ஏப்ரல் 23 அன்று, இந்தக் கோட்டை கட்டப்பட்டதால், இதற்கு புனித ஜார்ஜ் கோட்டை (St. George Fort) என்று பெயரிடப்பட்டது.

1678-ல் இக்கோட்டை வளாகத்தில் மிகத் தொன்மையான புனித மேரி ஆலயம் கட்டப்பட்டது. அந்த தேவாலயத்தில்தான் 1753-ல் இராபர்ட் கிளைவின் திருமணம் நடைபெற்றிருக்கிறது. 1687 முதல் 1692 வரை ஆளுநராக இருந்த "யேல்" அவர்கள் காலத்தில்தான், ஆசியாவிலேயே மிக உயரமான கோட்டைக் கொடிமரத்தில்,

கம்பெனி கொடிக்குப் பதிலாக பிரிட்டிஷ் கொடி பறக்கவிடப்பட்டது. 1746-ல் பிரெஞ்சுக்காரர்களால் கோட்டையிலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்டிருந்த கறுப்புப் படிகத்தாலான கிரானைட் போன்ற படிவங்களாலான 32 தூண்கள், 1761 ஆம் ஆண்டு மீண்டும் சென்னைக்கு எடுத்துவரப்பட்டு, அவற்றுள் 20 தூண்கள் இந்தக் கட்டடத்திலே நிறுவப்பட்டு, இப்போதும் அவை இக்கட்டடத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன. 1910 ஆம் ஆண்டில், அதாவது சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன்பு தற்போதைய சட்டமன்றப் பேரவை மண்டபம் கட்டி முடிக்கப்பட்டது என்பதை எண்ணும்போது, இதற்கும் ஒரு நூற்றாண்டு விழா கொண்டாடலாம் போல் தெரிகிறது (மேசையைத் தட்டும் ஒலி). சென்னை மாகாண சட்டசபைக்கு 1920-ல் நடைபெற்ற முதல் தேர்தலில் திராவிட இயக்கத்தின் வேர்க் கட்சியான நீதிக் கட்சி வெற்றி பெற்று, திரு. ஏ. சுப்பராயலு ரெட்டியார் அவர்கள் முதலமைச்சர் ஆனார்.

பிற்பகல் 1-15

சென்னை மாகாணத்திலேயே, முதன்முதலாக 1920 ஆம் ஆண்டு, டிசம்பர் 17 ஆம் தேதி சட்டமன்றத்தில் First Premier, "முதல் பிரிமியர்" என்ற முதலமைச்சர் பதவியைப் பெற்ற பெருமை நீதிக் கட்சிக்கும், அந்தக் கட்சியைச் சேர்ந்த திரு. சுப்பராயலு ரெட்டியாருக்கும்தான் சாரும். அப்பொழுது சட்டமன்றத்தை 12-1-1921 அன்று கன்னாட் கோமகன் தொடங்கி வைத்தார். அவ்வமயம் சென்னை மாகாண ஆளுநராக இருந்த விலிங்டன் பிரபு அவர்களும், அவரது துணைவியாரும் 6-3-1922 அன்று சட்டமன்றத்திற்கு வருகை தந்தார்கள். அப்போதுதான் தேக்கு மரத்தால் செய்யப்பட்ட, சிறப்பான வேலைப்பாடுகள் நிறைந்த, பேரவைத் தலைவருக்கான இந்த இருக்கையைப் பரிசாக அளித்தனர். அதுவே இன்றளவும், பேரவைத் தலைவரின் இருக்கையாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இருக்கையை அவர்கள் வழங்கியதற்கு என்ன காரணம் என்பதை ஆளுநர் விலிங்டன் அவர்களே தன் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார். அதாவது அவருடைய தாத்தா 'ஹவுஸ் ஆப் காமன்ஸ்' அவையிலே ஸ்பீக்கராக இருந்தவர் என்றும், அவரது துணைவியாரின் தந்தையார் சிறந்த நாடாளுமன்றவாதியாக இங்கிலாந்தில் திகழ்ந்தார் என்றும் பேசியிருக்கிறார்.

1920 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த நீதிக் கட்சி, 1937 ஆம் ஆண்டு ஏப்ரல் வரை ஏறத்தாழ 17 ஆண்டுக் காலம் தொடர்ந்து

ஆட்சியிலே இருந்தது. அந்த 17 ஆண்டுக் காலத்தில் நீதிக் கட்சியினுடைய ஆட்சி, இந்த நாட்டில் முதல் கம்யூனல் ஜி.ஓ., பெண்களுக்கு வாக்குரிமை உள்ளிட்ட சரித்திரம் மறவாத சாதனைகளை நிகழ்த்திக் காட்டியது. நீதிக் கட்சி ஆட்சியில் திரு. சுப்பராயலு ரெட்டியார், பனகல் அரசர், பி. சுப்பராயன், பி. முனுசாமி நாயுடு, பொப்பிலி அரசர், பி.டி. ராஜன் ஆகியோர் முதலமைச்சர்களாக இருந்தார்கள்.

1921 ஆம் ஆண்டு முதல் 1937 ஆம் ஆண்டு வரை இதே புனித ஜார்ஜ் கோட்டையிலே உள்ள பேரவை மண்டபத்திலே கவுன்சில் ஹாலில் பேரவையின் கூட்டத் தொடர் நடைபெற்றது. பேரவையின் கூட்டமே இப்பொழுது இருக்கிற கவுன்சில் ஹாலில் அங்கேதான் நடைபெற்றது.

1937-ல் நடைபெற்ற சென்னை மாகாண சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை இடங்களை வென்றபோதும், சில பிரச்சினைகள் காரணமாக அமைச்சரவை அமைக்கவில்லை. கவர்னரின் வேண்டுகோள்படி இடைக்கால ஏற்பாடாக 1-4-1937 அன்று கே.வி. ரெட்டி முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.

ஒன்றரை மாதத்திற்குப்பின் அமைந்த காங்கிரஸ் அமைச்சரவை மூதறிஞர் இராஜாஜி அவர்களின் தலைமையில் 14-7-1937 அன்று பதவியேற்றது. 1937 ஆம் ஆண்டில் சட்டமன்றப் பேரவை முதன்முதலாக சேப்பாக்கத்தில் உள்ள சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவின் பிரதான மண்டபத்தில்தான் (செனட் ஹால்) செயல்பட்டது.

14-7-1937 முதல் 21-12-1937 வரை சுமார் ஐந்து மாதங்கள் சேப்பாக்கத்தில் உள்ள செனட் மண்டபத்திலே சட்டப் பேரவை நடைபெற்றிருக்கின்றது.

27-1-1938 முதல் 26-10-1939 வரை சுமார் 20 மாதங்கள் அரசினர் தோட்டத்திலே உள்ள இராஜாஜி மண்டபத்திலே பேரவை நடைபெற்றது. இராஜாஜி மண்டபத்தை நினைத்துப் பாருங்கள், பேரவையையும் ஒரு முறை உற்றுப்பாருங்கள், இந்தப் பேரவை இராஜாஜி மண்டபத்திலே 27-1-1938 முதல் 26-10-1939 வரை 20 மாதங்கள் நடைபெற்றிருக்கின்றது.

இரண்டாம் உலகப் போரில் இந்தியாவை ஈடுபடுத்திய ஆங்கிலேய அரசைக் கண்டித்து, இராஜாஜி தலைமையிலான

காங்கிரஸ் அமைச்சரவை 30-10-1939-ல் இராஜினாமா செய்தது. அன்று முதல் 30-4-1946 வரை ஆளுநர் ஆட்சி நடைபெற்றது. தேர்தலே நடைபெறவில்லை. ஒரு காலத்தில் தேர்தலே நடைபெறவில்லை. 1946-ல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி வென்று 30-4-1946 அன்று ஆந்திர கேசரி டி. பிரகாசம் அவர்கள், தற்போதைய தலைமைச் செயலகப் பிரதான மண்டபத்தில் பொறுப்பேற்றார்.

பிற்பகல் 1-20

24-5-1946 முதல் புனித ஜார்ஜ் கோட்டையிலே உள்ள இதே மண்டபத்தில் பேரவை நடைபெற்றது. பிரகாசம் அவர்களின் அமைச்சரவை 23-3-1947 அன்று பதவி விலகியது. அன்று பிற்பகலில் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் புதிய முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். ஓமந்தூரார் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த அந்தக் காலத்திலேதான்—15-8-1947-ல் இந்தியத் திருநாடு விடுதலை அடைந்தது. முதல் சுதந்திரத் திருநாளைக் கொண்டாடிய முதல் முதலமைச்சர் என்ற பெருமையை ஓமந்தூரார் பெற்றார். அவரது பெயரைத்தான் Government Estate என்று இருந்த பகுதிக்கு "ஓமந்தூரார் வளாகம்" என்று நான் சூட்டினேன் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

1950 ஆம் ஆண்டு இந்திய அரசமைப்புச் சட்டம் அமலுக்கு வந்தது. 1952-ல் முதல் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை பெற்று அப்பொழுது மேலவை உறுப்பினராக இருந்த திரு. இராஜாஜி தலைமையில் அமைச்சரவை அமைத்தது. பேரவையின் உறுப்பினர்கள் 375 பேர் என்ற நிலையில் கோட்டையிலே இருந்த பேரவை மண்டபம் போதுமானதாக இருக்காது என்பதால், சென்னை, அரசினர் தோட்டத்தில் புதிய சட்டமன்றப் பேரவை மண்டபம் 10 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டது. 10 இலட்சம் ரூபாய் அந்தக் காலத்திலே.

1952 ஆம் ஆண்டு அரசினர் தோட்டத்தில் புதிய சட்டமன்ற மண்டபம் கட்டப்பட்டு, அதனை 2-5-1952 அன்று ஆளுநர் ஸ்ரீபிரகாசா திறந்து வைத்தார். அதுவே பின்னர் பாலர் அரங்கமாகவும், கழக ஆட்சியிலே, கலைவாணர் அரங்கமாகவும் பெயர் பெற்று விளங்கியது. 1957 தேர்தலுக்குப் பிறகு, மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டையில் பேரவை மண்டபத்தில் பேரவைக் கூட்டங்கள் நடைபெறத் தொடங்கி, இன்று வரை 53 ஆண்டுகளாக

இந்த மண்டபத்திலே கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இதற்கிடையிலே, 20-4-1959 முதல் 30-4-1959 வரை ஒன்பது நாட்கள் மட்டும் உதகமண்டலத்திலே உள்ள அரண்மூர் மாளிகையில் பேரவை நடைபெற்றதை யாரும் மறந்திருக்க முடியாது.

ஓமந்தூராருக்குப் பிறகு, குமாரசாமி ராஜா, மூதறிஞர் இராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், பெரியவர் பக்தவத்சலம் ஆகியோர் முதலமைச்சர்களாக இருந்து இந்தக் கோட்டையில் கொலுவீற்றிருந்து கோலோச்சி இருக்கிறார்கள்.

1967-ல் பேரறிஞர் அண்ணா முதலமைச்சரானார். 1969-ல் அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு, முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நான், 1971, 1979, 1996, 2006 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் வெற்றிபெற்று (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) முதலமைச்சராகப் பதவி வகித்துள்ளேன்.

15-3-1971 அன்று தி.மு. கழக அமைச்சரவை என் தலைமையில் பதவியேற்றபோது, சென்னைப் பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெற்ற அந்தப் பதவியேற்பு விழாவிற்கு வந்திருந்த முக்கிய பார்வையாளர்களில் ஒருவர் தந்தை பெரியார். பதவியேற்ற பிறகு நாங்கள் அனைவரும் அவர்களிடத்திலே ஆசி பெற்று, வாழ்த்து பெற்றுச் சென்றோம்.

அதன் பின்னர் அருமை நண்பர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களும், ஜானகி அம்மையார் அவர்களும், ஜெயலலிதா அவர்களும், ஓ பன்னீர்செல்வம் அவர்களும் முதலமைச்சர்களாக இந்த மாமன்றத்திலே இருந்திருக்கிறார்கள்.

இந்தத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் சரித்திரப் புகழ்வாய்ந்த தீர்மானங்கள், சட்டங்கள், முடிவுகள் எல்லாம் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றை நினைவுகூர விரும்புகிறேன்.

வாக்காளர் பட்டியலிலே மகளிரும் இடம்பெற வகை செய்யும் தீர்மானம் 1-4-1921 அன்று Justice கட்சி ஆட்சிக் காலத்திலே நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

தாழ்த்தப்பட்டவர்களை "பஞ்சமர், பறையர்" என்ற சொற்களால் குறிப்பிடுவது அரசு ஆவணங்களில் தவிர்க்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் 20-1-1922-ல் நிறைவேறியது.

ஆலயங்கள் நுழைவுச் சட்டம் நிறைவேற்றப்பட்டதும் இந்த அவையிலேதான், கிட்டத்தட்ட அந்த ஆண்டுகளிலேதான்.

8-10-1928 அன்று இந்தப் பேரவையிலே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம்—

சென்னை நகர காவல் துறையினர், பாரதியாருடைய பாடல்கள் அடங்கிய புத்தகங்களைப் பறிமுதல் செய்த நடவடிக்கை பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானத்தை சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் கொண்டு வந்தார். பாரதியார் பாடல்கள் பற்றி ஒரு மனு சென்னை உயர் நீதிமன்றத்தில் விசாரணையில் இருப்பதால், அதையொட்டிய கருத்துகளை அவையில் தெரிவிக்கக்கூடாது என்று பேரவைத் தலைவர் கூறினார்; விவாதம் ஏற்பட்டு பிரச்சினையை அடுத்த நாள் எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவாயிற்று. அடுத்த நாள் இந்தப் பிரச்சினை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, எஸ். சத்தியமூர்த்தி அவர்கள் பாரதியாரின் பாடல்களை அவையிலே பாடி விளக்கமளித்தார். அந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள மறுத்ததும், சத்தியமூர்த்தி அவர்களே அவையிலே எழுந்து நின்று பாரதியாருடைய பாடல்களைப் பாடி அந்தப் புரட்சியை செய்தார் என்பது அந்தக் காலத்து இந்த அவையினுடைய வரலாறு. *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 1-25

கவர்னரால் இந்தப் பேரவைக்கு நியமிக்கப்பட்ட முதல் பெண்மணி திருமதி முத்துலட்சுமி ரெட்டி. அடுத்து நியமிக்கப்பட்டவர் திருமதி அலமேலு மங்கத் தாயாரம்மா.

3-11-1952-ல் கைத்தறிக்கென சில இரகங்கள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்ற தீர்மானம். *29-7-1953* குலக் கல்வி முறையை அமலுக்குக் கொண்டு வருவது பற்றிய தீர்மானம். அந்தக் கல்வி முறையை நடைமுறைப்படுத்தக்கூடாது என்று திருத்தத் தீர்மானம். வாக்கெடுப்பில் திருத்தத்திற்கு ஆதரவாக *138* வாக்குகளும், எதிர்த்து *138* வாக்குகளும் கிடைத்து, பேரவைத் தலைவர் திருத்தத்திற்கு எதிராக, அதாவது குலக் கல்வித் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்ததால் அந்த நேரத்திலே திருத்தம் தோல்வியடைந்து, குலக் கல்வித் திட்டம் தப்பிப் பிழைத்தது. என்றாலும்கூட *18-5-1954*-ல் குலக் கல்வி முறையைக் கைவிடுவதென்று, எத்தனை பேர் வாக்களித்தார்கள் என்றில்லாமல் எது நியாயம் என்பதை எண்ணிப்

பார்த்து தமிழகத்திலே எழுந்த புரட்சியின்காரணமாக, மக்களுடைய கொந்தளிப்பின் காரணமாக அதைத் திரும்பப் பெற்றார்கள், குலக் கல்வித் திட்டத்தை; அதுவும் இந்த அவையிலே வரலாற்றுச் சான்றாக பதிவு செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஏன் இந்த அவையினுடைய வரலாற்றை நான் சற்றுப் பின்னோக்கி திரும்பிப் பாருங்கள் என்று சொன்னேன் என்றால், இந்த அவையிலே எத்தனையோ தீர்மானங்கள், எத்தனையோ முடிவுகள் தமிழ்நாட்டு மக்களுக்காக என்று சிந்தித்துச் செயல்பட எடுக்கப்பட்ட முடிவுகள் எல்லாம் உண்டு. ஆனால் எல்லா முடிவுகளும் நான் இங்கே குறிப்பிட்டேனே, அதைப்போல, *138-138* என்ற நிலையிலே இருந்தாலும்கூட மக்களுடைய கருத்துகளுக்கு மதிப்பளித்து, அதற்கேற்ப சட்டங்களை வகுப்பது, ஆட்சியை நடத்துவது என்ற முறை அன்றைக்கு இருந்தது. அது இன்றைக்கும் இருக்க வேண்டும் என்ற முனைப்போடுதான் இந்த ஆட்சிப் பொறுப்பிலே நாங்கள் அமர்ந்திருக்கிறோம்.

இன்றையதினம், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில கருத்துகளை இங்கே எடுத்துக்கூறினார்கள். அவைகளுக்கெல்லாம் நான் பதில் அளித்தால் இந்தச் சட்டமன்றப் பேரவையைப் பற்றியும் புதிய வீட்டிற்கு நாம் குடிபோவதைப் பற்றியும் பேசுவதாகச் சொல்லிவிட்டு, மீண்டும் எங்கேயோ சென்றதாக நீங்கள் கருதக்கூடும். எனவே, நான் அவைகளைப் பற்றியெல்லாம் இங்கே பேச விரும்பவில்லை. துணை முதலமைச்சர் அதற்கெல்லாம் பதில் அளித்திருக்கிறார்.

பிற்பகல் *1-30*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: இடையிடையே அமைச்சர்கள் குறுக்கிட்டு விளக்கங்களை அளித்திருக்கிறார்கள். ஆனால் ஒன்று. ஒரு கருத்தைச் சொன்னால் அந்தக் கருத்தின்பால் எத்தகைய எதிரொலி ஏற்படும், எத்தகைய நிலைமைகள் உருவாகும், ஆகவே, அந்தக் கருத்துகளை சொல்லாமல் இருப்பது நல்லதல்லவா என்றெல்லாம் எண்ணிப்பார்த்து அந்தக் கருத்துகளைச் சொல்வதுதான் சிலாக்கியமான ஒன்று என்பதை உணர்ந்து, நான் அறிந்த வரையில் என்னுடைய வாழ்க்கையில், அரசியல்

வாழ்க்கையில் கடைப்பிடித்து வருகின்றேன். அதைத்தான் இந்தச் சட்டமன்றப் பேரவையிலும் கடைப்பிடித்து வருகிறேன்.

இந்தச் சட்டமன்றப் பேரவையிலே எத்தனையோ நல்ல நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. விரும்பத்தகாத நிகழ்ச்சிகளும் நடைபெற்றிருக்கின்றன. அவை என்னென்ன என்பதைப் பற்றியெல்லாம் இங்கே குறித்துப் பேசி மறுபடியும் அதே நிகழ்ச்சியினுடைய தொடர்ச்சியை இங்கே நான் ஏற்படுத்த விரும்பவில்லை. அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் மறந்துவிட்டு, நாம் குடிசெல்கின்ற புதிய இடத்திலாவது அந்த நிலைமை இல்லாமலும், நாட்டைப் பற்றிய நினைவு, மக்களைப் பற்றிய நினைவு, இவைகளோடு நம்முடைய பணியை அங்கே தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய உரையின் இறுதியிலே, புரட்சித் தலைவர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பாட்டைச் சொல்லிப்போனார்கள். அந்தப் பாட்டு அவர்களுக்காகப் பாடியது அல்ல. எனக்குத் தெரியும், எம்.ஜி.ஆர். அவர்கள் என்னை மனதிலே வைத்து பாடிய பாட்டு அது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், என்னுடைய 40 ஆண்டுக் கால நண்பர் அல்லவா? இன்னும் சொல்லப்போனால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கட்சித் தேர்தல் நடைபெற்றபோது, தலைவராக நான்தான் வரவேண்டும் என்று அதற்காகப் பாடுபட்டவர். அதற்காக ஆட்களைச் சேர்த்தவர். அந்த நன்றி இன்றைக்கும் எனக்கு உண்டு. சாகின்ற வரையிலே உண்டு. அதைப்போல, இந்தப் பொறுப்புக்கு நான் வரவேண்டும் என்று விரும்பியவர்களில் அவரும் ஒருவர். ஆகவே, நான் அவருக்கும் எனக்கும் உள்ள 40 ஆண்டுக் கால நட்பின் காரணமாகச் சொல்லுகிறேன், இந்தப் பாடலை இங்கே அவர் சொன்னாலும்கூட அதனை நான் இப்படித்தான் கருதிக்கொள்கிறேன்.

என்னதான் நடக்கும், நடக்கட்டுமே!
இருட்டினில் நீதி மறையட்டுமே!
தன்னாலே வெளிவரும் தயங்காதே!

ஒரு "தலைவன்" இருக்கின்றான் மயங்காதே! (மேசையைத் தட்டும் ஒலி)

"ஒரு தலைவி இருக்கின்றார் மயங்காதே" என்று சொல்லவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) "ஒரு தலைவன் இருக்கின்றான்

மயங்காதே" என்று அன்றைக்கே என்னைக் குறிப்பிட்டுச் சொன்னார். இதை இந்த அவையிலே உள்ள உறுப்பினர்கள் எம்.ஜி.ஆருடைய அந்த நம்பிக்கையான வார்த்தையை ஏற்றுக்கொண்டு இந்த அவையைச் சிறப்பாக நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

8. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும் பதிலுரையும்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இன்று *(11-1-2010)* மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்த திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

(திருத்தங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த திருத்தங்கள் அனைத்தும் பேரவையின் முன்னனுமதியுடன் திரும்பப்பெறப்படுகின்றன.

"2010 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 6 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்கள் ஆவர்"

என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்களால் 8-1-2010 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மயங்காதே" என்று அன்றைக்கே என்னைக் குறிப்பிட்டுச் சொன்னார். இதை இந்த அவையிலே உள்ள உறுப்பினர்கள் எம்.ஜி.ஆருடைய அந்த நம்பிக்கையான வார்த்தையை ஏற்றுக்கொண்டு இந்த அவையைச் சிறப்பாக நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

8. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும் பதிலுரையும்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இன்று *(11-1-2010)* மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்த திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

(திருத்தங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த திருத்தங்கள் அனைத்தும் பேரவையின் முன்னனுமதியுடன் திரும்பப்பெறப்படுகின்றன.

"2010 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 6 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்கள் ஆவர்"

என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்களால் 8-1-2010 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2010), 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2010) மற்றும் 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2010) ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

பிற்பகல் 1-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). (குறுக்கீடுகள்) என்ன விஷயம்? மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர் இருக்கைகளில் உட்காருங்கள். 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2010), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2010), 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2010) மற்றும் 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2010) ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

பிற்பகல் 1-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). (குறுக்கீடுகள்) என்ன விஷயம்? மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர் இருக்கைகளில் உட்காருங்கள். 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2010), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2010 ஜனவரி 11] [பேராசிரியர் க. அன்பழகன்]

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2010) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர். அவர்கள்.

@ 11-1-2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

LEGISLATURE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2010) பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2010), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2010) பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2010), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்*"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2010) பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2010),* மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

2010 ஜனவரி 11]

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2010) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. (குறுக்கீடுகள்)

திரு. நன்மாறன், என்ன? Bill pass செய்யப்படுகிறது. நீங்கள் தாமதமாக எழுந்து நிற்கிறீர்கள். இப்பொழுது ஒன்றும் செய்ய முடியாது, உட்காருங்கள்.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 8-1-2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(இ) தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்தச்)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(இ) தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்தச்)

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2010), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2010)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தம் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 11-1-2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2010 ஜனவரி 11

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2010* ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் *11/2010*) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் *1-40*

(ஈ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010* ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப்

[பேரவைத் தலைவர்] [2010 ஜனவரி 11

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 1-40

(ஈ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப்

2010 ஜனவரி 11] [பேரவைத் தலைவர்]

பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2010), மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2010) [@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய தேர்தல் அறிக்கையிலேயே விரைவில் கூட்டுறவுச் சங்கங்களுடைய தேர்தலை நடத்தி ஜனநாயகம் நடைமுறைப்படுத்தப்படும் என்று சொன்னது. ஆனால் கூட்டுறவுத் தேர்தலை இந்த அரசு தொடர்ந்து நடத்தாமல் தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீட்டித்துக் கொண்டு வருகிறது. இந்த அரசு கூட்டுறவுத் தேர்தல் மட்டுமல்ல, ஜனநாயகத்தின்மீதே நம்பிக்கையில்லாமல் செயல்பட்டுக்கொண்டு வருவதைத்தான் இது காட்டுகிறது. முறையான தேர்தல் நடைபெறாமல் கூட்டணியைச் சேர்ந்தவர்களே குற்றம் சுமத்தி தேர்தல் இரத்து செய்யப்பட்டுள்ளது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் பங்கேற்காத சூழ்நிலையில்கூட முறையாகத் தேர்தலை நடத்தி முடித்து கூட்டுறவிலே ஜனநாயகத்தை இந்த அரசு செயல்படுத்த முடியவில்லை. அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும் கலந்தாய்வு செய்த பின்னர், புதிய தேர்தலுக்கான புதிய தேர்தல் கால அட்டவணை ஒன்று உரிய முறையில் அரசினால் அறிவிக்கப்படும் என்று தொடர்ந்து இந்த அரசு சொல்லிக் கொண்டே வருகிறது. எப்பொழுது இந்த அவையிலே இருக்கிற அனைத்துக் கட்சிகளுடைய தலைவர்களை அழைத்து, கூடிப் பேசி, கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலை முறையாக நடத்தி, கூட்டுறவுச் சங்கத்திலே ஜனநாயகத்தை அரசு மலர வைக்கும் என்று நான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகக் கேட்டு அமர்கிறேன்.

[@] 8-1-2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிற காரணத்தால், (குறுக்கீடு) இப்போது நாங்கள் எதையும் செய்வதற்கில்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை, எனக்கும் தேர்தல் நடத்த வேண்டும் என்ற ஆசை உண்டு. முதலமைச்சர் அவர்களுக்கும் அந்த ஆசை உண்டு. வழக்கினால்தான் இதை நீட்டிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2010 ஜனவரி 11] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(உ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2010)*, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2010 ஜனவரி 11] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(உ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2010)*, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2010)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 8-1-2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் — TRUTH ALONE TRIUMPHS
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2 ஜூலை 2012

2010 ஜனவரி 11] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்*"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஈ) தமிழ்நாடு மாநிலத் தொழில்நுட்பக் கல்வி மன்றச் சட்டமுன்வடிவு, 2010 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநிலத் தொழில்நுட்பக் கல்வி மன்றச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2010)* பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

2010 ஜனவரி 11] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஈ) தமிழ்நாடு மாநிலத் தொழில்நுட்பக் கல்வி மன்றச் சட்டமுன்வடிவு, 2010 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநிலத் தொழில்நுட்பக் கல்வி மன்றச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2010)* பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— தொடர்ச்சி

(ஊ) தமிழ்நாடு மாநிலத் தொழில்நுட்பக் கல்வி மன்றச் சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநிலத் தொழில்நுட்பக் கல்வி மன்றச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2010), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநிலத் தொழில்நுட்பக் கல்வி மன்றச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2010) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 1-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 28 வரை திருத்தங்கள் இல்லை.

@ *9-1-2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*

2010 ஜனவரி 11] [பேரவைத் தலைவர்]

பிரிவுகள் 2 முதல் 28 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநிலத் தொழில்நுட்பக் கல்வி மன்றச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2010 ஜனவரி 11

(எ) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2010), மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2010)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சி. ஞானசேகரன், என்ன சொல்லுங்கள்?*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித உரிமைச் சங்கங்கள் என்று பல பேர் பல சங்கங்களைப் பதிவு செய்து பல போலியான நிகழ்வுகளையெல்லாம் நாட்டிலே செய்துகொண்டிருக்கிறார்கள். சொல்லப்போனால், மனித உரிமைகள் பாதுகாப்புக் கழகம் என்று சொல்லி, கட்டப் பஞ்சாயத்தில் அதிகமாக அவர்கள்தான் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் இந்தச் சட்டத்தின்வழியாகக் கட்டுப்படுத்த "மனித உரிமைகள்" என்ற வார்த்தைகள் மட்டும் சங்கப் பெயரில் அவர்கள் பயன்படுத்தக்கூடாது என்றுதான் இப்போது சட்டத்தை நீங்கள் இயற்றுகிறீர்கள். ஆனால், ஏற்கெனவே மனித உரிமைகள் பாதுகாப்புச் சங்கம் என்று வைத்துக்கொண்டு, பல ஊழல்களை, பல சமுக விரோதச் செயல்களை செய்துகொண்டிருப்பவர்களை, காவல் துறை எப்படிக் கண்டிக்கப்போகிறது, எப்படி அவர்களைக் கட்டுப்படுத்தப்போகிறது என்கிற நெறிமுறைகள் இதில் இல்லை. ஆகவே, இதற்கான நெறிமுறைகளை அரசு உடனடியாக வகுக்க வேண்டும். இப்போது "மனித உரிமைகள்" என்று பெயரில் உள்ள*

@ *8-1-2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*

2010 ஜனவரி 11] [திரு. சி. ஞானசேகரன்]

வார்த்தைகளை மட்டும் எடுத்துவிட்டால் போதாது. மனித உரிமைகள் சங்கம் என்று வைத்துக்கொண்டு, ஏய்த்துப் பிழைத்துக்கொண்டிருக்கிறவர்களை அடக்குவதற்கு இந்த அரசு ஒரு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டத்தை வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கங்கள் பதிவு செய்கிற நேரத்தில் "மனித உரிமைகள்" என்ற அந்த வார்த்தைகளைப் பயன்படுத்தக்கூடாது என்ற கருத்து ஏற்புடையது அல்ல. காரணம், எங்கு பார்த்தாலும் மனித உரிமை மீறல்கள் தினந்தோறும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவை பொது இடங்கள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், பொது மக்கள் கூடுகிற இடங்களில் எல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஏதோ ஒரு சிலர் மனித உரிமைப் பாதுகாப்பு அமைப்புகள் என்று வைத்துக்கொண்டு தவறு செய்கின்றார்கள் என்கிற காரணத்திற்காக, அப்படிப்பட்ட பெயரில் சங்கங்களே பதிவு செய்யக்கூடாது என்பது ஏற்புடையது அல்ல. உண்மையைக் கண்டறிய வேண்டும். தேவையானவற்றில் விலக்களிக்க வேண்டும். என்ன தேவையோ அதை ஏற்படுத்த வேண்டுமே தவிர, அதை விடுத்து "மனித உரிமைகள்" அமைப்பு என்ற பெயரே கூடாது என்று சொல்வது ஏற்புடையதல்ல. ஆகவே, நம்முடைய ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இருக்கிற குறைகளைக் களையவேண்டுமே தவிர, வேறு நடவடிக்கை கூடாது என்பதைக் கூறி, சட்டமுன்வடிவை நான் ஆட்சேபித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித உரிமைகள் பறிக்கப்படுகின்றன. மனித உரிமை மீறல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மனித உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். அண்மையிலே ஈரோடு, தருமபுரி போன்ற மாவட்டங்களிலே ஆதி திராவிட மாவட்டக் குழு கமிட்டி உறுப்பினர்கள், காவல் துறையினரால் அடித்து உதைக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட மனித உரிமைகள் பறிக்கப்படாமல் பாதுகாக்கப்படக்கூடிய வகையிலே

[திருமதி ரா. லீமா றோஸ்] [2010 ஜனவரி 11

சட்டத்திலே வகை செய்யப்பெற வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2010 ஜனவரி 11]

பிற்பகல் 1-50

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2010), மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2010)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[@] 9-1-2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

பிற்பகல் 1-50

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2010), மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2010)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[@] 9-1-2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 7 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

2010 ஜனவரி 11]

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஐ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2010), மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2010)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 11-1-2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

2010 ஜனவரி 11]

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஐ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2010), மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2010)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 11-1-2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11]

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி டி. யசோதா, என்ன? சொல்லுங்கள்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓராண்டுக் காலத்திற்கு இருக்கின்ற அறங்காவலர்களின் பதவிக் காலத்தை 2 ஆண்டுக் காலம் நீட்டிக்க இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. என் தொகுதியைப் பொறுத்தமட்டிலும் 145 கோயில்கள் இருக்கின்றன. ஒரு கோயிலுக்குக்கூட அறங்காவலரே இல்லை என்பது மட்டுமல்ல, ஸ்ரீபெரும்புதூரிலே உடையவர் கோயில் இருக்கிறது. அந்த உடையவர் கோயிலுக்கு தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஆதி திராவிட மக்கள் அங்கே அறங்காவலர்களாக இருக்க வேண்டுமென்ற கண்டிப்பு இருக்கின்றது; வரைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த உடையவர் கோயில் தொடர்பாக ஏதோ ஒரு வழக்கு, யாரோ ஒருவர் போட்டார், பெயர் தெரியாதவர் போட்டார் என்ற காரணத்தினால் இன்றுவரையிலும், அந்த உடையவர் கோயிலுக்கு ஆதி திராவிட அறங்காவலர் நியமிக்கப்படவில்லை என்பதையும் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டமுன்வடிவு, 2010 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2010) பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஒ) தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2010), மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2010)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி.வி. சண்முகம்.

திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சமச்சீர் கல்வி முறைச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரை, கொள்கை அளவிலே எங்களுக்கு எந்தவித மாறுபட்ட கருத்தும் இல்லை.

@ 9-1-2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டமுன்வடிவு, 2010 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2010) பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஒ) தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2010), மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2010)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி.வி. சண்முகம்.

திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சமச்சீர் கல்வி முறைச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரை, கொள்கை அளவிலே எங்களுக்கு எந்தவித மாறுபட்ட கருத்தும் இல்லை.

@ 9-1-2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 ஜனவரி 11] [திரு. சி.வி. சண்முகம்]

சமச்சீர் கல்வி கொண்டுவரப்பட வேண்டுமென்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது. ஆனால், இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வந்திருக்கின்ற முறையில், இந்தச் சட்டமுன்வடிவில் இருக்கின்ற சில குறைகளைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதைத் திருத்த வேண்டுமென்பதுதான் எங்களுடைய நோக்கம்.

பிற்பகல் 1-55

இந்த அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டவுடனேயே அந்த விரைவுப் பாடத் திட்டங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இதிலே பல்வேறு தரப்பினரிடையே, கல்வியாளர்கள், அறிஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மத்தியிலே, ஓர் அச்ச உணர்வு இருக்கிறது. அவசரக் கோலத்திலே இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகின்றதோ என்கிற ஓர் அச்சம் மாணவர்கள் மத்தியிலும், பெற்றோர்கள் மத்தியிலும், ஆசிரியர்கள் மத்தியிலும் இன்றைக்கு இருக்கிறது. ஏனென்றால், இன்றைக்கு இருக்கிற ஆசிரியர்கள்—சென்ற வாரம்கூட நீங்கள் ஒரு செய்தியைப் படித்திருக்கலாம். 55 வயதுடைய ஒரு பெண்மணிக்கு ஆசிரியர் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று. ஏனென்றால், அந்த 55 வயதுடைய ஆசிரியர், அன்றைக்கு 30 ஆண்டுகளுக்கு முன்பு அவர் படிக்கும்போது, என்ன சொல்லியிருப்பார்கள்? நிலவிலே ஆயா வடை சுடுகிறாள் என்று சொல்லியிருப்பார்கள். ஆனால், இப்போது நிலவிலே மனிதர்கள் போய் அங்கே தண்ணீர் இருக்கிறதா என்பதைக் கண்டுபிடிக்கிறார்கள். எங்களுடைய ஆட்சிக் காலத்திலே ஆசிரியர்கள் merit basis-லே தேர்வு செய்யப்பட்டனர். ஆனால், இப்போது பணிமூப்பு அடிப்படையிலே தேர்வு செய்யப்படுவதால் 50 வயதானவர்கள், 55 வயதானவர்கள் ஆசிரியர்களாகத் தேர்வு செய்யப்படுகிறார்கள். அதனால், அவர்கள்மீது குறையில்லை. அவர்கள் படித்த காலத்தில் என்ன இருந்ததோ, அதைத்தான் அவர்களால் சொல்லித்தர முடியும்.

இந்த விரைவுப் பாடத் திட்டத்தின்மூலமாக, தனியாருக்குச் சாதகமாக, இதிலே பல்வேறு அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக இப்போது குற்றஞ்சாட்டப்படுகிறது. குறிப்பாக, இந்த விரைவுப் பாடத் திட்டத்திலே 40 சதவீதம் பாடங்கள் ஆங்கில வழியில் படிப்பவர்களுக்குச் சாதகமாக இருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. இந்தக் குற்றச்சாட்டை நான் சொல்லவில்லை, சொன்னவர் இந்தச் சமச்சீர் கல்வி முறையை

அமல்படுத்துவதற்கு, உங்களுடைய அரசால் நியமிக்கப்பட்ட ஒரு நபர் குழுத் தலைவர் முத்துக்குமரன் அவர்கள். உங்களால் நியமிக்கப்பட்டவரே இந்தச் சமச்சீர் விரைவுப் பாடத் திட்டத்தை நீங்கள் இணையதளத்திலே வெளியிடும்போது அந்த விழாவிலே பங்கேற்று, அந்த விழாவிலேயே அந்தக் கருத்தைத் தெளிவுபடுத்தியிருக்கிறார். இது 'தினமலர்' பத்திரிகையிலே தெளிவாக வந்திருக்கிறது. 'இந்த விரைவுப் பாடத் திட்டத்தை மாணவர்கள் பார்த்தால் பயந்துவிடுவார்கள். இதில் 40 சதவீதம் ஆங்கில வழியில் பயிலும் மாணவர்களுக்குச் சாதகமாக இருக்கின்றது; இந்தப் பாடத் திட்டத்தை வகுப்பதை அரசியல்வாதிகள் கையிலே கொடுத்தால் இது சீரழிந்துவிடும்' என்று உங்களால் நியமிக்கப்பட்ட முத்துக்குமரன் அவர்களே குற்றம் சாட்டியிருக்கிறார், குறை சொல்லியிருக்கிறார். ஆகவே, இப்படிப்பட்ட இந்த விரைவுப் பாடத் திட்டத்தை நீங்கள் தனியாருக்குச் சாதகமாக—9-வது, 10-வது வகுப்புகளுக்கு, matriculation பள்ளிகளிலே practical exam என்பது உண்டு. ஆனால், நமது மாநிலக் கல்வி முறையிலே அது கிடையாது. அதனால் matriculation பள்ளிகளுக்குச் சாதகமாக, அவர்கள் எங்கே உயர் நீதிமன்றத்திற்குச் சென்று, இந்தச் சட்டத்திற்குத் தடையாணைகளைப் பெற்றுவிடுவார்களோ என்று, அவர்களைச் சமாதானம் பண்ண வேண்டுமென்பதற்காக practical exam சேர்க்கப்பட்டிருக்கிறது. நம்முடைய பாடத் திட்டத்திலே ஏற்கெனவே மாணவர்களுக்கு அதிகப் பாடச் சுமை இருப்பதனால் மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது 9 ஆம் வகுப்பிற்கும் 10 ஆம் வகுப்பிற்கும் இந்தப் பொதுப் பாடத் திட்டத்திலே practical exam சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்படி இந்தப் பாடத் திட்டத்திலே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. சி.வி. சண்முகம்: வேண்டாம் என்று சொன்னால் உட்கார்ந்து விடுகிறேன். மாணவர்கள் மத்தியில் மட்டும் இல்லை, ஆசிரியர்களுக்கே இப்போது போதிய பயிற்சி இல்லை. தனியாருக்கு இணையாக நம்முடைய கிராமப்புறப் பள்ளிகளும், அரசுப் பள்ளிகளும், நடுநிலைப் பள்ளிகளும் தற்போது இல்லை. அவர்களுக்குப் போதிய பயிற்சிகள் கொடுக்கப்பட வேண்டும். மாணவர்களுக்குப் போதிய அவகாசம் கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் இந்தத் திட்டத்திற்கு மாறுவதற்குப் போதிய பயிற்சிகளைக்

2010 ஜனவரி 11] [திரு. சி.வி. சண்முகம்]

கொடுத்து, இந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். இந்தத் திட்டத்திலுள்ள குறைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

இன்னொன்று; குறிப்பாக, இன்றைய ஆட்சியிலே செம்மொழி மாநாட்டை இப்போது நடத்தப்போவதாக நீங்கள் பெருமையாகச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். இப்போது நம் மாநிலத்திலே இரு மொழிக் கொள்கை உள்ளது. (குறுக்கீடுகள்) இருங்கள், நடத்தப் போகிறீர்கள் என்றுதான் சொல்கிறேன். குற்றச்சாட்டு சொல்லவில்லை. நீங்கள் நடத்தப் போகிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் நடத்தமாட்டோம் என்றா சொன்னீர்கள்? நீங்கள் நடத்தப் போகிறீர்கள். செம்மொழி மாநாட்டை நடத்துகின்ற இந்தக் காலக்கட்டத்திலே இன்றைக்கு இரு மொழிக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்ற நம்முடைய மாநிலத்திலே, இந்தத் திட்டத்திலே, செக்ஷன் 4-லே இந்தப் பாடத் திட்டங்களை தமிழ், ஆங்கிலம் அல்லது மற்ற மொழிகளிலே . . .

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, ஒரு மசோதாமீது ஒரு amendment கொடுத்தால் அந்த amendment-ஐத்தான் press செய்து சொல்ல வேண்டுமே தவிர, ஆதியோடந்தமாகப் பேசிக் கொண்டு இப்போது அடுத்த subject-க்குப் போவது என்பது இருக்கிறதே (குறுக்கீடு) It is not a good precedent. கொடுக்கப்பட்ட amendment-லே உள்ளது என்ன என்பதை press செய்து பேச வேண்டும். அதுதான் Bill Procedure. (குறுக்கீடுகள்)

திரு. சி.வி. சண்முகம்: செக்ஷன் 4-லே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி.வி. சண்முகம், நீங்கள் amendment கொடுக்கவில்லை. சொல்வதைச் சுருக்கமாகச் சொல்லுங்கள். Amendment கொடுக்கவில்லை என்றாலும் அனுமதி கொடுத்திருக்கிறேன். சொல்வதைச் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. சி.வி. சண்முகம்: நான் subject-ஐவிட்டு எங்கேயாவது வெளியிலே போகிறேனா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, பேசுங்கள்.

திரு. சி.வி. சண்முகம்: செக்ஷன் 4-லே 'All the subjects, other than languages, may be taught in Tamil or English or in any other language as may be decided by a school with the approval of the competent authority' என்றுள்ளது. அதாவது இதற்கென்று தனியாக ஒரு Board வைக்கிறீர்கள். ஆனால், இதற்கு மட்டும் approval கொடுப்பதற்கு

Board கிடையாது. அந்த அனுமதியைத் துறை சார்ந்த ஒரு அதிகாரி கொடுக்கலாம்.

பிற்பகல் 2-00

இப்போது மத்திய அரசாங்கம் என்ன சொல்கிறது என்றால், இந்தியா முழுவதும் ஒரு பொதுவான பாடத் திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று சொல்கிறது. செம்மொழி மாநாடு நடத்தவிருக்கிற நீங்கள், இந்தியா முழுவதும் பொதுவான பாடத் திட்டத்தை உருவாக்குவதற்கு மத்திய அரசாங்கத்திற்கு முன்னோடியாக இருந்து, இந்தியைத் தமிழகத்திலே நுழைப்பதற்கு இரத்தினக் கம்பளம் விரிப்பதைப்போல இந்தச் சட்டம் அமைந்துள்ளது என்பது ஒன்று.

இரண்டாவது, முக்கியமான பகுதியான தண்டனைகளைப் பற்றி பிரிவு 11-ல் ஏதோ ஏனோதானோ என்று கொடுத்திருக்கிறீர்கள். இந்தச் சட்டத்திலுள்ள விதிகளை முதல் முறையாக மீறினால், 25,000 ரூபாய் பணத் தண்டம் விதிக்கப்படும்; தொடர்ச்சியாக மீறுகின்ற ஒவ்வொரு நாளுக்கும் கூடுதலாக 1,000 ரூபாய் வரை விதிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதோடு நிறுத்திவிட்டீர்கள். மீண்டும் அந்தக் குற்றத்தை மறுபடியும் செய்தால் என்ன தண்டனைக் கொடுப்போம் என்று எதுவும் இல்லை. அதுமட்டுமல்லாமல், அதிலே குற்றவாளிகள் தப்பிப்பதற்கு மீண்டும் ஒரு வழியைக் கொடுத்திருக்கிறீர்கள். இந்தக் குற்றத்தைச் செய்பவருக்குத் தெரியாமல் குற்றம் நடந்திருந்தால், அவருடைய knowledge இல்லாமல், அவருக்குத் தெரியாமல் நடந்திருந்தால், அவர் இந்தக் குற்றத்திற்கு பொறுப்பேற்கத் தேவையில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது எப்படி இருக்கிறதென்பதற்கு ஓர் உதாரணம் சொல்கிறேன். இது இந்த ஆண்டு நம்முடைய தமிழகத்திலே மிகப் பெரிய, பிரபலம்வாய்ந்த ஓர் அரசியல் தலைவருடைய மருத்துவக் கல்லூரியிலே நன்கொடை பெற்று மாணவர்களைச் சேர்த்தார் என்பது 'The Times of India'-வில் செய்தி வந்து, தொலைக்காட்சிகளிலே தெளிவாகக் காட்டப்பட்டது. அதை மத்திய அமைச்சர் திரு. கபில் சிபலும் உறுதி செய்து அந்தக் கல்லூரிக்கு நோட்டீஸ் அனுப்பினார். ஆனால், என்ன சொல்லப்பட்டது? இது என்னுடைய கவனத்திற்கு வரவில்லை, என்னுடைய கவனத்திற்கு வராமல் இந்தக் குற்றத்தை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் திருத்தம் எழுதிக் கொடுத்திருக்கிறீர்களா இல்லையா? நீங்கள் subject மாறி எங்கெல்லாமோ போய்க்கொண்டிருக்கிறீர்கள், உட்காருங்கள்.

2010 ஜனவரி 11]

திரு. சி.வி. சண்முகம்: முடித்து விடுகிறேன். குறையே சொல்லவில்லை, முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவ்வளவு அக்கறை எடுக்கிற நீங்கள், திருத்தங்களை முதலிலே எழுதிக் கொடுத்திருக்கலாம் அல்லவா ?

திரு. சி.வி. சண்முகம்: நீங்கள் சட்டமுன்வடிவைச் சரியாகக் கொண்டுவர வேண்டும். ஏனென்றால், தனியார் பள்ளிகள் நடத்துபவர்கள் பண பலமும், அதிகார பலமும், வசதியும் உள்ளவர்கள். ஆகவே, இந்தத் தண்டனை குறித்த பிரிவினைக் கடுமையாக அமைக்க வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்தச் சட்டத்தில் இருக்கின்ற சில குறைபாடுகளை நீக்கி மாணவர்கள் மத்தியிலும், அறிஞர்கள் மத்தியிலும், ஆசிரியர்கள் மத்தியிலும் நிலவுகின்ற அச்சங்களை எல்லாம் நீக்க வேண்டும். ஒரே பாடத் திட்டத்திலே சரித்திரங்கள் திருத்தப்பட்டிருக்கின்றன என்ற மனக் குறை இருக்கிறது. அதையெல்லாம் போக்கி, எல்லோருடைய சம்மதத்தோடும் இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகக் கல்வி வரலாற்றிலேயே ஒரு மைல் கல்லாக விளங்கக்கூடிய இந்தச் சமச்சீர் கல்வி முறையைக் கொண்டு வருவதற்காகத் தமிழக அரசை, தமிழக முதல்வரை, கல்வி அமைச்சரை நான் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக வரவேற்றுப் பாராட்டுகிறேன். 'மாற்றம் ஒன்றுதான் மாற்றம் இல்லாதது' என்று சொல்வார்கள்; அந்த வகையிலே புதிதாய்ப் பிறப்பது என்ற சிந்தனையோடு, சொல் புதிது, சுவை புதிது என்ற வகையிலே, நவ சிந்தனையோடு வலம் வந்து கொண்டிருக்கக்கூடிய முதல்வர் அவர்களை நான் மனதார வாழ்த்துகிறேன். ஏனென்று சொன்னால், இத்தகைய மாற்றங்களை வரவேற்க வேண்டியது காலத்தின் கட்டாயம். புதிய பணக்காரர்கள் பள்ளி என்று சொல்லக்கூடிய பள்ளிகள், இப்போது சமச்சீர் கல்விக்கு எதிராக இருப்பது ஒன்றும் அதிசயம் அல்ல. புகையிலைக்கு எதிராக ஒரு நடவடிக்கை எடுக்கிறபோது, 'Tobacco Lobby' தடுக்கிறது என்று சொல்வார்கள். அந்த வகையிலே ஆதிக்க சக்திகள் தடுத்து நிறுத்துவதற்கு

முயல்வார்கள். அந்த வகையிலே எந்த ஒரு எதிர்ப்பு சக்திக்கும் உட்படாமல், ஆட்படாமல் மிக விரைவாக இந்தச் சமச்சீர் கல்வியைக் கொண்டு வந்த தமிழக அரசை, தமிழக முதல்வரை, நான் மனதாரப் பாராட்டுகிறேன். இந்தக் கல்வி முறை இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகளைச் சமச்சீராக்கும். கொண்டு வந்திருக்கின்ற சட்டமுன்வடிவிலேகூட 'சமூக நீதியை நிலைநாட்டுவதற்காக' என்ற வார்த்தை இருக்கிறது. அது பொருள் பொதிந்த வார்த்தை. அந்த வார்த்தைக்கிணங்க இந்தச் சமச்சீர் கல்வி அமையவேண்டும். சமச்சீர் கல்வி பாடத் திட்டங்களை வகுக்கின்றபோது, தொலைநோக்கோடு நாம் வகுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். Conservative என்று சொல்லப்படுகின்ற பழைமையைப் பாதுகாக்கின்ற நேரத்திலே, Innovation என்று சொல்லப்படுகின்ற புதுமையையும் இணைக்கிற விதத்திலே, இந்த இரு சிந்தனைகளையும் கலந்து, மிக அற்புதமாக இந்தப் பாடத் திட்டங்கள் வகுக்கப்படவேண்டும். இன்றைக்கு, தமிழ்நாடு சமச்சீர் கல்வி என்ற கல்வி முறையைக் கொண்டு வருவதன்மூலமாக இந்தியாவிற்கே வழிகாட்டுகிறது என்று சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவை மனதார காங்கிரஸ் பேரியக்கம் வரவேற்கிறது என்று சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் பிரிவில்தான் திருத்தம் கேட்டிருக்கிறீர்கள், அடுத்து அதற்குப் போகலாம்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மன்றத்தில், ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமுன்வடிவின்மூலம் தமிழகத்திலே கல்வியிலே இருக்கக்கூடிய ஏற்றத்தாழ்வை நீக்கக்கூடிய வகையில் சமச்சீர் கல்வியைக் கொடுக்கக்கூடிய ஒரு கல்வி முறையைத் தமிழகத்தினுடைய வரலாற்றில் முதல் முறையாக உருவாக்கியிருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை நான் இந்த நேரத்திலே வணங்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-05

தமிழகத்தில் இருக்கக்கூடிய கல்வி முறையில், வேறு எந்த மாநிலங்களிலும் இல்லாததுபோல, நான்கு விதமான கல்வி வாரியங்கள் இருந்தன. மாநிலக் கல்வி வாரியம், ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகள், மெட்ரிகுலேஷன் பள்ளிகள், ஓரியண்டல்

2010 ஜனவரி 11] [திரு. தங்கம் தென்னரசு]

பள்ளிகள் என்று இந்த நான்கு விதமான கல்வி வாரியங்கள், அவற்றுக்குத் தனித்தனியான தேர்வு முறைகள், தனித்தனியான பாடப் புத்தகங்கள், தனித்தனியான syllabus என்கின்ற அந்த முறையை முற்றிலும் மாற்றி, ஒரு பொதுக் கல்வி வாரியம், பொதுவான பாடத் திட்டம், பொதுவான புத்தகங்கள், ஒரே மாதிரியான புத்தகங்கள், ஒரே மாதிரியான தேர்வு முறை என்று மாற்றிட வேண்டுமென்ற கல்வியாளர்களுடைய, பெற்றோர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் ஏற்று, இந்தச் சிறப்பான திட்டத்தை இன்றைக்கு அறிமுகம் செய்து, அதற்கான சட்டமுன்வடிவை இந்த மன்றத்திலே அளிப்பதற்கு எனக்கு அவர்கள் வாய்ப்பினை வழங்கியிருக்கிறார்கள்.

இங்கே பேசுகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் சண்முகம் அவர்கள் புதிய பாடத் திட்டங்களை உருவாக்குகிறபோது, அரசியல்வாதிகளுடைய தலையீடு இருக்கக் கூடாது என்று சொன்னார்கள். அவரும் கல்வி அமைச்சராக இருந்திருக்கிறார். பொதுவாகவே, பாடத் திட்டங்களை உருவாக்குகிறபோது எந்த அரசியல்வாதிகளும் போய்த் தலையிடுவதில்லை. அதிலும் குறிப்பாக, இந்தப் பாடத் திட்டத்தைப் பொறுத்தமட்டிலும்கூட முழுக்க, முழுக்க கல்வியாளர்களாலே இந்தப் பாடத் திட்டம் தேர்வு செய்யப்பட்டு, ஏறத்தாழ 4,000-க்கும் மேற்பட்டிருக்கக்கூடிய நம்முடைய வள மையங்களிலே ஆசிரியர்களிடத்திலே, மாணவர்களிடத்திலே இது விவாதிக்கப்பட்டு, அதற்கும் மேலாக ஆயிரம், ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இணையதளத்தின்மூலமாக தங்களுடைய கருத்துகளையெல்லாம் வெளியிட்டு, அதற்குப் பிறகு இந்தப் பாடத் திட்டத்தை இறுதி செய்யக்கூடிய முடிவை நாங்கள் எடுத்திருக்கிறோம். இன்னும் சொல்ல வேண்டுமென்றால், N.C.E.R.T. போன்ற நிறுவனங்களிலே இருப்பதைப்போலக்கூட பாடத் திட்டத்தை இறுதி செய்வதற்கு முன்பாக, பாடப் புத்தகங்கள் எழுதுகிறபோது வரக்கூடிய சிக்கல்களைக்கூட கருத்திலே கொண்டு, அதற்குப் பிறகுகூட பாடத் திட்டங்களை இறுதி செய்துகொள்ளலாம் என்கிற N.C.E.R.T. முறையைக்கூட இந்த முறையிலே நாங்கள் பின்பற்றியிருக்கிறோம். எனவே, பாடத் திட்டங்களிலே மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலே இருக்கின்ற நல்லவற்றை எடுத்துக்கொள்வதில் தவறில்லை. நீங்கள் practical examination முறையைக் கொண்டு வருகிறீர்கள் என்று அவர் சொன்னார். அதிலே என்ன தவறு இருக்கிறது? ஒரு தவறும் அதிலே

இல்லை. ஒரு நல்ல விஷயம் அங்கேயிருக்கிறபோது, அந்த நல்ல விஷயத்தை உள்ளடக்கி இருக்கக்கூடிய கல்வி முறையாக இந்தக் கல்வி முறை அமைய வேண்டும் என்றுதான் நாங்கள் விரும்புகிறோம்.

தனியார் பள்ளிக் கல்விக் கட்டணங்களைப் பொறுத்தவரையில், முதன்முறையாக penal action கொண்டு வந்தது இந்த ஆட்சியில்தான். எந்தத் தனியாரும் அவர்கள் விருப்பத்திற்கேற்ப கட்டணங்களை நிர்ணயித்துக்கொள்ள முடியாது. ஏற்கெனவே, அவர்களையும் கலந்தாலோசிக்க வேண்டுமென்பது உச்ச நீதிமன்றத்தின் பல தீர்ப்புகள், இசுலாமிக் அகாடெமி கேஸ் போன்றவை இருக்கின்றன. இனாம்தார் வழக்கு இருக்கிறது. இதுபோன்ற பல வழக்குகளிலே உச்ச நீதிமன்றம் இதற்கான தீர்ப்புகளை வழங்கியிருக்கின்றது. எனவே, within the frame of law, சட்டத்திற்கு உட்பட்டு, என்னென்ன செய்ய முடியுமோ அவற்றை இந்த அரசு நிச்சயமாகச் செய்யும். எனவே, தனியார் ஆதிக்கம் செலுத்துகின்ற நிலைமையை அரசு அனுமதிக்காது என்று சொல்லிக்கொள்கிறேன். திரு. சண்முகம் அவர்கள் பயிற்று மொழியைப் பற்றிச் சொன்னார். இந்தி ஆதிக்கத்தைப் பற்றிச் சொன்னார்.

நான் நேரத்தின் அருமை கருதி, அதிகமாகச் சொல்லவில்லை. ஒன்றை மாத்திரம் சொல்கிறேன். *1968* ஆம் ஆண்டு ஜனவரி மாதம் *1* ஆம் தேதி நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் அன்றைக்குச் சிலம்புச் செல்வர் அவர்கள் எழுதிய 'ஔவையார்' நூலை வெளியிட்டுப் பேசுகிறபோது சொன்னார், தமிழ்நாட்டிற்குத் தமிழா, ஆங்கிலமா என்பது முடிவெடுக்கப்பட்ட பிரச்சினையாகும். தமிழ்நாட்டில் ஆட்சி மொழியாக, பயிற்று மொழியாக, தமிழ்தான் இருக்க வேண்டுமென்பது தமிழக அரசின் குறிக்கோள். இதில் துளியும் மாற்றமில்லை என்று சொல்லிவிட்டு, தொடர்ச்சியாக அவர் சொல்கிறபோது, இந்த அடிப்படைக் கருத்தின்படி நடக்கிற காரணத்தினால், அகில உலகத் தொடர்புக்கு ஆங்கிலம் என்கிறோம், ஆளுகிற மொழியாக ஆங்கிலத்தை ஏற்றுக்கொள்ளவில்லை, உலகத் தொடர்புக்காகவே அதை வரவேற்கிறோம், நாம் பிடித்திருப்பது தமிழ்ச் செங்கோலைத்தான் என்பதில் யாருக்கும், துளியும் ஐயமில்லை என்று தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னதுதான் இன்றளவும், இந்த அரசினுடைய இரு மொழிக் கொள்கையாக, இந்த அரசினுடைய உயிர்நாடிக் கொள்கையாக இருக்கிறது. அதனால்தான் கடந்த முறை ஆட்சியில் இருக்கிறபோது நீதியரசர் மோகன் தலைமையிலே பயிற்று

2010 ஜனவரி 11] [திரு. தங்கம் தென்னரசு]

மொழிக்கென்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, உயர் நீதிமன்றத்திலே அந்த ஆணை செல்லுபடியானதல்ல என்று தடை விதிக்கப்பட்டு, உச்ச நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையிலே இருக்கிற காரணத்தால்தான் இன்றைக்கு அதிலே நாம் முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை. ஆனால், என்றைக்குமே நான் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன அந்த இருமொழிக் கொள்கைதான் தமிழக அரசினுடைய பள்ளிக் கல்விக்கும் ஆதார ஸ்ருதியாக இருக்கின்றது என்பதை நான் எடுத்துச் சொல்லி, நேரம் அதிகம் இல்லை என்ற காரணத்தால், வரலாற்றுச் சிறப்பான ஒரு தீர்மானமாக நம்முடைய முதலமைச்சர் முன்னெடுத்து வைத்திருக்கக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவை நம்முடைய உறுப்பினர்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டு, இந்த அளவில் அமைகிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு–5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரிவு *5*, திரு. கே. மகேந்திரன் அவர்கள் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

திரு. கே. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பிரிவு-*5*, உட்பிரிவு *(2)*, 'பதவி-வழி உறுப்பினர்கள்' என்ற தலைப்பில் *(d)* நீக்கப்படுதல் வேண்டும்"

"பிரிவு-*5*, உட்பிரிவு *(2)* பிற உறுப்பினர்கள் என்ற தலைப்பில் (b), (c), (d) ஆகியவற்றுக்குப் பதிலாக உறுப்பினர்கள் தொடக்கப் பள்ளி, இடைநிலை, மேல்நிலை ஆசிரியர் பிரதிநிதி என அமைதல் வேண்டும்"

என்கிற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதை வழிமொழிகிறேன்.

திரு. கே. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2010* ஆம் ஆண்டு சமச்சீர் கல்விக்கான, இந்தச் சட்டமுன்வடிவைப் பொதுவாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நாங்கள் வரவேற்கிறோம்.

பிற்பகல் *2-10*

அதேநேரத்தில், இந்தச் சட்டம் கொண்டுவரப்படுவதற்கு முன்பாக சமச்சீர் கல்வி என்பது அடிப்படைக் கல்வி முறையை மாற்றக்கூடியது. சமச்சீர் கல்வி என்பது கல்வித் துறையில் ஒரு புரட்சி என்று பேசிவிட்டு, இன்றைக்குக் கொண்டுவந்திருக்கக்கூடிய சட்டமுன்வடிவு என்பது அப்படிப்பட்ட புரட்சியை ஏற்படுத்தக்கூடிய சட்டமுன்வடிவாக அமையவில்லை என்பதை முதலிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, Pre-amble-ல் சொல்லப்பட்டிருக்கக்கூடிய, முனைவர் முத்துக்குமரன் அவர்களது பரிந்துரைகள் இந்த அவையில் வைக்கப்பட்டன; ஆனால் விவாதிக்கப்படவில்லை. முனைவர் முத்துக்குமரன் அவர்களது பரிந்துரைகள்மீது நடவடிக்கை எடுப்பதற்காக ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி

2010 ஜனவரி 11] [திரு. கே. மகேந்திரன்]

திரு. எம்.பி. விஜயகுமார் தலைமையில் அமைக்கப்பட்ட அந்த ஒரு நபர் கமிஷன் என்ன பரிந்துரைகளைக் கொடுத்தது என்ற விவரங்கள் இந்த அவையில் வைக்கப்படவில்லை. ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. எம்.பி. விஜயகுமார் அவர்கள் தலைமையிலே 5 நபர்கள் கொண்ட கல்வியாளர்கள் குழு பல்வேறு மாநிலங்களில் சென்று பார்த்துவிட்டு பல்வேறு பரிந்துரைகளைக் கொடுத்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. என்ன பரிந்துரைகளைக் கொடுத்தார்கள், அந்தப் பரிந்துரைகளில் எந்தப் பரிந்துரைகளை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது? எந்தப் பரிந்துரைகளை, என்ன காரணத்திற்காக இந்த அரசு நிராகரித்திருக்கிறதென்ற விவரங்களைக்கூட சொல்லாமல், சட்டமுன்வடிவு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதில் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, சட்ட முன்னுரையில் பக்கம் 1, பத்தி 3-ல், "சமூக நீதியை உறுதி செய்து இம்மாநிலத்திலுள்ள பள்ளிகளில் தரமான கல்வியை வழங்குவதற்கு இம்மாநிலத்திலுள்ள பள்ளிக் கல்வியைப் பொறுத்த அளவில் சமச்சீரான முறையை உருவாக்குவதற்கு இன்றியமையாததாக இருக்கிறது என அரசு கருதுகிறது" எனக் கூறப்பட்டதற்குப் பின்பும் வெவ்வேறு பள்ளிக் கல்வி இயக்ககங்களின் பிரதிநிதிகள், நிருவாக முறையில் தொடர இந்தச் சட்டமுன்வடிவில் வகை செய்திருப்பது அடிப்படை நோக்கத்திற்கு எதிராக இருப்பதாக நாங்கள் கருதுகிறோம். ஏனென்றால் Syllabus என்பது ஒன்று; பாடத் திட்டம் என்பது ஒன்று; தேர்வு முறை என்பது ஒன்று. ஆனால், ஏற்கெனவே இருக்கக்கூடிய Matriculation Board என்பது தொடரப்படும் என்று எங்களால் புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது. ஒரே பாடத் திட்டம், ஒரே பாட நூல், தேர்வு முறை வந்த பின்பு, Matriculation, Anglo-Indian, Oriental என்ற தனித்தனி அடையாளங்கள் தேவையில்லை என்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

அதேபோன்று, சிறுபான்மை சமூகம் உள்ளிட்டு, யார் வேண்டுமென்றாலும் பள்ளி நடத்தலாம், பள்ளியின் பெயர், நிருவாகம் ஒன்றாக அமைந்தால்தான் சமச்சீர் நிலையை அடைய முடியும். எனவே, பள்ளிக் கல்வியை ஒரே இயக்ககத்தின்கீழ் கொண்டுவர வேண்டும். மெட்ரிக் பள்ளிகளுக்குத் தனி இயக்ககம் தொடர அனுமதிக்கக் கூடாது என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். தற்போது வாரியம் என்பது பெயரளவில் உள்ளது. இயக்ககங்கள்தான் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. இயக்ககங்கள் உள்ளன. உள்ளதுபோல் தொடரச் செய்வது, வாரியம்

மட்டும். எனவே, பொது வாரியம் என்பதில் எந்தவித அர்த்தமும் இருக்கமுடியாது. இந்தியாவின் பிற மாநிலங்களில் மெட்ரிக் என்ற தனி அமைப்பும் கிடையாது. அப்படியாகத் தனி இயக்ககமும் கிடையாது. தனித்தனி அடையாளங்களும் இயக்ககங்களுமே கல்வியில் நிலவும் ஏற்றத்தாழ்வுக்கு அடிப்படைக் காரணமாகும். துண்டுத் துண்டாக உள்ள சட்டங்கள், விதிகளுக்குப் பதிலாக, முழுமையான பள்ளிக் கல்விச் சட்டம் இயற்றப்பட வேண்டுமென்று முனைவர் ச. முத்துக்குமரன் குழு அறிக்கை பரிந்துரைத்துள்ளது. அப்பரிந்துரையின்படி முழுமையான சட்டம் இயற்றாமல், மீண்டும் ஒரு குறிப்பிட்ட தேவைக்கான சட்டமாக இச்சட்டமுன்வடிவு அமைந்துள்ளது. இச்சட்டத்தின் பெயரில்கூட 'சமச்சீர்' என்ற தமிழ்ச் சொல்லுக்குப் பதிலாக ஆங்கிலத்தில் "Uniform" என்று உள்ளது. உலகத்திலே வேறு யாருமே சமச்சீருக்கு "Uniform" என்று மொழிபெயர்க்க முடியாது. அனேகமாக நம்முடைய மாநிலத்தில்தான் 'சமச்சீர்' என்ற வார்த்தைக்கு "Uniform" என்று மொழி பெயர்த்திருக்கிறார்கள். இது ஒரே மாதிரியான பொருள்படும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். 'சமம்' என்றால், "Equal" என்று பொருள்படும். எனவே, சட்டத்தில் ஆங்கிலச் சொல் "Common School" அல்லது "Equitable Standard Education" என்று இருக்க வேண்டும் என்ற என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்.

அதேபோன்று, இந்தச் சட்டத்தில் பள்ளி என்றால் என்ன, அதனுடைய பொறுப்பு என்ன என்று செயல்பாடு சட்டத்தில் விளக்கப்பட்டிருந்தால், இயக்ககங்கள் குறித்த குழப்பம் எழுந்திருக்காது. இன்றைக்கும் தமிழகத்திலே இருக்கக்கூடிய சட்டங்களில், பள்ளி என்றால் என்ன வரையறை என்பதுகூட இல்லாமல் இருக்கிறது. அதனால்தான் மாட்டுக் கொட்டகைகளில்கூட தமிழகத்தில் பல தனியார் நிறுவனங்கள் பள்ளிகளை நடத்திக்கொண்டிருக்கக்கூடிய நிலைமை இருக்கின்றது. சட்டத்தில், தொடக்கப் பள்ளி என்றால் *1* முதல் *5* வரை வகுப்பு கொண்டது என்பது போன்ற விளக்கங்களே உள்ளன. சட்டத்தில், பள்ளிக்கு வரையிலக்கணம் என்பது கூறப்பட்டிருக்க வேண்டும். பள்ளி என்றால் எப்படி இருக்க வேண்டுமென்ற வரையிலக்கணம் என்பது கூறப்பட்டிருக்க வேண்டும். அதேபோன்று, ஒரே பாடத் திட்டம் வந்ததற்குப் பின்பு, மெட்ரிக் பள்ளி என்பது சுயநிதிப் பள்ளியே. அவ்வாறான சுயநிதிப் பள்ளிகள் மாநிலப் பாடத் திட்ட முறையிலும் தற்போது இயங்கி வருகின்றன.

2010 ஜனவரி 11] [திரு. கே. மகேந்திரன்]

ஏற்கெனவே self financing school என்பது, நம்முடைய Board -க்குக் கீழே இயங்கி வருகிறது. அவற்றைப் பள்ளிக் கல்வி இயக்ககம்தான் கண்காணிக்கிறது. அனைத்துப் பள்ளிகளும் ஒரே இயக்ககத்தின்கீழ் வருவதனால், யாருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. மாறாக, சமச்சீரான நிருவாக முறைக்கும், ஆய்விற்கும் அது முறையாக இருக்கும். ஆகவே, அந்த Board என்பது மாற்றப்பட வேண்டும். தற்போதைய சட்டத்தில், அரசுப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள், அரசின் வாரியப் பள்ளிகள், உள்ளாட்சிப் பள்ளிகள் என்று, 80 சதவிகித மாணவர்கள் பயிலும் பள்ளிகளுடைய ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் என்பது கிடையாது. இந்தச் சட்டத்தில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், 13 மெம்பர்கள் போடுவோம்; 7 பேர் officials இருப்பார்கள். 3 பேர் ஆசிரியர் பிரதிநிதிகள் இருப்பார்கள், அந்த ஆசிரியர்கள் எங்கிருந்து நியமிக்கப்படுவார்களென்றால், மெட்ரிக், ஆங்கிலோ இந்தியன், ஓரியண்டல் பள்ளிகளினுடைய ஆசிரியர்கள் இருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. 80 சதவிகிதம் மாணவர்கள் பயிலக்கூடிய நம்முடைய பள்ளிகளுடைய ஆசிரியர்கள் அதிலே பிரதிநிதிகளாக இருக்க வேண்டும். வாரியத்தைப் பொறுத்தவரை, ஆலோசனை வழங்கக்கூடியதாகவும் . . .

பிற்பகல் 2-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்துள்ள திருத்தங்கள் அனைத்திற்கும் மொத்தமாகத்தானே பேசுகிறீர்கள்? அப்படித்தானே? சரி, சீக்கிரம் முடியுங்கள்.

திரு. கே. மகேந்திரன்: வாரியம் என்பது, ஆலோசனை வழங்கக்கூடியதாகவும், பரிந்துரை செய்யக்கூடியதாகவும் மட்டுமே அமைந்துள்ளது. முனைவர் முத்துக்குமரன் குழு, தன்னாட்சி அதிகாரம் கொண்ட பள்ளிக் கல்வி வாரியம் எனக் குறிப்பிட்டுள்ளது. எனவே, அமைக்கப்படும் பொதுக் கல்வி வாரியம் என்பது, தன்னாட்சி அதிகாரம் கொண்ட, முடிவெடுக்கக்கூடிய அதிகாரம் கொண்ட வாரியமாக அமைய வேண்டும். முனைவர் ச. முத்துக்குமரன் குழு, பள்ளிக் கல்விச் சட்டத்தில் நிதித் தேவைகள், நிதியொதுக்கீடு குறித்தும் குறிப்பிடப்பட வேண்டுமெனக் கூறியுள்ளது. ஆனால், சமச்சீர் கல்வி நடைமுறைக்குத் தேவைப்படும் நிதியைப் பற்றிச் சட்டத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. உடல் மற்றும் மனநிலை உட்பட பல குறைபாடுகள் உள்ள சிறப்புக்

[திரு. கே. மகேந்திரன்] [2010 ஜனவரி 11

குழந்தைகள் பலர் சிறப்புப் பள்ளிகளில் சேர்க்கப்படாமல், அனைத்து மாணவர்களும் படிக்கக்கூடிய பள்ளிகளில் normal school-ல் சேர்க்கப்பட்டால், அவர்களது நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு சாதாரண குழந்தைகளாக வளர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என மருத்துவர்கள் கூறுகின்றனர். அவ்வாறு மருத்துவர்கள் சான்றளிக்கும் குழந்தைகளும் அனைத்துப் பள்ளிகளிலும் சேர்க்கப்பட, சட்டத்தில் வழிவகை செய்யப்பட வேண்டும். தனியார் அரசுப் பள்ளி (மணியடிக்கப்பெற்றது) . . . ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். தனியார் அரசுப் பள்ளிகள் எதுவாக இருந்தாலும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. மகேந்திரன், நீங்கள் கொடுத்துள்ள திருத்தங்களை மட்டும் சொல்லுங்கள். நீங்கள் general ஆக எல்லாவற்றையும் குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் மூன்று பிரிவுகளில்தான் திருத்தங்கள் கொடுத்திருக்கிறீர்கள்.

திரு. கே. மகேந்திரன்: இல்லை, 7 திருத்தங்கள் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, மூன்றுதான் கொடுத்திருக்கிறீர்கள்.

திரு. கே. மகேந்திரன்: அது ஏதாவது தவறாக எடுத்திருப்பார்கள். இதோ என்னிடம் இருக்கிறது. என்னுடைய கைகளில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் மூன்றுதான் கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள் 7 என்று எழுதி வைத்துக்கொண்டு நீங்களே பேசிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) No. இங்கே பாருங்கள் சார். அனுமதிக்கப்பட்டவை மூன்றுதான். இந்த மூன்று குறித்து மட்டும் சொல்லுங்கள். நீங்கள் முழுவதையும் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) மூன்று திருத்தங்கள்தான் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன என்று உங்களுக்குத் தகவலும் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. கே. மகேந்திரன்: கொடுக்கவில்லை சார். சமச்சீர் கல்வி அதன் முழு வடிவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமாயின், அரசு உதவி பெறும், அரசின் வாரியப் பள்ளிகள், உள்ளாட்சிப் பள்ளிகள் ஆகியவற்றில் ஆசிரியர் பணியிடங்கள், குறிப்பாக உடற்கல்வி ஆசிரியர்கள், நூலகர், கலை ஆசிரியர், ஆய்வக உதவியாளர் ஆகிய பணியிடங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

2010 ஜனவரி 11] [திரு. கே. மகேந்திரன்]

